


பாவேந்தர்
ஒரு பல்கலைக்கழகம்

கவிஞர் முருகுசுந்தரம்

பாவேந்தர்
ஒரு பல்கலைக்கழகம்

கவிஞர் முருகு சுந்தரம்

பாவேந்தர்
ஒரு பல்கலைக்கழகம்

கவிஞர் முருகு சுந்தரம்

பாரதிதாசன் உயராய்வு மையம்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
பல்கலைப்பேரூர், திருச்சிராப்பள்ளி-24

பாரதிதாசன் பல்கலைக்கழக வெள்ளி விழா வெளியீடு

நூற்குறிப்பு

தலைப்பு : பாவேந்தர் ஒரு பல்கலைக்கழகம்

ஆசிரியர் : கவிஞர் முருகு சுந்தரம்

உரிமை : பாரதிதாசன் பல்கலைக்கழகம்

வெளியீடு : பாரதிதாசன் பல்கலைக்கழகம்
பல்கலைப் பேரூர்
திருச்சிராப்பள்ளி - 620 024

பதிப்பும் ஆண்டும் : முதற் பதிப்பு-1990
இரண்டாம் பதிப்பு-2007
மூன்றாம் பதிப்பு : 2008

அச்சுத்தாள் : என்.எஸ். மேப்லித்தோ

நூல் அளவு : டெம்மி 1/8

பக்கங்கள் : 448

படிகள் : 500

விலை : ரூ.195/-

நூற் பொருள் : பாரதிதாசனைப் பற்றிய நினைவுகள்

அச்சாக்கம் : யுனைடட் பைண்ட் கிராபிக்ஸ்,
சென்னை - 600 010
Ph. 044-24661807

முனைவர் மு. பொன்னவைக்கோ
துணைவேந்தர்

பாரதிதாசன்
பல்கலைக்கழகம்
பல்கலைப்பேரூர், திருச்சிராப்பள்ளி-24

சிறப்புரை

"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே" (புறநானூறு - 165)

எனும் பெருந்தலைச் சாத்தனாரின் பாடலுக்கேற்றாற்போல், தம் புகழை மன்னுலகில் நிறுவியதன் பின்னர் மாய்ந்தவர் மிகச் சிலரே ஆவர். அவர்களுள் மிகுபுகழ் கொண்ட பாவேந்தர் பாரதிதாசனும் ஒருவர். தாயைப் பின்தொடர்ந்து செல்லும் சேயைப்போல், பாரதிதாசன் பாட்டுப் பாதையில் நடந்து சென்ற அவரின் வழித்தோன்றல்கள் பற்பலர். அவர்களுள் சிறந்த கருத்தாளுமையும் சொல்லாளுமையும் கொண்டிலங்கியவர் முருகுசுந்தரம்.

காலத்தால் அழியாத இலக்கியப் படைப்புகளின் வழி, கவிஞர் முருகுசுந்தரம் மக்கள் மனத்தில் நிலைபேறு பெற்றுள்ளார். புதுப்புது உத்திகளைக் கையாண்டு பழமைமிகு தமிழ்க்கவிதை உலகிற்கு வளமை சேர்த்தார்.

மனத்தின் இறுக்கத்தை நெகிழச் செய்யும் வனப்புமிகு மலைச்சாரல் போலவும் உடலணு ஒவ்வொன்றையும் சிலிர்க்கச் செய்து குளிரூட்டும் தென்றலைப் போலவும் இவரது படைப்புகள் அமைந்துள்ளன.

சமூகக் கொடுமைகளை விளக்கிக் காட்டுவதில் இவரது கவிதைகள் கோடை வெயிலுக்கிணையாக விளங்குகின்றன.

ஆறு கவிதை நூல்கள், மூன்று இளைஞர் இலக்கியங்கள், பதினெட்டு உரைநடை நூல்கள் யாவும் கவிஞர் முருகுசுந்தரத்தால் தமிழ் இலக்கிய உலகிற்கு வழங்கப்பட்டுள்ளன. இவரின் ஆற்றலையுணர்ந்த தமிழ்நாட்டரசு, இவருக்கு 1976ஆம் ஆண்டு

'நல்லாசிரியர்' விருது வழங்கிச் சிறப்பித்தது. மேலும், 1990ஆம் ஆண்டுக்கான 'பாரதிதாசன்' விருது இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

"....வைகல்
எண்தேர் செய்யும் தச்சன்
திங்கள் வலித்த கால்..." (புறநானூறு 87)

போன்று தேர்ந்து தெளிந்து வலிமையான சொற்களைப் பயன் படுத்துவதில் கைதேர்ந்தவர். தாய்த்தமிழிலும் ஆங்கிலத்திலும் பெரும் புலமை பெற்றவர். எனவே தமிழ்க்கவிதைகளை ஆங்கி லத்தில் மொழிபெயர்க்கும் திறன் கொண்டவராக விளங்கினார். எடுத்துக்காட்டாகப் பாரதிதாசனின் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். அவை குயில் இதழ்களில் வெளி வந்துள்ளன.

"நான்செய் தமிழ்ப்பாட்டை நல்லதோர் ஆங்கிலத்தில்
தான்செய் தளிக்கும் தகுதியிலே வான்போன்றான்
வாழ்கவே நன்முருகு சுந்தரத்தான் வண்மையெல்லாம்
சூழ்கவே சீர்த்தி தொடர்ந்து"

எனப் பாராட்டி மகிழ்ந்தார்.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால்,

"சேர்வராயன் மலைக் கனியும்
சேலத்து மாங்கனியும்
ஆலைக் கரும்பும் அரும்பலா தீஞ்சுளையும்
சேர்த்துக் குழைத்தும் செந்தமிழ்க் கவிபாடும்
கவிதைச் செம்மல்"

என்று புகழ்ந்துரைக்கப்பட்டார்.

புரட்சிக்கவிஞருடன் முகநக நட்பு பூணாமல் அகநக நட்புக் கொண்டவர்; நற்பண்பாளர்; ஆய்ந்தாய்ந்து பெற்ற நட்பைப் போற்றிப் பேணிய பெருந்தகையாளர்.

பாவேந்தர் பாரதிதாசனோடு நெருங்கிப் பழகிய நிகழ்வுகளை நாட்குறிப்பாக எழுதி வைத்தார். பின்னர் 1979ஆம் ஆண்டு இவற்றைத் தொகுத்துப் 'பாவேந்தர் நினைவுகள்' என்ற பெயரில் நூலாக வெளியிட்டார்.

பின்னர்ப் பாவேந்தரோடு நெருங்கிய தொடர்புடையோர் களிடம் அவரைப் பற்றிய கட்டுரைகளைத் தொகுத்து 'அரும்புகள்

மொட்டுகள் மலர்கள்' என்ற நூலை 1981ஆம் ஆண்டு வெளியிட்டார். அந்நூலில் சுரதா, வாணிதாசன், சிவப்பிரகாசம், பொன்னடியான், சரசுவதி கண்ணப்பர், வசந்தா தண்டபாணி, மன்னர்மன்னன், கி.ஆ.பெ. விசுவநாதம், மயிலை சிவமுத்து, தியாகராசன், செல்லப்ப ரெட்டியார், திருலோக சீத்தாராம், மணிவேலன், முருகுரத்தினம் முதலானோர் தத்தம் எண்ணங்களைப் பதிவு செய்துள்ளனர்.

1985ஆம் ஆண்டு 'குயில் கூவிக் கொண்டிருக்கும்' என்ற பிறிதொரு நூலைப் பாவேந்தரைப் பற்றி அறியும் வகையில் வெளியிட்டார். அந்நூலில் ஓவியர் வேணுகோபால சர்மா, இராசகோபாலன், புலவர் மதிவாணன், முருகேசன், வேலுச்சாமி மதுரை தனுஷ்கோடி ராஜு, கவியரசு கண்ணதாசன், மஞ்சுளாபாய், பாரதி சுவாமிநாதன், பொன்னையா, ஔவை. துரைசாமி பிள்ளை, தர்மபுரி செல்லையா, பென்னாகரம் நஞ்சையா முதலானோர் தத்தம் கருத்துக்களைப் பதிவு செய்துள்ளனர்.

அதே ஆண்டில் 'புதுவைக் கல்லறையில் புதிய மலர்கள்' என்ற மற்றொரு நூலை வெளியிட்டு மகிழ்ந்தார். அந்நூலில் பேராசிரியர் க.அன்பழகன், பன்மொழிப்புலவர் க.அப்பாதுரையார், திருக்குறள் வீ.முனுசாமி, எஸ்.ஆர்.சுப்பிரமணியம், கவிஞர் சிற்பி, நா. ஆறுமுகம், மா.அண்ணாத்துரை, சித்தன், சிவக்கண்ணப்பர், தமிழ்ச்செல்வம் முத்தையா, வசந்த குமார், சுந்தரேசன் முதலானோர் தத்தம் கருத்துக்களைப் பொதித்து எழுதியுள்ளனர்.

இவ்வாறு நான்கு தலைப்புகளில், ஒரே பொருண்மையில் வெளியிடப்பட்ட நூல்களில் பொதிந்துள்ள கருத்துக்களை ஒன்றாக இணைத்து, பாவேந்தர் நூற்றாண்டு விழாவின்போது "பாவேந்தர் ஒரு பல்கலைக்கழகம்" எனும் பெயரில் நூலாக வெளிவந்தது.

இந்நூல் கவிஞர் முருகுசுந்தரத்தின் அரிய முயற்சி, சிப்பியில் முத்து தோன்றுவதற்குப் பதினான்கு ஆண்டுகள் ஆகின்றன என்பர் அறிஞர். ஆனால் இந்நூல் உருவாகப் பதினைந்து ஆண்டுகள் ஆகியுள்ளன.

பாவேந்தரைப் பற்றி உயர்ந்த கருத்துக்களை இந்நூலின்கண் முருகுசுந்தரம் பதிவு செய்துள்ளார்.

"சங்க காலம் தொட்டு இன்றுவரை மொழியையே பாடுபொருளாக வைத்துப் பாட்டிலக்கியம் படைத்து அதில்

வெற்றிகண்ட கவிஞர் பாவேந்தரைத் தவிர வேறு யாருமில்லை" என்று பெருமிதம் தோன்ற எழுதியுள்ளார்.

நீண்ட ஆண்டுகளாக இந்நூல் மறுபதிப்பு செய்யப்படாமல் வாளாயிருந்தது. ஆகவே, இந்நூலைப் பாரதிதாசன் பல்கலைக்கழக வெள்ளிவிழாவின்போது வெளியிடுமாறு கவிஞர் முருகுசுந்தரம் கேட்டுக் கொண்டார்.

இந்நூலின் செறிதிறனும் புலப்பாட்டு நெறியும், சிறப்புவாய்ந்த நிலையில் அமைந்துள்ளதால், பாரதிதாசன் பல்கலைக்கழகம் பதிப்புத்துறை வாயிலாக மறுபதிப்பு செய்து வெளியிடுகிறது.

தமிழ் ஞாலம் போற்றும் எழுத்து ஏந்தல் இப்போது நம்மிடை இல்லை. ஆயினும் அவருடைய படைப்பாற்றலை நிலைநாட்டும் வகையிலமைந்த இந்நூலை வெளியிடுவதில் மகிழ்வடைகிறேன்.

(மு. பொன்னவைக்கோ)

முனைவர் சி. தங்கமுத்து
முன்னைத் துணைவேந்தர்

பாரதிதாசன்
பல்கலைக்கழகம்
பல்கலைப்பேரூர், திருச்சிராப்பள்ளி-24

அணிந்துரை

"சேலத்துக் கவிஞர் முருகு சுந்தரம்
பாலத்துச் சோதிடம் பார்க்க மறுப்பவர்...
இரும்பு தூங்கும் சேலத்தில் பிறந்தும்
கரும்பு தூங்கும் கவிதைகள் வடிப்பவர்"

என்று உவமைக் கவிஞர் சுரதா அவர்களால் மதிப்பீடு செய்யப்பட்ட கவிஞர் முருகுசுந்தரம் ஆவார். இவர் 20ஆம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைகளில் புதிய வடிகால்களைத் தோற்றுவித்தவர்.

கவிஞர் முருகுசுந்தரத்தின் கவிதைகள் பல்நிலைப் பரிணாமங் களைப் பெற்றுள்ளது. எடுத்துக்காட்டாகப் "பாரதிதாசனைப் போல் எழுதுவதுதான் என் முதற்குறிக்கோள். சுரதாவின் புதிய உத்திகள் இளங்கவிஞனான என்னைப் பெரிதும் வசீகரித்ததுண்டு. இன்று நான் நானாக எழுதுகின்றேன்" என்று கவிஞர் முருகுசுந்தரம் எழுதுவது இங்குச் சுட்டிக்காட்டத்தக்கது.

கவிஞர் முருகுசுந்தரம் அவர்களின் கவிதைகளில் கடைதிறப்பு, பனித்துளிகள், சந்தனப்பேழை, தீர்த்தக்கரையினிலே, எரி நட்சத்திரம், வெள்ளையானை ஆகியவை குறிப்பிடத்தக்கன. இவற்றுள் வெள்ளையானை என்பது வால்மீகியின் படைப்பான அகலிகையை உள்ளீடாக வைத்து எழுதப்பட்டதாகும்.

அகலிகை காலந்தோறும் படைப்பாளிகளுக்குப் புதுப்புது ஆக்கங்களைத் தந்து கொண்டிருக்கும் கதைப் படைப்பாகும். ச.து.சு. யோகியார் முதல் தமிழ்நாடன் வரை தமிழ்க் கவிஞர்கள் பலர் தங்களுடைய படைப்புகளின் கூர்மையை வெளிப்படுத்த இக்கதையை எடுத்தாண்டுள்ளார்கள். இளமையில் அகலிகையின்

அடிமனத்தில் ஏற்பட்ட ஏக்கங்களும் ஏமாற்றங்களும் அவருடைய வாழ்க்கையின் பின்விளைவுகளுக்குக் காரணமாயின. அடக்கப் பட்ட பெண்ணினம் தளைகளை உடைத்து எழுகின்ற நிலை வெள்ளையானையில் சுட்டப்படுகிறது.

காண்டேகர் எழுதிய எரிநட்சத்திரம் எனும் நாவலை அடிப்படையாகக் கொண்டு கவிஞர் முருகுசுந்தரம் எரிநட்சத்திரம் எனும் நெடுங்கவிதையைப் படைத்தார்.

உல்கா என்பவள் காண்டேகர் படைத்த எரிநட்சத்திரம். வீணா என்பவள் முருகுசுந்தரம் படைத்த எரிநட்சத்திரம்.

சமூகக் கொடுமைகளைச் சாடுகின்ற படைப்பாகவும் தமிழின மீட்சிக்குத் துணை நிற்கும் வலிமைமிக்க எழுத்தாயுதமாகவும் இந்நூல் விளங்குகிறது.

கவிஞர் முருகுசுந்தரம் திறன்மிக்க கவிஞர் என்பதோடு உரைநடை நூல்களை எழுதுவதில் வல்லவர். 18 உரைநடை நூல்களை எழுதியுள்ளார்.

கவிஞர் முருகுசுந்தரம் அவர்கள், அவரது காலத்தில் வாழ்ந்த உவமைக் கவிஞர் சுரதா குறித்து 'சுரதா ஒரு ஒப்பாய்வு' என்ற நூலை எழுதியுள்ளார்.

பாவேந்தர் படைப்பில் அங்கதம் என்ற உரைநடை நூலும் குறிப்பிடத்தக்கது.

கவிஞர் முருகுசுந்தரம் அவர்கள் பாவேந்தர் பாரதிதாசன் மேல் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விடுதியில் 1962ஆம் ஆண்டு தங்கியிருந்த போது பாவேந்தர் பாரதிதாசனோடு நெருங்கிப் பழகும் வாய்ப்புப் பெற்றார்.

பாவேந்தர் பாரதிதாசனோடு கொண்டிருந்த தொடர்பு குறித்த கவிஞர் முருகு சுந்தரம் அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்.

"அவர் வீடு தியாகராயநகர் இராமன் தெருவில் இருந்தது. இப்பழக்கம் இரண்டாண்டுகளுக்கு மேல் தொடர்ந்தது. பாவேந்தர் சேலம் ஒருமுறை வந்து எனது விருந்தினராகத் தங்கினார். சென்னையில் அவரோடு பழகிய காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளைப் 'பாவேந்தர் நினைவுகள்' என்ற தலைப்பில் நாட்குறிப்பாக எழுதினேன்; கவிதை பற்றி அவரிடம் நிறையக் கற்றுக் கொண்டேன்.

தமிழகம் முழுவதும் நான் சென்று பாவேந்தரோடு பழகிய நண்பர்களிடம் பேட்டி எடுத்து அவரைப் பற்றி நான்கு நூல்தொகுப்புகள் வெளியிட்டேன். அவை எல்லாம் ஒன்றாகத் திரட்டப்பட்டு அவருடைய நூற்றாண்டு விழாவின்போது 'பாவேந்தர் ஒரு பல்கலைக்கழகம்' என்ற பெயரில் பெருநூலாக வெளிவந்தது" என்கின்றார்.

பாவேந்தர் நினைவுகள் (1979), அரும்புகள் மொட்டுகள் மலர்கள் (1981), குயில் கூவிக் கொண்டிருக்கும் (1985), புதுவைக் கல்லறையில் புதிய மலர்கள் (1985) ஆகிய நான்கு நூல்களையும் கவிஞர் மீரா அவர்கள் வெளியிட்டார். பாரதிதாசன் நூற்றாண்டு விழாவின்போது இந்நான்கு நூல்களையும் ஒன்றாகச் சேர்த்து 'பாவேந்தர் ஒரு பல்கலைக்கழகம்' என்ற தலைப்பில் 1990ஆம் ஆண்டு கவிஞர் மீரா அவர்கள் வெளியிட்டார். நூல் வெளிவந்து 17 ஆண்டுகள் ஆயின. இந்நூலை மீண்டும் மறுபதிப்பு செய்ய வேண்டும் என்று கவிஞர் முருகுசுந்தரம் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்நூலின் அருமையும் பெருமையும் கருதிப் பாரதிதாசன் பல்கலைக்கழக வெள்ளி விழாவினையொட்டி வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஏற்காட்டில் புறப்பட்ட பூங்காற்றான கவிஞர் முருகுசுந்தரம் கவியரங்கக் கவிதைகளிலும் தடம் பதித்தவர். தமிழகத்தில் பல்வேறு கவியரங்குகளில் கலந்து கொண்டு கவிதைகளைப் பாடியுள்ளார். நளினமும் நையாண்டியும் நகைச்சுவையும் இவரது கவிதைகளில் கலந்திருக்கும்.

கவிஞர் முருகுசுந்தரத்தின் சமகாலக் கவிஞர்கள் சுரதா, அப்துல் ரகுமான், வாணிதாசன், முடியரசன், தமிழன்பன், சிற்பி, புவியரசு, சேலம் தமிழ்நாடன் ஆகியோர் ஆவார்.

கவிஞர் முருகுசுந்தரம் ஆங்கிலத்திலும் தமிழிலும் புலமை மிக்கவர். சிறந்த மொழிபெயர்ப்பாளர். பாரதிதாசன் கவிதைகள் உட்பட தமிழ்க் கவிதைகள் பலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். 'புகழ்பெற்ற புதுக்கவிஞர்கள்' எனும் நூல் இதற்கு எடுத்துக்காட்டாகும். இவரது மொழிபெயர்ப்பாற்றலைக் கண்டு வியந்த பாரதிதாசன்

"நான்செய்த தமிழ்ப்பாட்டை நல்லதோர் ஆங்கிலத்தில்
தான்செய் தளிக்கும் தகுதியிலே - வான்போன்றான்

வாழ்கவே நன்முருகு சுந்தரந்தான் வண்மையெல்லாம்
சூழ்கவே சீர்த்தி தொடர்ந்து"

என்று வாழ்த்தியுள்ளார்.

சேலத்தில் 30 ஆண்டுகள் ஆசிரியப் பணியாற்றி ஓய்வுபெற்ற கவிஞர் முருகு சுந்தரம் அவர்கள் ஓய்விற்குப்பின் தன்னுடைய இலக்கியப் பணியை இடைவிடாது செய்தார்.

கொல்லிமலைப் பலாவும்
சேலத்து மாங்கனியும்

சேர்ந்து இணைந்து உருப்பெற்ற கவிதைக்கனி கவிஞர் முருகுசுந்தரம் அவர்களின் இந்நூல் வெளியிடும்போது அவர் நம்மிடையே இல்லை என்பது மிகுந்த வருத்தத்தைத் தரக்கூடியதாகும். அவருடைய வாழ்வு நீர் மேல் எழுதிய எழுத்துப்போல் அமையாமல் கல்லின் மேல் பொறித்த எழுத்து போல் நின்று நிலைத்து என்றும் வாழும் என்பதற்கு இந்நூல் எடுத்துக்காட்டாகும்.

(சி. தங்கமுத்து)

புறம்

பாவேந்தர் வாழ்க்கை ஒரு பரந்த கடல். இந்நூல் அதன் அலை ஒதுக்கிய முத்து. இன்னும் சலாபமே கைபடாமல் இருக்கிறது. பலபேர் மூச்சடக்கி உள்ளே மூழ்க வேண்டும்.

ஒரு பெருங்கவிஞனின் படைப்பு சமுதாயத்துக்கு எவ்வளவு முக்கியமானதோ அதுபோல்-அவன் வாழ்க்கை நிகழ்ச்சிகளும் முக்கியமானவை; சுவையானவை, ஆங்கில நாட்டில் வோர்ட்ஸ் வொர்த்தின் மூக்குக்கும், கீட்சின் தலை முடிக்கும் ஆராய்ச்சி உண்டு.

சில கவிஞர்கள் வரலாற்றின் குழந்தைகள்; சில கவிஞர்கள் வரலாற்றின் தந்தைகள். பாவேந்தர் - இரண்டாம் வகையைச் சேர்ந்தவர்.

'நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்' - என்ற பாவேந்தரின் தொடர் இன்று பழமொழியாக நிலைத்துவிட்டது. பாவேந்தர் இன்று ஒரு பல்கலைக்கழகமாக நிலைத்துவிட்டார்.

இளமையிலிருந்தே கவிஞர் வரலாறுகளைப் படிப்பதில் எனக்கு விருப்பம் அதிகம். ஜான்சன் எழுதிய ஆங்கிலக் கவிஞர் வரலாறு (Lives of English Poets), பாஸ்வல் எழுதிய ஜான்சன் வரலாறு (Boswell's Life of Johnson), ஃப்ரெஞ்சு எழுத்தாளன் ஆண்டரூ மொராய் எழுதிய பைரன் வரலாறு (Byron), ஷெல்லி வரலாறு (Aerial), பாப்லோ நெருடாவின் தன் வரலாறு (Pablo Neruda's Memoris), வ.ரா. எழுதிய மகாகவி பாரதியார் ஆகியவை என் வாழ்க்கையில் நான் மிகவும் விரும்பிப் படித்த நூல்கள். இந்நூல்களைப் படித்தபோது

பாவேந்தரைப் பற்றி இப்படி ஒரு நூல் எழுத வேண்டும் என்று நான் அடிக்கடி நினைத்ததுண்டு. அந்த எண்ணத்தின் செயற்பாடே பாவேந்தரைப் பற்றிய இந்நூல். உலகக் கவிஞர்களுள் பைரனுடைய வாழ்க்கைதான் சுவையான வாழ்க்கை. காதலும், வீரமும், அரசியலும் அவன் வரலாற்றில் போட்டி போட்டுக் கொண்டு விளையாடுகின்றன. அவன் வரலாற்றைப் படிக்கும் எந்தப் பெண்ணும் அவன்மீது காதல் கொள்ளாமல் இருக்க முடியாது. அவ்வளவு வசீகரக் கவிஞன் (Glamorous poet) அவன்.

பைரன் தனிச்சண்டைக்குக் (Single Combat) கூவி அழைத்தவன்; புஷ்கின் தனிச்சண்டையில் செத்தவன்; ஷெல்லி கடற்புயலில் சிக்கி மாண்டவன்; லார்கா அரசியல் புயலில் சிக்கி மாண்டவன்; மாயகோவ்ஸ்கி தற்கொலையால் முடிந்தவன்; எஸ்ரா பவுண்ட் பயித்தியத்தால் மடிந்தவன்; ஃப்ரெஞ்சுப் பெருங்கவிஞன் ஃப்ரான்சுவா வில்லன் கொள்ளைக்காரனாகவே வாழ்ந்து வாழ்வை முடித்துக் கொண்டவன். சிலி நாட்டுப் புரட்சிக்குயில் பாப்லோ நெருடா தன் கால்களாலும் கவிதையாலும் உலகை அளந்தவன். ஒவ்வொரு கவிஞனின் வாழ்க்கையும் உள்ளத்தை நெருடும் ஓர் உணர்ச்சிக் காவியம்.

கவிஞன் வாழ்க்கையைச் சர்க்கரைப் பொங்கலுக்கு ஒப்பிடலாம். சர்க்கரைப் பொங்கலில் முந்திரிப்பருப்பு அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கிடப்பதுபோல், கவிஞர்கள் வாழ்க்கையிலும் சுவையான நிகழ்ச்சிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தட்டுப் படுவதுண்டு. ஆனால் பாவேந்தரின் வாழ்க்கை முழுவதும், உண்பவர் வாயில் மொருமொருவென்று உதிரும் வறுத்த முந்திரிப் பருப்பு. சுவையில்லாத நிகழ்ச்சியே அவர் வாழ்க்கையில் இல்லை என்று சொல்லலாம்.

பாவேந்தர் வாழ்க்கையில் வெளிவராத செய்திகள் நிறைய உள்ளன. மேலைநாட்டுக் கவிஞர்கள் தங்கள் காதல் வாழ்க்கையை உள்ளது உள்ளபடி கூச்சமின்றி அவர்களே எழுதியிருக்கிறார்கள்; பிறரையும் எழுத அனுமதிக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டின் நிலை வேறு. நமது நாட்டில் தமது காதல் வாழ்க்கையை ஒளிக்காமல் துணிச்சலாக எழுதிய ஒரே கவிஞர் கண்ணதாசனைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்? பாவேந்தருடைய காதல் வாழ்க்கையும் சுவையானதுதான். ஆனால் நான் அதில் கைவைக்கவில்லை. சரியான முறையில் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டால் பாவேந்தர்

வரலாறு உலக இலக்கியவாதிகளின் நெஞ்சில் நிலையான இடத்தைப் பெறும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

பாவேந்தர் வாழ்க்கையில் உணர்ச்சிமயமான எவ்வளவோ செய்திகளை எழுதும்போது, இடையிடையே அவரைப் பற்றிய மிகச் சாதாரணமான செய்திகளையும் எழுதியிருக்கிறேன். அவற்றைவிட்டுவிட எனக்கு விருப்பமில்லை. கவிதை எழுதும்போது, காற்புள்ளியும் அரைப்புள்ளியும் இல்லாமல் எழுத முடிகிறதா?

பாவேந்தரைப் பற்றி வரலாற்று நூல்களும் நிறைய வர வேண்டும்; திறனாய்வு நூல்களும் வரவேண்டும். மேலை நாட்டார் கவிதை பற்றியும், கவிஞர் பற்றியும் புதுப்புது முறைகளில் வகுத்தும் தொகுத்தும் எழுதி வெளியிடும் நூல்கள் அளவற்றவை; அமைப் பாலும் உள்ளடக்கத்தாலும் நம்மை வியப்பில் ஆழ்த்தக்கூடியவை. அவற்றைப் பார்க்கும்போதும் படிக்கும் போதும் தமிழில் இத்தகைய நூல்கள் வருமா என்று நான் ஏக்கப் பெருமூச்சு விடுவதுண்டு.

ஒரு கவிஞன் இறந்து இருபத்தைந்து ஆண்டுகளுக்குள் அவனைப் பற்றிய வரலாறுகள் எல்லாம் எழுத்தில் வந்துவிட வேண்டும். ஏனென்றால் இருபத்தைந்து ஆண்டுகளுக்குள் அக்கவிஞனோடு நெருங்கிப் பழகிய தலைமுறை மறைந்து விடும். அதன்பிறகு எழுதப்படும் நூல்களுள் புனைந்துரை இடம் பெற்றுவிடும். கவிஞன் 'அவதார புருஷன்' ஆகிவிடுவான்; நாக்கில் எழுதக் காளியும், மாரியும் வந்து விடுவர்.

பாவேந்தர் வாழ்ந்த புதுவை, ஃபிரெஞ்சுப் பண்பாடும் தமிழ்ப் பண்பாடும் கலந்து செழித்த மண். அம்மண்ணுக்கே உரித்தான சில பழக்க வழக்கங்களும், பண்பாடுகளும், சொற்களும், தொடர்களும் குடும்பவிளக்கிலும் பிற காப்பியங்களிலும் மலிந்து காணப் படுகின்றன. புதுவைப் பண்பாட்டில் ஊறிய தமிழறிஞர்கள் அப்பண்பாட்டின் அடிப்படையில் அவற்றை ஆய்வு செய்ய வேண்டும்.

18ஆம் நூற்றாண்டில் ஃபிரெஞ்சுப் புரட்சி உலகத்திற்குப் பிரகடனப்படுத்திய 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்ற கொள்கைகளின் பாதிப்புகள் இவருடைய துவக்ககாலப் படைப்பு களில் அதிகம் காணப்படுகின்றன. பாவேந்தர் கூறும் பொது வுடைமைக் கருத்துக்கும், இன்றைய கட்சிப் பொதுவுடைமைக்

கருத்துக்கும் வேறுபாடுகள் உண்டு. அரசியல் அடிப்படையில் இதையும் ஆய்வு செய்ய வேண்டும்.

சங்க காலம் தொட்டு இன்றுவரை மொழியையே பாடு பொருளாக (Theme) வைத்துப் பாட்டிலக்கியம் படைத்து அதில் வெற்றிகண்ட கவிஞர் பாவேந்தரைத் தவிர வேறு யாருமில்லை. மொழியை ஆற்றல்மிக்க பிரச்சார பீரங்கியாகப் பயன்படுத்தி வெற்றிகண்டவரும் இவரே! இவர் எழுப்பிய மொழியுணர்ச்சிதான் இன்றைய தமிழக அரசியலுக்கு உயிர்ச்சத்தாகவும் ஊட்டச் சத்தாகவும் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. 'முதியோர் காதல்' தமிழ் வரலாற்றில் பாரதிதாசன் மட்டுமே காலெடுத்து வைத்த புதிய துறை.

பாவேந்தர் பாடல்களை மேடைதோறும் பாடியும், ஏடுதோறும் எழுதியும்தான் தன்மான இயக்கம் வளர்ந்தது; திராவிட இயக்கம் தமிழகத்தில் ஆட்சிப்பீடம் ஏறியது. தமிழ் மக்கள் உள்ளத்தில் சீர்திருத்தப் புரட்சியையும், தமிழக அரசியலில் ஆட்சி மாற்றத் தையும் ஏற்படுத்தும் ஆற்றல் இவரது வலிமையான எழுத்துக்கு இருந்தது. அழகிய சொல்லுக்கும், ஆணித்தரமான கருத்துக்கும் அறிஞர் அண்ணாவே இவரிடத்தில் கடன்பட்டிருக்கிறார். இவை யாவும் முறைப்படி ஆய்வு செய்தற்குரியவை.

இலக்கிய ஆராய்ச்சி நடத்தும் என் இளைய தலைமுறையினரைக் காணும்போதெல்லாம், நான் அவர்களுக்கு இவற்றை அடிக்கடி நினைவூட்டுவதுண்டு, பாவேந்தரின் எழுதுகோல் தொடாத கருத்து எதுவுமில்லை; அவர் தொட்டு இலக்கிய மதிப்புப் பெறாத சிந்தனை எதுவுமில்லை. இன்றைய தமிழர்கள் எந்தக் கருத்துக்கு மேற்கோள் காட்டவேண்டுமென்றாலும், திருவள்ளுவரிடம் செல்ல வேண்டும்; அல்லது பாரதிதாசனைத் தேடி வர வேண்டும். திருவள்ளுவரிடம் காணப்படாத இன்றைய புதிய சிந்தனைகளுக்குப் பாவேந்தரை விட்டால் வேறு யாருமில்லை. பாவேந்தர் ஒரு தனிப்பட்ட கவிஞர் அல்லர்; அவர் கவிஞர்களின் அணிவகுப்பு.

இந்நூல் என் 15 ஆண்டு முயற்சி. கவியரங்கம், சொற்பொழிவுகளுக்காக நான் எவ்வூர் சென்றாலும், அவ்வூரில் பாவேந்தரோடு பழகிய நண்பர் யாராவது இருக்கின்றாரா என்று அறிவது என் முதல் வேலை. அவ்வாறு யாரேனும் இருந்தால் அவருடைய இல்லம் சென்று பொறுமையாகக் காத்திருந்து அவர்

பாவேந்தரைப் பற்றிக் கூறும் செய்திகளைத் தொகுத்துக் கொண்டு வருவது என் வழக்கம்.

நான் மேற்கொண்ட இம்முயற்சியிலிருந்து ஓர் உண்மை எனக்குப் புலனாயிற்று. சங்ககாலந் தொட்டு இன்று வரை பாவேந்தர் போல மக்களிடம் நேரடித் தொடர்பு கொண்ட கவிஞர் வேறு யாரும் இல்லை என்பதே அது! நான் இதைப் பாவேந்தர் மீது கொண்டிருக்கும் அளவிறந்த பற்றின் காரணமாகக் கூறியிருப்பதாகக் கருதக் கூடாது. நன்கு ஆராய்ந்து இக்கருத்தைக் கூறுகிறேன்.

பாவேந்தர் கவிஞர் மட்டுமல்லர்! அவர் ஓர் அரசியல்வாதி; ஆசிரியர்; பத்திரிகாசிரியர்; நாடகாசிரியர்; திரைப்பட எழுத்தாளர்; பதிப்பகர்; மேடைப் பேச்சாளர். இத்துணை துறைகளிலும் ஈடுபட்டுச் செயலாற்றிய கவிஞர் தமிழகத்தில் வேறு யாருமில்லை.

இவரது பல்துறை ஈடுபாட்டால் தமிழ் நாட்டின் பட்டி தொட்டிகளிலெல்லாம் இவரோடு ஏதேனும் ஒருவிதத்தில் தொடர்பு கொண்டவர்கள் பரந்து கிடக்கிறார்கள். ஆப்பக்காரியிலிருந்து அமைச்சர் வரை இப்பட்டியல் நீளுகிறது.

இதைநான் ஏதோ எதுகை மோனைக்காகக் கூறியதாக நினைக்க வேண்டாம். திருச்சி சிந்தாமணியில் பாவேந்தர் வழக்கமாகச் சென்று ஆப்பம் சாப்பிடும் ஒரு கடையின் சொந்தக்காரியைக் கண்டு பேசும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.

சேலத்துக் குதிரை வண்டிக்காரன் ஒருவன் கூறினான்; "ஐயா, என் வண்டியிலதான் ஏறிக்கிட்டுப் போவார். மாடர்ன் கேஃபிலே டிஃபன் சாப்பிடுவார்; காஃபி குடிக்கறத்துக்காகவே வில்வாத்திரிக்குப் போவார். மிலிட்டரி சாப்பாட்டுக்கு வி. மார்க்கெட்டில இருக்கற நித்தியானந்த பவனுக்குப் போவார். அந்தக் காலத்திலேயே எனக்கு ஒரு ரூபா வாடகை கொடுப்பார்" - என்று.

பாவேந்தர் வரலாறு இப்படித் தமிழ்நாட்டு மூலை முடுக்கெல்லாம் சிதறிக் கிடக்கிறது. அதைத் திரட்டுவதென்பது தனிப்பட்ட ஒருவரால் நடைபெறக்கூடிய செயலன்று. அரசாங்கமே ஒரு குழு அமைத்துச் செய்ய வேண்டிய வேலை.

பாவேந்தரைப் பற்றிய செய்திகளைத் திரட்டும்பணி எனக்கும் அவ்வளவு எளிதாக இருந்ததில்லை. பாவேந்தரோடு பழகிய நண்பர்கள் பல திறப்பட்டவர்கள். சிலர் அவர்களே விரும்பிச்

செய்திகளைக் கூறுவர்; சிலர் பலமுறை நடக்கவைத்துச் செய்திகளைக் கூறுவர்; சிலர் பலமுறை நடக்கவைத்தும் செய்தி எதுவும் கூறமாட்டார்கள்.

பாவேந்தரோடு நெருங்கிப் பழகிய குடும்ப நண்பரொருவர் சென்னையில் வாழ்ந்தார். அவரைத் தேடிச் சென்றால், எனக்குத் தடபுடலாக விருந்தெல்லாம் நடக்கும்; செய்தி மட்டும் கிடைக்காது. அவரும் எழுதி வெளியிட்டபாடில்லை; இப்போது இறந்தும் விட்டார்.

பாவேந்தரோடு உள்ளங்கலந்து பழகிய அரசியல் நண்பர்கள் ஒவ்வோர் ஊரிலும் இருக்கிறார்கள். அவர்களில் சிலர் "அண்ணாவைப் பற்றிப் பாரதிதாசன் என்று தரக்குறைவாகப் பத்திரிகையில் எழுதினாரோ, அன்றே வீட்டில் மாட்டியிருந்த அவர் படத்தையும், உள்ளத்தில் மாட்டியிருந்த அவர் நினைவையும் தூக்கி எறிந்து விட்டோம்" என்று முகத்திலடித்தாற்போல் கூறுகிறார்கள். இன்றும் பாவேந்தரை ஏற்றுக் கொள்ள அவர்கள் தயாராக இல்லை.

சில அரசியல் தலைவர்கள் மேடையில் பேசும்போது பாவேந்தர் மீது காட்டும் பரிவையும், மதிப்பையும், தனிமையில் சந்திக்கும் நேரங்களில் காட்டுவதில்லை. சில அரசியல் தலைவர்களை நெருங்கவே முடியவில்லை.

கிடைத்தற்கருமையான பாவேந்தரின் புகைப்படங்கள் சிலரிடம் இருக்கின்றன. திருவானைக்காவலில் நடைபெற்ற மணிவிழாப் படமொன்று மதுரை அன்பர் ஒருவருடைய வீட்டில் சட்டம் கூட இல்லாமல் குப்பையோடு குப்பையாகக் கிடந்தது. ஆனால் அந்தப் படத்தைக் கொடுக்க அவர் விரும்பவில்லை; கறையானுக்கு உணவாக்க முடிவு செய்திருக்கிறார்.

குப்புறப்படுத்து மார்புக்குத் தலையணையைத் தாங்கலாக வைத்துக் கொண்டு பாவேந்தர் எழுதும் வழக்கமுடையவர் என்ற செய்தியைப் பலரும் கூறுகின்றனர். ஒரு குழித்தலை அன்பர் அந்த நிலையிலேயே பாவேந்தரைப் படம் எடுத்திருக்கிறார். அந்தப் படத்தைப் பார்க்கக் கேட்டபோது 'எங்காவது கிடக்கும்; தேடிப் பார்க்கணும்' என்று அசிரத்தையாகக் கூறிவிட்டார்.

பாவேந்தரோடு பழகிய நண்பர்களில் நூற்றுக்கு எண்பது பேர் தங்கள் இல்லத்தில் அவருக்கு விருந்து வைத்ததைப் பற்றியும், அவரது நடையுடை பாவனை பற்றியும் மேலோட்டமான

செய்திகளையே கூறுகிறார்கள். பாவேந்தர் வாழ்வில் இடம் பெற்ற கலை, இலக்கியம், அரசியல், சீர்திருத்தம் பற்றிய நிகழ்ச்சிகளைக் கூறுபவர் மிகச்சிலரே! பாவேந்தர் அவ்வப்போது கூறும் நுட்பமான இலக்கியச் செய்திகளைப் புரிந்து கொள்ளவும், அவற்றை நினைவில் வைத்திருந்து கூறவும் ஓரளவு தகுதி வேண்டும். அத்தகைய தகுதிபெற்ற நண்பர்கள் கூறும் செய்தி சிந்தனைக்கு விருந்தாக உள்ளது.

கவிஞர்களுக்கே உரித்தான-சாதாரண மக்களிடமிருந்து தம்மைத் தனிப்படுத்திக் காட்டும்படியான-பண்புகளும் விசித்திரமான போக்குகளும் பாவேந்தரிடம் நிறைய உண்டு. அவற்றுள் சிலவற்றை நான் 'பாவேந்தர் நினைவுகள்' என்ற பகுதியில் எழுதியிருக்கிறேன். பாவேந்தரின் மக்கள் இத்தகைய செய்திகள் பலவற்றை அழகாகத் தமது கட்டுரைகளில் கூறிச் செல்கின்றனர். பாவேந்தரை அருகிலிருந்து ஆய்ந்தார்க்கே இதுபோன்ற செய்திகளைக் கூற இயலும். கவிஞர் சுரதாவும், வாணிதாசனும், புதுவைச் சிவமும், பொன்னடியானும் பாவேந்தர் பார்வையில் வளர்ந்த மாணவர்கள். இவர்களும் கவிஞர்கள். ஆகையால் பாவேந்தர் பற்றிப் புலமை நுணுக்கத்தோடு கூடிய அரிய பல செய்திகளைக் கூறியிருக்கிறார்கள்.

பாவேந்தரின் 50ஆவது வயதுக்கு முற்பட்ட குடும்பச் செய்திகளை உணர்ச்சிப்பூர்வமாக அவருடைய மூத்த திருமகளார் திருமதி சரசுவதி கூறியிருக்கிறார். அக்கட்டுரை படிப்பவர் உள்ளத்தைத் தொடும்படி அமைந்துள்ளது.

பாவேந்தரின் இரண்டாவது மகளார் திருமதி வசந்தா நல்ல எழுத்தாற்றல் உள்ளவர். சொல்வதைச் சுவைபடச் சொல்கிறார். பாவேந்தரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் பல செய்தித்தாள்களில் சிறு சிறு துணுக்குகளாக நிறைய எழுதி வெளியிட்டுள்ளார். அஃதோர் தனி நூலாகவே அமையும் தகுதியுடையது. இந்நூலில் ஒரிரு செய்திகளைக் குறிப்பிட்டுள்ளார்.

திருவாளர் மன்னர் மன்னன் பாவேந்தரின் வாழ்க்கை வரலாற்றை இளமையிலிருந்தே முறைப்படத் தொகுத்து எழுதிக் கொண்டிருக்கிறார். அது பாவேந்தரின் முழுமை பெற்ற வரலாறாக அமையும், அவருடைய கட்டுரையும் இத்தொகுப்பில் இடம் பெற்றால் சிறப்பாக இருக்குமென்று நினைத்து அவருக்குக் கடிதம் எழுதினேன். அவரும் உள்ளம் உவந்து ஒரு கட்டுரை அனுப்பி வைத்து இத்தொகுப்பைச் சிறப்பித்திருக்கிறார்.

திருவாளர் மு. செல்லப்ப ரெட்டியார் பாவேந்தர் நடத்திய நாடகக் குழுவின் பொறுப்பாளராக இருந்தவர். பாவேந்தரின் நாடகத்துறை அனுபவங்களைக் கூறுவதற்கு இவரைத் தவிரத் தகுதியானவர் வேறு யாருமில்லை, அந்த வகையில் இவரது கட்டுரை இத்தொகுப்பில் சிறப்பான இடத்தைப் பெறுகிறது. இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள பிற அறிஞர்களின் கட்டுரைகளும் ஒவ்வொரு வகையில் தனிச்சிறப்புப் பெற்ற பொறுக்கு மணிகள்.

நீண்டநாள் காத்திருந்து மணந்த காதலிபோல் - பல சந்திப்பிற்குப் பின் பேராசிரியர் அன்பழகனாரின் கட்டுரை என்னைத் தேடி வந்தடைந்தது.

சர்வோதயத் தலைவர் எஸ்.ஆர்.சுப்ரமணியம் அவர்களின் கட்டுரை 'பாவேந்தரின் எழுத்து வடிவம்' என்று சொல்லலாம்.

பன்மொழிப் புலவரின் எண்ண அலைகளைச் சென்னை சென்று ஒலிநாடாவில் பதிவு செய்து வந்தேன்.

இம்மூன்று பேரறிஞர்களின் கட்டுரைகள் இதற்குமுன் நமது பார்வைக்குத் தட்டுப்படாத பாரதிதாசனை அகலத்திரையில் - குளிர்ச்சியான வண்ணத்தில் காட்டுகின்றன.

கடல்கடந்து தமிழ்பரப்பச் சென்று செக்கோஸ்லேவியாத் தலைநகர் பிராகுவில் விபத்தில் சிக்கி மடிந்த டாக்டர் திருமதி தேவகிருபை தியாகராஜன் அவர்களின் கட்டுரை துணிச்சலான கட்டுரை.

தமிழ்த் தாத்தா மயிலை சிவமுத்துவின் கட்டுரையும் டாக்டர் முருகரத்தினம் கட்டுரையும் மிக நுட்பமான அரிய செய்திகள் பலவற்றை எடுத்துக் கூறுகின்றன.

ஓவியர் வேணுகோபால சர்மா பாவேந்தரின் உள்ளும் புறமும் தெரிந்த உற்ற நண்பர்.

ஒரு கலைஞனுக்குரிய நுண்ணிய பார்வையோடு பாவேந்தரின் பண்பு நலன்களைத் தமது கட்டுரையில் ஓவச் செய்தியாக்கிக் காட்டியுள்ளார்.

தஞ்சை மராட்டிய ராவ்ஜி குடும்பத்தில் பிறந்து இளமையிலேயே கைம்பெண்ணாகி செட்டி நாட்டுச் செல்வரை மறுமணம் செய்து கொண்டு வாழ்ந்த மஞ்சுளாபாய் அம்மையார்-மிகவும் சுவையான பண்பு நலன்கள் வாய்க்கப் பெற்றவர். பாவேந்தருக்கு-உடன்

பிறவாத உயர்ந்த தங்கை. இவர் கட்டுரை நெஞ்சைப் பிழியும் தன்மை வாய்ந்தது.

பாவேந்தரின் பிறந்தநாள், ஒவ்வொரு நூலிலும் ஒவ்வொரு விதமாகக் குறிக்கப்பட்டு வந்தது. என் அன்பிற்குரிய நண்பர் டாக்டர் மா. அண்ணாத்துரை எனது வேண்டுகோளை ஏற்றுப் புதுவை நகரசபைக்குச் சென்று பாவேந்தரின் பிறந்தநாள் பதிவேட்டை நகல் செய்து தமது கட்டுரையில் வெளியிட்டுள்ளார். அவர் உழைப்பு பாராட்டுதற்குரியது.

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் பாவேந்தரோடு நீண்டநாளாகப் பழகியவர். பாவேந்தரைப் பற்றிய அவருடைய மதிப்பீடுகள் தமிழுணர்வின் அடிப்படையில் இலக்கிய நயம் பொருந்த அமைந்திருக்கின்றன. திருவாளர் திருலோக சீதாராமின் கட்டுரை ஒரு கவிஞனுக்கே உரிய பெருமிதத்தோடு எழுதப்பட்டுள்ளது.

விருந்தும், தமிழ் தந்த செல்வமும் வித்தியாசமான கலைப் படங்கள்.

உலகில் ஆங்கிலக் கவிஞன் ஷேக்ஸ்பியர் பற்றியும், அவன் படைப்புகள் பற்றியுமே அதிக நூல்கள் எழுதப்பட்டுள்ளன. தொகையில் அவை 50,000க்கும் மேற்பட்டவை. பாவேந்தர் பாரதிதாசனின் நூறாவது ஆண்டு நிறைவு பெறும் இந்நேரத்தில் அவரைப் பற்றியும் அவர் படைப்புகள் பற்றியும் 400 நூல்களாவது வெளியாக வேண்டும் என்பது என் விருப்பம்.

நான் நேரில் சென்றபோது செய்திகள் உதவியும் எனது வேண்டுகோளுக்கிசைந்து கட்டுரைகள் அனுப்பியும் இத்தொகுப்பு உருவாவதற்குக் காரணமாக இருந்த பெரியோர்களுக்கு நன்றி.

இந்நூலுக்கு இன்றியமையாத சில புகைப்படங்களை எடுத்தனுப்பிய திருமதி வசந்தா தண்டபாணி அவர்கள் எனது நன்றிக்குரியவர். பாவேந்தர் நினைவுகளை வெளிக்கொணர்வதில் தணியாத ஆர்வம் காட்டிவரும் அன்னம் வெளியீட்டாளர் தமிழரின் நன்றிக்குரியவர்.

முருகு சுந்தரம்
4/100 கான்வெண்ட் வீதி
சேலம்-636016

அகம்

I பாவேந்தர் நினைவுகள்

கவிஞர் முருகுசுந்தரம்

II அரும்புகள் மொட்டுகள் மலர்கள்

மார்கழியின் உச்சியில்...!
கவிஞர் சுரதா

பாவேந்தரோடு நான்; சில நினைவுகள்
கவிஞர் வாணிதாசன்

முழுமதியனையார்
கவிஞர் ச. சிவப்பிரகாசம்

உள்ளத்தில் மணக்கும் முல்லைச்சரம்
கவிஞர் பொன்னடியான்.

என் தந்தையார்
திருமதி சரசுவதி கண்ணப்பர்

பாடிப் பறந்த குயில்
திருமதி வசந்தா தண்டபாணி

அச்சம்-அவர் அறியாதது
திரு. மன்னர் மன்னன்

பாவேந்தர் பற்றி...!
முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம்

நானறிந்த பாரதிதாசனார்
பேராசிரியர் மயிலை. சிவமுத்து

நினைவுத்துளிகள்
டாக்டர் திருமதி தே. தியாகராசன்

இன்ப இரவு
திரு மு. செல்லப்ப ரெட்டியார்

கவியரசன் பாரதிதாசன்
கவிஞர் திருலோக சீதாராம்

பாவேந்தருடன் ஒரு நாள்
கவிஞர் மணிவேலன்

இழந்த செல்வம்
டாக்டர் முருகரத்தினம்

III. குயில் கூவிக்கொண்டிருக்கும்

உள்ளத்தில் எழுதிய ஓவியம்
ஓவியர் வேணுகோபால சர்மா

கொள்கை மறவர்
தஞ்சை இரா. இராசகோபாலன்

என் ஆசான் பாரதிதாசன்
புலவர் மு. மதிவாணன்

நினைத்தாலே இனிக்கும் நாட்கள்
எஸ். முருகேசன்

அவள் மேல் பழி
சேலம் வேலுச்சாமி கவி

நோபிள் பரிசு கிடைத்திருக்கும்
மதுரை தனுஷ்கோடி ராஜ

தேனருவி
கவியரசு கண்ணதாசன்

தமிழ்த் தமையன்
திருமதி மஞ்சுளாபாய்

என் அறிவுத் தந்தை
பாரதி சுவாமிநாதன்

ஆஸ்தி நாஸ்தி
அணுகுண்டு எஸ்.வி. பொன்னையா

இரு துருவங்கள்
ஔவை சு. துரைசாமிபிள்ளை

மறத்தமிழன்
தருமபுரி செல்லையா

சொந்தச் சிந்தனையாளன்
பெண்ணாகரம் நஞ்சையா

IV புதுவைக் கல்லறையில் புதிய மலர்கள்

பாவேந்தர் நினைவு போற்றுவோம்
பேராசிரியர் க. அன்பழகன்

செட்டி நாட்டிலிருந்து சென்னை வரை
பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார்

பாலும் தெளிதேனும்
திருக்குறளார் வீ. முனுசாமி

பாவேந்தருடன்
திரு எஸ்.ஆர்.சுப்பிரமணியம்

பாவேந்தர்-ஒரு நினைவுச்சரம்
கவிஞர் சிற்பி

கவி அரச அரிமா
டாக்டர் நா. ஆறுமுகம்

பாட்டுக் குழந்தை பாரதிதாசன்
டாக்டர் மா. அண்ணாத்துரை

விருந்து
பாவலர் மணி சித்தன்

என் தந்தையின் நண்பர்
செந்தமிழ்த் தொண்டர் சிவ. கண்ணப்பா

தமிழ் தந்த செல்வம்
திருமதி தமிழ்ச் செல்வம் முத்தையா

பாவேந்தர்-நான் கண்டதும் கேட்டதும்
திரு வசந்தகுமார்

சுதும்புமீன்
திரு ஆ. சுந்தரேசன்

பிற்சேர்க்கை

அடிக்குறிப்புகள்

கனகசுப்புரத்தினம்	பழனியம்மாள்	பாவேந்தர் பரம்பரை	
மக்கள்	மருமக்கள்	பேரர்	கொள்ளுப்பேரர்
சரசுவதி	கண்ணப்பர்	புகழேந்தி பாரி மல்லிகை இளமுருகு	சுப்புரத்தினபாரதி பரமநாதன்
வசந்தா	தண்டபாணி	தமிழ்ச்செல்வம் (பெண்) பாண்டியன் சேரன்	அருட்செல்வம் புகழ்வடிவு (பெண்) வெண்ணிலா (பெண்)
கோபதி	சாவித்திரி	செல்வம் தென்னவன் பாரதி அமுதா	
ரமணி	சிவசுப்பிரமணியம்	செங்குட்டுவன் (எ) வீரமணி மணிமேகலை முல்லைக்கொடி சுப்புரத்தினம் (பெண்) மணியரசு	
பாவேந்தரின் பெற்றோர்	கனகசபை இலக்குமி	சகோதரர் சுப்பராயன்	சகோதரிகள் சிவகாமசுந்தரி இராசாம்பாள்

ஒன்று

பாவேந்தரின் நினைவுகள்

கண்டதும் கேட்டதும்

பெரியார், ஸ்டாலின் போன்ற சில அரசியல் தலைவர்களின் படத்தைப் பார்த்தவுடன் ஒருவித அச்சங்கலந்த மரியாதை நம் உள்ளத்தில் நம்மையறியாமலேயே ஏற்படுவதை உணர்கிறோம். பாவேந்தர் பாரதிதாசனின் உருவப்படத்தை முதன் முதலில் பார்த்தபோதும் அத்தகைய உணர்வு எனக்கு ஏற்பட்டது. நான் பள்ளி மாணவனாக இடைப்பாடியில் படித்துக் கொண் டிருந்தபோது திராவிடர்க்கழகம் பிரியாமல் செயல்பட்டுக் கொண்டிருந்தது. கி.பி. 1946ஆம் ஆண்டில் திருவாளர்கள் அன்பழகன், நாவலர் இளந்தாடி நெடுஞ்செழியன், டார்பிடோ ஜனார்த்தனம் ஆகிய மூவரும் கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்டு கழகப் பிரசார பீரங்கிகளாகத் தமிழகத்து மேடைகளில் முழங்கிக் கொண்டிருந்தனர். நாவலர் நெடுஞ்செழியன் தாம் பேசிய ஒவ்வொரு மேடையிலும் பாவேந்தர் பாடல்களான 'எங்கள் வாழ்வும்', 'பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு திறக்கப்பட்டது சிறுத்தையே வெளியில் வா', 'உலகப்பன்', 'வாளினை எடடா!' ஆகியவற்றைப் பாடாமல் கீழே இறங்கமாட்டார். அப்பாடல்களை அன்றைய நெடுஞ்செழியன் பாடிக் கூட்டத்தை முடிக்கும்போது இடியிடித்து மழை ஓய்வது போலிருக்கும்.

இடைப்பாடிக் கூட்டத்தில் நெடுஞ்செழியன் இப்பாடல்களை உணர்ச்சிவசப்பட்டு மேடையில் கூறக் கேட்ட நான், அன்றே அவ்வூர்த் திராவிடர்க்கழகத் தலைவரும் நண்பருமான காலஞ்சென்ற திரு இரா. தாண்டவனிடத்திலிருந்து 'பாரதிதாசன் கவிதைகள்' என்ற முதல் தொகுதியை வாங்கிவந்து படித்தேன். அன்றிலிருந்து பாரதிதாசன் கவிதைகளுக்கும் எனக்கும் நிலையான தொடர்பு ஏற்பட்டு விட்டது.

என் தந்தை ஒரு சுயமரியாதைக்காரர். எங்கள் வீட்டுக்குக் குடியரசும், திராவிட நாடும் தொடர்ந்து வந்து கொண்டிருந்தன. குடியரசில் பாரதிதாசன் பாடல்களும், அவரைப் பற்றிய குறிப்புகளும் சில சமயங்களில் வெளியாகும், திராவிடநாடு இதழில், பாவேந்தரை மேலைநாட்டுப் புரட்சிக் கவிஞர்களான ஷெல்லி, வால்ட் விட்மன் ஆகியவர்களோடும், மராட்டியக் காண்டேகரோடும் ஒப்பிட்டு அண்ணா எழுதிய கட்டுரைகளைப் படித்த போது பாவேந்தரைப் பற்றி அதிகம் சிந்திக்கத் தொடங்கினேன்.

மேட்டூர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் பயின்ற காலத்தில் புலவர் குழந்தை, புலவர் இரா. பெ. இராமச்சந்திரனார் போன்ற தமிழறிஞர்களைப் பொங்கல் விழாவின்போது அழைத்துப் பேச வைத்தோம். அவர்கள் பேச்சு பாவேந்தர் பாடல்களின் சில புதிய பரிமாணங்களை எனக்கு அறிமுகப்படுத்தியது. எங்கள் பயிற்சிப் பள்ளியின் தலைமையாசிரியராக இருந்த திரு. பாலகிருட்டிணன் பி.ஏ., எல்.டி. அவர்கள்* தமிழிலும் ஆங்கிலத்திலும் பெரும் புலமைமிக்கவர். பாரதிதாசன் பாடல்களில் அதிக ஈடுபாடு கொண்டவர். பாரதிதாசன் பாடல்கள் பலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் 'பூந்தோட்டம்' என்ற பத்திரிகையில் வெளியிட்டவர். அவருடைய தொடர்பால், பாவேந்தர் பாடல்களின் மீது எனக்கு அளவிறந்த மதிப்பும் பற்றும் ஏற்பட்டன. பிறகு பாவேந்தரின் நூல்களைத் தேடிப் படிக்கத் தொடங்கினேன். அவர் புதுவையிலிருந்து வெளியிட்ட 'குயில்' கவிதை ஏடு பாவேந்தரின் படைப்புகளைத் தொடர்ந்து செல்லும் ஆவலைத் தூண்டி விட்டது.

தமிழ் மறவர் பொன்னம்பலனார் பணிபுரிந்த அதே சேலம் நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் கி.பி. 1955ஆம் ஆண்டு தமிழாசிரியராக வேலை ஏற்றேன். அடுத்த ஆண்டு பள்ளி மாணவர்களைச் சுற்றுலாவுக்காக அழைத்துக் கொண்டு சென்றபொழுது (திசம்பர் 1956) புதுச்சேரியும் சென்றிருந்தேன். கையுறையாகச் சில கனிகளை வாங்கிக் கொண்டு மாணவர்களோடு பெருமாள் கோயில் தெருவில் இருந்த பாவேந்தர் இல்லத்துக்குச் சென்றேன். அன்று பாவேந்தர் எண்ணெய் தேய்த்துக் குளித்து விட்டுப் பிரம்புச் சாய்வு நாற்காலியில் ஓய்வாகப் படுத்திருந்தார். மாணவர் கூட்டத்தைப் பார்த்தவுடன் அவருக்கு அளவு கடந்த மகிழ்ச்சி. எங்களைப் பற்றி விசாரித்து விட்டு மாணவர்களை நோக்கி, "தமிழை நன்றாகக் கற்க

* இவர் 'இளங்கண்ணன்' என்ற புனைபெயரில் பத்திரிகைகளில் எழுதுவார். ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெற்றதும், சாகித்திய அகாடமியில் ஆங்கில மொழி பெயர்ப்பாளராகச் சிலகாலம் பணிபுரிந்தார். The Golden Anthology of Ancient Tamil Literature என்ற பெயரில் சங்கப் பாடல்களை மூன்று தொகுதிகளாக மொழி பெயர்த்திருக்கிறார்.

வேண்டும்" என்று அறிவுரை கூறினார். பிறகு விடை பெற்றுக் கொண்டு எல்லாரும் திரும்பினோம். இதுவே பாவேந்தருக்கும் எனக்கும் ஏற்பட்ட முதல் சந்திப்பு.

இரண்டாம் முறையாகப் பாவேந்தரைப் பார்த்தது சேலத்தில். தமிழகப் புலவர் குழு 25.9.1960இல் சேலம் வந்திருந்தது. சேலம் நீதிக்கட்சிப் பிரமுகர் திருவாளர் பி. இரத்தனசாமிப்பிள்ளை தம்முடைய மாமாங்கம் தோட்ட மாளிகையில் புலவர்களுக்கு ஒரு பெரிய விருந்து வைத்தார். மாலையில் சேலம் திருவள்ளுவர் கழகம் புலவர் குழுவுக்கு ஒரு வரவேற்பு வழங்கியது டாக்டர் மு.வ. அன்றைய நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். நிகழ்ச்சி எங்கள் நகரவைப் பள்ளி மைதானத்தில் போடப்பட்ட பெரிய மேடையில் நடைபெற்றது.

புலவர் குழுவில் ஒரு வழக்கமுண்டு. புலவர் குழுவில் உள்ள நாற்பது பேரும் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பேச முடியாது. எனவே ஒவ்வொரு கூட்டத்திலும் சீட்டுப் போட்டுப் பத்துப்பேரைத் தேர்ந்தெடுப்பார்கள். அவர்கள் மட்டுமே பேசுவார்கள். கூட்டம் தொடங்கியது. சேலம் திருவள்ளுவர் கழகத்தின் ஆசிரியரான புலவர் நடேச உடையார் வரவேற்புரை வழங்கினார். பிறகு தேர்ந்தெடுக்கப்பட்ட பத்துப் புலவர்களும் பேசினர். அப்புலவர் களுள் பாவேந்தர் இடம் பெறவில்லை. கூட்டத்திலிருந்து ஒரு சிலர் பாவேந்தர் பேச வேண்டும் என்று சொல்லித் துண்டுச் சீட்டு எழுதிக் கொடுத்தனர். பொதுமக்களின் விருப்பத்திற்கிணங்கப் பாவேந்தர் எழுந்து பேசினார்.

இந்த நிகழ்ச்சி நடைபெறுவதற்கு ஒரு சில திங்களுக்கு முன்பு மாநிலக் கல்லூரி ஆங்கிலப் பேராசிரியர் ஒருவர், திரு.வி.க. மறைமலை யடிகள் ஆகியோரின் உரைநடையைக் கூட்டத்தில் கேலி செய்திருந்தார். இதைப் பற்றிக் குறிப்பிட்ட பாவேந்தர் பெருஞ்சீற்றங் கொண்டு, "தமிழ் நாட்டிலே, தமிழர்கள் நடுவிலே, தமிழறிஞர் ஒருவரின் படைப்பை ஒருவன் கேவலமாகப் பேசுகிறான். மான உணர்விருந்தால் நீங்கள் இதைப் பொறுத்துக் கொண்டிருப்பீர்களா? எப்போது அவன் தமிழை இழித்துப் பேசினானோ, அப்போதே அவன் தலை கீழே அற்று விழுந்து விட்டது என்ற செய்தி தமிழகம் முழுவதும் பரவியிருக்க வேண்டாமா?" என்று பேசினார். உணர்ச்சி வெறியினால் அவர் குரல் கம்மியது; கண்களில் நீர்கசிந்தது.

1961ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 29ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணியளவில் நான் மூன்றாம் முறையாகப் பார்த்தேன். அன்று சென்னை இராஜாஜி ஹாலில் அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் பெருமன்றத் துவக்க விழா நடைபெற்றது. அவ்விழாப் பொறுப்பாளரான திருச்சி அ.வெ.ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார் நேரில் சென்று அழைத்த அழைப்பை மதித்துப் பாவேந்தர் விழாவுக்குச் சற்று முன்னதாகவே வருகை தந்திருந்தார். சேலம் மாவட்டத் தமிழ் எழுத்தாளர் மன்றச் செயலாளன் என்ற முறையில் நானும் விழாவில் கலந்து கொண்டேன். பாவேந்தர் பெண்கள் கூட்டத்திடையே அமர்ந்திருந்தார், பாரதியாரின் மூத்த மகளான தங்கம்மாள் பாரதி அங்கு வந்திருந்ததால், பாவேந்தர் அந்த அம்மையார் அருகில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார். பெருந்தலைவர் காமராசர், டாக்டர் சுப்பராயன், மீ.ப. சோமசுந்தரம் ஆகியோரும் அன்றைய விழாவில் கலந்து கொண்டனர். காமராசர் மேடைக்கு வந்ததும் பாவேந்தரைப் பார்த்தார். உடனே விழாப் பொறுப்பாளரை அனுப்பிப் பாவேந்தரை அழைத்து மேடைமீது தம்மருகில் உட்கார வைத்துக் கொண்டார்.

காமராசர் மன்றத்தைத் துவக்கி வைத்தார். பாவேந்தர் வாழ்த்தும் முகத்தான் சில சொற்கள் நறுக்குத் தெறித்தாற்போல் சொன்னார்: "தமிழ் எழுத்தாளன் முதலில் தமிழை ஒழுங்காகக் கற்க வேண்டும். இன்றைய தமிழ் எழுத்தாளர் பலருக்குத் தமிழே தெரியாது. எழுத்தாளன் என்பவன் எப்போதும் எவருக்கும் அஞ்சாமல் தன் உள்ளத்தில் தோன்றும் கருத்தை வெளியிடும் துணிச்சல் பெற்றவனாக இருக்க வேண்டும்" என்று இந்த இரண்டு கருத்தை மட்டும் சொல்லி விட்டு உட்கார்ந்து கொண்டார். இரண்டு அல்லது மூன்று நிமிடமே பேசியிருப்பார். அதற்குள் இந்த நாட்டு எழுத்தாளனுக்குக் கட்டாயம் எதைச் சொல்ல வேண்டுமோ அதை மட்டும் சொல்லிவிட்டு முடித்துக் கொண்டார்.

இதுவரை பாவேந்தரைப் பார்த்ததோடு சரி. அடுத்த ஆண்டு துவக்கத்திலிருந்து பாவேந்தருக்கும் எனக்கும் உள்ளங்கலந்த பழக்கமும், நெருக்கமும், அடிக்கடி சந்தித்துப் பேசும் வாய்ப்பும் கடிதத் தொடர்புகளும் ஏற்பட்டன. இந்நெருங்கிய தொடர்பு அவர் இறக்கும்வரை இருந்து கொண்டிருந்தது. கி.பி. 1962இல் சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பி.டி. படிப்பதற்காக வந்து சேர்ந்தேன். பாவேந்தர் அருகிலேயே குடியிருந்தார். பெரும்பாலும் கல்லூரி விட்ட நேரங்களில் பாவேந்தரோடு தான் இருப்பேன். அவரோடு பழகும் நேரங்களில் அவர் வாழ்க்கை

வரலாற்றைக் கேட்டு ஒரு சுவடியில் குறித்துக் கொண்டேன். அக்குறிப்புகளை அப்படியே நாட்குறிப்புப் போலவே கொடுத்திருக்கிறேன்; என் நினைவில் நின்ற அவரைப் பற்றிய பொதுவான செய்திகளை ஒரு கட்டுரையாக்கிக் கொடுத்திருக்கிறேன். பாரதியாரைப் பற்றி அவர் குறிப்பிட்ட செய்திகளையும் ஒரு தனிக்கட்டுரையாக்கியுள்ளேன்.

அந்த நாட்கள்

18-1-62

சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் எனக்கு இடம் கிடைத்ததும், முதலில் பாவேந்தர் நினைவுதான் எனக்கு வந்தது. சென்னைக்குப் புறப்படுவதற்கு முன் பாவேந்தருக்கு மிகவும் நெருங்கிய சேலம் நண்பரான திரு. சங்கரன் அவர்களிடத்தில் ஓர் அறிமுகம் கடிதம் வாங்கி வைத்துக் கொண்டேன். சென்னை சென்றதும் எனக்குக் கல்லூரி வேலைகளே சரியாக இருந்ததால், பாவேந்தரை நேரில் காணும் வாய்ப்புத் தடைபட்டுக் கொண்டே வந்தது. மேலும் பாவேந்தரைக் காணச் சென்று வந்த நண்பர் பலரும் அவரைப் பற்றிப் பலவிதமாகக் கூறுவர். எனவே என் உள்ளத்திலும் ஒருவித அச்சம் இருந்தது. 'நன்றாகப் பழகுவாரா? மாட்டாரா?' என்று அடிக்கடி நான் எண்ணுவதுண்டு.

கல்லூரியில் பொங்கல் விழா. அவ்விழா முடிந்து ஓரிரு நாட்கள் இருக்கும். மாலை 6 மணியளவில் சைதாப்பேட்டையிலிருந்து உந்து வண்டியில் புறப்பட்டுத் தேனாம்பேட்டையில் இறங்கினேன். அங்கிருந்து தியாகராயர் நெடுஞ்சாலையில் சிறிது தொலைவு சென்று உருசியத் தூதர் அலுவலகத்தருகே வலதுபுறமாகத் திரும்பினால் இராமன் தெரு உள்ளது. அத்தெருவில் 'பாரதிதாசன் பிக்சர்ஸ்' என்று ஒரு பெரிய விளம்பரப் பலகை ஒரு பங்களா முகப்பில் தென்பட்டது. உடனே அந்த பங்களாவிற்குள் நுழைந்து விட்டேன். முன்னால் பெரிய வரவேற்பு அறையொன்று இருந்தது. அதில் மெலிந்த ஒற்றை நாடி உடம்புக்கார இளைஞர் ஒருவர் சுறுசுறுப்பாக எதையோ எழுதிக் கொண்டிருந்தார். என்னைப் பார்த்ததும், 'என்ன வேண்டும்? யாரைப் பார்க்கிறீர்கள்?' என்று அவர் கேட்டார்.

"நான் முருகுசுந்தரம்... நான்" என்று கூறுவதற்கு முன்பாகவே அவர் "ஓ நீங்கள்தானா? தெரியுமே. சேலத்துக் கவிஞர். உம் பாட்டைக் குயிலில் அடிக்கடி பார்த்திருக்கிறேன். நான்தான் பொன்னடியான். கவிஞருக்குத் துணையாக இருந்து எல்லா வேலைகளையும் பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்று கூறினார்.

நான் "பாவேந்தரைப் பார்க்க வேண்டும்" என்று கூறியதும் 'உட்காருங்கள்; சாப்பிடுகிறார். சாப்பிட்டதும் பார்க்கலாம்" என்று சொன்னார். பாவேந்தர் சாப்பிட்டு முடித்ததும் பொன்னடி உள்ளே சென்று நான் வந்திருப்பதாகச் சொன்னார். பாவேந்தரும் நேராக வரவேற்பு அறைக்கு வந்தார். அப்போது முன்னிரவு ஏழு மணி. மின்விளக்கு வெளிச்சத்தில் அவர் தோற்றம் மிகவும் எடுப்பாக உள்ளத்தில் சட்டென்று பதியும்படியாக இருந்தது. இடுப்பில் பச்சை நிற லுங்கி; மேலே திறந்த மேனி. வரும்போதே கனைத்துக் கொண்டு வந்தார். கனைப்பொலியைக் கேட்டவுடன் என்னையறியாமல் நான் எழுந்து நின்றுகொண்டேன். அவருடைய நடையிலும் தலைநிமிர்விலும் உலகையே அலட்சியம் செய்யும் அசாதாரண நிலை தென்பட்டது. என் அருகில் வருவதற்கு முன்பாகவே, அவர் விழிகள் என்னை நிமிர்ந்து பார்த்த பார்வை 'என்ன? யார் நீ?' என்று கேட்பது போல் இருந்தது.

அவர் என்னை வாய் திறந்து கேட்பதற்கு முன்பாக அவசரப்பட்டுச், "சேலம் சங்கரன் கடிதம் கொடுத்திருக்கிறார்" என்று சொன்னேன்.

"அப்படியா? படி" என்றார். நானும் கடிதத்தை நின்று கொண்டே படித்தேன். படித்து முடித்ததும் தாம் அமர்ந்திருந்த சோபாவைக் காட்டி "இப்படி வந்து உட்கார்" என்று சொன்னார். நானும் அடக்கத்தோடு சோபாவின் நுனியில் அமர்ந்த வண்ணம் அவரைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

"உன் பேர்?"

"முருகு சுந்தரம்?"

அதற்குள் பொன்னடி குறுக்கிட்டு, 'இவர் குயிலிலே அடிக்கடி எழுதியிருக்கிறார்' என்று சொன்னார்.

"அப்படியா! என்ன படிச்சிருக்க?"

"புலவர்; எம்.ஏ."

"என்ன கையிலே புத்தகம்?"

"இது நான் எழுதின பள்ளிப் பாடப் புத்தகம். இதிலே நாமக்கல்

கவிஞர் உங்களைப் பற்றி எழுதிய பாடலையும் சேர்த்திருக்கிறேன்" என்று சொல்லி அப்பாடலைப் படித்துக் காட்டினேன்.

"பாடல் சரியான இடத்தில்தான் இருக்குது. ஆமா! இதை எப்படி விட்டானுங்க! அப்ரூவ் ஆயிடுச்சா? விடமாட்டானுங்களே!" என்று வியப்போடு கேட்டார்.

"அப்ரூவ் ஆகிவிட்டது; பல பள்ளிகளிலும் பாடமாக வைத்திருக்கிறார்கள்" என்று நான் சொன்னேன். அவர் என்னை மகிழ்ச்சியோடு பார்த்தார்.

"நான் உங்கள் மீசையைப் பற்றிப் பத்து எண்சீர் விருத்தம் எழுதியிருக்கிறேன்" என்று சொன்னேன்.

"ஏன்?" என்றார் பாவேந்தர்.

"இங்கிலாந்தில் வொர்ட்ஸ்வொர்த் என்ற கவிஞர் வாழ்ந்தபோது அவன் மூக்கைப் பற்றிக் கவிதைபாடிச் சிறப்பித்தார்கள். கீட்சின் தலைமுடி பொன்னிறமானதா? கருநிறமானதா? என்று ஆராய்ச்சி நடத்தினார்கள். இந்த நூற்றாண்டின் இணையற்ற கவிஞராகிய உங்கள் மீசையைப் பற்றி ஒரு கவிதை பாடினால் என்ன என்று எண்ணினேன்; எழுதினேன்" என்று நான் சொன்னேன்.

'அப்படியா! எங்கே படி!" நானும் படித்தேன். அந்தப் பத்து எண்சீர் விருத்தத்தையும்[1] பொறுமையோடு கேட்டுவிட்டுக் "கற்பனை யெல்லாம் ரொம்ப நல்லா இருக்குது... ஆமா... சாப்பிட்டாயா" என்றார்.

"இல்லை ஐயா. நான் கல்லூரி விடுதிக்குச் சென்று சாப்பிட்டுக் கொள்கிறேன்" என்றேன்.

உடனே 'தாயாரு? தாயாரு!' என்று சமையற்காரியை அழைத்தார். 'தாயாரம்மாள்' என்பது அந்த அம்மையார் பெயர்.

"ஆமா! நீ புலால் சாப்பிடுவாயா?" என்று கேட்டார்.

"சாப்பிடுவேன்" என்றேன் நான்.

"கறியை விடாதே. கறிதான் மனிதனுக்கு உணர்ச்சி வெறியை உண்டாக்குது. உணர்ச்சி வெறிதான் கவிஞனுக்கு வேண்டும். கடைசி வரையிலும் கறியை விடக்கூடாது. நான் அதுக்கு எடுத்துக்காட்டு... என்ன?" என்று கூறிவிட்டு என்னைப் பார்த்தார்.

---

1 காண்க: பிற்சேர்க்கை-1

"சரிங்க ஐயா!" என்றேன்.

"சைவத்தை நம்பி நம்ம வீர உணர்ச்சியே போயிடிச்சு. பழைய காலத்திலே ஏறு தழுவினோம்! இப்ப எவன் தழுவறா? கன்னுக்குட்டியை கண்டாலே காதவழி ஓடறா..." என்று சொல்லிவிட்டு உரக்கச் சிரித்தார். தாயாராம்மாள் எதிரில் வந்து நின்றார்.

"என்ன சாப்பாடு இருக்கா?"

"இருக்குதுங்க."

"மத்தியானம் செஞ்சதெல்லாம்...?"

"அதெல்லாம் இல்லீங்க..."

"இறால்கூட இல்லையா?"

"கொஞ்சம் இருக்குதுங்க."

"சரி. போடு போடு!"

தாயாரம்மாள் சாப்பாடு பரிமாறினார். நான் கீழே அமர்ந்து சாப்பிட்டேன். பாவேந்தர் அருகில் இருந்த சாய்வு நாற்காலியில் அமர்ந்த வண்ணம், "நல்லா சாப்பிடு. வெட்கப்படாதே.... ஆமா! நீயேன் விடுதியிலே சாப்பிடற? இங்கேயே வந்திடே. தினம் இங்கேயே சாப்பிடலாம்" என்றார்.

"பரவாயில்லைங்கையா! இங்கே வந்து சாப்பிட்டுவிட்டுக் கல்லூரிக்குப் போகமுடியாது" என்றேன் நான். "ஆமா! அங்கே விடுதிக்குக் கட்ற பணமும் வீணாயிடும். அப்ப ஒண்ணுசெய். அடிக்கடி வந்து சாப்பிட்டுவிட்டுப்போ" என்றார். நானும் 'சரி' என்றேன்.

படுக்கையறையில் ஒரு மரக்கட்டில். அதன்மீது மெத்தை ஒன்று விரிக்கப்பட்டிருந்தது. அம்மெத்தையின் மீது அழகான பூ வேலைப்பாடுகளுடன் கூடிய விரிப்பு ஒன்றும் போடப்பட்டிருந்தது.

அந்த விரிப்பின் வேலைப்பாடு என் உள்ளத்தைக் கவர்ந்தது. பாவேந்தர் கட்டிலில் படுத்திருந்தார். நான் பக்கத்தில் இருந்த ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தேன். பழைய காலத்து ஜி.இ.சி. மின் விசிறி ஒன்று மேசை மீது இரைச்சலோடு ஓடிக் கொண்டிருந்தது. "எனக்கு இரவில் தூக்கம் வருவதில்லை. பன்னிரண்டு மணிக்குத்தான் தூங்குவேன். இங்கிலீஸ் படத்துக்குப் போவமா?" என்றார் பாவேந்தர்.

"சரி போகலாம்" என்றேன்.

இருவரும் அருகிலே இருந்த இராஜகுமாரி (சகானிஸ்) திரைப்படக் கொட்டகைக்குச் சென்றோம். அன்று 'Kingdom of Beauty' என்ற ஒரு சீனப்படம் நடந்து கொண்டிருந்தது. அது ஆங்கிலத்திலே 'டப்' செய்யப்பட்டிருந்தது. படத்தின் நடுவே கொட்டகையில் இருப்பவர்கள் சிரித்தால் 'ஏன் சிரிக்கிறார்கள்?' என்று கேட்பார். உடனே நான் காரணத்தை விளக்குவேன். படம் புரியாவிட்டாலும் படத்தில் காட்டப்பட்ட இயற்கைக் காட்சிகளை வியந்து பாராட்டினார். அதில் பாடப்பட்ட சீனப் பாடல்கள் தம் தமிழ் வண்ணப்பாடல்களைப் போலவே இருப்பதாகச் சொன்னார். படம் பார்த்துவிட்டு அன்று நானும் பாவேந்தர் வீட்டிலேயே படுத்துக் கொண்டேன். காலையில் 7.30 மணிக்குக் கல்லூரி துவங்குவதால் கண் விழித்ததும் பாவேந்தரிடம் கூடச் சொல்லிக்கொள்ளாமல் புறப்பட்டு வந்துவிட்டேன். நான் புறப்பட்டு வந்த பிறகு பொன்னடியைக் கூப்பிட்டு என் பாடலை எடுத்துக்காட்டி "தோ... இரவு வந்தாரே அவர் என் மீசையைப் பத்திக் கவிதை பாடியிருக்கிறார்" என்று சொன்னாராம்.

20.1.62

ஞாயிற்றுக்கிழமை வார விடுமுறையாகையால் அன்று என் உறவினர் வீட்டுக்குப் போய்விட்டு மாலையில் சைனா பஜாரில் தேவையான பொருள்களை வாங்கிக் கொண்டு இரவு எட்டு மணிக்குக் கல்லூரி விடுதிக்கு வந்தேன். உடனே பக்கத்து அறைக்கார நண்பர்கள் "பாரதிதாசன் வீட்டிலிருந்து உங்களைத் தேடி ஓர் இளைஞர் வந்திருந்தார். பாரதிதாசன் உம்மைக் கையோடு அழைத்து வரச் சொன்னாராம்" என்று கூறினார்கள்.

உடனே வந்து வண்டியேறி 9 மணி வாக்கில் பாவேந்தர் இல்லத்தை அடைந்தேன். பொன்னடி எனக்காக முற்றத்தில் காத்திருந்தார். "என்ன முருகு? ஏன் இரண்டு நாளாக வரவில்லை. கவிஞர் அடிக்கடி என்னைக் கேட்டார். "ஞாயிற்றுக்கிழமை விடுமுறையாச்சே? ஏன் வரவில்லை? போய்க் கூட்டிக் கொண்டு வா!' என்று சொல்லி என்னை அனுப்பி வைத்தார். அதனால் தான் நான் கல்லூரி விடுதிக்குத் தேடி வந்தேன். எங்கு போயிருந்தீர்?' என்று கேட்டார். நான் வெளியில் சென்றிருந்த காரணத்தைப் பொன்னடியிடம் கூறி விட்டுக் கவிஞரின் அறைக்குச் சென்றேன். கவிஞர் கட்டிலில் படுத்திருந்தார். என்னைக் கண்டதும் "ஏம்ப்பா இன்னைக்கு வரலை?

உனக்காக இன்னைக்குக் கோழிக்கறி, இறால் எல்லாம் வாங்கிவந்து சமைக்கச் சொல்லியிருந்தேன்?" என்றார்.

'ஐயா! இன்று, கொஞ்சம் வெளிவேலை இருந்தது. உறவினர் வீட்டுக்குப் போயிருந்தேன்" என்று சொன்னேன். பிறகு சாப்பிடச் சொன்னார்; சாப்பிட்டேன். அப்போது தேர்தல் நெருங்கிக் கொண்டிருந்த காரணத்தால், திராவிடர்க் கழகப் பிரசார நாடகம் ஒன்று கவிஞர் வீட்டில் ஒத்திகை பார்க்கப்பட்டது. கவிஞருக்கு வேண்டிய கோவிந்தராசன் என்பவர் அந்த நாடகத்தை ஏற்பாடு செய்திருந்தார். கவிஞர் சில பாடல்களை இசையோடு பாடிக் காட்டினார். நடிக-நடிகையருக்கு நடித்தும் காண்பித்தார். ஒரு பெண் மிகவும் இனிமையாகப் பாவேந்தர் பாடல்களைப் பாடினாள். அப்பெண்ணைப் பார்த்து, "என்ன? தட்டுக்குச்சி மாதிரி இருக்கே? இப்படியிருந்தா எப்படிப் பாடுவ? பாடனுமுன்னா உடம்பு நல்லா இருக்கணும்" என்று கூறினார்.

நாடகத்தில் கதாநாயகியாக நடித்த பெண் படுசுட்டி. கவிஞரின் காலடியில் அமர்ந்து கொண்டு அன்பாகவும் பணிவாகவும் பேசுவாள். பாவேந்தர் படுக்கையின் மீது விரித்துப் போடப் பட்டிருந்த விலையுயர்ந்த விரிப்பு அவள் கண்ணை உறுத்திக் கொண்டே இருந்தது. ஒத்திகை முடிந்து போகும்போது அதைத் தனக்குக் கொடுக்கும்படி கவிஞரிடம் கேட்டாள்.

"இதுதானே? எடுத்துக்க..." என்று சொல்லி விரிப்பை அவள் கையில் கொடுத்து விட்டார். எல்லாரும் படுக்கப் போகும்போது இரவு 1 மணியிருக்கும். விடியற்காலம் 5.30 மணிக்கு எழுந்து நான் புறப்பட்டேன். கவிஞர் எனக்கு முன்பாகவே எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு சமையலறையில் மேசை மீது கால்மேல் கால் போட்டு உட்கார்ந்த வண்ணம் காலில் தாளம் போட்டுக் கொண்டிருந்தார். இரவு எந்நேரம் படுத்தாலும் விடியற் காலை 5 மணிக்கே எழுந்திருப்பது கவிஞர் பழக்கம். கவிஞரிடம் விடைபெற்றுக் கொண்டு நான் சைதாப்பேட்டை புறப்பட்டேன்.

26.1.62

இன்று ஒரு குறிப்பிடத்தக்க நாள். 'அனைத்துலகத் தமிழ்க் கவிஞர் பெருமன்றம்' இன்று பாவேந்தர் இல்லத்தில் துவக்கப்பட்டது. நான் காலையிலேயே கல்லூரிக்கு விடுப்பு எடுத்துக்கொண்டு வந்து சேர்ந்தேன். கவிஞர் பாரதி சுந்தரம் என்ற ஓர் அன்பர் வந்திருந்தார்.

அவர் பேச்சும் நடவடிக்கைகளும் எப்போதும் மற்றவர் கவனத்தைக் கவரும் படி இருந்தன. அவரோடும் பொன்னடியோடும் பேசிக் கழித்தேன். நடுப்பகல் உணவைக் கவிஞர் வீட்டிலேயே உண்டு விட்டு அங்கேயே ஓய்வெடுத்துக் கொண்டேன். துவக்க விழாவில் கலந்து கொள்ள ஒவ்வொரு கவிஞராக வந்து கொண்டிருந்தனர். வந்தவர்களுக்கெல்லாம் சிற்றுண்டி வழங்கப்பட்டது. வந்தவர்களுள் நா.ரா. நாச்சியப்பன், அமீது, வல்லம் வேங்கடபதி, வேழவேந்தன், தமிழ்முடி, தமிழழகன், நாக.முத்தையா, பொன்னடியான், நாராண துரைக்கண்ணன், பாரதி சுந்தரம், சி. பாலசுப்பிரமணியம்*, திருநாவுக்கரசு, செந்தாமரை, ஜமதக்னி, சகுந்தலா பாரதி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

சதாவதானி ஷெய்குதம்பிப் பாவலரின் மகனும், செந்தாமரை என்னும் புனைபெயரில் எழுதி வந்தவரும், வானொலி நிலையத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தவருமான திரு. அமீது பாவேந்தரின் சில பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பது பற்றித் தம் கருத்துக்களைத் தெரிவித்துக் கொண்டிருந்தார். ஜமதக்னி என்பவர் இந்தியும் தமிழும் வல்ல ஒரு கவிஞர்; சுதந்திரப் போராட்டத்தில் சிறை சென்றவர். இந்தியில் உள்ள 'காமாயினி' என்ற காப்பியத்தைக் 'காமன் மகள்' என்ற பெயரில் தமிழில் மொழி பெயர்ப்புச் செய்திருக்கிறார்.

பாரதியாரின் இளைய மகள் சகுந்தலா பாரதிக்கு அப்போது வயது ஏறத்தாழ ஐம்பதிருக்கும். கண்பார்வை சற்று மங்கி இருந்தது. அதை அறிந்து பாவேந்தர் மிக வருந்தி, "நான் எடுத்து வைத்திருந்து வளர்த்த குழந்தை; இவளுக்கு அதற்குள் கண்ணொளி கெட்டுவிட்டதே?" என்றார். சகுந்தலா பாரதியும் பாவேந்தரை அடிக்கொருதரம் 'மாமா! மாமா!' என்று அழைத்து அன்புக்கடலில் ஆழ்த்திக் கொண்டிருந்தார். அவரைப் பார்த்தால் பாரதி எப்படி இருந்திருப்பார் என்பதை ஓரளவு புரிந்து கொள்ளலாம். நன்றாகப் பழுத்த எலுமிச்சம் பழத்தின் நிறம்; ஒற்றை நாடி உடம்பு; உட்காருவது கூடப் பாரதி போலச் சப்பணம் போட்டு மார்பையும் தலையையும் நிமிர்த்து உட்கார்ந்திருந்தார், பேசுவதும் பாரதி போலவே வெடுக்கென்று பேசினார். மாலை 6 மணியளவில் அவரது கணவர் வந்து அவரை இல்லத்துக்கு அழைத்துச் சென்றார்.

அனைத்துலகத் தமிழ்க்கவிஞர் பெருமன்றத் துவக்கவிழாவில் பாவேந்தர் பேச்சில் பொதிந்திருந்த கருத்துக்கள் பின்வருமாறு:

---

* டாக்டர் சி.பாலசுப்பிரமணியம் இன்று தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்

"உலகின் பல நாடுகளிலும் வாழும் தமிழ்க் கவிஞர்கள் எல்லாரையும் ஒன்றாகத் திரட்டி ஒரு பெரிய சக்தியாக உருவாக்குவது இம்மன்றத்தின் முதல் நோக்கம். அவர்கள் பாடல்களையெல்லாம் ஒன்றாகத் திரட்டி நூலாக வெளியிட வேண்டும். அப்பாடல்களை ஆங்கிலத்திலும், பிற மொழி களிலும் பெயர்க்க வேண்டும். தில்லிக்கும், பிற மாநிலங் களுக்கும் தமிழே அறியாத சிலர் தாங்கள்தாம் தமிழ்க் கவிஞர்களின் முகவர்கள் என்று கூறிக் கொண்டு செல் கின்றார்கள். அத்தகைய வேற்று மாநில மன்றங்களுக்குக் கவிஞர் மன்றம் தனது முகவரை அனுப்ப வேண்டும்."

அனைத்துலகத் தமிழ்க்கவிஞர் பெருமன்றத்தின் சார்பில் திங்கள் இருமுறை இதழாகக் குயில் மீண்டும் துவக்கப்பட்டது. மன்றத்தின் குரலாக இக்குயில் கூவியது. 16 காசு விலை கொண்ட இந்த 16 பக்க இதழ் சென்னை இராமன் தெரு பாவேந்தர் இல்லத்தில் திருவள்ளுவராண்டு 1993 சித்திரைத் திங்கள் 2ஆம் நாள் (15.4.62) வெளி வந்தது. எட்டு இதழ்களோடு (1.8.62)இல் இது தன் வரலாற்றை முடித்துக் கொண்டது. இந்த எட்டு இதழ்களும் குறிப்பிடத்தக்கவை. இவற்றில் தகுதிவாய்ந்த 21 இளங்கவிஞர்கள் படத்தோடு அறிமுகப்படுத்தப்பட்டார்கள். பாவேந்தரும் வாரந்தோறும் நிறைய எழுதினார். பாவேந்தரின் அன்புக் கட்டளையின் பேரில் அவருடைய பாடல்கள் மூன்றினை நான் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தேன்; அவைகளும் வெளியாகியிருக்கின்றன. 1.8.62இல் வெளியான இறுதி இதழ்தான் பாவேந்தர் தம் வாழ்நாளில் கடைசியாக வெளியிட்ட கவிதை இதழ். இவ்விதழில் எழுதியுள்ள இளங்கவிஞர்களின் ஒவ்வொரு பாடலும், பாவேந்தரின் 'சிறப்புக் கவி' என்னும் அணிபூண்டு அழகுற வெளியாகியுள்ளன. இக்கடைசிக் குயில் வரிசையின் முதல் இதழ்,

திருமிகு தமிழகத் தலைநகர் ஆன
சென்னையிற் பன்னூறு கவிஞர் சேர்ந்து
அனைத்துலகத் தமிழ்க் கவிஞர் பெருமன்
றத்தின் சார்பில் முத்தமிழ்ப் புத்தமிழ்து
பாடுங் குயில்! இது பதினைந்து நாட்கள்
தேடுவார் அடையும் தேடருஞ் செல்வம்

கலகக் கட்சிக ளில்தலை யிடாது
வலிய வரும்சண் டையையும் விடாது
குயிலின் கொள்கையும் குயிலை உடைய
பெருமன் றத்தின் கொள்கையும் இதுவே

என்று தன்னைத் தலையங்கத்தில் அறிமுகப்படுத்திக் கொண்டது. இத்தலையங்கத்துக்குக் காரணம் நானும், மன்றத் துவக்க விழாவுக்கு

வந்திருந்த வேறு சில நண்பர்களும் "ஐயா! நீங்கள் நாட்டுக்குப் பொதுவானவர்; தமிழரின் பொதுச் சொத்து. உங்களுக்கு இனிக் கட்சி அரசியல் வேண்டாம்" என்று வற்புறுத்திக் கூறியதுதான். பிறவி அரசியல்வாதியான பாவேந்தரால் அரசியல் இல்லாமல் இருக்க முடியுமா? திராவிட முன்னேற்றக் கழகம் விலைவாசிப் போராட்டத்தில் ஈடுபட்டது. நாடெங்கிலும் ஆயிரக்கணக்கான தோழர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றனர். போராட்டக் காலத்தில் நாட்டில் சில அசம்பாவிதங்கள் நடைபெற்றன. உடனே பாவேந்தரின் அரசியல் பேனா நெருப்பைக் கக்கத் தொடங்கியது. 1.8.62இல் வெளியான கடைசிக் குயில் கீழ்க்கண்ட அரசியற் கண்டனப் பாடலோடு முற்றுப் பெற்றது.

மணப்பந்த லுக்குத்தீ வைத்தார் கழகப்
பிணப்பந்த லுக்குக்கால் நட்டார்-பணத்துக்குத்
தீட்டிய திட்டம் சிவசிவா! ஊர்ப்பெயரால்
ஓட்டிய ஓட்டை வண்டி தூள்

கவிஞர் பெருமன்றத் துவக்கவிழா முடிவுற்றதும் வந்திருந்த கவிஞர்கள் யாவரும் மாலை ஆறுமணியளவில் பாவேந்தரிடம் விடை பெற்றுச் சென்றனர். நான் மட்டும் அங்கு இருந்தேன். இரவு எட்டு மணி ஆயிற்று. நீண்ட கருப்புக்கார் ஒன்று பாவேந்தர் வீட்டுக்குப் படகுபோல் வந்து நின்றது. பெருமிதமான தோற்ற முடைய ஒருவர் அதிலிருந்து இறங்கி உள்ளே வந்தார். பாவேந்தர் அவரை அன்போடு வரவேற்றார். இருவரும் மகிழ்ச்சியோடு அரைமணிநேரம் உரையாடிக் கொண்டிருந்தனர். பின்னர் இருவரும் விருந்துண்ணத் தொடங்கினார். மிகவுயர்ந்த புலால் உணவும், வெளிநாட்டு விஸ்கியும் விருந்தில் இடம் பெற்றன. அவர்கள் இருவரும் விருந்தை முடிக்கும்போது மணி 9.30. அதற்குமேல் பொன்னடியும் நானும் சாப்பிட உட்கார்ந்தோம். நான் பொன்னடியைப் பார்த்து "யாரிந்தச் சிறப்பு விருந்தினர்?" என்று கேட்டேன்.

"அவர் வருமான வரித்துறையில் பெரிய அதிகாரி" என்றார் பொன்னடி.

"இவர் அடிக்கடி வருவாரா?" என்று கேட்டேன்.

"ஆமாம்! இன்னும் பல பெரிய அதிகாரிகளும் வருவர்" என்றார் பொன்னடி.

"விருந்துச் செலவு யாருடையது?" என்று கேட்டேன்.

"எல்லாம் பாவேந்தருடையதுதான். இது பெரிய இடத்துச்

சமாச்சாரம். நமக்கெதற்கு? இதோடு விட்டு விடுவோம்" என்றார் பொன்னடி. அதன்பிறகு நாங்கள் இருவரும் அதைப்பற்றிப் பேசுவதில்லை.

சாப்பிட்டு முடிந்ததும் நானும் பொன்னடியும் விருந்து சாப்பிட்ட மேசை நாற்காலிகளை ஒழுங்கு செய்து ஓரிடத்தில் எடுத்துப் போட்டு விட்டுப் படுக்கப் போனோம். பாவேந்தரும் அந்த அதிகாரியும் இரவு 10 மணிவரை பேசிக் கொண்டு இருந்தார்கள். அதற்குமேல் அந்த அதிகாரி விடைபெற்றுக் கொண்டு சென்றார். பாவேந்தர் படுக்கையில் அமர்ந்து புகைபிடித்துக் கொண்டிருந்தார். சமையற்காரத் தாயாரம்மாள் வீட்டு வேலைகளை முடித்துவிட்டு நடுக்கூடத்தில் வழக்கம்போல் படுத்துக் கொண்டார். நானும் பொன்னடியும் முன்னாலிருந்த வரவேற்பறையில் படுத்திருந்தோம்.

பாவேந்தரோடு பழகத் தொடங்கிய இந்த ஒரு வாரத்தில் இன்று எனக்குப் புது அனுபவம். பாவேந்தர் மது அருந்துவார் என்று கேள்விப்பட்டதுண்டு; ஆனால் நேரில் பார்த்ததில்லை. என்னைக் கண்டு அவர் நாணுவாரோ என்ற அச்சத்தால் அவர் விருந்துண்ணத் தொடங்கியதிலிருந்து நான் அவர் கண்ணில் படாமல் இருந்தேன். சாப்பிட்ட பிறகும் அவர் கண்ணில் படாமல் படுத்துக் கொண்டேன். இதைக் கவனித்திருப்பார் என்று எண்ணுகிறேன்.

இரவு 10.30 மணிக்கு 'முருகு' என்ற குரல் பாவேந்தர் அறையிலிருந்து கேட்டது; எழுந்து ஓடினேன். பாவேந்தர் எந்தவித மாறுபாடும் இல்லாமல் கம்பீரமாக, அமைதியாகப் படுக்கையில் கால் மேல் கால் போட்டுக் கொண்டு அமர்ந்திருந்தார். நான் எதிரில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்தேன். இருவரும் என்ன பேசுவதென்று தெரியாமல் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தோம். பிறகு பாவேந்தரே 'தூக்கம் வரலை' என்று பேச்சைத் துவக்கினார்.

பிறகு அன்று நிகழ்ந்த பெருமன்றத் துவக்க விழா பற்றியும், விழாவுக்கு வந்திருந்த கவிஞர்களைப் பற்றியும் பேச்சுத் திரும்பியது சகுந்தலாபாரதி அவர் தந்தை போலவே இருப்பதாக நான் சொன்னேன். பாவேந்தரும் "ஆமாம்! பாரதி நல்ல உயரம்; ஒடிசலான உடம்பு; பொன்னிறம்; சுடுவது போன்ற பார்வை; துடிப்பான மீசை. பாரதியின் ஆற்றல் முழுமை பெற்றிருந்த நேரத்தில் பிறந்த பெண் சகுந்தலா. சகுந்தலா என்று இந்தப் பெண்ணுக்குப் பாரதி பெயர் வைத்ததற்கு முக்கியக் காரணம் உண்டு. பாரதி புதுச்சேரியிலே இருந்தபோது வ.வெ.சு. அய்யர், வ.ரா.முதலிய நண்பர்களோடு கூடிக் காளிதாசனின் 'சகுந்தலை'யை நாடகமாக நடிக்கத் திட்டமிட்டார். ஒத்திகையும் நடந்தது. அதில் பாரதி

துஷ்யந்தன் பாத்திரத்தை ஏற்று நடித்தார். ஆனால் நாடகம் நடக்கவில்லை. சகுந்தலை நாடக ஒத்திகை நடந்தபோது இந்தப் பெண் பிறந்ததால் இவளுக்கும் சகுந்தலை என்று பெயர் வைத்தார் பாரதி" என்றார் பாவேந்தர். அதன் பிறகு கவிஞர்கள் வாணிதாசன், சுரதா, பட்டுக்கோட்டைக் கலியாணசுந்தரம், மு. அண்ணாமலை ஆகியோரைப் பற்றிப் பேச்சுத் திரும்பியது. இந்நால்வரைப் பற்றியும் மிகவும் சுருக்கமாகச் சொல்லிச் சட்டென்று முடித்துக் கொண்டார்.

"வாணிதாசனுக்கு வயது நாற்பதிருக்கும். சொந்த ஊர் சேவியமேடு. நான் பிரெஞ்சு அரசாங்கப் புலவர் தேர்வுக் குழுத்தலைவனா இருந்தப்போ, இவனும் தேர்வு எழுதினான். நான் வேலையிலே இருந்த கல்வே கல்லூரியிலே இவனும் தமிழாசிரியனா இருந்தான். நடுவிலே கல்லூரிலே கொஞ்சம் குறும்பு பண்ணிட்டா. அதனாலே சொந்த ஊரான சேவியமேட்டுக்கே மாத்திப்புட்டாங்க. முதலில சின்னச் சின்னதாக் கவிதை எழுதிக்கிட்டு வந்து காட்டுவான். நாந்தா திருத்திக் கொடுப்ப. நானே ஒரு சாற்றுக்கவி. அவன் பாட்டுக்கு எழுதிப் பத்திரிகையிலே போட்டு விளம்பரப்படுத்தினேன். அவன் கவிதையில் புதிய கற்பனை ஒரு எழுச்சி இல்லை. என்னை அப்படியே பின்பற்றி எழுதுவான். நல்லாத்தா இருந்தா. கட்சி பிரிஞ்சப்போ இந்தக் கண்ணீர்த்துளிப் பசங்க கூட இவனும் சேர்ந்துட்டா, அப்பறம் இந்தப்பக்கம் வராதடான்னுட்ட. இருந்தாலும் வருவா... கொஞ்சம் நன்றி உணர்வுள்ளவ.

'இன்ப இரவு'ன்னு நான் நாடகம் ஒன்னு நடத்திக்கிட்டு இருந்தப்ப அதிலே சுரதா நடிச்சுக்கிட்டு இருந்தான். என் பாடல்களைப் பேர்த்து எழுதுவான். பாண்டியன் பரிசை அவந்தா பேர்த்து எழுதினான். எழுத்து மணி மணியா இருக்கும். கொஞ்சம் துணிச்சலானவ.

"பட்டுக்கோட்டை கலியாணசுந்தரமும், மு.அண்ணாமலையும் கொஞ்சநாள் எங்கிட்ட புதுச்சேரியிலே இருந்தாங்க. இரண்டுபேரும் என் பாட்டைப் பேர்த்து எழுதுவானுங்க. பட்டுக்கோட்டை இருக்கானே ரொம்ப அமைதி. என் எதிரிலேயே பயபக்தியோட வாய் கூடத் திறக்காம உட்கார்ந்திருப்பான். என்கிட்ட அளவு கடந்த மரியாதை. எதை எழுதினாலும் 'பாரதிதாசன் வாழ்க'ன்னு மேலே போட்டுட்டுத்தா எழுதுவான். அவன் இவ்வளவு வேகமா வளருவான்னு நான் அப்ப நெனைக்கல. அந்த அறிகுறி எதுவும் அப்பத் தென்படல."

மாலையில் கவிஞர் மன்றத் துவக்க விழாவில் அவர் பேசிய கருத்துக்களின் மீது எங்களுடைய பேச்சுத் திரும்பியது.

ஆண்டுதோறும் இந்திய ஜனாதிபதி முன் தில்லியில் நடைபெறும் பன்மொழிக் கவியரங்கத்திற்குத் தமிழகத்தின் சார்பில் மேலிடச் செல்வாக்குப் பெற்ற ஊர்பேர் தெரியாத கவிஞர்களே அனுப்பப்படுகின்றனர் என்பதைப் பற்றி நாங்கள் பேசியபோது, புதுச்சேரியில் அவர் ஆசிரியப்பணியில் இருந்தபோது நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை நகைச்சுவையோடு எடுத்துக் கூறினார்.

"சேஞ்சான்னு ஒருத்த..."

"என்ன சொன்னீங்க?" என்றேன் நான். "செயிண்ட்ஜான் அவனோடு பேர். காரைக்காலிலே அவன் ஒரு அவுக்கா (வழக்குரைஞர்). அவனை சேஞ்சான்... சேஞ்சான்னு எல்லாரும் கூப்பிடுவோம். வழக்குரைஞர் பட்டம் பெற இவன் பிரெஞ்சு நாடு போயிருந்தான். ஏதோ தமிழறிந்ததா அங்கே காட்டிக்கிட்டான். அவன் புதுச்சேரி திரும்பி வந்ததும் பிரெஞ்சு அரசாங்கம் அவனைத் தமிழ்த் தேர்வுக் குழுவோட தலைவனா ஆக்கிட்டாங்க. அவனுக்குத் தமிழுந் தெரியாது ஒரு மண்ணுந்தெரியாது. புதுவையிலே ஒரு தமிழ்த்தேர்வு நடந்தது. அந்தத் தேர்வோட வினாத்தாளிலே 'கல்லாதான் ஓட்பம்' என்று தொடங்கும் குறள் இடம் பெற்றது. அந்தப்பாட்டு சேஞ்சானுக்குப் புரியல. 'கல்லாதான் நொட்டமா, கல்லாதான் ஒட்டமா, கல்லாதான் ஓட்டமான்னு' அவனுக்கு ஐயம். கடைசியிலே 'கல்லா தான் ஓட்டம் கழிய நன் றாயினும்னு' வினாத் தாளிலேயே அச்சுப் போட்டுட்டான். இது என் கவனத்துக்கு வந்துச்சு. விடைத்தாள்களை நானே திருத்தி மதிப்பெண் போட்ட. அதுக்குப் பிறகு புதுச்சேரியிலே தமிழைப் பொறுத்தவரையிலும் எந்த ஐயமுன்னாலும் போ ..சுப்புரத்தினத்துக்கிட்டன்னுதா சொல்வாங்க. இதை எதுக்குச் சொல்றன்னா எந்த விதத்திலும் தகுதியில்லாதவன்தா வெளியுலகுக்குப் போயித் தன்னைக் கவிஞனென்றும், அறிஞனென்றும் விளம்பரப்படுத்திக்கறா" என்று குறிப்பிட்டார்.

இரவு மணி பன்னிரண்டாகி விட்டது; தூக்கம் வரும் போலிருந்தது. அப்போது பாவேந்தர் தாமே மதுவைப் பற்றிப் பேசத் தொடங்கினார். "நான் வாரத்திலே இரண்டு மூன்று நாள் மட்டும் அளவோடு குடிப்பது வழக்கம். அளவோடு குடிப்பது உடம்புக்கும் நல்லது. எங்க பக்கத்திலே இது உணவு மாதிரி. வீட்டில் பெண்களே கொஞ்சம் ஊற்றி உணவுக்கு முன்னால அளவோடு கொடுப்பாங்க. எப்போதுமே, 'குடிப்பது குடிப்பதற்காக' என்பது தவறான கொள்கை. குடிப்பது உணவைச் சுவைத்துச் சாப்பிடுவதற்குத் துணை செய்ய வேண்டும். அந்த அளவுதான் குடிக்கணும். நீ புதுச்சேரி வந்தா பார்க்கலாம். புதுச்சேரிக்கார எவனும் அளவுக்கு மீறிக்

குடிச்சுப்புட்டு வீதியிலே வரமாட்டா. அப்படி எவனாவது குடிச்சுப் புட்டு வீதியோரத்திலே உருண்டு கிடந்தான்னா அவ புதுச்சேரிக்கார அல்ல சேலத்துக்கார" என்று கூறிவிட்டு உரக்கச் சிரித்தார். நானும் சிரித்துவிட்டு எழுந்து வந்து படுத்துக் கொண்டேன்.

30.1.62

இரவு மணி ஏழு இருக்கும். கவிஞர் இல்லம் சென்றேன். கட்டிலில் கவிஞர் படுத்திருந்தார். நான் நேராக அறைக்குள் சென்றேன். தலையைச் சாய்த்து என்னைப் பார்த்து 'வா' என்றார். நான் நாற்காலியில் அமர்ந்தேன். கவிஞர் ஏதோ சிந்தனையில் இருந்தார். நீண்ட நேரம் எதுவும் பேசவில்லை. நான் பேசாமல் எழுந்து வந்து 'ஏன் இன்று கவிஞர் ஒரு மாதிரியாக இருக்கிறார்?' என்று பொன்னடியிடம் கேட்டேன்.

"யார் கண்டது? சித்தம் போக்கு! சிவன் போக்கு! நமக்கென்ன? நாம் போய் சாப்பிடலாம் வாங்க!" என்று கூறிச் சிரித்தார் பொன்னடி. பொன்னடியும் நானும் சாப்பிட்டுவிட்டுப் படுத்துவிட்டோம். காலை 6 மணிக்கு நான் கண்விழித்து எழுந்தபோது, கவிஞர் வீட்டில் இல்லை. நானும் சைதாப்பேட்டை புறப்பட்டேன். உந்து வண்டி ஏறுவதற்காக நான் தேனாம்பேட்டை நாற்சந்திக்குச் சென்றபோது பாவேந்தர் அங்கு பாதையோரத்தில் நின்று கொண்டிருந்தார். அந்தக் காட்சி என் உள்ளத்தை மிகவும் வருத்தியது. நான் அருகில் சென்று, "ஏனய்யா இங்கு நின்று கொண்டிருக்கிறீர்?" என்று கேட்டேன்.

"ஆமாம்! நிற்க முடியவில்லை. கால் கடுக்கிறது" என்று சொன்னார். உடனே அருகில் இருந்த பெட்டிக்கடையில் ஒரு பெட்டி வாங்கி அதன் மீது கவிஞரை உட்கார வைத்தேன். கவிஞர் ஒரு வெண் சுருட்டைப் பற்றவைத்துக் கொண்டு அதன் மீது உட்கார்ந்தார். சற்றுத் தள்ளி நின்று கொண்டிருந்த கோவிந்தராசன் என்ற நண்பரைக் காட்டி, "இந்த மடையன் என்னை வீட்டிலிருந்து நடக்கவிட்டே கூட்டிக்கிட்டு வந்தா" என்று வருத்தத்தோடு சொன்னார்.

"எந்த ஊருக்குப் புறப்படுகிறீர்?" என்று நான் கேட்டேன்.

"குடியேற்றம் (குடியாத்தம்) போற. இராசகோபால் நாயுடு குடியேற்றம் காங்கிரஸ் வேட்பாளர். அவரை ஆதரிச்சுத் தேர்தல் கூட்டத்திலே பேசறத்துக்காக போற" என்றார் பாவேந்தர்.

"அவர் பஸ் முதலாளியாயிற்றே. உங்களுக்கு ஒரு கார் அனுப்பக் கூடாதா?" என்று நான் கேட்டேன்.

"அனுப்பலாம்" என்று சொல்லிவிட்டு, அங்கே நின்று கொண்டிருந்த கோவிந்தராசனைக் காட்டி, "இவனை அவர் எப்படி மதிக்கி றாரோ?" என்று கூறினார். அதற்குள் உந்து வண்டி வந்து விட்டது. அவரை வண்டியில் ஏற்றிவிட்டு நான் கல்லூரி சென்றேன்.

2.2.62

மாலை 6 மணியளவில் கவிஞர் இல்லம் சென்றேன். குடியேற்றம், விழுப்புரம் தேர்தல் கூட்டங்களை முடித்துக் கொண்டு 31.1.62 புதன்கிழமையே கவிஞர் சென்னை திரும்பிவிட்டார். மூன்று நாட்களாகக் கவிஞரைப் பார்க்காதது என்னவோ போல் இருந்தது. அறைக்குள் நுழைந்தபோது மேனாட்டு முறையில் கோட்டும் சூட்டும் அணிந்த ஓர் இளைஞர் பாவேந்தரின் 'கோரிக்கையற்றுக் கிடக்கு தண்ணே இங்கு வேரில் பழுத்த பலா' என்ற பாடலை ஈடுபாட்டோடு பாடிக் கொண்டிருந்தார். பாடும் பாணியும் குரலும் கூடக் கணீரென்று சிதம்பரம் ஜெயராமனுடையதைப் போல் இருந்தன. அவருக்கு எதிரில் மற்றொரு நண்பரும் உட்கார்ந்திருந்தார்.

நான் உள்ளே நுழைந்ததும் மிக்க ஆர்வத்தோடு, "வா! எங்கே மூணு நாளாக் காணோம்? தோ.. இவர் கவிஞர் தஞ்சைவாணன் எம்.ஏ. சட்டக் கல்லூரி மாணவர். இவர் (எதிரில் இருந்தவர்) 'ம்யூசிக் டைரக்டர்' பல படங்களுக்கு இசையமைக்கிறார்" என்று அறிமுகப்படுத்தினார்.

என்னை அவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கும்போது, "இவர் முருகுசுந்தரம் எம்.ஏ. பெரிய கவிஞர், சேலம் காலேஜிலே புரொபசர். எனக்கு ரொம்ப வேண்டியவர்" என்று சொன்னார்.

"அரங்க. ராமானுஜம்' என்பது கவிஞர் தஞ்சைவாணனின் இயற்பெயர். "என்புதோல் போர்த்த உடம்பு" என்று வள்ளுவர் பெருமான் வகுத்த வைரவரிகள் வேறு யாருக்குமல்ல; இவருக்குத்தான். நாகரிகமாகச் சொன்னால் 'நடக்கும் கோல்' என்று சொல்லலாம். தம்முடைய பூஞ்சை உடம்பைச் சற்றுப் பார்ப்பவர் கண்ணில் பெரிதுபடுத்திக் காட்டுவதற்காக எப்போதும் மொத்தமான கோட்டணிந்து காட்சியளிப்பார். பாவம்! இப்போது எப்படி இருக்கிறாரோ? சென்னை தொலைக்காட்சி நிலையத்தில்

தற்போது பணிபுரிந்து கொண்டிருக்கிறார்; நுட்பமானவர். எதைப் பேசினாலும் ஈடுபாட்டோடு பேசுவார். உடனிருந்த இசை யமைப்பாளர் யாரென்று நினைவில்லை.

"கட்சி அரசியல் உங்களுக்கு வேண்டாம்; நீங்கள் தமிழர்க்குப் பொதுவானவர்" என்று நான் பாவேந்தருக்கு அடிக்கடி கூறுவதுண்டு. நான் கூறும்போது அவரும் 'சரி' என்று கூறுவார். ஆனால் வாய்ப்பு நேரும்போது மிகவும் தீவிரமாக அரசியல் பேசுவார்; எழுதுவார். கவிஞர் தஞ்சைவாணன், கோவிந்தராசன் போன்றவர்கள் அவரைக் கட்சி அரசியலில் இழுத்துவிட்டு வேடிக்கை பார்த்தார்கள்.

அப்போது தி.மு.க.விலிருந்து சம்பத் பிரிந்து தமிழ்த் தேசியக் கட்சியைத் துவக்கி 62 தேர்தலில் தீவிரமாக ஈடுபட்டிருந்த நேரம். 'சிங்கத்தை அதன் குகையிலேயே சந்திக்கப் போகிறேன்' என்று முழக்கமிட்டுச் சென்னை நகரில் சம்பத் ஆர்ப்பாட்டமான தேர்தல் ஏற்பாடுகளில் ஈடுபட்டிருந்தார். சென்னை நகரம் எங்கு பார்த்தாலும் கண்ணைக் கவரும் வரவேற்பு வளைவுகளோடு விழாக் கோலந் தாங்கிப் புதுமணப் பெண் போல் காட்சியளித்தது. தமிழ்த் தேசியக் கட்சியின் போர் ஆரவாரத்தைக் கேட்டு, வெளியிலே காட்டிக் கொள்ளாத குலைநடுக்கத்தோடு தி.மு.க. இருந்த நேரம். பாவேந்தரைத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுத்துவதற்காகச் சம்பத்தின் தூதுவராகத் தஞ்சைவாணன் வந்திருந்தார். வந்த வேலையையும் வெற்றிகரமாக முடித்துக் கொண்டு பாவேந்தரின் இசைவோடு தஞ்சைவாணன் விடைபெற்றார்.

படித்துப் பட்டம் பெற்ற, முற்போக்குக் கருத்துக்களைக் கொண்ட இளைஞர்களைக் கண்டால் பாவேந்தருக்கு மிகவும் பிடிக்கும். பட்டதாரி இளைஞர்களைத் தம்முடன் அழைத்துச் செல்வதிலும், அவர்களை மற்றவர்களிடம் அறிமுகப்படுத்துவதிலும் அவருக்கு அளவு கடந்த மகிழ்ச்சி. என்னை மற்றவரிடம் 'பெரிய கவிஞர்', 'புரொபசர்' என்று அவர் வாயால் கூறி அறிமுகப்படுத்தும் போது நான் மிகவும் வெட்கப்படுவேன். பாவேந்தர் தனியாக இருக்கும் போது "ஐயா! நான் பெரிய கவிஞனுமில்லை; புரொபசருமில்லை; என்னை ஏன் அளவுக்கு மீறி உயர்த்திக் கூறுகிறீர்கள்?" என்று கேட்பதுண்டு.

உடனே, "நீ சும்மா இரு! உனக்கென்ன?" என்று கூறி அடக்கி விடுவார்.

கவிஞர் தஞ்சைவாணன் சென்ற பிறகு, நானும் பாவேந்தரும் சாப்பிட அமர்ந்தோம். மீன் குழம்பும் உப்புக் கண்டமும் இலையில்

பரிமாறப்பட்டன. நாள்தோறும் மீன் இல்லாமல் பெரும்பாலும் சாப்பிட மாட்டார். புதுச்சேரி கடற்கரை நகராகையால் மிகவும் மீன் மலிவாகக் கிடைக்கும். புதுவை வாசியான பாவேந்தருக்கு மீன் அன்றாட உணவாகிவிட்டது. மீனின் சினையை விரும்பிச் சாப்பிடுவார். இலையில் பொரித்து வைக்கப்பட்டிருந்த மீன் சினை என்னவென்றே எனக்குப் புரியவில்லை. நான் தடுமாறுவதைப் பார்த்த பாவேந்தர், "என்ன விழிக்கிற? மீனோட சினை. ரொம்ப நல்லா இருக்கும் சாப்பிடு" என்றார். நானும் சாப்பிட்டேன்.

இலையில் பரிமாறப்பட்டிருந்த உப்புக் கண்டத்தைக் காட்டி "இது என்ன உப்புக் கண்டம்? சொல்லு பார்க்கலாம்" என்று கேட்டார். அதைச் சுவைத்துப் பார்த்தபோது அது ஆட்டுக் கறியாகத் தெரிவில்லை. சுவை மாறுபட்டிருந்ததால் மான்கறியாக இருக்கும் என்று நினைத்து, "மான் கறியா?" என்றேன். உடனே பாவேந்தர் "இல்லை. புலிக்கறி!," என்றார். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"என்ன புலியா? புலிக்கறி எப்படிக் கிடைத்தது?" என்றேன் நான்.

"புதுக்கோட்டை அரசருக்கு வேண்டிய ஒரு நடிக நண்பர் எனக்கு அடிக்கடி அனுப்புவார். சாப்பிடு! புலிக்கறி சாப்பிட்டால் வீரம் மிகும்" என்றார். வேறு வழி? சாப்பிடாமல் இலையை விட்டு எழ முடியுமா: எப்படியோ சாப்பிட்டுத் தீர்த்தேன்.

4.2.62

3.2.62 சனிக்கிழமை இரவு மந்தைவெளியில் த.தே.க. கூட்டம். சம்பத்தும் கவிஞர் கண்ணதாசனும் பேசினார்கள். நானும் தஞ்சைவாணனும் கவிஞர் சுரதாவோடு கூட்டத்துக்குச் சென்றிருந்தோம். கூட்டம் முடிய இரவு நெடுநேரம் ஆகிவிட்டது. நான் நண்பர் திரு. மயிலைநாதன் வீட்டில் படுத்துக் கொண்டேன். காலையில் எழுந்ததும் சுரதா வீட்டுக்குச் சென்றேன். அன்று நடுப்பகல் அவர் வீட்டில் எனக்கும் மயிலைநாதனுக்கும் விருந்து.

அன்று மாலை 7 மணியளவில் பாவேந்தரைக் காணப் புறப்பட்டேன். பாவேந்தர் இரவு உணவை முடித்துக் கொண்டு அப்போதுதான் வந்தமர்ந்தார். அன்று அவரே விரும்பித் தம் இளமைக்கால நிகழ்ச்சிகளைப் பொறுமையோடு சொன்னார். அவர் சொன்னதை நான் அப்படியே கீழே கொடுத்திருக்கிறேன்:

"என் தந்தை கனகசபை புதுச்சேரியில் கப்பல் வாணிபம் செய்தவர்; மளிகைமண்டி வைத்திருந்தார். மணிலா, வெங்காயம், வெற்றிலை,

கோழிமுட்டை, புட்டியில் அடைத்த மிளகுரசம் முதலியவற்றைக் கப்பலில் பிரான்சு முதலிய வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வார். ஒருமுறை இவருடைய சரக்கை ஏற்றிச் சென்ற கப்பல் கவிழ்ந்ததால் எங்கள் குடும்பமே கவிழ்ந்தது. அப்போது என் தந்தைக்கு வயது எழுபது. பல இலட்சம் வாணிபத்தில் இழப்பு. இப்போது இருக்கும் புதுச்சேரி வீடு நான் தலையெடுத்து வாங்கியது. பள்ளியில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் இயல்பாகவே கூர்மையான அறிவு படைத்தவன் என்று என்னை ஆசிரியர்கள் பாராட்டுவார்கள். கணக்கும் கட்டுரையும் அப்போது பள்ளிகளில் முக்கிய பாடங்களாகக் கருதப்பட்டன. என்னுடைய தொடக்கக் கல்வி திருப்புளிசாமி ஐயாவின் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் துவங்கியது. திருப்புளிசாமி ஐயா சாத்தானி (பூணூல் சாத்தாத வைணவர்) வகுப்பைச் சேர்ந்தவர். என் மீது அவருக்கு அளவு கடந்த பற்றுண்டு. அவரிடத்திலே பல நூல்களைப் பாடங்கேட்டேன். அதன் பிறகு கால்வே கல்லூரியில் தமிழ்ப்புலவர் தேர்வுக்குப் படித்தேன்.

எனக்குக் கணக்கு மிக நன்றாக வரும். நாள்தோறும் புலவர் வகுப்பு மாணவர் எல்லாரும் வழக்கமாக ஓரிடத்தில் கூடுவோம். சிலர் கேரம், சிலர் சொக்கட்டான், சிலர் கடுதாசி (சீட்டு) விளையாடுவார்கள். புலவர் வகுப்பு மாணவர்களுள் உருவத்தில் நான் சிறியவன்; படிப்பில் பெரியவன். நான் சிறியவனாக இருந்ததால் என் நண்பர்களுக்குத் தின்பண்டம், சிகரெட் முதலியவை நான்தான் வாங்கிக் கொண்டு வந்து கொடுப்பேன். எங்கள் வகுப்புக்கு நல்ல 'ரிசல்டு' வரவேண்டும் என்பதற்காக ஆசிரியர்களின், ஒப்புதலோடு தேர்வு நடக்கும்போது கட்டுரைக்குப் பல படிகள் எடுத்து மற்ற மாணவர்களுக்கும் நான் கொடுப்பதுண்டு. அதைப் பார்த்து எழுதிப் பல மாணவர்கள் வெற்றி பெறுவது வழக்கம். ஒருமுறை தேர்வு நடந்து கொண்டிருந்தபோதே திருப்புளிசாமி ஐயா தேர்வுக் கூடத்தின் வாயிலில் வந்து மகிழ்ச்சியோடு, "டே சுப்புரத்னம்! நீ கட்டுரையில் முதல்வனாக வெற்றி பெற்றிருக்கிறாய். நீ கட்டுரையில் 20க்குப் 18" என்று தேர்வு முடிவு வெளியாவதற்கு முன்பே வந்து கூச்சலிட்டார். நான் சாடை செய்து அவரைப் பேசாமல் போகும்படி கூறினேன்.

புலவர் தேர்வில் முப்பது பேருக்கு மேல் வெற்றி பெற்றனர். ஆனால் முதன்மையாக நான் வெற்றி பெற்றது மற்றவருக்குத் தெரியாது. நானும் வெளியில் சொல்லவில்லை. வழக்கமாகப் புலவர் வகுப்பு மாணவர்களாகிய நாங்கள் மாலையில் கூடும் மன்றத்தில் ஒவ்வொருவரும் "நான் அவரைப் பிடித்தேன்; இவரைப் பிடித்தேன்;

எனக்குத் தான் முதல் மதிப்பெண் கிடைக்கும்'' என்று பேசிக் கொண்டார்கள். நான் வாயே திறக்கவில்லை; மனதிற்குள் சிரித்துக் கொண்டேன்.

புதுவைக் கல்வி இயக்குநரின் செயலாளராக இருந்த திரு. கையார் என்பவர் என் தந்தையின் நெருங்கிய நண்பர். அவர் என்னை கூப்பிட்டு, ''சுப்புரத்தனம்! தமிழாசிரியர் வேலைக்கு ஒரே ஒரு இடம்தான் காலியிருக்கிறது. அதுவும் நிரவியில்தான். நியாயமாக அந்த இடம் உனக்குத்தான் கிடைக்கவேண்டும். காரணம் நீதான் முதன்மையாகத் தேர்வில் வெற்றி பெற்றிருக்கிறாய். அதுவு மில்லாமல் நீ அரசாங்க உதவித்தொகை பெற்றுப் படித்தவன். சட்டப்படி அரசாங்க உதவித்தொகை பெற்றுப் படித்தவனுக்குத் தான் முழுச்சலுகை. உன்னிடத்தில் உள்ள ஒரே குறை நீ உருவத்தில் மிகச்சிறியவன்; பொடியன். நீ நேர்முகத் தேர்வுக்கும் வரும்போது இரண்டு மூன்று சட்டையணிந்து, அவைகளுக்கு மேல் ஒரு கோட்டும் அணிந்து வரவேண்டும். உன்னை உயரமாகக் காட்டிக் கொள்வதற்காகக் குதியுயர்ந்த பூட்சு போட்டுக் கொண்டுவா. கல்வி இயக்குநரிடம் தைரியமாகப் பேசு! நான் உதவித்தொகை பெற்றுப் படித்தவன்; எனக்குத்தான் வேலை கிடைக்க வேண்டும். இல்லாவிட்டால் நான் ஆளுநரைச் (Governor) சென்று பார்ப்பேன் என்று சொல்லு. நான் அருகில்தான் இருப்பேன்'' என்று கூறினார். வீட்டுக்கு வந்து தந்தையிடமும் சொன்னார். தந்தை என்னைக் கூப்பிட்டு, ''என்ன, கையார் சொன்னபடி சொல்வாயா?'' என்று கேட்டார்.

''என்னப்பா? இதுகூடவா என்னால் சொல்ல முடியாது'' என்று தந்தையிடம் நான் கூறினேன்.

நேர்முகத் தேர்வும் வந்தது. கையார் சொன்னபடி உடையணிந்து சீஃபின் (கல்வி இயக்குநரை அங்கு சீஃப் என்றே அழைப்பார்கள்.) முன்னால் போய் நின்றேன். கொஞ்சமும் அஞ்சாமல் கையார் சொல்லிக் கொடுத்ததை அப்படியே ஒப்புவித்தேன். சீஃப் அருகிலிருந்த செயலாளரான கையாரைப் பார்த்து, ''அப்படி ஒரு சட்டம் இருக்கிறதா?'' என்று கேட்டார். கையார் சட்டத்தை உடனே எடுத்துக் காட்டினார்.

''சரி நீ போ! வேலை உனக்குத்தான்'' என்று சீஃப் சொன்னார். கையார் அன்று மாலையே அலுவலில் சேர்வதற்குரிய ஆணையைக் கையோடு வாங்கி வந்து வீட்டில் கொடுத்தார்.

கையார் கொடுத்த ஆணையைச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டு வழக்கம்போல் புலவர் வகுப்பு நண்பர்கள் கூடும் மன்றத்துக்குச் சென்றேன். அங்கிருந்த நண்பர்கள், 'வேலை எனக்குத்தான்; உனக்குத்தான்' என்று தம்பட்டம் அடித்துக் கொண்டிருந்தனர். அந்த மன்றம் இருந்த வீட்டின் சொந்தக்கார அம்மாள் வடை சுட்டுக் கொண்டிருந்தார். அங்கு சென்று நான் மகிழ்ச்சியோடு வடை சாப்பிட்டேன். கடைசியாக எல்லாரும் புறப்படும் நேரத்தில் என் ஆணையை எடுத்துக் காண்பித்தேன். நண்பர்களில் ஓரிருவர் தவிர எல்லாருமே மகிழ்ச்சியடைந்தார்கள். சில நண்பர்கள் என்னை அவர்கள் வீட்டுக்கு அழைத்துச் சென்று விருந்து வைத்தார்கள். ஆதிமூலம் என்ற நண்பரின் தந்தை எனக்குக் கடிகாரம் ஒன்று பரிசாகக் கொடுத்தார். வேறு சில நண்பர்கள் சட்டை, சால்வை முதலியவை பரிசாக அளித்தார்கள். இது என் மாணவப்பருவ வாழ்க்கை வரலாறு."

5.2.62

எனக்குக் கல்லூரி வகுப்புகள் பிற்பகல் மூன்று மணியோடு முடிவடைந்து விட்டன. மாணவர் விடுதியில் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு தியாகராய நகருக்குப் புறப்பட்டேன். பாவேந்தர், பங்களா முற்றத்தில் (Portico) பிரம்பு நாற்காலியில் அமர்ந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். நானும் மற்றொரு நாற்காலியை அவரருகில் எடுத்துப் போட்டு உட்கார்ந்தேன். முதன் முதலில் ஆசிரியர் பணிசெய்த நிரவி வாழ்க்கையைப் பற்றிக் கூறும்படி கேட்டேன். அவரும் நேற்று விட்ட இடத்திலிருந்து தொடங்கினார்.

"நிரவியில் ஆசிரியர் பணி ஏற்றுக் கொண்டபோது எனக்கு வயது 18 முடிந்து சில திங்கள்கள் ஆகியிருந்தன. நிரவி பிரெஞ்சு ஆளுகைக்குட் பட்ட ஒரு சிற்றூர். அங்கு வன்னியரும் பிள்ளைமாரும் குடியிருந்தனர். நான் உருவத்தில் மிகவும் சிறியவனாக இருந்த காரணத்தால், என்னை ஓர் ஆசிரியனாகவே அவ்வூர் மக்கள் பொருட்படுத்தமாட்டார்கள். பள்ளி முடிந்து செல்லும்போது வீதி வழியாக வரும் பெண்கள், 'இதோ போறானே பொடிப்பய, இவந்தா நம்ம ஊர்ப்பள்ளி வாத்தியாராம்!' என்று என் காதில் விழும்படியாகவே சொல்லுவார்கள்.

"நிரவி அப்போது நகரத்து நாகரிகம் பரவாத சிற்றூர். புதுவையிலிருந்து என்னைப் பார்க்க நண்பர்கள் யாராவது

முழுக்கால் சட்டை அணிந்து வந்தால் ஊர் மக்கள் கூட்டம் கூடிக் கொண்டு பார்ப்பார்கள். பொதுவாகச் சட்டைகளை நாம் தலைப்பக்கம் தானே போடுகிறோம்? அதன்படி கால் சட்டையையும் தலைப்பக்கம்தானே போட்டிருக்க வேண்டும்? எப்படி அதைத் தலைப்பக்கம் போட்டிருப்பார்கள் என்று அவ்வூர் மக்கள் வியப்போடு பார்ப்பதுண்டு. சிலர் இந்த ஐயத்தை என்னிடம் கேட்டுத் தெளிவு பெறுவதும் உண்டு.

"என் தமிழ்ப் புலமையில் எனக்கு எப்போதும் நம்பிக்கையும் உறுதியும் உண்டு. எனக்குத் தமிழ் பயிற்றிய மூன்று ஆசிரியர்களும் பெரும் புலமை பெற்றவர்கள். கால்வே கல்லூரியில் எனக்குத் தமிழ்ப் பேராசிரியராக இருந்த சாரம் பூ. ஆ. பெரியசாமிப்புலவர் தமிழ்க் கடல். அவருக்கு ஒப்பாகத் தமிழ்நாட்டில் யாரையாவது சொல்ல வேண்டுமானால் மதுரை அரசஞ்சண்முகனாரைச் சொல்லலாம். இத்தகைய பெரியார்களிடம் தமிழ்கற்ற நான், எப்போதும் எந்தப் புலவரிடமும் அஞ்சியதில்லை. பெரும் புலவர்களின் பகையைச் சில சமயங்களில் நானே விரும்பித் தேடிக் கொள்ளும் வழக்கமும் உண்டு.

"பள்ளி முடிந்து திரும்பும்போது, நிரவியின் தெருத் திண்ணைகளில் நான் பல சுவையான காட்சிகளைக் காண்பதுண்டு. அவ்வூர் வன்னியர்கள் வைணவப் பற்று மிக்கவர்கள்; நாமதாரிகள். அவர்களில் சில முதியோர் தெருத் திண்ணையில் அமர்ந்து "பள்ளியானே! பள்ளியானே!" என்று முடியும் ஆழ்வார் பாசுரங்களை உரக்கப் பாடிக் கொண்டிருப்பார்கள். நாள்தோறும் ஒரே பாடலைப் போகும்போதும் வரும்போதும் கேட்டுக்கேட்டு எனக்குப் புளித்துப்போய்விட்டது. நான் அவர்கள் உட்கார்ந்திருக்கும் திண்ணைக்கருகில் வரும்போது, "நீ தான் எப்பவே பள்ளி ஆயிட்டயே. இன்னம் பள்ளி* ஆனேன்; பள்ளி ஆனேன்னு ஏன் கத்திக்கிட்டிருக்கற?" என்று முணுமுணுத்துக் கொண்டு போவேன்.

நிரவியில் எங்கள் பள்ளியின் எதிரில் இருந்த வீட்டுக்குச் சொந்தக்காரர் விசுவலிங்கம்பிள்ளை என்பவர். அவர் ஊரில் பெரிய மனிதர். அவர் வீட்டுக் குறட்டில் பலகை அடித்திருக்கும். அதுதான் அவ்வூரின் சங்கப்பலகை. விசுவலிங்கம்பிள்ளை மாலை நேரத்தில் யாரையாவது நான்கு பேரைக் கூட்டிவைத்துக் கொண்டு தப்புந்தவறுமாகத் திருவிளையாடற் புராணம் சொல்லுவார்.

விசுவலிங்கம் பிள்ளையின் ஆசிரியர் இராமசாமிப்புலவர் என்பவர்.

* 'பள்ளி' என்பது வன்னிய சமூகத்தார்க்கு வழங்கும் பல பெயர்களுள் ஒன்று.

இப்புலவருக்கு வயது 70 இருக்கும். ஒரு நாள் மாலை நான் பள்ளியிலிருந்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது குருவும் சீடரும் குறட்டுப் பலகையில் அமர்ந்து இலக்கியச் சர்ச்சை செய்து கொண்டிருந்தனர். இன்னும் சிலரும் உடனிருந்தனர். விசுவலிங்கம் பிள்ளை என்னைப் புலவருக்குக் காட்டி 'இந்தப் பையன்தான் இங்கே தமிழ் வாத்தியார்' என்று சொன்னார். புலவர் என்னைக் கூப்பிட்டார். அவர் என்னைக் கூப்பிட்ட தோரணையே, எனக்குச் சுர்ரென்று கோபம் வரும்படி செய்தது. இருந்தாலும் அவருடைய முதுமைத் தோற்றத்துக்கு மதிப்புக் கொடுத்து அடக்கமாகக் குறட்டின் மேல் அமர்ந்தேன். புலவர்

இலைபடர்ந்த பொய்கை யிடத்தழுதல் கண்டு
முலைசுரந்த அன்னையோ முன்னின்-நிலைவிளம்பக்
கொங்கை சுரந்தவருட் கோமகளோ சம்பந்தா
இங்குயர்ந்தாள் ஆர்சொல் எனக்கு

என்ற நால்வர் நான்மணிமாலைப் பாடலைப் பாடிப் பொருள் தெரியுமா?" என்று கேட்டார்.

"பொருள் தெரியும்" என்று நான் சொன்னேன்.

"ஞானசம்பந்தருக்கு அன்னையர்களாக இப்பாடலில் இருவர் குறிப்பிடப்படுகின்றனர். ஒருவர் உமாதேவியார்; மற்றொருவர் பாண்டிமாதேவியான மங்கையர்க்கரசியார். இந்த இருவருள் எவர் சிறந்த அன்னை?" என்று என்னை அடுத்த கேள்வி கேட்டார் புலவர்.

"மங்கையர்க்கரசிதான்" என்று நான் அழுத்தந் திருத்தமாக விடை கூறினேன்.

"எப்படி?" என்றார் புலவர்.

"குழந்தை பசியால் அழுமுன்பே பால் நினைந்தூட்டும் தாய் தலையன்புடையவள். குழந்தை அழுவதைக் காதால் கேட்டவுடன் முலைசுரந்து ஊட்டுபவள் இடையன்புடையவள். குழந்தை பசியால் அழுவதைக் கண்ணால் கண்ட பிறகு பாலூட்டுபவள் கடையன் பினள். சம்பந்தக் குழந்தை பொய்கைக் கரையிலே பாலுக்காக ஏங்கியழுததைக் கண்ணால் கண்ட பிறகும் உமாதேவி பாலூட்ட வில்லை. இறைவன் உணர்த்திய பிறகே ஊட்டினாள். இவளை எவ்வாறு தாயென்று சொல்லமுடியும்?

ஆனால் மங்கையர்க்கரசியின் நிலைவேறு. 'சீகாழியில் சம்பந்தக் குழந்தை பாலுக்காக அழுதது' என்ற இறந்தகால நிகழ்ச்சியை எதிரில் நின்றவர்கள் எடுத்துரைத்த கணமே பாண்டிமாதேவியின் மார்பகங்கள் விம்மிப் பரந்து பாலைப் பொழிந்தன.

இத்தாய்மைச் சிறப்பு உமாதேவியிடம் இல்லை. மேலும் உமாதேவி இப்பாடலில் 'முலைசுரந்த அன்னை' என்று சாதாரணமாகக் குறிப்பிட்டப்படுகிறாள். ஆனால் மங்கையர்க்கரசியோ 'கொங்கை சுரந்த அருட்கோமகள்' என்று குறிப்பிடப்படுகின்றாள். 'அருள்' என்னும் அடைமொழியே, அவள் சிறந்த அன்னை என்பதைக் காட்டும்" என்று விளக்கமாக நான் விடையிறுத்தேன்.

என் விளக்கத்தை அவர் உள்ளம் ஏற்றுக் கொண்டது என்பதை அவர் முகம் காட்டியது. இருந்தாலும் மற்றவர் முன்னிலையில் என்னை மட்டந்தட்ட வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காகப் பாதையில் சென்று கொண்டிருந்த என்னைக் கூப்பிட்டுக் கேள்வி கேட்டவரல்லரா அவர்? உடனே தமது முகத்தைச் சுருக்கிக் கொண்டு, "நீ சொன்ன பொருள் தவறு. உனக்குப் பாடம் சொன்னவர் யார்?" என்று கேட்டார்.

இவ்வளவு நேரம் பொறுமையாக இருந்த நான், என் ஆசிரியரின் புலமையைக் குறைத்துப் பேச அவர் தொடங்கியதும் அடிப்பட்ட புலிபோல் வெகுண்டெழுந்தேன். "எனக்குப் பாடம் சொல்லிக் கொடுத்த இடம் ரொம்பப் பெரிய இடம். அதெல்லாம் உம்மகிட்ட ஏன் சொல்லணும்? அவர் கால் தூசிக்குக் கூட நீர் காணமாட்டீர். நீர் இங்கே பாடம் சொல்லிக் கொடுக்கற அழகை நாள்தோறும் பார்த்துக் கிட்டுத்தானே போறேன். இலக்கணப் பிழையில்லாம என்னைக்குச் சொல்லிக் கொடுத்தீர்? உமக்குப் பத்திரிகையிலே பதில் சொல்ற" என்று சுடச்சுடப் பேசிவிட்டு அங்கிருந்து வெருட்டென்று எழுந்தேன்.

என் சொல்லம்புகளைக் கேட்டு இராமசாமிப் புலவர் திணறிப் போனார். "நேராக ஊர்த் தலைவர் பிரம்புசாமிப் பிள்ளையிடம் போய், உன்னைப்பற்றிச் சொல்லி ஊரைவிட்டே கிளப்புகிறேன் பார்" என்று சவால் விட்டார். "முடிந்தால் செய்" என்று கூறிவிட்டு நான் வீடு திரும்பினேன்.

இரவு எட்டு மணி இருக்கும். நான் சாப்பிட்டுவிட்டு உட்கார்ந்து ஏதோ ஒரு நூலைப் புரட்டிக் கொண்டிருந்தேன். 'தம்பி!' என்று யாரோ மெதுவாக வாசலிலிருந்து குரல் கொடுப்பது கேட்டது; எட்டிப் பார்த்தேன். இராமசாமிப் புலவர் நின்று கொண்டிருந்தார். என்னைக் கண்டதும் அவர் அவசர அவசரமாக உள்ளே வந்தார். "தம்பி! அவர்கள் எல்லாம் என்னிடம் படித்தவர்கள். கிதாப்புக்காக நான் அப்படிப் பேசிட்ட. அந்தப் பாடலுக்கு நீ சொன்ன பொருள்தான் சரி. நீ இதைப் போய்ப் பத்திரிகையிலெல்லாம் எழுதி

என் பிழைப்பைக் கெடுத்திடாதே" என்று கூறி மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். இந்நிகழ்ச்சிக்குப் பிறகு நிரவியில் 'பொடிப் பையன்' என்ற பெயர் மறைந்து எனக்கு மதிப்புயர்ந்தது. பின்னர் பிரெஞ்சுத் தமிழகத்தில் தமிழில் ஏதாவது ஐயமென்றால் என்னிடம் தான் வருவார்கள். என்னைக் கலக்காமல் எந்தத் தமிழ் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சியும் நடைபெறாது."

கவிஞர் நிரவி வாழ்க்கையைப் பற்றிக் கூறி முடித்தபோது இரவு ஒன்பது மணி. கவிஞர் திரைப்பட்டம் பார்க்கப் போகலாமென்று கூப்பிட்டார். அருகிலிருந்த ராஜகுமாரியில் 'Scream of fear' என்ற ஆங்கிலப்படம் பார்த்துத் திரும்பினோம்.

7.2.62

இன்று கல்லூரி விடுதியிலேயே இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு 9 மணியளவில் கவிஞருடைய இல்லம் வந்தேன். கவிஞரும் சாப்பாட்டை முடித்துக் கொண்டு கட்டிலில் சாய்ந்து கொண்டிருந்தார். நான் எதிரில் அமர்ந்து எழுதுவதற்காகப் பேனாவை எடுத்தேன். "என்ன எழுதப் போறியா?" என்று கேட்டார்.

"ஆமாங்க. உங்க திருமணத்தைப் பற்றிச் சொல்லுங்க" என்றேன்.

"அப்படியா சொல்ற" என்று சொல்லி எழுந்து கால்மேல் கால் போட்டு உட்கார்ந்தார். பிறகு தம் ஆள்காட்டி விரலை மூக்கு நுனியில் சிறிது நேரம் வைத்திருந்தார். பிறகு கூறத் தொடங்கினார்:

"எனக்கு இளமையிலிருந்தே அரசியலிலே ஈடுபாடு அதிகம். காரணம் பாரதியார் தொடர்புதான். யாராயிருந்தாலும், அவனுக்கென்று ஓர் அரசியல் கொள்கை வேண்டும்; அதிலே தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். நான் அப்படித்தான் இருந்து வருகிறேன். என்னால் அரசியல் இல்லாமல் இருக்க முடியாது. என்னுடைய அரசியல் ஈடுபாட்டினாலே எனக்கு இளமையிலிருந்தே அடிக்கடி தொல்லை வருவதுண்டு. ஓரிடத்திலே என்னை நிலையாக வைக்காமல் அடிக்கடி வேண்டுமென்றே மாற்றிக் கொண்டிருப்பார்கள்.

புதுவை அரசியலில் நான் எந்தக் கட்சியில் இருந்தாலும் அது வெற்றி பெறும். கெப்ளே என்பவன் ஆளுங் கட்சித் தலைவன். அவனோடு குட்டியா சபாபதிப் பிள்ளை என்ற பெரிய வழக்கறிஞர் ஒரு முறை தேர்தலிலே போட்டியிட்டார். இந்தப் போட்டியில் நான் பிள்ளை பக்கம் இருந்தேன். பிள்ளை வெற்றி பெற்றார். தேர்தல் முடிந்து ஒரு

திங்கள் ஆனதும் என்மீது கெப்ளேயின் ஆட்கள் பொய் வழக்குப்[1] போட்டு ஒரு மாதம் மூன்றுநாள் சிறையிலே தள்ளி விட்டார்கள்.

திருபுவனை வட்டாரத்தில் எனக்குச் செல்வாக்கு அதிகம். அங்கு 'வாத்தியார்' சொன்னால் சொன்னதுதான். அந்த வட்டாரத்தில் மொத்த ஓட்டு 5015. நான்கு தேர்தல்களில் தொடர்ந்து 5015 ஓட்டுகளையும் சரமாக அடித்துவிட்டேன். மேயர் தேர்தலானாலும் சரி, சட்டசபைத் தேர்தல் ஆனாலும் சரி, தெபிதே[2] தேர்தல் ஆனாலும் சரி, நான் யாரை ஆதரிக்கிறேனோ அவருக்குத்தான் வெற்றி.

அரசியற் காழ்ப்பின் காரணமாக என் மீது சாட்டப்பட்ட பொய் வழக்கு நடந்து கொண்டிருந்த சமயத்தில் எனக்குத் திருமணம் பேச்சு நடந்தது, வழக்கு முடிந்து தண்டனையை அனுபவித்துவிட்டு வந்த பிறகு திருமணம் செய்துகொள்வதாகச் சொன்னேன். அதன்படி சிறையிலிருந்து வெளிவந்து இரண்டு திங்கள்கள் கழித்த பிறகு எனக்குத் திருமணம் நடைபெற்றது. நான் 1891ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18ஆம் நாள் பிறந்தேன்.[3] திருமணத்தின்போது எனக்கு வயது 28 முடிந்துவிட்டது. என் தாயார் பெயர் இலட்சுமியம்மாள், மனைவியின் பெயர் பழனியம்மாள்.

---

1. இப்பொய் வழக்குச் செய்தியைப் பற்றிப் பாவேந்தர் தம்முடைய குடும்ப விளக்கு இரண்டாம் பகுதியில் குறிப்பிடுகிறார்.

ஐயா யிரமக்கட்கு) ஆம் உரிமை காக்கநான்
பொய்யர் தம்மை எதிர்த்த போதென்னைப் - பொய்வழக்கால்
சேர்த்த சிறையெனக்கோ தென்றல் வரும் சோலையன்றோ?

2 தெபிதே - Deputy என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான பிரெஞ்சுச் சொல். புதுவை யிலிருந்து பிரெஞ்சுப் பாராளுமன்றத்துக்கு அனுப்பப்படும் பிரதிநிதி தெபிதே எனப்படுவார்.

3. பாவேந்தரின் பிறந்தநாள் இரண்டு விதமாக அவருடைய நூல்களில் குறிப் பிடப்பட்டுள்ளன. 'பாரதிதாசன் கவிதைகள் முதற் பதிப்பிலும் (1928) இரண்டாம் பதிப்பிலும் (1940) கவிஞர் மலரிலும் (குயில் நிலையம் 1946 (17.4.1891) தான் பிறந்த நாளாகக் குறிக்கப்பட்டுள்ளது. இப்போது வெளியாகும் பாவேந்தர் நூல்களில் 29.4.1891 பிறந்த நாளாகக் குறிக்கப்படுகிறது. இந்த ஐயத்தைத் தெளிவுபடுத்திக் கொள்ளும் நோக்கத்துடன் நான் பாவேந்தரையே கேட்டேன், 'உங்கள் பிறந்த நாளைச் சரியாகச் சொல்லுங்கள்' என்று. என் பிறந்தநாள் 18.4.1891தான்' என்று அவர் சொன்னார். பிறந்த நாள் ஒன்றும், பள்ளிப் பதிவேட்டில் குறிப்பிடப்படும் பிறந்தநாள் ஒன்றுமாகப் பெரும்பாலோர்க்கு ஆகிவிடுவதுண்டு. பாவேந்தர் பிறந்தநாளைக் குறிப்பிடுவதிலும் அத்தகைய பிழை நேர்ந்திருக்கலாம்; புதுவை நகர்மன்றப் பதிவேட்டில் 29.4.1891ல் பாரதிதாசன் பிறந்ததாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுவே சரியானது.

தமது திருமண[1] வரலாற்றை மிகவும் சுருக்கமாக முடித்துக் கொண்டார் கவிஞர். இன்னும் கொஞ்சம் விரிவாகச் சொல்லுவார் என்று எதிர்பார்த்தேன். சட்டென்று முடித்துக் கொண்டது எனக்கு ஏமாற்றமாகப் போய்விட்டது. அவரது திருமணச் செய்திகளை மேலும் நுணுகிக் கேட்க எனக்குச் கூச்சமாகவும், ஓரளவு அச்சமாகவும் கூட இருந்தது. எனவே பேசாமல் விட்டுவிட்டேன்.

8.2.62

"புதுச்சேரியில் பிரெஞ்சு சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்களுக்கும் தமிழ் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்களுக்கும் எப்போதும் போட்டியாகத்தான் இருக்கும். பிரெஞ்சு சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்களுக்கு அதிகச் சம்பளமும், தமிழ் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்களுக்குக் குறைந்த சம்பளமும் புதுச்சேரி அரசாங்கம் கொடுத்து வந்தது. எனவே இரண்டுகூட்டத்திற்கும் இடையே காழ்ப்புணர்ச்சி எப்போதும் இருந்து கொண்டிருந்தது.

பிரெஞ்சு ஆசிரியர்கள் கட்சிக்கு வெங்கடகிருஷ்ண நாயுடு என்பவர் தலைவர்; அவர் புதுச்சேரித் தலைமைப்பள்ளியின் முதல்வர் (Principal). தமிழாசிரியர்கள் கட்சிக்கு நான் தலைவன். சமயம் வரும் போது ஒருவரையொருவர் காலை வாரிவிடுவது எங்களுக்குள் வழக்கம்.

லூய்ல் ஃபெரி (Jules Fery) என்பவர் 19ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சு நாட்டில் வாழ்ந்த பெரிய சமுதாயச் சீர்திருத்தவாதி. கல்வித்துறை சமயவாதிகளின் கையில் இருந்ததை அவர் கண்டித்தார். "பாதிரிமார் கையில் கல்விக் கூடங்கள் இருப்பதால் ஏழை எளியவருக்குக் கல்வி எட்டவில்லை. கல்வியை எல்லாரும் பெறாவிட்டால் ஏழை

1. தீருமணத்தின்போது தமக்கு வயது 28 முடிந்துவிட்டதென்று பாவேந்தர் என்னிடம் குறிப்பிட்டார். அவர் கூறியபடி கணக்கிட்டால் பாவேந்தர் தீருமணம் 18.4.1919லிருந்து 18.4.1920க்குள் நடைபெற்றிருக்க வேண்டும். 1919இல் திருவாளர்கள் கெப்ளேயும் குட்டியா சபாபதிப் பிள்ளையும் போட்டியிட்ட தீருப்புவனைத் தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தல் முடிந்தவுடன் கவிஞர் மீது பொய் வழக்குப் போடப்பட்டது. 1 தீங்கள் 3 நாள் காவலில் வைக்கப்பட்டார். சிறையில் இருந்து வெளிவந்து இரண்டு தீங்கள்கள் கழித்துத் தீருமணம் நடைபெற்றது. சிறைக்குச் செல்வதற்கு முன்பே தீருமணம் நிச்சயிக்கப்பட்டு விட்டது என்பது குறிப்பிடத்தக்கது.
பூம்புகார் பிரசுரம் வெளியிட்டுள்ள (குயில் பாடல்கள்-பாவேந்தர் வாழ்க்கைக் குறிப்புகள் பக்கம்-10) நூலில் பாவேந்தர் ஒன்றேகால் ஆண்டுகள் சிறையில் இருந்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கணக்குப்படி பார்த்தால் பாவேந்தருக்குத் தீருமணம் 30ஆம் வயதில் தான் நடந்திருக்கும் என்று ஆகிறது. எனவே இச்செய்தி சரியானதாகப்படவில்லை. இச்செய்தியைப் பற்றிய உண்மையான விளக்கத்தை அறியப் புதுவை அரசாங்கக் குறிப்பேடுகளை ஆய்ந்து தீருப்புவனைத் தேர்தல் நாளையும், பாவேந்தருக்குச் சிறைத்தண்டனை வழங்கிய வழக்கு மன்ற ஆணையையும் கண்டறிய வேண்டும்.

ஏழையாகவும், பணக்காரன் பணக்காரனாகவுமே இருக்க நேரிடும். கல்விக் கட்டணங்களைப் பாதிரிமாரிடமிருந்து பிடுங்கி அரசாங்கமே ஏற்று நடத்தினால் குடியரசின் முழுப்பயனை நாட்டு மக்கள் எல்லாரும் நுகர முடியும்" என்று அவர் பிரசாரம் செய்தார். பாதிரிமார்கள் அரசாங்கத்திடம் கோள் சொல்லியும், தம் செல்வாக்கைப் பயன்படுத்தியும் லுய்ல் ஃபெரியை நாடு கடத்தி விட்டனர். லுய்ல் ஃபெரி வெளிநாட்டில் இருந்துகொண்டே தம் பிரசாரத்தை ஓய்வின்றிச் செய்து வந்தார். பின் நாட்டுத் தலைவராகிக் கல்வியைச் சமய ஆதிக்கத்திலிருந்து மீட்டு அரசாங்கத்தின் பொறுப்பில் கொண்டு வந்தார். அதிலிருந்து பிரெஞ்சு நாடு லுய்ல் ஃபெரியைக் கல்விச் சீர்திருத்தத் தந்தை என்று போற்றுவது வழக்கம். லுய்ல் ஃபெரியின் நூற்றாண்டு விழா வந்தது. அவ்விழா பிரெஞ்சு நாடு மட்டுமன்றி, பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகளிலும் கொண்டாடப்பட்டது. புதுச்சேரியிலும் அவ்விழா எல்லாப் பள்ளிகளின் சார்பிலும் விமரிசையாகக் கல்வித்துறைத் தலைவர் (சீஃப்) முன்னிலையில் கொண்டாடப்பட்டது. அவ்விழாவின்போது ஆடல், பாடல், நாடகம் முதலிய கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. நாடகத்திற்காக லுய்ல் ஃபெரியைப் பற்றி நான் பாடிய பாடல் ஒன்றும் மாணவர்களால் பாடப்பட்டது. அப்பாடலைப் பாட மாணவர்கள் தொடங்குவதற்கு முன்பே 'இது மதத்துரோகமான பாட்டு. இதைப் பாடினால் கூடியிருப்போர் உள்ளம் புண்படும்' என்று கல்வித்துறைத் தலைவரிடம் கிருஷ்ணசாமி நாயுடுவின் ஆட்கள் கோள் மூட்டினர். ஆனால் தலைவர், அவர்களுடைய பேச்சுக்குச் செவிசாய்க்காமல் நிகழ்ச்சியைத் தொடர்ந்து நடத்துமாறு கட்டளையிட்டார். மாணவர்கள் கீழ்க்கண்ட வரிகளைப் பாடினர்.

வறியோர்க்கெல்லாம் கல்வியின் வாடை
வரவிட வில்லைமத குருக்களின் மேடை
நறுக்கத் தொலைந்ததந்தப் பீடை
நாடெல்லாம் பாய்ந்தது கல்வி நீரோடை

இதைப் பாடியதும் நாயுடுவின் ஆட்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். உடனே இவ்வரிகளை அப்படியே பிரெஞ்சில் மொழிபெயர்த்துத் தரும்படி கல்வி இலாகாத் தலைவர் கேட்டார். அப்படியே மொழி பெயர்த்தும் கொடுத்தனர். அதைப் படித்த தலைவரின் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. "இதுதானய்யா நாம் இன்று எல்லாருக்கும் எடுத்துச் சொல்ல வேண்டிய செய்தி. சுப்புரத்தினம் பாடியது சரி" என்று சொன்னார்.

பிறகு என்னைக் கூப்பிட்டுத் தலைவர் பெரிதும் பாராட்டியதோடு, "உன்பேரில் பொறாமைக்காரர்கள் வேண்டுமென்றே கோள் சொன்னார்கள். நீ மீண்டும் என்னை வந்துபார், அவர்களை யெல்லாம் கவனித்துக் கொள்கிறேன்" என்று கூறிச் சென்றார். பிறகு நான் அவரைச் சந்தித்து எனக்குத் தொல்லை கொடுத்தவர்களை யெல்லாம் வேறு இடங்களுக்கு மாற்றும்படி சொன்னேன். அவ்வாறே மாற்றி அவர்கள் கொட்டத்தை அடக்கினார். அத்தலைவர் இருக்கும்வரையில் என் செல்வாக்குக் கொடிகட்டிப் பறந்தது. இந்த நிகழ்ச்சி நடந்தபோது எனக்கு வயது நாற்பது".

இந்த நிகழ்ச்சியை அவர் கூறிமுடித்தபோது இரவு மணி பன்னிரண்டிருக்கும். பாவேந்தர் 'பொன்னடி' என்று குரல் கொடுத்தார். முன்கூடத்தில் இருந்த பொன்னடி எழுந்து ஓடி வந்தார். "இன்று வல்லுணவு எதுவுமில்லை. அதனாலே பசியெடுத்துடுச்சு. ஏதாவது சாப்பிடணுமே" என்றார். உடனே நானும் பொன்னடியும் ராஜகுமாரி திரைப்படக் கொட்டகை அருகில் இருந்த ஒரு விடுதியில் சென்று 'முட்டை ஆம்லெட்' வாங்கி வந்து கொடுத்தோம்; சாப்பிட்ட பின் உறங்கினார்.

9.2.62

இன்று மாலை 5 மணியளவில் கவிஞர் இல்லம் சென்றேன். கவிஞர் வெளியிலே புறப்படத் தயாராக இருந்தார். என்னையும் புறப்படும்படி சொன்னார். கவிஞரும், நானும், பொன்னடியும் தேனாம்பேட்டை சென்று தமிழ்க்கவிஞர் பெருமன்றத்துக்கு பீரோ செய்வதற்குப் பலகை எடுத்தோம். பலகைக்கு ரூ.74/-ம் அதை பீரோவாகச் செய்பவர் கூலி ரூ.30/-ம் செலவாயிற்று. "இது எதற்கு இப்போது வீண் செலவு?" என்று நான் கேட்டதற்கு, "கவிஞர் பெருமன்றம் சம்பந்தப்பட்ட எல்லா ரெகார்டுகளும் தனியாக ஓர் பீரோவில் இருக்க வேண்டும்" என்று கூறினார். ஆனால் இந்தத் தமிழ்க்கவிஞர் பெருமன்றம் ஆறு திங்கள்கள் கூட உயிர் வாழவில்லை. இம்மன்றத்தைத் துவங்கியபோது கவிஞர் காட்டிய ஆர்வம் அளவிட முடியாதது. இரண்டுமுறை சென்னைக் கவிஞர்கள் இராமன் தெரு இல்லத்தில் கூடியபொழுது தம் கைச்செலவில் சிற்றுண்டி வழங்கினார். இம்மன்றத்துக்கு வசூலான மொத்த நன்கொடை ரூ. 425. இதில் பெரிய தொகையாக நன்கொடை போட்ட பிரமுகர் பணம் கொடாமல் சில மாதங்கள் இழுக்கடித்தார். கவிஞர் பொறுமையிழந்தார். நேராக அப்பிரமுகர்

இல்லத்துக்கு ஒரு நண்பரோடு சென்றார். வரவேற்பு அறையில் போய் அமர்ந்து கொண்டு 'அவ என்ன நன்கொடைப் பணம் கொடுக்கறானா இல்லையான்னு கேளு' என்று ஒரு சத்தம் போட்டார். பிரமுகர் பணத்தைக் கொண்டு வந்து கொடுத்ததோடு மன்னிப்பும் கேட்டுக் கொண்டார்.

பீரோ செய்யப் பலகை எடுத்துக் கொண்டு வீடு திரும்பியதும் கவிஞரும் நானும் சாப்பிட்டோம்; பிறகு ஓய்வாக வெளியில் வந்து உட்கார்ந்தோம். எங்கள் பேச்சு தமிழைப் பற்றியும் தமிழ் அறிஞர்களைப் பற்றியும் திரும்பியது. பாவாணர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் திராவிட மொழியாராய்ச்சித் துறையில் பணியாற்றியபோது அவருக்குப் பெரிதும் தொல்லை கொடுத்துவந்த ஒரு தமிழ்ப் பேராசிரியரைப் பற்றிப் பேச்சு வந்தது. உடனே அவரைப் பற்றி மிகவும் கடுமையான சொற்களால் பேசத் தொடங்கி விட்டார்.

"இவர் ஒரு தமிழ்த் துரோகி. ஒரு பெரிய இடத்துத் திருமணத்துக்குப் போயிருந்தபோது இவரும் வந்திருந்தார். விருந்தின்போது என்னையும் சாப்பிடும்படி திருமண வீட்டார் வற்புறுத்தினர். என் உடம்பில் தித்திப்பு நீர் (Sugar) இருப்பதால் நான் விருந்துண்ண மறுத்தேன். பேருக்காவது விருந்தில் உட்கார்ந்து ஒரு வாய் சாப்பிட்டு விட்டு எழச் சொன்னார்கள். நானும் கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு நடுவில் எழுந்தேன். உடனே இவர் என்ன செய்தார் தெரியுமா? எனக்கு முன் எழுந்து ஓடிச்சென்று கையலம்பிக் கொண்டு, எனக்குச் செம்பில் தண்ணீர் மொண்டு கொடுத்தார்; ஒரு செம்பு தண்ணீரை என் காலில் எடுத்து ஊற்றினார். குயிலில் இவரைப் பற்றிச் சரமாரியாக எழுதி இந்த அளவு அச்சுறுத்தி வைத்திருந்தேன்.

தமிழகப் புலவர் குழு பாவாணருடைய 50 சொற்கள் பற்றிய ஆராய்ச்சி சரியானதென்று முடிவுசெய்து முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதத்தின் மூலம் இராஜா சர். முத்தைய செட்டியாருக்குச் சிபாரிசு செய்ய முயற்சி எடுத்துக் கொண்டது. முத்தைய செட்டியாரைச் சந்திக்கப் புலவர் குழு திருச்சியில் கி.ஆ.பெ. வீட்டில் தங்கியிருந்தது. நான் ஒரு பக்கமாக நாற்காலியில் அமர்ந்திருந்தேன். எனக்கு எதிரில் புலவர் கூட்டம் அமர்ந்திருந்தது. முத்தைய செட்டியார் வந்தார். புலவர்கள் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. எனக்கு மட்டும் வணக்கம் செலுத்திவிட்டு நேராக உள்ளே சென்றார்.

சிறிது நேரம் உள்ளே ஏதோ பேச்சு நடந்தது. "கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள்; அவசரம் வேண்டாம்" என்று எனக்குப் பதில்

கூறுவதுபோல் உள்ளே இருந்து பேசினார் முத்தைய செட்டியார். பின் புறப்பட ஆயத்தமானார். பாவாணருக்குப் பரிந்துரை செய்ய வந்திருந்த புலவர்கள் யாரும் வாயே திறக்கவில்லை. செட்டியார் வெளியில் வந்து என்னை வணங்கிவிட்டு 'நான் போய் வருகிறேன்' என்று கூறி விடைபெற்றுச் சென்றார். பாவாணருக்குப் பரிந்து குயிலில் நான் எழுதியும், அவர் என்னை வந்து பார்க்கவில்லை. ஒருகால், என் தலையீட்டால் அவருடைய பதவிக்குத் தொல்லை நேரலாம் என்று அவர் நினைத்திருக்கக்கூடும்".

அதன்பிறகு மறைமலையடிகளைப் பற்றி எங்கள் பேச்சுத் திரும்பியது. இக்கட்டுரையின் துவக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழறிஞரையும் மறைமலையாரையும் தொடர்புபடுத்திப் பாவேந்தர் ஒரு செய்தி குறிப்பிட்டார்.

"காந்தியடிகள் 'விதேசித் துணியெரிப்புப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த நேரம். இப்போராட்டம் மறைமலையாருக்குச் சிறுபிள்ளைத்தனமாகப்பட்டது. வெளிநாட்டுத் துணிகளைக் கடற்கரையில் போட்டுக் கொளுத்துவதைக் கண்டஞ்சி ஆங்கிலப் பேரரசு இந்தியாவை விட்டு ஓடிவிடும் என்று நினைப்பது முட்டாள்தனம் என்று பத்திரிகையில் எழுதினார். அப்போது சென்னை மாநில முதலமைச்சராக இராஜகோபாலாச்சாரியார் இருந்தார். அவர் இவரை மறைமலையாரிடம் அனுப்பி மாதம் ரூ.500/- சம்பளத்தில் நல்ல வேலை கொடுப்பதாகவும், காங்கிரசைத் தாக்கி எதுவும் எழுதவேண்டாமென்றும் கேட்டுக் கொண்டார். மறைமலையார் இவரை நோக்கி "போ! போ! இது மாதிரி வேலைக்கு இனிமே வராதே" என்று கூறி அனுப்பிவிட்டார்.

மறைமலையாருக்கு வடமொழியும், தமிழும், ஆங்கிலமும் கூடிய செறிந்த புலமை வாய்த்திருந்தது. அத்தகைய புலமை பெற்றோர் அவருக்குப் பிறகு யாரும் தோன்றவில்லை. அவரிடமிருந்த குறை சைவத்தை நிலைநாட்டவே தம் வாழ்வைச் செலவிட்டதுதான்.

அதன்பிறகு இலக்கியப் பரிசுகளைப் பற்றி எங்கள் பேச்சுத் திரும்பியது. 'ஆண்டுதோறும் ரூ.5000/- வட்டி வரும்படி நிலையான ஒரு தொகையைச் சேர்த்து, ஒரு பரிசுத்திட்டத்தை நிறுவ வேண்டும். அதற்குப் 'பாரதிதாசன் பரிசு' என்று பெயர் வைக்க வேண்டும். அந்த ஐயாயிரம் ரூபாயையும் ஆண்டுதோறும் வெளியாகும் நல்ல ஒரு தமிழ்க்கவிதை நூலுக்குப் பரிசாக வழங்க வேண்டும்" என்று நான் சொன்னேன்.

"ஆமாம்! ஆனால் இதை இந்த நாட்டு மக்கள் அல்லவா செய்ய வேண்டும்? என்று கூறினார் பாவேந்தர்.

அதன் பிறகு இருவரும் இரண்டாவதாட்டம் திரைப்படம் பார்ப்பதற்காகச் சென்றோம். வழக்கமாக நாங்கள் ஆங்கிலப்படம் பார்க்கத் தான் செல்வது வழக்கம். ஆனால் இன்று 'நெஞ்சில் ஓர் ஆலயம்' என்ற தமிழ்ப்படம் பார்க்கச் சென்றோம். சென்னையில் பாவேந்தரோடு வெளியில் செல்லும் நேரங்களில் அவரைச் செலவு செய்யும்படி நான் அனுமதிப்பதில்லை. போதிய அளவு என் சட்டைப்பையில் பணமிருந்தால்தான் அவரோடு வெளியில் செல்வேன். இல்லாவிட்டால் செல்லமாட்டேன். இது அப்போது நான் கண்டிப்பாகக் கடைப்பிடித்த கொள்கை.

படம் புதுமையாக இருப்பதாகச் சொல்லி நான் தான் அவரை அழைத்துச் சென்றேன். பையில் ஏழெட்டு ரூபாய் பணம் இருந்தது. டிக்கெட்டுக்கும் டாக்சிக்கும் போதும் என்று நினைத்தேன். கொஞ்சம் காலம் தாழ்த்திச் சென்றதால் டிக்கெட் கிடைக்கவில்லை. வெளியிலே 'பிளாக்'கில் வாங்கிக் கொண்டு கொட்டகைக்குள் நுழைந்தோம். கையில் நான் கொண்டு வந்திருந்த பணம் கிட்டத் தட்டச் செலவாகி விட்டது. இடைவேளையில் வெளியில் எழுந்து வந்தோம். கவிஞர் தாகமாக இருக்கிறது என்று சொல்லி உள்ளே இருந்த கடைக்குச் சென்று 'கோகோ கோலா' கேட்டார். அவனும் சட்டென்று உடைத்துக் கையில் கொடுத்து விட்டான். 'என்ன விலை?' என்று கடைக்காரனைக் கேட்டேன். அவன் 'அறுபது காசு' என்று சொன்னான். என் சட்டைப்பையில் இருந்த சில்லரைகளைப் பொறுக்கி எண்ணிப் பார்த்தேன். ஐம்பது காசு தான் இருந்தது. எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. 'உங்களிடத்தில் காசு இருக்கிறதா?' என்று கவிஞரைக் கேட்டேன். அவரும் 'நான் பணம் எதுவும் எடுத்து வரவில்லையே! இப்போது என்ன செய்வது?' என்று கலவரத்தோடு கேட்டார்.

காசைப் பற்றி நான் கவலைப்படவில்லை. அருகில் உள்ள யாரிடமாவது வாங்கிக் கொடுத்துவிடலாம். ஆனால் அந்த இடத்தில் பாவேந்தருக்காக மற்றவரிடத்தில் கை நீட்டிக் காசு வாங்க நேரிட்டு விட்டதே என்று திகைத்தேன்.

'எதற்கும் உங்கள் சட்டைப் பையைத் தேடிப் பாருங்கள்' என்று அவரிடம் சொன்னேன். தேடிப்பார்த்தார். என்ன வியப்பு! சரியாகப் பத்துக்காசு அவர் சட்டைப்பையில் இருந்தது. அப்பாடா! அந்தக் காசை வாங்கிக் கடைக்காரன் கையில் அறுபது காசையும் கொடுத்து விட்டேன்.

உள்ளே படம் ஓடிக் கொண்டிருந்தது. நடுநடுவே கதையின் நிகழ்ச்சிகளை விமர்சனம் செய்தார். "கதாநாயகன் காதலியிடம் புகைப்படத்தைக் கொடுக்க மறுக்கிறான். இது Immoral" என்றார்.

'முத்தான முத்தல்லவோ' என்ற பாட்டு திரையில் பாடப் பட்டபோது 'இது பாட்டாம்!' என்று கூறிவிட்டுச் சிரித்தார். படம் முடிந்து வெளியில் வந்தோம். வெளியில் நின்று கொண்டிருந்த ஒரு டாக்சி டிரைவரைப் பார்த்து, "ஏப்பா! தி நகர் வர்ரியா?" என்று கேட்டார்.

"இல்லையுங்க. டவுனுக்குப் போற" என்று அவன் சொன்னான்.

"டவுனுக்குப் போறவ இங்க ஏ நிறுத்திக்கிட்ட. போற தானே?... முருகு.. இவ டாக்சி நம்பரைக் குறிச்சுக்க" என்று சொல்லி அவனிடம் சண்டைக்குப் போய்விட்டார். கவிஞரைச் சமாதானப்படுத்தி வேறு ஒரு டாக்சியில் ஏறி இருவரும் வீடு வந்து சேர்ந்தோம்.

14.2.62

இன்று கவிஞர் தமிழழகனும், காலஞ்சென்ற குழந்தைக் கவிஞர் நாக.முத்தையா அவர்களும் பாவேந்தர் இல்லத்துக்கு வந்திருந்தனர். தமிழ்க் கவிஞர் பெருமன்றத்தை எவ்வாறு வளர்ப்பது, எவ்வாறு செயற்படுத்துவது? என்பதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். தமிழ்க் கவிஞர் பெருமன்றத்தில் உலகின் பல நாடுகளில் இருக்கும் தமிழ்க் கவிஞர்களையும் திரட்டிப் பங்குபெறச் செய்ய வேண்டும் என்று முடிவு செய்தோம். அன்றே மலைநாட்டு (மலேசியா-சிங்கப்பூர்) கவிஞர்களுக்கு அறிக்கை ஒன்றும் எழுதப்பட்டது.

அன்று எண்சீர் விருத்தம் பற்றி எங்களுக்கு நல்ல விளக்கம் கொடுத்தார். "இந்த நூற்றாண்டில் எண்சீர் விருத்தத்தில் பல உத்திகளையும், கையாண்டு அதை நன்கு விளம்பரப்படுத்தியிருக் கிறேன். இன்று கவிதை எழுத வேண்டும் என்று நினைப்பவர்கள், எண்சீர் விருத்தத்தைத் தான் எழுதிப் பழகுகிறார்கள். அந்த அளவு அதை நான் கவிஞர்களுக்கு எளிமைபடுத்திக் கொடுத்திருக்கிறேன். இதைப் போலவே சிறு சிறு கருத்துக்களைக் கருவாகக் கொண்ட கட்டளைக் கலித்துறைகள் எழுதி அதையும் நன்கு விளம்பரப்படுத்த வேண்டும் என்பது என் விருப்பம்" என்று கூறினார். கூறியபடியே இரண்டு நாட்களில் அழகிய கட்டளைக் கலித்துறை ஒன்று அவர் கற்பனையில் வெளிப்பட்டது.

4.3.62

இன்று விடுமுறையாகையால் காலைச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு நேராகப் பாவேந்தர் இல்லம் வந்தேன். என்னைக்

கண்டதும், "என்ன வெளியில் போகலாமா? கொஞ்சம் வேலையிருக்கிறது?" என்று சொன்னார். பொன்னடி சகானீஸ் அருகில் சென்று டாக்சி கூட்டி வந்தார். குயில் பத்திரிகைக் காகிதக் கோட்டா அப்போது வந்திருந்தது. அது மூன்று திங்களுக்கு ஒருமுறை வந்து கொண்டிருந்தது என்று எண்ணுகிறேன். அதை எடுக்க ரூ. 5000 வேண்டும். பாவேந்தர் கையில் பணமில்லை. அது சம்பந்தமாக இரண்டு மூன்று பேரைப் பார்த்தோம். ஒவ்வொருவரும் பாவேந்தரைப் பார்த்தவுடன் எழுந்து நின்று கைகூப்பி வணங்குவர்; அடக்கமாக எதிரில் நின்று சிற்றுண்டியும் சுவைநீரும் வழங்குவர்; பணப்பேச்சை எடுத்தால் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி மெதுவாகக் கழன்று கொள்ளுவர். பணத்துக்காக ஒரு பெருங் கவிஞன் இவ்வாறு அவமானப்பட்டதை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை; மிகவும் வேதனையாக இருந்தது.

இந்தச் சமயத்தில் செக் நாட்டுத் தமிழ் அறிஞரான முனைவர் காமில் ஸ்வலபில் அவர்கள் தம் நாட்டுப் பிரபலப் பத்திரிகையான 'நோவி ஓரியண்டில்' பாவேந்தர் பாடல்கள் சிலவற்றை மொழிபெயர்த்து வெளியிட்டிருந்தார். அதில் பாவேந்தர் படமும், வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளும் கூட வெளியிடப்பட்டிருந்தன. அந்த இதழின் படி ஒன்றைப் பாவேந்தருக்கு அவர் அனுப்பி வைத்ததோடு ஒரு கடிதமும் எழுதியிருந்தார்[1] அதில் பாவேந்தர் எழுதிய நூல்கள் அனைத்திலும் ஒவ்வொரு படி திரட்டி அனுப்பும்படி கேட்டிருந்தார். அவருக்கு அனுப்புவதற்குச் சில நூல்களின் படிகள் கிடைக்காமல் இருந்த காரணத்தால் நானும் பாவேந்தரும் பாரி நிலையம் சென்றோம். அன்று ஞாயிற்றுக்கிழமையாக இருந்தாலும் கணக்கெடுப்புக்காகப் பாரி நிலையம் உள்ளே திறந்து வைக்கப்பட்டிருந்தது. பாரி நிலையம் மாடியின் மேல் உள்ளது. அதன்மாடிப் படி செங்குத்தானது. அதன்மேல் பாவேந்தரால் ஏறமுடியவில்லை; மூச்சு வாங்கியது. எனவே நான் மட்டும் மேலே சென்று அதன் உரிமையாளரான திரு செல்லப்பன் அவர்களிடம் பாவேந்தர் வந்திருப்பதாகச் சொன்னேன். அவர் கீழே இறங்கி வந்தார்; தேவையான நூல்களைக் கட்டாகக் கட்டிக் கொடுத்தார். அதைப் பெற்றுக் கொண்டு பாவேந்தரும் நானும் இல்லம் திரும்பினோம்.

பாவேந்தர் இல்லத்தில் இடைவேளை உணவு சாப்பிட்டுவிட்டு ஓய்வெடுத்துக் கொண்டேன். மாலையில் அவர் அறைக்குள்

1. காண்க: பிற்சேர்க்கை–2

நுழைந்தபோது, அவருடைய மீசையைப் பற்றி முதலில் நான் எழுதிக் கொடுத்திருந்த பாடலைத் திருத்திக் கொண்டிருந்தார்.

நான் அப்போது கவிதைத் துறையில் கற்றுக் குட்டி. என் பாட்டில் பல பிழைகள் இருந்தன. அப்பிழைகளையெல்லாம் திருத்தி முடித்த பின், தாம் திருத்தியதற்குச் சான்றாக மூன்று இடத்தில் கையெழுத்திட்டுத் தேதியும் குறிப்பிட்டார். அச்சுவடியை இன்றும் பொன்னே போல் போற்றிப் பாதுகாத்து வருகிறேன்.

பொதுவாக மரபுக்கவிதை எழுதுபவர்களிடம் காணப்படும் பிழைகள் இரண்டு. ஒன்று குற்றியலுகரப் பிழை; மற்றொன்று 'எந்தன்', 'உந்தன்' பிழை. இன்று மிக்க விளம்பரம் பெற்றிருக்கும் பெருங்கவிஞர்களின் நூல்களைப் புரட்டினாலும் இப்பிழைகள் மலிந்திருக்கக் காணலாம். ஒரு பெருங்கவிஞரிடம் இதைப் பற்றிக் குறிப்பிட்டுக் கேட்டபோது, "இருந்தால் என்ன? குற்றியலுகரம் புணர்ந்தால் தானே கெடும்? நான் பிரித்துத்தானே எழுதியிருக்கிறேன்" என்று சிரித்துக்கொண்டே சொன்னார்.

என்னுடைய பாடல்களில் இருந்த இவ்விரு பிழைகளையும் கோடிட்டுக் காண்பித்துப் பள்ளி மாணவனுக்குப் பாடம் நடத்துவது போல் அவ்வளவு எளிமையாக இலக்கணப் பாடம் நடத்தினார். குற்றியலுகரத்தின் வகைகளையும், புணர்ச்சி விதியையும் எழுதிக் காட்டிப் பொறுமையோடு விளக்கினார்.

என்+தன்-என்றன்
உன்+தன்-உன்றன்
எம்+தம்-எந்தம்
உம்+தம்-உந்தம்

'எந்தன்', 'உந்தன்' என்ற சொற்களே தமிழில் இல்லை. இவையெல்லாம் தெரியாமல் கவிதை எழுத வரக்கூடாது என்று கடுமையாகவே சொன்னார். இவ்விலக்கணப் பாடம்[1] அவர் நடத்தியபோது கவிஞர் பொன்னடியும் என் அருகிலிருந்தார்.

'எந்தன்', 'உந்தன்' இலக்கண விவகாரத்தில் பாவேந்தர் எப்போதுமே கடுமையாக இருந்திருக்கிறார் என்ற செய்தி அவர் நடத்திய 31.3.59 குயில் ஏட்டில் தலையங்கமாகவே வெளியாகியுள்ளது. அது வருமாறு:

குயில்

புதுச்சேரி, தி.வ. ஆண்டு (1990) பங்குனி (18)

கவிஞர் நினைவிற்கு!

'எந்தன்' 'உந்தன்' எனத் தமிழில் சொற்களேயில்லை, இதை முன் ஒருமுறை விளக்கியுள்ளோம். இவ்வாறுள்ள பிழைச் சொற்களைப் படித்தவர்களே எழுதுவதென்றால், இராசகோபாலாச்சாரிக்கும் இவர்கட்கும் என்ன வேறுபாடு?

'எம்' என்பது பன்மைச்சொல். அதனோடு பன்மைக்குரிய 'தம்' என்பதுதான் சேரும். எனவே எந்தம் என்று எழுத வேண்டும். உந்தம் என்பதும் அப்படியே.

'என்' என்பதும் 'உன்' என்பதும் ஒருமைக்குரியவை. இவற்றோடு ஒருமைக்குரிய 'தன்' சேரவேண்டும். எனவே 'என்றன்' உன்றன் என எழுதவேண்டும்.

11.3.62

புலியும் மானும் ஒரே நீர்த்துறையில் தண்ணீர் குடித்ததாகச் சில புராண வரலாறுகள் கூறுவதுண்டு. அத்தகைய ஒரு நிகழ்ச்சி இலக்கிய மேடையில் ஒருமுறை நடைபெற்றது; வட ஆர்க்காடு மாவட்டத் தலைநகரான வேலூரில் நடைபெற்றது. பரம நாத்திகரான பாவேந்தர் தலைமையில் பழுத்த ஆத்திகரான கிருபானந்தவாரியார் பேசினார். இந்நிகழ்ச்சி பற்றி இன்று பாவேந்தரிடம் கேட்டேன். "கொள்கையில் இரு துருவங்களாக விளங்கிய நீங்கள் ஒரே மேடையில் பேச எவ்வாறு ஒப்புக் கொண்டீர்கள். கருத்து மோதல் ஏற்படவில்லையா?" என்று கேட்டேன்.

"இல்லை. இரண்டு துருவங்களையும் தமிழ் என்னும் பொதுக் கொள்கை ஒன்றுபடுத்திவிட்டது. அவர் தமிழைப் பற்றி எவ்வளவு சிறப்பாகப் பேச வேண்டுமோ அவ்வளவு சிறப்பாகப் பேசினார். 'உங்களுக்கெல்லாம் தமிழை நான் வாரிக் கொடுக்கிறேன்; எனக்கெல்லாம் தமிழை வாரிக் கொடுப்பவர் பாரதிதாசனார்.' என்று என்னைப் பாராட்டிப் பேசினார். பின்னர் 'கனியிடை ஏறிய சுளையும்' என்ற பாடலை இசையோடு பாடி அதிலுள்ள பல நயங்களைச் சுவைக்கச் சுவைக்க எடுத்துரைத்தார். இதில் ஒரு சிறப்பு

என்னவென்றால் கிருபானந்தவாரியாரே விரும்பிக்கேட்டு என் தலைமையில் வந்து பேசினார். தமிழ் அவருடைய வாயில் கொஞ்சி விளையாடியது. முடிவுரையில் அவருடைய தமிழ்ப் புலமையும், பேச்சாற்றலையும் நன்கு பாராட்டிப் பேசினேன்" என்று பாவேந்தர் கூறினார்.

இந்த வேலூர்க் கூட்ட நிகழ்ச்சியைப் பற்றி வேறொரு கூட்டத்தில் கவிஞரிடம், "என்ன வாரியார் எப்போதும் முருகனைப் பற்றியே பேசி ஆத்திகப் பிரசாரம் செய்கிறார். நம்மையெல்லாம் (சுயமரியாதைக்காரரை) மேடைதோறும் திட்டுகிறார். நீங்கள் எப்படி அவரைப் பாராட்டிப் பேசலாம்?" என்று யாரோ எழுந்து கேள்வி கேட்டார்கள். இதைப் பற்றியும் பாவேந்தரிடம் கேட்டேன்.

"ஆமாம் கேட்டார்கள். நம்ம கட்சியிலே பேசினா நீங்க பணமா கொடுக்கறீங்க? அதனால பணம் கொடுக்கிறவர்கள் கூட்டத்திலே ஆதரிச்சுப் பேசுகிறார். அது அவர் பிழைப்பு என்று பதில் சொன்னேன்" என்று குறிப்பிட்டார்.

20.3.62

இன்று மாலை பாவேந்தர் கலகலப்பாக இல்லை. தாம் எழுதிய ஓர் வண்ணப்பாடலைப் பார்த்துத் திருத்திக் கொண்டிருந்தார். இன்று எங்கள் பேச்சும் சுறுசுறுப்பாக இல்லை. பாவேந்தர் மகிழ்ச்சியாக இருக்கும்போது அவரே ஆர்வத்துடன் பல செய்திகளைச் சொல்வார். மற்ற நேரங்களில் நாம் கேட்டாலும் ஏதோ பதிலுக்குச் சில சொற்கள் சொல்லிவிட்டுப் பேசாமல் இருந்து விடுவார். அப்போது அவர் மனநிலை சரியில்லை என்பதைப் புரிந்து கொண்டு நான் எழுந்து வந்து விடுவேன். இன்று அவருடைய உள்ள (மன) நிலை மூட்டம் போட்டதுபோல தெளிவில்லாமல் இருந்தது. எனவே, அவர் இன்று கூறிய கருத்துக்களும் ஒன்றுக்கொன்று தொடர்பின்றி இருந்தன. இன்று அவர் கூறியவற்றுள் இரண்டு செய்திகள் குறிப்பிடத்தக்கன. ஒன்று வண்ணப்பாவைப் பற்றியது.

பாவேந்தர் கி.பி. 1919இல் திருப்புவனையில் ஆசிரியர் பணி செய்து கொண்டிருந்தார். மாணிக்கவாத்தியார் என்பவர் இவருக்கு மிகவும் வேண்டிய நண்பர். மாணிக்கவாத்தியாரின் உறவினர் ஒருவர் பத்து வண்ணங்கள் எழுதிப் பாவேந்தர் பார்வைக்கு அனுப்பி வைத்திருந்தார். நிறையப்பிழைகள். வண்ணப்பா அசை எண்ணி எழுத வேண்டும். ஓரிடத்தில் பிழையென்றால் எல்லாவிடத்தும் உதைக்கும். எனவே அப்பாடல்களைப் பல நாள் வைத்திருந்து,

பலமுறை படித்துப் பொறுமையோடு திருத்தி அனுப்பினாராம். அப்போதிருந்து வண்ணப் பாவைப் பற்றி நன்கு ஆய்ந்து அதில் தாம் பயிற்சியும், புலமையும் பெற்றதாகப் பாவேந்தர் குறிப் பிட்டார்.

மற்றொரு செய்தி பாவேந்தரின் உடல்நலக் குறைவு பற்றியது.[1] கி.பி. 1958-59ஆம் ஆண்டுகளில் பாவேந்தர் என்புருக்கி நோயினால் தாக்கப்பட்டார். சில நோய்கள் சிறு வயதில் வரும்போது தொல்லை கொடுப்பதில்லை, என்புருக்கி இளமையிலும், மஞ்சட் காமாலை முதுமையிலும் வந்தால் அவற்றில் இருந்து தப்பிப் பிழைப்பது கடினம். முதுமையில் தாக்கிய என்புருக்கி இவரை ஒன்றும் செய்யவில்லை. அந்நோய் இவருக்குத் துவக்க நிலையிலும் இருந்திருக்கலாம். புதுச்சேரியில் பிரெஞ்சு அரசாங்கப் பணியில் இருப்பவர்களுக்கு மருத்துவமெல்லாம் இலவசம். அரசாங்க மருத்துவமனையில் ஓர் அரசாங்க அலுவலர் சேர்க்கப்பட்டால் (அவர் ஓய்வு பெற்றவரானாலும் சரி) அவர் நோய் தீரும் வரையில் சம்பளத்தில் அல்லது ஓய்வூதியத்தில் 1/3 பங்குபிடித்துக் கொள்வார்கள். ஆனால் மருத்துவமனையில் நோயாளிக்குச் செலவிடும் தொகையைப் போல் பத்து மடங்கு இருக்குமாம்.

என்புருக்கி நோயினால் தாக்கப்பட்டபோது பாவேந்தரும் புதுவை அரசாங்க மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இவருக்கு நாள்தோறும் மருத்துவமனையில் கொடுக்கப்பட்ட முட்டைகளையும் பழங்களையும் தின்னமுடியாமல் வீட்டுக்குக் கொடுத்து அனுப்புவாராம். உடல் நலம் தேறி வீடு திரும்பியதும், ஓராண்டு ஒரு பிரெஞ்சுச் சமையல்காரன் இவருக்கு முறையாக உணவு சமைத்துப் போட்டானாம். பாவேந்தருக்கு என்புருக்கி வந்தபோது வயது 68. என்புருக்கி நோய் வந்து தப்பிப் பிழைத்தவர்கள் பிறகு மிகவும் எச்சரிக்கையோடு இருப்பார்கள். தொடர்ந்து புகைப்பிடிப்பவர்கள் கூட இந்த நோயைச் சாக்கிட்டு அக்கொடிய பழக்கத்தை விட்டுவிடுவார்கள். ஆனால் பாவேந்தர் எதையும் விடவில்லை. சென்னைத் தியாகராயர் நகரில் இருந்தபோது இவர் சிகரெட்டும் சுருட்டும் மாற்றி மாற்றி ஓயாமல் குடித்துக் கொண்டிருப்பார்; போதாக் குறைக்குப் பொடியும் போடுவார். தாம்பூலம் சுவைக்கும் வழக்கமும் அவரிடம் அப்போது இருந்தது.

1. பாவேந்தர் என்னிடம் கூறும்போது தாம் என்புருக்கி நோயினால் தாக்கப்பட்டது 1958-59ஆம் ஆண்டுகளில் என்று குறிப்பிட்டார். அவர் புதுவையிலிருந்து நடத்திய குயில் ஏட்டில் 10.10.56இல் மார்புச் சளியின் காரணமாகப் புதுவைத் தலைமை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாகச் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

26.3.62

தமிழகச் சட்டசபைத் தேர்தல்கள் முடிவுற்றன. கடந்த ஒருவார காலமாகத் தேர்தல் ஆரவாரங்களிடையே பாவேந்தரைப் பார்க்க முடியவில்லை. நான் மாலை 4 மணியளவில் பாவேந்தர் இல்லம் சென்றேன். என்னைக் கண்டதும், "உன் தம்பியைப் பார்க்கப் போகணும்; புறப்படு" என்றார். என் தம்பி இளங்கோவன் அப்போது ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். பாவேந்தருக்குச் சர்க்கரைநோய் இருந்ததால் வாரம் ஒருமுறை அவருக்கு வேண்டிய இன்சுலின் ஊசிமருந்து, வேறு தேவையான மாத்திரைகள் ஆகியவற்றை எடுத்து வைத்திருந்து அவனே வீட்டிற்குக் கொண்டுவந்து கொடுப்பான். சில சமயங்களில் பாவேந்தரே அவன் விடுதிக்குச் சென்று வாங்கிக் கொண்டு வருவதும் உண்டு. ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் இவருக்கு மிகவும் வேண்டிய மற்றொரு மாணவரும் அப்போது இருந்தார். அவர் பெயர் துரைசாமி; வடஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர். கவிதை எழுதுவார்; அடக்கமும் அளவு கடந்த தமிழ்ப்பற்றும் உடையவர். தற்போது மலேசியாவில் மருத்துவராகப் பணிசெய்து கொண்டு சிறப்பாக வாழ்கிறார்.

நானும் பாவேந்தரும் என் தம்பியின் விடுதியை அடைந்தோம். அன்று மருத்துவக்கல்லூரி மாணவர் விடுதியின் ஆண்டுவிழா. பாவேந்தரும் நானும் விருந்தில் கலந்து கொண்டோம். பிறகு மருந்தைப் பெற்றுக் கொண்டு வீடு திரும்பினோம்.

வீடு வந்து சேரும்போது இரவு மணி பத்திருக்கும். பாவேந்தர் படுக்கையில் சாய்ந்து கொண்டார். நான் எதிரில் இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டு சுவடியை விரித்து வைத்தேன். "என்ன எழுதப் போறியா?" என்று கேட்டார்.

"ஆமாம்! இன்று உங்கள் வாழ்க்கையில் மிக முக்கியமான ஒரு நிகழ்ச்சியைப் பற்றிச் சொல்ல வேண்டும். கி.பி. 1946ஆம் ஆண்டில் உங்களுக்கு நடைபெற்ற நிதியளிப்பு விழா[1] பற்றிக் கூறவேண்டும்" என்று கேட்டேன். அவரும் கூறத் தொடங்கினார்:

"என்னோட நிதியளிப்பு விழாவில் மகிழ்ச்சி தரக்கூடிய செய்திகளும் உண்டு; வேதனை தரக்கூடிய செய்திகளும் உண்டு. எனக்கு

1. வரலாற்றுச் சிறப்புள்ள இந்த நிதியளிப்பு விழா அழைப்பிதழ் 1.10.69 சுரதா இதழில் வெளிவந்துள்ளது. பிற்சேர்க்கை3ல் காண்க.

நிதியளிக்க அல்லும் பகலும் ஓய்வு ஒழிச்சல் இன்றி ஒரு சல்லிக்காசுப் பயனையும் எதிர்பாராமல் உழைத்தவர் சிலருண்டு; எதிர்த்தவர் பலருண்டு. பொறாமையால் புழுங்கியவர்களும் உண்டு. இவ்வாறு புழுங்கிய தமிழறிஞர்களுள் சாமி. சிதம்பரம் ஒருவர். சாமி. சிதம்பரம் சுயமரியாதை இயக்கக் காலத்தில் பெரியாருக்கும் அண்ணாவுக்கும் தமிழ் புகட்டிய அறிஞர்.

என்னுடைய 'எதிர்பாராத முத்தம்' காவியத்தை முதன் முதலில் வெளியிட்டவர் காஞ்சிபுரம் திரு.பொன்னப்பன் அவர்கள். அந்த நூல் அச்சாகிக் கொண்டிருந்தபோது பொன்னப்பன் அதற்கு ஆங்கிலத்தில் ஒரு முன்னுரை தரும்படி அண்ணாத்துரையைக் கேட்டார்; அண்ணாத்துரை கொடுக்க மறுத்துவிட்டார். சாமி. சிதம்பரம் தமிழில் அதற்கு ஒரு முன்னுரை வழங்கினார். அதில் என்னை மட்டம் தட்ட வேண்டும் என்பதற்காகவே ஒரு செய்தியைக் குறிப்பிட்டிருந்தார்.

நிதியளிப்பு விழா முடிவில் நான் பேசியபோது, "என்னை மக்கள் ஏன் போற்றுகிறார்கள்? பாராட்டுகிறார்கள்? பொற்கிழியளிக்கிறார்கள்? என்னுடைய அஞ்சாமைதான் காரணம். மடமையை ஆதரித்தும், என்னை எதிர்த்தும் பேசுபவர்களைக் கண்டு நான் அஞ்சாமல் திட்டுவேன். நீங்களும் திட்டுங்கள். தமிழனை, தமிழன் பண்பாட்டினை இகழ்பவர்களை நீங்களும் திட்டுங்கள்.

நண்பர் சிலரும் நமக்கு உறவுபோல் இருந்து நம் காலைவாரி விடுவார்கள். இதோ எதிரில் அமர்ந்திருக்கும் சாமி. சிதம்பரம் அத்தகைய நண்பர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு. என் நூலுக்கு இவர் கொடுத்த முன்னுரையில் பஃறொடை வெண்பா 14 வரிகளுக்கு மேல் கிடையாது என்றும் பாரதிதாசன் அதற்கு மேல் எழுதியிருக்கிறார் என்றும் சொல்லிக் குற்றம் சாட்டியிருக்கிறார். இதன் உள்நோக்கம் என்ன? எதையாவது சொல்லி என்னுடைய புகழ் மீது சேற்றை அள்ளிப் பூச வேண்டும் என்பது அவர் நோக்கம். இவரை நாமெல்லாரும் தமிழறிஞர் என்று ஒரு முகமாக ஒத்துக் கொண்டிருக்கிறோம். சமண ராமாயணம் ஒன்று தமிழில் எழுதப்பட்டுள்ளது. அது பல ஆயிரம் வரிகள் கொண்ட பஃறொடை வெண்பாவால் ஆகிய நூல். இதைச் சாமி. சிதம்பரம் அறிந்திருந்தால் அப்படி எழுதியிருக்க மாட்டார்" என்று அஞ்சாமல் எடுத்துரைத்தேன். அப்போது மேடையில் காஞ்சி பொன்னப்பனும் அமர்ந்திருந்தார். இரா.பி.சேதுப்பிள்ளை போன்ற தமிழறிஞர்களும் வந்திருந்தனர். விழாத் தலைமை தாங்கிய ச.சோ. பாரதியார் சாமி. சிதம்பரத்தைப் பார்த்து, 'என்னையா உம்மைக் கவிஞருக்கு

நண்பரென்று நினைத்திருந்தோம். சமயத்தில் காலை வாரி யிருக்கிறீரே!' என்று கேட்டார். சாமி. சிதம்பரம் கூட்டத்தை விட்டு எழுந்து போய்விட்டார்.

மறுநாள் காலை 10 மணியளவில் நான் தங்கியிருந்த இடத்துக்குச் சாமி. சிதம்பரம் வந்தார். 'பஃறொடை வெண்பாவின் இலக்கணம் பற்றிப் பிறகுதான் அறிந்து கொண்டேன்' என்று கூறி என்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்'' என்று இந்நிகழ்ச்சியை முடித்தார் பாவேந்தர்.

"சமண ராமாயணம் என்று தமிழில் ஒரு நூல் இருக்கிறதா?" என்று பாவேந்தரை நான் கேட்டேன்.

''மைசூர்க் கோலாரில் ஒரு பௌத்தர்[1] இருக்கிறார். அவர் சுயமரியாதைக்காரர்; பெரியாரின் நண்பர். அவரிடம் இந்த சமண ராமாயணத்தைப் பார்த்தேன். அந்நூலுக்குத் 'தசரத காவியம்' என்பது பெயர். பல நிகழ்ச்சிகள் மூலக்கதையினின்றும் வேறுபடுகின்றன. இதில் இராமனுக்குப் பத்தாயிரம் மனைவியரும், அனுமனுக்கு ஆயிரம் மனைவியரும் உண்டு. துளசி ராமாயணக் கதை உனக்குத் தெரியுமா? துளசி ராமாயணத்தில் இராமன் காட்டுக்குச் செல்லும் போது பூமிதேவி சீதையைத் தன்னிடத்தில் மறைத்துக் கொண்டு 'டியூப்லிகேட் சீதை'யைக் கொடுத்தாள்' என்று கூறினார்.

3.4.62

இன்று பாவேந்தர் 1957இல் பெங்களூரில் நடைபெற்ற குறள் மாநாட்டு நிகழ்ச்சி பற்றிக் கூறினார். அவர் கூறிய செய்தியைக் கீழே கொடுத்திருக்கிறேன்:

''நான்கு ஆண்டுகளுக்கு முன் பெங்களூரில் நடைபெற்ற குறள் மாநாடு ஒன்றுக்கு நான் தலைமை தாங்கினேன். அந்த மாநாட்டில் உரைவேந்தர் ஔவை சு. துரைசாமிபிள்ளை, டாக்டர் மா. இராசமாணிக்கம், மயிலை மடம் தமிழ்க் கல்லூரித் தலைவர் துரைசாமி ஐயா ஆகிய தமிழறிஞர்களும் கலந்து கொண்டனர். அப்போது அந்த மாநாட்டில் குழப்பம் செய்வதற்கென்றே ஓர் ஆத்திகக் கூட்டம் வந்திருந்தது.

1. அந்தக் கோலார் நண்பர் திரு. அப்பாத்துரை என்று பின்னால் விசாரித்து அறிந்தேன். அவர் புத்த சமயத்தைச் சார்ந்தவர். 'தமிழன்' என்ற பத்திரிகை நடத்தியவர்.

நான் துவக்கவுரையாற்றிக் கொண்டிருந்தேன். அப்போது உடம்பெல்லாம் பட்டை பட்டையாகத் திருநீறு பூசிய ஒரு தடித்த சைவர் எழுந்து நின்று, 'பெரியார் இராமாயணத்தை எரிக்க வேண்டுமென்கிறார். ராதா இராமாயணத்தை இழிவுபடுத்திக் கீமாயணம் நடத்துகிறார். இராமன் கடவுள் அல்லனோ? இவ்வாறெல்லாம் செய்வது முறையா?' என்று தொடர்பில்லாமல் கேள்விகள் கேட்டார். அவர் கேள்வி கேட்ட முறையிலிருந்தே அவர் கலவரம் செய்வதற்காகவே வந்த வீரசைவர் என்பதை நான் புரிந்து கொண்டேன்.

எப்போதுமே கருத்துச் சண்டையென்றாலும் கைச்சண்டை யென்றாலும் விரும்பி வரவேற்கும் பண்புடையவன் நான். வாலை மிதித்தால் வரிப்புலி சும்மா இருக்குமா? எனக்குக் கோபம் கொப்பளித்தது. கேள்வி கேட்ட அந்தச் சைவரைப் பார்த்து, 'நீர் உண்மையான சைவரா?' என்று கேட்டேன்.

'ஆமாம்! அதிலென்ன ஐயம்?' என்றார் அவர்.

'சிவஞான சித்தியார் படித்திருக்கிறீரா? என்று அவரை நான் அடுத்த கேள்வி கேட்டேன்.

'படித்திருக்கிறேன்' என்று மழுப்பலோடு கூறினார் சைவர்.

'அருள் நந்தி சிவாச்சாரியார் ஒரு வைணவனை முன்னிலைப்படுத்திக் கூறிய பாடல் தெரியுமா?' என்று அடுத்த கேள்வி கேட்டேன். நான் நூலுக்குள் இறங்கியவுடனே அச்சைவருக்கு உதறல் எடுக்கத் தொடங்கிவிட்டது.

'மாயை கடவுளுக்குக் கிடையாது. மாயையில் சிக்கி, மாயமான் பின்னால் ஓடி, மனைவியை இழந்து தவித்த இராமன் கடவுள் ஆக மாட்டானென்று சிவஞான சித்தியார் தெளிவாகக் கூறுகிறது' என்று எடுத்து விளக்கிக் கீழ்கண்ட அப்பாடலையும் சொன்னேன்:

மாயமான் தன்னைப் பொய்மான்
  என அறி யாத ரக்கன்
மாயையில் அகப்பட் டுத்தன்
  மனைவியை இழந்தான் தன்னை
மாயைக்குக் கர்த்தா என்பை
  மதிகெட்டாங் கவனைக் கொன்று
நாயனார் தமைப்பூ சித்தான்
  கொலைப்பழி நணுகிடாமே

இப்பாடலை எடுத்துக்கூறி, 'இராமன் கடவுளல்லன் என்பதற்குச் சைவர்கள் எல்லாரும் உயர்வாக மதித்துப் போற்றும் சிவஞான

சித்தியாரில் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் சான்றிருக்கிறது. அருள் நந்தி சிவாச்சாரியார் சுயமரியாதைக்காரரா? சைவ ஆகமங்கள் என்ன கூறுகின்றன என்பதைத் தெரிந்து கொள்ளாமல் உடம்பெல்லாம் பட்டை பட்டையாகத் திருநீற்றைப் பூசிக்கொண்டு வந்தால் போதுமா?' என்று சரமாரியாகப் பேசினேன். கேள்வி கேட்ட சைவர் திணறிப்போய் செய்வதறியாமல் உட்கார்ந்து கொண்டார். நிகழ்ச்சி முடிந்து நான் மேடையை விட்டு இறங்கியதும் அவரும் அவருடன் வந்த வேறு சில சைவர்களும் என்னிடம் வந்து, 'உங்கள் புலமையை அறியாமல் நாங்கள் இந்தக் கேள்வியைக் கேட்டு விட்டோம்; எங்களை மன்னித்துக் கொள்ளுங்கள்' என்று கூறினர்.

5.4.62

இன்று பாவேந்தருடைய திரைப்படத்துறை வாழ்க்கையைப் பற்றிக் கேட்டேன். அவர் சேலம் மாடர்ன் தியேட்டர்ஸில் திரைப்படங்களுக்குக் கதை, வசனம் எழுதிக் கொண்டிருந்தபோது நடந்த ஒரு சில நிகழ்ச்சிகளை நினைவுகூர்ந்து சொன்னார். அந்நிகழ்ச்சிகளை அவர் கூற்றிலேயே கொடுத்திருக்கிறேன்.

"நான் 1947ஆம் ஆண்டு முதல் 1953ஆம் ஆண்டு வரை மாடர்ன் தியேட்டர்ஸில் சில திரைப்படங்களுக்குக் கதை, வசனம் எழுதிக் கொண்டிருந்தேன். சுபத்ரா, சுலோசனா[1] போன்ற புராணப் படங்களுக்கு முதலில் கதை வசனம் எழுத மறுத்தேன். பிறகு இராவணன், இந்திரசித்து போன்ற திராவிட வீரர்களின் வீரத்தைப் புலப்படுத்த வேண்டுமென்பதற்காகவே அவற்றுக்கு எழுத ஒத்துக் கொண்டேன். மாடர்ன் தியேட்டர்ஸ் உரிமையாளர் திரு. டி. ஆர். சுந்தரம் மிகவும் கண்டிப்பானவர்; சிறந்த திறமைசாலி; பணத்திலும் கறாரானவர். எவ்வளவு பெரிய நடிகரும், எழுத்தாளரும், அவர் எதிரில் உட்கார்ந்து பேசி நான் பார்த்ததில்லை. என்னைத் தவிர வேறு எவரையும் அவர் 'அண்ணா' என்று கூப்பிட்டு நான் கேட்டதில்லை. அவரிடம் சவுக்கடிப்பட்ட பிரபல நடிகர்களுண்டு. அவர் எதிரில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நடைமுறை வேலைகள் இயந்திரம் போல் நடந்து கொண்டிருக்கும்.

'டேய்!' என்று அவர் குரல் கொடுத்தால் மரம் செடிகள் கூட

1. சுபத்ரா, சுலோசனா இரண்டிற்கும் பாவேந்தரே கதை, வசனம் எழுதினார். ஆனால் ஜலகண்டாபுரம் ப.கண்ணன் பெயர் போட்டு அவை வெளியிடப்பட்டன.

நடுங்கும். அவர் சேர்வராயன் மலைக் காட்டுராஜா. அவரைப் போல் நிர்வாகத் திறமை மிக்க ஒருவரை நான் பார்த்ததில்லை. சுறுசுறுப்பு, ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகியவற்றின் மொத்த உருவமவர். எவரையும் மதித்துப் பேசமாட்டார். எவரையும், எப்போதும் எதிர்பார்த்து வாழாத வாழ்க்கை அவர் வாழ்க்கை. ஆங்கிலேயனைப் போல் திட்டமிட்டுச் செயலாற்றிய அவரை எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

இத்தகைய ஆற்றலும் செல்வாக்கும் மிக்க டி.ஆர். சுந்தரத்தின் எதிரில் கால் மேல் கால் போட்டு உட்கார்ந்து கொண்டு, விரலிடுக்கில் சிகரெட் புகைந்து கொண்டிருக்கும் கையை நீட்டி 'என்ன சுந்தரம்?' என்று ஒருமையில் பேசும் துணிச்சல் என்னைத் தவிர வேறு எவனுக்கும் இருந்ததில்லை. நான் படத்துக்கு எழுதிக் கொண்டிருந்தபோது, சேலம் சீரங்கபாளையத்தில் இருக்கும் மாடர்ன் தியேட்டர்ஸ் ஒத்திகைக் கூடத்தின் (Rehearsal Hall) மேல் மாடியில் தங்க ஓர் அறையும், என் உணவு மற்றத் தேவைகளைக் கவனித்துக் கொள்ள ஓர் ஆளும் கொடுத்திருந்தார்.

நான் உண்ணும் உணவு முறைகளை அறிந்து, எனக்கு விருப்பமான மீனும், புலால் உணவும் நாள்தோறும் அனுப்பி வைப்பார். என்னுடைய 'எதிர்பாராத முத்தம்' காப்பியத்தைப் படமாக எடுப்பதற்கு வேண்டிய பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருந்தன. எதிர்பாராத முத்தம் கதைக்கும், அதற்கு வசனம் எழுதுவதற்கும் ஆக ரூ.10,001/- என்று நானும் சுந்தரமும் நேரில் பேசி முடித்துக் கொண்டோம். இன்னும் எழுத்து வடிவில் ஒப்பந்தம் எதுவும் ஆகவில்லை. பொதுவாகப் படங்களுக்கு நடிகர்களையும் எழுத்தாளர்களையும் டி.ஆர்.எஸ். தம்மிடமிருந்து ஒரு மேலாளர் (Manager) மூலமாகவே ஒப்பந்தம் செய்வது வழக்கம். அவ்வாறு ஒப்பந்தம் ஆகும் போதெல்லாம் அந்த மேலாளர் நடுக்கொள்ளை அடிப்பது வழக்கம். இது டி.ஆர். சுந்தரத்துக்குத் தெரியாது.

நான் ஓர் அவசர வேலையாகப் புதுவை சென்றிருந்த போது பணம் தேவைப்பட்டது. உடனே டி.ஆர். சுந்தரத்துக்குக் கடிதம் எழுதி ரூ.1000/- முன் பணமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருந்தேன். அவர் பத்து நூறு ரூபாய் நோட்டுக்களைத் தன் மேலாளரிடம் கொடுத்து எனக்கு அனுப்பி விடுமாறு கூறினார். அவர் அவற்றுள் ஒரு நோட்டை எடுத்துக் கொண்டு மீதி ரூ. 900/-த்தையும், எனக்கு அனுப்பி வைத்தார். அதில் ரூ. 100/- எடுத்துக் கொண்டதாக ஒரு குறிப்பும் எழுதி வைத்திருந்தார். நான் அந்தக் குறிப்பைப் பத்திரமாக எடுத்து வைத்துக் கொண்டேன்.

நான் சேலம் வந்ததும் நேராக டி.ஆர். சுந்தரம் பங்களாவிற்குப்

போனேன். ஒப்பந்தம் எழுதிக் கையெழுத்துப் போட்டு விட்டு வெளியே வந்தேன். மற்ற எழுத்தாளர்கள் செய்வதுபோல், நானும் அந்த மேலாளரை உடன் அழைத்துச் செல்லாததால் அவருக்கு என்மேல் எரிச்சல்! நடுக்கொள்ளைக்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டதே என்று கோபம். இந்தச் செய்தியை முன்கூட்டியே சொல்லாமல் இருந்ததற்காக எனக்குப் பணியாளாக இருந்த சிறுவனை அந்த மேலாளர் நையப் புடைத்து விட்டார். அந்தப் பையன் அழுதுகொண்டு நேராக டி.ஆர்.எஸ். பங்களாவுக்கு வந்தான். பங்களா வாசலில் காவல் காத்துக் கொண்டிருந்தவன் அந்த மேலாளரின் கையாள். அவன் அச்சிறுவனை உள்ளே விட மறுத்து விட்டான். நான் வெளியே வந்ததும் அப்பையன் அழுது கொண்டே நடந்ததைச் சொன்னான். என் சினமெல்லாம் அச்சிறுவனை உள்ளேவிட மறுத்த வாயிற்காவலன் மேல் திரும்பியது. என் கோபம் தீரும்வரை அவனை விளாசினேன். அவன் அடிபொறுக்காமல் கூக்குரலிட்டதும் உள்ளே இருந்த டி.ஆர்.எஸ். வெளியில் வந்தார். நான் அடித்து முடிக்கும் வரையில் எதுவும் பேசாமல் அப்படியே நின்று பார்த்துக் கொண்டிருந்தார், ஏன்? என்று என்னை எதுவுமே கேட்கவில்லை.

நான் என் அறைக்குத் திரும்பியதும் டி.ஆர்.எஸ். ஓர் ஆளை அனுப்பி வாயிற்காவலனை அடித்ததற்குக் காரணம் கேட்டிருந்தார். நான் நடந்தவற்றையெல்லாம் விரிவாக அந்தஆளிடம் சொல்லி, முன்பணத்தில் ரூ. 100 எடுத்துக்கொண்டு மேலாளர் முதலில் எழுதி வைத்திருந்த குறிப்பையும் கொடுத்தனுப்பினேன். அடுத்த நாளே அந்த மேலாளர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்.

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான வளையாபதியை மாடர்ன் தியேட்டர்ஸார் படமாக எடுக்க முடிவு செய்தார்கள். நான் அதற்குக் கதை வசனம் எழுதினேன். அப்படத்தை டி.ஆர்.எஸ். டைரக்ட் செய்யவில்லை. டைரக்டர் ரகுநாத் இயக்கினார். டி.ஆர். சுந்தரத்துக்கு உடல் நிலை சரியில்லாமல் இருந்த காரணத்தால் அவர் ஓய்வெடுத்துக் கொள்ள கே.எல்.வி. வசந்தாவோடு ஃபிஜித் தீவு சென்றிருந்தார். டைரக்டர் ரகுநாத் வளையாபதியில் நான் எழுதிய திரைக்கதை வசனத்தின் சில பகுதிகளை என்னைக் கேட்காமல் திருத்தியும், வெட்டியும் எறிந்து விட்டார். இதைக் கேட்டதும் எனக்கு அடக்க முடியாத சினம் மூண்டது.

டி.ஆர்.எஸ். ஃபிஜியிலிருந்து திரும்பிவந்து விட்டார். வளையாபதிக்குப் பின் ஒப்பந்தம் செய்யப்பட்ட படமொன்றுக்குச் சில காட்சிகள் வசனம் எழுதியிருந்தேன். மொத்தம் மாடர்ன்

தியேட்டர்ஸ் நிறுவனத்துக்கு நான்கு படங்கள் கதை வசனம் எழுத ரூ. 40,000/-க்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தேன். அந்த ஒப்பந்தங்களை 'கேன்சல்' செய்யும்படி டி.ஆர்.சுந்தரத்துக்குக் கடிதம் எழுதினேன். அடுத்த படத்துக்காக நான் வசனம் எழுதியிருந்த சில காட்சிகளின் கையெழுத்துப் படியை வாங்கி வரும்படி சொல்லி ஓர் ஆளை டி.ஆர்.எஸ். அனுப்பியிருந்தார். அந்தக் காட்சிகளை எழுதியதற்காக ரூ.3000/- வாங்கி வரும்படி அந்த ஆளிடம் சொல்லி அனுப்பினேன். அவனும் சென்று ரூ.3000/-க்கு ஒரு காசோலை வாங்கிக் கொண்டு வந்தான். அதற்குள் புதுவை செல்லப் பெட்டி படுக்கைகளைக் கட்டி வைத்து விட்டேன்.

பின்னர் ஒரு குதிரை வண்டியில் பெட்டி படுக்கையை ஏற்றினேன். வந்த ஆளோடு நானும் ஏறி, வண்டிக்காரனை சேலம் ஸ்டேட் பேங்கிற்கு ஓட்டச் சொன்னேன். பேங்கில் காசோலையைக் கொடுத்துப் பணமாக்கிக் கொண்டேன். திரைக்கதை வசனம் எழுதியிருந்த கையெழுத்துப்படிகளை அந்த பேங்கின் கூடத்தில் வீசியெறிந்தேன். அவன் ஒவ்வொரு தாளாகப் பொறுக்கி எடுத்துக் கொண்டு சென்றான். அதன்பிறகு நான் மாடர்ன் தியேட்டர்ஸ் வாயிற்படிகளை மிதிக்கவில்லை."

இந்த நிகழ்ச்சியைப் பாவேந்தர் சொல்லி முடித்தபோது என் உள்ளம் மிகவும் சங்கடப்பட்டது. அந்தக் காலத்தில் ரூ. 40,000/- சாதாரணத் தொகையா? இவ்வளவு பெருந்தொகையை உணர்ச்சி வசப்பட்டு அனாவசியமாக உதறியெறிந்து விட்டு வந்த பாவேந்தர் செயலை மானவீரம் என்று சொல்வதா? அல்லது பயித்தியக்காரத்தனம் என்று சொல்வதா? என்னால் முடிவு கட்ட முடியவில்லை. இன்றையத் திரைப்பட எழுத்தாளர்கள் இயக்குநர்களின் விருப்பப்படி எதை வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் கேட்காமலே மாற்றிக் கொள்ள இசைவளிக்கிறார்கள். இவர்களெங்கே! பாவேந்தர் எங்கே?

13.4.62

இன்று பாவேந்தர் கூறிய செய்தி எனக்குச் சற்று வியப்பிற்குரியதாக இருந்தது. ஏனென்று சொன்னால் இன்று கூறப்படும் நிகழ்ச்சியில் சம்பந்தப்பட்டுள்ள கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள் நாடறிந்த பெருங்கவிஞர்; குழந்தையுள்ளம் படைத்தவர். இந்த நூற்றாண்டில் வாழ்ந்த சமகாலப் பெருங்கவிஞர் இருவரின் சந்திப்பு இப்படி முடிந்து விட்டதே என்று படிப்போர்க்கு வருத்தம் எழாமல்

இருக்க முடியாது. அந்நிகழ்ச்சி பற்றிப் பாவேந்தரே கூறுகிறார் கேளுங்கள்:

"பதினைந்து ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சி இது. நாகர்கோயிலில் ஒரு மாநாடு நடைபெற்றது. தமிழ் எழுத்தாளர் மாநாடோ... இலக்கிய மாநாடோ... எனக்குச் சரியாக நினைவில்லை. அம்மாநாட்டுத் தலைவர் டி.கே.சி. அதில் சீனிவாசராகவன் கலையைப் பற்றிப் பேசினார். மாநாடு கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனுடைய திரைப்படக் கொட்டகையில் நடைபெற்றது. நான் என்.எஸ்.கே. வீட்டில் தங்கியிருந்தேன். அம்மாநாட்டில் காலை நிகழ்ச்சியாக எனது பேச்சு இருந்தது. தேசிக விநாயகம்பிள்ளை வரவேற்புரை நிகழ்த்தினார். மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்த இலக்கிய அறிஞர்களை வரவேற்றுப் பேசிய அவர் என்னைப் பற்றிக் குறிப்பிடும்போது, புதுவைக் குயில் வந்திருக்கிறது. அது இங்கு அளவோடு கூவ வேண்டும். அதிகமாகக் கூவினால் கூண்டில் பிடித்து அடைத்து விடுவார்கள்' என்று கூறினார். நான் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்தேன்.

நான் பேசத் தொடங்குவதற்கு முன்பு தலைவர் எனக்கு ஐந்து நிமிடங்கள் ஒதுக்கியிருப்பதாகச் சொன்னார். நான் என்னுடைய தலைப்பைப் பற்றிப் பேசுவதற்கு முன்பு 'நான் புதுவையிலிருந்து வந்திருக்கிறேன். என் பேச்சுக்கு ஐந்து நிமிடமாம்; அதுவும் நான் ஜாக்கிரதையாகப் பேச வேண்டுமாம்; இல்லாவிட்டால் என்னைக் கூண்டில் அடைத்து விடுவார்களாம்' என்று தொடங்கினேன். ஐந்து நிமிடம் ஆனதும் தேவி என்னை உட்காரும்படி கையமர்த்திக் காட்டினார். உடனே நான் கோபத்தோடு மேடையை விட்டு இறங்கி என்.எஸ்.கே. வீட்டுக்குச் சென்று விட்டேன். அங்கு திரளாகக் கூடியிருந்த மக்கள் நான் இறங்கிச் செல்லும்போது கூச்சலிட்டுத் தடுத்தனர். ஒரு பெருங்கூட்டம் எழுந்து என்னைத் தொடர்ந்து என்.எஸ்.கே. வீட்டுக்கு வந்து விட்டது. பகலில் மாநாட்டு நிகழ்ச்சிகள் எல்லாம் முடிவுற்றன. இரவு என்.எஸ்.கே.யின் கலை நிகழ்ச்சி நிகழவிருந்தது.

திரளாகக் கூடியிருந்த மக்களைப் பார்த்துக் கலைவாணர், 'தோழர்களே! இந்நிகழ்ச்சிக்கு நான் தலைவன்; கவிஞர் பாரதிதாசன் சொற்பொழிவாளர். கவிஞர் பேசியது போக நேரம் மிச்சமிருந்தால் என்னுடைய கலை நிகழ்ச்சி நடைபெறும்' என்று கூறிவிட்டு அமர்ந்து கொண்டார். மக்கள் எனக்கு வேண்டிய அளவு சிறப்புச் செய்தனர். மேசை நிறைய மாலைகள் குவிந்தன.

நான் மேடையில் என் ஆத்திரம் தீரும் வரையில் பேசினேன். 'என்னைக் கூண்டில் அடைக்க எவனும் பிறக்கவில்லை. மட்ட கரமான எண்ணங்களையெல்லாம் மாற்றிக்கொள். நீ படித்திருக்கும் அளவு உன்னிடத்தில் பண்பில்லை. உள்ளூர் என்ற தைரியமா?' என்று பேசினேன். பிறகு ஒரு மணி நேரம் என் தலைப்பையொட்டிப் பேசினேன். மக்கள் அமைதியாகக் கேட்டனர். அதன்பிறகு என்.எஸ்.கே.யின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

23.4.62

பாவேந்தர் எப்போதும் உணர்ச்சிவயப்படக்கூடியவர். உணர்ச்சி வயப்படாதவன் கவிஞனாக இருக்க முடியாதே! இதனால் பாவேந்தரோடு பழகுபவர்கள் மிகவும் எச்சரிக்கையோடு அவரிடம் பழக வேண்டியிருந்தது. நன்றாகப் பழகிக் கொண்டிருப்பார். யாராவது நம்மைப் பற்றித் தவறான முறையில் கோள் சொன்னால் ஆராயாமல் அப்படியே நம்பிவிடுவார். அடுத்தமுறை அவரைப் பார்க்கச் சென்றால் 'போ வெளியே! பல்லை உடைச்சிடுவேன்' என்று கூச்சலிடுவார். இது அவர் இயல்பு.

எளிதில் யாரையும் நம்பும் அவரை யார் என்ன சொன்னாலும் செலவைப் பற்றிப் பொருட்படுத்தாமல் உடனே கையிலிருக்கும் காசைச் செலவு செய்யத் தொடங்கி விடுவார். யார் தடுத்தாலும் கேட்கமாட்டார். இது நமக்குத் தேவையா? தேவையில்லையா? என்பதைப் பற்றி சிந்திக்க மாட்டார்.

பாவேந்தர் தம்முடைய வீட்டில் எப்போதும் நல்ல இனத்தைச் சேர்ந்த கோழிகள், புறாக்கள் வளர்ப்பது வழக்கம். 'வீடு என்று இருந்தால் ஒரு பசுமாடு, கோழிகள், புறாக்கள் எல்லாம் இருக்க வேண்டும்' என்று கூறுவார். புதுச்சேரி வீட்டில்கூட 'காமலாபுரம்' குட்டைப்பசு ஒன்று எப்போதும் இருக்கும்; புறாக்கள் இருக்கும். சென்னை இராமன் தெரு வீட்டிலும் பாவேந்தர் கோழிகள் வளர்த்து வந்தார்.

ஒருநாள் பாவேந்தரைப் பார்ப்பதற்காக ஒரு விலங்கு மருத்துவர் (B.V.Sc.) வந்திருந்தார். அவர் கோழிகளைப் பார்த்துவிட்டு "கோழிகளையெல்லாம் இப்படி வளர்க்கக்கூடாது. அவைகளுக்கு நோய் வந்துவிடும். அவைகள் உட்காருவதற்கும், இரையுண்ணு வதற்கும் கோழிப் பண்ணைகளில் இரும்பில் செய்த சாமான்கள் இருக்கின்றன" என்று பேச்சுவாக்கில் சொன்னார். அடுத்த நாள் வெளியில் சென்ற பாவேந்தர் கோழிப் பண்ணையிலிருந்து அந்தப்

பொருள்களையெல்லாம் வாங்கிக் கொண்டு வந்துவிட்டார். அவற்றின் விலை ரூ.50/-க்கு மேல் இருக்கும். அப்போது பாவேந்தருக்கு இருந்த பணத்தொல்லையில் அவர் ரூ.50/- செலவிட வேண்டியதில்லை. அவர் வீட்டிலிருந்த கோழிகளும் பேசாமல் நிலத்திலேயே இரையெடுத்துக் கொண்டு உடல் நலத்தோடு நன்றாகத் தான் இருந்தன. பாவேந்தரை யார் தடுக்க முடியும்?

பாவேந்தருக்குப் புறாக்களையும் கோழிகளையும் வளர்ப்பதில் அளவு கடந்த விருப்பம். இவை கூடி இரையுண்ணும் அழகை விருப்பத்தோடுப் பார்த்துக் கொண்டிருப்பார். இந்த விருப்பத்தின் விளைவுதான் அவர் நமக்குப் படைத்துக் கொடுத்த 'புறாக்கள் கோழிகள்' பற்றிய அழகான பாடல்கள்.

24.4.62

இன்று பாவேந்தர் இல்லத்தில் பல அறிஞர்களைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் காலஞ் சென்ற தமிழ்மறவர் பொன்னம்பலனார், புதுவை பா. முத்து, அறிவழகன் ஆகியோர். பாவேந்தரின் புதுவை மாணவர்களுள் கவிஞர்கள் வாணிதாசன், சிவப்பிரகாசம் எம்.பி., பா. முத்து ஆகிய மூவரும் முக்கியமானவர்கள். இந்த பா. முத்து புதுவைத் துறைமுகத்தில் ஏதோ ஓர் அலுவலகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார். அவர் அடிக்கடி சென்னை வந்து பாவேந்தரைப் பார்த்துச் செல்வது வழக்கம். வரும்போதெல்லாம் வெளிநாட்டில் இருந்து இறக்குமதியாகும் ஹார்லிக்ஸ், ஓவல், சிகரெட் ஆகியவற்றைக் கொண்டுவந்து கொடுப்பார். இன்றும் கொண்டு வந்திருந்தார். பாவேந்தர் இவரிடத்தில் மிகுந்த அன்போடு பழகுவார். பாவேந்தரின் 'அழகின் சிரிப்பைப் பின்பற்றி இயற்கை இன்பம்' என்ற பெயரில் இவர் ஒரு நூல் எழுதியிருக்கிறார். பாவேந்தரைப் பார்க்க வந்திருந்தபோது இவருக்கு வயது நாற்பது இருக்கும். இப்போது இவர் உயிருடன் இல்லை.

சுயமரியாதை இயக்கத்தில் பொன்னம்பலனார் இருவர். ஒருவர் பூவாளூர் அ. பொன்னம்பலனார்; மற்றொருவர் தமிழ் மறவர் பொன்னம்பலனார். இன்று பாவேந்தரைப் பார்க்க வந்திருந்தவர் தமிழ் மறவர் பொன்னம்பலனார். வேலூர் கண்டர் உயர்நிலைப் பள்ளியிலும், சேலம் நகரவைப் பள்ளியிலும் நீண்டநாள் தமிழாசிரியராகப் பணியாற்றியவர். இறுதி நாட்களில் திருச்சி

மாவட்டத்தில் முசிறி, பொன்பரப்பி ஆகிய ஊர்களில் பணியாற்றினார். இவர் நூற்றுக்கு நூறு பெரியாரின் கொள்கைகளைக் கடைப்பிடிப்பவர். இவர் எந்தக் காரணத்துக்காகவும், எவருக்காகவும் — ஏன், அரசாங்கத்துக்குக்கூட—தம் கொள்கைகளை விட்டுக் கொடுக்காதவர். இதனால் வாழ்க்கையில் இவருக்கு எதிர்ப்புகளும் தொல்லைகளும் அதிகம். ஆனால் இவர் எந்த எதிர்ப்பையும் சமாளித்து, வெற்றியே கண்டவர். யாரும் எளிதில் உடைக்க முடியாத நெற்றுக் கொட்டை. கவிஞர் பொன்னடியான்[1] தமிழ் மறவர் பொன்னம்பலனாரின் தயாரிப்பு. முசிறியில் நடந்த மாணவர் கிளர்ச்சியில் பொன்னம்பலனாருக்கு ஆதரவாக இருந்து, கிளர்ச்சியை முன்னிருந்து நடத்தியவர் பொன்னடியான். இதனால் பள்ளிப்படிப்புப் பாதிக்கப்பட்டு இருந்தபோது, பொன்னடியானைப் பாவேந்தரிடத்தில் கொண்டு வந்து ஒப்படைத்தவர் பொன்னம்பலனாரே.

பொன்னம்பலனார் தம் அடைமொழிக்கேற்பத் தோற்றத்தில் தமிழ் மறவராகவே காட்சியளிப்பார். எப்போதும் கருப்புச் சட்டைதான் போடுவார்; பள்ளிக்கும் கருப்புச் சட்டையோடு தான் வருவார். பெரியார் 'எப்போதும் கத்தி வைத்துக் கொள்ளுங்கள்' என்று அறிக்கைவிட்டபிறகு, எப்போதும் தமது கருப்புக் கோட்டுப் பையில் 'பிச்சுவா' ஒன்றை வைத்துக் கொண்டிருப்பார். அளவு கடந்த தனித் தமிழ்ப்பற்று உடையவர். மறந்தும் பிறமொழிச் சொற்களைத் தம் பேச்சில் கலக்க மாட்டார். தனித்தமிழிலேயே பேச வேண்டும் என்பதில் பாவாணரைப்போல் இவரும் கண்டிப்பானவர். சேலத்தில் இருந்தபோது உணவு விடுதிகளுக்குச் சென்றால் சுவைமுறுக்கு (ஜிலேபி), சுவைக்கட்டி (மைசூர்பாகு) சுவைக்களி (அல்வா) காரக்கலவை (மிக்சர்) என்றுதான் கேட்பார். 'ஓ என் சகோதரரே' என்று தொடங்கும் பாவேந்தரின் 'சஞ்சீவிபர்வதத்தின் சாரல்' வரிகளைத் தோ்வுத் தாளில் கொடுத்துக் கேள்வி கேட்டதற்காக அரசாங்கம் இவர் மீது நடவடிக்கை எடுத்தது. சேலம் நகராட்சிப் பள்ளியில் இவர் பணியாற்றியபோது இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழ் மறவர் பொன்னம்பலனாரின் தொடர்பு பாவேந்தரின் இலக்கியப் போக்கில் பெரிய பாதிப்பை உண்டாக்கி, அவருடைய பாடல்களை அடியோடு மாற்றி விட்டது. பாவேந்தரே இதை என்னிடம் குறிப்பிட்டார். பாவேந்தரும் தமிழ்மறவரும்

1. பொன்னடியான் என்ற பெயர் 'பொன்னம்பலனாருக்கு அடியவன்' என்பதைக் குறிப்பிட வைத்துக் கொண்டதாகும். பொன்னம்பலனாரின் இயற்பெயர் கனகசபை.

முதன்முறையாக ஒரு திருமணத்தில் சந்தித்தனர். மறவர் பாவேந்தரைப் பார்த்து,

'கனியிடை ஏறிய சுளையும்-முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும்-காய்ச்சுப்
பாகிடை ஏறிய ருசியும்'-

என்ற வரிகளை எடுத்துச் சொல்லி, "இதில் ருசி என்ற வடசொல் எதற்கு? ருசிக்குத் தமிழில் 'சுவை என்ற அழகான சொல்லிருக்கிறதே. 'பாகிடை ஏறிய சுவையும்' என்றிருந்தால் நன்றாக இருக்குமே" என்று கூறினாராம். பாவேந்தர் அதற்கு ஒப்பியதோடு அடுத்த பதிப்பில் மாற்றியும் விட்டார். பொன்னம்பலனார் தொடர்பால் ஏற்பட்ட தனித் தமிழ்ப்பற்றுதான் 'தமிழியக்கம்' என்ற அருமையான நூல் தோன்றக் காரணம். பொன்னம்பலனார் தொடர்புக்குப் பின் எழுதப்பட்ட எல்லா நூல்களுமே பிறமொழிக் கலப்பின்றி எழுதப்பட்டன. பாவேந்தர் நூல்களில் பயிற்சியுடைய எல்லார்க்கும் இவ்வுண்மை தெரியும். 'சித்ரநிகர் பெண்டிர்களைச் சீரழிக்கும் பாரத நற்புத்ரர்களைப் பற்றியன்றோ பூலோகம் தூற்றுவது!' போன்ற மணிப்பிரவாள நடை, பாவேந்தரிடமிருந்து அடியோடு விடைபெற்றுச் சென்றுவிட்டது.

பொன்னம்பலனார் தம் மகளுக்குக் கல்லூரியில் எம்.எஸ்.சி. படிப்புக்கு இடம் வாங்குவதற்காக வந்திருந்தார். வந்தவர் பாவேந்தர் வீட்டில் வந்து தங்கினார். அன்று இரண்டு தமிழேறுகளும் முக்காரமிட்டுக் கொண்டிருந்தன. அன்று சில சொல்லாராய்ச்சிகளும் நடந்தன. 'முவ்வுரம்' என்பது மும்மரம்' ஆயிற்றென்றும், மனம் வாக்கு காயம் ஆகிய மூன்றுமே முவ்வுரங்கள் என்றும் பாவேந்தர் கூறினார்; பஞ்ச பூதங்களையும் முகப்பது 'முகம்' என்றும், கதுவுவது 'கதவு' என்றும் பொன்னம்பலனார் சொன்னார்.

அன்று பேராசிரியர் நமச்சிவாய முதலியாரைப் பற்றி இருவரும் வியந்து பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் பேச்சிலிருந்து பேராசிரியர் நமச்சிவாய முதலியார் பற்றிச் சில அரிய செய்திகளை அறிந்து கொண்டேன். முதன் முதலாகப் 'பொங்கல் விழாவே தமிழரின் தனிப்பெரும் பண்டிகை என்பதைப் பேசியும், எழுதியும் கொண்டாடியும் அறிமுகப்படுத்தியவர் நமச்சிவாயரே. இவர் வாழ்ந்த நாளில் ஆண்டுதோறும் தம் வளமனையான கடலகத்தில்[1]

1. கடலகம் நமச்சிவாயர் வீடு; வங்கக் கடலைப் பார்த்துக் கட்டியது. தற்போது இவ்வீடு அவர் குடும்பத்தாரிடம் இல்லை. இதில் உணவு விடுதி இப்போது உள்ளது. இது கடற்கரையில் சென்னை வானொலி நிலையத்திற்கு அருகில் உள்ளது.

பொங்கல் விழாக் கொண்டாடுவாராம். அவ்விழாவுக்கு வரு வோர்க்கு ஒவ்வொரு ஆப்பிள்பழம் கையுறையாக வழங்குவாராம். முதன்முதலாக உதகமண்டலத்தில் 'வளமனை' வாங்கிய தமிழறிஞர் இவரே. அந்த நாளில் உந்து வண்டியொன்று சொந்தமாகக் கொண்டிருந்த தமிழாசிரியர் இவர். தமிழாசிரியர்கள் சம்பளத்தை அரசாங்கத்துக்குப் பரிந்துரை செய்து ரூ.45/-லிருந்து ரூ.75/-ஆக உயர்த்தியவரும் இவரே. ஆவணக்களரி அச்சகம் முதலிய இடங்களில் தமிழாசிரியர்கள் அமர்த்தப்பட வேண்டும் என்று கூறுவாராம். 'ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த மக்கள் பொறியியல், மருத்துவம் போன்ற கல்விகளைக் கற்க அரசாங்கம் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். செல்வர் வீட்டுப் பிள்ளைகள் சட்டம் படித்து விட்டுத் தமிழுக்குத் தொண்டு செய்ய வேண்டும்' என்று அடிக்கடி சொல்வாராம். நமச்சிவாயர் தமிழர் என்றும் நினைவுகூரத்தக்க தமிழறிஞர். பொங்கல் விழாவைத் தோற்றுவித்து விளம்பரப்படுத்திய அவரை நாம் பொங்கல் நாளில் கூட நினைப்பதில்லை.

இன்று எனக்குக் கல்லூரி விடுமுறை ஆகையால் பகல் முழுதும் பாவேந்தரோடு கழித்தேன். அன்று மாலை பொன்னம்பலனாரோடு நானும் பொன்னடியும் வெளியில் கிளம்பினோம். ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் பயிற்சியாளராக (House surgeon) இருந்த செல்வி. ஞானம் என்ற பெண்ணைப் பார்ப்பதற்காகச் சென்றோம். அந்தப் பெண் பொன்னம்பலனாரின் நெருங்கிய நண்பரின் மகள்.

செல்லும் வழியில் பொன்னம்பலனார் எங்களை நோக்கி" புரட்சிப் பாவேந்தரை[1] நீங்கள் கண்ணுங் கருத்துமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். அவர் இந்நாட்டின் சொத்து. தனியாக அவரை உந்து வண்டிகளில் ஏறிச்செல்லும்படி அனுப்பாதீர்கள். அவருடன் யாராவது துணையாகச் செல்ல வேண்டும். அவர் குழந்தையைப் போன்றவர்" என்றெல்லாம் கூறிக் கொண்டு வந்தார்.

30.4.62

இன்று பாவேந்தர் இல்லத்தில் தமிழ்க் கவிஞர் பெருமன்றத்தின் செயற்குழுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கவிஞர் வேழவேந்தன், தமிழகன் ஆகியோர் வருகை தந்திருந்தனர்.

1. பொன்னம்பலனார் பாரதிதாசனாரை எப்போதும் புரட்சிப் பாவேந்தர் என்றே குறிப்பிடுவார். கவிஞர் என்ற சொல்லைப் பயன்படுத்த மாட்டார். கவிஞர் வடசொல் என்பது அவர் கருத்து.

இச்செயற்குழுக் கூட்டம் தமிழ்க் கவிஞர் பெருமன்றச் சார்பில் சித்திரை முதல் நாள் 'குயில்' கவிதை இதழை வெளியிட முடிவு செய்தது.

கூட்டத்துக்கு வந்திருந்த கவிஞர்கள் சென்ற பிறகு நானும் பாவேந்தரும் உணவருந்திவிட்டுப் பேசிக் கொண்டிருந்தோம். எங்கள் பேச்சு, கவிஞர்களின் சில விநோதமான நடவடிக்கைகளின் பால் திரும்பியது. பாரதி கடையம் அக்ரகாரத்தில் கழுதைக் குட்டியை அணைத்து முத்தமிட்டது பற்றியும், இரவு நேரங்களில் கடற்கரையில் படுத்துக்கொண்டு வானத்தை விடியும் வரையில் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தது பற்றியும் பாவேந்தர் கூறினார். ஆங்கில நாட்டுப் புரட்சிக் கவிஞனான ஷெல்லி[1]யைப் பற்றி நான் ஒரு செய்தி சொன்னேன். நீராடிக் கொண்டிருந்த ஷெல்லி திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டு அருகிலிருந்த தன் இல்லத்துக்கு அப்படியே பிறந்தமேனியாகத் திரும்பி வந்தான். வரவேற்பு அறையில் ஷெல்லியின் மனைவி மேரி தன் நண்பர் களோடு உரையாடிக் கொண்டிருந்தாள். அவர்களைச் சட்டை செய்யாமல் இவன் தன் அறையை நோக்கிச் சென்று கொண்டிருந் தான். மனைவி 'என்ன இது?' என்று கூச்சலிட்ட பிறகுதான் தன் நிலையை ஷெல்லி அறிந்தான். இதை நான் கூறியதும் தம்முடைய வாழ்க்கையிலும் இவை போன்ற நிகழ்ச்சிகள் உண்டு என்று பாவேந்தர் சிலவற்றைக் குறிப்பிட்டார்.

"பாண்டிச்சேரி சட்டசபையின் மாடிப்படி வழியில் அழகான ஓர் ஓவியம் வைக்கப்பட்டுள்ளது. அது ஒரு பிரெஞ்சு ஓவியரால் தீட்டப்பட்டது. 'மனச்சாட்சியின் தீர்ப்பு' என்பது அப்படத்தின் பெயர். ஒருவன் கொலை செய்துவிட்டுக் குருதிக் கறைபடிந்த கத்தியோடு போகிறான். இடது கையில் மெழுகுவர்த்தியைத் தாங்கிய ஒரு பெண் தேவதை குற்றவாளியைத் தண்டிப்பதற்காக வலது கையில் ஒரு வாளை ஓங்கிய வண்ணம் இருக்கிறது. இந்தப் படத்தை நான் எத்தனையோ முறை பார்த்துச் சுவைத்திருக்கிறேன். என்றாலும் ஒவ்வொரு முறையும் படியேறும் போதெல்லாம் அப்படியே படத்தின் எதிரில் நின்று விடுவேன். பின்னால் வருபவர்கள் எனக்கு உணர்த்தினால்தான் அவ்விடத்தை விட்டு நகருவேன். பார்ப்பவர் உள்ளத்தைத் தன்பால் ஈர்க்கும் ஆற்றல் அப்படத்துக்கு உண்டு.

---

1. ஷெல்லியைப் பற்றிய இந்தச் செய்தி சிறந்த பிரெஞ்சு எழுத்தாளனான ஆண்ட்ரூ மொராய் ஷெல்லியைப் பற்றி எழுதியுள்ள 'ஏரியல். என்ற வாழ்க்கை வரலாற்று நூலிலும் கூறப்பட்டுள்ளது.

ஒருமுறை நான் தஞ்சைக்குப் புகைவண்டியில் பயணம் செய்து கொண்டிருந்தேன். வண்டி மாயவரம் சந்திப்பை அடைந்தது. மாயவரம் சந்திப்பில் வண்டி அரைமணி நேரத்துக்கு மேல் நிற்பது வழக்கம். எனவே சந்திப்புக்கு வெளியே உள்ள ஒரு நல்ல விடுதியில் உணவு சாப்பிட்டு விட்டு வரலாம் என்று கிளம்பினேன். நான் உணவு சாப்பிட்டுவிட்டுப் புகைவண்டிச் சந்திப்புக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தபோது இரவு மணி 9 இருக்கும். அப்போது மாரியம்மன் திருவிழா என்று எண்ணுகிறேன். அம்மனைப் பூப்பல்லக்கில் ஏற்றி ஊர்வலமாகக் கொண்டு வந்தனர். பூவின் அலங்காரமும், மணமும் என்னை மெய்மறக்கச் செய்து விட்டன. போதாதற்கு நாதஸ்வர இசை வேறு. கைப்பையைச் சுமந்த வண்ணம் விடிய விடிய அப்பல்லக்கின் பின்னாலேயே சுற்றிக் கொண்டிருந்தேன். பிறகு விடியற்காலம் 5 மணிக்கு வேறு வண்டி பிடித்து ஏறித் தஞ்சை சென்றேன். நான் அப்போது காரைக்காலில் ஆசிரியராகப் பணிபுரிந்து கொண் டிருந்தேன். மாயவரத்தில் கிட்டப்பா என்ற பூக்கடைக்காரர் எனது நண்பர். அவர் சந்தனமும் விற்பார். நான் மாயவரம் போகும் போதெல்லாம் அக்கடையில் அமர்ந்து பொழுதைக் கழிப்பேன்.

ஒருமுறை தேனாம்பேட்டைப் பொருட்காட்சியைக் காண்பதற் காக என் நண்பர்களோடு சென்றிருந்தேன். அந்நண்பர்களுள் சக்தி கிருஷ்ணசாமியும் ஒருவர். பொருட்காட்சியில் ஒரு சிற்பக் கடை இருந்தது. எல்லோராச் சிற்பங்களின் மாதிரிகள் அங்கு விலைக்கு வைக்கப்பட்டிருந்தன. அவற்றுள், கண்ணாடியைப் பார்த்து ஒரு பெண் நெற்றியில் பொட்டு வைத்துக் கொள்வது போல் ஒரு சிற்பம் இருந்தது. அச்சிற்பத்தின் கலையழகு என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. அதையே பார்த்துக் கொண்டிருந்தேன். எவ்வளவு நேரம் நான் அப்படியே நின்று கொண்டிருந்தேனோ தெரியாது. என்னோடு வந்த நண்பர்கள் கடைகளையெல்லாம் ஒருமுறை சுற்றிப் பார்த்து விட்டு மீண்டும் அதே இடத்துக்கு வந்தனர். நான் அந்தச் சிற்பக் கடையிலேயே நிற்பதைப் பார்த்துவிட்டு என்னைக் கூட்டிச் சென்றனர்.

'இரத்தக் கண்ணீர்' 'பராசக்தி' முதலிய சர்ச்சைக்குரிய படங்களை எடுத்த நேஷனல் பிக்சர்ஸ் உரிமையாளரான திரு.பெருமாள் வீட்டில் நான் அப்போது தங்கியிருந்தேன். வீடு திரும்பிய பிறகும், அச்சிற்பத்தின் கலையழகைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தேன். அதைக் கவனித்த பெருமாள் செட்டியார் ஓர் ஆளைத் தேனாம்பேட்டைப் பொருட்காட்சிக்கு அனுப்பி அச்சிலையை விலை கேட்டு வரச்சொன்னார். ஆனால் அச்சிலையைக் கடைக்காரன் விலைக்குக் கொடுக்க மறுத்துவிட்டான்."

பாரதியாரும் பாவேந்தரும்

பார்த்தவர்களை மலைக்க வைக்கும்படியான தோற்றம் பாவேந்தர் தோற்றம். அவர் குனிந்திருந்ததை யாரும் பார்த்திருக்க முடியாது. நின்றாலும் உட்கார்ந்திருந்தாலும் அவருடைய நெஞ்சும் தலையும் நிமிர்ந்தே இருக்கும். ஆனால் பாரதியைப் பற்றிப் பேசும்போது மட்டும் அவர் தோற்றத்தில் ஓர் ஒடுக்கமும், பேச்சில் ஓர் அடக்கமும் தோன்றியதை நான் கவனித்திருக்கிறேன்.

ஒருநாள் பாவேந்தரோடு நான் பேசிக்கொண்டிருந்த போது "பாரதியாருக்கும் உங்களுக்கும் இருந்த தொடர்பு பற்றிக் கூறுங்கள்" என்று கேட்டேன். உடனே பாவேந்தர், "பாரதியார் பற்றி நானே ஒரு நூல் எழுதிக் கொண்டிருக்கிறேன். எனவே பாரதியார் பற்றி என்னிடம் எதுவும் கேட்காதே. என்னைப் பற்றி மட்டும் கேள்." என்று கூறினார். அதற்குப் பிறகு பாரதியார் பற்றி அவரிடம் நான் எதுவும் கேட்கவில்லை. என்னோடும் மற்றவர்களோடும் பேசிக் கொண்டிருந்த நேரத்தில் அவரே தற்செயலாகக் கூறிய சில செய்திகளை மட்டும் அவர் கூறியதுபோலவே கீழே தொகுத்து கொடுத்திருக்கிறேன்.

"பாரதியார் கி.பி.1908இல் புதுச்சேரி வந்தார். அவர் புதுச்சேரி வந்து ஓரிரண்டு ஆண்டுகள் கழித்துத்தான் அவருக்கும் எனக்கும் பழக்கம் ஏற்பட்டது. பாரதியாரோடு பழக்கம் ஏற்பட்ட நேரத்தில் நான் இருபது வயதுக்காளை. சரியாகச் சொன்னால் முரட்டுக்காளை. நான் அரசியல் கழகம், சண்டைக் கழகம் (மற்களம்), புலவர் கழகம் ஆகிய எல்லாவிடத்திலும் இருப்பேன். என் தோற்றமே பார்ப்பதற்கு முரட்டுத்தனமாகத்தான் தெரியும். கையில் தங்கக் காப்பும் கழுத்தில் கருப்புக் கயிறும், மேனி தெரியும் மல் ஜிப்பாவுமாக எப்போதும் 'வஸ்தாது' போல் திரிந்து கொண்டிருப்பேன். என் நடையுடை பாவனைகளில் ஒரு பண்பட்ட நிலை அப்போது ஏற்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். மற்களத்தில் முறையாகப் பயிற்சி

செய்யத் தொடங்கியிருந்ததால், உடற்கட்டும் நன்றாக இருந்தது.

பாரதியாரின் தோற்றமும், வெளிப்படையான போக்கும் என்னை அவர்பால் இழுக்கத் தொடங்கின. அவர் தொடர்பு என் பழக்க வழக்கங்களிலும், சிந்தனையிலும் என்னை அறியாமலே சில மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. அதைக் காலப் போக்கில் நானும் உணரத் தொடங்கினேன். பழமைப் போக்கிலும், செக்கு சுற்றும் கவிதைப் பாணியிலும் ஊறிப் போயிருந்த எனக்கு பாரதியாரின் அஞ்சாமையும், எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும் காலத்துக்கு ஒவ்வாததை அலட்சியமாக உதறும் துணிச்சலும், பிறர் என்ன நினைப்பார்கள் என்பதைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் தான் நினைத்ததைச் செய்யும் உள்ள உறுதியும் மிகவும் பிடித்தன. உண்மையிலேயே பாரதியாரின் இப்பண்புகள் அப்போது இளைஞனான என்னை மிகவும் வசீகரித்தன. பள்ளி நேரம் போக ஓய்வு நேரங்களில் பாரதியாரோடு இருப்பேன். அரவிந்தர், வ.வெ.சு. அய்யர், பாரதி ஆகியோர் ஓயாமல் பேசிக் கொண்டிருப்பர். அவர்கள் பேச்சில் அடிபடாத செய்தி எதுவுமில்லை. நான் அருகில் அமர்ந்து அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கேட்டு எவ்வளவோ தெரிந்து கொண்டேன். பாரதியார் எதைப் பேசினாலும் ஒரு கவிஞனுக்குரிய மிடுக்கோடு தான் பேசுவார்.

இப்புரட்சிக்காரர்களின் பேச்சைக்கேட்டு இளைஞனான என் உள்ளத்திலும் அப்போது தேசீய உணர்வும், புரட்சிக் கருத்துக்களும் வேர்விடத் தொடங்கின. அந்தச் சமயத்தில் ஒரு வங்காள இளைஞனும் எங்களுடன் இருந்தான். அவன் அரவிந்தரின் தீவிரச் செயல்களால் ஈர்க்கப்பட்டுப் புதுச்சேரி வந்து தங்கியவன். அப்போது வங்காள ஆளுநராக இருந்த ஒரு வெள்ளையரைச் சுட்டுக் கொல்வதற்காக ஒரு துப்பாக்கியை அந்த இளைஞனுக்குக் கொடுத்து உதவினேன். நான் இளமைத் துடிப்பில் அப்போது செய்த பல துணிச்சலான செயல்களைக் குடும்ப விளக்கின் 'விருந்தோம்பல்' பகுதியில் ஒரு முதியவர் கூறுவதுபோல் வெளிப்படுத்தியிருக்கிறேன். என் இளமைத் துடிப்பையும், துணிச்சலையும் ஒருமுகப்படுத்திக் கவிதைத் துறையில் திருப்பிவிட்டவர் பாரதியார்தான்.

ஒருநாள் என் வயதுக்கேற்ற நண்பர் சிலருடன் அரவிந்தர் தங்கியிருந்த மாடி வீட்டின் கைப்பிடி சுவரின் மீது அமர்ந்து புகை பிடித்துக் கொண்டிருந்தேன். அப்போது பாரதியாரும், அரவிந்தரும் வேறு சில நண்பர்களுடன் வந்து கொண்டிருந்தனர். அவர்கள் வந்தது எனக்குத் தெரியாது. என்னையும் என்னோடு புகைபிடித்துக் கொண்டிருந்த என் சகாக்களையும் பார்த்த அரவிந்தருக்கு ஒருமாதிரியாக இருந்திருக்கும்போல் இருக்கிறது. என்னைப்

பாரதியாருக்குக் காட்டி, "யாரது? சுப்புரத்தனமா?" என்று கேட்டாராம். அதற்குப் பாரதியார், "ஆமாம். சுப்புரத்தனந்தான். எல்லா செட்டிலேயும் இருப்பான்; ஆனால் பெரியபுலவன்" என்று விட்டுக் கொடுக்காமல் கூறினாராம். அதைக் கேட்ட பிறகு பாரதியாரின் மீது அளவுகடந்த மதிப்பு எனக்கு ஏற்பட்டு விட்டது.

பாரதியார் பழைய கட்டுத் திட்டங்களையெல்லாம் உதறிவிட்டுப் பாமர மக்களுக்கும் புரியும்படி மிக எளிய முறையில் கவிதை எழுதியது புதுவையில் இருந்த பழம் புலவர்களுக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் யாரும் பாரதியை மதிப்பது கிடையாது. பாரதியாரும் அவர்களைச் சட்டை செய்ய மாட்டார். எனக்குத் தமிழ் பயிற்றிய ஆசிரியர்களுள் ஒருவரான பங்காரு பத்தருக்குப் பாரதியாரைக் கட்டோடு பிடிக்காது. ஏன்? அவரைப் பாரதியாரின் எதிரி என்றே சொல்லலாம். எப்போது பார்த்தாலும் வருவோர் போவோரிடமெல்லாம் பாரதியாரின் பாட்டை எடுத்து வைத்துக் குறைசொல்லிக் கொண்டிருப்பார்; எதிர்பிரசாரம் செய்து கொண்டிருப்பார். "இவனெல்லாம் இங்கிலீஸ் படிச்சுப் புட்டுத் தமிழ்ப்பாட்டு எழுதறானுங்க. சுட்டுக்கு முன்னாலே வல்லெழுத்து மிகுங்கற சாதாரண இலக்கணமே தெரியல. 'அங்குக் கண்டான்'னு எழுதறான். இவனெல்லாம் கவியாம்" என்று என்னைக் கூப்பிட்டுச் சொல்லித் திட்டுவார். நான் இதைப் பற்றிப் பாரதியாரிடம் சொன்னால் "அங்குக் கண்டான் என்று எழுதினால் நன்றாகவா இருக்கிறது?" என்று என்னைத் திருப்பிக் கேட்பார்.

"நன்றாக இல்லாவிட்டால் என்ன? இலக்கணப் பிழையில்லாமல் நாம் எழுத வேண்டாமா?" என்று நான் கேட்பேன். பாரதியார் பதிலுக்கு ஒரு சிரிப்புச் சிரிப்பார். அவ்வளவுதான்.

நான் பள்ளியில் படிக்கும் காலத்திலிருந்தே நிறையக் கவிதை எழுதுவேன். பாரதியாரைச் சந்திப்பதற்கு முன்பாகவே நூற்றுக் கணக்கான தனிப்பாடல்களும், கீர்த்தனைகளும் பழைய பாணியில் எழுதி முடித்திருந்தேன். மயிலம் முருகன் மீது நிறைய பக்திப் பாடல்கள் எழுதியிருந்தேன்.

சுப்பிரமணியர் துதியமுது வெளியாகியிருந்த நேரத்தில் ஒருநாள் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து புகைபிடித்துக் கொண்டிருந்தேன். மயிலத்திலிருந்து ஒரு பக்தர் கூட்டம் உடம்பெல்லாம் திருநீறிலங்க சைவத்திருக்கோலத்தோடு என் வீட்டு வாசலுக்கு வந்து மிகவும் அடக்கமாக, "கவிஞர் கனக.சுப்புரத்தனம் வீட்டில் இருக்கிறாரா?" என்று கேட்டது. நான் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுப் புகைச் சுருட்டைக் காலிலே போட்டு அணைத்துவிட்டு எழுந்து நின்று, "ஏன்? நான்தான்!" என்று சொன்னேன். வந்தவர்கள் அதிர்ச்சி

யடைந்தார்கள் என்பது அவர்கள் முகங்களிலிருந்து தென்பட்டது. அவர்கள் என்னை வயது முதிர்ந்த ஒரு சிவனடியார் கோலத்தில் கற்பனை செய்து கொண்டு வந்திருக்க வேண்டும். என் தோற்றமும் செயலும் அவர்கள் எண்ணி வந்ததற்கு மாறாக இருக்க வேண்டும். கீர்த்திக்கேற்ற மூர்த்தியாக நான் அவர்களுக்குத் தென்படவில்லை. எதுவும் பேசாமல் திரும்பிச் சென்று விட்டனர்.

என்னுடைய பதினாறாவது வயதில் நான் இன்பச் சுவை பொருந்திய லாவணிப்பாட்டு[1] ஒன்று எழுதியிருந்தேன். அது ஒரு காதலன் தன் காதலியை அங்கம் அங்கமாக வருணித்துப் பாடுவதுபோல் அமைந்தது. கொஞ்சம் வண்டை வண்டையா இருக்கும். ஒரு நாள் பாரதியாரின் வீட்டு மாடிமேல் என் நண்பர்கள் சிலரோடு இருந்தேன். எல்லாரும் 'விடைப் பசங்க'. என் லாவணியை அவர்களிடம் இசையோடு பாடிக் காட்டிக் கொண்டிருந்தேன். அவர்கள் மெய்மறந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள். அப்பாடல் முழுதும் இப்போது எனக்கு நினைவில் இல்லை. நினைவில் உள்ள சில வரிகளை மட்டும் பாடுகிறேன்.

(கவிஞர் பாடினார்)

நீலமலர் தன்னையும்
கோலக்கெண்டை மீனையும்
நிகர்க்குதேஇவள் நேத்ரம்
என்ன காத்ரம்?
நான்எம் மாத்ரம்?-இந்த
வாலைப்பெண்ணைப் புணர
வேண்டுமே கொக்கோக சாத்ரம்

ஏக காலத்திலிரு
சூரியன் புறப்பட்டா
எப்படித் தானிருக்கும் ஒது?
அதுபோல் காதில்
இருப்ப தேது?

ஒப்பாலாயிரம் பெறும்
கொப்பு முதல் நகைகள்
இழையாலாயிரம் பெறும் தாவணி
மற்றும் பூவணி-கனக
சுப்பு ரத்னம் சொன்னான்
அடியா லாயிரம்பெறும் லாவணி.

1. லாவணி என்பது நாட்டுப்புறங்களில் 'டேப்' என்னும் தட்டையை ஒலித்துக் கொண்டு பாடப்படும் ஒருவகைப் பாடல். கும்மியைப்போல் இருக்கும். இன்றும் காமன் பண்டிகைகளில் லாவணி பாடுகிறார்கள்.

இந்தப் பாட்டில் ஈடுபட்டு நான் பாடிக்கொண்டிருந்தபோது பாரதியார் மாடிப்படியேறி வந்தது எங்களுக்குத் தெரியாது. வந்தவர் லாவணி முடியும் வரையில் மாடிப்படியிலேயே நின்று கேட்டுக் கொண்டிருந்தார். பாட்டு முடிந்ததும் 'சபாஷ்' என்று கூறிக் கொண்டு மேலே வந்தார். என்னை முதுகிலே தட்டிக் கொடுத்து, "சுப்புரத்தனம் உன்பாட்டிலே நிறைய விஷயம் இருக்குது" என்று கூறிப் பாராட்டினார். வெட்கம் கலந்த நாணத்தோடு நான் சிரித்தேன்".

பாரதியாரைப் பற்றிப் பாவேந்தர் வாயிலிருந்து நான் அறிந்து கொண்ட செய்தி இவ்வளவுதான். ஆனால் பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றை எப்படியாவது விரைவில் எழுதிமுடித்துவிட வேண்டுமென்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார்.

பாவேந்தர் இறந்தவுடன் அடுத்த வாரம் வெளியான ஆனந்த விகடனில் அவர் பாரதியாரைப் பற்றி எழுதிய கட்டுரை ஒன்று வெளியாகியது. பாவேந்தரின் படத்தோடு அக்கட்டுரையை வெளியிட்டிருந்தார்கள்; புதுவையில் இருந்த பாரதியின் குடும்ப வாழ்க்கையை அதில் மிக அழகாக எழுதியிருந்தார். சென்னைத் தியாகராய நகர் இராமன் தெருவில் பாவேந்தர் வாழ்ந்தபோது, ஆனந்த விகடன் ஆசிரியர் திரு.எஸ்.எஸ்.வாசனே ஒருமுறை நேரில் வந்து பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றைத் தொடர்ந்து விகடனில் எழுதும்படி கேட்டுக் கொண்டாராம். பாவேந்தரும் இசைந்து ஒரு கட்டுரை அனுப்பி வைத்தார், பிறகு என்ன நினைத்தாரோ தொடர்ந்து எழுத மறுத்து விட்டார். தொடர்ந்து எழுதியிருந்தால் பாரதி வரலாற்றின் நுட்பமான சில பகுதிகள் நமக்கு வெளிச்சமாயிருக்கும். பாரதி வரலாற்றை ஆயிரம் பேர் எழுதியிருக்கலாம். இன்னும் எழுதலாம். ஆனால் ஒரு கவிஞன் தான் மதித்துப் பழகிய மற்றொரு பெருங்கவிஞனைப் பற்றி எழுதும் எண்ண ஓட்டங்கள் மற்றவர் சிந்தனைக்கு எட்டாதவையாகவும், படிப்போர்க்கு வியப்பூட்டுபவையாகவும் இருக்கும். அத்தகைய வரலாற்றுக் காவியம் நமக்குக் கிட்டாமல் போனது பேரிழப்புத்தான். தாம் ஆனந்தவிகடனில் எழுத மறுத்துவிட்ட செய்தியைப் பாவேந்தரே ஒருமுறை என்னிடம் கூறினார். 'ஏன் மறுத்து விட்டீர்கள்' என்று நான் கேட்டதற்கு முகத்தைச் சுளித்துக் கொண்டாரே தவிர மறுமொழி ஏதும் கூறவில்லை. இன்றுள்ள அரசியல் தலைவர்களும், கவிஞர்களும் கல்கி, குமுதம், ஆனந்தவிகடன் போன்ற விற்பனை மிகுந்த இதழ்களில் கடைசிப்பக்கம், ஒரு பக்கம் அரைப்பக்கம் எழுதக் கிடைத்தால் போதுமென்று ஏங்கும் நிலையைக் காண்கிறோம். ஆனால் வீடுதேடி வந்த விளம்பரத்தைப் பாவேந்தர் துச்சமாக மதித்தது வியப்பிற்குரியதன்றோ?

நினைவில் நின்றவை

நான் சென்னையில் கல்லூரி மாணவனாக இருந்த ஆண்டு கி.பி. 1961-62. அப்போது பாவேந்தருக்கு 72ஆம் வயது நடந்து கொண்டிருந்தது. அந்த வயதிலும் அவர் நல்ல உடல் நலத்தோடு இருந்தார்; சுறுசுறுப்போடும் இயங்கிக் கொண்டிருந்தார். அவர் தோற்றம் பார்த்தவுடன் உள்ளத்தில் நிலைத்துவிடும் கம்பீரமான தோற்றம். அவர் உயரம் 5'10" இருக்கும். கொஞ்சம் முற்றிய மாந்தளிர் மேனி. உருண்டையான பெரிய முகம். மிரட்டும் பார்வை. அடியகன்ற அவருடைய பெரிய மூக்கின் மீது பழைய மோஸ்தர் வட்ட ஃப்ரேம் போட்ட கண்ணாடி எப்போதும் உட்கார்ந்திருக்கும். சிந்தனையாளர்களுக்கே உரிய பரந்த நெற்றி, நெற்றிமேடும் தலைமயிரும் சந்திக்குமிடத்தில் மட்டும் லேசான நரை. ஆனால் தலைமுடி அடர்த்தியாகவும் கறுப்பாகவும் இருந்தது.

இளமையிலிருந்தே மற்களப் பயிற்சியால் திட்டமிட்டு உருவாக்கப் பட்ட கட்டுடம்பு அவர் புறங்கழுத்து பொலி காளையின் திமிலைப்போல் எடுப்பாக இருக்கும். சட்டையணியாமல் வெற்றுடம்போடு இருக்கும் நேரத்தில் கோதாவில் இறங்கத் தயாராய் இருக்கும் மல்யுத்த வீரனைப்போல் காட்சியளிப்பார். திரண்ட பலாப்பழ வயிற்றுக்குக் கீழே வேட்டியைத் தாழ இறக்கி விட்டுப் பிரம்பு பின்னிய சாய்வு நாற்காலியில் ஓய்வாகப் படுத்திருக்கும் அவர் தோற்றம், காண்போருக்குச் சென்னை அண்ணா மேம்பாலத்தை (Fly over) நினைவுபடுத்தும், வயதின் காரணமாக ஏற்படும் சுருக்கம் அவர் மேனியின் மீது இன்னும் கால் வைக்கவில்லை.

பாவேந்தர் தோற்றத்தில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது அவர் மீசை. பாவேந்தரின் மேலுதட்டுக்கும் மூக்கிற்கும் இடைப்பட்ட தூரம் ஒன்றரை அங்குலம் இருக்கும். எனவே அவர் மீசை மிகப்

பெரியதாகவும், ஒரு கறுப்பு வெளவால் தன் இறக்கைகளை விரித்துக் கொண்டு உட்கார்ந்திருப்பது போலவும் இருக்கும். பாவேந்தர் மீசையின் மீது அதிக கவனம் செலுத்துபவர். சென்னையிலிருந்த போது வயதின் காரணமாக அவர் மீசை உதிர்ந்து அடர்த்தி குறைந்து காணப்பட்டாலும், அதை ஒழுங்காக வெட்டிவிட்டுப் பேணிக் காத்து வந்தார்.

பாவேந்தரின் மகனான கோபதி (மன்னர் மன்னன்) தந்தையாரின் உருவ அமைப்பை அப்படியே ஏற்றுப் பிறந்திருக்கிறார். ஆனால் பாவேந்தருக்குப் பக்கத்தில் அவரைக் கொண்டுபோய் நிறுத்தினால், ஒரு பீரங்கிக்குப் பக்கத்தில் துப்பாக்கியை நிறுத்தியதுபோல் தான் இருக்கும். பாவேந்தரின் பார்வையும், அங்க அசைவுகளும் அவருடைய மூத்த மகளான சரசுவதியிடத்தில் அப்படியே காணப்படுகின்றன. சிங்கம் நடக்கும்போது தன் தலையை இரண்டு பக்கமும் கம்பீரமாகத் திரும்பிப் பார்த்துக் கொண்டே நடக்கும். பாவேந்தர் எதிரில் இருப்பவர்களிடம் எதைப் பற்றியேனும் ஆழ்ந்து பேசும்போது தம் தலையை இரண்டு பக்கமும் திருப்பிப் பார்த்துக் கொண்டே பேசுவார். இந்த அம்மையாரும் அப்படியே பேசுகிறார்.

பாவேந்தர் சென்னையில் வாழ்ந்தபோது, அவருடைய பொருள் வருவாய் எப்படியிருந்தாலும் மிகவும் வசதியோடு தான் வாழ்ந்தார். குடியிருக்க எல்லா வசதிகளோடுங் கூடிய வளமனை. கொஞ்சநாள் சொந்தமாகக் கார் கூட வைத்திருந்தார். எடுபிடிக்கு ஆட்களும் உண்டு. சத்திரம் போல நாள்தோறும் நான்கைந்து பேருக்காவது வீட்டில் சமாராதனை நடந்து கொண்டிருக்கும். நிலையான விருந்தாளிகளாக இரண்டுபேர் எப்போதும் இருப்பார்கள்.

நான் சென்னையில் இருந்தபோது பாவேந்தரின் மனைவியார் பழனியம்மாள் பெரும்பாலும் புதுவையிலேயே இருந்தார்கள். தாயாரம்மாள் என்ற சமையல்காரியும், அவருக்கு ஒத்துழைக்க பட்டு என்ற வேலைக்காரியும் வீட்டில் இருந்தனர். தாயாரம்மாளுக்கு வயது ஐம்பதிருக்கும்; சுவையாகச் சமைப்பார். பாவேந்தரைத் தேடி யார் எந்த நேரத்தில் வந்தாலும், அவர் என்ன சமைக்கச் சொல்கிறாரோ அதைச் சமைக்க வேண்டும். நாள்தோறும் புலால் உணவில்லாமல் அவரால் இருக்க முடியாது. குறைந்தது மீனும் கத்தரிக்காயுமாவது குழம்பு வைக்க வேண்டும். இறால் (Prawn) தொக்கு அடிக்கடி செய்யச் சொல்லி விரும்பிச் சாப்பிடுவார். அவருக்குப் பருப்புரசம் பிடிக்காது. நிறைய மிளகை உடைத்துப் போட்டுக் கறிவேப்பிலை மிதக்கக் காரமாக வைக்கும் மிளகுரசம் தான் பிடிக்கும். மூன்று நேரமும் புலால் உணவே உண்டாலும்

அதைச் செரிக்க வைக்கும் உடல்வளம் அவருக்கு 72 ஆவது வயதிலும் இருந்தது வியப்பிற்குரியது.

பாவேந்தர் யார் வீட்டில் விருந்து சாப்பிட்டாலும், சுவையாகச் சமைத்துப் போட்ட அவ்வீட்டுப் பெண்களைப் பாராட்டாமல் வருவதில்லை. அதுவும் இன்ன பொருள் இப்படிச் சுவையாக இருந்தது என்று விமர்சனம் செய்யாமல் வரமாட்டார். இந்தச் செய்தியைப் பாவேந்தரோடு தொடர்பு கொண்ட பல நண்பர்களின் வீட்டில் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். வீட்டில் இருக்கும் போது லுங்கியும் முண்டா பனியனும் போட்டிருப்பார். வெளியில் கிளம்பும்போது வேட்டியும் ஸ்லாக் சர்ட்டும் அணிந்து கொள்வார். கூட்டங்களுக்குச் செல்லும்போது வெள்ளை மல்ஜிப்பாவும் துண்டும் அணிந்து செல்வார். முக்கியமான விழாக்களுக்குச் செல்லும்போது பூப்போட்ட காஷ்மீர் வுல்லன் அங்கவஸ்திரத்தை மூலைவாக்கில் மடித்துக் கழுத்தின் இரண்டு பக்கமும் தொங்கும்படி போட்டுக் கொள்வார். இந்தக் கோலம் இவருக்கு மிகவும் பிடித்த திருக்கோலம். தலைக்குப் பூசிக்கொள்வதற்காக இவருக்குப் பெங்களூரிலிருந்து ஒருவர் தாழம்பூத் தைலம் கொண்டுவந்து கொடுத்துக் கொண்டிருந்தார்.

பாவேந்தர் நண்பர்களிடத்தில் குழந்தையைப் போல் ஒட்டுறவோடு பழகுவார். அதே சமயம் குழந்தையைப் போல் எந்த நேரமும் அவர் கோபித்துக் கொள்ளுவார். பாவேந்தரைப் பார்க்க வந்தவர்களும், அவரிடம் முன்னுரை — வாழ்த்துப்பா வேண்டி வந்தவர்களும் பல வேறுபட்ட அனுபவங்களை என்னிடம் கூறியிருக்கிறார்கள். அவையெல்லாம் பாவேந்தர் அப்போதிருந்த மனநிலையைப் பொறுத்தது. அவருக்கு யாரையாவது பிடித்துவிட்டால், அவர்மீது அளவு கடந்த பரிவைக்காட்டித் திக்குமுக்காடச் செய்வது அவர் வழக்கம். நான் அவரோடு தொடர்பு கொண்டிருந்த மூன்றாண்டுகளில் ஒரே ஒருமுறை தான் என்னிடம் கோபித்துக்[1] கொண்டார்.

பாவேந்தரிடம் அடிக்கடி காணப்படும் ஒரு பழக்கமுண்டு. யாராவது வியப்பிற்குரியதாக ஒரு செய்தியை அவரிடம் கூறினால் உடனே தமது வலக்கையின் ஆட்காட்டி விரலை மூக்கின் நுனியின் மேல் கொண்டு போய் வைத்துக் கொள்வார். உணர்ச்சி வசப்பட்டு மற்றவர்களிடம் பேசும்போது தமது உள்ளங்கையை மேலிருக்கும் படி திருப்பிக் கொண்டு, ஆள்காட்டி விரலை மட்டும் நீட்டித்

1. இராசிபுரம் கவிஞர் மாநாட்டுக்கு வரும்போது. இந்நிகழ்ச்சி பற்றிப் பின்னால் குறிப்பிட்டிருக்கிறேன்.

தமக்கு முன்னாலிருக்கும் மேசை விளிம்பில் வைத்துக் கொண்டு பேசுவார்.

தாகூரிடம் ஒரு விநோதமான பழக்கமுண்டு. அவருடைய கையெழுத்துப் படியில் மைசிந்தி விட்டால் அல்லது எழுத்தில் பிழை ஏற்பட்டு விட்டால் அதை ஓர் ஓவியமாக மாற்றிவிடுவார். அவரைப் போலவே கையெழுத்துப் படியில் மைசிந்தி விட்டால் அதைப் பூவாக மாற்றும் பழக்கம் பாவேந்தருக்கும் உண்டு. அவ்வாறு அவர் மாற்றிய கையெழுத்துப்படி[1]யொன்று என்னிடம் இருக்கிறது.

பாவேந்தரின் ஏகாந்தத்தை யாராவது திடீரென்று சென்று கலைத்தாலோ, அவரை அனாவசியமாகச் சீண்டிவிட்டாலோ அவருக்குக் குபீரென்று கோபம் வரும். அப்படி இரண்டொரு நிகழ்ச்சியைப் பார்த்திருக்கிறேன். சென்னை இராமன் தெருவில் அவர் குடியிருந்த பங்களாவின் உரிமையாளர் ஒரு ரெட்டியார்; வசதியானவர்; பாவேந்தரின் மீது மிக்க மதிப்புடையவர். ஒருநாள் அதிகாலையில் ஆழ்ந்த சிந்தனையோடு பாவேந்தர் ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். அன்று சமையற்காரத் தாயாரம்மாள் ஊரிலில்லை. பாவேந்தர் அதிகாலையில் காஃபி அருந்தும் வழக்கத்தை நினைவில் கொண்டு வீட்டுக்கார ரெட்டியார் கையில் சூடான காஃபியோடு பாவேந்தரின் அறையில் நுழைந்தார். அவரைப் பார்த்த பாவேந்தருக்குச் சுரீரென்று கோபம் வந்துவிட்டது. "என்னைக் கேட்காமல் உங்களை யாரிங்கே காஃபி கொண்டு வரச்சொன்னது?" என்று அதட்டலோடு கேட்டார். ரெட்டியார் முகவாட்டத்துடன் திரும்பிச் சென்று விட்டார்.

பாவேந்தர் குடியிருந்த பங்களா மேல்மாடியில் ஒரு தெலுங்குத் திரைப்பட டைரக்டர் குடியிருந்தார். பாவேந்தர் வீட்டில் பணிபுரிந்து கொண்டிருந்த பொன்னடியை அவர் ஏதோ ஒரு காரணத்திற்காகக் கூப்பிட்டுச் சற்றுக் கடுமையான சொற்களைப் பயன்படுத்தித் திட்டி விட்டார். இதைக் கேட்ட பாவேந்தருக்கு வயதையும் மீறிய பெருஞ்சினம் வந்துவிட்டது. வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு வெளியிலே ஓடிவந்தார். மாடியிலே இருந்த தெலுங்கு டைரக்டரைக் கூவியழைத்து 'இறங்கி வாடா கீழே' என்று போர்க் கோலத்தோடு நின்றார். அவரைச் சமாதானப்படுத்தி உள்ளே அழைத்துச் செல்லப் பெரும்பாடாய்ப் போய்விட்டது.

பாவேந்தர் சென்னையில் வாழ்ந்தபோது வெளியில் எங்கே சென்றாலும் வாடகைக் காரில் (taxi) தான் செல்வது வழக்கம். பாண்டிபஜாருக்குக் கீழே இருக்கும் ராஜகுமாரி திரைப்படக்

கொட்டகைக்குச் செல்வதாக இருந்தாலும் பொன்னடியைப் போய் வாடகைக்காரர் கூட்டி வரும்படி சொல்லுவார். அப்போது குறைந்த மீட்டர் கட்டணம் எட்டணாதான். அதைக் கொடுத்துவிட்டு இறங்கிக் கொள்வார். தளர்ச்சியின் காரணமாக அவரால் அப்போது அதிகம் நடக்க முடியாது. எங்காவது நானும் அவரும் வெளியில் செல்லும்போது நான் வாடகைக் காரைக் கூப்பிட்டால் 'வேண்டாம்; எதற்கு வீண் செலவு? ஆட்டோ ரிக்ஷாவில் போகலாம். அது நல்லா காற்றோட்டமா இருக்கும்; ஜிகுஜிகுன்னு போகும்' என்று குழந்தை போலக் கூறுவார். என் கைப்பணம் அதிகம் செலவாகக் கூடாது என்பதற்காக அவர் அவ்வாறு கூறுகிறார் என்பதை நான் அறிந்து கொள்வேன். 'பரவாயில்லை ஐயா! காரிலேயே போகலாம்' என்று நான் வற்புறுத்திச் சொன்னபிறகு ஏறிக் கொள்வார். காரில் எப்போதும் முன் சீட்டில் காரோட்டிக்குப் பக்கத்தில் தனியாகவே உட்கார்ந்து கொள்வது வழக்கம். தவிர்க்க முடியாமல் எங்காவது மாடிப்படியில் ஏற வேண்டுமானால் 'முருகு, இங்க வா!' என்று சொல்லித் தாங்கலாக என் தோள்மேல் கை போட்டுக் கொண்டு வருவார். பாவேந்தர் எப்போதும் தூய்மையாக இருப்பார். நாள்தோறும் முகத்தை வழித்துக் கொண்டு பளிச்சென்று காட்சியளிப்பார்.

பாவேந்தரின் பொருளாதாரக் கொள்கை திட்டமில்லாதது. கையில் எவ்வளவு பணமிருக்கிறது? எவ்வளவு செலவு செய்ய வேண்டும்? என்று அவர் சிந்திப்பதில்லை. நான் அவரோடு நெருங்கிப் பழகிய சில மாதப் பழக்கத்திலிருந்து அவர் எப்போதும் அப்படித்தான் இருந்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன். அவர் பணத்தை ஒரு பொருட்டாக மதித்ததில்லை. சென்னையில் அவர் வாழ்ந்தபோது அவர் படுக்கை அறை எப்போதும் திறந்தே இருக்கும். அந்த அறையில் பாதுகாப்பாகப் பொருள்களை வைப்பதற்கு இரும்புப் பீரோவோ பெட்டியோ கிடையாது. பயணத்தின் போது பயன்படும் ஒரு தோல் பெட்டி (Leather Suitcase) மட்டுமே இருக்கும். அதுவும் பூட்டப்படாமல் இருக்கும். ஒருநாள் எதற்காகவோ அதை நான் திறந்தபோது கட்டுக்கட்டாக ரூபாய் நோட்டுகள் இருந்தன. "என்னய்யா! இவ்வளவு பணம் இதிலே இருக்கிறது பூட்டாமல் வைத்திருக்கிறீரே?" என்று கட்டிலின் மீதமர்ந்திருந்த பாவேந்தரைக் கேட்டேன்.

"ஏ...ஏ....பூட்டணும்? யார் எடுக்கறா?" என்று அசிரத்தையாக விடையிறுத்தார். தேவை ஏற்படும்போது தான் பணத்தைப் பற்றி நினைப்பார். மற்ற நேரங்களில் அதைச் சட்டை செய்ய மாட்டார். பேண மாட்டார்.

திட்டமிட்ட பொருளாதாரக் கொள்கையும் சேமிக்கும் பழக்கமும் அவருக்கிருந்திருந்தால் பல லட்சங்கள் அவர் வாழ்க்கையில் சேர்ந்திருக்கும். கி.பி. 1946ஆம் ஆண்டு அவருக்கு நிதியளிப்பு விழாவில் ரூ.24,500 வழங்கப்பட்டது. அக்காலத்தில் கால் லட்சம் என்பது சாதாரணத் தொகையன்று. கணிசமான பெரிய தொகை. பாவேந்தர் வாழ்ந்த காலத்தில் கவிதை, உரைநடை, நாடகம் என்று கிட்டத்தட்ட 60 நூல்கள் அவர் படைப்புக்களாக வெளிவந்தன. அவற்றுள் மிகவும் குறிப்பிடத்தக்கவை பாரதிதாசன் கவிதைகள் (முதல் தொகுதி), பாண்டியன் பரிசு, எதிர்பாராத முத்தம், அழகின் சிரிப்பு, தமிழியக்கம் என்பன. புதுவைப் பெருமாள் கோயில் தெரு வீட்டை விலைக்கு வாங்கிய நேரத்தில் ஏற்பட்ட பண நெருக்கடியால் மிகக் குறைந்த தொகைக்கு (ரூ.4000/- என்று நினைக்கிறேன்) இந்த நூல்களின் பதிப்புரிமையைப் பதிப்பகத்தாருக்கு விற்றுவிட்டார். பிறகு இந்த நூல்களுக்கும் பாவேந்தருக்கும் எந்தவிதப் பொருளாதாரத் தொடர்பும் இல்லை. ஆனால் இந்த நூல்களின் விற்பனையை வேறு எந்தத் தமிழ்க்கவிதை நூலும் எட்டிப் பிடிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி அவர் வாழ்ந்த காலத்திலேயே 15 பதிப்புகள் வெளிவந்துவிட்டது. இந்த வெற்றி எந்த தமிழ்க் கவிஞனுக்கும் இதுவரை கிட்டவில்லை. இவ்வளவும் நான் எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், இந்நூல்களின் விற்பனையில், பாவேந்தர் எவ்வளவு ஏமாளியாக நடந்து கொண்டார் என்பதைக் குறிப்பிடத்தான். தாம் கதை வசனம் எழுதிய வளையாபதி திரைப்படத்தில் சில வரிகளை மாற்றி விட்டார்கள் என்பதற்காக மாடர்ன் தியேட்டர்ஸாரின் ரூ. 40,000 ஒப்பந்தத்தைத் தூக்கி எறிந்துவிட்டு வந்த செயல் பணவிஷயத்தை அவர் எவ்வளவு லேசாக எடுத்துக் கொண்டார் என்பதற்கு மற்றுமோர் எடுத்துக்காட்டு.

ஆபத்துக் காலங்களில் எளியவருக்குப் பொருள் கொடுத்து உதவும் தாராள நோக்கும் அவரிடத்தில் உண்டு. பாவேந்தர் சென்னையில் குடியிருந்தபோது வீட்டில் வேலை செய்து கொண்டிருந்த பட்டு என்னும் வேலைக்காரி தன் மகனுக்குத் திருமண ஏற்பாடு செய்து கொண்டிருந்தாள். திடீரென்று ஒருநாள் அவள் அழுதுகொண்டு பாவேந்தரிடம் வந்தாள். பாவேந்தர் என்ன என்று விசாரித்தார். மகனுடைய திருமணத்துக்காகச் சேர்த்து வைத்திருந்த பணத்தையும் வேறு சில பொருட்களையும் தன்னுடைய குடிசையில் புகுந்து யாரோ திருடிக் கொண்டுபோய்விட்டதாகச் சொல்லி அழுதாள். திருமணத்துக்கு முகூர்த்தம் வைத்தாயிற்று. உடனே பாவேந்தர் அவளிடத்தில் நூறு ரூபாயைக் கொடுத்ததோடு குறித்தபடி திருமணத்தை நடத்தத் தம் பங்களாவையும் ஒழித்துக் கொடுத்தார்.

படிக்காத அப்பட்டுவிற்குப் 'பாவேந்தர்' என்ற சொல் வாயில் நுழையாது. 'பாவேந்து கொடுத்து! மகராசன்! நல்லா இருக்கணும்!' என்று கண்ணில் நீர் ததும்ப அடிக்கடி அவள் சொல்ல நான் கேட்டிருக்கிறேன்.

இவர் இரக்கக் குணத்தையும் தாராள நோக்கையும் பயன்படுத்திக் கொண்டு சிலபேர் இவரிடம் நிரந்தர விருந்தாளிகளாகத் தங்கி இருப்பதுண்டு. அவர் சென்னையில் வாழ்ந்தபோது வாட்ட சாட்டமான ஓர் ஆள் அவரைத் தேடி வந்தார். உயரமான தோற்றமும், மூக்குக் கண்ணாடியோடும் எடுப்பான முகமும் கொண்ட அவர் பெரிய வாய்ச்சாலக்காரர். சரளமாக ஆங்கிலம் பேசவும் எழுதவும் வல்லவர். பாவேந்தர் கவிதைகளையெல்லாம் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க வேண்டுமென்றும், உலக அரங்கில் அவர் புகழைப் பரப்ப வேண்டுமென்றும் சரமாரியாகப் பேசினார். தம்மை அனுமதித்தால் உடனிருந்து அப்பணிகளைச் செய்யத் தயார் என்றும் குறிப்பிட்டார். பாவேந்தர் யாரையும் எளிதில் நம்பிவிடும் பழக்கமுடையவர். மாற்றி அணிய வேறு உடைகூட இல்லாத நிலையில் வந்த அவரைப் பாவேந்தர் தம் இல்லத்தில் வைத்துக் கொண்டு உணவும் உடையும் கொடுத்துப் பல திங்கள்கள் ஆதரித்து வந்தார். எங்கு போனாலும் அவரைத் தம்முடைய நேர்முகச் செயலாளர் (P.A.) என்று சொல்லி உடன் அழைத்துச் செல்லுவார். சில சமயம் அவர் காக்கி உடையணிந்து பாவேந்தருடைய மெய்க்காப்பாளர் (Bodygaurd) போலவும் செல்வதுண்டு. காலப்போக்கில் அவர் ஒரு 'வெற்றாள்' என்பதை அறிந்து கொண்ட பாவேந்தர் அவரை வெளியேற்றிவிட்டார்.

பத்திரிகைத்துறை என்பது தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் ஒரு குறிப்பிட்ட இனத்தார்க்கே கைவந்த துறையாக நீண்ட காலம் இருந்து வந்ததை யாவரும் அறிவோம். ஒரு பத்திரிகையைத் துவக்கி வளர்த்து நிலைபெறச் செய்ய வேண்டுமானால் முதலில் அதை நடத்துபவனே விளம்பரமான ஒரு சிறந்த எழுத்தாளனாக இருக்க வேண்டும். இரண்டாவதாக ஒரு சொந்த அச்சகமும் முதலீடும் வேண்டும். மூன்றாவதாகப் பத்திரிகையை மக்கள் நடுவில் விளம்பரப்படுத்தி விற்பனை செய்யும் வாணிபத் தந்திரமும் வேண்டும்.

திராவிட இயக்கம் வளர்ச்சி நிலையில் இருந்தபோது (கி.பி. 1940 முதல் 1960 வரை) நிறைய நாளிதழ்களும், தாளிகைகளும் வெளி வந்தன. ஒவ்வொரு தலைவரும் ஒவ்வொரு பத்திரிகையைத் தமக்கென்று சொந்தமாகத் துவக்கி இழப்பையும் பொருட் படுத்தாமல் நடத்தி வந்தனர். அவற்றுள் விடுதலை, குடியரசு,

திராவிட நாடு, முரசொலி, பொன்னி, மன்றம், திராவிடன், தென்றல் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. அண்ணாவும், கலைஞரும், கண்ணதாசனும் பரபரப்போடு இப்பத்திரிகைகளை நடத்தி வந்தனர். எல்லா இதழ்களும் பாவேந்தர் படைப்பை விரும்பி வெளியிட்டன. 1942-43இல் திராவிட நாட்டில் பாவேந்தர் பாட்டு தொடர்ந்து வரும். அவர் பாடல் எழுதாத வாரத்தில் அவருடைய பழைய பாடலைத் தேடி எடுத்துத் திராவிடநாடு வெளியிடும்.

பாவேந்தர் தமிழ்நாட்டிலும் புதுவையிலும் நடைபெற்ற எல்லா அரசியல் கலை ஏடுகளிலும் எழுதினார். இவர் நண்பர்கள் உதவியோடும், தாமாகவும் சில இதழ்கள் நடத்தி வந்தார். தமிழ்நாட்டில் முதன்முதலாகக் கவிதை இதழ் நடத்தியவர் பாவேந்தர். கி.பி. 1935இல் வெளியான ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியின் 'கவிதா மண்டலம்' என்ற இதழே அது. முழுக்க முழுக்கக் கவிதையில் வெளிவந்த அவ்வேட்டில் விளம்பரங்கள் கூடக் கவிதையிலே வெளியாயின. திரு. தம்புசாமி முதலியார் என்பவர் அதன் பதிப்பாசிரியர்; பாவேந்தர் ஆசிரியர்.

திரு.நோயல் நடத்திய 'புதுவை முரசு'க்கும் பாவேந்தருக்கும் நெருங்கிய தொடர்புண்டு. பாவேந்தர் பத்திரிகைத் துறைப் பட்டறிவை இந்த இதழில் தான் கூர்மையாக்கிக் கொண்டார். பாவேந்தரின் நிதியளிப்பு விழா முடிவுற்றதும் சூட்டோடு சூடாக 1947ஆம் ஆண்டு குயில் திங்களிதழ் நூல் வடிவில், உயர்ந்த தாளில் வண்ணப் படங்களோடு வெளிவந்தது. அத்தகைய ஒரு கவிதை இதழ் தமிழில் மறுபடித் தோன்றவே இல்லை. பாவேந்தராலும் வெளியிட முடியவில்லை.

பாவேந்தரின் முதல் குயில் சில இதழ்களோடு தன் குரலை ஒடுக்கிக் கொண்டது. குயிலின் உரிமை காரணமாகப் பாவேந்தருக்கும் டி.என். இராமனுக்கும் ஏற்பட்ட வழக்கும் பின்னர் குயில் பாவேந்தரை வந்தடைந்ததும் யாவரும் அறிந்த செய்திகள். பிறகு பத்தாண்டுகள் கழித்துக் குயில் மீண்டும் 1.6.58லிருந்து புதுவைச் சோலையில் கூவத் தொடங்கியது. அதன் இசை தொடர்ந்து இரண்டாண்டு ஏழு திங்கள் தமிழ் இலக்கிய உலகில் ஒலித்துக் கொண்டிருந்தது. பாவேந்தர் பாண்டியன் பரிசைத் திரைப்பட மாக்கும் முயற்சியோடு சென்னை வந்ததும் குயில் நின்றுவிட்டது. மீண்டும் 15.4.62இல் சென்னையிலிருந்து துவங்கியது. எட்டு இதழ்கள் வெளிவந்தன. பாவேந்தரின் பத்திரிகைத் துறை அனுபவம் இத்துடன் முற்றுப்பெற்றது. இக்குயிலைப் பாவேந்தர் வருவாய் கருதி நடத்தவில்லை. ஒரு கொள்கை வெறியோடு நடத்தி வந்தார். இக்குயில் ஏடு அன்றைய படித்த, தமிழ் ஆர்வமிக்க இளைஞரிடையே

கவிதை உணர்வுடையவரைத் தேர்ந்தெடுத்து ஊக்கியது. பாரதிதாசன் பரம்பரையை வளர்த்தது. பாவேந்தரின் மன உளைச்சலுக்குக் குயில் சிறந்த வடிகாலாகவும் விளங்கியது. அவர் பேனா முனையில் காயம்படாத அரசியல் தலைவர்களோ, தமிழறிஞர்களோ புதுவையிலும் தமிழகத்திலும் இல்லையென்று சொல்லலாம். அவருடைய துணிச்சல் எல்லையில்லாதது. அவரைப் போல் வேறு யாரும் அப்படி எழுதித் தமிழ்நாட்டில் தப்ப முடியாது. அவர் குயிலில் எழுதிய உரைநடைத் தொடர்கள் நறுக்கிய கரும்புத் துண்டுகள்; செய்யுளைவிடச் செறிவானவை. அவருடைய கூரிய சொற்கள் சுளீரென்று குதிரைச் சாட்டை உடம்பின் மீது விழுவது போல் இருக்கும்.

கவிஞர்களின் படைப்பாற்றலைப் பற்றி உலகில் இரு வேறுபட்ட கருத்துக்களைக் கூறுவர். சிறந்த கவிஞர்களின் படைப்புகள் அவர்களுடைய வாழ்க்கையின் முற்பகுதியிலேயே முற்றுப்பெற்று விடுகின்றன என்பது ஒரு சாரார் கருத்து. முதிர்ந்த நிலையிலும் உயர்ந்த படைப்புகள் தோன்றுவதுண்டு என்பது மற்றையோர் கருத்து. கீட்ஸ் தமது 24ஆம் வயதிற்குள் இறவாத இலக்கியங்களை எழுதிவிட்டு இறந்தான். ஷெல்லி தமது 28ஆம் வயதுக்குள் உலகப் புகழ் பெற்ற புரட்சிக் கவிதைகளை எழுதி முடித்தான். 30ஆம் வயதுக்குள் பைரனின் உயர்ந்த படைப்புகள் வெளிவந்து விட்டன. நம் நாட்டுப் பாரதியும் தமிழ்க் கவிதைத் துறையில் மாபெரும் புரட்சிகளைச் செய்துவிட்டுத் தமது 39ஆம் வயதில் உயிர் நீத்தார்.

ஆனால் கெதே தமக்கு உலகப்புகழைச் சேர்த்த மாகாவியமான 'பாஸ்து'வைத் தமது முதிர்ந்த வயதான 80இல் எழுதி முடித்தார். அவர் தமது 74ஆம் வயதில் ஒரு 17 வயதுப் பெண்ணை மணக்க முடியாத வேதனையில் உணர்ச்சி வசப்பட்டு எழுதிய காதற்கவிதை தான் ஜெர்மானிய இலக்கியத்தில் சிறந்த காதற் கவிதையாக இன்றும் மதிக்கப்படுகிறது.[1] மில்டன் தமது அமரகாவியமான 'சுவர்க்க

1. Goethe was now seventy-four. He was more affable than he had been in middle age, more gracious and more cordial... At Marienbad Goethe found a girl of seventeen, Ulrike Von Leventzov, whose acquiantance he had made two years before She was winning and graceful. He had found her attractive then he had found her more attractive now; and indefatigable amorist as he was he fell violently in love with her Ulrike was flattered by the attentions of this great end femous man and certainly found him fascinating He proposed marriage to her and it looks as though she did not refuse him, since he wrote to his family (to their dismay) to announce that marriage would shortly take place. But Ulrike's mother refused to consent to a match which, if she had any sense, must have seemed to her preposterously ill-assorted. Goethe was affended unhappy and deeply mortified. He left Marienbad. In the cerriage on the way home he wrote a poem, Elegie in which he descriped the emotion to which his love for Ulriske had given rise and his passionate regrettor what he lost.

-W. Somerset Maugham fn
Points to View

நீக்கத்தை' வயது முதிர்ந்து கண்ணிழந்த நிலையிலே எழுதி முடித்தார்.

பாவேந்தர் நிலை எப்படி? வயது ஏற ஏற ஒரு கவிஞனது படைப்பாற்றல் குறைந்து கொண்டு வருவதாகக் கூறுகிறார்களே! பாவேந்தரிடத்தில் அக்கூற்றுப் பொய்யாகிறது. அவருடைய உயர்ந்த படைப்புகள் (Master-Pieces) எல்லாமே நாற்பது வயதுக்கு மேல் எழுதப்பட்டவை. சாகும் வரையிலும் அவர் உணர்வுகள் மிகக் கூர்மையாக இருந்தன. பெரியார், இராஜாஜி ஆகியோரின் மூளையைப்போல் இவர் மூளையும் சாகும்வரை ஓர் சிந்தனைப் பட்டறை. உயிர் ஓயும் வரையில் பாவேந்தர் ஓயாமல் எழுதிக் கொண்டிருந்தார். தமது முதிர்ந்த வயதில் எவ்வளவு இளமையுணர்ச்சி பொங்க அதே சமயம் நுட்பத்தோடு கவிதை எழுதியுள்ளார் என்பதைப் படித்துப் பாருங்கள்:

இளமையின் விளக்கம்:

சாவெப் படி இருக்கும் சாற்றென்றாள்! நாம்பிரிந்தால்
நோவெப் படிஇருக்கும் நோக்கென்றான்-மேவுதமிழ்
எவ்வா றினிக்கும் என்றாள். எட்டிஇமுத் தணைத்தே
இவ்வா றினிக்கும் என்றான் சேய்'

'பாவேந்தர் சாதாத்துண்டு போட்டவரையில் எழுதிய கவிதைகள் நன்றாக இருந்தன. சரிகைத்துண்டு போட்ட பிறகு எழுதிய கவிதைகள் நன்றாக இல்லை' என்று ஒரு நண்பர் என்னிடம் அடிக்கடி கூறுவதுண்டு. 'நல்ல கவிதை வரவேண்டுமானால் வறுமை வேண்டும். பாரதிதாசனிடத்தில் நிறையப் பணத்தைக் கொடுத்து அவரைப் பாடவிடாமல் செய்கிறீர்கள்' என்று பாவேந்தருக்கு நிதியளித்த காலத்தில் பெரியார் சில நண்பர்களிடத்தில் குறிப்பிட்டாராம். வாழ்க்கை வசதியும் வயது முதிர்ச்சியும் நல்ல கவிதைக்கு இடையூறுகள் என்பதை என்னால் ஒத்துக் கொள்ள முடியவில்லை. வயது முதிர்ச்சியால் அறிவு நுட்பமாகிறது; படைப்பாற்றலும் குறைவதில்லை. ஆனால் ஐம்பது வயதுக்கு மேல் பொதுவாக எல்லாருக்கும் வாழ்க்கைச் சிக்கல்கள் அதிகமாகின்றன. மனச்சுமை அழுத்துகிறது. ஊன்றிச் சிந்திக்க (Concentration of mind) வாய்ப்புக் குறைகிறது. ஆனால் பாவேந்தர் சிக்கல்களுக்கு நடுவிலும் சிந்தித்தார்.

பெரும்பாலும் தமிழ்ப்புலவர்களில் சிலர் இயற்றமிழோடு நின்று விடுவர்; சிலருக்கு இசைத்தமிழில் மட்டுமே ஈடுபாடு இருக்கும்;

1. 29.12.59 குயிலில் எழுதியது.

வேறு சிலர் இசை நாடகத்தமிழில் ஈடுபாடு கொண்டிருப்பர். பாரதி கூட இயல், இசை இரண்டிலுமே அதிக கவனம் செலுத்தினார். நாடகத்துறைப் பக்கம் செல்லவில்லை. ஆனால் பாவேந்தருக்கோ முத்தமிழிலும் ஈடுபாடு இருந்தது. இளமையிலிருந்தே இவருக்கு நாடகப் பித்து இருந்தது. பள்ளியில் ஆசிரியராகப் பல ஊர்களிலும் இருந்தபோது மாணவர்கள் நடிப்பதற்காக நிறைய நாடகங்கள் எழுதியிருக்கிறார். இவர் தமது மக்களான சரசுவதியும் கோபதியும் நடிப்பதற்காகவென்றே கவிதை நாடகம் எழுதியிருக்கிறார்.

இவர் எழுதியுள்ள இரணியன் அல்லது இணையற்ற வீரன் என்ற நாடகம் கி.பி.1948ஆம் ஆண்டு தமிழக அரசினால் தடை செய்யப்பட்டது, 5.9.48இல் காஞ்சி சீர்திருத்த நாடக சபையினர், வடஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருவந்திபுரத்தில் இத்தடையை மீறி நாடகம் நடத்தினர். அன்று பிற்பகல் காவல் துறையினர் 'இந்நாடகம் தடை செய்யப்பட்டிருக்கிறது; பொது மக்கள் இதனைப் பார்க்கக் கூடாது என்று தண்டோரா போட்டு விளம்பரம் செய்தனர். என்றாலும் நாடகம் பார்க்க ஐயாயிரம் பேர் கூடிவிட்டனர். காவல்துறையினர், வேடமிட்டிருந்த நிலையில் அப்படியே நடிகர்களைக் கைது செய்தனர்.

ஒருமுறை சென்னையில் இந்நாடகத்தை நடத்துவதற்காகப் பாவேந்தர் முயற்சி செய்து வந்தார். புதுவையிலிருந்து பள்ளி விடுமுறை நாட்களில் சென்னை சென்று ஒத்திகை நடத்திவிட்டு வருவாராம். இவ்வொத்திகை சென்னையில் அண்ணாப்பிள்ளை தெருவில் நடந்தது. அப்போது நாடகத்தில் பங்குபெற்று நடிப்பதற்காகத் திருவாளர்கள் குருசாமி[1] திருவாசகமணி, திருமதி சத்தியவாணிமுத்து ஆகியோர் பாவேந்தரிடத்தில் பயிற்சி பெற்றனராம். கி.பி. 1944ஆம் ஆண்டில் பாவேந்தரே சில நண்பர்களின் துணையோடு ஒரு நாடகக் குழுவை அமைத்து 'இன்ப இரவு' என்ற நாடக நிகழ்ச்சியை நடத்தினார். பாவேந்தரின் இயல், இசை, நாடகப் படைப்புகள் அதில் இடம்பெற்றன. பொன்னி ஆசிரியர் முருகு சுப்பிரமணியமும் நாமக்கல் மு. செல்லப்ப ரெட்டியாரும் நாடகக் குழுவின் பொறுப்பாளர்களாக இருந்தனர். சென்னையில் இருந்தபோது தமது 70ஆம் வயதிலும் தேர்தல் பிரசார நாடகத்துக்குப் பயிற்சி கொடுத்துக் கொண்டிருந்தார்.

இளமையிலிருந்தே இவரிடத்தில் பொதிந்திருந்த நாடக ஈடுபாடே இவரைத் திரைப்படத் துறைக்கு இழுத்துச் சென்றது. முதன்

1. திரு. குருசாமி இரணியன். திருவாசகமணி பிரகலாதன்.

முதலாகப் பாவேந்தர் படத்துறையில் நுழைந்தது 1938ஆம் ஆண்டு. சேலம் மோகினி பிக்சர்சார் குழலிசை மாமன்னர் திருவாவடுதுறை இராசரத்தினத்தைக் கதாநாயகனாகப் போட்டுக் 'கவி காளமேகம்' என்ற படத்தை எடுத்தனர். அதற்குத் திரைக்கதை, வசனம், பாடல் எல்லாமே பாவேந்தர் தாம் எழுதினார். ஏறக்குறைய இதே காலத்தில்தான் தம் நண்பர் வ.ரா.வின் 'இராமானுசர்' என்ற படத்துக்குப் பாடல்கள் எழுதவும் ஒப்புக் கொண்டார். 'பாலாமணி அல்லது பக்காத் திருடன்' என்ற படத்திற்கும் ஒரு பகுதி வசனம் எழுதினார். இத்துடன் இவர் படத்துறை வாழ்க்கையின் முதற்கட்டம் முற்றுப் பெற்றது.

பிறகு கி.பி.1947 முதல் 1953 வரை ஆறு ஆண்டுகள் திரைப்படத் துறையில் பாவேந்தர் சுறுசுறுப்போடு இயங்கிக் கொண்டிருந்தார். அபூர்வசிந்தாமணி, சுபத்ரா, சுலோசனா, பொன்முடி, வளையாபதி ஆகிய ஐந்து படங்களும் ஆண்டுக்கொன்றாகச் சேலம் மாடர்ன் தியேட்டர்சாரால் தொடர்ந்து வெளியிடப்பட்டன. இந்த நான்கிற்கும் பாவேந்தர் திரைக்கதை வசனம் எழுதினார்; சில பாடல்களும் எழுதினார். அதன்பிறகு திரைப்படத் துறையிலிருந்து ஒதுங்கிக் கொண்டார். அவருடைய இசைப் பாடல்கள் அவ்வப்போது சில திரைப்படங்களில் எடுத்தாளப்பட்டன.

பிறகு 1960ஆம் ஆண்டு திரைப்படத் துறை இவரை மீண்டும் பற்றிக் கொண்டது. புதுவையிலிருந்து இவர் வெளியிட்டுக் கொண்டிருந்த குயில் 13.12.60 இதழில் பாரதிதாசன் பிக்சர்ஸ், பற்றிய அறிவிப்பு வெளியாகியது. 20.12.60 இதழில் 'பாண்டியன் பரிசு' திரைப்பட விளம்பரம் வெளியாகியது. பாவேந்தர் புதுவையிலிருந்து தம் குடியிருப்பை சென்னைக்கு மாற்றிக் கொண்டார்.

கி.பி. 1961-62ஆம் ஆண்டில் நான் மாணவனாகச் சென்னையில் இருந்தேன். பாவேந்தர் பால் எனது சென்னைத் தொடர்பு 1961ஆம் ஆண்டின் இறுதியில் ஏற்பட்டது. பாவேந்தர் குடியிருந்த இராமன் தெரு பங்களாவை முதன்முதலாக நான் அடைந்தபோது என்னை வரவேற்றது 'பாரதிதாசன் பிக்சர்ஸ்' என்ற பெரிய விளம்பரப் பலகைதான். நான் சென்னையில் அவரோடு பழகிய நாட்களில் படம் பிடிப்பதற்காக அவர் மேற்கொண்ட முயற்சிகளைப் பற்றி நண்பர்கள் கூறக்கேட்டிருக்கிறேன். ஆனால் அம்முயற்சியைப் பற்றிய முழுமையான வரலாறு எனக்குத் தெரியாது. நான் அவரைச் சந்தித்தபோது தாம் மேற்கொண்டிருந்த படப்பிடிப்பு முயற்சியில் ஏமாற்றமும் சலிப்பும் கொண்டிருந்த பாவேந்தரைத் தான் பார்த்தேன். நான் அறிந்திருந்த குறைவான செய்திகளிலிருந்து, படம்

பிடிப்பதற்காகப் புதுவை வீட்டின் மீது பெருந்தொகை கடன் வாங்கி வந்திருந்தாரென்றும், அததொகையை வீணாகச் செலவழித்து விட்டு உள்ள(மன) அமைதியில்லாமல் வருந்திக் கொண்டிருந்தாரென்றும் தெரிந்து கொண்டேன். அவரிருந்த உள்ள(மன) நிலையில் அதைப் பற்றிக் கேட்டால் வருந்துவார் என்று எண்ணி நான் எதுவும் கேட்கவில்லை. அந்த நிலையிலும் படம் பிடிக்க வேண்டும் என்ற ஆசை அவர் உள்ளத்தை விட்டு நீங்கவில்லை.

பாரதிதாசன் பிக்சர்சின் சார்பில் 'பாண்டியன் பரிசு' படப்பிடிப்புத் துவக்கவிழா ஆடம்பரமாக நடைபெற்றது என்றும், அன்றைய முதலமைச்சர் காமராசர் விழாவில் கலந்து கொண்டார் என்றும் கேள்விப்பட்டேன். நான் கூட பாவேந்தரோடு நடிகர் சிவாஜி கணேசன் இல்லத்துக்கு ஓரிரு முறை சென்றதுண்டு. என்னைக் காரிலேயே உட்காரும்படி கையமர்த்திவிட்டு அவர் மட்டும் வீட்டுக்குள் செல்வார். அவர் உள்ளே காலடி எடுத்துவைத்ததும் வரவேற்பு பலமாக இருக்கும். சிற்றுண்டியும் நடக்கும். ஆனால் சோர்ந்த முகத்தோடு திரும்பிவருவார்.

'பாண்டியன் பரிசு' பெரிய அளவில் திரைப்படமாக ஆக்கப்பட வேண்டும் என்று பாவேந்தர் விரும்பினார். அதில் நடிகர்கள் சிவாஜி கணேசன், எம்.ஆர்.ராதா, சரோஜா தேவி ஆகியோர் நடிக்க ஏற்பாடாகியிருந்தது. இயக்குனர் பீம்சிங் படத்தை இயக்க ஒப்புக் கொண்டிருந்தார். பாண்டியன் பரிசுப் படத்திற்கான இயற்கைக் காட்சிகளை மைசூரில் எடுக்க வேண்டுமென்று பாவேந்தர் விரும்பினார்; அப்படத்தில் வரும் போர்க் காட்சிகள் சிறப்பாக இருக்க, அழகிய பந்தயக் குதிரைகளைப் பயன்படுத்த வேண்டும் என்று பீம்சிங்கிடம் கூறினார். பாவேந்தரின் பெரிய திட்டத்தையும் சுருங்கிய கையிருப்பையும் மோப்பம் பிடித்து அறிந்து கொண்ட படத்துறை நண்பர்கள் இவரைப் பார்த்தால் ஒதுங்கிச் செல்லத் தொடங்கினர். 'வரலாற்றுப் படம் பிடிக்க நிறையச் செலவாகும்; ஏதாவது சமூகப் படம் எடுங்கள் ஒத்துழைக்கிறோம்' என்று சொல்லி ஓர் ஆங்கில நாவலையும் இவர் கையில் திணித்து விட்டுச் சென்று விட்டனர். அதன்பிறகு அந்நாவலைத் திரைக்கதையாக்கி அதற்கு வசனமும் எழுதி முடித்தார் பாவேந்தர். எதை எழுதி என்ன பயன்? நடிகர்கள் வீடுகளுக்கு நடந்து நடந்து கால் ஓய்ந்ததுதான் மிச்சம்.

தமிழ்நாட்டுப் படத்துறைக்காரர்கள் செப்பிடு வித்தைக்காரர்கள். செப்பிடு வித்தை தெரிந்தவன்தான் படத்துறைக்குப் போக வேண்டும். பாவேந்தருக்குச் செப்பிடு வித்தை பழக்கமில்லாத ஒன்று. வெறுங்கையால் முழம் போடுவது தான் படத்துறையின் புகுமுகத்

தேர்வு. எப்படியாவது ஏமாந்தவர்களை வளைத்துப் போட்டு ஆயிரம் அடியாவது படத்தைப் பிடித்துவிடவேண்டும். அதன்பிறகு அதைக் கடன் கொடுக்கும் சேட்டிடம் காட்டி அவன் பணத்தை வைத்து கொண்டு படத்தை முடிக்க வேண்டும். இதுதான் செப்பிடு வித்தை. இதைச் செய்வதற்குத் தமிழ்நாட்டுப் பாவேந்தர் தேவைப்படவில்லை. பாவேந்தருடைய கடவுட் கொள்கை பற்றி நானறிந்த ஓரிரு செய்திகளை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பாவேந்தர் இளமையில் முருகபக்தர். மயிலம் முருகன் மீது அவர் பாடிய சுப்பிரமணியர் துதியமுது அதற்குச் சான்று. பள்ளி மாணவராய் இருந்த நாட்களில் பாவேந்தர் பஜனைப் பாடலும் பாடியதுண்டு.

இளமையிலே பாவேந்தர் உள்ளத்தில் ஊறிப் போயிருந்த இந்தச் சைவப்பற்று விட்டகுறை தொட்டகுறையாகப் பிற்காலத்திலும் அவரிடம் கொஞ்சம் ஒட்டிக் கொண்டிருந்ததாகச் சிலர் குறிப்பிடுவதுண்டு. அதனால் தான் தாம் எழுதிய 'எதிர்பாராத முத்தம்' காப்பியத்தின் இரண்டாம் பகுதியில் சைவத்துக்கும் குமரகுருபரர்க்கும் வக்காலத்து வாங்கிப் பாடியிருக்கிறார் என்று கூறுவர். இன்னும் சிலர் பாவேந்தர் 'புரட்சிக்கவி'யில் பாடியுள்ள 'வாணி அமைத்திட்டாள் நற்கவிதை; மழை போல் பெய்தான்' என்ற சொற்றொடரைக் காட்டி அவரையறியாமல் அவருள்ளத்தில் அரும்பிய கடவுட் பற்றைக் குறிப்பிட்டுக் காட்டுவர். 30.9.60 வெள்ளி மாலை 6 மணியளவில் புதுவை வாணி நிலையத்தில் நடைபெற்ற கலைமகள் விழாவுக்குப் பாவேந்தர் வந்து சிறப்பித்தார்' என்ற ஒரு செய்தி 11.10.60இல் வெளியான குயில் ஏட்டில் வெளியாகியிருந்தது.

'எங்கெங்குக் காணினும்' என்று தொடங்குவது அவரது சக்திப்பாட்டு. பாவேந்தர் 1930இல் வெளியிட்ட 'கதர் இராட்டினப் பாட்'டில் 'கண்ணன் வழிப் பிறந்த சாதி' என்ற கண்ணன் பாராட்டு வரி தென்படுகிறது. பாவேந்தரின் நண்பரான ஓர் இசையாசிரியர் பலமுறை விரும்பிக் கேட்டதற்காகக் கண்ணன் கிளிக்கண்ணி (40 வரிகள்) ஒன்று பாடிக் கொடுத்திருக்கிறார். வாணி, சக்தி, கண்ணன் பற்றிய இப்பாடல்கள் யாவும் பாவேந்தர் பாட்டில் காணப்படும் பாரதி பாணியின் எதிரொலிகள்.

திருவள்ளுவர் படத்தை எழுதிய ஓவியர் திரு.வேணுகோபால சர்மா பாவேந்தருக்கு நெருங்கிய நண்பர். அவரைச் சில ஆண்டுகளுக்கு முன் நான் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தபோது பாவேந்தரைப் பற்றி ஒரு செய்தியைக் குறிப்பிட்டார். சர்மா ஒரு பக்தர். பாவேந்தர்

சென்னையில் ஒருமுறை தங்கியிருந்தபோது, சர்மாவும் உடன் இருந்தாராம். சர்மா தாம் வழிபடும் அம்பிகையின் மீது ஒரு பாடல் எழுதித் தரும்படி வேண்டிக் கொண்டார். பாவேந்தர் மறுத்தார். சர்மா பல தடவை வற்புறுத்தவே 'சரி, சொல்றே எழுதிக்க...' என்று கூறிவிட்டுப் பாடலைச் சொல்லத் தொடங்கினார் பாவேந்தர். அந்தப் பாடல் தம்மிடத்தில் வந்த பிறகு, தம் வாழ்க்கையிலேயே பெரிய திருப்பம் ஏற்பட்டு விட்டதென்றும், அதன் பிறகு தாம் வாழ்க்கையில் தொல்லை எதுவுமின்றி வசதியோடும் புகழோடும் இருப்பதாகவும் சர்மா என்னிடம் கூறினார்.

பாவேந்தருடைய வாழ்க்கையில் கடவுள் இவ்வாறு பல இடங்களில் குறுக்கிட்டிருக்கிறார். நான் பாவேந்தரோடு சென்னையில் பழகிய நாட்களில் ஒருநாள் கூட என்னிடத்தில் கடவுளைப் பற்றி அவர் பேசி நான் கேட்டதில்லை. ஆனால் கடவுள் பக்தர் சிலர் அவரிடம் உள்ளங் கலந்த நண்பர்களாகப் பழகியதைப் பார்த்திருக்கிறேன். மாரடைப்பால் தாக்கப்பட்டுச் சென்னை அரசினர் மருத்துவ மனையில் படுத்திருந்தபோது, 'அப்பா! அப்பா!' என்று அன்போடு பழகும் அனுசூயா வடபழனி முருகன் கோவிலிலிருந்து திருநீறு கொண்டு வந்து பாவேந்தர் நெற்றியில் பூசினார். 'என்ன மந்திரமா?' என்று சொல்லிப் பாவேந்தர் அதைக் கலைத்துவிட்டார். இதுதான் சாகும்போது பாவேந்தருக்கிருந்த கடவுட் கொள்கை.

நான் கி.பி. 1962 ஏப்ரல் வாக்கில் என் கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்டு சேலம் திரும்பிவிட்டேன். நான் சேலம் திரும்பியதும், நின்று போயிருந்த குயில் இதழை மீண்டும் தொடங்கினார் பாவேந்தர். நான் ஊருக்குப் புறப்படும்போது, "என்னுடைய பாடல்களை நீ ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அனுப்பு; நான் குயிலில் வெளியிடுகிறேன்" என்று சொன்னார்.

"ஒரு சிறந்த கவிஞரின் கவிதையைக் கருத்துக்கெடாமல் வேற்று மொழியில் மொழி பெயர்ப்பது என்பது மிகவும் சிக்கலான வேலை. உங்கள் கவிதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் அளவுக்கு எனக்கு ஆங்கிலப் புலமை இல்லை" என்று சொன்னேன். "பரவாயில்லை. தெரிந்த அளவு மொழி பெயர்ப்பு செய்" என்று கட்டளையிட்டார். நான் 'அழகின் சிரிப்'பில் உள்ள 'வானவில்' பற்றிய பகுதியையும், பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதியில் உள்ள 'சுதந்தரம்' யாத்திரை போகும்போது' என்ற பாடல்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அனுப்பினேன். அப்பாடல்களைத்

1. காண்க: பிற்சேர்க்கை–4

தொடர்ந்து குயிலில் வெளியிட்டதோடு என் மொழிபெயர்ப்பைப் பாராட்டிக் கீழ்கண்ட சிறப்புக்கவி ஒன்றையும் எழுதி வெளியிட்டிருந்தார்.

நான்செய் தமிழ்ப்பாட்டை நல்லதோர் ஆங்கிலத்தில்
தான்செய் தளிக்கும் தகுதியிலே-வான்போன்றான்
வாழ்கவே நன்முருகு சுந்தரந்தான் வண்மையெல்லாம்
சூழ்கவே சீர்த்தி தொடர்ந்து.

எந்தவித அறிவிப்புமின்றி 1.8.65 இதழோடு குயில் திடீரென்று நின்றுவிட்டது. பாவேந்தரின் பொருளாதார நெருக்கடிதான் காரணமென்று எண்ணுகிறேன். குயில் நின்றதும் பாவேந்தர் பாடலை மொழிபெயர்க்கும் வேலையை நானும் நிறுத்திக் கொண்டேன். இம்மொழி பெயர்ப்புப் பணியைக் குறிப்பிடும்போது, இது பற்றிய வேறுசில செய்திகளையும் குறிப்பிட விரும்புகிறேன். பாவேந்தர் பாடலை மொழிபெயர்க்கும் பணியில் பலர் தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் திருவாளர் பாலகிருஷ்ணன் அவர்கள். இவரைப் பற்றி நான் முதலிலேயே குறிப்பிட்டிருக்கிறேன். தமிழ்க் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதற்கன்றே பிறந்தவர். ஆங்கிலம் இவரிடத்தில் தாய்மொழி போல ஏவல் செய்யும். சுயமரியாதை இயக்கப்பற்றும் பாவேந்தர் பாடலில் அளவு கடந்த ஈடுபாடும் கொண்டிருந்த காரணத்தால் உயிரும் உணர்வும் கெடாமல் கவிதை அழகோடு இவரால் மொழிபெயர்க்க முடிந்தது. பாவேந்தரின் தனிப்பாடல்கள் சிலவற்றையும், எதிர்பாராத முத்தம் காப்பியத்தையும் இவர் மொழிபெயர்த்து முடித்திருந்தார். ஆனால் அம்மொழி பெயர்ப்புகள் இன்னும் அச்சேறாமல் இருப்பது வருந்தத்தக்கது.

பாவேந்தரின் பாடல்கள் சிலவற்றைப் பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையாரும் மொழிபெயர்க்க முயற்சி எடுத்துக் கொண்டார் என்று தெரிகிறது. குடும்பவிளக்கின் முதற்பகுதியை மொழி பெயர்த்துக் கொண்டிருந்தபோது 'கட்டில் அழகு' ஏன்று ஒரு தலைப்பிட்ட ஒரு பாடலை மொழிபெயர்க்க வேண்டி வந்தது.

"சரக்கொன்றை தொங்கலிட்ட பந்தலின் கீழ்
தனிச் சிங்கக் கால்நான்கு தாங்கும் கட்டில்

என்ற வரிகள் வந்ததும் பன்மொழிப் புலவருக்கு மலைப்பு வந்துவிட்டது. 'இதை எப்படி மொழிபெயர்ப்பது?' என்று தெரியாமல் தடுமாறுகிறேன்' என்று பாவேந்தரிடம் குறிப் பிட்டாராம். 'கொன்றை' என்பது தமிழ் நிலத்தில் முல்லையில்

பூக்கும் பூ. அந்தச் சொல்லை அதனுள் அடங்கியிருக்கும் கருத்துச் செறிவும் திணைப்பண்பும் புலப்படும்படி ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பது முடியாது என்று கருதியிருக்கலாம். மேலும் இவ்வரிகளை மொழிபெயர்ப்பவர்கள் பல செய்திகளை உணர்த்தியாக வேண்டும். கொன்றை சரஞ்சாரமாக பூக்கும் தன்மையுடையது என்பதையும், படுக்கையறைக் கட்டில், மீது மலர்ப்பந்தல் போடுவது தமிழ்நாட்டு வழக்கம் என்பதையும், கட்டில் கால்களை அரியணை போல் நான்கு பக்கமும் சிங்கந்தாங்கும்படி கலையழகோடு அமைத்தல் தமிழர் இயல்பு என்பதையும் மொழி பெயர்ப்பில் உணர்த்தியாக வேண்டும். சிரமந்தானே? தமிழ் இலக்கியங்களைப் பிற மொழியில் பெயர்ப்பது என்னும் பணி தனிப்பட்ட ஒருவரின் ஆர்வத்தாலும் ஊக்கத்தாலும் நிறைவேறக் கூடியதா? இஃது ஒரு நாட்டின் அரசாங்கம் பொறுப்பேற்றுச் செய்ய வேண்டிய வேலை. பாவேந்தர் நிலை இரண்டுங்கெட்டான் நிலை. பாவேந்தர் புதுவை மாநிலத்தைச் சேர்ந்தவர். எனவே, தமிழக அரசு புதுவை அரசாங்கம் இப்பணியை மெற்கொண்டு செய்யட்டுமே எனக் காத்திருக்கிறது. புதுவை அரசோ, 'தமிழக அரசு எப்படியும் செய்துவிடும்; நாம் ஏன் இதில் தலையிட வேண்டும்' என்று நினைக்கிறதுபோல் இருக்கிறது. 'பாவேந்தர் ஒரு தமிழர்; அவர் படைப்புக்களை மொழிபெயர்ப்பது தமிழர் கடமை' என்று யாரும் நினைக்கக் காணோம்.

நான் சேலம் திரும்பிய பிறகு எப்போது சென்னை சென்றாலும் பாவேந்தரைச் சென்று பார்த்துப் பேசிவிட்டு வருவது என்பது என் வழக்கமாகிவிட்டது. தமது பொருளாதாரத் தட்டுப்பாட்டின் காரணமாகப் பாவேந்தர் தாம் குடியிருந்த இராமன் தெரு பங்களாவின் முன்பகுதியைக் காலி செய்துவிட்டு ரூ. 70 வாடகையில் பின்கட்டு(Out House)க்குக் குடிபெயர்ந்து போய்விட்டார். நான் ஒருமுறை சென்னை சென்றிருந்தபோது பாவேந்தரும் நானும் திருவல்லிக்கேணிக் கடற்கரைக்குச் சென்றிருந்தோம். அப்போது என் தம்பி முருகுரத்தனம் மாநிலக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளனாகப் பணியாற்றிக் கொண்டிருந்தான். அவன் அப்போது கடற்கரையைப் பார்த்தபடி அமைந்திருந்த பல்கலைக்கழக நிறைகலை மாணவர் விடுதியில் (University PG Students, Hostel) தங்கியிருந்தான். அவனைப் பார்க்கலாம் என்று நானும் பாவேந்தரும் கிளம்பினோம். நாங்கள் கிளம்பும்போது பாவேந்தருக்கு அறிமுகமான ஒரு பார்ப்பன நண்பரும் எங்களுடன் சேர்ந்து கொண்டார். அன்று விடுதியில் ஏதோ விருந்து. பாவேந்தர் புலால் உணவை விரும்பிச் சாப்பிடுபவர் என்பதை அறிந்து

வைத்திருந்த என் தம்பி அவரை விருந்துக்கு அழைத்தான்.

'என்ன item?' என்றார் பாவேந்தர்.

'வான்கோழி பிரியாணி' என்று கூறினான் என் தம்பி.

'அப்படியா? சரி போவோம்!' என்று எழுந்தார்.

பாவேந்தர் அருகில் அமர்ந்திருந்த பார்ப்பன நண்பர் 'அப்ப... நா. வர்ரங்க' என்று சொல்லிக் கைகூப்பிவிட்டு அவசரமாக நகர்ந்தார்.

'நீ... சாப்பிடலயா? வான்கோழி பிரியாணி... எளிதா கிடைக்காத item' என்றார் பாவேந்தர்.

'வேண்டாங்கய்யா... நா வர்ர...' என்றார் அந்த நண்பர்.

'ஏ? கோழி கொத்திப்புடுமுன்னு பயப்படறியா?' என்று கேட்டுவிட்டு உரக்கச் சிரித்தார். பார்ப்பன நண்பர் முகத்தில் அசடு வழிந்தது. இதை இரவில் நான் தூங்கும்போது நினைத்தாலும் குபீரென்று சிரிப்பு வரும்.

மறுமுறை நான் சென்னை சென்றிருந்தபோது, மருத்துவப் பட்டப்படிப்பை முடித்துவிட்டு 'ஹவுஸ்சர்ஜனாக'ப் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த என் இளைய தம்பியின் வேலை தொடர்பாகப் பாவேந்தரைச் சென்று பார்த்தேன். மந்திரி மஜீத்தைத் தாம் இரண்டுமுறை இதுபற்றிச் சென்று பார்த்ததாகச் சொன்னார். 'நீ எதற்காக வீண் செலவு செய்து கொண்டு வந்தாய்? கடிதம் போட்டால் போதாதா? நான் பார்த்துக் கொள்கிறேன். நீ போ!' என்று சொன்னார். ஆனால் மந்திரி மஜீத்தை அவரால் மீண்டும் பார்க்க முடியவில்லை.

கவிஞர் மாநில மாநாடு சேலம் மாவட்டம் இராசிபுரத்தில் 1963ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 9,10 தேதிகளில் நடைபெற இருந்தது. இராசிபுரம் திருக்குறள் ஆட்சி மன்றத்தைச் சேர்ந்த திருவாளர்கள் கி. அரங்காசமி, செ.அங்கமுத்து ஆகிய இருவரும் அம்மாநாட்டை முன்னின்று நடத்தினர். இச்செய்தியை முன்கூட்டி அறிந்த நான் பாவேந்தருக்கு இதுபற்றிக் கடிதம் எழுதிக் கேட்டேன். அவரிடமிருந்து கீழ்க்கண்ட கடிதம் வந்தது.

திரு.புலவர் அவர்களே
அஞ்சல் கிடைத்தது நான் 8.11.63 காலை எக்ஸ்பிரஸ்
பஸ்ஸில் புறப்பட்டு வருகிறேன்.
என்னை, பஸ் சந்திப்பு நிலையத்தில் சந்திக்க வேண்டுகிறேன்
பிற நேரில்.

-பாரதிதாசன்

சென்னையிலிருந்து அரசாங்கப் பேருந்து வண்டியில் பகலெல்லாம் குலுங்கிப் பயணம் செய்து கொண்டு வரப் போவதாகப் பாவேந்தர் எழுதியிருந்த கடிதச் செய்தியைப் படித்ததும் எனக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. அவ்வளவு நீண்ட தொலைவு பேருந்தில் பகல் நேரத்தில் பயணம் செய்வது அப்போதிருந்த அவர் உடல் நிலைக்கு ஏற்றதன்று என்று கருதினேன். எனவே இரவு நேரத்தில் படுக்கை வசதியோடு புகைவண்டியில் வரும்படி அவருக்கு வற்புறுத்தி ஒரு கடிதம் எழுதினேன். என்னுடைய கடிதத்தைக் கண்டதும் அவருக்குச் சுரீரென்று கோபம் வந்துவிட்டது போலும். அவரது விருப்பத்துக்கு மாறாகத்தான் யாரும் பேசக்கூடாதே! நான்கு நாட்கள் கழித்து மிகவும் சூடாகப் பாவேந்தரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது:

5.11.63

அன்பு முருகுசுந்தரம்!

நான் உனக்கு அஞ்சல் எழுதியுள்ளேன். அது கிடைத்திருக்கும். இப்போதும் சொல்லுகிறேன். நான் சென்னையில் சேலம் எக்ஸ்பிரஸில் காலை 7.15க்குப் புறப்பட்டு 8.11.63 மாலை 4.15 மணிக்குச் சேலம் வந்து சேருகிறேன். என் நண்பர் ஒருவரும் என்னுடன் வருவார் கூடுமானால் சந்திக்கவும். மற்றவை நேரில்!

-பாரதிதாசன்

தாம் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தபடியே 8.11.63 மாலை 4.15 மணிக்கு அரசாங்க விரைவு வண்டியில் சேலம் பேருந்து நிலையத்தில் வந்து இறங்கினார். நானும் புலவர் மி.மு. சின்னாண்டாரும் வேறுசில நண்பர்களும் மாணவர் கூட்டத்தோடு மாலையும் கையுமாகக் காத்திருந்தோம். தக்கமுறையில் பாவேந்தரை வரவேற்று வசதியான ஒரு தங்கல்மனையில் கொண்டு போய்ச் சேர்த்தோம். நான் சென்னையில் இருந்தபோது ஒருமுறை சேலம் வரும்படி அவரை வேண்டிக் கொண்டேன். உடனே அவர் 'வரலாம்....' என்னை உன்னால் வைத்துச் சமாளிக்க முடியாது' என்று சொன்னார். அவ்வாறு சொன்னது எனக்கு என்னவோ போல் இருந்தது. தன் விருப்பம் சுடுமையாக மறுதலிக்கப்பட்டால் ஒரு குழந்தை தன் பெற்றோர் முகத்தை எவ்வாறு பார்க்குமோ அவ்வாறு அவர் முகத்தை நான் பார்த்தேன். பாவேந்தர் சேலம் வரும் செய்தி கடிதம் மூலம் என்னை வந்தடைந்ததும் அவர் சென்னையில் சொன்ன இச்சொற்கள் தாம் முதலில் என் நினைவுக்கு வந்தன.

பாவேந்தரின் அன்றாட வாழ்க்கை முறையையும் உணவு முறையையும் நான் பலநாள் நேரில் கண்டறிந்தவன். சேலத்தில் இருக்கும் வரை அவர் மனங்கோணாமல் நடந்து கொள்ள வேண்டுமே என்ற அச்சம் எனக்கு வந்துவிட்டது. அவர் என்ன என்ன

உண்பார் என்று பட்டியல் போட்டுக் கொண்டு அதன்படி என் மனைவியைச் சமைக்கச் சொன்னேன். அவரோடு நான் முதலிலே குறிப்பிட்டிருந்த மெய்க்காப்பாளரும் காக்கி உடுப்போடு வந்திருந்தார். அவ்விருவரும் கூப்பிட்ட சொல்லுக்கு ஏனென்று கேட்க மாணவர் இருவரை அறையின் வாசலிலே நிற்க வைத்திருந்தேன்.

பாவேந்தர் விடுதிக்கு வந்ததும் காப்பி சாப்பிட்டு விட்டுப் பயணக் களைப்புத் தீர்வதற்காகக் கொஞ்ச நேரம் படுத்திருந்தார். மாலை 6 மணி இருக்கும். 'முருகு! நான், மருத்துவரிடம் செல்ல வேண்டும்; மூச்சு இரைக்கிறது. 'இன்சொலின்' போட்டுக் கொள்ள வேண்டும்' என்று கூறினார். நான் அருகிலிருந்த டாக்டர் K.N. ராவிடம் அழைத்துச் சென்று ஊசிபோட ஏற்பாடு செய்தேன். மிகவும் களைப்பாகத் தென்பட்ட பாவேந்தர் ஊசி போட்டுக் கொண்டதும் தெம்பாகவும் சுறுசுறுப்பாகவும் காணப்பட்டார்.

பாவேந்தர் சேலம் வந்திருக்கிறார் என்ற செய்தி தெரிந்ததும் பல புலவர்களும் நண்பர்களும் அவரைத் தேடி வந்துவிட்டனர். பேச்சு தமிழைப் பற்றியும் திருக்குறளைப் பற்றியும் திரும்பியது. அப்போது அங்கு வந்திருந்த 'திருக்குறள் இராமசாமி' என்ற புலவர் 'வள்ளுவர் புலால் மறுத்தலைப் பற்றி வற்புறுத்திக் கூறியிருக்கிறாரே! அதைப் பற்றி உங்கள் கருத்து என்ன?' என்று பாவேந்தரைக் கேட்டார். இந்தக் கேள்வியை அவர் கேட்டுக் கொண்டிருந்தபோது மீன் குழம்பும் புறா வறுவலும் அடங்கிய சாப்பாட்டுத் தூக்கு என் வீட்டிலிருந்து வந்து சேர்ந்தது.

பாவேந்தர் அப்புலவரை உற்றுப் பார்த்து 'வள்ளுவரின் புலால் மறுப்புக் கொள்கையை ஏற்றுக் கொண்டால் தமிழன் உருப்பட மாட்டான்; கோழையாகி விடுவான். வெறும் கத்தரிக்காயையும் வெண்டைக்காயையும் தின்று தின்று தமிழனுடைய வீரமே போச்சு. கோழி, ஆடு இவற்றை அறுக்கணும். அவற்றிலிருந்து பீறிட்டடிக்கும் பச்சை ரத்தத்தைச் சிறுவர்கள் பார்க்கணும். அப்பத்தா.. அவுங்க அச்சம் நீங்கும்!' என்றார். புலவர் அதிர்ச்சியால் வாயே திறக்கவில்லை.

அடுத்தநாள் காலை 10 மணிக்குமேல் நாங்கள் கவிஞர் மாநாட்டுக்காக இராசிபுரம் புறப்பட்டோம். மாநாட்டுத் தலைவராகிய பாவேந்தர் அலங்கரிக்கப்பட்ட வண்டியில் விவேகானந்த நகர் ஏசு மாளிகையிலிருந்து மாநாடு நடைபெறவிருந்த அரங்க விலாசத் திரைப்படக் கொட்டகைக்கு மேளதாளத்தோடு அழைத்துச் செல்லப்பட்டார். மாநாட்டின் முதல் நிகழ்ச்சியாகத்

திருவள்ளுவர் படத் திறப்பு விழா நடைபெற்றது. புலவர் குழந்தை திருவள்ளுவர் படத்தைத் திறந்து வைத்தார். மாநாட்டின் துவக்கவுரைப் பேச்சாளராக நாமக்கல் கவிஞரின் பெயர் போடப்பட்டிருந்தது. ஆனால் அவர் மாநாட்டுக்கு வரவில்லை. இம்மாநாட்டில் கரத்தைப் புலவர் ந.இராமநாதன், அரசினர் பயிற்சிக் கல்லூரியில் அப்போது பேராசிரியராக இருந்த கு.சிவமணி, ஈரோடு புலவர் தமிழன்பன், பழனி இளங்கம்பன் ஆகியோரும் கலந்து கொண்டனர். பாவேந்தர் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் நானும் பங்கேற்றேன். இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் திரு.சி.பா. ஆதித்தனார் 'வள்ளுவர் கண்ட தமிழகம் அன்றும் இன்றும் என்றும், என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார். மாநாட்டுக்குத் தலைமைதாங்கிய பாவேந்தர் உரை ஒரே உணர்ச்சிப் பிழம்பாகவும் ஆவேசமாகவும் இருந்தது. அந்த மாநாடு நடைபெறுவதற்குச் சற்று முன்தான் 'தீக்குறளை சென்றோதோம்' என்ற திருப்பாவை அடிக்குக் காஞ்சி சங்கராச்சாரியார் புதிய உரை சொல்லித் தமிழறிஞர்களின் ஏகோபித்த கண்டனத்துக்கு ஆளாகியிருந்தார். பாவேந்தரின் ஆவேசத்துக்குச் சொல்ல வேண்டுமா!

மாநாடு நடந்த இரண்டு நாட்களும், நாங்கள் பாவேந்தரோடு இராசிபுரம் அரசினர் பயணிர் விடுதியில் தங்கியிருந்தோம். பாவேந்தரும், புலவர் குழந்தையும், புலவர் இராமநாதனும் ஓயாமல் தமிழைப் பற்றிப் பேசியும் வாதிட்டுக் கொண்டும் இருந்தனர். எங்களுக்கெல்லாம் அவர்கள் பேச்சு சீரணிக்க முடியாத பெரிய விருந்தாக இருந்தது. பாவேந்தரும் புலவர் குழந்தையும் தமிழ்ப் புலவர் உலகில் முரட்டுத்தனத்துக்குப் பேர் போனவர்கள். இந்த இரண்டு பேருமே மதயானை போல் சில கருத்தில் மோதிக் கொள்வார்கள். நாங்கள் அச்சத்தோடும் வியப்போடும் அவர்களையே பார்த்துக் கொண்டிருப்போம். பாவேந்தர் கடைசியாக 'அது அப்படித்தா!' என்று அடித்து முழங்குவார். புலவர் குழந்தை பேசாமல் இருந்துவிடுவார்.

பொதுவாக இதுபோன்ற இலக்கிய மாநாடுகளுக்கு வாழ்த்துச் செய்திகள் தாம் வருவது வழக்கம். 9.11.63 திங்கட்கிழமை முற்பகல் நாங்கள் மாநாட்டு மேடையில் அமர்ந்திருந்தபோது உயர் திருவாளர் புரட்சிப் பாவலர் பாரதிதாசன் அவர்கள், மே/பா 'கவிஞர் மாநில மாநாடு' என்று முகவரி போட்டு ஓர் அஞ்சல் உறை வந்தது. அதில் நான்கு முழுப்பக்க அளவில் ஓர் வசைக் கவிதை இருந்தது. அஞ்சல் உறையின் மறுபக்கத்தில் ம.இலெ. தங்கப்பா மே/பா 'தென்மொழி', திருப்பாதிரிப்புலியூர் கடலூர் பு.ந. என்று

அவ்வசைக் கவிதைக்குரியாரின் முகவரி எழுதப்பட்டிருந்தது. அவர் யாரையும் பெயர் சுட்டாமல் பொதுவாக மாநாடடையும், மாநாட்டில் கலந்து கொண்ட எல்லாக் கவிஞரையும் தமிழுணர்வு அற்றவர்களென்று திட்டித் தீர்த்திருந்தார். 'பாவலர் மாநாடு' என்று போடாமல் 'கவிஞர் மாநாடு' என்று போட்டிருந்ததே அவ்வசைப் பாடலுக்குரிய அடிப்படைக் காரணம். அப்பாடலைப் பாவேந்தரிடம் காட்டினேன். 'இது அந்தத் துரை மாணிக்கம் வேலை' என்று மட்டும் சொல்லிவிட்டுப் பேசாமல் இருந்துவிட்டார்.

10.11.63 பிற்பகல் கவிஞர் தமிழன்பனோடு பாவேந்தர் ஈரோடு புறப்பட்டுச் சென்றுவிட்டார். 11.11.63 திங்கட்கிழமை பிற்பகல் ஈரோடு மதரசா உயர்நிலைப் பள்ளியில் பாவேந்தரின் சொற்பொழிவு நடைபெற்றது. அடுத்த நாள் பாவேந்தர் சேலம் வந்துவிட்டு அன்று இரவே சென்னை புறப்பட்டுச் சென்றுவிட்டார். இரண்டாம் முறை அவர் சேலம் வந்தபோது நான் ஊரில் இல்லை. தவிர்க்க முடியாத ஒரு வேலையின் காரணமாக நான் திருச்செங்கோடு சென்றுவிட்டேன். அன்று பாவேந்தரை விடுதியில் சென்று சந்திக்க முடியாமல் போனது எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. என் வருத்தத்தைத் தெரியப்படுத்தி அவருக்கு ஒரு கடிதம் எழுதினேன். உடனே பாவேந்தர் அதற்குக் கீழ்க்கண்ட மறுமடல் விடுத்தார்.

16.11.63

திரு முருகு வாழ்க
நாங்கள் அங்கு வந்தபோது எமக்குப் பேருதவி புரிந்தீர்கள். நன்றி.
13.11.63ல் நீங்கள் எழுதிய அஞ்சல் கண்டேன்
சேலம் ஓட்டலில் நீங்கள் சந்திக்க இயலாமை இயல்பு.
யாம் அதுபற்றி வருந்தவில்லை.

நன்றி மறவாத
பாரதிதாசன்

இராசிபுரத்தில் கவிஞர் மாநில மாநாடு நடைபெற்ற அதே ஆண்டு பாவேந்தர் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க ஓரிரண்டு நிகழ்ச்சிகள் சென்னையிலும் நடைபெற்றன. 29.4.63இல் சென்னை அண்ணாமலை மன்றத்தில் 'பாவேந்தர் பாரதிதாசனார் 74ஆவது பிறந்தநாள் விழா' நடைபெற்றது. அதன் அழைப்பிதழ் ஒன்று எனது சேலம் முகவரிக்கு வந்தது. இந்த 74ஆவது பிறந்தநாளை நடத்த ஒரு விழாக்குழு அமைக்கப்பட்டிருந்தது. விழாக்குழுவின் தலைவராகத் திருவாளர் N. பாபு ஜனார்த்தனம், B.A., B.Com. (கோல்டன் ஸ்டுடியோ உடையவர்) அவர்களது பெயர் போடப்பட்டிருந்தது. திருவாளர்

கள் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. நடிகவேள் M.R.ராதா, குணச்சித்திர நடிகர் S.V. சகஸ்ரநாமம், பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார், நாரண. துரைக்கண்ணன், கவிஞர் கண்ணதாசன், திருமதி அனுசூயா தேவி ஆகியோர் அவ்விழாவில் வாழ்த்துரை வழங்குவர் என்று விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. அவ்விழாக் குழுவில் சினிமா ஆர்ட் டைரக்டர் அம்மையப்பன், கவிஞர் தஞ்சைவாணன், திரைப்பட நடிகர்கள் O.A.K. தேவர், R. பக்கிரிசாமி, புதுவைத் தமிழழகன், எண்ணூர் கொத்தாரி உர உற்பத்திச்சாலை பொது மேலாளர் நல்லபெருமாள் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். பாவேந்தரின் 'பாரதப் பாசறை' என்ற நாடகம் வழக்கறிஞர் V.P. இராமன் தலைமையில் நடைபெறுவதாக இருந்தது. ஆனால் இந்த விழா எந்த அளவு வெற்றிகரமாக நடைபெற்றது என்று தெரியவில்லை.

அடுத்த ஆண்டு பாவேந்தரின் 75ஆவது பிறந்த நாளைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்குச் சிலர் முயற்சி எடுத்துக் கொண்டனர். இறங்கு துறையிலேயே நீத்தானது போல் விழாக்குழு அமைப்பதிலேயே பெரும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு விழா முயற்சி உடைந்தது. இவ்வமைப்புக் குழுச் சண்டையில் என் தம்பி முருகரத்தனத்தின் பெயரும் அடிப்பட்டது. சென்னை சென்று இதைப் பற்றி அறிய வேண்டும் என்று நான் எண்ணிக் கொண்டிருந்த நேரத்தில் பாவேந்தரிடமிருந்தே இதுபற்றி ஒரு கடிதம் வந்தது. அதில் நாள் குறிப்பிடவில்லை. கடிதம் 1964ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் வாரத்தில் என்னை வந்தடைந்தது. அக்கடிதம் முகவரி அச்சிட்ட அவர் கடிதத்தாளில் (Letterpad) எழுதப்பட்டிருந்தது. ஓவியர் சர்மா தீட்டிய பாவேந்தரின் வண்ணப்படம் அத்தாளின் உச்சியில் மூன்று வண்ணத்தில் அழகாக அச்சிடப்பட்டிருந்தது. இதுதான் பாவேந்தரிடமிருந்து எனக்கு வந்த கடைசிக் கடிதம்.

பாவேந்தர் பாரதிதாசன்

10, இராமன் தெரு
தியாகராய நகர், சென்னை-17

திரு கவிஞர் முருகுசுந்தரம் அவர்கள்,
ஆசிரியர், சேலம் கல்லூரி

அன்புள்ள தோழர்க்கு;

15 நாள் முன்னர் என்னிடம் நாரண துரைக்கண்ணர் வந்தார். சென்னையில் உங்கள் 75ஆண்டு பிறந்தநாள் விழாவைக் கொண்டாடப் போகின்றோம். உங்களிடம் அது பற்றி அனுமதி கோருகிறோம் என்றார் - நன்று என்றேன்.

மேலும் நான் அவரிடம் சொன்னது என்ன என்றால்-பலர் இவ்வாறு

என்னை அனுமதி கேட்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நீங்களே-பதில் எழுதி அனுமதியும் கொடுத்துக் கொள்ளுங்கள் என்றேன்.

அப்படியானால் விழாவுக்கென மத்தியக்குழு ஒன்று அமைக்க வேண்டும் என்று யோசனை கூறினார். நன்று என்றேன்.

இதை நும் தம்பி முருகரத்தினத்திடம் கூறினேன். எல்லாம் எனக்குத் தெரியும், நான் நாரண துரைக்கண்ணனிடம் கலந்து ஏற்பாடு செய்து கொள்ளுகிறேன் என்றார்.

மறுநாள் வந்தார். அந்த மத்தியக் கமிட்டியில் - நெடுஞ்செழியன், சிற்றரசு முதலியவர்களைப் போடலாமல்லவா? என்றார்.

கடுமையாக மறுத்தேன்.

பிறகு வீரமணியைப் போடலாமா என்றார். மறுத்தேன்.

எஸ். இராமநாதன், முன்னாள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மணவாள ராமானுஜம், வி.பி. இராமன், அகிலன் முதலியவர்களைச் சொன்னேன். அவர் அவர்களை மறுத்தார்.

இன்று-அதாவது பதினைந்து நாட்களுக்குப்பின் ஆர்ட் டைரக்டர் அம்மை அப்பன் வாயிலாகச் சேதி அனுப்பப்பட்டிருக்கிறது-

வேறு யாரையாவது கொண்டு விழாவை நடத்திக் கொள்ளச் சொல்லுங்கள் என்று-

நான் இவர்களைக் கேட்டதுண்டா விழா நடத்தச் சொல்லி? இதை உங்களிடம் சொல்லி வைத்தேன்.

பாரதிதாசன்

N.B.இதனுடன் திரைப்படத்தில் மகாகவி பாரதி என்ற அறிக்கைகள் 3 அனுப்புகிறேன்'

உங்களுக்கொன்று. ஏ. சித்தையன் அவர்கட்கு ஒன்று. தனபால் ஜவுளி அவர்கட்கு ஒன்று சேர்த்துவிடுக - பா.

பாரதியின் வரலாற்றை விரைவில் எழுதி முடித்துவிட வேண்டு மென்று பாவேந்தர் என்னிடம் கூறியதாக நான் முதலிலேயே குறிப்பிட்டுள்ளேன். அப்பணி 1964ஆம் ஆண்டு ஏப்ரலில் தான் முற்றுபெற்றது. அப்பணி முற்றுப்பெறுவதற்குக் காத்திருந்ததுபோல் இருந்துவிட்டு, அப்பணி முடிந்ததும் அவர் உயிர் பிரிந்தது. சென்னைக்கு வந்து 'பாரதிதாசன் பிக்சர்ஸ்' படக்கம்பனியை ஆரம்பித்துப் பாவேந்தர் பல துன்பங்களுக்கு ஆளானார். இப்படக் கம்பனியே அவர் பட கம்பனியாயிற்று; இறுதி ஐந்தாண்டுகள் அவர்

1. பாவேந்தர் அறிக்கையைப் பிற்சேர்க்கை-5இல் காண்க.

மன அமைதியை அடியோடு குலைத்தது; இன்னும் பத்தாண்டுகள் கழித்து வரவேண்டிய அவர் சாவுக்குக் கட்டியம் கூறியது.

பாண்டியன் பரிசு பெரிய அளவில் ஒரு வரலாற்று வண்ணத்திரைப் படமாக வெளிவர வேண்டும் என்பது அவர் இடையறாத ஏக்கம், சென்னைக்கு வந்து ஓராண்டில் அவ்வெண்ணம் பட்டுப் போயிற்று. அதன் பிறகு ஓர் ஆங்கிலக் கதைக்குச் 'சினோரியோ' எழுதினார். அதுவும் கனவாயிற்று என்றாலும் அவருடைய படம் பிடிக்கும் ஆசை தீரவில்லை. சாவதற்கு ஒரு திங்கள் முன்பாக அவர் உள்ளத்தில் ஒரு பெருத்த உந்துதுல் ஏற்பட்டது. பாரதியின் வாழ்க்கையையாவது படமாக எடுத்து முடித்துவிடவேண்டும் என்று எண்ணினார். 'கப்பலோட்டிய தமிழன்' திரைப்படத்தை பார்த்தபோது இவருள்ளத்தில் இந்த எண்ணம் முதலில் முளைவிட்டதாம். அப்படத்தில் நடிகர் திரு. S.V. சுப்பையா பாரதியாராகத் தோன்றி உணர்ச்சி பொங்க வீராவேசமாக நடித்தது இவருள்ளத்தைப் பெரிதும் கவர்ந்துவிட்டது.

"அப்படியே பாரதியார் போலவே இருந்தது. ஆகா! என்ன நடிப்பு! வேறு யாரும் பாரதியார் வேடந்தாங்கி அப்படி நடிக்க முடியாது. அவரைப் போட்டு 'மகாகவி பாரதியார்'[1] என்ற படத்தை எடுக்க வேண்டும்!' என்று பாவேந்தர் அடிக்கடி கூறியது என் நெஞ்சில் பசுமையாக இருக்கிறது.

'மகாகவி பாரதியார்' படமெடுத்தால் தமிழ்நாட்டு மக்கள் தமக்குக் கட்டாயம் ஆதரவளிப்பார்கள் என்று நம்பினார். சென்னை நடிக நண்பர்கள் எப்படியாவது கைகொடுப்பார்கள் என்று அவர் உள்ளத்தில் ஒட்டி ஊசலாடிக் கொண்டிருந்த ஒட்டடையைத் துடைத்தெறிந்து விட்டுப் புதிய திட்டம் ஒன்று வகுத்தார். அத் திட்டத்தின் முதல் கட்டம்தான் 'திரைப்படத்தில் மகாகவி பாரதி' என்ற அறிக்கை. தமிழ்நாட்டின் பட்டி தொட்டியெல்லாம் பாவேந்தருக்கு நண்பர் பட்டாளமும், அடியவர் திருக்கூட்டமும் உண்டு.

ஒரு பெரிய அரசியல் தலைவருக்குரிய மக்கட் கூட்டம் இவர் பின்னால் உண்டு. இத்திருப் பணியைப் பாவேந்தர் சென்னைக்குக் குடிவந்த புதிதில் 1960லேயே துவக்கியிருந்தால் அவர் வாழ்க்கையின்

1) 1942இல் பாரதியார் வாழ்க்கையைத் திரைப்படமாக்கப் பாவேந்தர் முயன்றார். அதுவும் தடைப்பட்டுப் போயிற்று.

இறுதி நாட்கள் மிகவும் மகிழ்ச்சியாகவும், அமைதியாகவும் கழிந்திருக்கும். செல்வ வளத்தோடும் வாழ்ந்திருக்க முடியும்.

என் விண்ணப்பம் இதுதான்
எதுவும் நல்கியிங் கெவ்வகை யானும்
இப்பெருந் தொழில் நாட்டுவம் வாரிர்!

என்று பாவேந்தர் இவ்வறிக்கையின் மூலம்விட்ட வேண்டுகோள் காலங்கடந்த வேண்டுகோள் ஆகிவிட்டது. தயிரைக் கடைவதற்கு எடுத்து மத்தை உள்ளே விட்டவுடன் பானையே உடைந்து விட்டது.

இவ்வேண்டுகோள் ஓரிரண்டு ஆண்டுகளுக்கு முன் பாவேந்தரிட மிருந்து வெளியாகியிருந்தால் படம் பிடிப்பதற்கான பெருந் தொகையைத் தமிழ்நாட்டு மக்களே திரட்டிக் கொடுத்திருப்பார்கள். அப்போது காமராசர் தான் முதலமைச்சராக இருந்தார். தமிழக அரசின் ஆதரவும் ஒத்துழைப்பும் கூட இவருக்குக் கிடைத்திருக்கும்.

படத்துறையை நம்பிச் சென்னை வந்ததால் பொன்னான அவர் உழைப்பும், கைப்பொருளும் வீணாயின. அவருடைய தகுதிக்குக் குறைவான பலருடைய வாசலில் போய் நின்றதால், வாழ்நாள் முழுவதும் அவர் இறுமாப்போடு காத்துவந்த மானஉணர்வும், மரியாதையும் கூடக் காயம்பட்டன. இவை எல்லாவற்றையும்விட ஒரு நாட்டின் பெருங்கவிஞன் வாழ்க்கையின் முதிர்ந்த நிலையில் பெறக்கூடிய பெருஞ்சிறப்புகளையும் மரியாதைகளையும் கூட இவர் இழக்க வேண்டி நேரிட்டது.

பாரதிய ஞானபீடம் 1964ஆம் ஆண்டுக்குரிய ஓரிலக்க ரூவாய் இலக்கியப் பரிசை இவருக்கு வழங்குவதாக இருந்தது. அதற்குரிய பூர்வாங்க வேலைகளெல்லாம் கூட முற்றுப் பெற்றுவிட்டன. இப் பரிசு வாழும் கவிஞர்களுக்கு வழங்கும் பரிசு 1964ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் இவர் இறந்ததும், இவருக்குக் கிடைக்கவிருந்த இப்பரிசு மலையாளக் கவிஞரான சங்கரகுருப்பிற்குக் கொடுக்கப்பட்டு விட்டது. இது பாவேந்தருக்கு மட்டுமன்று; தமிழ்க் கவிதைத் துறைக்கும் தமிழ் நாட்டுக்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும்.

பாவேந்தருக்கும் தமிழ்க்கவிதைக்கும் கிடைக்கவிருந்த பெருஞ்சிறப்புப் பறிபோனது பற்றி நான் மிகவும் வருந்தினேன். இப்பரிசுக் குழுவில் ஓர் உறுப்பினராக இருந்த திருவாளர் காரைக்குடி சா.கணேசன் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதி இதுபற்றி விசாரித்தேன். அவர் அன்பு கூர்ந்து இது பற்றிய விளக்கத்தை எனக்குக் கடிதம் மூலம் தெரியப்படுத்தினார்கள். அவர் கடிதத்தைக் கீழே கொடுத்திருக்கிறேன்.

Phone: 600&396
கம்பன் அடிப்பொடி Kamban Manimandapam
Kamban Adippodi Karaikudi - 623 002

ஓம்

20.5.76

அன்புள்ள முருகுசுந்தரம் அவர்கட்கு வணக்கம்; உங்கள் *17.5.76* கடிதம். நன்றி.

பாவேந்தர் வரலாற்றைத் தொகுத்தெழுதும் உங்கள் முயற்சியை வரவேற்கிறேன். முழுவெற்றி பெற வாழ்த்துகிறேன்.

பாரதீய ஞானபீடம் எவ்வித வேறுபாடுமின்றி இந்திய இலக்கியப் படைப்பிற்கு ஆண்டுதோறும் ஓரிலக்க ரூபாய் பரிசு வழங்குவது நாமெல்லாம் அறிந்ததே.

*1964*ல் பன்மொழிப் புலவர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், திரு. பெரியசாமித் தூரன் இவர்களுடன் யானும் சேர மூவர் குழு பரிந்துரை செய்ய நியமிக்கப் பெற்றது.

தெ.பொ.மீ.அக்குழுத் தலைவர்

எங்களுள் மாறுபடின்றி மூவரும் பாவேந்தர் தாம் பரிசுக்குரியவர் என்ற ஒரே முடிவுக்கு வந்தோம். அங்ஙனமே எங்கள் பரிந்துரையை முறைப்படி ஞானபீடத்திற்கு அனுப்பி வைத்தோம். இத்தகவலைப் பாவேந்தர் மகனிடம் யானே நேரில் கூறினேன்.

இதில் ராஜாஜி எந்தவிதத்தும் தலையிடவில்லை. தலையிடவும் மாட்டார்கள். ஆனால் எங்கள் பரிந்துரை பற்றி அவர்களிடம் கூறினேன். அவர்கள் எங்கள் முடிவு சரியானதே என்றும் கொள்கைக் கோலை வைத்துக் கவிதையை அளக்காத எங்கள் முறையே நன்றென்றும் கூறிப் பாராட்டினார்.

பாரதிதாசன் கவிதை நலத்தையும் மனிதப் பண்பாட்டையும் மதிப்பதற்குக் கொள்கை அல்லது கட்சிச் சார்பு என்றுமே தடையாக அமையப்படாது என்பதே அக்குழுவிலிருந்த மூவருடைய ஒருமித்த கருத்து.

உங்கள் பணி செம்மையாகவும் திறமையாகவும் நிறைவேறும் என்பதற்கு உங்கள் ஆர்வமும் அணுகுமுறையுமே சான்றாக உள்ளன. வாழ்க!

அன்பன்
கம்பன் அடிப்பொடி

சென்னைக்கு வந்து படத்துறை முயற்சிகளை மேற்கொண்டது தவறு என்று 1964ஆம் ஆண்டு துவக்கத்தில் பாவேந்தர் உணர்ந்திருக்க வேண்டும். அவ்வாறு படத்துறைக்கு வந்தும் பாரதியின் வாழ்க்கையைத் திரைப்படமாக்காமல் இவ்வளவுநாள் தம் முயற்சியையும், உழைப்பையும், காலத்தையும் பாழடித்து விட்டோமே என்று வருந்தியிருக்க வேண்டும். வயது முதிர்ச்சியும் தள்ளாமையும் அவரை அச்சுறுத்தவே, விரைவில் பாரதியின் வரலாற்றை எழுதி அதைத் திரைப்படமாக்கிவிட வேண்டும் என்று எண்ணியிருப்பார். இந்த அவசரத் தூண்டுதல் அவரைக் கடுமையான உழைப்பில் தள்ளியது. இரவு பகலாக விழித்திருந்து 'மகாகவி பாரதி'யின் திரைக்கதையையும் வசனத்தையும் எழுதி முடித்தார். கடுமையான உழைப்பும், மன அமைதியின்மையும் அவர் வாழ்வை முடித்துவிட்டன.

21.4.64 சென்னையிலிருந்து ஒரு கடிதம் வந்தது. சென்னையிலிருந்து என் தம்பி இளங்கோவன் எழுதியிருந்தான். மாரடைப்பினால் தாக்கப்பட்டுச் சென்னை அரசாங்க மருத்துவமனையில் பாவேந்தர் சேர்க்கப்பட்டுள்ளார் என்ற செய்தி அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. அன்று இரவு சென்னை செல்லுவதற்கு வேண்டிய முயற்சிகளில் நான் ஈடுபட்டேன். எதற்கும் மாலைச் செய்தித் தாளைப் பார்த்துவிடலாம் என்று எண்ணினேன். சேலம் மாலை முரசில் பாவேந்தர் இறப்பைப் பற்றிய செய்தி கொட்டையெழுத்தில் அவர் படத்தோடு போடப் பட்டிருந்தது. அடக்கம் செய்வதற்காக அன்று மாலை அவர் சடலம் புதுச்சேரிக்குக் கொண்டு செல்லப்படும் என்ற செய்தியும் வெளியாகி யிருந்தது. உடனே கடலூர் மார்க்கமாகச் செல்லும் புகை வண்டியில் ஏறிப் புதுவை புறப்பட்டேன். அடுத்த நாள் காலை 8 மணியளவில் புதுவையை அடைந்தேன். புதுவை நகரமே வெள்ளக்காடாக இருந்தது. பெருமாள் கோயில் தெருவில் எள் விழ இடமில்லை.

பாவேந்தர் வீடு தொட்டிக்கட்டு வீடு. நடுவில் இருந்த தொட்டியில் தென் வடலாகப் பாவேந்தர் படுக்க வைக்கப்பட்டிருந்தார். அவரைச் சுற்றி மாலைகளும் மலர் வளையங்களுமே தென்பட்டன. மக்கள் கூட்டம் ஓயாமல் உள்ளே வருவதும் போவதுமாக இருந்தது. பாவேந்தரின் மனைவியாரும் மக்களும் காலடியில் அமர்ந்து அவர் பாதத்தைக் கண்ணீரால் நினைத்துக் கொண்டிருந்தனர். நடிகர் எம்.ஆர்.ராதா உள்ளே வந்து பாவேந்தருக்கு மாலையணிவித்துத் தம் இறுதி வணக்கத்தைச் செலுத்திக் கொண்டிருந்தார்.

பாவேந்தர் மகன் கோபதி அருகிலிருந்த சுவரில் தலையை மோதிய வண்ணம், 'பாவிகளா! சினிமா ஆசையைக் காட்டி எங்கப்பாவைக்

கொன்னுட்டீங்களே!' என்று கதறிக் கொண்டிருந்தார். கவிஞர் பொன்னடி அருகிலிருந்து கோபதிக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தார். தமிழ்நாடு-புதுவை மாநிலங்களைச் சேர்ந்த முக்கிய அரசியல்வாதிகளும், கவிஞர்களும், புலவர்களும் பெருமாள் கோயில் தெருவெங்கும் நின்று கொண்டிருந்தனர்.

பாவேந்தரின் இறுதி ஊர்வலம் அவர் வீட்டிலிருந்து காலை பத்து மணிக்குத் துவங்கியது. மகாகவி பாரதி திருவல்லிக்கேணியில் இறந்தபோது அவரை அடக்கம் செய்வதற்காகப் புறப்பட்ட ஊர்வலத்தில் முப்பது பேர் தாம் கலந்து கொண்டதாக ஓர் அன்பர் செய்தித்தாளில் ஒருமுறை வருந்தி எழுதிக் கண்ணீர் வடித்திருந்தார். ஆனால் பாவேந்தரது இறுதிப் பயணத்தில் 10,000 பேர் கலந்து கொண்டார்கள். ஊர்வலம் ஒரு மைல் தூரம் இருந்தது. பாவேந்தரின் எழுத்துச் சாட்டைக்கு அடிக்கடி இலக்கான புதுவை முதலமைச்சர் குபேர் வழியில் பாவேந்தருக்கு மாலையிட்டு வணங்கினார். வேறு இரண்டு புதுவை அமைச்சர்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். கூட்டம் நடுப்பகல் 12 மணிக்கு மயானத்தை அடைந்தது. எந்தச் சடங்குகளும் இல்லாமல் பாவேந்தர் அடக்கம் செய்யப்பட்டார்.

பாவேந்தர் அடக்கம் செய்யப்பட்டபோது கவிஞர் பொன்னடியான் கையில் ஒரு பெரிய மாலையுடன் நின்று கொண்டிருந்தார். பாவேந்தர் சடலம் குழியில் இறக்கப்பட்டபோது மிகவும் கவனமாகக் கையிலிருந்த மாலையைப் புதைகுழியில் போட்டார். நான் அருகில் நெருங்கிக் கேள்விக்குறியோடு அவரைப் பார்த்தேன்.

"பாவேந்தரின் அன்புக்குரிய ஓர் அம்மையார் சென்னையில் இம்மாலையை என் கையில் கொடுத்து மறக்காமல் அவர் உடலோடு இதையும் சேர்த்துப் புதைக்குமாறு வேண்டிக் கொண்டார்" என்று கூறினார் பொன்னடி.

பாவேந்தர் அடக்கம் செய்யப்பட்டதும் அம்மயானத்திலேயே ஓர் இரங்கற் கூட்டமும் நடைபெற்றது. யாரோ ஓர் புதுவைப் பிரமுகர் கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார். திருவாளர்கள் ம.பொ.சி., ஈ.வி.கே. சம்பத், கவி கா.மு.ஷெரீஃப், இரா. நெடுஞ்செழியன், மு.கருணாநிதி, என்.வி. நடராசன், கண்ணதாசன், சுப்பையா (பொதுவுடைமைக் கட்சித் தலைவர்), குத்தூசி குருசாமி ஆகியோர் பேசினர். அவ்வை திரு.டி.கே.சண்முகம் 'துன்பம் நேர்கையில்', 'உலகப்பன்' ஆகிய பாவேந்தர் பாடல்களைப் பாடினார். பாவேந்தரின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டு சென்னை திரும்பிய மயிலை லோகநாதன் என்ற தி.க.நண்பர் மாரடைப்பால் உயிர் துறந்தார்.

சில கவிதைகளின் தோற்றம்

கவிஞர்கள் தாம் எழுதும் கவிதைகளைத் தாமே சிந்தித்து கற்பனையாகவும் எழுதுவர்; தமது வாழ்க்கையிலும், தம்மைச் சார்ந்தோர் வாழ்க்கையிலும் ஏற்படும் எதிர்பாராத சில நிகழ்ச்சிகளின் உந்துதல்களாலும் உணர்ச்சி வசப்பட்டு எழுதுவர். இத்தகைய உந்துதல்கள் எல்லாக் கவிஞர்களின் வாழ்க்கையிலும் உண்டு. அரசியலிலும், சமுதாய மறுமலர்ச்சி இயக்கத்திலும், ஆசிரியர் பணியிலும் ஈடுபட்டிருந்த பாவேந்தர் உணர்ச்சி வசப்பட்டு ஆவேசம் கொள்வதற்கு அவர் வாழ்க்கையில் எத்தனையோ வாய்ப்புகள் இருந்திருக்கும். பிறர்மீது கொண்ட அன்பினாலும், உள்ள(மன) நெகிழ்ச்சியாலும் எத்தனையோ கவிதைகள் தோன்றி யிருக்கலாம். அவ்வாறு தோன்றிய சில கவிதைகள் உணர்ச்சிப் பிழம்புகளாய், உயிரோவியங்களாய் வடிவம் பெற்று இலக்கியத்தில் ஏறி மக்கள் நெஞ்சில் நிலைத்து நின்று விட்டன. அத்தகைய சில கவிதைகளையும், அக்கவிதைகளை எழுதத் தூண்டிய வரலாற்று நிகழ்ச்சிகளையும் இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன்.

திருமணம்:

இப்பாடல் 1949ஆம்ஆண்டு எழுதப்பட்டது. பெரியாருக்கும் மணியம்மைக்கும் நடைபெற்ற திருமணம் இந்த நூற்றாண்டில் வரலாற்று முக்கியத்துவம் பெற்றது என்பதைத் தமிழகம் அறியும். அத்திருமணத்தால் திராவிடர் கழகம் இரண்டாக உடைந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றியது. சமுதாய சீர்திருத்த இயக்கமாக இருந்த திராவிடர் இயக்கத்தின் அடிப்படைக்

கொள்கையை மாற்றி, அதற்கு அரசியல் திருப்பங் கொடுத்துத் தமிழகத்தில் ஆட்சி மாற்றத்தையே ஏற்படுத்திய பெருமை இந்தத் திருமணத்துக்குண்டு.

இந்தத் திருமணத்தின் பின்விளைவுகள் எப்படியிருந்தாலும், திருமணம் நடந்த நேரத்தில் இது பெரிய சர்ச்சைக்கும் கொள்கைப் போருக்கும் காரணமாக இருந்தது. கழக இதழ்களான விடுதலையும் திராவிடநாடும் எதிரெதிர் பாசறைகளாக மாறின. கழக அறிஞர்கள் இரண்டு பக்கமும் அணிவகுத்து நின்று கொள்கைப் போர் நடத்தினர். அப்போர் சுவையானதாகவும், அறிவுக்குப் பெரிய விருந்தாகவும் இருந்தது. உலகத்தில் நடைபெற்ற இலட்சியத் திருமணங்களும், அவைகட்கு மறுப்புகளும் நாள்தோறும் சட்ட நுணுக்கங்களோடு வெளியாகிக் கொண்டிருந்தன. எங்கு பார்த்தாலும் 'கண்ணீர்த் துளிகள்' பற்றிய பேச்சாகவே இருந்தது.

அறிஞர் அண்ணாவும் கைவல்யம் அவர்களும் எதிரெதிர் நின்று எழுத்துப் போர் நடத்திக் கொண்டிருந்தனர்.

"ஏழெட்டு ஆண்டுகள் பலர் முன்னிலையில் பழகி, சமைத்து உணவிட்டு, எழுத்தராகவும், செயலாளராகவும் பணிபுரிந்த முப்பது வயதான ஒரு பெண், தான் மணக்கும் ஒருவரைப் பற்றித் தெரியாமலா திருமணம் செய்து கொள்வாள்?" என்று கேட்டார் கைவல்யம்.

"பெரியாரின் தேவைகளைக் கவனித்துக் கொள்ள நானில்லையா? மிராந்தா இல்லையா? இதற்கு ஒரு மணியம்மை தேவையா?" என்று அண்ணா கேள்விக் கணை தொடுத்தார்.

அதற்குக் கைவல்யம், "நீங்கள் இருக்கலாம். ஆனால் பெரியாரின் தினவறிந்து சொறிந்துவிட உங்களால் ஆகுமா?" என்று கேட்டார்.

இக்கருத்துப் போராட்டத்தில் பாவேந்தரும் உணர்ச்சி வசப்பட்டுச் சில அறிக்கைகள் வெளியிட்டுவிட்டுப் பின்னர் ஒதுங்கிக் கொண்டார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் எதிர்ப்பு அணியிலே பிறகு வாழ்நாள் பூராவும் இருந்து வந்தார்.

தாம் இவ்வளவு நாளாகப் பேசியும் எழுதியும் பரப்பி வந்த சீர்திருத்தக் கொள்கைக்கு மாறாகத் தந்தை பெரியார் திருமணம் செய்துகொண்ட நிகழ்ச்சி பாவேந்தரின் இந்தப் பாடலுக்கு உந்துதலாக அமைந்தது. அண்ணா, கைவல்யம் ஆகியோரின் எழுத்துப் போர் அப்படியே இப்பாடலில் இடம் பெற்று விட்டது.

மாதிவள் இலை எனில் வாழ்தல் இலை எனும்
காதல் நெஞ்சக் காந்தமும், நாணத்
திரைக்குட் கிடந்து துடிக்கும் சேயிழை
நெஞ்ச இரும்பும் நெருங்கும்! மணம்பெறும்!

இது உண்மையான திருமணத்துக்குப் பாவேந்தர் கொடுக்கும் விளக்கம்.

புணர்ச்சி இன்பம் கருதாப் பூவையின்
துணைப்பாடு கருதும் தூயோன், திருமணச்
சட்டத் தாற்பெறத் தக்க தீநிலை
இருப்பினும் அதனை மேற்கொளல் இல்லை
அஃது திருமணம் அல்ல ஆதலால்!

-பெரியார்-மணியம்மை திருமணம் உண்மையான திருமணம் ஆகாது என்பதற்கு இது பாவேந்தர் கொடுக்கும் விளக்கம்.

என்தின வறிந்து தன்செங் காந்தள்
அரும்பு விரற்கிளி அலகு நகத்தால்
நன்று சொறிவாள் என்று கருதி
மணச்சட்டத்தால் மடக்க நினைப்பது
திருந்திவரும் நாட்டுக்குத் தீய எடுத்துக்காட்டு!
மாங்கையர் உலகின் மதிப்புக்குச் சாவுமணி!

-இது அண்ணா-கைவல்யம் கருத்துப் போர்.

அதனைத்
திராவிடர் உள்ளம் தீண்டவும் நாணுமே!

-இக்கடைசி வரி தந்தை பெரியார் மீது வீசிய எழுத்துச் சாட்டை.

இப்பாடலில் உள்ள கீழ்க்கண்ட அடிகள் இரண்டும் மிகவும் ஆற்றல் மிக்கவை.

"மலம்மூ டத்தான் மலர்பறித் தேன் எனில்
குளிர்மலர்ச் சோலை கோவென் றழாதோ?"

'கணவனின் தினவறிந்து
சொறிந்து விடுவதற் காகத் தான் மனைவி'

என்ற கைவல்யத்தின் கருத்தை இதைவிட மோசமாக யாரும் விமர்சனம் செய்ய முடியாது.

ஒரே குறை:

இப்பாடல் 1944இல் எழுதப்பட்டது. இப்பாடலுக்கு உந்துதலாக

இருந்தவர் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்; பாவேந்தருக்கு அனபர், பாவேந்தரோடு நீண்ட நாள் பழகியவர். பாவேந்தர் வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புடையவர். மிகவும் வசதியோடு வாழ்ந்த இப்பெரியவர், பாவேந்தருக்குப் பலவிதத்திலும் மணங்கோணாமல் உதவி புரிந்தவர். தமிழ்ப் புலமையும் இசைப்புலமையும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவர். பாவேந்தர் மிகவும் மதித்துப் போற்றிய நண்பர்.

இந்நண்பர் மிகவும் இளமையிலே தம் மனைவியை இழந்து விட்டார். மனைவியை இழந்தபோது இவருக்கு வயது இருபத்து மூன்று. மீண்டும் திருமணம் செய்து கொள்ளலாமா வேண்டாமா என்று உள்ளம் ஊசலாட இருந்த நிலையில் ஒரு பெண்ணிடம் பழகும் வாய்ப்பு இவருக்கு ஏற்பட்டது. அப்பெண் படித்தவர்; நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர். ஆனால் வேற்றுச்சாதி. சீர்திருத்த வாதியான இவர் சாதி வேறுபாட்டைக் கருதாமல் மணக்க முன் வந்தார். இருவரும் காதல் உணர்வோடு பழகியும், பெற்றோருக்கு அஞ்சி அப்பெண் இவரை மணந்து கொள்ள மறுத்துவிட்டார். தமது காதலில் ஏற்பட்ட தோல்வியை இந்நண்பர் பாவேந்தரிடம் ஒருநாள் கூறினார். அன்று இரவே இது கவிதையாக மலர்ந்து விட்டது. இப்பாடலில் காதல் விருப்பும், பெற்றோருக்கு அஞ்சும் அப்பெண்ணின் அச்சமும் மிக அழகாக விளக்கப்பட்டுள்ளன.

திருவிருக்கும் அவளிடத்தில்! திறமி ருக்கும்!
செங்காந்தள் விரல்நுனியின் நகத்தி லெல்லாம்
மெருகீருக்கும்! இதழோரப் புன்சி ரிப்பில்
விளக்கிருக்கும்! நீள்சடையில் மலரி ருக்கும்
புருவத்தில் ஒளியிருக்கும்! வளைவி ருக்கும்!
போய்ப்போய்நான் காத்திருக்கும் இடமும் மிக்க
அருகிருக்கும்! வரமாட்டாள்; உடையும் நெஞ்சுக்
கணைகோலும் எண்ணந்தான் அவளுக் கில்லை.[1]

தமிழனுக்கு வீழ்ச்சியில்லை:

இப்பாடல் எழுதப்பட்ட ஆண்டு 1955 என்று எண்ணுகிறேன். ஆசிரியர் சொக்கலிங்கம் தினசரி நாளிதழைச் சென்னையில் தொடங்கினார். அவ்விதழைத் தொடங்கியபோது அதில் வெளியிடுவதற்காகப் பாவேந்தரிடம் ஒரு கவிதை கேட்டார். பாவேந்தர் கொடுக்க மறுத்தார். அப்போது உடன் இருந்த கெழுதகை நண்பரான நாமக்கல் மு. செல்லப்பரெட்டியார் தூண்ட இக்கவிதையை எழுதித் தினசரிக்கு அனுப்பி வைத்தார். இதில்

1) பக்கம் 43 காதல் நினைவுகள்

பெரியார் பணியும், திராவிட இயக்கத்தால் தமிழும் தமிழினமும் பெற்ற உயர்ச்சியும் சுட்டப்படுகின்றன.

தமிழனுக்கு வீழ்ச்சியில்லை; தமிழன் சீர்த்தி
தாழ்வதில்லை! தமிழ்நாடு தமிழ் மக்கள்.
தமிழென்னும் பேருணர்ச்சி இந்நாள் போலே
தமிழ்நாட்டில் எந்நாளும் இருந்த தில்லை!
தமிழர்க்குத் தொண்டுசெயும் தமிழ னுக்குத்
தடைசெய்யும் நெடுங்குன்றம் தூளாய்ப் போகும்!
தமிழுக்குத் தொண்டுசெய்வோன் சாவ தில்லை
தமிழ்த் தொண்டன் பாரதிதான் செத்த துண்டோ?[1]

இரவின் இளவரசி:

பாவேந்தர் சென்னை இராமன் தெருவில் குடியிருந்தபோது 16.2.62 வெள்ளிக்கிழமை இரவு 10.00 மணியளவில் இந்தப் பாடல் எழுதப் பட்டது. சிறுசிறு கருத்துக்களைக் கருவாகக் கொண்ட கட்டளைக் கலித் துறைகளை எளிமையாக எழுதி, அப்பாவினத்தைக் கவிஞர் நடுவே விளம்பரப்படுத்தப் போவதாகப் பாவேந்தர் குறிப்பிட்டதை நான் 14.2.62 நாட்குறிப்பில் எழுதியிருக்கிறேன். அவ்வாறு அவர் குறிப்பிட்ட பிறகு முதன்முதலாக எழுதி விளம்பரப்படுத்திய கட்டளைக் கலித்துறை இதுதான்.

பாவேந்தர் இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு முற்றத்தில் பிரம்பு நாற்காலியில் அமர்ந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். நானும் பொன்னடியும் கூடத்தில் அமர்ந்திருந்தோம். வெளியில் அமர்ந்திருந்த பாவேந்தர் திடீரென்று உள்ளே எழுந்து வந்தார்.

"என்ன இது மயக்கும் மணம்? எங்கிருந்து வருது? என்ன பூ?" என்று மூக்கில் மணத்தை இழுத்துக் கொண்டே கேட்டார். நாங்களும் அடிக்கடி மணத்தை உணர்ந்தோம்.

"அது என்ன மலர் என்று பார்த்துவிட்டு வருகிறோமய்யா" என்று கூறிவிட்டு நானும் பொன்னடியும் வெளியில் சென்றோம்.

பாவேந்தர் வாடகைக்கு இருந்த பங்களாவுக்கு அடுத்த பங்களா, ஓட்டல் அதிபர் புகாரி சாகிபின் குடியிருப்பு. இரண்டு பங்களாவுக்கும் இடையில் கைப்பிடிச் சுவர் எழுப்பப்படவில்லை; வேலிதான் இருந்தது. அந்த வேலியில் 'நைட்குவீன்' என்ற பூ, கொத்துக் கொத்தாக மலர்ந்து அவ்வாறு மயக்கும் மணத்தைப் பரவ

1) பக்கம் 103 பாரதிதாசன் கவிதைகள் II

விட்டுக் கொண்டிருந்தது. ஒரு பெரிய மலர்க்கொத்தாக ஒடித்துக் கொண்டு வந்து பாவேந்தர் கையில் கொடுத்தோம்.

அதைப் பார்த்ததும் "இந்தப் பூத்தானா? அடேயப்பா! என்ன மணம்..." என்று வியந்து விட்டு "ஆமா. இப் பூவோட பேரென்ன சொன்னீங்க?" என்று கேட்டார்.

'நைட்குவீன்' என்று நாங்கள் மீண்டும் சொன்னோம்.

'அப்படியா!' என்று கூறிவிட்டு நீண்ட நேரம் அதைக் கையில் வைத்து முகர்ந்து கொண்டே இருந்தார்.

பாவேந்தர் அடுத்த நாள் அதிகாலை 5 மணிக்கே வழக்கம்போல் எழுந்து பின்னால் சென்று விட்டார். நாங்கள் அவர் அறைக்குள் நுழைந்தபோது மேஜைமீது கீழ்க்கண்ட கட்டளைக் கலித்துறை 'இரவின் இளவரசி' என்று தலைப்பிட்டு எழுதப்பட்டிருந்தது.

கரவில் இருந் தொரு மங்கைஎன்
மூக்கில் கடிமணத்தை
வரவிடு கின்றாள் வரவில்லை
என்னெதிர் வாயிதழைத்
தரவில்லை உண்ணவும் என்றேன்என்
தோழனும் 'தையலவள்
இரவின் இளவர சிப்பெயர்ப்
பூ'வென் றியம்பினனே.

இரண்டு

அரும்புகள்
மொட்டுகள்
மலர்கள்

மார்கழியின் உச்சியில்...!

கவிஞர் சுரதா

'சுப்புரத்தின தாசன்' என்று பெருமிதத்தோடு தம்மை கூறிக் கொள்ளும் இச்சிக்கல் இராச கோபாலக் கவிஞர் எழுதும் பாணியில் பாவேந்தரிலிருந்து முற்றிலும் மாறுபட்டவர். பாவேந்தரிடத்தில் கூட்டுப் புழுவாக இருந்து இன்று பட்டொளி வீசிப் பறக்கும் வண்ணத்துப் பூச்சி!

இவர் பணக்காரச் சாதியில் பிறக்கவில்லை, முன்னுக்குத் தள்ளப்படுவதற்கு!

சொந்தக்காரர் யாரும் பத்திரிகை நடத்தவில்லை. மேடை விளம்பரம் பெறுவதற்கு!

எந்த அரசியல் கூடாரத்திலும் இவர் நிலையாகத் தங்குவதில்லை, மேடை விளம்பரம் பெறுவதற்கு!

எவரும் எடுத்து நிறுத்தாமல் தாமே எழுந்து நிற்கும் கவிஞர் சுரதா! உடம்பு தேய உருண்டு சென்று கயிலையைக் கண்ட நாவுக்கரசர் போல, உழைத்து துழைத்துப் புகழ்க் கயிலையை எட்டிப் பிடித்தவர்! எழுத்துச் சிக்கனக்காரர்!

தந்தக் கவிதைச் சிற்பி!

'சுரதாவுக்கு இணை சுரதாதான்!' என்று பாவேந்தரால் பாராட்டப்பட்ட இவர் பாவேந்தரோடு வாழ்ந்த நாட்களை வண்ணக் குழம்பில் தீட்டிக் காட்டியிருக்கிறார்.

குழந்தைக்குப் பலூன் பிடிக்கும். காரணம் அது எல்லாக் கடையின் முன்னாலும் தொங்கவிடப்பட்டிருக்கும். எனது காய்ப் பருவதத்தில் சுத்தானந்த பாரதி பாட்டுத்தான் எனக்குப் பிடிக்கும். காரணம் பிரித்த பத்திரிகையில் எல்லாம் அவர் பாட்டுத்தான் வெளியாகியிருக்கும். எனது சொந்த ஊர் சிக்கலுக்குப் பக்கத்தில் உள்ள பழையனூர். பழையனூரில் நான் வழக்கமாகத் தேநீர் அருந்தும் கடையின் சொந்தக்காரன் அழகப்பன். அவன் தாடிச்சிங்கம் தந்தை பெரியாரின் தலைமையில் திருமணம் செய்து கொண்டவன். தூங்கும்போது கூடக் கருப்புச் சட்டையைக் கழற்ற மறுக்கும் திராவிடர் கழகத் தீவிர உறுப்பினன். ஒரு நாள் தேநீரை ஆற்றிக்கொண்டே 'ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர் உதையப்பர் ஆகிவிட்டால்'..... என்ற பாவேந்தரின் பாட்டு வரிகளை 'டைம் கொடுத்து' வெட்டி வெட்டிப் பாடினான். அப்பாடலைக் கேட்டு அப்படியே மெய்மறந்து நின்றேன். அந்தக் கணமே சுத்தானந்த பாரதியின் பலூன் பாட்டைப் பறக்க விட்டுவிட்டுப் பாவேந்தர் வரிகளைப் பற்றிக்கொண்டேன். அன்றிலிருந்து நந்தனுக்குப் பிடித்த சிதம்பரப் பயித்தியம் போல், எனக்குப் புதுவைப் பயித்தியம் பிடித்துக் கொண்டது.

1941-ஆம் ஆண்டு ஜனவரி 14 அன்று பொங்கல் நாள். நான் காதலித்துக் கூட்டி வந்த பெண்ணோடு பாவேந்தர் வீட்டுக்கு வந்து அவர்முன்னால் நின்றேன். பாட்டு வரிகளில் பதித்திருந்த விழிகளை உயர்த்தி எங்களைக் கொஞ்ச நேரம் பார்வையால் எடைபோட்டார். ஒளிமிகுந்த கண்கள்! உள்ளத்தை ஊடுருவும் தீட்சண்யமான பார்வை! பிறகு சாட்டையைச் சொடுக்குவது போலச் சில வார்த்தைக்கேள்விகள்:

யார் நீ?

ராஜகோபால்.

ஊர்?

சிக்கல்.

இது?

என் காதலி.

எங்க?

கலப்பு திருமணம் செய்துக்கலாமுன்னு....

சாமி கும்புடுவாயா?

இல்லை!

சாப்பிட்டாயா?

இல்லை!

போய் முதல்ல சாப்பிடு.

இதுதான் முதன் முதலில் பாவேந்தருக்கும் எனக்கும் நடந்த உரையாடல்.

சாப்பிட்டு முடித்துவிட்டு வந்தேன். மேல் பூச்சு இல்லாத என் பச்சையான பதில்கள் அவருக்கு மிகவும் பிடித்திருக்க வேண்டும். இரக்க உணர்வுடன் என்னைப் பார்த்தார். என்னை அருகில் அழைத்து, "கலப்பு மணம் இருக்கட்டும். முதல்லே இதை (அருகில் நின்று கொண்டிருந்த பெண்ணைக் காட்டி) ஊரில் கொண்டு போய் விட்டுட்டு வந்துடு. உன்னை நான் வேலைக்கு வெச்சுக்கறேன். கலப்பு மணம் அப்புறம்!..... என்ன?" என்று சொன்னார். வழிச் செலவுக்குப் பணமும் கொடுத்தார். நான் அப்பெண்ணை ஊரில் கொண்டுபோய் விட்டுவிட்டு மீண்டும் புதுவை வந்து சேர்த்தேன்.

பாவேந்தரைச் சந்தித்த முதல்நாள் அச்சகத்திலிருந்து அவருடைய கவிதை ஒன்றின் திருத்தப்படி (Proof) வந்திருந்தது. அதை எடுத்துப் படித்துப் பார்த்தேன்.

> 'மார்கழியின் உச்சியில்
> வருக தைப்பொங்கல் நாள்'---

என்று தொடங்கிய கவிதைவரி என் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. மார்கழித் திங்கள் முடிந்துவிட்ட செய்தியைக் குறிப்பிடுவதற்கு அவர் கையாண்ட 'மார்கழியின் உச்சி' என்ற சொல்லாட்சி எனக்கு மிகவும் புதுமையாகத் தென்பட்டது.

நான் ஊருக்குச் சென்று மீண்டும் திரும்பி வந்து பாவேந்தரைச் சந்தித்தபோது எனக்கு ஒரு வேலை தரச் சொல்லிப் புதுவைத் துறைமுக அதிகாரி ஒருவருக்குப் பரிந்துரைக் கடிதம் கொடுத்தார். நான் அதை எடுத்துக் கொண்டு துறைமுக அலுவலகம் நோக்கிச் சென்றேன். ஆனால் துறைமுகப் பகுதியை நெருங்குவதற்கு முன்பாகவே ஆபத்து என்னை வலை போட்டுத் தேடிக் கொண்டிருப்பதை அறிந்தேன். எந்தப் பெண்ணை நான் புதுவை

அழைத்து வந்தேனோ, அந்தப் பெண்ணைச் சேர்ந்த சிலர் அங்கு கழுகுப் பார்வையோடு காத்துக் கொண்டிருந்தனர். நான் ஏன் துறைமுகத்துக்குள் நுழையப் போகிறேன்? பந்தைப்போல் வந்த சுவடு தெரியாமல் பாவேந்தர் வீட்டுக்கே திருப்பி விட்டேன்.

பாவேந்தரிடம் வந்து நடந்ததைச் சொன்னேன் 'சரி, சொல்றதைக் கேட்டுக்கிட்டு இங்கேயே இருந்திடு!' என்றார். நானும் சரியென்றேன். மாதம் இருபது ரூபாய் சம்பளம். அப்போது பாவேந்தரின் மூத்தபெண் சரசுவதி சடங்காகி வீட்டிலே இருந்தார்கள். கோபதி பள்ளி மாணவன். நான் கோபதியைப் பள்ளிக்கு இட்டுச் செல்வேன். வீட்டுக்குக் காய்கறி வாங்கி வருவேன். பாவேந்தரின் முன்கோபத்துக்கு அஞ்சி, யாரும் அதிக நாள் அவரிடம் வேலைக்கு இருக்க மாட்டார்கள். நான் அடக்கமாகவும், அமைதியாகவும், நல்ல முறையிலும் அவரிடம் நடந்து கொண்டேன்.

என் கையெழுத்து அவருக்கு மிகவும் பிடிக்கும். பாண்டியன் பரிசை மூன்று முறை நான் படியெடுத்துக் கொடுத்தேன். பாவேந்தர் தாம் எழுதும் பாடல்களுக்கு முதலிலேயே தலைப்புக் கொடுக்கும் வழக்கமில்லை. அவர் எழுதிப் போட்ட பாடல்களைக் கையில் எடுத்து, ''இப்பாட்டுக்கு என்ன தலைப்பு? என்று அவரைக் கேட்டால், 'நீயே ஒரு தலைப்பு வையேன்!' என்பார். காதல் நினைவுகள் தொகுதியில் உள்ள 'ஒரே குறை' என்ற தலைப்பு பொன்னி ஆசிரியர் முருகுசுப்பிரமணியம் வைத்த தலைப்பு. 'குடும்ப விளக்கு' நான் சொன்ன தலைப்பாகும்.

வளர்ந்து புகழேணியின் உச்சியில் இருக்கும் சிலர் வளரும் நிலையில் இருப்பவரை ஊக்குவிப்பது மிக அருமை. ஆனால் பாவேந்தர் அதற்கு நேர்மாறானவர். நான் எழுதிய கவிதைகள் சிலவற்றை வேறொருவர் பெயர் போட்டு முதலில் அவரிடம் காட்டினேன். அவற்றைப் படித்துவிட்டு 'நல்லாருக்கு... பக்குவப்பட்டவன் எழுதற கவிதை போல இருக்கு' என்று சொன்னார். அப்பாராட்டு எனக்கு ஒரு 'டானிக்' மாதிரி இருந்தது. அப்பாடல்களை எழுதியவன் நான்தான் என்பதை அறிந்த பிறகு, 'விடாதே! எழுது! ஆறுமுக நாவலரை விட உனக்கு ஆற்றல் அதிகம் இருக்கு!' என்று பாராட்டினார். என்னை ஏன் அவ்வாறு அவர் பாராட்டினார் என்று எனக்கு அப்போது விளங்கவில்லை.

பாரதிதாசன் என்ற புனைப் பெயரைத் திராவிட இயக்கத்தைச் சேர்ந்த சில நண்பர்கள் கேலி செய்வது வழக்கம். அவர்களுள் பட்டுக்கோட்டை அழகிரிசாமி குறிப்பிடத்தக்கவர். பாரதி ஒரு

பார்ப்பனர். மேலும் 'தாசன்' என்பது வடசொல். "பாரதிதாசன் என்றால் பாரதிக்கு அடிமை என்றல்லவா பொருள்? என்று சிலர் அவரைக் கேட்பதுண்டு. அதற்குப் பாவேந்தர் 'ஆமாண்டா! நான் பாரதிக்கு அடிமை தான்!' என்று சட்டென்று கூறுவார்.

பாரதிதாசன் என்ற பெயர் நாட்டில் விளம்பரமாகத் தொடங்கியதும் அப்பெயரைப் பின்பற்றித் 'தாசன் தாசன்' என்று கவிஞர்கள் புனை பெயர் வைத்துக் கொள்வது வழக்கமாகி விட்டது. என்னையும் அவ்வாசை பற்றிக் கொண்டது. ஒரு நாள் ஒரு பாடலை எழுதி அதன் கீழே சுப்புரத்தின தாசன் என்று கையெழுத்திட்டிருந்தேன். அதைப் பார்த்ததும் 'ஏம்ப்பா இதெல்லாம்?' என்றார். இவ்வாறு சொன்னாலும் அவருக்கு உள்ளூர மகிழ்ச்சிதான். பிறகு நான் அவருக்குக் கடிதம் எழுதும் போதெல்லாம் சுப்புரத்தினதாசன் என்றே கையெழுத்திட்டு எழுதுவது வழக்கம். ஒரு முறை கடிதம் எழுதிய போது, முழுப்பெயரையும் எழுதுவதற்குக் கீழே இட மில்லை. சு.ர.தா. என்று சுருக்கமாக எழுதினேன். பிறகு அந்த ஆணி களைப் (புள்ளிகளைப்) பிடுங்கிவிட்டுச் 'சுரதா' என்றே கையெழுத் திட ஆரம்பித்தேன். அப்பெயரே எனக்கு நிலைத்து விட்டது.

பாவேந்தருக்கும் எனக்கும் ஏற்பட்ட தொடர்பு நான்கு ஆண்டுகள் நீடித்தது. புதுவையிலும் எங்கள் ஊரிலுமாக என் வாழ்க்கை கழிந்தது. கவித்துறையில் ஈடுபாடும், ஆற்றலும் என்னிடத்தில் வளர்ச்சி பெற்றன. பாவேந்தர் தொடர்பால் என் படைப்பாற்றல் கூர்மை பெற்றது. 1944-ஆம் ஆண்டு பாவேந்தர் 'இன்ப இரவு' என்ற நாடகக் குழுவை நிறுவினார். நாமக்கல் செல்லப்ப ரெட்டியாரும், பொன்னி ஆசிரியர் முருகுசுப்பிரமணியமும், பெரியண்ணனும், பாவேந்தருக்கு உறுதுணையாக இருந்து இன்ப இரவு நாடகக் குழுவைப் பொறுப்பேற்று நடத்தினர். பாவேந்தர் படைப்பில் உள்ள இயல் இசை நாடகப் பகுதிகள் இன்ப இரவில் இடம்பெற்றன. இசையமைப்பாளராகிய ஞானமணியும், திருவள்ளுவர் படத்தை எழுதிப் புகழ்பெற்ற வேணுகோபால சர்மாவும், நானும் அதில் நடிகர்களாக இடம் பெற்றிருந்தோம். இன்ப இரவு நாடகம் சேலம் சென்ட்ரல் திரைப்படக் கொட்டகையில் முதன் முதல் அரங்கேற்றம் செய்யப்பட்டது. இரண்டாவதாக நாமக்கல்லில் தொடர்ந்து நடைபெற்றது. அந்நாடகத்திற்குப் பொதுமக்களிடம் நல்ல வரவேற்பிருந்தும் அனுபவக் குறைவின் காரணமாகத் தொடர்ந்து நடத்த முடியாமல் போயிற்று. பாவேந்தரின் பாடல்களுக்கு இசையமைத்து ஞானமணி மிக இனிமையாகப் பாடினார். அவர் பாடலைக் கேட்டவர் எல்லோரும் 'ஞானமணி' என்ற பெயர்

அவருக்குப் பொருத்தம் தான் என்று பாராட்டினர். பின்னர் ஞானமணி பாட, பயிற்சி பெற்ற சில பெண்கள் நாட்டியம் ஆடுவர். இறுதியில் புரட்சிக்கவி நாடகம் நடைபெறும். நான் அந்த நாடகத்தில் அமைச்சனாக நடித்தேன். 'காடைக்காரக் குறவ'னாக வேடமிட்டு நான் மேடையில் ஆடுவதும் உண்டு. 'புரட்சிக்கவி' காப்பியத்தை மேடைக்கு ஏற்ற முறையில் பாவேந்தர் அழகாக மாற்றி எழுதியிருந்தார். கவிஞன் உதாரன் அமுதவல்லிக்கு இலக்கணப் பாடம் சொல்லிக் கொடுக்கும் காட்சியை மிக எளிமையாகவும், சுவையாகவும், புரியும்படியும் எழுதியிருந்தார். அந்நாடகத்தில் பளிச்சிட்ட சில கவிதை வரிகள் என் நெஞ்சத்தில் இன்றும் இனித்துக் கொண்டிருக்கின்றன.

களவுப் புணர்ச்சியில் ஈடுபட்டிருந்த அரசிளங்குமரி அமுதவல்லி ஒரு நாள் தோட்டத்திலிருந்து அரண்மனை திரும்புகிறாள். அவள் தோற்றத்தைக் கண்ட தோழியர் ஐயம் கொள்கின்றனர். அந்த ஐயத்தை அழகிய உவமை நயத்தோடு அந்தத் தோழியர் வெளிப்படுத்துகிறார்கள். மிக நயமான கற்பனை:

ஓடம் கவிழ்ந்துபின் உரூப் பெற்றாலும்
புறத்தும் உள்ளும் புனல்நனைந் தீருக்கும்.
தெருக்குள் உலவும் சித்திரத் தேர்உன்
உருக் குலைந்ததேன்? உள்ளதைக் கூறு.

நான் வாழ்க்கையில் சந்தித்த பலருள் பாவேந்தர் மிகப் பெருமிதமான தோற்றமுடையவர். உண்பது, உடுப்பது, உரையாடுவது, நடப்பது யாவற்றிலும் ஒரு பெருமிதம் தென்படும். எவ்வளவு பெரிய நிலையில் இருப்பவர்களும் பாவேந்தர் முன் வரும்போது, அவர்களையும் அறியாமல் அவர்கள் உள்ளத்தில் ஒருவித அச்சங்கலந்த மரியாதை தோன்றுவதை நான் பார்த்திருக்கிறேன். பேரறிஞர் அண்ணா, பெரியாருக்கு அடுத்தாற்போல் இந்த நூற்றாண்டுத் தமிழர்களால் மதிக்கப்பட்ட பெரிய மனிதர். அவரே பாவேந்தர் முன்னால் வரும் போது உட்காரமாட்டார். "அண்ணாத்துரை! ஏ நிக்கற? உக்காரு!" என்று பாவேந்தர் சொல்லுவார். ஆனால் அண்ணா உட்காரமாட்டார். பாவேந்தரின் எழுத்து அண்ணாவின் துவக்கக் கால வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிந்தது.

பாவேந்தர் இயல்பாகவே பரந்த உள்ளம் உடையவர். யார் வந்து வாழ்த்துக் கவிதை, பாராட்டுக் கவிதை கேட்டாலும் முகங் கோணாமல் எழுதிக் கொடுப்பார். தன்னைத் தேடி வருபவர்க்

கெல்லாம் சோறு போடுவார். பழகியவர் எவ்வளவு தாழ்ந்தவராக இருந்தாலும், கொஞ்சம் கூடப் பெருமை பாராட்டாமல் உதவி செய்வார். வசதியற்ற நண்பர் யாராவது கூட்டத்துக்கு அழைக்க வந்தால், "நீயேன் கைக்காசைசெலவு பண்ற? நாந்தா இத்தனாந்தேதி வேறோரு விஷயமா அங்கவர்ரனே! அப்பப் பாத்து வைச்சுக்க,' என்று உரிமையோடு கூறுவார்.

தமது கவிதை ஆற்றலில் பாவேந்தருக்கு அளவு கடந்த நம்பிக்கை உண்டு. எந்தச் செய்தியை எப்படிச் சொன்னால் படிப்பவர் மனதில் உடனே படியும் என்பதை நுட்பமாக உணர்ந்து பாடுவதில் அவருக்கு நிகர் அவரே! "இதோ பார்! இதைப் படிச்சான்னா அப்படியே உள்ளத்திலே உட்காரும்!' என்று சொல்லிவிட்டுக் கவிதை எழுதுவார். அவ்வளவு தன்னம்பிக்கை.

எவ்வளவு புகழ் பெற்றவரானாலும் தகுதியில்லாதவர் வளர்ச்சியைப் பாவேந்தர் மதிப்பதில்லை. பிழையாக எழுதிப் பாவேந்தரின் பாராட்டைப் பெறுவது என்பது முடியாத காரியம். முன்னுரை வேண்டி வந்த சிலரைப் பார்த்து, 'உன்னையெல்லாம் கவிதை எழுதலைன்னு எவங்கேட்டா? போ போ! வந்துட்டானுக!' என்று திட்டி அனுப்புவார்.

இறைவன் மீது பாடும் துதிப்பாடல்களைத்தான் மக்கள் பாராயணம் செய்வது வழக்கம். பக்திப் பாடலைப் போல் பாவேந்தரின் பாடலையும் பாராயணம் செய்ய இந்த நாட்டில் ஒரு பெருங் கூட்டமே உண்டு. 'பாவேந்தர் பாடலைப் படித்தேன்' என்று சொல்லிக் கொள்வதைக் கேவலமாக எண்ணிய தமிழ்ப் பேராசிரியர்களை எனக்குத் தெரியும். இன்று பாவேந்தர் பாடலை ஆராய்ச்சி செய்து 'டாக்டர்' பட்டம் பெறப் பல பேராசிரியர்கள் போட்டி போட்டுக்கொண்டு முன்வருகின்றனர் இந்த நாட்டிலே பாவேந்தருக்குக் கடற்கரையில் சிலையெடுக்க வேண்டும் என்ற கருத்தை முதன் முதலில் வெளியிட்டவன் நான்தான்.[1] பேரறிஞர் அண்ணா அதை நிறைவேற்றினார்.

பாவேந்தரின் தொடக்கநாள் கவிதைகள் மிகவும் கரடு முரடானவை. எழுத்தசை எண்ணிப்பாடும் வண்ணப் பாடல்களையும் சந்த விருத்தங்களையும் தம்முடைய இருபதாம் வயதுக்கு முன்பே பாவேந்தர் எழுதிக் குவித்தவர். எவ்வளவுக்கவ்வளவு புரியாத

1) 'சிலை வைப்போம்' என்ற கவிதை 22.4.55 முரசொலி இதழில் என்னால் எழுதப்பட்டது.

பாடல்களை ஒருவன் எழுதுகின்றானோ அவ்வளவுக்கவ்வளவு அவன் பெருங் கவிஞன் என்று எண்ணும் புலவர் கூட்டத்துள் தாமும் ஒருவராக இருந்தவர். இந்தத் தவறான எண்ணம் எவ்வாறு தம்மை விட்டு நீங்கியது என்பதைப் பாவேந்தர் ஒருமுறை என்னிடம் கூறினார். அவர் என்ன சொன்னார் என்பதை அப்படியே எழுதுகிறேன்:

"பாரதியாரை நான் முதன் முதலில் சந்தித்த போது எனக்கு வயது இருபதிருக்கும். படித்த இளைஞர் கூட்டமொன்று எப்போதும் அவரைச் சுற்றிக் கொண்டிருக்கும். பாரதி இலக்கியம், அரசியல், சமூகம் பற்றிப் பல கருத்துக்களையும் ஓயாமல் பேசிக்கொண்டே இருப்பார். திடீரென்று பேச்சை நிறுத்திவிட்டு ஓரமாகப் போய் உட்கார்ந்துகொண்டு கவிதை எழுதத் தொடங்குவார். இரண்டடி எழுதுவார். 'ஊஹூம்... வல்லடா!' என்று தலையை ஆட்டி விட்டு எழுந்து வந்து விடுவார். பாதியில் விட்ட சில வரிகளை நான்கைந்து மாதங்கள் கழித்துக் கூடச் சிந்தித்து எழுதிமுடிக்கும் வழக்கம் அவருக்குண்டு.

அவரெழுதிய கையெழுத்துப் படிகள் அங்குமிங்குமாகக் கிடக்கும். ஒருநாள் அவர் எழுதும் விசிப்பலகை டிராயரை இழுத்துப் பார்த்த போது 'பாஞ்சாலி-சபதம்' என்ற கையெழுத்துப்படி இருந்தது. அதை எடுத்துப் படித்துப் பார்த்தேன். பாடல்கள் மிக எளிமையாகவும் புரியும் படியும் இருந்தன. அதே சமயம் மிகச் சுவையாகவும் இருந்தன. இப்படி எளிதில் புரியும்படியான கவிதையை நான் பார்த்ததில்லை. புரியும்படி எளிதாகக் கவிதை எழுதமுடியும் என்றும் நான் நினைத்ததில்லை.

அக்கையெழுத்துப்படி என் கவிதைப் போக்கில் பெரிய மாறுதலை உண்டாக்கியது. சுப்பிரமணியர் துதியமுது எழுதிய சுப்பு ரத்தினத்தைப் பாரதிதாசனாக்கியது. 'எங்கெங்கு காணினும் சக்தியடா' என்ற எனது பாடல் பாஞ்சாலி சபதம் கையெழுத்துப் படியைப் படித்த பின் எழுதியது.

பாரதியாரையும், பெரியாரையும்தான் பாவேந்தர் தம் வாழ்க் கையில் மதித்தார். ஒரு நாள் புகைப்பிடித்துக் கொண்டிருந்த பாவேந்தர், "தோ! இருக்கே சிகரெட்! இதை பாரதியார் முன்னாலயும் பெரியார் முன்னாலயுந்தா குடிக்க மாட்டென்! இந்த இரண்டுபேர் தவிர எவர் முன்னாலும் என் சிகரெட்ட நா மறைச்சது கிடையாது. ஏன்னா..... இரண்டு பேரும் ரொம்பப் பெரியவங்க பாரதி போயிட்டார்.' இவர் இருக்கிறார்!" என்று கூறினார்.

பாவேந்தர் ஒருவர் தாம் பாரதியின் பரம்பரை. ஆனால் பாவேந்தருக்குப் பின் ஒரு பெருங்கூட்டமே உண்டு. பாரதியை விடப் பாவேந்தர், தமிழை முறையாகப் பயின்றவர்; அழுத்தமான புலமையுடையவர். தமிழ் இலக்கியங்களைப் பிற மொழிகளில் பெயர்த்து வெளியிடுவதற்கு ஒரு தனித்துறையைத் தமிழக அரசு நிறுவவேண்டும்.

படைப்பாற்றலும், பன்மொழிப் பயிற்சியும் மிக்கவர்களைக் கொண்டு பாவேந்தர் கவிதைகளை மொழிபெயர்த்து உலகில் பரப்ப வேண்டும். அதுதான் பாவேந்தருக்கு நாம் ஆற்ற வேண்டிய நன்றிக் கடன்.

பாவேந்தரோடு நான்: சில நினைவுகள்

கவிஞர் வாணிதாசன்

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற புரட்சிப் பயிர் விளைந்த புதுவைப் பண்ணை பாவேந்தர் பிறப்பிடம்; அப்பண்ணையின் இரண்டாம் போகப் பயிர் கவிஞர் வாணிதாசன்.

பாவேந்தர் பயின்று பட்டம் பெற்று ஆசிரியர் பணி புரிந்த கல்வே கல்லூரியில் இவரும் பயின்று பட்டம் பெற்று ஆசிரியராகப் பணிபுரிந்தார். எனவே கல்வே கல்லூரியின் இலக்கிய வரலாற்றில் பாவேந்தர் முதல் அத்தியாயம்; வாணிதாசன் இரண்டாம் அத்தியாயம்.

பாவேந்தர் புதுவையில் பிறந்து ஈரோட்டுக்குச் சென்றவர். வாணிதாசன் புதுவையில் பிறந்து ஈரோடு வழியாகக் காஞ்சி சென்றவர். 'ஷாநாமா' எழுதிய பாரசீகப் பெருங்கவிஞன் ஃபிர்தௌசியைப் போல, இறந்த பின் அரசாங்கப் பரிசை எதிர்கொண்டவர்.

இவர் நூற்றுக்கு நூறு பாவேந்தரின் மாணவர். பாவேந்தரின் கவிதைப் பாணியை அப்படியே பின்பற்றி எழுதியவர். எப்போதும் கவிதை மயக்கத்தோடு வாழ்ந்தவர்; 'நன்றியுள்ளவன்' என்று பாவேந்தரால் பாராட்டப்பட்டவர்.

இங்கே பாவேந்தர் என்னும் பசும்பொன்னைத் தம் எழுத்துத் தராசில் எடை போட்டுக் காட்டுகிறார்...

பாவேந்தர் பாரதிதாசனை அறியாதார் இலர். அவரைப் போன்று தமிழுக்குத் தொண்டு செய்தவர் பிறந்ததும் இல்லை; இனிப் பிறக்கப் போவதும் இல்லை!

கல்வி பயிலும் போதே கவியரசருக்குத் தாய்மொழி மீது தணியாத பற்றும், கவிபாடும் வேட்கையும் நிறைந்திருந்தன. அதற்குத் தூண்டு கோலாய்ப் பாரதியாரின் கூட்டுறவு-புதுவையில் பாரதியார் புகலிடம் தேடிவந்த போது-ஏற்பட்டது. பாரதியாரின் பாடல்கள் இவருள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தன; இவரையும் எழுதத் தூண்டின.

செஞ்சொற்சுவை நனி சொட்டச் சொட்டச் சிறந்த தோத்திரப் பாடல்கள் பல அப்பொழுதே பாவேந்தர் பாரதிதாசன் பாடியுள்ளார். இவர் பிரெஞ்சு அரசாங்கத்தில் தமிழாசிரியர் பணியேற்றுச் சுமார் முப்பதாண்டுகள் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்.

தமிழாசிரியர் பணிபுரிந்து கொண்டிருக்கும்போது தன்மான இயக்கத் தொடர்பு இவருக்கு ஏற்பட்டது. இவருக்குத் தன்மான இயக்கத் தொடர்பு ஏற்பட்டது என்பதைவிட, இவர் உள்ளத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்த தன்மான உணர்வு-கொடுமையை எதிர்க்கும் துணிவு-தாய்மொழிப்பற்று ஆகியவை இவரைத் தன்மானக் கவிஞராக ஆக்கின என்றே சொல்லலாம்.

அப்போது புதுவையில் வாழ்ந்த-பிரெஞ்சு மொழியும் தமிழும் நன்கறிந்த முத்தையா முதலியார், அவோக்கா (வழக்கறிஞர்) செல்ல நாயகர், அவோக்கா பெருமாள், நோயேல் போன்றவர்களுடன் சேர்ந்து கவியரசர் தன்மான இயக்கப் பணியைப் புதுவையில் பல எதிர்ப்புகளுக்கிடையே தோற்றுவித்துப் பணி புரிந்து வந்தார். அவர்களுள் பெருந்துன்பத்துக்கு அரசாங்கத்தாரால் ஆளாக்கப்பட்ட நோயேல் என்பவர் கவியரசரின் உயிர் நண்பராவார். அண்மையில் புதுவையில் நடந்த கவியரசரின் எண்பதாவது ஆண்டுவிழாவில் அவருடன் கலந்து பேசும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

அந்நாளில் தன்மானக் கவிஞராக இருந்த ஒரே காரணத்தால் அரசாங்கத்தாலும், பொதுமக்களாலும், படித்த ஒரு சிலராலும் இவரடைந்த அல்லல்கள் பலப்பல.

அரசாங்கம் அவரை அடிக்கடி வேறு ஊர்களுக்கு மாற்றிவிடும். பல தொல்லைகள் தரும். ஆனால் கவியரசர் அதற்கெல்லாம் சளைத்ததே கிடையாது. போக்குவரவு வசதி இல்லாத இடங்களிலேயே இவர் தமிழாசிரியர் பணிநடத்தப் பெரும்பாலும் உத்தரவு வரும். எங்கே சென்றாலும், எதிர்ப்பும் இவரைத் தொடர்ந்து கொண்டே வரும்.

இவர் காலத்திலேயே இவரைப் போன்று தமிழாசிரியர் பணிபுரிந்து வந்த துரைசாமி முதலியார் என்னும் 'துரைசாமி வாத்தியார்' இவருக்குக் கொடுத்துவந்த தொல்லைகள் சொல்லிமுடியா. இவரைப் பற்றிச் 'சுயமரியாதைச் சுப்பன்' என்னும் தலைப்பில்

எத்தனையோ கட்டுரைகள் வெளிவரும். அவற்றிற்கெல்லாம் ஆணித்தரமான காரண காரிய விளக்கங்களை எழுதிப் பகைவரான துரைசாமி வாத்தியாரை முறியடித்து வெற்றிவாகை சூடினார் கவியரசர்.

ஒருமுறை துரைசாமி வாத்தியார் கவியரசரைப் பற்றி "சுப்பு வால் முளைத்தகவி" என்று ஈற்றடி அமையும்படி ஒரு வெண்பா எழுதியிருந்தார். 'சுப்புவால் முளைத்தகவி' எனவும், சுப்பு-வால்முளைத்த கவி' எனவும் இருபொருள்படக் குறும்புத்தனமாகக் குறிப்பிடப்பட்டிருப்பதைக் கண்ட கவியரசர், அவருக்குத் தக்கபடி கவிதையிலேயே தோண்டி துரைசாமி' என இருபொருள்படச் சாட்டையடி கொடுத்திருந்தார். துரைசாமி வாத்தியாரைத் 'தோண்டி துரைசாமி' என்றே கூறுவதும் எழுதுவதும் பின்னர் கவியரசரின் வழக்கமாகிவிட்டது.

கவியரசர் பாரதிதாசனுக்கும் பண்டிதர் துரைசாமி முதலியாருக்கும் கருத்து வேற்றுமை பலப்பல உண்டு. அதன் காரணமாக இருவரிட மும் பகையுணர்ச்சி வளர்ந்திருந்தது. இப்பகையுணர்ச்சியின் அடிப்படையில் அக்காலத்திலேயே பண்டிதர் மாணவர் குழு ஒன்றும், பாவேந்தர் மாணவர் குழு ஒன்றும் புதுவையில் இருந்து வந்தன. பண்டிதரும் பாவேந்தரும் கொள்கையில் முரண்பட் டிருந்தாலும் தமிழை வளர்க்கும் நோக்கத்தில் ஒன்றுபட்டிருந்தனர்.

புதுவைப் பிரெஞ்சு அரசாங்கத்தாரால் நடத்தப்படும் தமிழ்த் தேர்வுகட்கு இவ்விருவருமே ஆய்வாளர்களாக - தலைமைத் தேர்வாளர்களாக-நியமிக்கப்படுவதுண்டு. இவ்வாறு நடந்த ஒரு தேர்வின்போது பாவேந்தரிடம் பயின்ற நான், துரைசாமிப் பண்டிதர் முன் தேர்வுக்காக நிறுத்தப்பட்டேன். பண்டிதர் என்னிடம் இலக்கண இலக்கியங்களிலிருந்து பலப்பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தார். நான் பாரதிதாசனிடம் தமிழ் பயின்று வந்திருந்ததை அறிந்திருந்தமையாலும், அவரிடம் கொண்டிருந்த பகைமை காரணமாகவும் என்னிடம் சிக்கலான கேள்விகளைக் கேட்டு விடையை எதிர்பார்த்திருந்தார். நான் தெளிவாகத் தெரிந்த விடைகளைக் கூடத் தயங்கித் தயங்கிக் கூறிக் கொண்டிருந்தேன். அப்போது, "ஏய்! தைரியமாகப் பதில் சொல்!" என்ற உரத்த குரல் ஒன்று கேட்டது. ஒலிவந்த திசை நோக்கித் திரும்பிப் பார்த்தேன்; பாவேந்தரின் ஆணை என்பதை உணர்ந்தேன். அதன்படி முன்பைவிட தைரியமாகத் தங்குதடையின்றி விடையிறுத்தேன். முடிவில், அத்தேர்வில் வெற்றிபெற்றேன். என்னோடு கவியரசரிடம்

தமிழ் பயின்ற மற்ற மாணவர்களும் வெற்றி பெற்றனர். தம் மாணவர் அனைவரும் வெற்றி பெற்றதால் கவியரசருக்குப் பெருமகிழ்ச்சி ஏற்பட்டது.

துரைசாமி வாத்தியார் நல்ல தமிழறிஞர். 'கண்ணப்பர் கலம்பகம்' போன்ற ஆத்திக நூல்களை எழுதியவர். அவர் மறைந்தபோது பகையென்று பாராது ஓடோடி வந்து, என்றுமே கலங்காத கவியரசர் கண் கலங்கி நின்றார். "துரைசாமி மறைந்தான். ஆம்; அவன் எனக்குப் பகைவன்தான். அவன் தமிழறிவைப் பாராட்டுகிறேன். தமிழ் என் உயிர்! தமிழைப் பாராட்டப் போகிறேன்" என்று புதுவையில் ஒரு தனிக்கூட்டம் ஏற்பாடு செய்து பகைவராகிய பண்டிதர் துரைசாமி முதலியாரை இரண்டு மணி நேரம் பொதுமக்கள் முன்னிலையில் வாயாரப் பாராட்டி அஞ்சலி செய்த பெருந்தன்மை பாரதிதாசனை விட வேறு எவருக்கும் இருந்திருக்கவில்லை; இனி இருக்கவும் முடியாது!

துரைசாமி வாத்தியார் மாணவர் குழுவில் குறிப்பிடத்தக்கவர் இலக்கணச் செம்மல், வித்துவான் குமாரசாமி செட்டியார் ஆவார். இவர் நல்ல தமிழ் இலக்கண இலக்கிய அறிஞர். இவரும் கவியரசரைப் போலவே அரசாங்கப் பள்ளிகளில் தமிழாசிரியர் பணிபுரிந்து அண்மையில் ஓய்வு பெற்றவர்.[1] இவரிடம் பயின்ற மாணவர்கள், இவருக்குப் பொன்னாடை போர்த்த வேண்டும் என ஏற்பாடு செய்து, கவியரசரிடம் கருத்தைத் தெரிவித்தனர். கவியரசர் மனமுவந்து, தம் பகைவரின் மாணாக்கன் என்பதை உணர்ந்தும் முன்வந்து, சென்னை முதலமைச்சராக இருந்த திரு. காமராசர் அவர்களைத் தாமே சென்று அழைத்து வந்து, தம் தலைமையிலேயே காமராசர் அவர்களால் இவருக்குப் புதுவை வேதபுரீசுவரர் கோயிலில் பொன்னாடை போர்த்தச் செய்து, தமிழுக்குத் தம் மாட்டுள்ள தனிப்பற்றையும், எவராக இருந்தாலும் தமிழைப் பயின்றவரைச் சிறப்பிக்கின்ற தம் தூய தமிழ் உள்ளத்தையும் விளக்கியுள்ளார்.

பாவேந்தர் மாணவர் குழுவில் குறிப்பிடத்தக்கவர்கள் நானும் புதுவைச் சிவம் எம்.பி.யும், இன்னும் சிலரும் ஆவோம். கவியரசர் தமிழ்ப்பாடம் நடத்தும் முறையே ஒரு தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். மிகத் தெளிவாகவும், இனிமையாகவும் அவர் பாடம் நடத்துவார்.

புதுவையில் தன்மான இயக்கம் தளிர்விட்டுக் கொண்டிருந்தபோது கவியரசர் அவர்களின் கடும் உழைப்பால், பெருமுயற்சியால்

1) இக்கட்டுரை 1964 மேத்திங்களில் எழுதப்பட்டது.

புதுவையிலுள்ள ஒதியன் சாலையில் அமைந்த திரைப்படக் கொட்டகையில், பெரியார் ஈ.வே. இராமசாமி, அறிஞர் அண்ணாத்துரை ஆகியோரை அழைத்து மாநாடு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்போது பொதுவுடைமைக் கட்சித் தலைவரும் இன்றைய அமைச்சருமாகிய திரு. வ. சுப்பையாவைச் சிறையிலடைத்து வைத்திருந்தனர். அக்கட்சியின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்த அதுபோது பாரிசில் படித்துவிட்டுப் புதுவைக்குத் திரும்பிவந்திருந்த புதுவையைச் சேர்ந்த திரு. லாம்பேர்சாவன் என்பவர் நியமிக்கப்பட்டிருந்தார். லாம்பேர் சாவனோ தமிழ் அறியாதவர்; பிரெஞ்சும் ஆங்கிலமும் அறிந்தவர். அவர் தூண்டுதலின் பேரில், பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த சிலர் புதுவையில் நடைபெறும் தன்மான இயக்க மாநாட்டைக் கலைக்க முன்கூட்டியே சதித்திட்டம் தீட்டியிருந்தனர்.

அப்போது புதுவையில் அகில இந்தியக் காங்கிரசுக் கட்சி வளர்ந்திருக்கவில்லை. விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர் மட்டுமே காங்கிரசின் கொள்கைகளை ஆதரித்து, அதில் சேர்ந்திருந்தனர். அவர்களில் முக்கியமான ஒருவர் அன்சாரி துரையாவார். இவர் மாநாடு நடைபெற இருந்த அன்று காலை சிறுவர்கள் சிலருக்குக் காசு கொடுத்து, "பெரியாரே! திரும்பிப் போ?" என்று கத்தும்படி செய்திருந்தார்.

தன்மான இயக்க மாநாடு புதுவை ஒதியன் சாலையில் காலை ஒன்பது மணிக்குத் தொடங்கிற்று. கூட்டம் மிகுதியாக இருந்தது. வெள்ளை யன் ஒருவன் தலைமையிலிருந்த புதுவைக் காவல் படையினர் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருந்தனர். மாநாட்டிற்குக் கவியரசர் தலைமை வகித்தார். அறிஞர் அண்ணாவும் புதுவை அவோக்கா பெருமாள், நோயேல் போன்றவர்களும் வந்திருந்தனர்.

பொதுவுடைமை கட்சியைச் சேர்ந்த சிலர் தங்கள் கைவரிசையைக் காட்டத் தொடங்கினர். கொட்டகையில் ஒரே கூச்சல்; குழப்பம்! கற்கள் தகரக் கொட்டகை மீது வீசப்பட்டன! பாதுகாப்புக்காக வந்திருந்த காவல் படைத் தலைமை அதிகாரி, வெள்ளைத் தலைமை அதிகாரி, 'இக்கூட்டம் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதற்காகக் கூட்டப்பட்ட கூட்டமாகும்' என்று நயவஞ்சமாகக் கூறியிருந்தார். அதனால், காவல் படையினரின் காப்பு பயனளிக்கவில்லை! காவிகளின் கைகள் ஓங்கின! காங்கிரஸ், பொதுவுடைமைக் கட்சி போன்று இம்மாநாடும் தங்களை எதிர்க்கும் கூட்டம் என்று எண்ணி வெள்ளை அதிகாரிகள் கண்காணிப்பை அசட்டை செய்து விட்டனர்.

மாநாடு காலையில் சிறப்புடன் நடைபெறாமல் தடைப்பட்டது. தலைவர்கள் கலைந்து பெருமாள் அவோக்கா வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தார்கள். அதுபோது பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த சிலரும், அவர்களின் கையாட்களிற் பலரும் கவிஞரை வாய்க்கு வந்தபடி ஏதேதோ பேசினர்.

பாவேந்தரால் அதைச் சகித்துக் கொள்ள முடியவில்லை. அக்கொடுங் காலிகளிடையே இருக்கிறோமே என்பதையும் கருதவில்லை. சினங் கொண்ட சிறுத்தையைப்போல் சீறியெழுந்தார்; அவர்களை முறைத்துப் பார்த்தார். அந்த அறிவிலிகளில் ஒருவன் கவிஞரின் கன்னத்தில் அறைந்து விட்டான். அவன் தனியிருந்து தாக்கியிருந்தால், கவிஞரின் ஒரே ஓர் அறையில் அவன் உயிர் போயிருக்கும். காலஞ்சென்ற நெல்லிக்கிருஷ்ணன் இடையே புகுந்து கவிஞரைப் பாதுகாப்போடு வீட்டிற்கு அழைத்துச் சென்று விட்டு வந்தார். இதைக் கேட்டறிந்ததும் சிறையிலிருந்த பொதுவுடைமை கட்சித் தலைவர் திரு.வ.சுப்பையாவே மிகுந்த கவலைப் பட்டாராம். தலைவர் சுப்பையா சிறையில் இல்லாதிருந்தால் இந்த அசம்பாவிதம் நடந்தேறியிருக்காது.

அறிஞர் அண்ணா, பெரியார் இராமசாமியின் பேச்சைக் கூடக் கேட்காமல் கவியரசருக்குப் பொன்னாடை போர்த்த வேண்டும் என்று ஏற்பாடு செய்தார்கள். 28.7.1946இல் நாவலர் ச.சோ. பாரதியார் தலைமை தாங்கினார்; இசையரசு தண்டபாணி தேசிகர் இன்னிசை வழங்கினார்; இரா.பி.சேதுப்பிள்ளை முதலிய மாற்றுக் கருத்துடைய பெரியார்கள் பலர் பாராட்டுரை வழங்கினர். "பெரியார் இராமசாமி இவ்விழாவில் இல்லாத ஒரே குறைதான் என் மனக்குறை" என்று இறுதியில் நன்றி கூறிய அறிஞர் அண்ணாவின் பேருரையோடு விழா சிறப்புடன் முடிவுற்றது. கவிஞருக்குப் பொன்னாடை போர்த்தப்பட்டு 25,000 ரூபா கொண்ட பொற்கிழி ஒன்று வழங்கப்பட்டது. இவ்விழாவிற்குத் துணைநின்ற பொதுமக்கள், செயல்புரிந்த அறிஞர் அண்ணா, பாரதிதாசன் நூல்களையெல்லாம் நல்ல முறையில் கவினோடு வெளிக்கொணர்ந்த முல்லை பழ. முத்தையா, மறைந்த டி.என். இராமன், சலகண்டபுரம் ப. கண்ணன் முதலியவர்களின் ஒத்துழைப்பு பெரிதும் பாராட்டத் தக்கது.

1950ஆம் ஆண்டு கோவையில் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி முதலியவர்களின் முயற்சியால், 'கோவை முத்தமிழ் மாநாடு' ஒன்று நடந்தது. அதில் கவியரசர், நாவலர் ச.சோ. பாரதியார், கலைவாணர் என்.எஸ்.கே., கா.அப்பாத்துரை, அறிஞர் அண்ணா, இரா.

நெடுஞ்செழியன், மு.கருணாநிதி முதலியவர்கள் பங்கு கொண்டனர். மாநாடு சிறப்புடன் நடந்தேறியது.

அதில் கவிஞர் தலைமையில் சிறந்த கவியரங்கம் ஒன்றும் நடைபெற்றது. அப்போது நான் புதுவை கல்வே கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன். கவிஞர் அவர்கள் அக்கவியரங்கில் என்னைக் கலந்து கொள்ளும்படி பணித்தார்கள். நான் சிறிது தயங்கினேன். அதற்குக் காரணம், நான் முன் குறிப்பிட்ட பேரறிஞர் பலர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சியாயிற்றே; கவிதை எழுதும் துறையில் தொடக்க நிலையில் இருக்கின்றோமே என்ற தாழ்வு மனப்பான்மையால் ஏற்பட்ட அச்சங்களே ஆகும். என்றாலும், கவியரசர் சொல்லைத் தலைமேல் ஏற்றுத் துணிந்து அந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள உடன்பட்டேன். கவியரசரே என்னைத் தம்முடன் கோவைக்கு அழைத்துச் சென்றார். நான் கவியரங்கில் கலந்து கொண்டேன். அரங்கின் நடுவர்களாகக் கவியரசர், நெடுஞ்செழியன், அப்பாதுரை மூவரும் இருந்தனர். வெள்ளிக் கோப்பை ஒன்று பெற்று வந்தேன். கவிஞருடன் திரும்பிவரும் போது, கவிஞர் நடுவர்களாக இருந்தவர்கள் குறித்திருந்த மதிப்பெண் தாளை எடுத்துக் காட்டினார். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது! கவிஞரைத் தவிர மற்ற இருவரும் என் கவிதைக்கே அதிக மதிப்பெண் தந்திருந்தனர். கவியரசர் ஒருவர் மட்டுமே எனக்குச் சிறிது குறைவாக மதிப்பெண் தந்திருந்தார். அதையே நான் திரும்பத் திரும்ப உற்று நோக்கிக் கொண்டிருந்தேன். என் எண்ணத்தைக் குறிப்பாலுணர்ந்த கவிஞர், "நீ தான் முதற்பரிசு பெற வேண்டியவன். நான் உன்னை அழைத்து வந்திருக்கிறேன். உனக்கு முதற்பரிசு கொடுத்தால், எனக்கு வேண்டியவனுக்கு முதல் பரிசு கொடுத்து விட்டார்கள் என்ற பேச்சு எழக்கூடும். அதனால், நானேதான் மற்றொருவருக்கு முதற்பரிசு கொடுக்கச் செய்து, உனக்கு இரண்டாம் பரிசு கிடைக்கச் செய்தேன்" என்று விளக்கமளித்தார். இவ்வாறு என்னை முதன்முதல் கவியரங்கில் பங்கு கொள்ளச் செய்து, எனக்கு வழிகாட்டியவர் கவியரசரேயாவார்.

கவியரசர் அவர்கள் திருக்குறளுக்குப் பதின்மர் முன் எழுதிய உரையுடன் ஒப்பிட்டு எதிர்க்கும் புதிய உரையைப் பொதுமக்களிடம் பரவவிட்டார். அதன் பயனாக மதுரையில் பொது மக்களால் அழைக்கப்பட்டு மதுரை உடுப்பி உணவு விடுதியில் இருந்து கொண்டே திருக்குறளுக்குப் புத்துரை எழுதி வந்தார். கவியரசர் அவர்கள் திருக்குறளுக்குப் புத்துரை பெரும்பாலும் எழுதி முடித்து விட்டார். அதனை வெளிக்கொணர்வது அரசியலாருடையவும், பொதுமக்களுடையவும் கடமையாகும்.

மதுரை அன்பர்கள் தனுஷ்கோடி ராசு, பாரதி புத்தக நிலையம் சாமிநாதன், வை.சு. மஞ்சுளாபாய் அம்மையார், கு. திரவியம், பொன்னம்பலனார் முதலியவர்கள் கவிஞரின் அறுபதாம் ஆண்டு விழாவைச் சீரும் சிறப்புமாக நடத்த வேண்டுமென எண்ணினர்; முயன்றனர். அதற்குப் பெரிதும் ஊக்கமூட்டியவர் தற்போது மேலூர் அரசினர் கலைக்கல்லூரி முதல்வராயுள்ள திரு. பண்டித. இராம மீனாட்சி சுந்தரம் பிள்ளை எம்.ஏ. ஆவார்.

1951ஆம் ஆண்டு இளைஞர்களால் தொடங்கப்பெற்ற இம்முயற்சி மதுரையில் ஈடேறாத நிலையில் இருந்தபோது, எதார்த்தம் பொன்னுசாமி, ஏ.கே.வேலன் மற்றும் திருச்சி நண்பர்கள் பலர் முயன்று, திருச்சி தேவர் மன்றத்தில் கவிஞரின் அறுபதாம் ஆண்டு விழாவினைச் சீரும் சிறப்புமாக நடத்த முன்வந்தனர். அதுவும் பல காரணங்களால் தடைப்பட்டு விட்டது.

மீண்டும் அதைத் திருவானைக்காவலில் உள்ள சத்திரம் ஒன்றில் நடத்துவதென முடிவெடுக்கப்பட்டது. காதல் ஆசிரியர் அரு.ராமநாதன், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் தலையிட்டு அவ்விழாவை அங்குச் சிறப்புடன் நடத்தி முடித்தனர்.

திருவானைக்காவலில் பொன்னி இதழின் உரிமையாளர் அரு.பெரியண்ணனும், இந்நாள் புதுவைச் சட்டமன்ற உறுப்பினர் முத்தியாலுப் பேட்டை முருகையனும், நானும் கவியரசர் குடும்பத்துடன் இருந்து வந்தோம். கவியரசரோடு கருத்து வேறு பட்டுப் பகைத்திருந்த காலஞ்சென்ற துரைசாமிப் பண்டிதரின் இல்வாழ்க்கைத் துணைவியாரும் அப்போது எங்களுடன் இருந்து வந்தார்கள். அங்கே தான் கவியரசர் ஒரு வழிகாட்டியாவார் என்பதை நான் கண்ணாராக் கண்டு மகிழ்ந்தேன். பகைவர் மனைவி என்று சிறிதும் எண்ணாமல் பண்போடும் பாசத்தோடும் கவியரசர் குடும்பமே அந்த அம்மையாரை ஏற்று உபசரித்து வந்தது.

அப்போது புதுக்கோட்டையிலிருந்து வெளிவந்த 'பொன்னி' இதழ் கவியரசரின் அறுபதாம் ஆண்டுவிழா மலர் ஒன்றை வெளியிட்டது. கவிபாரதியாரோ தம்பரம்பரை என்று பாரதிதாசன் ஒருவரையே உருவாக்கினார். பாவேந்தர் பாரதிதாசரோ 'பாரதிதாசன் பரம்பரை' என ஒருபெரும் கூட்டத்தையே உருவாக்கிக் காட்டினார். அப்பரம்பரையைப் புகைப்படத்தோடு வெளியிட்டு அறிமுகப் படுத்திய சிறப்பு அந்தப் 'பொன்னி' இதழையே சாரும். கவியரசர் தம் மாணவர்கட்கும் பரம்பரைக்கும் மட்டும் வழிகாட்டி அல்லர்; மனித இனத்திற்கே வழிகாட்டி ஆவார்.

கவியரசர் சீர்திருத்தத் திருமணங்கட்கெல்லாம் செல்வார். அப்போதெல்லாம் அவருடன் நானும் செல்வேன். திருமணத் தலைமை நிகழ்ச்சிக்குப் பின் பல கருத்துக்களை விளக்கி, மணமக்களைப் பலர் பாராட்டி வாழ்த்துவார்கள். என்னையும் பாராட்டுவோர்களுடன் ஒருவனாக்கி மணமக்களைப் பாராட்டச் செய்வார். இவ்வாறு பல திருமணங்களில் அவருடன் சென்று வாழ்த்தும் பேறு பெற்றுள்ளேன். பாவேந்தர் பாரதிதாசன் கவிசுப்பிரமணிய பாரதியின் ஏகவாரிசு; இருபதாம் நூற்றாண்டில் ஈடு இணையில்லாப் பாவேந்தர்; தமக்கென்று ஒரு தனிப் பரம்பரையை ஏற்படுத்தித் தந்தவர். இவர் தமிழுக்குச் செய்த தொண்டு எண்ணிலடங்காது. தமிழ் இலக்கிய இலக்கண மரபையொட்டித் தமிழைத் தம் வயப்படுத்திப் புதிய நோக்கோடு புதுப்புது உவமை, புதுப்புதுப் பாடல்களால் புதுப்புதுச் சுவைகூட்டி எழுதி எழுதிக் குவித்துத் தமிழ்த்தாயின் மணிமுடியை அழகு செய்த பெருமை பாவேந்தர் பாரதிதாசனையே சாரும். தமிழர்கள் ஏறுநடைபோட-தனித்தமிழ்ச் சொற்கள் வழக்கில் களிநடம் புரியச் செய்த பெருமையும் இவரையே சாரும். இவர் எழுதிய ஒவ்வொரு நூலும் ஒரு பொற்கிழி எனலாம்.

இவருக்கு மன்னர்மன்னன் (கோபதி) என்னும் ஒரே மகனும், மூன்று (சரசுவதி, வசந்தா, ரமணி[1]) மகளும் உள்ளனர். நால்வரும் திருமணமானவர்கள். கவியரசருக்குப் பேரர்கள் பேத்திகள் நிரம்ப உள்ளனர். பேரர்கள் பேத்திகள் என்றாலே கவியரசருக்குப் பேரின்பம். இவர் மறைவு தமிழ் கூறும் நல்லுலகிற்கு-ஏன்-கடல் சூழ்ந்த உலகிற்கே பேரிழப்பு என்பது மிகையாகாது! இவர் தமிழ்நாட்டில் அல்லாமல் வேறு நாட்டில் பிறந்திருந்தால் 'நோபெல் பரிசு' இவருடையதே!

1) ரமணி, பாவேந்தரின் கடைசிமகள். 1966-இல் இயற்கையெய்தினார்.

முழுமதியனையார்

கவிஞர் ச. சிவப்பிரகாசம்

புதுவை முத்தியால் பேட்டையில் பிறந்து, பாவேந்த ரிடம் தமிழ் பயின்று ஆசிரியர் பணிபுரிந்தவர் புதுவைச் சிவம். எழுத்துப்புயல் பாவேந்தரோடும், கொள்கை மறவர் ம.நோயேலோடும் தோள் கொடுத்துப் புதுவையில் சுய மரியாதை இயக்கத்தை வளர்த்தவர். 'புதுவை முரசின்' பொறுப்பாசிரியராக இருந்து பாதிரிமாரின் சட்டத் தாக்குதலுக்கு ஆளானவர்.

புதுவை நகர்மன்ற உறுப்பினராகவும், துணை மேயராகவும் பாராளுமன்ற மேலவை உறுப்பின ராகவும் பணி புரிந்தார்.

சங்கப் புலவர் கொல்லன் எழிசியைப் போல இவர் பட்டறை (Janatha Steel Industries) நடத்துகிறார். ஓய்வு நேரத்தில் கவிதையும் எழுதுகிறார்.

1930 முதல் 1946 வரை பாவேந்தரோடு நெருங்கிப் பழகிய இவர் தம் நினைவுகளை இக்கட்டுரையில் நிழற்படமாக்கியிருக்கிறார்.

1928ஆம் ஆண்டில் நான் இருபது வயது கட்டிளங்காளை, பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களால் நடத்தப் பெற்ற 'குடியரசு' இதழை என் நண்பர் ஒருவர் வாராவாரம் கொண்டு வந்து கொடுப்பார். அதைப் படித்து நானும் நண்பர்கள் சிலரும் அக் கொள்கையில் ஆர்வமுடையவரானோம். பின்னர் 1929இல் புதுவை முத்தியால் பேட்டையில் புதுமனை புகுவிழாவுக்குப் பெரியார் அழைக்கப்பட்டிருந்தார். அன்று அவரது சொற்பொழிவைக் கேட்டுச் சுயமரியாதை இயக்கக் கொள்கையில் தீவிரமாக ஈடுபடலானேன். இதே ஆண்டில் பெரியார் கொள்கைக்கு எதிர்ப்பாக வைதீக மாநாடு ஒன்றும் இங்கு நடத்தப்பட்டது. அந்த

மாநாட்டின் போது, கனகசுப்புரத்தின வாத்தியார் (பாவேந்தர்) சுயமரியாதைக் கொள்கைக்கு ஆதரவாக இருப்பதறிந்து, அன்று முதல் அவரிடம் தொடர்பு கொண்டு பழகி வந்தேன். எங்கள் தொடர்பு 1946 வரை மிக நெருக்கமாக இருந்து வந்தது. இவ்வளவு காலம் யாரும் அவரிடம் நீடித்துப் பழகியதில்லை.

பாவேந்தரிடம் இலக்கணம் பயின்று கவிதை எழுத வேண்டுமென்ற ஆர்வத்தால் நான் அவரை அடிக்கடி தொந்தரித்து வந்தேன். போதிய நேரம் இல்லாத காரணத்தால், என்னுடைய ஆவலை அவரால் நிறைவேற்றி வைக்க முடியவில்லை.

1930இல் தோழர் ம.நோயேல் அவர்களைப் பொறுப்பாசிரியராகக் கொண்டு 'புதுவை முரசு' என்னும் வார இதழ் தொடங்கப்பட்டது. அவ்விதழின் நிர்வாகத்தை நான் கவனித்து வந்தேன். 1931இல் புதுவைப் பாதிரிமார்கள் 18 பேர் சேர்ந்து தோழர் ம. நோயேல் அவர்கள் மீது வழக்குத் தொடுத்தார்கள். அதனால் அவ்விதழின் பொறுப்பாசிரியர் பணியை நான் ஏற்றுக் கொள்ள வேண்டிய தாயிற்று. 1932இல் என்மீதும் மூன்று பாதிரிகள் வழக்குத் தொடுத் தார்கள். பொருளாதாரச் சங்கடம் புதுவை முரசிற்கு ஏற்பட்டதால், தொடர்ந்து அதை நடத்த முடியாமல் நிறுத்த வேண்டியதாயிற்று.

பாவேந்தரின் எழுத்தாற்றலுக்குச் சாணைக் கல்லாக விளங்கியது புதுவை முரசு இதழ்தான். இதில் அவர் அளவற்ற கவிதைகள், கட்டுரைகள், குட்டிக் கதைகள், நாடகங்கள், கனல் தெறிக்கும் தலையங்கங்கள் எழுதினார்.

1932இல் புதுவை அரசாங்கம் நடத்திவந்த தமிழாசிரியர் தேர்வுக்குத் தனிப்பட்ட முறையில் வகுப்பு நடத்தப் பாவேந்தர் முயன்றார். அதில் பலர் சேர்ந்து பயின்றனர். நானும் அதில் பயின்று 1934இல் தமிழாசிரியர் தேர்வில் வெற்றி பெற்றேன். இத்தேர்வின் பெயர் 'பிரவே தெ லாங்க் ஏந்திழேன்'[1] என்பது. இதற்கிடையே தனிப்பட்ட முறையில் பாவேந்தரிடம் இலக்கணம்-யாப்புப் பயின்று கவிதை எழுதத் தொடங்கினேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரை, இவ்விருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களுள் திரு. பாரதிதாசன் அவர்கள், ஒரு தலைசிறந்த கவிஞராவார்! ஒப்பற்ற கவிஞர் எனினும் பொருந்தும்.

அவருக்குள்ள புனைபெயராகிய 'பாரதிதாசன்' என்பதைக் கொண்டு

1) இத்தேர்வு பிரெஞ்சு மொழியில் Brevet De Langue-Indigene என்று அழைக்கப்படும். பாவேந்தர் கல்வே கல்லூரியில் பயின்று பெற்ற பட்டம் இதுதான். இது எஸ்.எஸ்.எஸ்.சிக்கும் பி.யூ.சிக்கும் இடைப்பட்ட பாடத்திட்டம் கொண்டது. இதைப் பயின்றவர் தமிழாசிரியராகப் பணிசெய்யப் புதுவைப் பிரெஞ்சு அரசால் அனுமதிக்கப்பட்டனர்.

அவர் தேசியகவி பாரதியாரிடம் தமிழ் பயின்றவர் என்றும், கவிதை எழுதக் கற்றுக் கொண்டவர் என்றும், பாரதியாரின் மாணவர் என்றும் சிலர் கூறி வருவதாகக் கேள்விப்பட்டுள்ளேன். இது முற்றிலும் தவறு. திரு. பாரதிதாசனவர்கள் தேசியகவி பாரதியாரோடு தொடர்பு கொள்வதற்கு முன்பே, இலக்கிய இலக்கணங்களில் புலமை எய்தியிருந்ததோடு பாட்டு எழுதும் ஆற்றலும் பெற்றிருந்தவராவார்.

அவர் தமிழ் கற்றது, சாரம் மகாவித்துவான் திரு.பு.ஆ. பெரியசாமிப் பிள்ளையவர்களிடமும், கல்வே காலேஜ் தமிழ்ப்பண்டிதர் திரு. பங்காருப் பத்தர் அவர்களிடமுமேயாகும்.

அப்பொழுதெல்லாம் திரு. பாரதிதாசன் அவர்களுடைய பாடல், எளிய நடையில் இராது. 'கடுநடை' என்பார்களே, அந்த வகையைச் சேர்ந்ததாக இருக்கும். 'சுப்புரத்தின வாத்தியார் பாட்டா? அது கடுந்தமிழிலல்லவா இருக்கும்!' என்று பலர்கூற, நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.

பிரிட்டிஷ் ஆட்சியினரின் கெடுபிடிக்களாகிப் புதுவையில் தஞ்சமடைந்த அரவிந்தர், வ.வே.சு. அய்யர், சுப்பிரமணிய பாரதியார் போன்றவர்கட்கும், புதுவையிலுள்ள தேசிய உணர்வு கொண்ட பலர் ஆதரவாக இருந்து வந்தனர். அவர்களுள் ஒருவர் தான் திரு. பாரதிதாசன் அவர்களும்.

இனம் இனத்தோடு சேரும் என்பதுபோல், நாளடைவில் திரு. பாரதிதாசனவர்கள் தேசிய கவிபாரதியாரோடேயே நெருங்கிப் பழகலானார். ஏனெனில், இவரும் கவிஞர்; அவரும் கவிஞர். இது மட்டுமல்ல, அவர்கள் நெருங்கிப் பழகியதற்குக் காரணம், மற்றவர்களைக் காட்டிலும், சமத்துவ நோக்கமும் சீர்திருத்த உள்ளமும் பெற்றிருந்ததே ஆகும்.

அப்பொழுது திரு. பாரதியாரவர்கள், எளிய நடையிலேயே தம் பாடலை எழுதி வந்தார். இது புலவர்களுக்குப் பிடிக்கவில்லை. அதனால், பாரதியார் பாடலைக் குறைகூறத் தொடங்கினர். ஏனெனில் பாட்டு என்பது கற்றவர்களால் அரிதாகப் பொருளுணரக் கூடிய திரிசொற்களைக் கொண்டுதான் எழுதவேண்டும் என்பது விதியாக இருந்தது. காலம் அந்த விதியை மாற்றிவிட்டதால், அந்த மாறுதலைப் பின்பற்றி எழுதலானார் பாரதியார். அதற்குமுன் நாட்டைப் பற்றிய கவலையில்லாமல், மக்கள் நலனைப் பற்றிய கவலையில்லாமல் வாழ்ந்து வந்தனர் புலவர்கள். அவர்கள் கவலையெல்லாம் பொழுது விடிந்தால் பொழுது போனால், ஆண்டவனைப் பற்றியும், அவனருள் பெறுவது பற்றியுமே இருந்து

வந்தது. அதற்காக அவர்கள் தமது புலமையை ஆண்டவனைப் பாடுவதிலும், தலபுராணம், அந்தாதி, கோவை போன்ற நூல்கள் எழுதுவதிலும் செலவிட்டு வந்தார்கள். ஆனால் தேசிய இயக்கம் ஏற்பட்ட பிறகு, தலைவர்களாயுள்ளவர்கள், தங்கள் கருத்தை மக்களிடம் பரப்பவேண்டிய அவசியத்துக்கு ஆளானார்கள். அதனால் பாரதியாரும் தாம் எழுதுகிற பாட்டின் பொருளைப் பிறர் உதவியின்றிச் சாதாரண மக்களும் அறிந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கோடு, எளிய நடையில் எழுதலானார். இதற்காகத்தான் எதிர்ப்புக் கிளம்பியது. இதில் பாரதியாருக்கு ஆதரவாக இருந்தார் திரு. பாரதிதாசனவர்கள்.

ஒருசமயம் திரு.பாரதியாரவர்கள் தம்மைச் சூழ்ந்திருந்தவர்களிடம் 'சுப்புரத்தினமும் பாட்டு எழுதுவான்' என்று சொல்லி, 'எழுது' என்று கட்டளையிட்டவுடன், 'எங்கெங்குக் காணினும் சக்தியடா' என்ற பாடலைப் பாரதிதாசன் எழுதியதாகச் சொல்வர். இதுதான், அவர் எழுதிய முதற்பாட்டு என்று கூறுவோரும் உண்டு. அவர் இதற்குமுன் பல பக்திப்பாடல்கள் இயற்றியிருக்கிறார். வேண்டுமானால், திரு பாரதியாரவர்களைப் பின்பற்றி எளிய நடையில் எழுதிய பாடல்களுள், இதுதான் முதற்பாட்டு என்று சொன்னால், பொருத்தமாக இருக்கும்.

திரு. பாரதிதாசனவர்கள் பாட்டு எழுதத் தொடங்கினால் பக்கத்தில் அகராதி இருக்காது; யோசித்து யோசித்து, அடித்தல் திருத்தலுடன் எழுதமாட்டார். தரையில் ஒரு பாயை விரித்துக் கவிழ்ந்து படுத்த வண்ணம் எழுதத் தொடங்குவார். சில சமயம் சாய்வு நாற்காலியிலமர்ந்து, அதன் நீண்ட கைப்பிடியின் குறுக்காக ஒரு மனையைப் பொருத்தி எழுதுவார். பாடல் எழுதி முடியும்வரை, 'சிகரெட் தொடர்ந்து புகைந்தபடியே இருக்கும்' எழுத்தோட்டமும் விரைந்து சென்று கொண்டேயிருக்கும்.

'புலவருக்கு, வெண்பா புலி' என்பார்கள். அத்தகைய வெண்பாவினும் கடுமையானது, வண்ணப்பாடல். திருப்புகழ்ச் சந்தம் போன்ற வண்ணப்பாடல்களையும் மிக எளிதாக விரைந்து எழுதும் ஆற்றல் திரு. பாரதிதாசனவர்களிடம் அமைந்திருந்தது. உள்ளத்தைக் கவரும் வார்த்தைகளும் அவர் பாடலில் முந்திக் கொண்டு வரும். இப்படிப்பட்ட ஒருசில கவிஞர்களைப் பார்த்துத்தான் 'ஒரு சிறந்த கவிஞன் பிறவியிலேயே கவிஞனாகப் பிறக்கிறான்' என்று கூறுகிறார்கள் போலும்.

திரு. பாரதிதாசனவர்களிடம் குறும்புத்தனமும் நகைச்சுவைப் பேச்சும் இயல்பாகவே அமைந்திருந்தன. அதனால் அவருடைய

பாட்டுக்கள் பலவற்றுள்ளும், அத்தன்மை அமைந்திருக்கக் காணலாம். அப்பாடல்களைப் படிப்போர், தம்மையும் மீறி வாய்விட்டுச் சிரிப்பர்; மகிழ்ச்சிக் கடலிலாழ்வர்.

இந்த இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களை நட்சத்திரங்களுக்கு ஒப்பிட்டுக் கூறுவோமானால், திரு. பாரதிதாசனவர்கள் முழு நிலவாக விளங்கியவர் என்பதை யாராலும் மறுத்துவிட முடியாது! வாழ்க அவர் புகழ்!

உள்ளத்தில் மணக்கும் முல்லைச்சரம்

கவிஞர் பொன்னடியான்

திருச்சி மாவட்டச் செந்துரையில் பிறந்து, தமிழ் மறவர் பொன்னம்பலனாரால் உருவாக்கப்பட்டு, பாவேந்தர் கையில் பட்டை தீட்டப்பட்டவர் இந்தப் பொன்னடிக் கவிஞர். பள்ளிப் பருவத்திலேயே இனப் போராட்ட வீரராகத் திகழ்ந்தவர்.

பாவேந்தரின் இறுதி நாட்களில் அவர் மாணவராகவும், செயலாளராகவும், அணுக்கத் தொண்டராகவும் பணி புரிந்தவர். உருவத்தில் ஊசிமிளகாய் போல ஒல்லியான வர்; காரமானவர். தமிழைத் தாய்மையோடும், உருசி யத்தைக் காதலோடும் பார்த்துப் பழக்கப்பட்டவர்.

அமுதும் தேனும்போல ஓராணும் பெண்ணும் பெற்று வளர்ப்பவர். பதின்மூன்று ஆண்டுகள் பிடிவாதமாகப் பாட்டிதழ் நடத்திக் கொண்டிருப்பவர்.

பாவேந்தர் விட்டுச் சென்ற கடைசிக் குழந்தையான 'தமிழ் கவிஞர் மன்ற'த்துக்குப் பாலூட்டிக் கொண்டிருக்கும் செவிலித்தாய் இவர். பாவேந்தரின் இலக்கியப் பூங்காவில் துடிக்கும் தும்பியாகப் பறந்து கொண்டிருந்த நாட்களில், அப்பாட்டு முல்லை தமது உள்ளத்தில் பரப்பிய மணத்தை இக்கட்டுரையில் அள்ளித் தெளித்திருக்கிறார்.

தமக்குத் தெரிந்ததையெல்லாம்...!

தமக்குத் தெரிந்ததையெல்லாம் தம் மாணவர்கட்கும் தெரிவித்து விட வேண்டும்; தாம் கற்றதையெல்லாம் தம்முடைய

மாணவர்கட்கும் கற்பித்துவிடவேண்டும் என்பதில் தணியாத ஆர்வம் உடையவர் கவிஞர்.

நான் அவரிடம் சேர்ந்த புதிதில் கவிதைத் துறையைப் பற்றி எனக்கு விளங்காத ஐயங்களைக் கவியரசரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற பேராசை இருந்தும், அச்சத்தின் காரணமாக ஒதுங்கியே இருந்து வந்தேன். போகப்போகத்தான் எனக்கு ஒரு பேருண்மை விளங்கியது. தம் மாணவர்களே கேட்காவிட்டாலும் தாமாகவே அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்ற பெரிய மனம் படைத்தவர் பாவேந்தர் என்பதே அவ்வுண்மை.

பாவேந்தர் கவிதைகளை எழுதி முடித்துவிட்டு அவற்றைப் படியெடுக்க என்னை அழைப்பார். அருகில் சென்றவுடன் தாம் எழுதிய கவிதையை நயம்பட நடிப்புப் பாவனையோடு எனக்குப் படித்துக் காண்பிப்பார். பிறகு "இந்த இடத்தில் இப்படி ஏன் வந்தது தெரியுமா? இது என்ன இலக்கணம்? இப்படித்தான் பாடல்களில் நம் எண்ணங்களை-கொள்கைகளை-நுழைக்க வேண்டும். இப்படிச் செய்ய வேண்டியதைப் புதிய அமைப்பில் நான் இப்படிச் செய்திருக்கிறேன்" - என்று கிளிப்பிள்ளைக்குச் சொல்வதைப் போல் மீண்டும் மீண்டும் விளக்கி, சொல்ல நினைத்ததை என் உள்ளத்தில் பதியுமாறு தெளிவாகப் புரிய வைத்து விடுவார். எத்தனைமுறை, எத்தனை வகையான கேள்விகளைத் திருப்பித் திருப்பிக் கேட்டாலும் சிறிதும் சலிப்படையாமல், முகங்கோணாமல் புரியும்படி சொல்லிக் கொடுப்பார். நியாயமான கேள்விகளுக்கு அடிமுதல் நுனிவரை விளக்கிக் கூடுமானவரை ஆத்திரம் அடையாமல் சொல்லிக் கொடுப்பது அவரது தலையாய பண்புகளில் ஒன்று. ஆனால் எல்லாம் தெரிந்தது போல் தலையாட்ட ஆரம்பித்தாலோ அது அவரைக் கோபப்பட வைத்து விடும் என்பதை அவரை அறிந்தார் அறிந்த ஒன்று.

சென்னை சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் அப்போது பயின்று வந்தவரும், என் நெருங்கிய நண்பருமான கவிஞர் முருகு சுந்தரம் அடிக்கடி கவிஞரைப் பார்க்க வருவார். புரட்சிக் கவிஞரின் மேல் அவருக்குத் தணியாத ஆசை. அவர் வரும்போதெல்லாம் கவிஞரிடம் ஓயாது எதையாவது கேட்டுக் கொண்டே இருப்பார். கவியரசரின் எழுபதாண்டு அனுபவத்தை நண்பர் முருகு தமது ஆறுமாதப் பயிற்சிக் காலத்திற்குள் தெரிந்து கொள்ள வேண்டும் என்று துடிப்புடையவர். ஒருநாள் மாலை ஐந்து மணி இருக்கும். அன்று வந்திருந்த திரு. முருகுசுந்தரம் கவிஞரிடம் பேசிக் கொண்டிருந்தார். நான் கூடத்தில் 'குயில்' ஏட்டின்

வேலையில் மூழ்கியிருந்தேன். முருகு வழக்கம் போல் தமக்கு ஏற்பட்ட ஐயத்தைக் கேட்டிருப்பார் போல் தெரிகிறது. கவிஞர் உடனே உரத்த குரல் கொடுத்துப் 'பொன்னடி' என்று என்னை அழைத்தார். நான் சென்றதும், 'இப்படி உட்கார்' என்று திரு. முருகு சுந்தரம் பக்கத்தில் என்னை அமரச் செய்து, அவர் கேட்ட கேள்வியை எனக்குத் தெரிவித்து, அதற்குரிய விளக்கத்தையும் சொன்னார். பிறகு, 'சரி! நீ போய் உன் வேலையைக் கவனி' என்று என்னை அனுப்பினார். அன்று கவிஞர் எங்களுக்குக் கூறிய விளக்கம், 'கவிதையில் குற்றியலுகரப் பிழை ஏற்படாமல் எப்படி எழுதுவது? என்பது பற்றியாகும். தாம் ஒருவருக்குச் சொல்லும் விளக்கத்தை-கவிதைக் கலை நுணுக்கத்தை-அத்துறையில் வளரத் துடிக்கும் மற்றொருவரும் தெரிந்து கொள்ளட்டும் என்ற கவிஞரின் பரந்த எண்ணத்தை இன்றைக்கு நினைத்தாலும் இதயம் சிலிர்க்கிறது.

தமக்குத் தெரிந்த தொழில் நுணுக்கத்தை இன்னொருவன் தெரிந்து கொள்ளக்கூடாது என்று திரைபோட்டு, உலகின் பொது நலத்திற்குக் கேடு செய்யத் துடிக்கும் கூட்டத்தினரின் நடுவில், கடற்கரையில் அண்ணாந்து நிற்கும் கலங்கரை விளக்கமாகப் பாவேந்தர் காட்சியளிக்கிறார்.

சீனப்போரும் சைவ உணவும்

சீனப்போரில் இந்தியா தோல்விகளைத் தழுவிக் கொண்டிருந்த நேரம். இந்திய வீரர்கட்கு உணர்ச்சியூட்டும் கவிதைகளை ஏராளமாகக் கவிஞர் படைத்துக் கொண்டிருந்த வேளை. வெளியூரிலிருந்து வந்திருந்த சில இளங்கவிஞர்களும், சுவைஞர்களும் புரட்சிக் கவிஞருடன் மகிழ்ச்சியாகப் பேசிக் கொண்டிருந்தனர். நண்பகல் சாப்பாட்டுவேளை நெருங்கவே கவிஞர் தமது வழக்கப்படி (அதாவது வீட்டில் எத்தனை பேருக்கு உணவு தயாரிக்கப்பட்டுள்ளது என்பதையும் கேட்டறியாமல் வந்திருக்கும் விருந்தினருக் கெல்லாம் இலை விரிக்கச் சொல்லிடுவிடுவார்.) "நீங்கள் எல்லாரும் இன்று மதியம் இங்கேதான் சாப்பிட வேண்டும். நல்ல வஞ்சிர மீன் வருவல், இறால் பிட்டு மணமாகத் தயார் செய்யப்பட்டுள்ளன" என்று கூறினார். அவ்வாறு கூறிக் கொண்டிருந்தவர், எதிரில் முகத்தைச் சுளித்து ஒரு மாதிரியாக உட்கார்ந்திருந்த இருபது வயது மதிக்கத்தக்க ஒல்லியுடம்பு இளைஞரைப் பார்த்து 'ஏம்ப்பா... இதெல்லாம் நீ சாப்பிடுவேல்ல?' என்று அன்போடு கேட்டார்.

அந்த நோஞ்சான் உடம்புக்கார இளைஞர், "இதெல்லாம் எனக்குப்

பிடிக்காதுங்க. நான் சைவ உணவுக்காரன்' என்று கொஞ்சம் பெருமிதத்துடன் கூறினார்.

வந்தது கோபம் கவிஞருக்கு!

"ஓஹோ... அப்படியா! அதனால்தான் நீ இப்படிக் கொத்தவரை வற்றல் போல் இருக்கிறாய்! சைவ சாப்பாட்டுக்காரர்களுக்கு நாம் எதிர்பார்க்கும் அளவு உடலில் வலுவும், உள்ள(மன) உறுதியும் இருக்காது. இப்பொ... இந்தியாவுக்கு வினை வந்ததே உன்னைப்போன்ற சைவ சாப்பாட்டுக்காரர்களால்தான்" என்று ஒரு போடு போட்டார் கவிஞர். அங்கிருந்த அனைவருக்கும் ஒரே திகைப்பாகிப் போய் விட்டது. எனக்குந்தான்! ஏனென்றால் நானும் ஒரு நோஞ்சான். கொத்தவரங்காய் உடம்புக்காரரோ இக்கட்டான இரண்டுங் கெட்டான் நிலையில் 'ஹி...ஹி...' என்று சிரிப்பதுபோல் காட்டிக் கொண்டார். அவர் முகத்தில் அசடே வழிந்தது.

கவிஞர் தொடர்ந்தார்:

"நம்மை உதைக்கிறேன் பார் என்று சொல்லிப் படையெடுக்குந் துணிவு சீனக்காரனுக்கு எப்படி வந்தது தெரியுமா? இந்தியாவில் பாதிப்பேருக்கு மேல் சைவ சாப்பாட்டுக்காரர்கள்... அவர்களிடம் வீரமே இருக்காது என்று நினைத்துத்தான் சீனாக்காரன் துணிந்து நம் எல்லைக்குள் கால் வைத்தான். வந்த வேகத்தில் இரண்டு மூன்று இடங்களையும் பிடித்துக் கொண்டான். நம் படை சிறிது பின் வாங்கியது கூட உன்னைப் போன்ற பருப்புச் சாம்பார்க்காரர் பலர் பட்டாளத்தில் இருப்பதால்தான். சாம்பார்க் கூட்டத்தின் தொகை பெருகினால் சீனாக்காரன் கன்னியாகுமரி வரை வந்தாலும் வியப்படைவதற்கில்லை"

உணர்ச்சி வசப்பட்டுக் கவிஞர் பேசிக் கொண்டிருந்தார்: ஸ்பென்சர் தயாரிப்பான, விரல்களுக்கு அடங்காத சர்ச்சில் சுருட்டு அவர் வாயில் புகைந்து கொண்டிருந்தது. மேலும் தொடர்ந்தார்:

"நம் பரம்பரை வீரம் இந்தக் காலத்து இளைஞரிடம் இல்லை; வர வரக் குறைந்து கொண்டே வருகிறது. எல்லைப்போர் எக்காலத்தும் வரும், அதற்காக உயிர் கொடுத்துப் போரிட வீரர் நாட்டிற்கு என்றும் தேவை. எனவே, உயிரினங்கள் உயிரோடு அறுக்கப்பட்டு, வெட்டப் பட்டு, அவை இரத்தம் சொட்டச் சொட்டத் துடிக்கும் காட்சியைச் சிறு வயதிலிருந்தே நம் குழந்தைகளுக்குக் காட்டிப் பழக்க வேண்டும். இந்தக் காலத்து இளைஞர் சிரங்கிலிருந்து சீழ் வடிந்தால் கூட ஓவென்று நடுங்கி மயக்கம் போட்டு விழுந்து விடுகின்றனர்."

நிறுத்துகிறார் கவிஞர்.

இதற்குள் சைவ உணவுத் தோழர் முக்கால் பங்கு கவிஞர் வழிக்கு வந்து விட்டவராகத் தன்னைக் காட்டிக் கொள்ள முயற்சித்து, வேக வேகமாக தலையை ஆட்டுகின்றார்! ஆமாம் போடுகின்றார்.

மீண்டும் கவிஞர் தொடர்கிறார்:

"சுத்திரிக்காய் வெண்டைக்காயில் என்ன சத்து இருக்கிறது என்றால் வைட்டமின் 'ஏ,பி,சி' என்று அடுக்க ஆரம்பித்துவிடுகின்றனர். ஒரு 'வெண்டைக்காய்ச் சத்தும் அவற்றில் இல்லை. இவைகளை நம்பி நீ இருப்பதால் தான் இப்படி நோஞ்சானாக இருக்கிறாய்! என்னை பார்! என் உடம்பைப் பார்! நான் புலிக்கறியே சாப்பிடுகிறேன் தெரியுமா?"

அங்கிருந்தவர் அத்தனை பேரும் ஆவென்று வாயைப் பிளக்கின்றனர். "பொன்னடி! அந்த டப்பாவில் இருக்கும் புலிக்கறி வற்றலை இவர்களுக்கு எடுத்துக் கொண்டு வந்து காட்டு!" என்று ஆணையிடுகிறார். (அப்போது ஒரு புகழ்பெற்ற நடிகர் கவிஞருக்குப் புலிக்கறி வற்றல் கொடுத்துவிட்டுச் சென்றிருந்தார்.)

அந்த நண்பர்கள் நான் புலியையே கொண்டுவந்துவிடப் போகிறேன் என்று பயந்தோ என்னவோ, 'ஊஹூம். அதெல்லாம் வேண்டாங்கையா! நீங்க சொன்னாப் போதாதா?" என்று கையைப் பிசைந்து கொண்டு கவிஞரைப் பார்த்து ஒரே ஒற்றுமையாகக் குழைந்தனர்.

அந்த ஒல்லியுடம்புச் சைவ நண்பரும் ஏனையோரும், "ஐயா! உங்கள் வீட்டுச் சுவையான சாப்பாட்டைச் சாப்பிட எங்களுக்கு விருப்பந்தான்; ஆனால் வண்டிக்கு நேரமாகி விட்டது!" என்று சாக்குப் போக்குக் கூறித் தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று புறப்பட்டு விட்டனர்.

பாவேந்தர் படமெடுக்க வந்ததேன்?

ஒருநாள் நள்ளிரவு 1.30 மணி. தியாகராய நகர் இராமன் தெருவிலுள்ள பாரதிதாசன் பட நிறுவனத்தின் மூலை அறையொன்றில் 100 வாட்ஸ் மின்விளக்கு ஒன்று ஒளிக்குழம்பை உமிழ்ந்து கொண்டிருந்தது. அது பாவேந்தரின் தனியறை. கட்டிலின்மேல் கால்களை மடித்து வைத்துத் தமது படர்ந்த மார்பை இடது கையால் தடவிக் கொடுத்தபடி புத்தரைப் போல் நிமிர்ந்து உட்கார்ந்திருக்கிறார் கவிஞர். மேலாடை இல்லாத அவர் மாநிற மேனியும் அறிவுக் கண்களும் ஆற்றல் மிக்க அந்த விளக்கொளியில் மின்னிக் கொண்டிருந்தன.

அந்த அமைதியான நள்ளிரவில் அவர் எடுக்கவிருந்த 'பாண்டியன் பரிசு'த் திரைக்கதைக்கான உரைநடையைச் சொல்லிக் கொண்டு வருகிறார். 'கணீர் கணீர்' என ஒலிக்கின்ற அவருடைய கம்பீரக் குரலிலே மூப்பின் காரணமாகச் சில நேரங்களில் கரகரப்புக் கலக்கிறது. சிங்கத்திற்கு முன் அமர்ந்திருந்த சுண்டெலியைப்போல் அவரெதிரில் அமர்ந்து, அவர் விடுவிடென்று சொல்வதை நான் வேகமாக எழுதிக் கொண்டிருக்கிறேன். திடீரென அவரின் ஆர்ப்பொலி தடைப்படுகிறது. அவருடைய பேச்சு 'பாண்டியன் பரிசு'ப் படப்பிடிப்பின் பக்கம் திசை திரும்புகிறது.

"பாண்டியன் பரிசுத் தலைவனும் தலைவியும் கடைசியில் ஒன்றுகூடிப் பூங்காவில் ஆடிப்பாடுவதாக நேற்று ஒரு பாட்டு எழுதினேனே... என்ன அடி? உம்... (அவரே பாடுகிறார்)

விடியும்போது விடியட்டுமே
வெண்ணிலாவே!-பொழுது
விடியும்வரை அமுதமழை
வெண்ணிலாவே!

இது எப்படி! எளிமையாக இருக்குமல்லவா?"

"பாட்டு எளிமையாக இருப்பதோடு கருத்தாழத்தோடும் இருக்கிறதையா"

"இந்தப் பாடல்வரும் காட்சிதான் படத்தின் கடைசிக் காட்சி. எனவே நன்றாக அமைய வேண்டும். மைசூர் பிருந்தாவனத்தில் இக்காட்சியைப் படமெடுக்க வேண்டும். மைசூரில் உள்ள ஆறு ஒன்றில் காதலர் படகில் பாடிச் செல்வதுபோல எடுக்க வேண்டும். வெளிப்புறக் காட்சிகளுக்கு மைசூர் ஏற்ற இடம்"

"படகில் காதலர் பாடிச் செல்வதுபோல் பல திரைப்படங்களிலும் வந்திருக்கிறதே ஐயா" -என்று நான் முந்திரிக்கொட்டைத் தனமாக உளறிவிட்டேன். கவிஞர் என்ன சொல்வாரோ என்று உள்ளுக்குள் நடுக்கந்தான்.

"அப்படியா! அந்த இடத்தில் வேண்டுமானால் கொஞ்சம் மாற்றம் செய்து கொள்ளலாம்" என்று கூறிய கவிஞர் நீண்ட அமைதியில் மூழ்கி விடுகிறார். அவருடைய இடையில் நெகிழ்ந்திருந்த கட்டம் போட்ட லுங்கியை, உடம்பை அசைத்து இரண்டு கைகளாலும் கட்டிக் கொண்டு மேலும் பேசுகிறார்.

"நான் இப்படமெடுக்கும் முயற்சியில் பலவாறாகத் தொல்லைப் படுகிறேன். படத்துறையில் உள்ளவர்களிடமெல்லாம், என்

இயற்கைக் குணத்துக்கு மாறாக நடந்து கொள்கிறேன். இவையெல்லாம் நான் எதிர்பார்க்காத-என் வாழ்க்கையில் நடக்கக்கூடாத நிகழ்ச்சிகள்! இவை பற்றியெல்லாம் நான் சிறிதும் பொருட்படுத்தாமல் இருப்பது எதற்காகத் தெரியுமா? இரண்டே இரண்டு காரணங்களுக்காகத்தான். "ஒன்று; போகத் தகாத வழியில் போய்க் கொண்டிருக்கும் திரைப்படத் துறையை நமது தமிழ்ச் சமுதாயத்துக்குப் பயன்படும் சீர்திருத்தப் புரட்சிக் கூடமாக மாற்ற வேண்டும்"

"இரண்டு; இந்தப் படத்தின் மூலம் கிடைக்கின்ற வருவாயில் குறைந்தது இரண்டு இலக்க ரூபாயை ஒதுக்கித் தமிழருக்கு அறிவொளியூட்டும் பெரிய நூலகம் ஒன்றைச் சென்னையின் மையமான இடமொன்றில் அமைக்க வேண்டும்"

"அந்த நூலகத்தில் இல்லாத பயன்மிகு நூல்களே உலகத்தில் இல்லை எனும் வகையில் பல துறை இலக்கியச் செல்வங்களையும், ஆராய்ச்சி நூல்களையும் குவித்து வைக்க வேண்டும். அந்த நூலகத்தில் பிறமொழி கற்றறிந்த தூய தமிழறிஞர்களை வேலைக்கு அமர்த்த வேண்டும். அவர்கள் உலகின் மூலை முடுக்குகளிலுள்ள சீர்திருத்த முற்போக்கு இலக்கியங்களையெல்லாம் தமிழிலே மொழிபெயர்க்க வேண்டும். அதேபோன்று தமிழறிஞர்களின் தரமான இலக்கிய நூல்களையெல்லாம் மொழிபெயர்த்து உலகெல்லாம் பரப்ப வேண்டும். மேலும் இந்த நூலகத்தில் பல பிரிவுகளை ஏற்படுத்தி, நைந்த எழுத்தாளர்களுக்கும், வறுமை வாய்ப்பட்ட கவிஞர்கட்கும் வேலை கொடுக்க வேண்டும். இந்தக் காரியத்தை ஒழுங்காகச் செய்தால், தமிழ்ச் சமுதாயத்தைப் பெரு முன்னேற்றத்தை நோக்கி இழுத்துச் செல்ல முடியுமென நம்புகிறேன். இந்த நன்முயற்சிக்கு நம் அப்பாதுரை, (பன்மொழிப் புலவர்) தேவநேயப் பாவாணர் போன்றவர்கள் பயன்படுவார்கள்."

சற்று நிறுத்துகிறார்; சிந்திக்கிறார்.

"இந்த முயற்சியின் முக்கியமான உள்நோக்கம் உனக்குப் புரிகிறதா?" என்று கவிஞர் என்னைக் கேட்டார்.

"புரிகிறதையா!" என்று உணர்ச்சி வயப்பட்டுத் தலையாட்டுகிறேன்.

"தமிழ்நாட்டிலிருந்து வெளிநாடு சென்றுள்ள சில போலிகள் மகாபாரதமும், கம்பராமாயணமும், கந்தபுராணமும் தமிழர்களின் தலைசிறந்த இலக்கியங்கள் என்று கூறிக் கொண்டிருக்கிறார்களாம்; மொழிபெயர்த்து நூல்வடிவில் வெளியிடுகிறார்களாம். இவை களைப் படித்த பிறநாட்டார் அவைகளின் கட்டுக் கதைகளையும்,

மூடத்தனங்களையும் எண்ணி நம்மையெல்லாம் காட்டு மிராண்டிகள் என்று எள்ளி நகையாடுகிறார்களாம். தமிழரின் மானம், மரியாதையாவும் அங்கே கப்பலேறுகின்றன. இந்த நிலையை நீடிக்கவிடலாமா?... இதற்காகத்தான்...

கவிஞர் நீண்ட பெருமூச்சு விடுகிறார். பிறகு, "சரி எனக்கு ஒரு சோடா உடைத்துக் கொடுத்துவிட்டு நீ போய்ப் படுத்துக் கொள்" என்கிறார். (தண்ணீருக்குப் பதிலாகச் சோடா குடிப்பதுதான் அப்போது கவிஞரின் பழக்கமாக இருந்தது)

"கவிஞர் ஏன் படம் எடுக்க வந்தார்! இந்தத் தள்ளாத வயதில் இவருக்கு ஏனிந்த ஆசை! என்றெல்லாம் குறுக்குக் கேள்வி கேட்டு, அன்று கிண்டல் செய்து அங்கலாய்த்துக் கொண்ட தமிழர்கள் இப்போதேனும் உண்மையைப் புரிந்து கொண்டால் நல்லது.

என் தந்தையார்

திருமதி சரசுவதி கண்ணப்பர்

இவர் பாவேந்தர் குடும்பக் காவியத்தின் முதற்பாதை; பாவேந்தர் பல்கலைக்கழகத்தின் முதல் பட்டதாரி; தமிழுக்குப் பிறந்து தமிழுக்கே வாழ்க்கைப்பட்டவர்.

'குடும்பவிளக்கு' தோன்றுவதற்குக் காரணமாக இருந்தவர் என்று அந்நூலின் முன்னுரையில் குறிப்பிடப்படும் தலைவி இவரே!

அறுபதாம் அகவையை நெருங்கிக் கொண்டிருக்கும் இவர், வீட்டு வேலைகளைச் சுறுசுறுப்போடு செய்யும் காட்சி, 'பறந்தனன் பச்சைப் பசுங்கிளி.....' என்ற பாவேந்தர் பாட்டை உள்ளத்தில் கொண்டுவந்து நிறுத்துகிறது.

குடும்பவிளக்கில் படம் பிடித்துக் காட்டப்படும் விருந்தோம்பும் அழகை, இன்றும் இவர் வீட்டுக்குச் சென்றால் சுவைத்து மகிழலாம்.

புக்ககத்திலிருந்து புதுவை வரும் இவரைப் பெருமாள் கோவில் தெருக்கோடியில் கண்டால் "பழனியம்மா! குடும்பவிளக்கு வருது!" என்று பாவேந்தர் பரிவோடு குறிப்பிடுவதுண்டு.

சரசுவதி அம்மையார், பனித்த கண்களோடு தம் தந்தையாரை இக்கட்டுரையில் நினைவு கூர்கிறார்.

எங்கள் தாத்தா திருவாளர் கனகசபை முதலியார் புதுவையில் பெரிய வணிகர்; மளிகை மண்டியின் உரிமையாளர். கப்பலில் சரக்கு ஏற்றி பிரஞ்சு நாட்டுக்கு அனுப்பிவைப்பார். அவர் ஒருமுறை சரக்கு ஏற்றி அனுப்பிய கப்பல் கவிழ்ந்து போனதால் வளமான எங்கள் குடும்பமும் கவிழ்ந்தது. அப்போது எங்கள் தாத்தாவின் வயது எழுபது.

வேணு (எ) சுப்பராய முதலியார் எங்கள் பெரியப்பா. அவருக்கு மளிகைமண்டி வாணிகம் தொழில்; சோதிடம் துணைத்தொழில். மணிக்கணக்குச் சோதிடம் சொல்வதிலும், கோசாரபலன் கூறுவதிலும் வல்லவர். புதுவைப் பிரமுகர்களான திருவாளர்கள் ஞாந்திய முதலியார், சின்னையா முதலியார் ஆகியோர்க்கு இவர் குடும்பச் சோதிடர். இரட்டைக் குதிரைகள் பூட்டிய சாரட்டில் அவர்கள் வீட்டுக்குச் சென்று சோதிடம் சொல்லிவிட்டுத் திரும்புவார். என் தந்தையார்க்குச் சோதிடமெல்லாம் பிடிக்காது. என் பெரியப்பாவைப் பற்றி அவர் நகைச்சுவையாக அடிக்கடி ஒரு செய்தியைக் குறிப்பிடுவதுண்டு.

பெரியப்பாவும் என் தந்தையாரும் சிறுவர்களாக இருந்தபோது நடந்தது இந்நிகழ்ச்சி. ஒருமுறை என் பெரியப்பா ஒரு பெட்டியின் மீது அமர்ந்தபோது பெட்டிச் சந்தில் அவரது கை சிக்கிக் கொண்டதாம்; வலி பொறுக்க முடியாமல் 'முருகா! முருகா!' என்று கதறினாராம். அருகிலே நின்று கொண்டிருந்த எங்கள் தாத்தா 'எந்திரிடா மடையா? முருகன் என்னடா செய்வான்?' என்று சொன்னாராம். இதை என் தந்தையார் கூறும்போதெல்லாம் நாங்கள் விழுந்து விழுந்து சிரிப்போம்.

புதுவைக் கல்வே கல்லூரியின் எதிரில் மயிலம் சுப்பிரமணிய மடத்தார் ஒரு திண்ணைப்பள்ளிக்கூடம் நடத்தி வந்தனர். அத்திண்ணைப் பள்ளியில்தான் என் தந்தையார் தொடக்கக் கல்வி பயின்றார். திருவாளர் திருப்புளிசாமி ஐயா அப்பள்ளியின் ஆசிரியர்.

கல்வே கல்லூரியில் முதல் வகுப்பிலிருந்து பி.ஏ.பட்ட வகுப்பு வரை கற்று கொடுக்கின்றனர். தமிழகத்துக் கல்லூரிகளில் ஆங்கிலத்துக்கு உள்ள சிறப்பிடம் அங்கு பிரெஞ்சு மொழிக்குண்டு. தமிழ்ப் புலவர்களுக்கென்று புதுவை அரசாங்கம் அந்நாளில் 'பிரவே-தமிழ்' என்று ஒரு தேர்வு நடத்தி வந்தது. கல்வே கல்லூரியில் ஈராண்டு பயின்று அத்தேர்வு எழுதவேண்டும். என் தந்தையாரும் அக்கல்லூரியில் பயின்று அத்தேர்வு எழுதி முதல்வராக வெற்றி பெற்றார்.

கல்வே கல்லூரியில் இவர் படித்துக் கொண்டிருந்த காலத்தில் புலவர் பங்காரு பத்தர் இவருக்குத் தமிழ் பயிற்றும் பேராசிரியராக விளங்கினார். ஓய்வு பெற்ற தமிழ்ப் பேராசிரியரான சாரம் மகாவித்துவான் பு.ஆ. பெரியசாமி பிள்ளையிடம் இலக்கிய இலக்கணத்தோடு வேதாந்த சித்தாந்தக் கருத்துக்களையும் பயின்றார்.

என் தந்தையாருக்குத் திருமணம் உறுதி செய்யப்பட்டவுடன் புதுவை அரசு அவர் மீது ஒரு பொய் வழக்குப் போட்டுச் சிறையில்

தள்ளிவிட்டது. எங்கள் தாய்ப் பாட்டன் பெயர் பரதேசியார்; பாட்டி பெயர் காமாட்சி அம்மாள். தென்ஆர்க்காடு மாவட்டத்தில் பெண்ணை ஆற்றுக்கு வடகரையில் உள்ள புவனகிரிப் பெருமாத்தூர் இவர்கள் சொந்தவூர். திருமணம் உறுதியான பிறகு என் தந்தையார் சிறைக்குச் செல்வதைக் கண்டு என் பாட்டனார் மிகவும் அஞ்சினார். ஆனால் என் பாட்டி "ஆமாம்! அவர் அப்படித்தான் சிறைக்குப் போவார். ஆனால் சீக்கிரம் திரும்பி வந்திடுவார். நீங்க கவலைப் படாதீங்க" என்று கூறி அவரைத் தேற்றினாரம்.

என் தந்தையாருக்கு மிகவும் பிடித்தவர்கள் இரண்டுபேர். ஒருவர் பாரதியார்; மற்றொருவர் இந்த காமாட்சிப் பாட்டி. இந்தப்பாட்டி மருமகனைக்கண்டால் அஞ்சிநடுங்குவார். "மருமகன் எங்கே கோபித்துக் கொள்வாரோ! எங்கே சாப்பிடாமல் போய் விடுவாரோ! எங்கே பழனியம்மாளை வேண்டாம் என்று சொல்லிவிடுவாரோ!" என்றெல்லாம் வீணாக அச்சப்படுவாராம்.

மாமியார் வீட்டுக்குச் சென்று விட்டுப் புதுவை திரும்பியதும், "உங்க பாட்டி என்னைக்கண்டு ரொம்ப நடுங்கறாங்க, அதனால நா ரொம்ப அமைதியா இருந்துட்டு வந்த?''என்று எங்களிடம் தந்தையார் கூறுவதுண்டு.

உணவுப் பழக்கத்தில் என் தந்தையாருக்கு ஒரு கட்டுத்திட்டம் கிடையாது. ஒரு நாளைக்கு அதிகாலையில் தேநீர் கேட்பார். அடுத்தநாள் அதே நேரத்தில் தேநீர் கொண்டுபோய்க் கொடுத்தால், 'உங்களை யார் இப்போது தேநீர் கேட்டார்கள்?' என்று திட்டுவார். எப்போதாவது என் தாயாரைக் கூப்பிட்டு, "பழனியம்மா! கைகால் வலிக்குது ஏதாவது பண்ணு!" என்று சொல்லுவார். என்ன செய்வது? என்று என் தாயார் கேட்டால் ஏதாவது செய்' என்று சொல்லுவார்.

காலையில் இட்டிலி சாப்பிடும் போது தேங்காய்ச் சட்டினி, வெங்காயச் சட்டினி, தயிர், மிளகாய்ப்பொடி, உருக்கு நெய், பழைய மீன் குழம்பு இத்தனையும் கேட்பார். சாப்பிட்டு முடித்ததும் எண்ணெய்ப் பசைபடிந்த கையை அழகாக வெளுத்த வேட்டியிலே கறைபடும்படி துடைத்துக் கொள்வார். இதைப் பலமுறை பார்த்த பிறகு இது நம் குறையே என்றுணர்ந்து அவர் சாப்பிட்டு முடித்ததும் சோப்புக்கட்டியும் துண்டும் கொண்டுபோய்க் கொடுப்பதை நான் வழக்கமாக்கிக் கொண்டேன். நாவல்பழம், சர்க்கரைவள்ளிக் கிழங்கு ஆகியவை அவருடம்புக்குச் சேரா. ஒரு முறை நாங்கள் அவற்றை வீட்டில் வாங்கி வைத்திருந்ததைக் கண்டதும் கிணற்றில் எடுத்துக் கொண்டுபோய்க் கொட்டிவிட்டார்.

என் தந்தையார் சிந்தனையில் மூழ்கி மும்முரமாக எழுத்து வேலையில் ஈடுபட்டிருக்கும் போது நாங்கள் திண்டாடிப் போவதுண்டு. சற்று நேரத்துக்கு முன்தான் சாப்பிட்டு முடித்திருப்பார். திடீரென்று 'பாப்பா!' என்று குரல் கொடுப்பார் நான் எழுந்து ஓடுவேன். என்னைப் பார்த்து 'என்னம்மா! நான் சாப்பிட்டுட்டனா'? என்று கேட்பார். சில சமயம் தட்டில் உணவு பரிமாறியிருந்தால் அப்பளத்தை மட்டும் சாப்பிட்டுவிட்டுப் போய்ப்படுத்துக் கொள்வார். கொஞ்ச நேரங்கழித்து, "என்ன பண்றீங்க எல்லாம்? நா பசியோட கிடக்கற!" என்று சத்தம் போடுவார். சில சமயம் பாதி சாப்பிட்ட நிலையில் கைகழுவி விட்டு எழுந்து விடுவார்.

குளிப்பதற்காகக் குளியல் அறையில் ஒரு பெரிய பாத்திரத்தில் வெந்நீர் நிரப்பி, உட்காரும் பலகையும், செம்பையும் அருகில் வைத்த விட்டு அவருக்கு நாங்கள் அறிவிப்பது வழக்கம். என் தந்தையார் குளிப்பதற்கு உள்ளே செல்லுவார். கொஞ்ச நேரம் பலகையில் மௌனமாக் அமர்ந்திருப்பார். பிறகு வெந்நீரை ஒரு கையால் மொண்டு மொண்டு காலில் ஊற்றிக்கொண்டு மற்றொரு கையைச் சுண்டித் தாளம் போட்டுக் கொண்டிருப்பார். தாளச் சத்தத்தைக் கேட்டதும் என் தாயார், 'போய்ப் பாரும்மா! சிட்டிகை வருது" என்று கூச்சல் போடுவார். சிலசமயம் சென்னையிலிருந்து அவசரமாக வீடு திரும்பும்போது இரவுநேரமாக இருக்கும். வீட்டில் அவருக்கு ஏற்ற உணவு இருக்காது. சோற்றைப்போட்டு இரசத்தை ஊற்றி அப்பளத்தைப் பொரித்து வைப்பார் என் தாயார். சோற்றை வாயில் அள்ளிப் போட்டுக் கொண்டு அப்பளத்தைக் கடிப்பார். பிறகு தூவென்று துப்பிவிட்டு 'அப்பளம் கசக்குது என்று கூப்பாடு போடுவார். சாப்பாட்டுக் கிண்ணி மேலே பறக்கும். பிறகு என்னைக் கூப்பிடுவார். அப்பளம் ரசத்துக்குக் கசக்கும். அது என் தாயார் கவனத்துக்கு வருவதில்லை. நான் மீண்டும் போய்ப் பருப்புத் துவையல் அரைத்துக் கொடுத்து சமாதானம் செய்தால்தான் சாப்பிடுவார். பருப்புத் துவையலோடு அப்பளத்தைத் தொட்டுச் சாப்பிடச் சொல்லுவேன்' 'ஆமாம்மா! இப்பத்தான் நல்லாருக்கு' என்பார் தந்தை.

இரவு நேரங்களில் எழுதும்போது நிறைய ரொட்டியும் ஜாமும் வேண்டும். காலையில் அவர் அறைக்குள் நுழைந்தால் சிகரெட்டு துண்டும், சாம்பலும், நெருப்புக் குச்சியுமாகக் கிடக்கும். அவர் எழுதிய கையெழுத்துப் படிகளும் இறைந்து கிடக்கும். சில சமயம் அவர் கையெழுத்துப் படிகளை எடுத்துப் பார்த்தால் ஒன்றின்மேல் ஒன்று ஏறியிருக்கும்.

'என்னப்பா இப்படி எழுதியிருக்கறீங்க?' என்று கேட்டால், 'விளக்கிலே எண்ணெய் தீந்து போச்சு. கூப்பிட்ட... யாரும் வரலை. இருட்டிலேயே எழுதிமுடிச்சுட்ட...' என்று கூறுவார். சுவாரசியமாக எழுதும் நேரங்களில் குப்புறப்படுத்து நெஞ்சுக்குத் தலையணையைத் தாங்கலாக வைத்துக் கொண்டு எழுதுவார். சில சமயங்களில் எழுதும்போது தாகமாக இருக்கிறது என்பார். சீரகம் போட்டுக் காய்ச்சி வடித்த நீரைக் கொண்டுபோய்க் கொடுத்தால் குடித்துவிட்டு மீண்டும் எழுதத் தொடங்குவார்.

அதிகாலை தொடங்கி ஓய்வொழிச்சல் இன்றி வேலை செய்யும் என் தாயார் அசதி காரணமாக இரவு எட்டு மணிக்கே படுத்துக் கொள்வார். படுத்தால் மீண்டும் அவரால் எழுந்திருக்க இயலாது. ஆனால் தந்தையாரோ இரவில் எழுதிக் கொண்டிருக்கும்போது பசியென்பார். நான் எழுந்து ஏதாவது தின்பண்டம் செய்து கொடுக்க வேண்டும். இரவு 1 மணிக்குப் பூசணி அல்வா கேட்பார். நடு இரவில் பல் தேய்த்து விட்டுச் சாப்பிடுவார். "இப்ப அழுத்திப் பல் தேச்சுட்டுக் காலையிலே லேசா துலக்கினாப் போச்சு!" என்று சிரித்துக் கொண்டே சொல்வார். எந்த வேலையையும் அனாவசியமாக நீட்டிக் கொண்டிருப்பது என் தந்தையாருக்குப் பிடிக்காத ஒன்று. பல் தேய்ப்பதாக இருந்தாலும் குளிப்பதாக இருந்தாலும், உடையுடுத்துக் கொள்வதாக இருந்தாலும் விரைவில் சுறுசுறுப்பாகச் செய்து முடிக்கவேண்டும்; இல்லாவிட்டால் கண்டிப்பார்.

சில சமயங்களில் எங்கள் வீட்டில் சமையல்காரர்கள் இருப்பார்கள். என் தந்தையாரின் சுவைக்கு ஏற்பச் சமையல் செய்ய முடியாமல் அவர்கள் விழிப்பார்கள். கோழியை அறுத்துத் துண்டு போடுவதிலும் கூட என் தந்தையாரின் விருப்பமறிந்து துண்டுபோட வேண்டும். இல்லாவிட்டால் திட்டிவிடுவார். கோழிக்கறியைச் சமையல்காரன் தான் சமைக்க வேண்டும். நானோ என் தாயாரோ அதில் தலையிடக்கூடாது. ஒருநாள் கோழிக்கறி, சமைக்கும்போது என் தாயாரை உப்புப் போட அனுமதித்ததற்காக அச்சமையல்காரனை வீட்டைவிட்டுத் துரத்திவிட்டார். எங்கள் வீட்டில் வேலை செய்த சமையல்காரர்களுக்கு, அவர்கள் வைக்கும் குழம்பைவிட நாங்கள் வைக்கும் குழம்புதான் மிகப் பிடிக்கும்.

ஒருமுறை என் தந்தையாரிடம் நற்சான்றிதழ் பெற்றுச் செல்வதற்காக ஒரு சமையல்காரன் வந்தான். 'இரண்டு நாள் வீட்டிலிருந்து சமைத்துப்போடு. உன்னுடைய சாப்பாடு எப்படி இருக்கிறது என்று சுவைத்துப் பார்த்து விட்டுச் சான்றிதழ் தருகிறேன்' என்று என் தந்தையார் கூறினார். முதல் நாள் சமைப்பதாகச் சொல்லி அன்றைய

உணவை அவன் பாழடித்தான். ஒரு பெரிய உருண்டைப் புளியை எடுத்துப் பாத்திரத்தில் ஊற வைத்திருந்தான். அப்போது எதேச்சையாக உள்ளே வந்த என் தந்தையார் அதைப்பார்த்துவிட்டு 'எதற்காக இவ்வளவு புளி ஊற வைத்திருக்கிறாய்?' என்று அவனைக் கேட்டார். 'குழம்புக்கும் இரசத்துக்கும் சேர்த்து ஊற வைத்திருக் கிறேன்' என்று அவன் சொன்னான். உடனே அவருக்குக் கோபம் வந்துவிட்டது. எப்போதும் குழம்புக்கும் ரசத்துக்கும் தனித்தனியாகப் புளி ஊற வைக்க வேண்டும். ஒன்றாக ஊறவைத்தால் முதல்பாதி மிகுதியாகப் புளிக்கும்; மறுபாதி துவர்க்கும். அதனால் குழம்பின் சுவையும் கெட்டுவிடும்; இரசத்தின் சுவையும் கெட்டுவிடும்.

இரண்டாவது நாள் நான் சமைத்தேன். தானும் கற்றுக் கொள்வதாகச் சொல்லி அச்சமையல்காரன் என் அருகிலிருந்து அன்று கற்றுக் கொண்டான். என் தந்தையாரைக் கூட்டங்களுக்கு அழைத்துச் செல்வதற்காக, அயலூரிலிருந்து எங்கள் வீட்டைத் தேடி யாராவது அடிக்கடி வந்து கொண்டிருப்பார்கள். முதல் முறை ஒழுங்காக நடந்து கொண்டவர்களாக இருந்தால் மறுப்பு ஏதும் சொல்லாமல் ஒத்துக் கொள்வார். ஒழுங்காக நடந்து கொள்ளாதவர்கள் வீட்டைத் தேடி மறுமுறை வந்து விட்டால் அவர்கள் பாடு திண்டாட்டந்தான் "யாரவ கூப்பிடு!.... போடா...! கூட்டமில்லை. போனமுறை வந்திருந்தப்ப பிட்நோட்டீஸ் போடல. சாப்பாடு சரியில்லை. ஒழுங்கா வண்டி ஏற்றி விடல. போ போ! வர முடியாது" என்று திட்டி அனுப்பிவிடுவார்.

கூட்டத்துக்குப் போகும்போது அவர் எந்த இடத்துக்குப் போகிறாரோ அந்த இடத்தின் தட்பவெப்ப நிலைக்கேற்ப உடை, போர்வைக் கம்பளிச் சட்டை ஆகியவற்றைப் பெட்டியில் வைத்து அனுப்புவோம். திரும்பி வரும்போது வெறும் பெட்டியும் அழுக்குத் துண்டும் தான் வரும்.கேட்பவர்களுக்கு அவற்றைக் கொடுத்து விட்டு வந்து விடுவார். ஒருமுறை வெளியூர் சென்றிருந்த போது வைர மோதிரத்தையும், கடிகாரத்தையும் கூட யாருக்கோ கொடுத்துவிட்டு வந்துவிட்டார். யாருக்கு அவர் எதைக் கொடுத்தாலும் வீட்டில் வாயைத் திறக்கக் கூடாது. திறந்தால் அன்று வீடு தலையாலங்கானந்தான்.

இன்றைய பேச்சாளர்கள் கூட்டத்திற்காக வெளியூர் சென்றால் ஆயிரம் ஐநூறு என்று வீட்டுக்குக் கொண்டு வருகிறார்கள். அன்றைய நிலை அப்படியில்லை. என் தந்தையார் கூட்டங்களுக்கு அயலூர் சென்று விட்டு வெறுங்கையோடு திரும்புவதுண்டு; சில நாட்களில் கைப்பணத்தைச் செலவு செய்துவிட்டு வருவதுண்டு. ஆகையால்

அவர் கூட்டத்துக்குப் போகிறேன் என்று சொன்னால் என் தாயாருக்குக் குலைநடுங்கும்; தப்புத்திப்பென்று குறுக்கும் நெடுக்குமாக நடந்து தமது வெறுப்பை வெளிப்படுத்துவார். தம்மிடம் எங்குப் பணம் கேட்டு விடுவாரோ என்று என் தாயாருக்கு அச்சம். இதைக் குறிப்பால் அறிந்து கொண்டு என்னை அருகில் அழைப்பார் என் தந்தையார். 'ஏம்மா! சீப்பை எடுத்து ஒளிச்சு வைச்சுட்டா கல்யாணம் நின்னுடும்னு உங்கம்மா நினைக்கறா!' என்று கூறுவார். நான் கையை நீட்டுவேன். வளையலைக் கழற்றி விற்று எடுத்துக் கொண்டு கூட்டத்துக்குப் போய் விடுவார். 1930ஆம் ஆண்டில் நான் பத்து வயதுப் பெண். அப்போது என் தந்தையார் ஒரு தீவிர தேசியவாதி. காங்கிரஸ் மீதும் கதர்மீதும் அவருக்கு அளவு கடந்த பற்று. கதர்த்துணியைத் தோளில் சுமந்து கொண்டு தெருத் தெருவாகச் சென்று விற்று வருவார். வீட்டில் நாங்கள் எல்லாரும் அணிவது கதராடைதான். என் தாயார் அப்போது கழுத்தில் அணிந்திருந்த பத்துபவுன் நகையை விற்று அந்தப் பணத்தில் தாம் எழுதிய 'கதர் இராட்டினப் பாட்டு' நூலை வெளியிட்டார். நாங்களே அந்நூலைத் தைத்து ஒட்டி விற்பனைக்கு அனுப்பினோம்.

கைச் செலவுக்குப் பணமில்லாத நேரத்தில் அவருக்குக் காரணமில்லாமல் கோபம் வரும். ஒருமுறை என் தாயார் ஓராண்டுக்குத் தேவையான புளியை வாங்கி இரண்டு பானைகளில் நிரப்பி வைத்திருந்தார். அவற்றைப் பார்த்ததும் வந்ததே கோபம்! 'புளி! அங்கே பெரிய பானைப்புளி! அப்படிச் சின்னப்பானைப் புளி! எதுக்கு? பத்து வருஷத்துக்குப் புளியா... பால அடிப்ப!' என்று சத்தம் போடத் தொடங்கிவிட்டார்.

வாத்தியார் சுப்புரத்தனம் என்றால் எல்லாருக்கும் கொஞ்சம் நடுக்கந்தான். எப்போதும் அவர் கையில் ஒரு கூட்டம் இருக்கும். வீட்டில் கத்தி, அரிவாள், தடி எல்லாம் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். எப்போது என்ன நடக்கும் என்று சொல்ல முடியாது.

சில சமயங்களில் ஓய்வு வேண்டி என் தந்தையார் அரசாங்க மருத்துவமனைக்குச் சென்று படுத்துக் கொள்வதும் உண்டு. பள்ளியிலிருந்து மருத்துவ விடுப்பு எடுப்பதற்காக அரசாங்க மருத்துவரிடம் சென்று மருத்துவச் சான்றிதழ் (Medical Certificate) கேட்பார். அவர் கொடுக்க மறுத்தால் 'பத்திரிகையில் எழுதி உன் குட்டை அம்பலப்படுத்துவேன்' என்று மிரட்டி விட்டு வந்து விடுவார். அன்று மாலை மருத்துவரே வீடு தேடிவந்து மருத்துவச் சான்றிதழை வழங்கிச் சமாதானப்படுத்திவிட்டுப் போவார்.

மருத்துவமனையில் படுத்துக் கொண்டு அங்கேயே கவிதை எழுதிப் போடுவார். நாங்கள் வீட்டுக்கு எடுத்துக்கொண்டு வருவோம்.

பிரெஞ்சு நாட்டில் விழிமலை என்றோர் இடமுண்டு. அம்மலை அந்நாட்டு மக்களால் மிகவும் புனிதமாகக் கருதப்படுகிறது. அம்மலையின் ஊற்றுநீர் மருந்துத் தன்மை வாய்ந்ததென்றும், அந்நீரை அருந்திய நோயாளிகள் நோய் நீங்கப் பெறுவர் என்றும் பிரெஞ்சு மக்கள் நம்புகின்றனர். அந்தக் காலத்தில் அந்நீரைப் புட்டிகளில் அடைத்துப் புதுவைக்குக் கொண்டுவந்து மருத்துவ மனையில் உள்ள நோயாளிகளுக்குக் கொடுப்பர், நோயாளிகள் அதை விரும்பி அருந்துவர்; ஆனால் என் தந்தையார் அதைக் கைகழுவப் பயன்படுத்துவார்.

நான் பள்ளி இறுதி வகுப்பு (S.S.L.C.) வரைதான் படித்தேன். அதற்கு மேல் என் கல்வியைத் தொடர என் வீட்டுச் சூழ்நிலை இடந்தரவில்லை. நான் மேற்படிப்புக்குச் சென்றிருந்தால் என் தந்தையாரின் எழுத்துப்பணி குறைந்திருக்கும்.

என் இளமைக்கால வாழ்க்கையின் பெரும்பகுதி என் தந்தையாரின் மனங்கோணாமல் அவரைப் பேணுவதிலேயே கழிந்தது. நான் எப்போதும் 'அப்பா பெண்'. அவர் உள்ளமறிந்து நடந்து கொள்வதில் கண்ணுங்கருத்துமாக இருப்பேன். ஓர் ஆசிரியர் இரவில் வீட்டுக்கு வந்து எனக்குத் தனிப்படிப்புச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். அவர் எனக்குப் பாடம் நடத்திக் கொண்டிருக்கும்போது 'பாப்பா! பாப்பா' என்று அறைக்குள்ளிருந்து என் தந்தையார் கூப்பிட்டுக் கொண்டிருப்பார். அவர் தேவைகளைக் கவனித்துக் கொண்டே கல்வி கற்பது எனக்கு மிகவும் கடினமாகத்தான் இருந்தது. இரவு பதினொரு மணிக்கு அவர் தூங்கிய பிறகு வீட்டு வேலைகளை முடித்துவிட்டு, வீட்டுப் பாடங்களைப் படித்து முடிப்பேன். இரவு எந்நேரம் படுத்தாலும் அதிகாலையில் எழுந்துவிட்டு வேலைகளைத் தொடங்கிவிடுவேன். குடும்பவிளக்கு நூல் முதல் பகுதி 1942 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. பள்ளிப் படிப்பை முடித்துவிட்டுக் குடும்பப் பணிகளை நான்கைந்து ஆண்டுகள் நான் செம்மையாகச் செய்து கொண்டிருந்த நேரம் அது. என்னைப் பார்த்துத்தான் குடும்ப விளக்கின் தலைவிக்கு உருவம் கொடுத்ததாக என் தந்தையார் அடிக்கடி கூறுவதுண்டு.

கொஞ்சநாள் நான் இசையும் கற்றுக்கொண்டேன். சேலத்திலிருந்து ஓர் இசையாசிரியர் வந்து எனக்குக் கற்றுக் கொடுத்தார். இசையில் என் தந்தையாருக்கு ஈடுபாடு அதிகம் என்றாலும், எப்போது

பார்த்தாலும் 'சரிகமபதநி' என்று கத்திக் கொண்டிருப்பது அவருக்குப் பிடிக்காது. 'யார்ரா அவ?... எப்பப் பார்த்தாலும் சரிகம பதநின்னுக்கிட்டு... அவனை மொதல்ல வெளிய போகச் சொல்லு...' என்று சத்தம் போடுவார்.

நானும் என் தம்பி கோபதியும் பள்ளி மாணவர்களாக இருந்தபோது, எங்களுக்கென்றே சில பாடல்களை எழுதிக் 'கவிதா மண்டலம்' பத்திரிகையிலே வெளியிட்டார். 'கல்வியின்மிக்கதாம்' 'நிற்கையில் நிமிர்ந்துநில்' 'சேரிடம் அறிந்துசேர்' 'மரங்கள் அடர்ந்திருக்கும் காடு' என்ற பாடல்கள் அப்போது எழுதப்பட்டவை. நெட்டப்பாக்கம் பள்ளியில் நாங்கள் படித்துக் கொண்டிருந்த போது பள்ளி விழாவில் நடிப்பதற்காக எழுதப்பட்டதே 'வீரத்தாய்' என்ற கவிதை நாடகம். அதில் நான் வீரத் தாயாக நடித்தேன். கோபதி சுதர்மனாக நடித்தான்.

21.1.44இல் எனக்கும் புலவர் கண்ணப்பனாருக்கும் திருச்சிராப்பள்ளியில் பதிவுத் திருமணம் நடைபெற்றது. 22.1.44 ஆம் நாள் காலை ஒன்பது மணிக்குப் பெரியார் முன்னிலையில் பாராட்டுக் கூட்டம் கட்டிப்பாளையத்தில் நடைபெற்றது. என் திருமணம் நடைபெறப் பெரிதும் முயற்சி எடுத்துக் கொண்டு உறுதுணையாக இருந்தவர்கள் கானாடுகாத்தான் தனவணிகர் திரு.வை.சு. சண்முகம் செட்டியாரும், அவரது துணைவியாரான மஞ்சுளாபாய் அம்மையாரும் ஆவர். மஞ்சுளாபாய் அம்மையார் எங்கள் குடும்பத்தின்பால் மிக்க ஈடுபாடு கொண்டவர். அவரை எங்கள் குடும்பத்தின் ஓர் அங்கமாக்கி 'அத்தை' என்று அன்போடு அழைப்பது வழக்கம். எப்போதும் அரசியலிலும் கவிதையிலும் மூழ்கிக் கிடப்பவர் என் தந்தையார். அவர் உலகமே வேறு; உலகியலுக்கு இறங்கிவந்து செயல்படுவது அவருக்குச் சற்றுத் தொல்லையாகத் தான் இருக்கும். அதுபோன்ற வேளைகளில் மஞ்சுளாபாய் போன்ற நல்ல உள்ளம் படைத்த அன்பர்கள் தாமே முன்வந்து உதவுவது வழக்கம்.

திருமதி மஞ்சுளாபாய் அவர்களே மாப்பிள்ளை பார்த்து விட்டுத் திடீரென்று ஒருநாள் புதுச்சேரி வந்தார். அவரே ஓட்டடை அடித்து வீட்டைத் தூய்மை செய்தார்; பால் வாங்கிக் கொண்டு வந்தார். பெண்பார்க்கும் படலத்தை உடனிருந்து நடத்தினார். திருமணத்தைப் பற்றி முதன் முறையாக என்னிடம் கேட்டபோது, "அப்பாவைப் பிரிந்து என்னால் இருக்க முடியாது; அவரைத் தொடர்ந்து செல்வதில்தான் எனக்கு விருப்பம். அப்பாவைக் கேளுங்கள். அவர் விருப்பம் எதுவோ அதுதான் என் விருப்பம்" என்று நான் சொன்னேன்.

பெரியாரைப் பின்பற்றும் தன்மான இயக்கத்தோழர்கள் சடங்குத் திருமணத்தை எதிர்ப்பவர்கள். ஆண் பெண் சமத்துவத்தை வற்புறுத்திப் பேசிய பெரியார், 'தாலி பெண்ணுக்குப் பூட்டப்படும் அடிமை சாசனம்' என்று அடிக்கடி குறிப்பிடுவார். அதனால் சீர்திருத்தத் திருமணங்களில் அன்று தாலிகட்டும் நிகழ்ச்சி இடம் பெறுவதில்லை. எனது திருமணப்பேச்சு நடைபெற்றபோது தாலி அணிவதற்கு என் எதிர்ப்பைத் தெரிவித்தேன். அப்போது என் தந்தையார், "கட்டிப்பாளையம் சிற்றூர் ஆயிற்றே! அங்கு ஏதாவது எதிர்ப்பும் பூசலும் ஏற்பட்டால் என்ன செய்வது? என்று கூறினார்.

"எதிர்ப்பதற்குத்தானே நாம் இருக்கின்றோம்" என்று நான் சொன்னேன். பிறகு புலி வில் கயல் பொறித்த மூவேந்தர் சின்னத்தைத் தங்கத்தால் செய்து என் மங்கல நாணில் அணிவித்தார்கள். அதற்குப் பிறகு எங்கள் குடும்பத் திருமணங்களில் 'புலிவில் கயல்' அணிவது வழக்கமாகி விட்டது.

திருமணம் முடிந்து முதன் முறையாக என் கணவரோடு பிறந்தகம் சென்று சில நாட்கள் மகிழ்ச்சியோடு தங்கியிருந்துவிட்டுப் புக்ககத்துக்குப் புறப்பட்டேன். இருபதாண்டுகள் இருந்து பழகிய வீட்டையும் உறவையும், குறிப்பாக என் அன்புத் தந்தையாரையும் பிரிந்து வருவது எனக்குப் பெரும் அதிர்ச்சியாக இருந்தது; என் தந்தையாருக்கும் என் பிரிவு மிகவும் வேதனையைக் கொடுத்திருக்க வேண்டும். வழியனுப்பிவிட எங்களோடு வந்த தந்தையார், விழுப்புரம் வந்ததும் என்னிடம் சொல்லிக் கொள்ளாமலேயே சென்று விட்டார். என்னிடம் சொல்லிக் கொண்டால் நான் கண்ணீர் விடுவேன் என்று அவர் எண்ணியிருக்கலாம். தந்தையார் என்னிடம் சொல்லிக்கொள்ளாமலே போய்விட்டதால் எனக்கு வருத்தம்.

கட்டிப்பாளையம் சென்றதும் நான் தந்தையாருக்குக் கடிதம் எழுதவில்லை. தம்பி தங்கையரின் நலன் விசாரித்து அம்மாவுக்கு கடிதம் எழுதினேன். சென்னையிலிருந்து திரும்பிவந்த தந்தையார், நான் அம்மாவுக்கு எழுதியிருந்த கடிதத்தைப் பார்த்தவுடன் என் வருத்தத்தைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். என் வருத்தத்தைப் போக்க ஆதரவோடு அன்புக்கடிதம் ஒன்று வரைந்தார்.

"அம்மா! உன் பிரிவு என்னை மிகவும் வருத்துகிறது. உன்னைக் கணவன் வீட்டுக்கு அனுப்பிவிட்டுப் புதுவையில் இருக்கும் நான் வலிய தோளும் வாளும் இழந்த படைவீரன்போல் இருக்கிறேன்' என்று எழுதியிருந்தார். இவ்வரிகளைப் படிக்கத் தொடங்கியதும் என் கண்கள் நீர்க்குளமாகிவிட்டன. நினைக்கும்போதெல்லாம் நெஞ்சை

உருக்கும் வரிகள், இந்த வரிகள்! திருமணம் என்ற புயல், எனது உயிரைப் புதுவையிலும் உடலைக் கட்டிப்பாளையத்திலும் ஒதுக்கி விட்டதாக அப்போது நான் எண்ணி வருந்தினேன். என் உள்ள(மன) நிலையை உணர்ந்த என் கணவரும் உடனே விடுப்பெடுத்துக் கொண்டு என்னோடு புதுவை புறப்பட்டார்.

நான் புதுவைக்கு இந்த நாளில் வருகிறேன் என்று முன்னதாகவே கடிதம் போட்டுவிட்டுச் செல்வது வழக்கம். என் வரவை எதிர்நோக்கி அவர் எப்போதும் திண்ணையிலேயே அமர்ந்திருப்பார். பெருமாள் கோவில் தெருமுனையில் என்னைப் பார்த்ததும் வீட்டுக்குள்ளிருக்கும் என் தாயாரை விளித்து, "பழனியம்மா! குடும்ப விளக்கு வருது" என்று கூறுவார். என் கணவர் புதுவைக்கு வரும்போதெல்லாம் என் தந்தையாரே கடைக்குச் சென்று மீன் வாங்கிக் கொண்டு வருவார்.

என் தலைப்பிள்ளையான புகழேந்தி புதுவையில் பிறந்தபோது, பிரெஞ்சு நாட்டிலிருந்து இறக்குமதியான சாக்லெட்டைப் பார்க்க வருபவர்களுக்கெல்லாம் குத்துக் குத்தாக வாரி வழங்கினார். பேரன் புகழேந்தி மீது அவருக்கு அளவு கடந்த விருப்பம். தமக்கு உடம்பு சரியில்லையென்றால் தந்தி கொடுப்பார். நான் குழந்தையோடு புறப்பட்டுச் செல்வேன். புகழேந்தியைப் பார்த்ததும் அவருக்கு உடம்பு குணமாகிவிடும்.

என் தந்தையாருக்கு உள்ளமும் நாக்கும் ஒன்றுதான். உள்ளத்தில் என்ன நினைக்கிறாரோ அதை எதிர்ப்புகளுக்கஞ்சாமல், பின் விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் பேசிவிடுவார்; எழுதிவிடுவார். அதனால் அரசியல் உலகிலும், இலக்கிய உலகிலும் அவருக்கு எதிரிகள் அதிகம். எதிர்ப்பு அதிகம் ஆக ஆக அவருக்குச் சுறுசுறுப்பு அதிகமாகுமே தவிர சோர்வு ஏற்படாது. அவர் எந்த நிலையிலும் அச்சப்பட்டு நான் பார்த்ததில்லை. இந்தப் பண்புகளால் அவருக்கு ஏற்பட்ட தொல்லைகள் ஏராளம். கல்வித்துறை அதிகாரிகள் வேண்டுமென்றே இவரை அடிக்கடி இடம் மாற்றிக் கொண்டிருப்பார்கள். காரைக்கால், நிரவி, கூனிச்சம்பட்டு, நெட்டப்பாக்கம், முதலியார்பேட்டை ஆகிய வெளியூர்களுக்கும், புதுவையில் கல்வே கல்லூரி முதல் மற்ற முத்திரைப் பாளையம், உருளையன் பேட்டைப் பள்ளிகளுக்கும் அவரைப் பந்தாடிக் கொண்டிருப்பார்கள். அதற்காக என் தந்தையார் கலங்க மாட்டார்; தம் கொள்கைகளையும் விட்டுக் கொடுக்க மாட்டார்.

கல்லூரி வகுப்புகளுக்குப் பாடம் பயிற்றுவிக்கத்தக்க பெரும் புலமையும் ஆற்றலும் பெற்றிருந்தாலும் சிறுவர்களின் மீது கொண்ட

அளவிறந்த பற்றின் காரணமாக கீழ் வகுப்புகளுக்கே என் தந்தையார் ஆசிரியராக இருப்பதுண்டு. அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியரான பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் இதைப் பற்றிக் குறிப்பிட்டு, "என்ன? பாரதிதாசன் அட்டைக் கிளாஸ் வாத்தியார் தானே"[1] என்று ஒருமுறை கேவலமாகப் பேசிவிட்டார். பண்டிதமணி அடுத்த முறை கூட்டத்தில் பேசப் புதுச்சேரிக்கு வந்தபோது, கூட்டத்தில் இருந்தவர்கள் எழுந்து, அவ்வாறு பேசியதற்காக அவரை மன்னிப்புக் கேட்கும்படி செய்தார்கள்.

ஏழை மாணவர்கள்பால் என் தந்தையாருக்கு எப்போதும் அன்பும் பரிவும் உண்டு. தேர்வுமேற்பார்வையாளராக இருக்கும்போது ஏழைப் பிள்ளைகளுக்கு இவரே சொல்லிக் கொடுத்து மதிப்பெண் போட்டுத் தேர்விலும் வெற்றியடையும்படி செய்து விடுவார். ஆசிரியர் பயிற்சிக்குப் படிக்கும் சில பெண்கள், தனிப் படிப்புக்காக வீட்டுக்கு வருவதுண்டு. அவ்வாறு வரும் பெண்களுக்குக் கல்வியோடு பண்பாட்டையும் புகட்டுவது இவர் வழக்கம். பெண்கள் இரட்டைச் சடை போட்டுக் கொண்டு வந்தால் இவருக்குப் பிடிக்காது. உடம்பு மறைய ஆடை உடுத்த வேண்டு மென்று வற்புறுத்துவார். 'பெண்களுக்கு அலங்காரம் தேவை யில்லை; தாயுள்ளமே தேவை. என்று அடிக்கடி கூறுவார்.

என் தந்தையார் எதற்கும் கண்கலங்கமாட்டார். என் தங்கை ரமணிக்குப் பிறகு, பிறந்த கைக்குழந்தையொன்று ஏழு திங்களில் இறந்தபோது கூட அவர் கண் கலங்கவில்லை. ஆனால் பாரதியாரைப் பற்றி யாராவது பேசினால் அழுவார். 'சாகிறேன்' என்று யாராவது சொன்னால் பேடித்தனம் என்பார்.

ஆடை, மீசை ஆகியவற்றின் மீது என் தந்தையார் அதிக அக்கறை காட்டுவது வழக்கம். அவர் அணியும் மேற்சட்டை (Long Coat) அவர் விருப்பப்படி தைக்கப்பட வேண்டும். அவர் விருப்பத்துக்குக் கொஞ்சம் மாறாக இருந்தாலும், தூக்கித் தையற்காரன் முகத்தில் வீசி எறிந்துவிடுவார். அவருடைய மீசையை ஒழுங்கு செய்யும்போது சவரத் தொழிலாளி மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவருக்குக் கடுமையான கோபம் வந்துவிடும். மீசை ஒழுங்காக வெட்டிவிடப்பட்டிருக்கிறதா? என்று

1) புதுவையில் முதல் வகுப்பு ஆசிரியரை 'அட்டைக் கிளாஸ் வாத்தியார்' என்று பொதுவாகக் குறிப்பிடுவது வழக்கம். பாவேந்தர் எப்போதும் ஐந்து அல்லது ஆறாம் வகுப்புகளுக்குப் பாடம் எடுப்பார்.

கண்ணாடியைக் கையில் வைத்துக் கொண்டு நீண்ட நேரம் பார்ப்பார்.

என் தந்தையார் ஒரு கறவை மாட்டைப் போன்றவர். கறவை மாட்டை எவ்வளவுக்கெவ்வளவு கவனமாகப் பேணுகின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமாக அது பால் கொடுக்கும். "அப்பாவிடம் கல்வியும் செல்வமும் சேர்ந்திருக்கிறது. அவரை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்" என்று என் தம்பியிடமும், தங்கைகளிடமும் நான் அடிக்கடி கூறுவதுண்டு. அவரைச் சரியாக கவனிக்கவில்லையென்றால் எழுதமாட்டார்.

பாடிப் பறந்த குயில்!

திருமதி வசந்தா தண்டபாணி

மறைமலையடிகளின் மகளார் நீலாம்பிகை அம்மையார் தம் தந்தையைப் போல் எழுத்தாற்றல் பெற்றவர். பாவேந்தரின் புதல்வியருள் எழுத்தாற்றல் வாய்க்கப் பெற்றவர் இவரே!

பாவேந்தரின் வாழ்க்கை வானில் நாள்தோறும் பளிச்சிட்ட வரலாற்று மின்னல்களை, இவர் வரைகோட்டுப் படமாக்கி அடிக்கடி செய்தித் தாள்களில் வெளியிட்டுக் கொண்டிருக்கிறார். சுவையான நிகழ்ச்சிகளைத் தெரிந்தெடுத்துச் சுவையாகச் சொல்லும் ஆற்றல் இயல்பாகவே இவரிடம் அமைந்திருக்கிறது. இக்கட்டுரையில் தம் தந்தையாரைப் பற்றிய சில செய்திகளை நினைவுபடுத்திக் கூறியுள்ளார்.

நானும் என் தங்கை ரமணியும் பள்ளிச் சிறுமிகளாக இருந்த நேரம். நான் எப்போதும் பள்ளிக்கு ஒழுங்காகச் சென்றுவிடுவேன். தங்கை ரமணி அடிக்கடி பள்ளிக்கு மட்டம் போட்டுவிடுவாள். இதையெல்லாம் கவனிப்பதற்கு என் தந்தையாருக்கு நேரமிருக்காது. ஆசிரியர் தொழிலும், அரசியலும், கவிதையும் அவருக்குச் சரியாக இருக்கும். ஒருநாள் நான் பள்ளிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தேன். என் தங்கை ரமணி பள்ளிக்குப் புறப்படாமல் முரண்டுபிடித்துக் கொண்டிருந்தாள். தந்தையார் அறைக்குள் உட்கார்ந்து மும்மரமாக எழுதிக் கொண்டிருந்தார். என் தாயார் கூச்சலிடத் தொடங்கினார். "பள்ளிக்குப் போகாம சின்னப் பொண்ணு ஏமாத்திக்கிட்டிருக்கிறா. நீங்க அதைப்பத்தி கொஞ்சமாவது அக்கறை எடுத்துக்கறீங்களா.. உங்க வேலையுண்டு நீங்க உண்டுண்ணு இருந்தா பெண்களோட படிப்பு என்னாகறது?"

என்று என் தந்தையாரைப் பார்த்து முறையிட்டார் என் தாயார். என் தந்தையார் எதுவும் பேசவில்லை. அமைதியாக எங்களையே பார்த்துக் கொண்டிருந்தார். அவர் முகத்தில் எந்தவிதம் சலனமும் தென்படவில்லை. அவ்வாறு அவர் எங்களையே பார்த்துக் கொண்டிருந்தது எங்கள் உள்ளத்தில் அச்சத்தை ஏற்படுத்தியது. நானும் என் தங்கையும் பள்ளிக்குச் சென்றுவிட்டோம்.

அடுத்த நாள் காலை நாங்கள் பள்ளிக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த போது, என் தந்தையார் மிகவும் அன்போடு "இந்தாம்மா ரமணி இங்க வா!" என்று கூப்பிட்டார். நானும் ரமணியும் அவரருகில் சென்றோம். அவர் கையில் ஒரு தாள் இருந்தது. அத்தாளில் ஒரு பாடல் எழுதப்பட்டிருந்தது. அப்பாடலை இசையோடு பாடிக்காட்டினார். அப்பாடல் மிகத் தெளிவாகவும், எங்கள் பிஞ்சுள்ளங்களில் பதியும்படியும் எழுதப்பட்டிருந்தது. நாங்கள் மெய்மறந்து எங்கள் தந்தையார் பாடிய பாடலைக் கேட்டுக் கொண்டிருந்தோம். 'தலைவாரிப் பூச்சூடி' என்று தொடங்கும் அப்பாடல் 'தந்தை பெண்ணுக்கு' என்ற தலைப்பில் இசையமுது முதற்பகுதியில் இடம் பெற்றுள்ளது. இப்பாடலில் தாயினால் அலங்கரிக்கப்பட்டுப் பள்ளிக்கு அனுப்பப்படும் பள்ளிச் சிறுமியின் தோற்றமும், அவள் கண்ணீரும், தந்தையின் அறிவுரையும், கல்வியின் சிறப்பும் மிக அழகாக எடுத்துச் சொல்லப்படுகின்றன. இப்பாடல் திரைப்படப் பாடலாக வந்து தமிழகத்தில் நல்ல விளம்பரத்தைப் பெற்றதோடு, ஒவ்வொரு பெண்கள் பள்ளியிலும் பாடி ஆடி நடிக்கப்படுகிறது.

எங்கள் தாயார் பள்ளி செல்லாமல் பிடிவாதம் செய்த என் தங்கையைப் பற்றி முறையீடு செய்தபோது, தந்தையார் முகத்தில் சலனமேதுமில்லாமல் எங்களைக் கூர்ந்து நோக்கியதன் பொருள் எனக்கு இப்போதுதான் விளங்கியது. மற்ற தந்தையராக இருந்தால் தாயருடன் சேர்ந்து கொண்டு பிள்ளைகளைத் திட்டித் தீர்த்திருப்பார்! ஏன்? அடித்தும் இருப்பர்! எங்கள் தந்தை பாவேந்தர் அல்லரோ? அவர் சிந்தனை உடனே கவிதையின் பக்கம் திரும்பி விட்டது. வீட்டிலே நடந்த இச்சிறுநிகழ்ச்சி, நாட்டுக்கே பாடமாக விளங்கும் இலக்கியமாக மலர்ந்துவிட்டது.

என் தந்தையாருக்குச் சோதிடத்தில் ஈடுபாடு கிடையாது. எனினும் சோதிடம் வல்லார் ஒருவர் அவருக்கு நெருங்கிய நண்பர். அச்சோதிடர் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருவார் சாப்பாட்டு வேளைக்கு! சோதிடமும் சொல்வார். உணவுண்டும் செல்வார்; கவிஞரைத் தவிர, புதுவையில் உள்ள அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட யாவருக்குமே அவர் சோதிடம் கூறுவதுண்டு.

அவரிடம் கவிஞருக்குப் பிடிக்காத 'அம்சம்' ஒன்று உண்டு! அது 'நீ பயப்படாதே சுப்புரத்தினம்' என்று அவர் சொலவது தான்.

சோதிடர் நெடுநாளைய நண்பர் என்பதோடு, கவிஞரை விட வயதில் மூத்தவர். இவற்றையெல்லாம் கருதி கவிஞர் ஒன்றும் சொல்லாமல் பல்லைக் கடித்துக் கொண்டு இருந்து விடுவார். ஒருநாள் கவிஞருக்குப் பள்ளி விடுமுறை. வழக்கப்படி சோதிடப் புலி வந்தது. கவிஞரும் அவரும் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

வழக்கப்படி சோதிட நண்பர், "சுப்புரத்தினம்! நான்... பிள்ளை வீட்டுக்குப் போனேன். எலக்சியம் (தேர்தல்) சம்பந்தமாகப் பேசிக்கிட்டிருந்தோம். அவரை எதிர்த்து நிக்கிறவன் சாய்கால் உள்ள ஆளாம்! கொஞ்சம் கவலைப்பட்டார். நான் சொன்னேன். பயப்படாதே! உனக்கு இன்ன ராசியில இன்னார் இருப்பதால்...!' என்று நிறுத்தினார்.

கவிஞர் எதிர்நோக்கியிருந்த நேரம் வாய்த்துவிட்டது. திடுமென்று சாய்வு நாற்காலியை விட்டு எழுந்து விட்டார். "ஏண்ணே(ன்) உனக்கு கொஞ்சமாவது அறிவு கிறிவு இருக்கா? எவ்வளவு பெரிய ஆள் அவன்! இந்த சோசியத்தை நம்பியா[1] 'பொலீத்திக்' (அரசியல்) பண்றான்! நிலைமையை உங்கிட்ட சொன்னான். அதுக்கு நீ பயப்படாதேன்னு சொன்னா என்ன அருத்தம்? நீ வந்தா, 'இது இப்படியிருக்கு அப்பா! அதுக்குத் தகுந்தமாதிரி நடந்துக்கோ'ன்னு சொல்லணுமே தவிர, 'நீ பயப்படாதே'ன்னு சொன்னா அது தப்பில்லையா? ஒருவன் சோசியத்தை நம்பிப் பயந்து விடுகிறான் என்றோ துணிச்சலா இருக்கிறான் என்றோ சொன்னால் அவனை மடையன் என்றுதா சொல்லணும்" என்று காட்டமாகத் தாக்கி விட்டார். வெலவெலத்துப் போய்விட்டார் சோதிடர்.

"சுப்புரத்தினம்! நான் கிழவன்! கோவிச்சுக்கிறாதே! நீ சொல்றதும் சரிதான்! எல்லோரும் பயந்துக்கிட்டேயே இருக்காங்க! ஆனா, உன்னைப்போல இருக்கிறவங்ககிட்ட அப்படிச் சொல்லுவது தப்பு தான்!" என்று அழாக்குறையாகச் சொன்னார் சோதிடர்.

"அது இருக்கட்டும் அண்ணே! நீ கையைக் கழுவிக்கிட்டுவா, சாப்பிடலாம்" என்று சோதிடர் தலையில் 'ஐஸை' வைத்தார் கவிஞர்.

எதற்கும், எங்கும், யார்க்கும் அஞ்சுவது என்பதே அவர் வாழ்க் கையில் இருந்ததில்லை என்பதற்கு இந்நிகழ்ச்சி சரியான சான்று.

1955ஆம் ஆண்டு புதுவையில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில்

1) எலக்சியம் பொலீத்திக் என்ற இரண்டு சொற்களும் பிரெஞ்சுச் சொற்கள்

பெரும்பான்மை மக்களின் ஆதரவோடு 'மக்கள் முன்னணி' என்ற கூட்டமைப்பு வெற்றி பெற்றது. பல்லாயிரக்கணக்கான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்றுக் கவிஞர் சட்டமன்ற உறுப்பின ரானார், மூத்த உறுப்பினர் என்ற முறையில் இவர் தலைமையில் தான் சட்டமன்ற முதல் கூட்டமே துவங்கப்பட்டது. அத்தேர்தலில் வெற்றி பெற்ற மற்றோர் உறுப்பினரும் நண்பருமான திருவாளர் உசேன் அவர்கள் ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தார். அவ்விருந்துக்குக் கவிஞரும் அழைக்கப்பட்டிருந்தார். எல்லாம் தூய நெய்யால் சமைக்கப்பட்ட உயர்தரப் புலால் உணவுகள்.

கோழி ரோஸ்ட் பரிமாறப்பட்டது. கவிஞர் சுவைத்து உண்டு கொண்டிருந்தார். அளவுக்கு மீறி நெய் சேர்க்கப்பட்டிருந்ததால் கவிஞருக்கு உணவு தெவிட்டத் தொடங்கி விட்டது.

விருந்து வைத்தவர் இதைப் பார்த்தார். அருகிலிருந்த ஊறுகாய்த் தட்டத்தைக் கவிஞர் அருகிலே நகர்த்தி வைத்து "முசியே![1] இந்த ஊறுகாயைக் கொஞ்சம் சாப்பிடுங்கள்; சரியாகிவிடும்!" என்றார்.

புளிப்புச் சுவையுள்ள ஊறுகாயைக் கவிஞர், சிறிது வாயில் எடுத்துப் போட்டுக் கொண்டார். சில வினாடிகள் கழித்து மீண்டும் கவிஞர் கோழியைச் சுவைக்கத் தொடங்கினார். திரு. உசேன் இதை மிக மகிழ்ச்சியோடு கண்டு களித்துக் கொண்டிருந்தார்.

கவிஞர் திடீரென்று, "அட! கோழியை ஊறுகாய் வாழ வைத்து விட்டதே!" என்றார். கவிஞர் சொன்ன கருத்தின் பொருள் விளங்காமல் விழித்தார் விருந்து வைத்த நண்பர்.

பாவேந்தர் இயற்கையெய்திப் பல ஆண்டுகள் கழித்து 25.4.68 இல் புதுவையில் நடைபெற்ற பாவேந்தர் நினைவு விழாவில் திருவாளர் உசேன் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினார். அப்போது இவ்விருந்து நிகழ்ச்சியை நினைவு கூர்ந்து பின் கண்டவாறு கூறினார்.

"பாவேந்தர் கூறிய கருத்தின் பொருள் அன்று எனக்குப் புரியவில்லை. சுமார் பத்து ஆண்டுகள் கழித்து இப்போதுதான் புரிந்தது. செல்வர்கள் மட்டுமே உண்ணக்கூடிய நெய்யில் பொரித்த கோழிக்கறியைப் பெரும்பாலும் ஏழைகள் மட்டுமே உண்ணக்கூடிய ஊறுகாய் வாழ வைத்துவிட்டதே என்றால்-செல்வர்களை ஏழைகளே வாழ வைக்கிறார்கள் என்பது அதன் பொருள். இக்கருத்தை விளக்கவே பாவேந்தர் அவ்வாறு கூறினார். உண்ணும்போதும் உறங்கும்

1) முசியே என்பது monsieur என்ற பிரெஞ்சுச் சொல்லின் தமிழ் ஒலிப்பு. 'ஐயா' என்பதே பொருள்.

போதும் கூட அவர் சமதர்மச் சிந்தனையோடு வாழ்ந்தார் என்பதற்கு இந்நிகழ்ச்சி சிறந்த சான்றாகும்".

கீர்த்திகொள் போகப் பொருட்புவியே! உன்றன்
கீழிருக்கும் கடைக்கால்-எங்கள்
சீர்த்தொழி லாளர் உழைத்த உடம்பிற்
சிதைந்த நரம்புகள் தோல்!

அச்சம் அவர் அறியாதது

திரு. மன்னர் மன்னன்

இவர் பாவேந்தர் என்ற இலக்கியப் பேராற்றின் வடிகால்; புரட்சித் தென்றலில் பூத்த இளவேனில்; தேன் கவிதை தீட்டிய கனக சுப்புரத்தினத்தின் ஆண் கவிதை! இவர் கவிதை மொழியான ஃபிரெஞ்சையும், கரும்பு மொழியான தமிழையும் கற்றுத் தெளிந்தவர், இவருக்குப் பால்ஸாக்கையும் பிடிக்கும்; பரணரையும் பிடிக்கும்.

பாவேந்தர் தம் வாழ்க்கையில் காதலோடு தொகுத்த பாட்டுக் குறுந்தொகையான இவர், இன்று பாவேந்தரின் வாழ்க்கை வரலாற்றையும் படைப்புகளையும் தொகுத்துக் கொண்டிருக்கிறார்.

நான்கைந்து முத்துக்களைக் கோத்துக் கோத்துப் பாவேந்தர் நளினமாக எழுதிய உரைநடை, இவர் கையிலும் கொஞ்சி விளையாடுகிறது.

அச்சத்தை அறியாத பாவேந்தர் மாலையில், இக் கட்டுரை மணமிக்க ஒரு பிச்சிப்பூ!

நான்கு வயதுக் குழந்தையாக நானிருந்தபோது, "நீ சாமிக்குப் பயப்படுவாயா? எனக்குப் பயப்படுவாயா?" என்று ஒரு பையன் என்னைக் கேட்டான். அதை நான் என் தந்தையாரிடம் சொன்னேன். உடனே "எவனுக்கும் நான் பயப்பட மாட்டேன்" என்று விடையிறுக்கச் சொல்லி எனக்கு மனவலிமை அளித்தவர் கவிஞர். நெஞ்சுரமிக்க அவரை நினைக்கும்போதெல்லாம் அவரின் எழுத்தாற்றலுக்கு வித்தாக அமைந்த நிகழ்ச்சிகள் இன்றும் என்னுள்ளத்தில் படமாடிக் கொண்டிருக்கின்றன.

தன் இளமைப்பருவ நண்பர்களைக் கண்டாலே கவிஞருக்கு எப்போதும் அளவிலா மகிழ்ச்சி. புதுவையில் நீண்ட காலத்துக்கு முன் வேலை நிமித்தமாகப் பிரிந்து விட்ட அரங்கநாதனை மீண்டும் நெட்டப்பாக்கம் சிற்றூரில் சந்தித்தபோது துள்ளிக் குதித்தார் கவிஞர். அரங்கநாதன் இளைஞராக இருந்தபோது நாடகங்களில் அனுமன் வேடம் ஏற்பது வழக்கம். அதனால் 'குரங்கு ரங்கநாதன்' என்று நண்பர்களால் அவர் அன்புடன் அழைக்கப்பட்டார். இவ்வடைமொழிக்கு வேறு ஒரு காரணமும் உண்டு. கவிஞர் தம் குழாத்துடன் சிறுவயதில் செய்த துடுக்குத் தனங்களில் இந்த அரங்கநாதனுக்கும் முக்கியப் பங்குண்டு.

நெட்டப்பாக்கத்தில் வருவாய்த் துறையைச் சார்ந்த கணக்குப் பிள்ளையாக அரங்கநாதன் வேலைபார்க்கும் சமயம், தமிழாசிரியராக வந்து சேர்ந்தார் கவிஞர். நாங்கள் அரங்கநாதனை மாமா என்றும், அவரின் துணைவியாரை அத்தை என்றும் அன்புடன் அழைப்போம். அந்த அம்மையாரின் பெயரும் சுப்புரத்தினம். மிக நெருக்கமாக அவர்களோடு எங்கள் குடும்பம் பழகிக் கொண்டிருந்தது. மாலைவேளையில், அரங்கநாதன் வீட்டுத் திண்ணையில் அரசு அலுவலர் உட்படக் கவிஞர் குழாம் சீட்டு ஆடுவது வழக்கம். புள்ளி ஒன்றுக்கு ஒரு தம்பிடி, கவிஞர் நன்றாகவே சீட்டு ஆடுவார்; தம்பிடிக் காசாகவே ஒரு சிறு மூட்டை கட்டிக் கொண்டு வீடு வந்து சேருவார்.

ஒரு விடுமுறைநாள் - எல்லாரும் பிற்பகலிலேயே கூடிவிட்டார்கள். மாலை மயங்கிப் பொழுது இருட்டத் தொடங்கிய நேரம். சுறுசுறுப்பாகச் சீட்டாட்டம் நடந்து கொண்டிருந்தது.

"ஐயோ! என்று குரல் எழுப்பி, மேலே எழும்பிக் குதித்தார் அரங்காநதன். 'அங்க பாரு'.. சுப்பு பா..பா..!" என்று குழறினார். அவர் வாயிலிருந்து சொற்களே வெளிவரவில்லை. கவிஞர் திண்ணையிலிருந்து எட்டி உயரப் பார்த்தார். திண்ணையோரத்தில் சாய்ந்திருந்த பூவரச மரக்கிளையில் பச்சைப்பாம்பு ஒன்று நழுவிக் கொண்டிருந்தது.

பச்சைப்பாம்பைக் கண்டு அச்சமேலீட்டால், எழும்பிக் குதித்த அரங்கநாதனை நோக்கிக் கவிஞர் "அந்தக்கால நாடகத்திலே கடலைத் தாண்டிக் குதிக்கறதா பச்சையா புளுகிப் பாடுவ இப்ப, பச்சைப் பாம்பைப் பார்த்துட்டு, எம்பிக் குதிக்கிறியே... சரியான அனுமாரப்பா நீ!" என்று சொல்லிவிட்டுக் கலகல என்று நகைத்தார்.

அரங்கநாதனுக்குப் பழைய நினைவுகள் பளிச்சிட்டன. "கணக்குப்

பிள்ளையான எனக்கு இளம்பிராயத்திலே இருந்ததும் அச்சம்; இப்போதும் அச்சந்தான்! கவிஞனான உனக்கு இளம் வயதிலிருந்தே அச்சம் என்பது இன்னதென்று தெரியாமல் போய்விட்டது" என்று கூறினார் அரங்கநாதன்.

'அச்சந்தவிர்' என்றார் பாரதி. 'அச்சத்தின் வேர் மடமை' என்றார் பாவேந்தர். பாடல்களில் மட்டுமல்லர்; வாழ்க்கையிலும் அச்சத்தை அறியாதவர் என்பதற்குப் பல சான்றுகள் உள. ஒரு நிகழ்ச்சி பாவேந்தரே கூறுகிறார் கேளுங்கள்:

"புதுவையில் அடைக்கலமாகியிருந்த பாரதியார் குழாத்துக்கு அயல் நாடுகளிலிருந்து அடிக்கடி செய்திகள் வரும். என் மூலமாகத்தான் புரட்சி வீரர்க்குத் தகவல் போய்ச் சேரும். இதைப்பற்றி அன்றைய ஆங்கிலத் துப்பறிவாளர்க்கும் தெரியும். வந்த தகவல் என்ன என்பதை அறிந்து கொள்ளத் துடிப்பார்கள். அவர்களை மடக்கி அனுப்புவது தான் எங்களுக்குப் பெரிய பொறுப்பாக இருந்தது.

மாடசாமி புதுவையில் தங்கியிருந்ததை அறிந்து கொண்டு துப்பறிவாளர்கள் புதுவையில் மொய்த்தார்கள். மாடசாமியைப் புதுவையிலிருந்து அயல் நாட்டுக்கு அனுப்பிவிடுவது என்று முடிவு எடுத்தாகிவிட்டது. ஆனால் அதுவரைக்கும் மாடசாமியைக் காப்பாற்றியாக வேண்டுமே!

மயூரேசன் என்பவர் அன்றைய வால்காட் கம்பெனியில் வேலை செய்தவர். ஆங்கிலத் துப்புத் துலக்கிகளுக்கு அவர் உளவு சொல்லிக் கொண்டிருந்தார். இந்த மயூரேசன் அரவிந்தர் வீட்டிலிருந்த புரட்சிக் கருத்துக்கள் அடங்கிய ஐந்து நூல்களை எப்படியோ களவாடிச் சென்று விட்டார். இந்த விபரம் எனக்குத் தெரியும். ஒருநாள் நடராஜாச்சாரியின் நாடகம் பார்த்துவிட்டுத் திரும்பிய அரங்கநாதனும், நானும் சற்றும் எதிர்பாராமல் மயூரேசன் வீட்டில் எட்டிப் பார்த்தபோது அரவிந்தர் வீட்டிலிருந்து களவாடப்பட்ட புத்தகங்களும் பக்கத்தில் ஒரு கைத்துப்பாக்கியும் இருக்கக் கண்டு, பளிச்செனத் தோன்றிய ஒரு தந்திரமாக, அவற்றை எடுத்துக் கொண்டு வந்து விட்டோம். மறுநாள் மாடசாமியிடம் அந்தத் துப்பாக்கியைத் தந்து ஈஸ்வரன் தருமராஜா கோவில் தெருவிலிருக்கும் பாரதி வீட்டுக்குச் சென்றோம். துப்பறிவோரும் மயூரேசனும் தொடர்வது தெரிந்தது. எதிரிலிருந்த காமாட்சியம்மன் கோவிலில் புகுந்து அதற்கருகிலிருந்த ஒரு வீட்டில் மாடசாமியை ஒளித்துவிட்டேன். மீண்டும் காமாட்சியம்மன் கோவில் உட்புறம் நுழைந்து சுற்று மதிற்சுவர் மீது ஏறிப்பக்கத்தில் உள்ள தெருவில

குதித்துவிட நினைத்தேன். கோவிலுக்குள்ளே வந்து விட்டான் மயூரேசன்.

கண் இமைக்கும் நேரம். மிக உயர்ந்த மதிற்சுவரினின்று கீழே குதித்தேன் ஓட்டமாக ஓடிப் பாரதி வீட்டிற்குள் புகுந்தேன். வெகுநேரங் கழித்து மாடசாமியை மீட்டு வீடு வந்து சேர்ந்தேன்.

மறுநாள் பாரதி என்னைப் பார்த்து, "மீண்டும் இந்த உயரத்திலிருந்து உன்னால் குதிக்க முடியுமா? உனக்குள் கனன்று கொண்டிருந்த புரட்சி எண்ணம் உன் காலுக்கு வலிமையூட்டியுள்ளது?" என்று கூறினார்.

மக்கள் நலனுக்கான கிளர்ச்சிகளை வெற்றிகரமாக நடத்துவதில் பாவேந்தர் மிகவும் துணிச்சலானவர்; எத்தகைய எதிர்ப்புக்கும் அஞ்சாதவர். இது தொடர்பாக ஒரு நிகழ்ச்சி என் நினைவிற்கு வருகிறது. தேவிகுளம் பீர்மேட்டைத் தமிழகத்தோடு இணைக்க வேண்டும் என்பதற்காக ஒரு கடையடைப்புப் போராட்டத்தைப் பாவேந்தர் புதுவையில் நடத்தினார். புதுவையில் அனைத்துக் கட்சிகளையும், ஒன்றுபடுத்திக் கிளர்ச்சி அமைதியான முறையில் நடைபெறத் திட்டம் வகுத்திருந்தார். அவரே வீதி வீதியாய்ச் சென்று ஏற்பாடுகளைக் கவனித்தார்.

"ஊர்வலம் செல்வதற்குப் போலீஸ்
வழங்கிய ஆணையில் சில வீதிகளைக்
குறிப்பிட்டு இருக்கிறார்கள். அந்த
வீதிகளில்தான் போக வேண்டும்"

-காவல்துறை அதிகாரி இப்படி எச்சரித்தார்.

"அப்படியே செய்வோம்" கூறிவிட்டு ஒரு சிற்றுண்டி விடுதி நோக்கிச் சென்றார் பாவேந்தர்.

"நீங்கள் விதிமுறையை மீறி இப்போது போகிறீர்கள்"

என்று மறுபடியும் சற்றுக் கண்டிப்பாகக் கூறிய அதிகாரி, தந்தையாரின் எதிரில் போய் நின்றார்.

பாவேந்தர் சொன்னார்: நான் வீதியில் நடக்கவும் கூடாதா?

அதிகாரி: நீங்கள் நடக்கிறீர்கள்... உங்களின் பின்னால் சில ஆயிரம் பேர் வருகிறார்களே?

பாவேந்தர்: அதற்கு நானென்ன செய்வது?

அதிகாரி: இது ஓர் ஊர்வலமாகிவிட்டது என்கிறேன் நான்.

பாவேந்தர்: ஊரிலிருக்கின்ற அத்தனை கடைகளும், நிறுவனங்களும் சாத்தப்பட்டிருக்கையில் ஒரே ஓர் ஓட்டல் மட்டும் திறந்திருப்பதைப் பார்க்க வருகிறார்கள் மக்கள்...

அதிகாரி: நீங்கள் இந்தப் பகுதியிலிருந்து போய் விட்டால் மக்கள் கூட்டம் கலைந்து போய்விடும்.

பாவேந்தர்: நான் ஒன்று சொல்கிறேன்... இந்த ஒரே ஒரு கடையும் மூடப்பட்டு விட்டால் மக்கள் கூட்டம் கலைந்துவிடும்.

அதிகாரி: கடையைத் திறந்து வைத்திருப்பது தனியொருவரின் விருப்பம்.

காவல்துறை அதிகாரியுடன் கவிஞர் ஏதோ காரசாரமாகப் பேசிக் கொண்டிருப்பதைக் கண்ட மக்கள், ஏதோ நடக்கப் போகிறது என்று கருதி இவர்களைச் சூழ்கிறார்கள்.

காவல் அதிகாரி இவரிடம் முறையின்றிப் பேச்சுக் கொடுத்து விட்டதை உணர்கிறார், கவிஞர்பால் அந்த அதிகாரிக்கு ஈடுபாடு உண்டு. ஆனால் அவருக்கு இடப்பட்ட கட்டளையை நிறைவேற்ற வேண்டுமே!

அவர் இதை யோசித்துக் கொண்டிருக்கையில், "ஏம்பா..." என்ற இடிக்குரலை எழுப்பிச் சிற்றுண்டி விடுதியில் நுழைகிறார் பாவேந்தர். கடை உரிமையாளர் கவிஞரின் நண்பர்தான்.

அவர் கேட்கிறார்: "நான் கடையை மூடிவிட்டால் தேவிகுளம் பீர்மேடு பகுதியைத் தமிழ்நாட்டுடன் சேர்த்து விடுமா அரசாங்கம்? சொல்லேன் சுப்பு!"

பாவேந்தருக்குச் சினம் பொங்கிவிட்டது.

அடாவடிப் பேச்சன்றோ இது?

"நீயா சாத்தினா கிடைக்காது. நாங்க கேட்கிற உரிமை! நான் சாத்தினா கிடைச்சிடும்! வீண் வம்பை வளர்க்காதீங்க!" என்று எச்சரிக்கை விடுத்தார் பாவேந்தர்.

கடை சாத்தப்பட்டு விட்டது. மறுநொடியில் வெளியில் காத்திருந்த மக்கள், ஊரில் வேறு எங்காவது கடைதிறந்து வைக்கப்பட்டிருக்கிறதா என்று அறிந்துவரக் கலைந்து சென்று விட்டனர்.

ஒரு சிறிய வெற்றிலை பாக்குக் கடையும் இல்லை... மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் கிடந்தன வீதிகள்.

கடைகளைத் திறக்காவிட்டால் கடும் விளைவு ஏற்படும் என்று எச்சரித்து இரவோடு இரவாகக் கலகக்காரர்கள் சிலரை மாற்றுக் கட்சியினர் அமர்த்தியிருந்தனர்.

ஒரு சிறிய கலகக் குறியும் இல்லாமல் கிளர்ச்சி நடைபெற வேண்டும் என்ற திட்டத்தில் இறங்கினார் பாவேந்தர்; அவ்வாறே நடைபெற்றது. உரிமைக்குப் போராடுகிறவர்கள், ஊர் அமைதியைக் குலைப்பதைத் தவிர்க்க வேண்டும்; ஒன்றுபட்டுக் குரல் எழுப்ப வேண்டும்; அது பொது நலனுக்காக மட்டுமே அமைய வேண்டும்" என்பார் தந்தையார். அவர் படைத்த குடும்ப விளக்கு கூறுகிறது.

தலைவன் தலைவியர்கள்
தங்கள் குடும்ப
அலைநீங் கியபின்-
அயலார்-நிலைதன்னை

நாடலாம் என்னாமல்
நானிலத்தின் நன்மைக்குப்
பாடு படவேண்டும்
எப்போதும்-நாடோ

ஒருதீமை கண்டால்
ஒதுங்கிநிற்றல் தீமை
....
... .. -இழுக்கென்று

காணில் நமக்கென்ன
என்னாமல் கண்டஅதன்
ஆணிவேர் கல்லி
அழகுலகைப்-பேணுவதில்

நேருற்ற துன்பமெலாம்
இன்பம்!...

பாவேந்தர் பற்றி...!

முத்தமிழ்க் காவலர்
கி.ஆ.பெ. விசுவநாதம்

தமிழே பேச்சாகவும் மூச்சாகவும் கொண்டு வாழும் தமிழ்ப்பழம் முத்தமிழ்க் காவலர், சுரைக்கொடி கூரையெல்லாம் ஓடிப்படர்ந்தாலும், அதன் வேர் நிலத்தில் இருப்பதைப் போல அரசியல் பொருளியல் சமூகவியல்களில் இவருடைய சிந்தனைகள் ஓடிப் படர்ந்தாலும் வேர் தமிழ் நிலத்தில் தான்!

'தமிழுக்காக எதையும் விட்டுக் கொடுக்கத் தயங்காதவர்!' என்ற பிடிவாத உணர்வே, இவருக்குப் பெருமை சேர்த்த அரசியல். வாழும் பெரியார்.

எனது முதற்கவிதைத் தொகுப்புக்கு எத்தனையோ பேர் முன்னுரை வழங்கியிருக்கிறார்கள். அவற்றுள் கி.ஆ.பெ. கொடுத்தது தான் முன்னுரை' என்றார் பாவேந்தர். எனவே முன்னுரைக்கு மதிப்புரை பெற்ற தமிழறிஞர் இவர்.

'நான் பாரதிதாசன் கவிதைகளைக் கதைக்காக ஒரு முறை, கருத்துக்காக ஒருமுறை, கொள்கைக்காக ஒருமுறை, உணர்ச்சிக்காக ஒருமுறை, இனிமைக்காக ஒருமுறை, எழிலுக்காக ஒருமுறை படித்தேன். ஒவ்வொரு கவிதையும் ஒரு படித் தேன்!' என்று பாவேந்தர் எழுத்தைப் பழச்சாற்று வரிகளால் பாராட்டும் இவர், அவரைப் பற்றிய நினைவுகளை இக்கட்டுரையில் நிறுத்தியிருக்கிறார்.

ஐம்பது ஆண்டுகட்கு முன்பு ஈரோட்டில் பெரியார் குடியரசுப் பத்திரிகையைத் தொடங்கி நடத்தி வந்தார். அப்பத்திரிகையில்

மாதம் பதினைந்து ரூபாய் சம்பளத்தில் கல்கி கிருஷ்ணமூர்த்தி அச்சுத் திருத்தராகப் (Proof reader) பணிபுரிந்து வந்தார். சென்னை எஸ்.எஸ்.வாசன் குடியரசுப் பத்திரிகையின் விளம்பர முகவராக (Publicity Agent) இருந்தார். நான் சுயமரியாதை இயக்கத்தின் பொதுச் செயலாளராக இருந்தேன். பகுத்தறிவுக் கருத்துக்களைப் பரப்பும் பாடல்களுக்கு முதன்மை கொடுத்துக் குடியரசில் அடிக்கடி வெளியிட்டு வந்தோம். பாவேந்தர் பாரதிதாசன் அப்போது அடிக்கடி ஈரோடு குடியரசு அலுவலகத்துக்கு வருவார்.

'பாரதிதாசன் கவிதைகள்' எனும் பெயரால் அவரது கவிதைகளிற் சிலவற்றைத் திரட்டி வெளியிடும் முதல் முயற்சியில் பங்கு பெற்றவன் நான் என எண்ணும்பொழுது என் உள்ளம் மகிழ்ச்சி அடைகின்றது. அதைவிட அதிக மகிழ்ச்சி உண்டாகிறது, அம்முதல் நூலுக்கு முன்னுரை வழங்கியதை எண்ணும் பொழுது, 'கதைக்காக ஒருமுறை, கவிதைக்காக ஒருமுறை, கருத்திற்காக ஒருமுறை, கொள்கைக்காக ஒருமுறை, உணர்ச்சிக்காக ஒருமுறை, இனிமைக்காக ஒருமுறை, எழிலுக்காக ஒருமுறை படித்தேன். ஒவ்வொரு முறையும், ஒவ்வொரு கவிதையும் ஒருபடித் தேனாகவே ருசித்தது' என்பதே அம்முன்னுரை. இந்நூல் நாட்டில் நல்ல பயனை விளைவித்தது.

28.7.46இல் நானும், அன்பர் திரு.சி.என்.அண்ணாத்துரை அவர்களும் சேர்ந்து நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் சென்னைப் பச்சையப்பர் பள்ளித் திடலில் பாவேந்தருக்கு ரூ.25,000 கொண்ட பொற்கிழி வழங்கினோம். பாவேந்தர் முன் கோபக்காரர். அதனால் பலரைப் பகைத்துக் கொண்டார் 'தமிழியக்கம் பாடிவிட்டுத் திராவிட இயக்கப் பாடல்கள் ஏன் எழுதினீர்?' என்று நான் கேட்டேன். அதனால் என்மீதும் அவருக்குக் கோபம்.

1952ஆம் ஆண்டு அவருக்கு மணிவிழா எடுப்பதற்காகத் திருச்சியில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அமைப்புக் குழுவின் பொறுப்பாளராக நான் இருக்க வேண்டும் என்று கவிஞர் விரும்பினார். திருவாளர்கள் மதுரை முத்து, அன்பில் தர்மலிங்கம், புத்தனேரி சுப்பிரமணியம் திருலோகசீதாராம், நாகசுந்தரம், அரு.ராமநாதன் முதலியோர் அக்குழுவில் உறுப்பினர்களாக இருந்தனர். இம்மணிவிழா அமைப்புக் குழுவின் செயலாளனாகவும், பொருளாளனாகவும் நானே பொறுப்பேற்றேன். உள்நாட்டிலும், இலங்கை, மலேயா முதலிய வெளிநாடுகளிலும் நிதி வசூலைத் தொடங்கினேன். விழாவிற்கு நாளும் குறிப்பிட்டாகி விட்டது.

திருச்சியில் நாங்கள் மணிவிழா எடுக்க முடிவு செய்திருந்த அதே நாளில், நடிகர் யதார்த்தம் பொன்னுசாமி என்பவர் தஞ்சையில் பாவேந்தருக்கு மணிவிழா எடுக்கப் போவதாகச் செய்தி விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது. இச்செய்தியைப் பார்த்ததும் எனக்குப் பெரிய குழப்பமாக இருந்தது. உடனே புதுவை சென்று பாவேந்தரை நேரில் கண்டு இதைப்பற்றி அறிந்துவரச் சொன்னேன். அவர் சரியாகப் பதில் சொல்லவில்லை. அவர் ஏமாற்றப்பட்டிருக் கிறார் என்று தெரிந்தது. நான் விழாக்குழுவிலிருந்தே ஒதுங்கிக் கொண்டேன்.

திருச்சியில் ஒரு வாரம் பாவேந்தர் விழாவை நடத்த விழாக் குழுவினரால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நாடகங்கள் நடத்தி ஓரிலக்கம் ரூபாய் திரட்டி அவருக்கு மணிவிழாவில் நன்கொடை வழங்கப்போவதாக அவரிடம் கூறியிருந்தார்கள். ஆனால் அவ்விழா திட்டமிட்டபடி நடைபெறவில்லை. நாடகம் நடத்தியவர்களுக்கும், இவருக்கும் மனக்கசப்பு ஏற்பட்டது. பாவேந்தர் கோபித்துக் கொண்டு திருச்சிக்கு அருகிலுள்ள திருவானைக்காவலுக்குச் சென்று அங்கு தங்கியிருந்தார். நாடகம் நடத்தியவர்களுக்கும் இவருக்கும் பண விஷயத்தில் தகராறு. இதை நடுவிலிருந்து சில நண்பர்கள் தீர்த்து வைக்க முயற்சி செய்தனர். முடியவில்லை. கடைசியில் நாடகம் நடத்தியவர்கள் ஏதும் தரவில்லை. நான் வசூலித்த ரூ. 1500 ஐயும் விழாக்குழுவினர் கையில் கொடுத்தேன். மணிவிழா மிகச்சுருக்கமான அளவில் திருவானைக்காவல் சத்திரத்தில் நடத்த ஏற்பாடு செய்தார்கள். நான் வந்து பொன்னாடை போர்த்த வேண்டும் என்று விரும்பிப் பாவேந்தர் சொல்லியனுப்பினார். நான் மறுத்துவிட்டேன். 'புலமை வேறு; உலகியல் அறிவு வேறு' என்பதற்கு இம் மணிவிழா நிகழ்ச்சி சிறந்த எடுத்துக்காட்டு.

தமிழகப் புலவர் குழுவின் இரண்டாவது கூட்டத்தைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தில் நடத்தினேன். புலவர் பெருமக்கள் நாற்பத்தெண்மரும் தேரேறி ஊர்வலம் வர, கூட்டத் தலைவர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் யானை மீது அமர்ந்து தஞ்சை அரச வீதிகளில் உலா வந்த காட்சி கண்கொள்ளாக் காட்சி! தஞ்சை நகரமே விழாக்கோலம் கொண்டிருந்தது. வழிநெடுகத் தண்ணீர்ப் பந்தல் வாழையும் கமுகும் நாட்டப்பட்ட அலங்காரப் பந்தல்! மக்கள் பூவும் கற்கண்டும் வாரி இறைத்தனர், திலகர் திடலில் விழா நடைபெற்றது. இனி அக்காட்சியை...?

பாரதிதாசன் தோற்றமே தமிழனின் தோற்றம். அவரது வீரம்

தமிழனின் வீரம். அவரது உடம்பில் ஓடிய இரத்தமும் தமிழ் இரத்தம். அவரது உணர்ச்சி தமிழுணர்ச்சி. சுருக்கமாகக் கூற வேண்டுமானால் அவர் மூச்செல்லாம் தமிழ் மூச்சு எனக் கூறிவிடலாம். இவையனைத்தும் நிறைந்த கவியே புதுவைக் கவி! அன்று புதுமைக் கவி! நேற்று முதுமைக் கவி! இன்று....?

தமிழகத்தின் மண்ணுக்கே ஒரு தனி வீரத்தைக் கற்பித்தவர் பாரதிதாசன் அவர்கள். 'கோழியும் தன் குஞ்சுதனைக் கொல்லவரும் வான்பருந்தைச் சூழ்ந்தெதிர்க்க அஞ்சாத தொல்புவி' என்பது அவரது கவிதை. 'உயிரினும் சிறந்தது தமிழ்' என்பது அவரது கொள்கை. தமிழ் தோன்றிய காலந்தொட்டு எத்தனையோ தமிழ்ப் புலவர்கள் இத் தமிழ் மண்ணில் தோன்றியிருக்கிறார்கள். ஆனால், 'தமிழைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடேன்' என்று கூறிய புரட்சிச் சொற்களைப் புரட்சிக் கவிஞரிடம் தான் கேட்டேன். இம்மண்ணில் இவர் போன்ற புலவர்கள் பலர் இனித் தோன்ற வேண்டும் என்பது என் விருப்பம்.

பாரதிதாசனை ஒரு தமிழ் மன்னன் எனலாம். இத்தகைய மன்னனை இந்தத் தமிழகம் வாழ்ந்தபோதும் சரியாக அறிந்து போற்றவில்லை; மறைந்தபோதும் சரியாக உணர்ந்து வருந்தவில்லை. இரண்டோர் இரங்கற் செய்திகளோடு அவரது வரலாற்றை முடித்துவிட்டது. இறந்தவர்கள் மீது கவிபாடி வெளியிடுவதற்காகவே சில பத்திரிகைகள் நடந்து கொண்டிருக்கின்றன. இறந்தவர்களுக்கு இரங்கற் செய்திகளைச் சொல்வதற்கென்றே சில பேர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்நிலைகள் திருந்திப் புலவர்கள் வாழும் காலத்திலேயே அவர்களை வாழ்த்த - போற்றத் தொடங்கி விட்டால் தமிழகம்...?

பாவேந்தர் தமிழுக்குத் தொண்டர்! தமிழர்க்கு அன்பர்! புலவர்க்கு நண்பர்! புலவர் குழுவிற்குத் துணைவர்! கவிஞர்களுக்கு வழிகாட்டி! புரட்சிக் கவிஞர்களுக்குத் தந்தை! சீர்திருத்தவாதிகளுக்குத் தலைவர்! தமிழ்ப் பகைவர் முன்னே தோள்தட்டித் தொடைதட்டி நிற்போ ரெல்லாரும் அவர் உறவினர்.

நான் அறிந்த பாரதிதாசனார்

பேராசிரியர்
மயிலை. சிவமுத்து

தமிழ்நாட்டில் 'தமிழ்த்தாத்தா' என்ற முதிர்ந்த பட்டத்துக்கு உரியவர் இருவர். ஒருவர் டாக்டர் உ.வே.சா; மற்றொருவர் பேராசிரியர் மயிலை சிவமுத்து.

பாவேந்தர் தமிழார்க்குச் சொத்துப்பாடல் இயற்றியவர். இவர் முத்துப்பாடல் இயற்றியவர். தமிழுக்கு வாழ்ந்தவர்; இந்தியை எதிர்த்தவர்; தமிழாசிரியர் பணிக்குப் பெருமை சேர்த்தவர்; தள்ளாடும் பருவத்தில் தமிழால் நடந்தவர்.

தமிழே சிவம்! சிவமே தமிழ்!

பாவேந்தர் பற்றிய தம் பழுத்த அனுபவங்களை இக்கட்டுரை மூலம் நம் சிந்தனைக்கு விருந்தாக்கி யிருக்கிறார்.

"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்.
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்,
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்"

என்று நாவுக்கரசர் நவின்ற தாண்டக அடிகளுக்கு ஏற்ப நான் முதன்முதலில் பாரதிதாசனார் தம் புதுமைப் பாடல்களைத் தான் படித்துப் பார்க்க நேர்ந்தது. நான் அவரைப் பாராமலேயே அந்தப் பாவேந்தர் மீது பேரன்பு கொள்ளலாயினேன். ஏறத்தாழ இருபத்தெட்டு ஆண்டுகளுக்கு முன்பு என்று நான் எண்ணுகின்றேன்.

அப்போது அறிஞர் குத்தூசி குருசாமியார் திருவல்லிக்கேணியிலே ஒரு சுவடியை வைத்துக் கொண்டு அச்சுப்பிழைபாத்துக் கொண்டிருந்தார். அதிலுள்ள யாவும் பாடல்களாகவே இருந்தன. 'அவை என்ன பாடல்கள்?' என்று நான் அந்த அறிஞரை வினவினேன். அவர் உடனே பிழைதிருத்துவதை நிறுத்திக்கொண்டு அதை என்னிடம் கொடுத்தார். அதிலுள்ள பாடல்கள் தமிழைக் குறித்தனவாகவும், சீர்திருத்தக் கருத்துக்கள் கொண்டனவாகவும், இயற்கைக் காட்சிகளைப் படம்பிடித்துக் காட்டுவனவாகவும் கலந்திருந்தன. நான் அந்த அற்புதப் பாடல்களைப் படித்துப் பார்த்து விட்டு இவை பாரதியார் பாடல்களையும் விஞ்சியனவாக இருக்கின்றனவே! இவைகளைப் பாடியவர்' யாவர்? என வினாவினேன். அப்போது அவர் "இந்தப் பாடல்களைப் பாடியவர் பாரதியாரின் மாணவரே ஆவர். கனகசுப்புரத்தினம் என்பது அவர் தம் இயற்பெயர். பாரதிதாசன் என்னும் புனைபெயரால் இவைகளை அவர் பாடியிருக்கிறார். இன்னும் இரண்டொரு நாளில் சுவடியாக வந்துவிடும்" என்று அவர் கூறினார்.

இந்தி எதிர்ப்புக் காலத்தில் அந்தப் புரட்சிப் பாடல்களே எங்களுக்குப் பெரிதும் உதவின. 1937-இல் ஸ்டாலின் ஜெகதீசன் கட்டாய இந்தி ஒழிய வேண்டும் என்று உண்ணாவிரதம் இருந்து வந்தார். அவருடைய உண்ணாவிரதம் முதலில் சி.டி.நாயகம் அவர்கள் தம் இல்லத்தில் தான் துவங்கியது. முதலில் ஒரு சில நாட்களேனும் அவர் உண்ணாவிரதம் இருந்திருக்கலாம். அப்போது சில அன்பர்கள் இந்தி எதிர்ப்புக்காக ஸ்டாலின் ஜெகதீசன் உண்ணாவிரதம் இருந்து வருதலைத் தெரிவித்துச் சிவஞானம் பூங்காவில் ஒரு கூட்டம் போடவேண்டும் என்றும், அதற்கு வேண்டிய அறிக்கையினைத் தாங்கள் அச்சடித்துக் கொடுப்பதாகவும் கூறினார்கள். அதற்கு இரண்டொரு வாரத்திற்கு முன்பு ஈ.வெ.ரா. பெரியார் கட்டாய இந்தியைக் கண்டித்து எழுதியதோடு "கூட்டம் போட்டு இதைக் கண்டிப்பதற்கு எந்தப்புலவனும் முன்வர வில்லையே!" என்றும் மனம் வருந்தி எழுதியிருந்தார். அந்தக் கட்டுரை என்னுள்ளத்தைப் பெரிதும் கவர்ந்ததால் சிவஞானம் பூங்காவில் ஒரு கூட்டம் போட்டுக் கண்டிப்பதாக ஒப்புக் கொண்டேன்.

அப்போது தியாகராய நகரிலுள்ள இராஜாஜி வீட்டு வாயிலில் சில தமிழ் அன்பர்கள் மறியல் செய்தனர். அந்த மறியலைக் கண்ட இராஜாஜி அவர்கள், "இந்தி மொழியை எங்கே கற்பிக்கின்றார் களோ அங்கே சென்று மறியல் செய்யுங்கள். என் வீட்டு வாயிலில் மறியல் செய்வது சிறிதும் பொருந்தாது" என்று கூறினார். அப்போது

இந்து தியலாஜிகல் உயர்நிலைப் பள்ளியில் கட்டாய இந்தி வகுப்பு, ஒரு முன் மாதிரியாக நடந்து வந்ததால், அங்கே ஊர்வலமாகச் சென்று அந்தப் பள்ளியின் வாயிலிலேயே மறியல் செய்ய வேண்டும் என்னும் தீர்மானம் ஒன்றை எழுதிச் சிவஞானம் பூங்காவில் நடந்த பொதுக்கூட்டத்தில் கொண்டு வருவதற்காக அன்று தலைமை தாங்கிய பேராசிரியர் மோசூர் கந்தசாமி முதலியாரிடம் காட்டினேன். அவர் நீங்கள் முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக இருப்பதால் இராசகோபாலாச்சாரியார் உங்கட்குப் பலவிதத்திலும் தொல்லை தருவார். 'நான் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியனாக இருப்பதால் என்னை அவரால் ஒன்றும் செய்ய இயலாது' என்று கூறித் தாமே அதில் கையெழுத் திட்டு அந்தத் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றினார். அப்போது சி.டி.நாயகம், ஸ்டாலின் ஜெகதீசன், அறிஞர் அண்ணா, சுவாமி அருணகிரிநாதர் முதலிய பலரும் இருந்தனர். அண்ணா அவர்களும், சுவாமி அருணகிரிநாதர் அவர்களும் மிகவும் வன்மையாகக் கண்டித்துப் பேசினர். அதன் காரணமாகத்தான் அண்ணா அவர்களும், சுவாமி அருணகிரிநாதரும் முதன்முதலில் சிறைபுக நேர்ந்தது.

பிறகு தொடர்ந்து வாரந்தோறும் காசி விஸ்வநாதர் ஆலயத்திலிருந்து ஒரு பெரிய ஊர்வலம் புறப்பட ஆரம்பித்தது. அந்த ஊர்வலங்களை எல்லாம் நானே மறைமுகமாக இருந்து நடத்தி வந்திருக்கின்றேன். அவ்விதம் நான் மறைமுகமாக இருந்து நடத்தி வரவேண்டும் என்று என்மீது பேரன்பு வைத்திருந்த என் மாணவர்களும் நண்பர்களும் கேட்டுக் கொண்டனர். ஆதலால், அந்த ஊர்வலங்களில் இறுதியில் நான் நடந்து வருவது வழக்கம். அப்போது மிகவும் கம்பீரமான தோற்றத்துடன் என்னைத் தொடர்ந்து ஒருவர் வந்து கொண்டு இருந்தார். அவர் தம் மிடுக்கான பார்வையும் பெருமிதம் வாய்ந்த நடையும் என்னைப் பெரிதும் கவர்ந்தன. ஆதலால் என்னுடன் வந்த என் நண்பர்களும் ஒருவரை நோக்கி 'இவர் யார்?' என வினவினேன். "இவர்தான் பாரதிதாசன் என்பவர்; ஒரு சிறந்த கவிஞர். இவருடைய பாடல்களைத்தான் நமக்கு முன்னே செல்கின்ற தாய்மார்களும் பிறரும் பாடுகின்றனர்" என்றார். நான் இவருடைய அருமை பெருமைகளையெல்லாம் பல அறிஞர்கள் மூலம் கேட்டிருக்கின் றேன். எனினும் அன்றுதான் நேரில் கண்டேன். கவிஞருக்கு இருக்க வேண்டிய முகப்பொலிவு முற்றும் பொருந்தியிருத்தலைக்கண்டு நான் மிகவும் வியந்தேன்; எனினும் நான் அவரிடம் கலந்துரையாடவே இல்லை.

டாக்டர் தருமாம்பாள் அம்மையாரும், வ.பா. தாமரைக்கண்ணி அம்மையாரும்"செந்தமிழைக் காப்பதற்காகச் சேனை ஒன்று வேண்டும்" என்னும் பாரதிதாசரின் பாடலைப் பாடிக் கொண்டே இந்தி எதிர்ப்புக்காக மாபெரும் சேனையைத் திரட்டினர். சென்னையில் நடந்த இந்தி எதிர்ப்பு மாநாடுகளில் பாவேந்தராகிய பாரதிதாசனாரின் பேச்சுத்திறனைக் கேட்டு வியந்திருக்கின்றேன். ஆதலால்,

"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும்"

கொண்ட அவர் தோற்றப் பொலிவுடன் என் நெஞ்சில் நிலைத்து நின்று விட்டது.

'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எம்மை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை' என்னும் பாடலைப் பாடிக் கொண்டே, டாக்டர் தருமாம்பா அம்மையாரும், மலர்முகத்தம்மையாரும் இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட்டு 1938ஆம் ஆண்டு நவம்பர் 21ஆம் நாளன்று சிறை புகுந்தனர். அதன்பிறகு நான் புதுவைக்கு அடிக்கடி சென்று கூட்டங்களில் தலைமை தாங்கிச் சொற்பொழிவாற்றி இருக்கின்றேன். எனினும் நான் பாரதிதாசர் தம் இல்லம் சென்று அவரைக் கண்டதில்லை. தமிழைப் பழிப்போரைத் தாக்கிப் பேசும் அவருடைய கடுமையான பேச்சிலிருந்து அவர் ஒருகால் முரடராய் இருப்பாரோ என்று நான் ஐயம் கொண்டதே அதற்குக் காரணம். எனினும் நான் பேசும் கூட்டங்களில அவருடைய மாணவர்கள் பெரும்பாலோர் வந்து என்பேச்சைக் கேட்டு மகிழ்வதுண்டு.

நான் ஒருநாள் ஓய்வாக இருந்தபோது அவருடைய மாணவர்களுள் ஒருவர் என்னிடம் வந்து பாரதிதாசனார் இளமையிலே முருகபக்தராக இருந்தபோது பாடிய பாடல்களை எல்லாம் என் முன்னிலையில் இசையோடு பாடிக் காட்டினார். அவை மிகவும் உருக்கமான பாடல்களாக இருந்ததைக் கண்டு நான் வியந்தேன். வேறொரு கூட்டத்தில் புதுவையிலே நான் தலைமை வகித்துப் பேசியபோது, 'பாரதிதாசரைக் குறித்து உங்கள் எண்ணம் என்ன?' என்று ஒருவர் கடிதம் மூலம் கேட்டு எழுதியிருந்தார்.

"நம் பாவேந்தரைப் போற்றாத தமிழன் நம் நாட்டில் இருக்க மாட்டான். அவ்விதம் இருந்தால் அவன் தமிழனல்லன்! 'தமிழைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடேன்!' என்று பாடியுள்ள ஒரு வீரத் தமிழ்க் கவிஞருக்கு என் பாராட்டு எந்த மூலை! எனினும்

சீர்திருத்தச் செம்மலாகிய இவர் அடிமை மனப்பான்மையைக் குறிக்கும் 'தாசன்' என்னும் பெயரை வைத்துக் கொண்டது தான் எனக்கு வருத்தமாக இருக்கிறது. பாரதியார் நாட்டு விடுதலைக்காகப் பாடினார். நமது புரட்சிக் கவிஞர் தமிழர்கட்காகவும், தமிழுக்காகவும் பாடினார். ஆதலால் நம் பாவேந்தர் பாரதியாருக்கு எந்த வகையிலும் குறைந்தவரல்லர் என்பது என் எண்ணம்" என்று நான் அவருக்குத் தெரிவித்தேன்.

புலவர்குழு திருச்சியிலும் தஞ்சையிலும் நடந்தபோது நான் அந்தக் கூட்டங்களுக்குச் செல்லவே இல்லை. முத்தமிழ்க் காவலராகிய கி.ஆ.பெ. விசுவநாதம் சென்னை வந்திருந்தபோது "நீங்கள் ஏன் இரண்டு கூட்டங்களுக்கும் வரவில்லை? நீங்கள் வந்திருந்தால் பாரதிதாசரைப் போல உங்களையும் யானையின்மீது ஏற்றி ஊர்வலமாகக் கொண்டு வந்து இருப்பேன்' என்றார். நீங்கள் அவருக்குச் செய்தது தான் சிறப்பு. நான் அவருக்கு ஓராண்டு இளையவன்' என்று கூறினேன். அடுத்த கூட்டம் மதுரையில் நிகழப் போகின்றது. அதற்கு நீங்கள் அவசியம் வரவேண்டும் என்று கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் நேரில் தெரிவித்ததோடு கடிதம் மூலமாகவும் எனக்கு நினைப்பூட்டினார். நான் அவ்விதமே மதுரைக்குச் சென்றிருந்தேன். அங்கே சோமசுந்தர பாரதியாருக்கு 70ஆம் ஆண்டுவிழா நடந்தது. அங்கே சோமசுந்தர பாரதியாரைப் பாராட்டிப் பேசினேன். அதற்கு அடுத்துச் சென்னையிலும் பிறகு சிதம்பரத்திலும் குழுக் கூட்டங்கள் நடந்தன. சிதம்பரம் கூட்டத்தில் தான் நான் முதன் முதலில் பாரதிதாசரைக் கண்டு பேசி அளவளாவினேன். பிறகு நடந்த புலவர் குழுக் கூட்டங்கட்கு எல்லாம் நானும் பாரதிதாசனும் பெரும்பாலும் சென்றிருக்கின் றோம். நாங்கள் அப்போதெல்லாம் ஒருவருக்கொருவர் அளவளாவி எங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளுதலுண்டு. நாங்கள் கோவைக்குச் சென்றிருந்த போது திரும்பி வருவதற்கு எனக்கும் அவருக்கும் இரண்டாம் வகுப்புப் பயணச்சீட்டு கிடைக்கவில்லை. பாவேந்தர் ஏறி அமர்ந்திருந்த மூன்றாம் வகுப்புப் பெட்டியிலேயே நானும் ஏறுவதற்குச் சென்றேன். சன்னல் பக்கமாக அமர்ந்திருந்தவர் என்னைக் கண்டதும் எனக்கு அந்த இடத்தைக் கொடுத்துவிட்டார். நான் எவ்வளவோ மறுத்தும் அவர் கேட்கவில்லை. பிறகு அவர் எனக்குப் படுத்துக் கொள்வதற்கும் இடம் தந்துவிட்டு அவர் உட்கார்ந்த வண்ணமே இருந்தார். அவருடைய 'கட்டளை'க்கு நான் இணங்க வேண்டியவனாகவே இருந்துவிட்டேன். இந்த ஒரு நிகழ்ச்சியிலிருந்தே அவர் என்மீது வைத்திருந்த பேரன்பினை நான் தெரிந்து கொண்டேன். அவருடைய பெருந்தன்மை வாய்ந்த

குணமும், எனக்கு நன்கு தெரியவந்தது. 'குயில்' பத்திரிகை ஆரம்பிக்கும்போது அவர் எனக்குக் கடிதம் எழுதியிருந்தார். அந்தக் கடிதத்தில் கண்டிருந்தபடி நான் எனக்குத் தெரிந்தவர்களை யெல்லாம் 'குயில்' இதழின் உறுப்பினர்களாகச் சேர்த்து உதவினேன்.

இன்னும் எனக்குத் தெரிந்த எத்தனையோ செய்திகளை நான் இந்தச் சுருங்கிய கட்டுரையில் தெரிவிப்பதற்கில்லை. அவர் படக்காட்சித் துறையில் இறங்காமலிருந்தால் நூறாண்டுகட்கு மேலும் வாழ்ந் திருக்கலாம். அவருடைய உடற்கட்டும், உள்ள(மன) உறுதியும் அத்தகையன. "நான் எந்தக் கட்சியினையும் சார்ந்தவனல்லன்" என்று அவர் தம்முடைய இறுதிக் காலத்திலேயே தெரிவித்திருந்தார். அவர் நம் தமிழ்நாட்டுக்காகவும், தமிழுக்காகவும் இதுவரையில் புரிந்துள்ள தொண்டுகளே என்றும் அழியாமல் நிலைத்து நிற்கக் கூடியவனாக உள்ளன. தமிழ்நாட்டார் அனைவரும் அவருக்குக் கடமைப்பட்டவர்கள் ஆகின்றார்கள். தம் கருத்துக்களைப் படக்காட்சிகளின் மூலம் நம் நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று அவர் எண்ணியிருந்தார். படத்தொழிலில் ஈடுபட்டுள்ள பேரன்பர்கள் 'பாண்டியன் பரிசு' என்பதனைப் படமாக எடுக்க முன்வந்தால் அவருடைய இறுதிக்கால எண்ணத்தை நிறைவேற்றி வைத்தவர்களாவார்கள்.

அவர் சென்னையிலே 'கவிஞர் மாநாடு' ஒன்றினைக் கூட்ட எண்ணியிருந்தார். இராசீபுரக் கவிஞர் அரங்கசாமி என்பவர் அதற்காகவே சென்னைக்கு வந்திருந்தார். தலைவர், திறப்பாளர், பேச்சாளர், மாநாடு நிகழ்த்த வேண்டியநாள் முதலிய பலவற்றையும் கவிஞர் அரங்கசாமி அவர்களைக் கொண்டு பாவேந்தர் முடிவு செய்து வைத்திருந்தார், அந்த மாநாட்டினை மாணவர் மன்ற நிலையத்திலேயே நடத்துவது என்றும் நம் பாவேந்தர் எண்ணி யிருந்தார். அந்த எண்ணம் நிறைவேறுவதற்குள் நம் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார் நம்மைவிட்டு மறைந்துவிட்டார்.

பாவேந்தருக்கு இறுதிமரியாதை புரிவதற்காக மாணவர் மன்றச் சார்பில் நான் சென்றிருந்தேன். அப்போது அவர் தம் அருந்தவச் செல்வராய மன்னர் மன்னன் என்னைக் கட்டிக் கொண்டு அழுதபோது என்னுள்ளம் பெரிதும் கரைந்துவிட்டது. அவருக்கு எத்தகைய ஆறுதலையும் கூற அப்போது என்னால் இயலவில்லை.

மே மாதம்[1] முதல் தேதியன்று இரங்கற் கூட்டம் ஒன்று கூட்டி எங்கள் துயரத்தை அங்கு வந்திருந்த மக்களுக்குத் தெரிவித்தோம்.

1) 1.5.1964

மன்னர் மன்னனுக்கும் ஆறுதல் கடிதம் ஒன்று வரைந்து அனுப்பினோம். அந்த அருந்தவச் செல்வரையும் அவர்தம் குடும்பத்தாரையும் ஆதரித்து ஆவன புரிய வேண்டுவது தமிழ் மக்கள் அனைவரது கடமையாகும். அவர் பெயரால் புதுவை மாநகரிலே ஒரு பல்கலைக்கழகம் ஏற்படுத்தினால், அது பலருக்கும் பயன்படும்.

கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை அவர்கள், "வால்ட் விட்மன்" என்று பாரதிதாசனாரைப் பாராட்டியுள்ளார். 'பொதுமைப்பொழில் - புதுமை மலர் - தமிழ்த்தேன் - பாச்சுவை' என்று திரு.வி.க. அவர்கள் பாவேந்தரைப் பாராட்டி மகிழ்ந்துள்ளார்.

நம் கவிஞர் பெருமானை உலக மாபெரும் கவிஞர்களுள் ஒருவராகவே மக்கள் என்றும் மதிப்பர். அவர் அயல் நாட்டில் பிறந்திருந்தால் தம் வாழ்நாளிலேயே நம் புரட்சிக் கவிஞர் 'நோபல்' பரிசினைப் பெற்றிருக்கலாம்.

அவர் தம் பொன்னுடலம் மறைந்தாலும் புகழுடம்பு மறையாது. அவர் தம் பாக்கள் தேனினும் இனியவை. அவருடைய தமிழ்நடை மக்கள் உயிரையும் உடலையும் வளர்ப்பன. அவர்தம் புரட்சிக் கருத்துக்கள் உறங்கும் மக்களையும் விழிப்படையச் செய்வன. அவர் தம் நூற்கள் யாவும் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தக்க பெருமை வாய்ந்தன. அவரை நாம் மறந்தாலும் நம் தமிழ்மொழி மறவாது. பாவேந்தர் பாரதிதாசர் தம் திருப்பெயர் வாழ்க!

நினைவுத்துளிகள்

டாக்டர் திருமதி
தே. தியாகராசன் எம்.ஏ., பிஎச்.டி.,

தமிழ் இலக்கிய ஆய்வுக் களத்தில் முதன் முதலாக 'டாக்டர்' பட்டம் பெற்ற பெண்மணி திருமதி தே. தியாகராசன் அவர்கள். இடையறாது வீசிய தம் புலமைத் தென்றலால் மதுரை டோக் பெருமாட்டி கல்லூரியை என்றும் இளவேனிலாக்கிக் கொண்டிருந்தவர்.

சுவிசேஷக் குடும்பத்தில் பிறந்து சுயமரியாதைக் குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டவர். மலர்ந்த முகத் தோடு இன்சொல்லைப் படைத்து, விருந்தோம்பும் பண்பினர். இவரும் இவர் கணவரும் பாவேந்தர்பால் உள்ளார்ந்த அன்பு படைத்தவர்கள்.

கடல் கடந்தும் தமிழ்பரப்ப செக்கோசுலேவியா புறப்பட்ட அன்று. இக்கட்டுரையை அனுப்பி விமானம் ஏறினார். சாலைவிபத்து அவரைச் சடலமாக்கித் தமிழகத்துக்கு அனுப்பி வைத்தது. பாவேந்தர் பற்றிய துணிச்சலான கருத்துக்களை இவர் தூய தமிழில் படைத்திருக்கிறார்.

1941ஆம் ஆண்டு திருச்செங்கோடு கழக உயர் நிலைப்பள்ளியில் நான் பத்தாம் வகுப்பு பயிலுங்கால், அங்கு எனக்குத் தமிழாசிரியராக இருந்தவர் திரு. உலக ஊழியர். பாரதியார் பாடல் ஒன்றில் எனக்கு ஐயமேற்பட்டபோது, அவரிடம் நான் பாரதியார் கவிதைகளைத் தருமாறு கேட்டேன். அதற்கவர் 'பாரதியாரைத் தூக்கி விழுங்கும் கவிஞர் தோன்றியுள்ள இந்நாட்களில் நீ பாரதியாரைத் தேடுகிறாயே!" என்றார். அவர் குறிப்பிட்ட கவிஞர் யாரென நான் வினவியபோது, அவர் பாரதிதாசனைக் குறிப்பிட்டார். அவரது

கவிதைகள் முதற்றொகுதியையும் கொண்டு வந்து கொடுத்தார். அன்றுதான் நான் புரட்சிக் கவிஞர் பற்றித் தெரிந்து கொண்டேன். பின்னர் பள்ளியில் நடந்த போட்டிகளில் பங்கு பெற்றேன். அவற்றிற்கான பரிசுகளில் பாரதிதாசன் கவிதைகளையும் பரிசாகப் பெற்றேன். அவர் கவிதைகள் மிகப் புரட்சியுடையவனாக இருந்தன. அப்பருவத்தில் விளங்காத கவிதைகளும் அத்தொகுதியில் இருந்தன. திரு. உலகஊழியர் தந்த ஊக்கத்தால் நானப்போது கவிதை புனையவாரம்பித்தேன். நானெழுதிய சில பாடல்களைப் பார்த்துவிட்டு அவர் 'என்னம்மா புரட்சிக் கவிஞர் படித்ததின் விளைவு புலப்படுகின்றதே!' என்பார்.

பின்னர் கல்லூரியில் சேர்ந்து படிக்கும்போதும் இவர் நூல்களைப் படிப்பதுண்டு. அந்நாட்களில் எனக்குப் பிடித்தமான வரிகள்.

இதய மெலாமன்பு நதியினில் நனைப்போம்
இது என தென்னுமோர் கொடுமையைத் தவிர்ப்போம்

என்பன,

பட்டம் பெற்றபின் மதுரைக்கு வேலைக்கு வந்தேன். டோக்பெருமாட்டி கல்லூரியில் பணியாற்றத் தொடங்கிய பின் அவரை நான் நேரில் சந்தித்தேன். எங்கள் கல்லூரிக்கும் பலமுறை வந்திருக்கிறார். புரட்சிக்கவிஞர் கனல்கக்கும் சொற்களை முழக்கமிட்டுப் பேசுவாரென எதிர்பார்த்த எனக்கு அவர் குரல் புதிதாக இருந்தது. பேசுங்கால் அவர் கருத்துக்கள் புரட்சியானவை தாம். அவற்றை ஆழமாகவும் ஆணித்தரமாகவும் கூறுவார். ஆனால் மெல்ல, நகைச்சுவை ததும்பக் குரலை எடுத்தும் படுத்தும் கூறிக், கேட்பவர்க்கும் புத்தறிவூட்டுவார்.

எங்கள் வீட்டிற்கு அவர் 1955இல் முதன் முதலாக வந்தார். அதற்குப் பின்னர் பலதடவை வந்திருக்கிறார். அவரை விருந்திற்கழைக் குங்கால் அவருக்குப் பிடித்தமான உணவு வகைகளைக் கேட்டு அதன்படி சமைத்துத் தருவேன். ஒரு சமயம் அவர் தமக்குப் புறா சமைத்துத் தரச்சொன்னார். பல்லிற்கு வருத்தம் வராதிருக்க அதை அம்மியிலிட்டு அறைத்துச் சமைக்குமாறு கூறினார். பல்லிற்கு ஊறு வராமல் பக்குவம் செய்ய வேறுவகைகளுண்டென்று கூறி அதனை நன்கு மெதுவாகும்படி தயாரித்து மிளகிட்டுச் சமைத்துத் தந்தேன். மிகச் சுவையோடிருந்ததாகக் கூறி உண்டார். இரசம் (மிளகுச்சாறு) கூட அவருக்குக் கொஞ்சம் காரமாக இருக்க வேண்டும். அந்த முறையில் நான் அவருக்குச் செய்து கொடுத்திருக்கிறேன்.

உணவு உண்டபின் பேசிக் கொண்டிருப்பார். நான் கவிதைகள் எழுதுவதை அவரறிவார். எனவே என்னையழைத்து "(ஆமாம் நன்கு உணவிட்டாய்! எங்கே கவிதையைக் காட்டாமல் மறைத்துக் கொண்டாயே ஏன்? கொண்டு வா, நான் பார்க்க வேண்டும்)' என்பார். உலக மாகவிஞர்களுள் ஒருவரான அவரிடம் என் கவிதையைக் காட்டுவதெங்ஙனம்! காட்டவும் விருப்பமிருக்கும்; தயக்கமுமிருக்கும். பின்னர் காட்டுவேன். சுவையாகவுள்ளதைப் பாராட்டுவார். தொல்காப்பியம் எவ்வாறு யாப்பிலக்கணம் கூறுகிறது என்பதைக் கூறுவார். ஒரு தந்தை மகளின் பாடலைக் கண்டு மகிழ்வதுபோல் மகிழ்வார்.

ஒரு சமயம் அவரவ்வாறு கேட்டபோது நான் ஒரு கவிதையை அவரிடம் கொடுத்தேன். மதுரையில் 'பிராமணர் இளைஞர் சங்கம்' டாக்டர் உ.வே.சாமிநாத அய்யருக்கு நூற்றாண்டுவிழா எடுத்தபோது என்னைக் கவியரங்கேற அழைத்தார்கள். நானும் 'தமிழ்த் தாத்தா' மீது நான்மணிமாலை பாடினேன். பாடல்களை இசையோடும் பாடினேன். அவ்விழா முடிந்த பின்னர் ஒருநாள் கவிஞர் அவர்கள் வீட்டிற்கு வந்தார்கள். அவர்களிடம் அந்தக் கவிதையைக் கொடுத்தேன். அவர் முன்னால் என் பாடல்கள் எம்மாத்திரம்? அவர் அப்பாடல்களில் திருத்திக் கொடுத்த படி என்னிடம் உள்ளது.

கவிஞன் தன்னைப் பிறர் கட்டுப்பாடு செய்வதை விரும்பான் 'என்பதவர்க்கு நன்கு பொருந்தும். எங்கள் கல்லூரியிலும் பிற கல்லூரிகளிலும் ஒரே நாளில் பேச இசைந்து வருவார். நேரங் குறிப்பிட்டு அழைப்பிதழில் அச்சிட்டிருக்கும். விரும்பிய இடத்தில் விரும்பிய அளவு நேரம் பேசுவார். யார் அவரிடம் என்ன சொல்ல முடியும்?

அவருடன் ஒரே மேடையில் பேசும் நற்பேறு பெற்றுள்ளேன். அவர் தலைமையில் உரையாற்றும் அரும் வாய்ப்பும் அடைந்துள்ளேன். அவர் வாயால் பாராட்டுப் பெறும் பெரும்பேறும் கிட்டியுள்ளது, சான்றாகப் பாரதியார் விழாவை அவரது பிறந்தநாளில் மதுரையில் கொண்டாடினார்கள். அந்த விழாவில் அவர் தலைமையில் பேசி அவர் வாயால் பாராட்டப்பெறும் நல்ல வாய்ப்பையும் பெற்றுள்ளேன்.

1938ஆம் ஆண்டு மதுரையில் சுயமரியாதை மாநாடு ஒன்று நகர தூதன் ஆசிரியர் திருமலைசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் பேரறிஞர் அண்ணா அவர்களும் அதில்

கலந்து கொண்டார்கள். அவ்விழாவிற்குப் புரட்சிக் கவிஞரும் வந்தார். அம்மாநாட்டில் என் மாமனார் இராவ்சாகிப் ஆறுமுகநாடார் அவர்கள் பெரும் பங்கு கொண்டார்கள். அவருக்கு இவ்விருவரையும் நகரதூதன் ஆசிரியர் அறிமுகம் செய்துவைத்தார். உடனே கவிஞர் தமது கவிதைத் தொகுதி முதற்பாகத்தைத் தம் கையெழுத்திட்டு அன்பளிப்பாக என் கணவருக்குத் தந்தாராம். அன்றுமுதல் என் கணவருக்கும் புரட்சிக் கவிஞருக்கும் பழக்கம் ஏற்பட்டதாக என் கணவர் என்னிடம் கூறியிருக்கிறார்.

'நாய்ஸ்' ஆங்கிலப் பள்ளியில் மூன்றாம் வகுப்பில் தமிழ்ப்பாடம் நடந்து கொண்டிருந்தது. அன்று புரட்சிக் கவிஞரின் நிலாப்பாட்டை ஆசிரியர் கற்றுத் தந்தார். அவர் குழந்தைகளிடம் இப்பாடலைப் பாடியவர் பாரதிதாசன் என்று கூறினார். 'அவர் யார் தெரியுமா?' என்று வினவினார். உடனே வகுப்பிலிருந்த என்மகள் 'ஏழிசை' ஆசிரியரிடம் "ஓ! எனக்குத் தெரியுமே! அவர் எங்கள் தாத்தா!" என்று கூறினாள். ஏனென்றால் அவள் அவரை அப்படித்தான் அழைப்பாள். ஆசிரியர் வியந்தபடி 'உன் தாத்தாவா?' என்று வினவ அவள் "ஆமாம்! எங்கள் தாத்தாதான். எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வருவார். வரும்போது உங்களிடம் கூறுகிறேன்" என்றாள்.

அதற்குப்பின் கவிஞர் எங்கள் வீட்டிற்கு வந்தார். என் மகள் அவரைப் பார்த்துத் "தாத்தா! அந்த நிலாப்பாட்டு நீங்களே எழுதியதா?" என்று கேட்டாள். என்னே அவளறியாமை! உடனே அவளை வாரி எடுத்துக் கொண்டு, "நல்ல கேள்வி கேட்டாயே என்னை! எந்தெந்தப் பயலோ என் கவிதைகளையும் கருத்துக்களையும் திருடுகிறான் என்று நான் வழக்காட வேண்டியிருக்க நீ என்னையே ஐயுற்றாயே!" என்று நகையாடினார்.

ஒருநாள், "பலமுறை நான் உங்கள் வீட்டிற்கு வந்துள்ளேன். நீங்கள் சென்னைக்கு வரும்போது கட்டாயம் எங்கள் வீட்டிற்கு வரவேண்டும்" என்று அன்புடன் அழைத்தார். அவ்வண்ணம் நாங்கள் சென்னை சென்றபோதவர் வீட்டிற்குப் போனோம். அப்போது பாண்டியன்பரிசு என்ற அவரது காப்பியத்தைப் படமாக்கும் திட்டம் நடந்து வந்தது. படமெடுக்க ஆகும் செலவிற்கு ஒருவர் பெருந்தொகை கடன் தர இருந்தார். அவரால் அனுப்பப்பட்ட ஆள் பத்திரத்தைக் கவிஞரிடம் கொண்டுவந்தார். அவரைப் பார்த்துக் கவிஞர், "சரி, பத்திரம் வந்துவிட்டதா? நான் கையெழுத்திட்டுத் தந்து விடுகிறேன். இதோ! தம்பி (என் கணவரைச் சுட்டி) ஒருவர். அவரிடம் அத்தொகையைக் கொடுத்தனுப்புங்கள்"

என்று சூதுவாதறியாமற் கூறினார். இதைக்கேட்ட என் கணவர் "ஐயா! உங்கள் வழக்கறிஞரைக் கலந்து கேட்காமல் இப்படித் திடீரென முடிவிற்கு வரல் சரியன்று. எனவே அவரைக் கலந்து முடிவிற்கு வாருங்கள்" என்று கூறினார்கள். யாவரையும் நம்பும் அத்தகைய வெள்ளையுள்ளம், குழந்தையுள்ளம் அவர்க்குண்டு.

ஒருமுறை அவர் மதுரைக்கு வந்திருந்தபோது அவரது இசை யமுதைப் பற்றிப் பேசினோம். நானவரிடம் "உங்களிசையமுதி லுள்ள பாடல்களுக்குச் சுரமமைத்தால் என்ன?' என்றேன். 'இன்னபண் இன்னதாளம் என்றும் குறிப்பிடலாமல்லவா?" என்றேன். அதற்கவர் "ஏனம்மா பாடுவோன் கற்பனைக்கு எல்லைகட்ட வேண்டும்? பாடுபவன் ஆற்றலுக்கேற்பப் பாடிப் பழகட்டும்" என்றார். இது அவரது பரந்த மனப்பாங்கிற்குச் சான்று.

அவர் மேடையில் பேசுங்கால் புரட்சியும் புதுமையும் பேச்சில் பொங்கித் ததும்பும். சான்றாக, மதுரை தியாகராசர் கல்லூரியில் நான் பணியாற்றும்போது அவரங்கு பேசினார். அப்போது அவர் "லவனும் குசனும், இராமன் பகைவனான இராவணன் குழந்தைகள். அதனால் தான் அவர்கள் சிறுவரேயாயினும் இராமன் அனுப்பிய யாகக் குதிரையையும், இழுத்துக்கட்டி இராமனையும் எதிர்த்து வீழ்த்தினார்கள்" என்று கூறினார். கேட்டவர் வாயடைத்திருந்தனர். இது அவர் அஞ்சாமைக்குச் சான்று.

இப்படி எவ்வளவோ கூறலாமவரைப் பற்றி. வஞ்சனையறியா உள்ளம் படைத்தவர். அவரது பண்புகளில் பல நானறிய வாய்ப்பில்லை. ஆனால் நானறிந்த மட்டும், அவர் ஓர் ஒப்பற்ற புரட்சிப் பாவேந்தர். இலக்கிய உலகில் அவர் எவ்வளவோ அறிந்தவர். ஆனால் உலகியலில் அவர் எவ்வளவோ அறியாதவர்; அறியக் கவலைப்படாதவர். அதனால்தான் உலகியலும் உலகும் அழியுமட்டும் அவர் தமிழர் உள்ளத்தில் வாழவிருக்கிறார்.

இன்ப இரவு

திரு. மு. செல்லப்ப ரெட்டியார்

பாவேந்தருக்குப் பொற்கிழி அளிக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அரும்பு இவர்; பேரறிஞர் அண்ணா மலர். 'ரெட்டியார்' என்று பாவேந்தரால் பெருமதிப்போடு அழைக்கப்பட்டவர். இவரைப் 'பாவேந்தரின் சேலம் மாவட்டக்கிளை' என்று சொன்னால் கூடப் பொருந்தும். பாவேந்தரின் இயல் இசை நாடக வரலாற்றோடு பின்னிப் பிணைந்த முத்தமிழ் நண்பர் இவர்!

ஆங்கிலக் கவிஞன் ஷெல்லி கையெழுத்திடும் போது அடைப்புக் குறிக்குள் 'நாத்திகன்' என்று போடும் வழக்கமுடையவன். இவரும் தம்மைப் 'பகுத்தறிவு வாதி' என்று கூறிக் கொள்வதில் பெருமைப்படுவர்.

எழுபது வயதை எட்டிப் பிடித்திருக்கும் இவர். வாழ்நாள் முழுவதும் பாவேந்தரின் சிந்தனையோடு வாழ்ந்து வருபவர்.

பாவேந்தரின் புகழைப் பரப்புவது-
இவர் தொழில் (Profession);
பாவேந்தர் பற்றிய பழைய நினைவுகளை
அசைபோடுவது-இவர் பொழுதுபோக்கு (Hobby);
பாவேந்தர் பரம்பரையோடு பழகுவது-
இவர் கேளிக்கை (Entertainment)

இசைப் புலவரான இவர் பாவேந்தரோடு பழகிய நாட்களில், அப்பாட்டு வீணையில் எழுந்த சில மெல்லிய அதிர்வுகளை இக்கட்டுரை நாடாவில் பதிவு செய்திருக்கிறார்.

என்னுடைய இருபதாவது வயதிலேயே பெரியார் ஈ.வெ.ரா. அவர்களின் சுயமரியாதை இயக்கக் குடியரசு வார இதழைப்

படித்தேன். அதனால் தன்மான இயக்கக் கொள்கைகள் என் உள்ளத்தைக் கவர்ந்தன. மேலும் ஜீன்ஸ் மெஸ்லியர் மரணசாசனம் (மூன்றுபாகம்), இங்கர்சால் புத்தகங்கள், பெரியாரின் தத்துவ விளக்கம், பிரகிருதவாதம் முதலிய நூல்களைப் படித்தேன். சாதி, மதம், கடவுள், முக்தி, நரகம் முதலியவைகளில் எனக்கு நம்பிக்கை அறவே அற்றுப் போயிற்று. நாத்திகவாதத்தில் நல்ல தெளிவும், ஆழ்ந்த நம்பிக்கையும் எனக்குண்டு. நல்ல எண்ணத்தோடு, விருப்பு வெறுப்பு இல்லாமல் பல ஆயிரம் தடவை சிந்தனை செய்தாலும், 'கடவுள் உண்டு' என்பதற்கு என்னால் ஆதாரம் காண இயலவில்லை. ஆகவே, நான் ஒரு 'நல்ல பகுத்தறிவுவாதி' என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன்.

முதலில் செய்தித்தாள்களில் வெளியான சில பாரதிதாசன் கவிதைகளைப் படித்தேன். பின்பு திருமதி. குஞ்சிதம் குருசாமி அவர்களால் தொகுத்து வெளியிடப்பட்ட பாரதிதாசன் கவிதைகளைப் படித்தேன். ஒவ்வொரு கவிதையும் இனித்தது. ஆயினும் சாதி, மதம், கடவுள்களைப் பற்றிய கவிதைகள் எல்லாக் கவிதைகளையும் விட என் உள்ளத்தில் இடம் பெற்றன. இதன் பயனாகப் பாரதிதாசன் அவர்களைக் காணவும், பேசவும் வேண்டுமென்ற விருப்பம் என் உள்ளத்தில் பதிந்தது.

பாவேந்தர் அவர்களை என் சொந்த ஊரான நாமக்கல் போடிநாய்க்கன்பட்டிக்கு அழைத்து வந்தேன். நாமக்கல் தமிழர் சங்கக் கட்டிடத்தில் பெரிய புராணம், இராமாயணம் பற்றி ஒரு சொற்பொழிவு ஆற்றினார்கள். பாவேந்தரின் நூல்களை அச்சிடுவதற்காகவும், அவர் எழுதிய நாடகங்களை நடத்துவதற்காகவும் 'முத்தமிழ் நிலையம்' என்ற அமைப்பை உருவாக்க நானும் என் நாமக்கல் நண்பர்களான திருவாளர்கள் என். கிருஷ்ணராஜ், கா.கருப்பண்ணன், கா. பெருமாள் ஆகியோரும் ஒரு முடிவுக்கு வந்தோம். பிறகு பாவேந்தர் அவர்களை ஊருக்கு அனுப்பி வைத்தோம்.

15 நாட்கள் கழித்துச் செட்டிநாடு கானாடுகாத்தானுக்குப் புறப்பட்டு வரும்படி கவிஞரிடமிருந்து எனக்கு ஓர் அவசரக் கடிதம் வந்தது. கானாடுகாத்தான் தனவணிகர் திரு.வை.சு.சண்முகம் அவர் மனைவியார் திருமதி மஞ்சுளாபாயும் பாவேந்தருக்கு மிகவும் வேண்டியவர்கள். வை.சு. சண்முகம் செட்டியார் அப்போது செல்வச் செழிப்போடு வாழ்ந்து கொண்டிருந்தார். அவர் வீடான 'இன்பமாளிகைக்கு' நான் சென்றேன். பாவேந்தரும் எனக்கு முன்பே அங்கு வந்து காத்திருந்தார்கள். முத்தமிழ் நிலையத்தைத்

தொடங்குவது பற்றிய செய்திகளை அங்கு ஆராய்ந்தோம். அதற்கு அங்கு சிறிது ஆதரவும் இருந்தது.

திரு.வை.சு.சண்முகம் அவர்கள் இல்லத்தில் நான் தங்கியிருந்தபோது மலேயாத் தமிழ் முரசில் வெளியாகியிருந்த கவிஞரின் 'தென்றல்'* என்ற பாட்டைப் பார்த்தேன். மிகச் சுவையான பாடல்! குளித்தலைக்குப் பாவேந்தரோடு நான் சென்றிருந்தபோது, அங்கு வந்திருந்த இளந்தாடி நெடுஞ்செழியனிடம் அப்பாட்டைப் படித்துக் காண்பித்தேன்; மிக மிகச் சுவைத்தார். பிறகு சென்னைக்கு நான் சென்றபோது முல்லை, திரு.முத்தையாவிடம் அப்பாடலைக் கொடுத்து மீண்டும் முல்லையில் வெளியிடுமாறு சொன்னேன். அவர்களும் அவ்வாறே வெளியிட்டார்கள்.

ஒரு திங்கள் கழித்து நானும் பாவேந்தரும் மீண்டும் கானாடு காத்தான் சென்றோம். ஆனால் முத்தமிழ் நிலையத் துவக்கத்துக்கு அங்கு போதிய ஆதரவு கிடைக்கவில்லை. ஆயினும், அன்று கூட்டத்திற்கு வந்திருந்த கோனாப்பட்டு முருகு. சுப்பிரமணியம் (பொன்னி ஆசிரியர்), ஆத்தங்குடி அரு. பெரியண்ணன் (முருகு. சுப்பிரமணியத்தின் மாமன்), அ.பழ. பழனியப்பச் செட்டியார், முருகப்பா முதலியவர்கள் கோனாப்பட்டில் ஆதரவு இருப்ப தாகவும், அங்கு வந்தால் ஆவன செய்வதாகவும் கூறி, எங்கள் இருவரையும் கோனாப்பட்டுக்கு அழைத்துச் சென்றார்கள். பன்மொழிப் புலவர் க. அப்பாதுரையவர்கள் கோனாப்பட்டு உயர் நிலைப் பள்ளியில் அப்போது ஆசிரியராக இருந்தார். கோனாப் பட்டில் முத்தமிழ் நிலைய விதிமுறைகளைப் பற்றி ஒரு முடிவுக்கு வந்தோம். 'முத்தமிழ் நிலையம்-கோனாப்பட்டு' என்ற பெயரில் கோனாப்பட்டுத் தோழர்கள் பாதித் தொகையும், போடி நாய்க்கன் பட்டி-நாமக்கல் தோழர்கள் பாதித் தொகையும் போடுவதாக முடிவு செய்து, முதலில் நாடகம் அரங்கேற்றுவதும், அதன் பிறகு புத்தகங்கள் வெளியிடுவதும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

நானும், பாரதிதாசனும், நண்பர் கிருஷ்ணராஜுவும் நடிக-நடிகையர், நாட்டிய-இசையாசிரியர் முதலியவர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டுச் சென்னை சென்றோம். அங்கே டாக்டர் ஏ.கிருஷ்ணசாமி பார்-அட். லாவினுடைய 'லிபரேட்டர்' பத்திரிகை அலுவலகத்தில் (மவுண்ட் ரோடு) தங்கியிருந்து ஆக வேண்டிய காரியங்களைக் கவனித்தோம். இரண்டு நாட்களுக்குப் பிறகு கோசல்ராம், எஸ்.ஆர். ஜானகி ஆகியோர் வீட்டில் தங்கியிருந்து சில நடிகர் நடிகைகளைப் பார்த்தோம். பின்பு நாட்டிய

* பாரதிதாசன் கவிதைகள் இரண்டாம் தொகுதியில் இடம் பெற்றுள்ளது இத்தென்றல்.

ஆசிரியரான நடராசன், ஆடலரசியான சகுந்தலா வீட்டில் ஒரு தேநீர் விருந்து வைத்து, அவர்களுடைய நாட்டியக் கலையை எங்களுக்கு நடத்திக் காட்டினார்கள். அன்று கவிஞர் கம்பதாசன் முதலியவர்கள் அங்கு இருந்தார்கள். திரு.நடராசன்-சகுந்தலா நாட்டியம் மிக உயர்ந்த முறையில் இருந்தது. ஆயினும் அவர்கள் மாதம் ஒன்றிற்குக் கேட்ட தொகை அதிகமாக இருந்த காரணத்தால், அவர்களை ஏற்றுக் கொள்ள இயலவில்லை.

சென்னையில் சாந்தோம் நெடுஞ்சாலையில் கடலோரம் ஒரு பெரிய கட்டிடத்தை வாடகைக்கு அமர்த்தி முத்தமிழ் நிலையத்தை அதில் தோற்றுவித்தோம். முத்தமிழையும் வளர்ப்பது இந்நிலையத்தின் நோக்கமாகும். இசைவல்லுநர் எம்.எஸ். ஞானமணி, பரத நாட்டிய ஆசிரியர் திரு. இராமசாமிப்பிள்ளை, கல்கத்தா ஓரியண்டல் நாட்டிய ஆசிரியர் தேவி பிரசாத், கவிஞர் சுரதா, திரு. வேணு கோபால் சர்மா, திரு.கிருஷ்ணமராசு, செல்விகள் சரசுவதி, இராதாமணி, இரத்தினம், சுலோசனாபாய் வல்லிக்கண்ணு ஆகியோர் முத்தமிழ் நிலையக் கலைஞர்கள் ஆவர்.

பாவேந்தரின் புரட்சிக்கவி நாடகத்தை முதலில் அரங்கேற்றுவது என முடிவு செய்தோம். நாடகத்திற்கு 'இன்ப இரவு' அல்லது 'பாரதிதாசன் எண்ணங்கள்' என்ற பெயர் சூட்டப்பட்டது. இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் ஓர் இரவில் ஒருங்கே நடத்துவது என முடிவு செய்தோம். 'இன்ப இரவு' நாடகத்துக்கான ஒத்திகை சுறுசுறுப்பாக நடத்தப்பட்டது. 2.1.44இல் முத்தமிழ் நிலையக் கட்டிடத்தில் நிலையத்தின் சார்பாகத் தந்தை பெரியாருக்கு ஒரு வரவேற்பு வழங்கப்பட்டது. அச்செய்தி 8.1.44 குடியரசு இதழில் விரிவாக வெளியிடப்பட்டது. அச்செய்தியும், வரவேற்புக்கு நன்றி கூறிப் பெரியார் பேசிய பேச்சும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

செய்தி:

சென்னை சென்தோம் ஐரோடில், புதுவை பாரதிதாசன் அவர்களது ஆதரவில் தோழர்கள் பா.மு.சு.முருகு. சுப்பிரமணியம் செட்டியார், கா.கருப்பண்ணன் முதலிய அறிஞர்களால் துவக்கப்பட்டிருக்கும் 'முத்தமிழ் நிலையம்' என்னும் பெயர் கொண்ட கழகத்திற்கு வந்து தங்களுடைய மரியாதையைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று பெரியார் ஈ.வெ.ரா. அழைக்கப்பட்டார். அதற்கிணங்க 2ஆம் தேதி பகல் பெரியார் முத்தமிழ் நிலையத்துக்குச் சென்றார். அங்கு நிலையத்தைச் சேர்ந்த தோழர்கள் அவரை அன்புடன் வரவேற்று விருந்தளித்தார்கள். விருந்தில் தோழர்கள் சிந்தனைச் சிற்பி மா. சிங்காரவேலு, 'லிபரேட்டர்' பத்திரிக்கையின் துணையாசிரியர்

க. அப்பாதுரை எம்.ஏ., ஆகியவர்களும் மற்றும் நடிகையர் அரங்கநாயகி, முனி ரத்தினம்மா, இராதாமணி, சுலோசனாபாய் முதலியவர்களும் பரதநாட்டியம் பயிற்றும் தோழர் இராமசாமிப் பிள்ளை அவர்களும், ஓரியண்டல் நாட்டியம் பயிற்றும் வங்காளத்தைச் சேர்ந்த தேவிபிரசாத் அவர்களும், இசைப்புலவர் ஞானமணி அவர்களும், புதுவை பாரதிதாசன் அவர்களும் கலந்து கொண்டனர். விருந்திற்குப் பின் மேற்கண்ட நடிகையர்களாலும் ஆசிரியர்களாலும் பாரதிதாசன் அவர்களின் கவிதைகள் நடனமாக நடித்துக் காட்டப்பட்டன. சில வாலிபர்களால் வடநாட்டு உதய சங்கர் அவர்களின் நாட்டியமும் நடத்திக் காட்டப்பட்டது. இவை களில் மூடநம்பிக்கைப் பாட்டுக்களோ, ஆபாச வார்த்தைகள் கொண்ட பாட்டுக்களோ இல்லாமல் கவிதைகள் பெரிதும் அறிவுக்கு விருந்தாகவும், படிப்பினைக்கேற்றதாகவும் இருந்தன. இவை முடிந்ததும் தோழர் சின்னராசு அவர்கள் பெரியாரைப் பேசுமாறு கேட்டுக் கொண்டார்.

பெரியார் பேச்சு:

"அன்புள்ள தோழர் பாரதிதாசன் அவர்களே! மற்றும் நடிகையர், நடிகர், பண்டிதர், ஆசிரியர், சொந்தக்காரர் அவர்களே!

இன்று உங்கள் மத்தியில் இருக்கவும், உங்கள் சங்கத்தின் கருத்துக்களையும், நோக்கங்களையும், வேலைமுறைகளையும் உணரவும் வாய்ப்புக் கிடைத்ததற்கு நான் மிகுதியும் மகிழ்ச்சி யடைகிறேன்.

இப்பொழுது பாடப்பட்ட பாட்டுகளும் அவற்றிற்கு நடித்த நடிப்புகளும் எனக்கு மிகுதியும் மகிழ்ச்சியும் திருப்தியும் அளித்தன. இவை எனது நோக்கத்துக்கும் எதிர்பார்த்திருப்பவற்றிற்குப் பொருத்தமானதாக இருக்கின்றன. நீங்கள் செய்திருக்கும் இந்த மாதிரி ஏற்பாடு உண்மைத் தமிழர்களால் மிகவும் வரவேற்கப்பட வேண்டியதுமாகும். பாட்டுகளும் நடிப்புகளும் கடவுள்களையும் கல்வித்துறையையும் பற்றி இருப்பது காட்டுமிராண்டிக் காலத்தைக் குறிப்பதேயாகும். இன்றைய காலத்தையும் அவை குறிக்கும்' என்று சொல்லப்படுமானால், அது பிறர் உழைப்பில் வாழும் வஞ்சகக் கூட்டமான பார்ப்பனர் (பூதேவர்)களுக்கும், பாமர மக்களைச் சுரண்டிப் போக போக்கியமனுபவிக்கும் கொள்ளைக் கூட்டமான (லட்சுமிபுத்திரர்களான) செல்வவான்களுக்கும் மாத்திரமே சொந்தமானதாகும்.

பார்ப்பனீயக் கொடுமையும், பணக்காரத் திமிர்த்தொல்லையும்

ஒழிக்கப்படவேண்டும் என்று கருதுபவர்கள் கடவுள்களையும் கல்வியையுமே உள்விஷயமாகக கொண்ட கதை, காவியம், கலை, சங்கீதம், நாட்டியம், இலக்கண இலக்கியம் முதலியவற்றைக் கண்டிப்பாய் ஒழிக்க வேண்டும்.

நம்முடைய இந்த இரண்டு வேலைக்கும் மேற்கண்ட இரண்டு கூட்டமும் தடையாகவே இருக்கும் என்பதோடு, நமக்குள் புகுந்துகொண்டே நம் முயற்சி வெற்றிபெறாமல் போகச் சூழ்ச்சி செய்வார்கள்.

இதை நான் 26.11.28இல் சென்னையில் V.P. ஆலில் என் தலைமையில் கூட்டப்பட்ட சீர்திருத்த மகாநாட்டுத் தலைமைச் சொற்பொழிவில் தெளிவாய்ச் சொல்லி இருக்கிறேன்.

நம் கலைமகள், இலக்கணங்கள், இலக்கியங்கள் என்பவை இன்று நமக்குக் கேடாகவும், நம் இழிவுக்கும், மடமைக்கும், அடிமைத் தனத்துக்கும் ஆக்கமும் ஊக்கமும் தருவனவாகவும் இருப்பதற்குக் காரணம் அவை பார்ப்பனர்களாலும், மதவாதிகளாலும், இராஜாக்கள், செல்வவான்கள் ஆகியோர்களாலும் தோற்றுவிக்கப் பட்டவையும் கையாளப்பட்டவையுமேயாகும். மற்றும் இவர்களைப் பற்றிய விபரங்களையும், நாம் செய்ய வேண்டியவை களையும் ஒரு மாதத்திற்கு முன் 'குடி அரசி'ல் நான் எழுதியிருப்பது போல் சமீபத்தில் கூட்டப்படப் போகும் முத்தமிழ் நுகர்வோர்- அதாவது இசை நுகர்வோர், நடிப்பு நுகர்வோர், பத்திரிகை வாசிப்போர் ஆகியவர்கள் மகாநாட்டில் தெளிவுபடுத்த இருக்கிறேன்.

நீங்கள் ஆரம்பித்திருக்கும் இந்தக் காரியத்திற்கு, தமிழனிடத்தில் உண்மைப் பற்றும், தமிழும் தமிழர்களும் மேன்மை அடைய வேண்டும் என்ற உண்மைக் கவலையும் உள்ள ஒவ்வொரு சுத்தமான தமிழ் மகனும் ஆதரிக்கக் கடமைப்பட்டவனாவான்.

உங்களுக்கு நண்பர் பாரதிதாசன் அவர்கள் கிடைத்திருப்பது உங்கள் நல்வாய்ப்புக்கும் உங்கள் வெற்றிக்கும் அறிகுறியாயிருக்கும். இன்று, இந்த நாட்டில் தமிழும், தமிழ்க் கவியும், தமிழ் இசையும், தமிழர்களுடைய முன்னேற்றத்துக்கும், தன்மானத்துக்கும் பயன்படும்படி மக்கள் உணர, உழைக்க ஏற்ற கவிகள் செய்து மக்களை ஊக்குவிக்க அவர் ஒருவரே என் கண்ணுக்குத் தென்படுகிறார். அவரை நாம் பயன்படுத்திக் கொள்வதில்தான் நம் வெற்றியின் தன்மை இருக்கிறது.

உங்கள் கழகம் வெற்றி அடையத் தளரா முயற்சி, ஒற்றுமை, கட்டுப்பாடு என்பவைகளோடு ஒழுக்கம், நாணயம் என்பவைகளும்

தக்கபடி கவனித்துப் பின்பற்ற வேண்டியதாகும், இம்மாதிரி பணி களுக்கு என்னால் ஆன உதவியை செய்ய எப்போதும் காத்திருக் கிறேன். தமிழ்நாட்டு இளைஞர்களும், நாட்டுப்பற்று, மொழிப்பற்று, தன்மானப் பற்று உண்மையாய்க் கொண்ட செல்வவான்களும் உங்களுக்கு உதவ வேண்டியது அவர்களது கடமை ஆகும்" என்று கூறினார். பிறகு பெரியாருக்கு மாலையிட்டுத் தோழர் முருகு. சுப்பிரமணியம் செட்டியார் வாழ்த்துக் கூறி வழியனுப்பினார்கள்.

முத்தமிழ் நிலையத்திற்கு வருகைதந்து, பெரியார் பாராட்டிச் சொற்பொழிவாற்றிய அன்று, தாங்கள் நிலையத்திற்கு ஏதாவது பொருளுதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். பெரியார் அவர்கள் ஆவன செய்வதாகச் சொன்னார்கள். பெரியாரின் வருகைக்குப்பின் முத்தமிழ் நிலையம் புத்துணர்ச்சி யோடு செயல்படத் தொடங்கியது.

இன்ப இரவு நாடகம் ஒரு கற்பனைச்சோலை; கலைக்களஞ்சியம். அது போன்ற ஒரு கலைநிகழ்ச்சியை இந்நாளில் காண முடியாது. "வாழியவே சீரோங்கிய தமிழகம்" என்ற வாழ்த்துப் பல்லவியுடன் 'இன்ப இரவு' துவங்கும். இது சிம்மேந்திரமத்திபராகம், தாளம், பல்லவி, இரண்டாவது கல்யாணி ராகத்தில் "நீலவான் மீது தோன்றும் கோலமென்ன சொல்வேன் தோழி" என்ற பாட்டு. அது முடிந்ததும் வள்ளிக்கண்ணு என்ற பெண்மணியின் 'கர்நாடக சதுர் அலாரிப்பு' நிகழ்ச்சி இடம்பெறும்.

நடிகர்கள் ஒப்பனை செய்யச் சிறிது நேரமாகும்போது திரு. வேணுகோபால் சர்மா[1] மேடையில் தோன்றி விகடம் செய்வார். அதாவது பாபநாசம் சிவன், விளாத்திக்குளம் சாமி முதலிய இசைப்புலவர்கள் பாடுவது போலப் பாடியும், பிடில், மிருதங்கம், கடம் முதலிய பக்க வாத்தியங்களை வாயிலேயே இசைத்தும் மக்களை மகிழ்விப்பார்.

முதலில் சிக்கல் இராஜகோபாலன் (இன்றைய கவிஞர் சுரதா) அவர்கள் "மாடு மேய்ப்பவனிடம் எனக்கென்ன வேலை?" என்ற பாடலை உரைநடையாகச் (இயல்) சொல்வார். அடுத்து ஞானமணி அதையே இசையோடும் பாடுவார். டி.வி. இராதாமணி என்ற பெண் அப்பாட்டுக்கு அபிநயம் படித்து அடுத்தாற்போல் ஆடுவார். இஃது முதலில் துவங்கும் முத்தமிழ் நிகழ்ச்சி.

---

1) திரு. வேணுகோபால் சர்மா இன்று புகழ் பெற்ற ஓவியர்; மத்திய அரசின் பரிசைப் பெற்ற திருவள்ளுவர் ஓவியம் இவரால் வரையப்பட்டது. நுட்பமான இசையறிவும், போசை செய்யும் ஆற்றலும் (mimicry) மிக்கவர்; பாவேந்தரோடு நீண்ட நாள் நெருக்கமாகப் பழகியவர்.

பின்னர் கீழ்க்கண்ட பாவேந்தர் பாடல்களுக்குப் பரத நாட்டியமும், ஓரியண்டல் நடனமும் நடைபெறும்.

"அதோ பாரடி அவரே என் கணவர்"
"மாடுமேய்ப்பவனிடம் எனக் கென்ன வேலை"
"கூடை முறங்கள் முடித்துவிட்டோம் காடை இறக்கை போலே"
"பாண்டியன் என் சொல்லைத்தாண்டிப் போனாண்டி"
"சோலையில் ஓர் நாள் என்னையே தொட்டிழுத்து முத்தமிட்டான்"
"உவகை, உவகை உலகத்தாயின் கூத்து"

திருவாளர் ஞானமணி[1] இசை அமைப்பதிலும் பாடுவதிலும் தன்னிகரற்ற மாமேதை என்று சொன்னால் அது மிகையாகாது. தமிழகத்தில் எத்தனையோ இசைப்புலவர்கள் பாடுவதையும், இசை அமைத்திருப்பதையும் கேட்டிருக்கிறேன். ஆனால் ஞானமணி போல் திறமைமிக்க இசைப்புலவர் சொற்பம்.

"மாடுமேய்ப்பவனிடம் எனக்கென்ன வேலை-வஞ்சி என்றழைத்தான் ஏனென்றேன் மாலை" என்ற பாடலை ஞானமணி பியாகடை ராகத்தில் பாடும்போது, ஆயிரம் முறை கேட்டாலும் ஆசை தீராது. அப்படியே ஒவ்வொரு பாடலும்.

"வெய்யில் தாழவரச் சொல்லடி-இந்தத்
தையல் சொன்னதாகச் சொல்லடி"

என்ற பாடலின் கடைசியில் உள்ள

"தாய் அயலூர் சென்று விட்டாள் நாளை-சென்று
தான் வருவாள் இன்று நல்லவேளை
வாய் மணக்கக் கள்ளொழுகும் பாளை-நாள்
மாறி விட்டால் ஆசை எல்லாம் தூளே"

என்ற அடிகளை சங்கராபரணம் ராகத்தில் ஞானமணி பாடுவதும், இரத்தினம் என்ற பெண் அபிநயம் பிடிப்பதும் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். நண்பர்கள் சிலர் இந்தப் பாடலைத் திரும்பத் திரும்ப பாடும்படி ஞானமணியை வற்புறுத்திக் கேட்பார்கள்.

"பாண்டியன் என் சொல்லைத் தாண்டிப் போனாண்டி" என்ற பாடல் கல்யாணிராகம். அதற்கேற்பப் பரதநாட்டியம் நடைபெறும். 'உவகை உவகை' என்று தொடங்கும் பாடலுக்கு ஓரியண்டல் நடனம் ஆடுவார்கள்.

---

1) திருவாளர் எம்.எஸ்.ஞானமணி தற்போது சென்னையில் இருக்கிறார். தெலுங்குப் படங்களுக்கு இசையமைத்துக் கொண்டிருக்கிறார். 21.1.72ஆம் நாள் வெளியான ஆனந்தவிகடனில் அன்றைய தமிழக முதல்வர் மாண்புமிகு எம்.ஜி. இராமச்சந்திரன், நான் ஏன் பிறந்தேன்? என்ற பெயரில் எழுதிய தன் வரலாற்றுக் கட்டுரையில் பாராட்டி எழுதியிருக்கும் இசைப்புலவர் ஞானமணி 'இவரே'

கடைசி நிகழ்ச்சியாகப் புரட்சிக்கவி நாடகம் நடைபெறும். காப்பியமாக இருந்த புரட்சிக்கவியை அழகிய மேடை நாடகமாக மாற்றி எழுதினார் பாவேந்தர். ஞானமணி புரட்சிக்கவி உதாரனாக நடித்தார். செல்வி சரசுவதி என்ற பெண் அமுதவல்லியாக நடித்தாள். அப்பெண்ணுக்கு அப்போது 17 வயதிருக்கும். இளமை, அழகு, இசை, நடிப்பு ஆகிய எல்லாம் ஒருங்கே அப்பெண்ணிடம் அமைந்திருந்ததாகப் பாவேந்தரே அடிக்கடி பாராட்டிப் பேசுவார். முதலில் உதாரனாக நடிக்க மறுத்த ஞானமணி கூட. அப்பெண்ணின் அழகைக் கண்டு மீண்டும் நடிக்க ஒப்புக்கொண்டார்.

இன்ப இரவுக்கான விளம்பரத் தட்டிகள், திரைச்சீலைகள் யாவும் சென்னையைச் சேர்ந்த சிறந்த ஓவியர்களைக் கொண்டு எழுதப்பட்டன. இன்ப இரவு நாடகத்தை முதன் முதலில் சென்னை நகரிலேயே அரங்கேற்ற முயற்சி செய்தோம். அங்கு 'தியேட்டர்' கிடைக்காத காரணத்தால் சேலம் சென்ட்ரல் தியேட்டரில் இன்ப இரவை அரங்கேற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டன. 31.1.44ஆம் நாள் நடிக-நடிகையர்கள் எல்லாரும் சேலம் வந்து சேர்ந்தார்கள்.

5.2.44ஆம் நாள் சேலம் நீதிக்கட்சிப் பிரமுகரும், சுவர்ணாம்பிகா உந்து வண்டி உரிமையாளருமான இராவ்சாகிப் பி. இரத்தினசாமி அவர்கள் தலைமையில் இன்ப இரவு நாடகம் முதன் முதலாக அரங்கேறியது. அதன் பின்னர் சேலம் கல்லூரி முதல்வர் இராமசாமிக் கவுண்டர், தோரமங்கலம் புலவரேறு அ. வரத நஞ்சைய பிள்ளை, இராவ் சாகிப் குமாரசாமி பிள்ளை ஆகியவர்கள் தலைமையில் தொடர்ந்து நடைபெற்றது. கடைசியாக 9.2.44ஆம் நாள் பெரியார் ஈ.வே.ரா. அவர்கள் தலைமையிலும் நடைபெற்றது. பாவேந்தர் பாரதிதாசன் அவர்களும் 31.1.44லிருந்து 10.2.44வரை சேலத்தில் தங்கியிருந்தார்.

பிறகு இன்ப இரவு நாடகக்குழு சேலத்திலிருந்து நாமக்கல்லுக்குக் கொண்டு செல்லப்பட்டது. அங்கு ஒருநாள் தான் நடைபெற்றது. நாடகத்துக்கு நல்ல வசூல் என்றாலும் எனக்கு அதைத் தொடர்ந்து நடத்த விருப்பமில்லை. காரணம் ஒரு நாடகக் குழுவைக் கட்டிக் காப்பது என்பது எவ்வளவு கடினமானது என்பது எனக்கு முதலில் தெரியாமல் போய்விட்டது. நடிகர்கள் நடிகைகள், இசைக் குழுவினர், நாட்டியக்காரர், ஒப்பனைக்காரர் உட்பட ஏறக்குறைய இருபத்தைந்து பேர்களுக்குமேல் இருந்தார்கள். அவர்களை யெல்லாம் இழுத்துக் கொண்டு தமிழகமெல்லாம் சுற்றித் திரிவது எனக்குப் பெரும் மலைப்பாக இருந்தது. எனது அனுபவக் குறைவே இதற்குக் காரணம் என்பதை அறிந்தேன். பலமுறை சிந்தித்துப்

பார்த்தேன். மேலும் தொடர்ந்து நடத்த என்னால் இயலாது என்பதை முடிவாக உணர்ந்து கொண்ட நான் முருகு சுப்பிரமணியத்திடம் "விருப்பமானால் நீங்களே நடத்திக் கொள்ளுங்கள்" என்று சொன்னேன். அவர்களாலும் இயலாது என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே இன்ப இரவு நாடகக்குழு கலைக்கப்பட்டது. கலைஞர்கள் தங்களுக்குரிய ஊதியத்தைப் பெற்றுக் கொண்டு மகிழ்ச்சியாக ஊர் திரும்பினர்.

இந்த இன்ப இரவு நாடகம் நடத்தியதில் எனக்குப் பொருள் இழப்பு ஏற்பட்டாலும், கவிஞர் சுரதா, வேணுகோபால் சர்மா, ஞானமணி போன்றாரோடு நெருங்கிப் பழகும் நல்ல வாய்ப்பினைப் பெற்று மகிழ்ந்தேன். இவர்களுடைய மேதாவிலாசம் அப்பொழுதே எனக்குப் புலப்பட்டது.

கவிஞர் சுரதாவுக்கு அப்போது இருபது வயதிருக்கும். சுறுசுறுப்பாகவும் துடிப்பாகவும் காணப்படுவார். அப்போதே கவிதை எழுதிக் கொண்டுவந்து பாவேந்தரிடம் காண்பிப்பார். பாட்டின் நுட்பத்தைப் படித்துணர்ந்த பாவேந்தர் 'சுரதாவுக்கு இணை சுரதாதான்' என்று வாயாரப் பாராட்டியதை என் காதாரக் கேட்டு மகிழ்ந்திருக்கிறேன். அப்போது கவிஞர் சுரதா எழுதிப் பாவேந்தரிடம் காட்டிப் பாராட்டு பெற்ற சிலவரிகள் இன்றும் என் நினைவில் இருக்கின்றன. அவ்வரிகள் வருமாறு:

"தின்னும் இதழ் பூரிக்க நிலாமுற்றத்தில்
சீக்கிரமாய்ப் போயமர்ந்தேன்; வஞ்சி வந்தே
என்ன அத்தான் ஊர்சேதி? அம்மா அப்பா
எல்லாரும் நலந்தானா?

"வேர்த்துப்புழுங்காத மார்கழியில் குளிருக்குப்
போர்த்துத்தான் வந்தது புத்தேடு"[1]

சரசுவதி திருமணம்:

இன்ப இரவு நாடக ஒத்திகை சென்னையில் நடந்து கொண்டிருந்த போது, என் சொந்த அலுவல் காரணமாக நான் போடிநாய்க்கன் பட்டிக்குத் திரும்ப வேண்டியிருந்தது. நாடகப் பொறுப்புகளை முருகு சுப்பிரமணியத்திடம் ஒப்படைத்துவிட்டு நான் ஊருக்குத் திரும்பினேன். நான் சென்றமுறை கானாடுகாத்தான் சென்றிருந்தபோது பாவேந்தரின் மூத்த மகளான சரசுவதியின் திருமணம் பற்றிப் பேச்சு நடந்தது. திரு.வை.சு. சண்முகம் செட்டியாரும் அவர் மனைவி மஞ்சுளாபாய் அம்மையாரும்

1) பொங்கல் மலர்

சரசுவதிக்கு மாப்பிள்ளை பார்க்கும் வேலையில் தீவிரமாக இருந்தனர். வேலூர் கண்டர் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்து கொண்டிருந்த தமிழாசிரியர் புலவர். கண்ணப்பன் அவர்களே அந்த வரன். திருப்பூர் திராவிடர் கழகத் தோழரும் புரவலருமான திரு.எஸ்.ஆர். சுப்பிரமணியம் வீட்டில் புலவர் கண்ணப்பனும், மஞ்சுளாபாயும் எதிர்பாராமல் சந்தித்துப் பேசியபோது இந்தத் திருமணப் பேச்சுத் துவங்கியது. பிறகு வை.சு. சண்முகம் தம்பதியர் இத்திருமண முயற்சியில் முன்னின்று எல்லா ஏற்பாடுகளும் செய்தனர்.

நான் என் சொந்த ஊரான போடிநாய்க்கன்பட்டியில் இருந்தபோது 8.1.44ஆம் நாள் பாரதிதாசன் சரசுவதியின் திருமணம் பற்றி எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அக்கடிதம் வருமாறு!

புதுச்சேரி
8.1.44

அன்புள்ள திரு. ரெட்டியார்

அவர்களுக்கு வணக்கம்,

நானும், வை.சு.வும், கோனாப்பட்டார்களும் திருமண விஷயமாக பேசி முடிவு செய்த திட்டப்படி, இன்று வை.சு.வுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளேன். அந்தக் கடிதத்தின் நகலை இதில் வைத்திருக்கிறேன். இதை மனதில் வைத்துக் கொண்டு, தயவு செய்து தாங்கள் கரூருக்கு நேரில் மாப்பிள்ளை இருக்கும் இடம் தேடிச் சென்று, நான் தங்களை அனுப்பியதாகச் சொல்லிப் பேசவும், அதில் சொல்லியுள்ள திட்டங்களை அவர்களிடம் (கண்ணப்பரிடம்) கூறிப் பதில் தெரிந்து எழுதவும். ஏன் தங்களை அனுப்புகிறேன் என்றால் வை.சு. மூலமாகத்தான் மணமகனுடைய கருத்து எனக்குத் தெரிவிக்கப் பட்டது. நேரில் என்னிடம் திருமணப்பேச்சு நடக்கவில்லை. ஆதலால் ஒருவருக்கிருவராகக் கலந்து பேச வேண்டுமென்று நான் நினைக்கிறேன்.

பாரதிதாசன்

கவிஞரின் கடிதப்படி நான் கரூர் சென்று கழகத்தோழர் திரு. இரத்தினம் (முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்) அவர்களைத் தேடி அடைந்தேன். அவர் வீட்டில் மாப்பிள்ளை கண்ணப்பர் அவர்களும், மஞ்சுளாபாய் அம்மையாரும், ஈரோடு திரு. சண்முக வேலாயுதம் அவர்களும் இருந்தார்கள். பாவேந்தர் என்னை அனுப்பி வைத்திருப்பதாகச் சொல்லி, விபரங்களையும்

சொன்னேன். அன்று மாலை நாங்கள் எல்லாரும் மாப்பிள்ளை ஊரான கட்டிப்பாளையத்திற்குச் சென்றோம். அன்றிரவே என்னைத் தவிர மாப்பிள்ளை உட்பட அவர்கள் நால்வரும் பாவேந்தர் அவர்களைக் காணச் சென்னை முத்தமிழ் நிலையத்துக்குச் சென்றார்கள்.

நான் நேராகப் போடிநாய்க்கன்பட்டி வந்து, மாப்பிள்ளை எனக்குப் பிடித்திருப்பதாகவும், கடிதத்தில் குறிப்பிட்டிருந்த திட்டங்களுக்கு அவர்கள் ஒத்துக்கொண்டதாகவும் பாவேந்தருக்கு எழுதினேன். பாவேந்தரிடமிருந்து உடனே எனக்குக் கீழ்க்கண்ட கடிதம் வந்தது.

புதுச்சேரி
19.1.44

தோழர்கள் செல்லப்ப ரெட்டியார், கருப்பண்ணன் கிருஷ்ணராஜ் அவர்களுக்கு,

தங்களுக்கு நான் எழுதினேன் என்று முருகு இருந்துவிட்ட விஷயமும், முருகு எழுதினாரென்று நான் இருந்துவிட்ட விஷயமும் இன்று விளங்கிற்று! திருமணத்தில் தாலிகட்ட மறந்தது போல் இருக்கிறது இந்த விஷயம். தோழர் கா. பெருமாளுக்கும் தெரிவிக்க, பிறருக்கும் தெரிவிக்க 75 அழைப்பிதழ் அனுப்பியுள்ளேன்.

பெண்ணுடன் 20.1.44ஆம் தேதி இரவு புதுவையில் இரயிலேறி, 21.1.44ல் திருச்சி ஜங்சனில் இறங்கி நேரே (காலை) வேதாசலம் வக்கீல் வீட்டில் இறங்கி-அங்கு-ரிஜிஸ்டர் முடித்து, உடனே மத்தியான சாப்பாடு கே.ஏ.பி. வீட்டில் முடித்துக்கொண்டு-மாலை கருணாநிதி[1] பார்க்கில் காபி சாப்பிட்டு-இரவு சாப்பாட்டிற்கு உட்னே அதாவது 21.1.44 ஆம் தேதி இரவு கட்டிப்பாளையம் நோக்கிப் புகழூர் போக வேண்டியது. இந்தத்திட்டம் திருச்சியில் அனைவர்க்கும் தெரிவித்தாய் விட்டது.

நாமக்கல் நம் தோழர்கள் இவைகளை அறியும்படி செய்க. தாங்கள் மூவரும் திருச்சிக்கு வந்து அங்கிருந்து கட்டிப் பாளையத்திற்கு வந்து திருமணத்தைச் சிறப்பிக்க வேண்டுகிறேன்.

தங்களன்புள்ள
பாரதிதாசன்

கடிதம் 21.1.44ஆம் தேதிதான் கிடைத்தது. ஆதலால் உடனே நானும்,

1) இது திருச்சிராப்பள்ளிக் கழகத் தோழர் சங்கரன் வீடு

கிருஷ்ணராஜ், கா. கருப்பண்ணன், திருச்செங்கோடு என்.கே.பி.வேல், கா.பெருமாள் முதலிய தோழர்களும் மாலை 6 மணிக்குக் கட்டிப்பாளையம் போய்ச் சேர்ந்தோம். மறுநாட்காலை (22.1.44) 9 மணிக்குச் சேலம் கல்லூரி முதல்வர் திரு. இராமசாமிக் கவுண்டர் தலைமையில மணமக்களுக்குப் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோர் பேசினார்கள். முத்தமிழ் நிலையப் பங்குதாரர்களாகிய முருகு சுப்பிரமணியம் முதலிய தோழர்களும் வந்திருந்தார்கள். மக்கட் கூட்டம் நிறைந்திருந்தது. பாராட்டுக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. அன்று பெரியார் அவர்களை இடைவேளையில் பார்த்து ஏதாவது முத்தமிழ் நிலையத்துக்குப் பொருளுதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். ஊருக்குப் போய்க் கவனிப்பதாகச் சொன்னார்; 30.1.44ஆம் தேதி தாம் சொன்னபடியே பாவேந்தர் முகவரிக்கு ரூ.250/-க்குக் காசோலையொன்று அனுப்பி வைத்தார்.

பாரதிதாசன் நிதி:

1945ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 10ஆம் நாள், பாரதிதாசனுக்கு நிதி சேர்த்துக் கொடுக்க வேண்டும் என்ற நினைவு எனக்கு எதிர்பாராமல் திடீரென்று வந்தது. அந்த விபரத்தை என் நாமக்கல் நண்பர் கா. கருப்பண்ணன் அவர்களிடம் சொன்னேன். செய்யலாம் என்று சொல்லி என் எண்ணத்திற்கு அவரும் ஆதரவு காட்டினார். 25.2.1945ஆம் நாள் நான் சென்னைக்குச் சென்று பெரியார் ஈ.வெ.ரா. அவர்களைப் பார்த்து, பாரதிதாசன் அவர்களுக்கு நிதி சேர்த்து அளிக்க விரும்புவதாகச் சொல்லி, அவர்களது சம்மதத்தைக் கேட்டேன். அதற்குப் பெரியாரவர்கள் "நல்ல காரியம்; ஆனால் என் பொறுப்பில் அதை வைத்துக் கொள்ள முடியாது. என்னாலான எல்லா உதவிகளையும் செய்கிறேன்' என்று கூறித் தம் சம்மதத்தைத் தெரிவித்தார்கள். பெரியார் இவ்வாறு சொன்னதைக் கேட்டுப் பெருமகிழ்ச்சி அடைந்தேன், பெறற்கரிய பேறு பெற்றதைப்போல.

மறுநாள் திருவாளர்கள் எஸ்.இராமநாதன், டாக்டர் ஏ.கிருஷ்ண சாமி, எஸ்.இலக்குமிரதன் பாரதி முதலியவர்களைக் கண்டு நிதிக்குழுவில் உறுப்பினர்களாக இருக்க ஒப்புதல் கேட்டேன்; அவர்களும் ஒத்துக் கொண்டார்கள். மற்றும் அறிஞர் அண்ணா, பேராசிரியர் அன்பழகன், சர்.ஆர்.கே. சண்முகம் செட்டியார், முன்னாள் அமைச்சர் முத்தையா முதலியார், சேலம் கல்லூரி முதல்வர் அ.இராமசாமிக் கவுண்டர் ஆகிய எல்லாருக்கும் குழுவில் உறுப்பினராக இருக்கும்படி கோரி கடிதம் எழுதினேன். எல்லாரும்

ஒப்புதல் அளித்தார்கள். எங்கள் ஊரான போடிநாயக்கன்பட்டி என்.கிருஷ்ணராஜ் நிதிக்குழுத் தலைவராக நியமிக்கப்பட்டார். பின்னர் நிதிக்குழு கீழ்க்கண்டவாறு ஒரு வேண்டுகோள் வெளியிட்டது.

திருவாளர்களான பெரியார் ஈ.வெ.ரா., சர்.ஆர்.கே. சண்முகம், டாக்டர் ஏ.கிருஷ்ணசாமி, மாஜிமந்திரி எஸ்.ராமநாதன், மாஜி மந்திரி எஸ்.முத்தையா முதலியார், சி.என். அண்ணாதுரை, என்.அர்ச்சுனன், அ.இராமசாமிக் கவுண்டர், எஸ்.எல்.பாரதி, எஸ்.ஆர்.சுப்பிரமணியம், என்.சங்கரன், வி.டி. ஆதிலட்சுமி அம்மாள், இந்திராணி பாலசுப்பிரமணியம், ஏ.திருநாவுக்கரசு, என் கிருஷ்ண ராஜ் ரெட்டியார், கே.கருப்பண்ணன், எம்.செல்லப்ப ரெட்டியார், ஏ.வி.பி. ஆசைத்தம்பி, எஸ்.வேதரத்னம், மணவை ரெ.திருமலை சாமி (நகரதூதன் ஆசிரியர்) ஆகியோர் விடுக்கும் அறிக்கை:

தமிழ்நாட்டின் ஒப்புயர்வற்ற புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தமிழ் இலக்கியத்திற்கும் தமிழ்ச்சமூகத்திற்கும் பெரும் சேவை செய்திருக்கிறார்கள். அவர்களுடைய பெருந்தொண்டிற்கு நன்றி செலுத்தும் பான்மையோடு ஒரு நிதி திரட்டிக் கவிஞர் அவர்கட்குக் கூடிய விரைவில அளிப்பதெனத் தீர்மானித்துள்ளோம். இந்தக் காரியத்தை நாம் நிறைவேற்றினோமானால், கவிஞரின் சேவைக்கு ஓரளவு நாம் நன்றியும் பாராட்டும் செய்தவர்களாவோம் ஆதலால் தமிழ் அன்பர்கள் அனைவரும் இந்த நிதிக்குத் தாராளமாக நன்கொடைகள் தந்துதவுமாறு கேட்டுக் கொள்கிறோம். நிதிக்கு பணம் அனுப்பும் அன்பர்கள் பாரதிதாசன் நிதிக்காக என்று குறிப்பிட்டுக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கக் கோருகிறோம்.

என்.கிருஷ்ணராஜ் ரெட்டியார்
நாமக்கல் (சேலம் ஜில்லா)

சென்னையிலிருந்து முல்லை ப. முத்தையா அவர்கள் நூறு இரசீதுப் புத்தகங்கள் (ஒவ்வொன்றும் நூறு இரசீதுகள் அடங்கியது) நன்கொடையாக அனுப்பி வைத்தார். குடியரசு முதலிய எல்லாச் செய்தித்தாள்களுக்கும் நிதி வேண்டுகோள் அனுப்பிவைத்தேன். தமிழகமெங்கும், பல நகரங்களிலிருந்தும், கிராமங்களிலிருந்தும், மற்றும் இலங்கை சிங்கப்பூர் முதலிய நகரங்களிலிருந்தும் இரசீதுப் புத்தகங்கள் அனுப்பி வைக்கும்படி கடிதங்கள் வந்தன. அவ்வாறே எல்லா ஊர்களுக்கும் அனுப்பி வைத்தேன். சில ஊர்களுக்கு நானே நிதி வசூலுக்குச் சென்றிருந்தேன். வெளியூர்களிலிருந்து

பணவிடையில் வரும் பணத்தை வாங்கிக் கா. கருப்பண்ணன் அவர்கள் பாரதிதாசன் நிதிக்கணக்கில் வங்கியில் போட்டு வைப்பார்.

பெரியார் ஈ.வெ.ரா. அவர்களிடமிருந்து என் பெயருக்கு 15.6.45 ஆம் நாள் ரூ.352/-க்கு காசோலை ஒன்று வந்தது. அக்காசோலையோடு கீழ்க்கண்டவாறு ஒரு குறிப்பும் வந்தது.

பெரியார் ஈ.வெ.ரா. நன்கொடை	ரூ. 150.00
திரு. மத்திரன் அவர்கள் (திண்டுக்கல்)	ரூ. 101.00
திரு. ஜீ. இலக்ஷ்மணன் (கல்வார்ப்பட்டி)	ரூ. 101.00
	ஆக ரூ. 352.00

திரு. மத்திரன் அவர்களும், திரு. இலக்ஷ்மணன் அவர்களும் பெரியார் பெயருக்கு நன்கொடைகளை அனுப்பி வைத்த காரணத்தால், பெரியார் அவர்கள் தமது தொகையையும் சேர்த்து அனுப்பி வைத்தார்.

இராசிபுரம் 'பாரதிதாசன் நிதி நாடகக் குழுவினர்' காலஞ்சென்ற சலகை ப. கண்ணன் அவர்களால் தீட்டப்பட்ட வீரவாலி' நாடகத்தை நடத்தி, அதன்மூலம் வசூலான ரூபாய் 1084ஐயும், பாவேந்தர் அவர்களிடமே 22.11.45ஆம் நாள் கொடுத்தனர். அதன்பின்னர் என் உடல்நலக்குறைவால் நிதிவசூல் சிறிது மந்தமாக இருந்தது.

உடல் நலம் பெற்றவுடன் நான் சென்னை சென்றேன். சலகை ப. கண்ணன் அவர்கள் அவ்வமயம் சென்னையில் இருந்தார் திருவாளர்கள் ப. கண்ணன், என்.வி. நடராசன், டி.என். இராமன் ஆகியவர்களிடம் நிதி விஷயத்தைச் சொன்னேன். அதாவது சென்னையில ஒருவிழா ஏற்பாடு செய்து வசூலான நிதிப்பணத்தை வழங்கிவிடலாம் என்றும், இல்லையேல் நாமக்கல்லிலேயே கொடுத்து விடுகிறோம் என்று சொன்னேன். அதற்கு அவர்கள் அறிஞர் அண்ணா தலைமையில் நிதி ஆதரவுக் கூட்டம் போட்டு மற்ற கட்சியினரையும் அழைத்து ஆவனசெய்து விரைவில் நிதி கொடுத்துவிடலாம் எனக் கூறினார். அண்ணாவுக்கும் இது விபரத்தைக் கடிதம் எழுதிக் கேட்கலாமென்றும் சொன்னார்கள். அவ்வாறே கடிதம் எழுதி அண்ணாவின் சம்மதம் பெற்றோம். 1946ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 12ஆம் நாள் மாலை 5.30 மணிக்குக் கோகலே மண்டபத்தில் பாரதிதாசன் நிதி ஆதரவுக் கூட்டம் நடந்தது. அக்கூட்டத்தில் அறிஞர் அண்ணா, எஸ்.எல்.பாரதி, டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி பார்-அட்-லா, கி.வ.

ஜகன்னாதன், கம்பதாசன் ஆகியோர் பேசினார்கள். அறிஞர் அண்ணா பேசும்போது, இங்கு வந்துள்ள பெரியவாகள், அவரவர்களுடைய நன்கொடைத் தொகையை இங்கேயே கூறிவிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். தம்முடைய அன்பளிப்பு ரூ.150 என்று சொன்னார். பிறகு டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி ரூ. 150/-ம், கவிஞர் கம்பதாசன் ரூ. 500/-ம், கி.வ.ஜ. ரூ.25/-ம் நன்கொடை தருவதாகச் சொன்னார்கள், மற்றவர்களின் தொகை என்ன என்பது இப்பொழுது எனக்கு நினைவில்லை.

பாவேந்தர் நிதிவிஷயத்தில் அறிஞர் அண்ணாவின் தலையீடு ஏற்பட்டவுடன், புதுமுறுக்குடன் எல்லாரும் செயல்பட்டனர். நிதி வேகமாக வந்து குவியத் தொடங்கியது. 29.7.46ஆம் நாள் பாவேந்தரின் நிதியளிப்பு விழா சென்னை பச்சையப்பர் திடலில் நடைபெற்றது. நாவலர் ச.சோமசுந்தரபாரதியார் எம்.ஏ., பி.எல்., அவர்கள் விழாவுக்குத் தலைமை தாங்கினார். அறிஞர் அண்ணா தமிழக மக்கள் சார்பில் பொன்னாடை போர்த்தி பாவேந்தருக்கு ரூ.24,300/-[1] (இருபத்து நான்காயிரத்து முந்நூறு ரூபாய்) அடங்கிய பொற்கிழியை வழங்கினார். தமிழ்மக்கள் வெள்ளம்போல் திரண்டிருந்தனர். சலகை ப. கண்ணனும், டி.என். இராமனும் நிதியளிப்பு விழா மலர் ஒன்று வெளியிட்டனர். தமிழ்நாட்டின் சிறந்த அறிஞர் பலர் அதில் பாவேந்தரைப் பற்றிக் கட்டுரைகள் எழுதியுள்ளனர்.

நான் நாமக்கல்லில் நிதிக்குழுவைத் தொடங்கியதிலிருந்து, சென்னையில் பாவேந்தருக்கு நிதிகொடுத்த வரையில் எனக்கென்று ஏற்பட்ட எந்தச் செலவுக்கும் என் கைப்பொறுப்பில்தான் செலவு செய்தேன். நாமக்கல் திரு.கா. கருப்பண்ணன் அவர்கள் நிதியளிக்கும் விஷயத்தில் எனக்கு உதவியாக இருந்து தொண்டாற்றினார்கள். பாவேந்தருக்கு நிதி கொடுக்கும் விஷயத்தில் பெரியாருக்கு உடன்பாடு இல்லை என்று பின்னர் பலரால் பேசப்பட்டது. பாவேந்தர் கூட இது விஷயத்தில் பெரியார் மீது ஐயங்கொண்டிருக்கலாம். பெரியார் துவக்க காலத்தில் தாமே ரூ. 150/- நன்கொடை வழங்கியதோடு, ஊக்கம் காட்டினார். ஆனால் 'பாவேந்தர் நிதி' இருபத்தையாயிரம் ரூபாயை எட்டிப் பிடிக்கும் என்று அவர் நினைக்கவில்லை. அந்த நாளில் கால் இலக்கம் என்பது மிகப் பெரிய தொகை (நாமக்கல் கவிஞருக்கே அந்நாளில் ரூ.12,000/- தான் வழங்கினார்கள் வசதிமிக்க பேராயக் கட்சியார்)

1) பாவேந்தருக்கு வழங்கிய பொற்கிழி ரூ.25,000 என்று பொதுவாக எல்லாரும் குறிப்பிடுவதுண்டு. உண்மையாகக் கொடுத்த தொகை ரூ. 24,300/-தான்.

இவ்வளவு பெரிய தொகையை ஒரு நல்ல கவிஞர் கையில் கொடுத்து அவரைச் சோம்பேறி ஆக்குகிறார்களே என்று பெரியார் அன்று கருதினார். ஆனால் நிதிவசூலுக்கு அவர் எப்போதும் தடை கூறியதில்லை.

பாவேந்தருக்கு நிதியளிப்புவிழா ஏற்பாடு செய்த நேரத்தில் 'குயில்' என்ற கவிதை ஏடு ஒன்றினைத் துவங்க வேண்டும் என்று திரு.டி.என். ராமனும், பாவேந்தரும் திட்டமிட்டனர். அது சம்பந்தமான முயற்சிகளில் ஈடுபடுவதற்காக நானும் பாவேந்தரும் 10.12.46இல் புதுவையிலிருந்து புறப்பட்டுச் சென்றோம். அப்போது நான் ஏற்கெனவே எழுதி வைத்திருந்த 'நான் கண்ட காதல்' என்ற ஒரு கட்டுரையை அவரிடம் தந்தேன். பாவேந்தர் அதைப் படித்துப் பார்த்து, மிகவும் நன்றாக இருப்பதாகச் சொல்லிப் பாராட்டி, அக்கட்டுரையின் தலைப்பில் 'கனக சுப்புரத்தினம் கவிஞர் கழகத்தைச் சேர்ந்த நாமக்கல் மு. செல்லப்பன்' என்பதற்காக எழுதி அக்கட்டுரையைக் குயிலில் வெளியிட்டார்கள். அதை என்னுடைய பெறற்கரிய பேறு என்று கருதிப் பெருமகிழ்ச்சியும் பெருமிதமும் அடைந்தேன்; இன்றும் அடைகிறேன்.

1943ஆம் ஆண்டு பாவேந்தருக்கு வயது 53. எனக்கு வயது 33. நான் அவர்களைவிட இருபது ஆண்டு இளையவன், என்றாலும், பாவேந்தர் என்னிடத்தில் அளவிலா அன்பும் பெருமதிப்பும் வைத்திருந்தார். 'ஐயா' அல்லது 'ரெட்டியார்!' என்றுதான் என்னை எப்போதும் அழைப்பார். எவ்வளவு கோபமாக இருந்தாலும் நான் சொன்னால் பாவேந்தர் கேட்பார்; மறுத்து ஒன்றும் சொல்ல மாட்டார்.

'நீங்கள் நிதி விஷயத்தைத் துவக்காமலிருந்தால், வேறு யாரும் துவக்கியிருக்க மாட்டார்கள்' என்று என்னைப் பாராட்டிக் கூறுவார். 'யாரோ நாமக்கல் ரெட்டியாராம்; அவரால் சுப்புரத்தினத்துக்கு நல்லகாலம் வந்து விட்டது' என்று புதுவை மக்கள் பேசிக் கொள்வதாகப் பாவேந்தர் என்னிடம் பெருமையாகச் சொல்வார்.

வாரத்திற்கு ஒரு கடிதமாவது புதுவையிலிருந்து எனக்கு வரும்; அவ்வாறே நானும் எழுதுவேன். அவரது புதிய கவிதை நூல் அச்சாகி வந்தால் உடனே எனக்கு அன்பளிப்பாக அனுப்பி வைப்பார். பாவேந்தர் எப்போது பணத்திற்கு எழுதினாலும், உடனே தந்தி மணியார்டரில் பணம் அனுப்புவதுதான் என் வழக்கம்.

பாவேந்தரை நினைக்கும்போதெல்லாம், "தமிழ்த்தாய் அணிந்திராத அணியையெல்லாம் சூட்டி, அவளை அலங்கரித்தவர். இருபதாம்

நூற்றாண்டின் இணையற்ற கவிஞராக வாழ்ந்த மாமேதை" என்று நான் எண்ணி எண்ணி மகிழ்வதுண்டு. முதுமையடைந்துவிட்ட என் உள்ளத்தில் பாவேந்தர் நினைவு இன்றும் பசுமையாக இருக்கிறது.

வளர்க பாவேந்தர் புகழ்!

கவியரசர் பாரதிதாசன்

கவிஞர் திருலோக சீதாராம்

கவிஞர் திருவையாறு லோகநாத சீதாராம் அவர்கள் - தாமோதரனாரும், தாயுமானவரும், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையும் வாழ்ந்த திருச்சிராப் பள்ளியில் வாழ்ந்தவர்.

தரணியின் முதுகு நெளியப்படை நடத்தித் தஞ்சாவூர் வரை முற்றுகையிட்ட சிவாஜியின் பேரால் தமிழ் ஏடு நடத்தி வந்தவர்; மாம்பலக் கவிச்சிங்கம் போல மனப்பாடக் கவிஞர்.

பாவேந்தரின் நம்பிக்கைக்குரிய பார்ப்பன நண்பர்கள் இருவர். ஒருவர் ஓவியர் வேணு கோபால சர்மா; மற் றொருவர் இந்தத் திருலோகம். பாரதியார் குடும்பத் தோடும் இவருக்கு நெருக்கமான தொடர்புண்டு.

'வாழ்நாள் முழுதும் சருகரிக்க முடிந்ததே தவிர குளிர் காய முடியவில்லை' என்று கூறிவிட்டுச் சஞ்சலத்தோடு கண் மூடியவர்.

'கந்தர்வகானம்' பாடிய இக்கவிஞர் மக்கள் கானம் பாடிய பாவேந்தர் பற்றிய நினைவலைகளை, இக்கட்டுரையில் கரையிட்டுக் காட்டுகிறார்.

புதுவையில் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் வீட்டைப் பொது நினைவுச் சின்னமாக்கி, கவிஞரின் மனைவியாருக்கு மானியமும் உதவி, புதுவை அரசாங்கம் பெரும் சிறப்புச் செய்திருக்கிறது. தமிழ்மக்கள் பெரு மகிழ்வு கொள்ளும் இந்த ஏற்பாட்டில் தமிழ்நாடு அரசும் பங்கு கொண்டிருக்கிறது.

பாரதிக்குப் பின்னர் பாரதிதாசன் மரபு ஒன்று தமிழ் நாட்டில் உருவாகி, அவர் வழியில் இளங்கவிஞர் தலைமுறையொன்று வளர்ந்தும் வருகிறது. பாரதிக்குத் தாசன் என்று அவர் தம்மை அழைத்துக் கொண்ட போதிலும், பாரதியைச் சந்திப்பதற்கு முன்னமே புதுவை கனகசுப்புரத்தினம் பெரும் புலவராகவும் கவிஞராகவும் விளங்கியவர்தாம். பாரதியின் தொடர்பாலும், அவரிடம் சுப்புரத்தினம் கொண்டிருந்த பக்தியினாலும் பாரதிதாசன் எளிய இனிய தமிழ்க் கவிதைகள் எழுதும் பழக்கத்தை மேற்கொண்டார். அதில் வெற்றியும், பாரதியின் நேரிடையான பாராட்டையும், நன்மதிப்பையும் பெற்றவரானார்.

சமூக சீர்திருத்தக் கருத்துக்களில் பாரதியும் பாரதிதாசனும் ஒத்த கருத்துடையவர்களாக இருந்தது அவர்களுடைய நட்பின் அடிப்படையாகும். புதுவையில் பாரதியாரின் மெய்க்காவல் பொறுப்பையும் மேற்கொண்ட வீரர்களின் தலைவராக விளங்கிய கனகசுப்புரத்தினம் பாரதிதாசனாக மலர்ச்சியடைந்தது இயல்பு.

சுத்தச் சுயமரியாதை இயக்கக் கவிஞராக பாரதிதாசன் பிரசித்தமடைந்தபோது ஒரு பார்ப்பனருக்குத் தாசன் என்று தம்மை அவர் அழைத்துக் கொள்வதை இயக்கப் பிரமுகர்கள் சிலர் ஆட்சேபித்த போதும் கூட, பாரதிதாசன் தம் பெயரை மாற்றிக் கொள்ள ஒப்பவில்லை. பாரதியை இனத்தின் பெயரால் யார் இழிவு கூறுவதையும் பொறுக்காத உணர்ச்சி வேகத்துடன் அவர்களின் மடமையைச் சாடும் நேர்மை அவரிடமிருந்தது.

பாரதிதாசன் பார்ப்பனீய எதிர்ப்பாளர் என்பது நாடறிந்த உண்மை. ஆயினும் அவருடைய அந்தரங்க நட்பிற்கும் மதிப்புக்கும் உரிய பார்ப்பனர் பலர் உளர். அவர்களிடையில் இந்தக் கட்டுரையாளருக்கும் ஒரு சிறப்பான இடம் இருந்து வந்தது.

புரட்சிக்கவி என்ற மகுடமிட்டு பில்ஹண காவியத்தைப் புரட்சித் திருப்பத்துடன் அருமையான தமிழில் அவர் இயற்றியிருக்கிறார். இப்படைப்பால் பாரதிதாசனுக்கே 'புரட்சிக்கவி' என்ற கீர்த்தி நிலைத்துவிட்டது.

கவியரசர் பாரதிதாசனை முதன்முதலில் நான் சந்தித்தது விழுப்புரத்தில். 1938-ல் பாலபாரதம் என்ற மாதப் பத்திரிகையை அங்கிருந்து நடத்திக் கொண்டிருந்தேன். பாரதிதாசனுடைய கவிதைகள் முதல் தொகுதி சில மாதங்களுக்கு முன்புதான் வெளிவந்திருந்தது. பேராசிரியர் கே.ஸ்வாமிநாதன் தினமணி ஆண்டு மலரில் பாரதிதாசன் ஒரு சிறந்த கவிஞர் என்ற சிறிய அறிமுகக்

கட்டுரை எழுதியிருந்தார். தேசியவாதிகளிடையிலும் அக்கிரகார வாசிகளிடையிலும் பொதுவாகப் பாரதிதாசனைப் பற்றிய அர்த்த மற்ற ஒரு கசப்பு நிறைந்திருந்தது. பெரியாரின் கட்சிக்காரராகவும், ஜஸ்டிஸ் கட்சிப் பிரமுகர்களிடையே மட்டும் அதிகம் பழகி வந்தவராகவும் இருந்தபடியால் காங்கிரஸ்காரர்களுக்கு அவரைப் பிடிக்காது. சுயமரியாதைக் கருத்துக்களையும், பார்ப்பனத் துவேஷக் கருத்துக்களையும் பலமாக அவர் பிரசாரம் செய்துவந்த காரணத்தினால் அக்கிரகாரம் இவரைப் புறக்கணித்திருந்தது. இத்தனையையும் மீறி அவருடைய அற்புதமான கவித்திறன், உண்மையான ரசிகர்களைக் கவர்ந்திழுத்தது. இந்த வகையில் அவரைப் புறக்கணிப்பது தமிழுக்கு நஷ்டம் என்ற செய்தியை அக்கிரகார அறிஞர்கள் சிலர், பேராசிரியர் கே. ஸ்வாமிநாதன், ஏ.வி.சுப்ரமண்ய அய்யர் போன்றவர்கள் துணிவுடன் எடுத்துரைக்கத் தயங்கவில்லை.

1944இல் வானொலிக் கவியரங்கில் பாரதிதாசன், ச.து.சு.யோகியார், ந. பிச்சமூர்த்தி இவர்களுடன் நானும் பங்குபெற்றேன். இது வானொலி நடத்திய இரண்டாவது கவியரங்கு.

1946இல் பாவேந்தருக்குப் பொற்கிழியளிப்பதற்காக ஒரு திட்டத்தை அறிஞர் அண்ணாதுரை மேற்கொண்டு மிகவும் சிறப்பாக நிறைவேற்றி பல்லாயிரங்கள் நிதி திரட்டிக் கொடுத்தார். இது சம்பந்தமாக பிஷப் ஹீபர் மைதானத்தில் நடைபெற்ற சர்வ கட்சிக் கூட்டத்தில் நானும் கலந்து கொண்டு பாரதிதாசன் கவிதை நயங்களை விமர்சித்துப் பேசியதைக் கேட்ட அறிஞர் அண்ணாதுரை, அக்கிரகாரத்து அதிசயப்பிறவிகளில் ஒருவன் என்று என்னை மிகவும் பாராட்டினர். திராவிட நாடு வெளியிட்ட சிறப்பு மலரில் பாவேந்தரைப் பற்றிய ஒரு பாடலை எழுதுமாறு கேட்டு வாங்கிப் பிரசுரித்தார்.

1951இல் பாரதிதாசனுக்கு மணிவிழா. பல மாவட்டங்களைச் சேர்ந்த ரஸிக நண்பர்கள் சிலர் புதுவை சென்று, மணிவிழா ஏற்பாடுகளுக்குப் பாவேந்தரிடம் அனுமதி கேட்டனர். திருச்சியில் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களையும், என்னையும் கலந்து கொண்டு திட்டமிடும்படி சொல்லியனுப்பியிருந்தார்.

ஓர் அமாவாசை தினம். காலையில் அனுஷ்டானங்களுக்குத் தயாராக இடுப்பில் பஞ்சகச்சமும், கையில் தர்ப்பையுமாக நின்று கொண்டிருந்தேன். வாசலில் ஐந்தாறு கறுப்புச் சட்டைக்காரர்கள் வந்து, 'திருலோக சீதாராம் வீடு இதுதானா?' என்று விசாரித்தார்கள்.

முதலில் நான் திகைத்துப் போனேன். இந்தக் கூட்டத்தார் எதற்காக நம்மைத் தேடி வந்திருக்கிறார்கள் என்று.

'ஆம் இந்த வீடுதான். நீங்கள் விசாரிக்கும் ஆசாமியும் நான்தான். என்ன வேண்டும்?' என்று நான் கேட்டதும் அவர்களும் திகைத்துப் போனார்கள், தவறான விலாசத்துக்கு வந்திருக்கிறோமோ என்று.

'திருலோக சீதாராமைச் சந்திக்கும்படி பாரதிதாசன் சொல்லி யனுப்பினார். தாங்கள்தானா?' என்று கேட்டார்கள்.

'வாத்தியார் அனுப்பியிருக்கிறாரா? அப்படியானால் நான் தான். கொஞ்சம்மேலே சென்று அமருங்கள். நான் அனுஷ்டானம் முடித்துக் கொண்டு வருகிறேன்' என்றேன். வந்தவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைத் தோம். நிதிக்கு வேண்டுகோளும் விடுவிக்கப்பட்டது. தொகையும் வசூலாகிக் கொண்டிருந்தது. குழுவிற்கு நான் செயலாளன். காதல் ஆசிரியர் ராமநாதன் பொருளாளர். அன்பில் தர்மலிங்கம், பராங்குசம் ஆகியோர் எங்களுடன் விழாக் குழுவில் இருந்தனர்.

திடீரென்று ஓர் அதிர்ச்சி ஏற்பட்டது. நாங்கள் குறித்திருந்த அதே நாளில் மணிவிழா தஞ்சையில் ராமநாதன் செட்டியார் ஹாலில் நடைபெறுமென்றும் புரட்சிக் கவிஞர் நேரில் விஜயம் செய்வார் என்றும், அப்போது நிதியளிப்பும், பொன்னாடை போர்த்தலும் நடைபெறும் என்றும், யதார்த்தம் பொன்னுச்சாமி பிள்ளையின் பேரால் தினத்தந்தியில் ஒரு விளம்பரம் வெளியாயிற்று.

நாங்களோ திருச்சி தேவர்மன்றத்தில் விழா ஏற்பாடு செய்து, தீவிரமான நிதி வசூலிலும் ஈடுபட்டிருந்தோம். திரு. கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் விடுத்த அறிக்கையை எதிரொலித்து மலேயா முதலிய இடங்களிலிருந்தும் பணம் வந்து கொண்டிருந்தது. இந்த நிலையில் புதிய விளம்பரத்தைக் கண்டு எங்கள் குழுத்தலைவரும் நானும் அதிர்ச்சியடைந்தோம்.

ஒரே நாளில் இரண்டு இடங்களில் விழாவா? கவிஞர் அன்று தஞ்சையில் நேரில் இருப்பார் என்றும் போட்டிருக்கிறதே. அப்படியானால் திருச்சி விழாவின் கதி என்ன? விளம்பரம் உண்மையா? கவிஞர் இதற்கு ஒப்புதல் கொடுத்திருப்பாரா? என்றெல்லாம் குழப்பம் ஏற்பட்டது. கவிஞருக்கு எங்கள் குழுத் தலைவரிடமிருந்து விபரம் கேட்டு ஒரு கார்டும் அதற்கு விடை வராதபடியால் தந்தியும் பறந்தன. ஒரே மௌனம்.

கி.ஆ.பெ.வி. அவர்களுக்கு இதெல்லாம் பிடிக்காது. ஒழுங்கு மீறிய செய்கையை அவரால் ஒப்ப முடியாது. அதற்குப் பணிந்து போகவும் அவரால் இயலாது. உடனே தாம் தலைவர் பொறுப்பில் இருந்து விலகிக் கொள்வதாக ஒரு கடிதம் எனக்கு அனுப்பி விழாக் குழுவில் வைக்கும்படி சொன்னார். இச்சங்கடமான நிலைமையில் அவர் மேற்கொண்ட முடிவு நியாயமென்று எனக்குப் பட்டபடியால் நானும் எனது ராஜினாமாவுடன் சேர்த்துப் பொருளாளர் ராமநாதனுக்கே அனுப்பி விட்டேன். தலைவர், தாம் இந்தக் குழுவி லிருந்து விலகிக் கொண்ட அறிக்கையை முன்னர் நிதியனுப்பியவர் களுக்கும் மற்றவர்களுக்கும் அனுப்பி விட்டார் என்று அறிந்தேன். குழுவினர் 'காதல்' அலுவலகத்தில் கூடி நிலைமையைப் பரிசீலித்தனர். இதற்குள் பராபரியாகச் சில உண்மைகள் எங்களுக்கு நிச்சயமாகத் தெரிந்து விட்டன.

விளம்பரம் உண்மை தான் என்றும, யதார்த்தம் பொன்னுசாமிப் பிள்ளை கவிஞரைச் சந்தித்துத் திசை திருப்பி விட்டார் என்றும், பத்து நாடகங்கள் போட்டு 60 ஆயிரமாவது வசூலித்து விடலாமென்று கவிஞரிடம் இவர் சொல்லி அவருடைய அனுமதியைப் பெற்றிருப்பதாகவும் தெரிந்தது.

கவிஞர் எடுப்பார் கைப்பிள்ளை. எளிதில் யாரையும் நம்பி விடுவார். கடைசி வரையிலும் இந்தச் சுபாவத்தால் அவர் பட்ட அவதிகள், எண்ணில. மணிவிழா விஷயத்திலும் அவர் பல துன்பங்களுக் காளானார்.

விழாக்குழு முழுமையும் ராஜீனாமா செய்து விட்டது. இந்தச் செய்தியைக் கவிஞரிடம் நேரில் சென்று தெரிவித்து அது வரையுள்ள கணக்குகளையும் ஒப்புவித்து விடுவது என்று முடிவாயிற்று. என் தலைமையில் ஒரு தூதுக் குழு புதுச்சேரி செல்வதென்று முடிவு செய்யப்பட்டது. என்னுடன் ஒரு சில நண்பர்கள் உடன் வந்தனர். இப்பொழுது அவர்கள் அனைவர் பெயரும் என் நினைவில் இல்லை. அன்பில் தர்மலிங்கம் இருந்தார்; நண்பர் பராங்குசம் இருந்தார் என்று நினைவு.

தமது வீட்டு முற்றத்தில் சாய்வுநாற்காலியில் சிங்கம் படுத்துக் கிடப்பது போல் கவிஞர் சாய்ந்திருந்தார். நண்பர்கள் என்னை முதலில் உள்ளே போகச் சொன்னார்கள். வாசற்படியில் நுழைந்து இடைகழியில் சென்று அவரைப் பார்த்தவாறு நேரில் நின்று விட்டேன். கிட்டே போகத் துணிவில்லை. சாய்ந்திருந்த கவிஞர் நிமிர்ந்து உட்கார்ந்தார். பிறகு 'ரிஸைன் பண்ணிட்டியில்லே' என்று கேட்டார். 'ஆமாம்; ரிஸைன் பண்ணிட்டன்' என்றேன். 'அப்ப,

வச்சுடு, போ, - என்றார். கையில் வைத்திருந்த விழாக் குழு சம்பந்தமான தாள்களையெல்லாம் அப்படியே வைத்துவிட்டு வாசற்பக்கமாகச் செல்லத் தொடங்கினேன்.

'மூட்டாஞ, இங்கேவா! உன்னையா போகச் சொன்னேன். உன்னை அப்படிச் சொல்வேனா? இந்த விஷயத்திலிருந்து நீ வெளியே போ என்று தான் சொன்னேன். நீ உள்ளே வா; இப்படி உக்காரு' என்று அருமையுடன் அழைத்தார். உள்ளே போனேன். தமது சாய்வு நாற்காலியின் கைப்பிடியில் என்னை உட்கார்த்தி வைத்துக் கொண்டார். இன்னும் யாரெல்லாம் வந்திருக்கிறார்கள் என்று கேட்டார். சொன்னேன். அனைவரையும் உள்ளே அழைத்து உட்காரச் சொன்னார். பிறகு என்னிடம், 'ஆமாம், கி.ஆ.பெ. விசுவநாதத்தை உனக்கு முதலில் தெரியுமா? அல்லது என்னை முதலில் தெரியுமா?' என்று கேட்டார். 'ஏன்? உங்களைத்தான் முதலில் தெரியும்' என்றேன். "அப்போ, அவர் விலகிக் கொண்டால் நீயும் அவரைப் பின்பற்றி ஏன் விலகிக் கொண்டாய்? ஒருவேளை உனக்கு நெல் அனுப்ப மாட்டாரா?" என்றார். "உள்ளுக்காரர், பெரிய மனிதர். ஒருவேளை எனக்கு அனுப்பும்படியை நிறுத்தவிடவும் கூடும்" என்று பதில் சொன்னேன். இதற்கு மேல் அவரிடம் பேச ஒன்றுமில்லை. சற்றுப் பொறுத்து நான் இப்பொழுது பேசலாமா?" என்று கேட்டேன். "பேசு" என்றார்.

"யாரை முதலில் தெரியும் என்றல்லவா கேட்டீர்கள். உங்களையும் எனக்கு முதலில் தெரியாது. உங்கள் கவிதைகளைத்தான் முதலில் தெரியும். அதைத் தெரிந்து கொண்ட காரணத்தால் தான் உங்களைத் தெரிந்து கொண்டேன். ஆகையால் எனக்கு யாரும் படியளக்க வேண்டியதில்லை. உங்கள் தயவும் எனக்கு வேண்டியதில்லை. விசுவநாதம் எழுதிய கடிதங்களுக்கு நீங்கள் ஒரு விடையும் தராமல் வாளாவிருந்து விட்டீர்கள். மனம் நொந்த அவர், குழுவிலிருந்து விலக முடிவு செய்தது மிகவும் சரியென்றும், விழாக் குழுவையே நீங்கள் அவமதித்து விட்டீர்கள் என்றும் எனக்குப்பட்டது. எனவே நாங்கள் அனைவரும் இதிலிருந்து விலகிக் கொள்வது என்று முடிவு செய்தோம். ஆயினும் உங்கள் கவிதைகள் என்னிடம் உள்ளன. அவற்றை நீங்கள் ஒன்றும் செய்ய முடியாது. உங்களைக் காட்டிலும் உங்கள் கவிதைகளே எனக்கு அதிகம் மதிப்புடையவை" என்று வேகமாகப் பேசினேன்.

சாய்வு நாற்காலியிலிருந்து கவிஞர் துள்ளியெழுந்தார். வழக்கம் போல் முழங்கால் வரையிலும் வேட்டியைச் சுருக்கிப் பிடித்துக் கொண்டார். சுற்றியிருந்தவர்களைப் பார்த்துச் சொன்னார்.

"அவண்டா தமிழன்-நீ வேண்டியதில்லை, உன் கவிதை எனக்குப் போதும் என்று சொல்கிறானே. அவன் மறத்தமிழன். அவன் அஞ்சா நெஞ்சுடையவன்" என்றார். மறுபடியும் என்னை இழுத்து அருகில் அமர்த்திக் கொண்டார்.

பாவேந்தர் என்னுடன் உணவருந்தினார். தாழ்வாரத்தில் ஒரு பாயைக் கொண்டு வந்து போட்டு இளைப்பாறச் சொன்னார். சிவாஜியின் பதினேழாவது ஆண்டு மலர் வெளியாக வேண்டிய தருணம். அதற்கு ஒரு கவிதை எழுதித் தருமாறு கேட்டுக் கொண்டேன். 'சரி நீ கொஞ்சம் தூங்கு. நான்கு மணிக்கு எழுப்புகிறேன்' என்றார்.

உதட்டில் சூடுபட்டு விழித்துக் கொண்டேன். என் தலைமாட்டில் இடது கால் மண்டியிட்டு உட்கார்ந்து கொண்டு, தமது இடது கையால் என் கழுத்தில் கைகொடுத்துத் தூக்கி காப்பி நிறைந்த கோப்பையை என் உதடுகளில் வைத்துப் பருக வைத்தார். "கழுதை! என்ன இப்படி ஒரேடியாத் தூங்குகிறாயே! அரவிந்தாச்ரமம் போக வேண்டுமென்று சொன்னாய், உடனே போய் வந்துவிடு. நேரமாகி விட்டால் கதவு மூடி விடுவான்' என்று வாசலில் தயாராக இருந்த வண்டியில் என்னை அனுப்பி வைத்தார்.

திரும்பி வந்தபோது மாலை 6 மணியாகி விட்டது. "பாட்டு வேணு மிண்ணு கேட்டியே இந்தா" என்று ஒரு தாளை நீட்டினார். அதில் என்னையும் சிவாஜியையும் பாராட்டி எழுதியிருந்தார். நான் மலருக்குக் கவிதை கேட்டால், என்னைப் பற்றி எழுதியிருக்கிறீர்களே!" என்றேன்.

"முட்டாளு! உனக்கு என்ன பஞ்சம் தெரியுமா? பணப் பஞ்சமில்லே. புகழ்ப் பஞ்சம். உன் பெருமை ஒரு பயலுக்கும் தெரியாது. நான் தாண்டா அதை நாலு பேர் அறியச் சொல்லனும். சும்மாப் போடு. என் கையெழுத்திலே போட்டிருக்கிறேன்'' என்றார். அவரது குழந்தை மனத்தையும் அன்பின் பெருமையையும் கண்டு மெய் சிலிர்த்தேன்.

சிவாஜியின் பதினேழாவது ஆண்டு மலரில் வெளியான அந்தப் பாடல் பின்வருமாறு:

எழுத்தெல்லாம் புதியநடை
எண்ணமெலாம் தன்னுடைமை
எனவே நாட்டின்

பழுத்த பொதுத் தொண்டு செய்வான்
தீருலோக சீதாராம்
பரப்பும் ஏடு

வழுத்துமோர் சிவாஜியெனல்
வண்டமிழ்நா டறியுமந்த
மைந்தனுக்குத்

தழைத்ததுவாம் பதினேழாண்
டென்றுரைத்தால் மகிழாத
தமிழ ருண்டோ?

இவனுயர்ந்தான் அவன் தாழ்ந்தான்
என்னும் இன வேற்றுமையோர்
அணுவும் இல்லான்

எவன் பொதுவுக்கு இடர் சூழ்ந்தான்
அவன் தாழ்ந்தான் அஃதில்லான்
உயர்ந்தான் என்று

நுவல்வதிலே திருலோகன்
அஞ்சா நெஞ் சன்தக்க
நூற்கள் ஆய்ந்தோன்

அவனெழுதும் சிவாஜியெனும்
வாரத்தாள் வாழிய பல்
லாண்டு நன்றே.

பல்லேடும் கூடியொரு
பழந்தமிழின் சீர்த்தியினை
மறைக்கு மாயின்

வில்லோடும் அம்போடும்
வரும் பகையைத் தனிநின்று
வீழ்த்து வான்போல

சொல்லோடும் பொருள் சிறக்கத்
தூய் தமிழின் சீர் சிறக்க
எழுது கின்ற

நல்லேடாம் சிவாஜிக்கு
நல்லாசான் திருலோகன்
நாளும் வாழ்க!

மணிவிழா நாங்கள் அஞ்சியே படியே ஆயிற்று. தஞ்சாவூரில் எதுவும் நடக்கவில்லை. திருச்சி தேவர் ஹாலுக்கே மாற்றி விட்டார் யதார்த்தம். நாடகங்கள் போட்டார்கள் வசூல் ஒன்றும் சரியாக இல்லை. பாரதிதாசன் குடும்பத்தோடு அசோக் பவனில் முகாமிட்டார். பரிவாரங்கள் அதிகம். ஹோட்டல் செலவுக்கே வசூலாகவில்லை. பாரதிதாசன் மனவேதனைப்பட்டார். ஓட்டலைக் காலி செய்துவிட்டுத் திருவானைக் காவல் ரெங்கூன் ரெட்டியார் சத்திரத்துக்கு வந்து விட்டார்.

விழாவுக்கு மூன்றே நாட்கள் இருக்கின்றன. பாரதிதாசனுடைய புதல்வர் மன்னர் மன்னனும், மருகர் கண்ணப்பரும், கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களிடம் சென்று நிலைமையைக் கூறினார்கள். அவர் இவ்விஷயத்தில் கலந்து கொள்வது இயலாத காரிய மென்பதைத் தெரிவித்துவிட்டார்.

பின்னர் "கவிஞரிடம் என்ன போய்ச் சொல்வது?" என்று கேட்டார்கள். "கவிஞனாக இருப்பது வேறு; மனிதனாக இருப்பது வேறு என்று, விசுவநாதம் கூறுகிறார் என்று போய்ச் சொல்லுங்கள்" என்று கூறிவிட்டாராம். விழாக் குழுவிலிருந்து தாம் விலகிக் கொண்டதாக முன்னமே அறிக்கை விட்டிருந்தபடியால், மறுபடியும் இதில் கலந்து கொள்வது பொது மக்களிடையே தம்மைப் பற்றிய முரண்பட்ட கருத்துக்களுக்கு இடம் கொடுக்குமென்று எண்ணியிருக்க வேண்டும். கவியரசரிடம் முத்தமிழ்க்காவலர் கொண்டிருந்த எல்லையற்ற மதிப்பும், பரிவும் நாடறிந்தவை. எனினும் மணிவிழாவில் அவர் கலந்து கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விட்டது, அவருக்கே வேதனையாக இருந்திருக்கும்.

இதற்கு மேலும் பார்த்துக் கொண்டிருப்பது என்னால் இயலவில்லை. அரு. ராமனாதன் அவர்களைச் சந்தித்துப் பேசினோம். விழாவை எப்படியாவது சிறப்பாகக் கொண்டாடி விடுவது என்று தீர்மானித்தோம்.

உடனே அவசர அவசரமாக அழைப்பிதழ் அச்சிட்டு வழங்கி, முன்னர்த் திரட்டிய நிதியில் ஆயிரத்துக்குச் சற்று அதிகமாகவே தொகை எங்களிடம் இருந்ததை அவருக்குக் காணிக்கையாக்கிப் பொன்னாடை போர்த்திச் சிறப்புடன் விழாவைக் கொண் டாடினோம்.

குழந்தையைப் போன்ற இனிய எளிய சுபாவம் படைத்த பாவேந்தர், முன் கோபம் உடையவர். கோபம் வந்து விட்டால் யாரும் எதிரில் போக முடியாது. அனுசரித்துப்போக மாட்டார். இதனால் இவரை அணுகிப் பாராட்ட முன் வந்த பலர் பின்னர் இவரை விட்டுப் பிரியும் சந்தர்ப்பங்களும் வந்ததுண்டு. புதுவை அரசியலில் முக்கியமான பங்கும் பெற்றிருந்தார். ஆண்டுதோறும் பாரதி விழா நடத்தினார். ஒரு சமயம் பாரதியாரின் புதல்வியரும் நானும் அந்த விழாக்களில் சென்று கலந்து கொள்ளும்படி செய்தார்.

பாரதியாரைப் பற்றிய அவரது நினைவுகளை நான்கைந்து பதினைந்து நிமிஷப் பேச்சுக்களாகத் திருச்சி வானொலியில் ஒலிப் பதிவு செய்து வைத்திருக்கிறார்கள். பாரதியின் பெருமையை

விளக்கிப் பேசுவதற்கு அவரை விடச் சிறந்த விமர்சகர் யாரும் இல்லை. 'பாரதி உலக கவி' என்ற பாடல் ஒன்று போதும். அவருடைய பிற்கால எழுத்துக்கள் பிரச்சார நோக்கம் கொண்டவை. பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி, குடும்ப விளக்கு, அழகின் சிரிப்பு, எதிர்பாராத முத்தம் போன்றவை அழியா வரம் பெற்ற உயர்ந்த கவிதைகள்.

உலகியலில் ஒத்துப் போகத் தெரியாததால் இறுதிக் காலத்தில் பாரதிதாசன் மகிழ்ச்சியுடன் இருக்கவில்லை. வழக்கம்போல் கவிஞர் மறைந்த பின் பெருஞ்சிறப்புகள் நடைபெறுகின்றன. அவர் மறைந்த பின் சாகித்ய அகாடெமி அவரது நூலுக்கு பரிசு வழங்கிற்று. இதோ அவருக்குப் புதுவை அரசாங்கம் நினைவுச் சின்னம் எழுப்புகிறது. அவரது துணைவியாருக்கு ஓரளவு உதவியும் செய்கிறார்கள். தமிழ் மக்கள் நன்றியுள்ளவர்கள்.

பாவேந்தருடன் ஒரு நாள்

கவிஞர் மணிவேலன், எம்.ஏ.,

அதிகன் ஆண்ட தகடூர் நாட்டு அரூரில் ஆசிரியர் பணிபுரியும் கவிஞர் மணிவேலர் குழந்தைக் கவிதையும் குமரர் கவிதையும் கைவரப் பெற்றவர். இனிக்கப் பேசும் தனித் தமிழ் நண்பர்; இலக்கிய ஆராய்ச்சி செய்து வருபவர்.

ஆங்கில மேதை ஜான்சனோடு பாவேந்தரை இவர் ஒப்பிடும் அழகு படிக்கப் படிக்கச் சுவை பயக்கிறது. பாவேந்தரோடு தாம் பழகிய ஒருநாளை, இக் கட்டுரையில் திருநாளாக்கிக் காட்டியிருக்கிறார்.

"நான் ஒருநாள் காலை விழித்தெழுந்தேன்; நான் புகழ் பெற்று விட்டேன் என்பதை அறிந்தேன்" (I awoke one morning and found myself famous) என்று கூறினான் ஆங்கிலப் பாவலன் பைரன். அவன் எழுதிய நூலாகிய Childe Herold வெளியானவுடன், எல்லா ஏடுகளும் பைரனைப் பற்றியும் அவன் நூலைப் பற்றியுமே எழுதியிருந்தன! எனவே அவனுடைய நூல் எப்படியிருக்கும்-நடை எவ்வாறு கவரும் என்பதை யாவரும் அறிந்து கொள்ளலாம். இந்தப் பாவலனின் நடையில் எளிமையும் உணர்ச்சியோட்டமும் கைகோர்த்துச் செல்வதைக் காணலாம். அவனுடைய பாக்கள் உள்ளத்தைக் கவருவதைப் போலவே அவன் தோற்றமும் கவரும்!

தமிழிலே, 'பாரதிதாசன் கவிதைகள்' என்ற நூல் வெளி வந்தது. தமிழகத்தின் பட்டி தொட்டிகளிலெல்லாம் அவர் புகழ் பரவி விட்டது. இந்தக் காலத்தில் 'நான் இத்தனைப் புதினங்கள் எழுதியுள்ளேன்' என்று எண்ணிக்கையைக் காட்டித் தம்மைத்தாமே

விளம்பரப்படுத்திக் கொண்டாலும் சிலரை மக்களுக்குத் தெரியாது. பாவேந்தரின் நடையழகும் உடலழகும் போட்டி போடும்.

இந்த இரண்டு பாவலர்கள் மீதும் எனக்கு அளப்பரிய காதல். இந்தக் காதலுக்கு 'ஒருத்திக்கு ஒருவன்' என்ற வரையறை இல்லை.

சில பாட்டிக் கதைகளில், இளவரசி ஏதாவது ஓர் இளவரசனின் வில், வாள் திறமையைக் கேட்ட அளவிலேயே காதல் கொண்டு விடுவதுண்டு. அதேபோன்று பாவேந்தரின் பாடல்களை இளமையிலேயே படித்துப் படித்துக் காதல் அரும்பக் கூடாத பருவத்திலேயே எனக்கு அரும்பிவிட்டது.

1952ஆம் ஆண்டு பாவேந்தர் சேலம் 'மாடர்ன் தியேட்டர்ஸ்' நிறுவனத்துக்காகத் திரைப்பட உரையாடல் எழுத வந்து தங்கியிருந்தார். 'மார்டன் கேஃப்' என்ற விடுதியில் தங்கியிருப்பதாகக் கேள்விப்பட்டு நானும் சில நண்பர்களும் அவரைக் காணச் சென்றோம். நாங்கள் அவர் தங்கிருந்த அறையை நெருங்கிக் கொண்டிருந்தோம். உண்மையிலேயே பாசுவல் (Boswell) என்பவர் சாமுவேல் சான்சன் (Samuel Johnson) என்ற அறிஞரைப் பார்க்க எதிர்பார்த்துக் கொண்டு டேவிசு (Davies) என்பவருடன் இருந்தபொழுது அவர் மனநிலை எப்படியிருந்ததோ அப்படியே இருந்தது எனக்கும்! சான்சன், இவர்கள் இருந்த இடத்தை நோக்கி வருவதைப் பார்த்து டேவிசு... ஆம்லத் நாடகத்தில் ஒரேசியோ (Horatio) ஆம்லத்தின் தந்தையுடைய ஆவியை அவனுக்குச் சுட்டிக் காட்டிக் கூறுவதுபோல் 'Look my lord, it comes' என்று நாடக முறையில் கூறியதாகக் கூறுவதுண்டு. அதேபோன்று நாங்கள் அவருடைய அறையை நெருங்கும்போது திடுமென வெளிப்பட்டார்; எங்கோ வெளியில் புறப்பட்டு விட்டார். டேவிசு கூறியதைப்போல் என் நண்பர், 'அதோ... அதே தான்!' என்றார். என் நண்பர் இப்படிக் கூறியது எனக்குத் தூக்கி வாரிப் போட்டது! அவர் விளக்கஞ் சொன்னார்.

"எல்லாப் புலவர்களுமே கிறுக்குப் பிடித்தவர்கள்தாம்! ஆங்கிலப் புலவனும் இதற்கு விதி விலக்கல்லன்! போப் என்ற புலவரைப் பற்றிப் போலிங்புரூக் என்ற அம்மையார் என்ன கூறியிருக்கிறார் தெரியுமா? "அவர் சில வேலைகளில் அமைதியே உருவாக இருப்பார்; வேறுசில வேளைகளில் குரைப்பார்!" (Some times he is polite and some times barks like a dog).

"அப்படியானால் பாரதிதாசனும் நாம் போய்ப் பார்த்தால் எரிந்து விழுவாரா?"-இது என் ஐயவினா.

"அத்தோடு விட்டால் போதும்!"-இது என் நண்பரின் விளக்கம். இது நடந்த பின்னும் அவரைப் பார்த்துப் பேசிப் பழக வேண்டும் என்ற எண்ணம் மட்டும் குறையவே இல்லை. 'ஆசை வெட்கமறியாது' என்று நாட்டுப்புறத்தில் ஒரு பழமொழி உண்டன்றோ?

1962 மே 16ஆம் நாள்! சென்னைத் தியாகராயநகர் இராமன் தெருவில் குடியிருந்த வீட்டுக்கு அவரைப் பார்க்க கிளம்பினேன். பத்தாண்டுகளுக்கு முன்னர் என் நண்பர் காட்டிய 'பூச்சாண்டி' என் மனத்திரையில் நிழலாடியது. பாசுவல் தம்மை முதன் முதலில் சந்திக்க வந்தபோது சான்சன் அவரை எவ்வளவு மானக்கேட்டைச் செய்தார்! ஆனால் அவர் விட்டாரா? அவருடைய உயிருக்குயிரான நண்பராக, அவரது வாழ்க்கை வரலாற்றை எழுதும் ஆசிரியராக பாசுவல் மாறிவிடவில்லையா? இந்த வரலாற்றைப் படித்திருந்த துணிவு 'பூச்சாண்டி'யின் மீது மின்னொளியைப் பாய்ச்சியது.

நான் புறப்படும்போது என் உறவினர் ஒருவர் 'எதற்கும் தெரிந்த வரை அழைத்துப் போங்கள்; அவர் ஒருமாதிரி..." என்று சொன்னார். நான் காதில் போட்டுக் கொள்ளவில்லை. திடீரென்று மழைப்பிடித்துக் கொட்டத் தொடங்கியது. பாதி நனைந்து ஒதுங்கி நின்றேன். மழை சிறிது நின்றதும் வீட்டை நோக்கி நடந்தேன். வீட்டு முகப்பில் "பாரதிதாசன் பிக்சர்ஸ்" என்று பெயர்ப்பலகை தொங்கிக் கொண்டிருந்தது! - அதாவது தூக்குப் போட்டுக் கொண்டிருந்தது.

வீட்டின் தாழ்வாரத்தில் ஒருவர் 'குயில்' ஏடுகளை முகவரி எழுதி விடுப்பதில் முனைந்திருந்தார்.

'பாதிக் குளியலுடன்' வந்து நின்ற என்னைப் பார்த்து "நீங்கள் யார்? என்ன வேண்டும்?" என்றார் அந்த இளைஞர்.

"என் பெயர் மணிவேலன்..." சொற்றொடரை முடிக்கவில்லை.

"நீங்களா அது? குயிலில் "தென்னைப் பெண்ணே!" என்ற பாடலை எழுதியிருக்கிறீர்களே... அவரா?"

"ஆமாம்!"

"நான்தான் பொன்னடியான்; பாவேந்தரின் உதவியாளன்."

"இங்கேயே சிறிது நில்லுங்கள்; பாவேந்தர் விழித்துக் கொண் டிருக்கிறாரா என்று பார்த்து விட்டு வருகிறேன்', - பொன்னடியான் உள்ளே சென்றார்.

எனக்கு வியப்பு! நான் எழுதிய பாடலைக் கூட நினைப்பு வைத்திருக்கிறாரே இந்த இளைஞர்! பாவேந்தர் அந்தப் பாடலைப்

படித்திருப்பாரோ? அந்தப் பாடலை மீண்டும் நினைவுக்குக் கொண்டு வந்தேன். தான் பெற்ற குழந்தையின் முகத்தை எத்தனைமுறை பார்த்தாலும் தாய்க்குச் சலிப்பதில்லை! அப்படித்தானே பாவலனுக்கும்?

ஓலையெனும் கூந்தலினை விரித்துவிட்டே
உலர்த்துகிற தென்னையெனும் பெண்ணே! நீதான்
காலையிலே குளித்தெழுந்து நிற்கின் றாயோ?
கன்னியர்கள் சிலபோர்கள் நாக ரீகச்
சேலையெனும் பெயராலே அங்க மெல்லாம்
தெரிகின்ற மெல்லாடை உடுத்தல் கண்டோ
சோலையிலே வெட்கமின்றி பன்னா டையைச்
சுற்றிக்கொண் டிருக்கின்றாய்! நாண மில்லை?

என் நினைவிலே இப்பாடல் வரிவரியாக வந்து கொண்டிருந்ததைப் படித்துச் சுவைத்துக் கொண்டு (என்முதுகில் நானே தட்டிக் கொண்டு) இருந்தபோது பொன்னடியான் 'உள்ளே வாருங்கள்' என்றார்.

'உள்ளே' போகச் சொன்னாலே சிலபேருக்கு வரும் நடுக்கத்தை நான் நன்கு உணர்ந்தேன்.

பாவேந்தர் அமர்ந்திருந்தார்! அவரைப் பார்த்தேன்! ஆமாம் பார்த்தேவிட்டேன்! சான்சனை நேரில் முதல் முதல் பார்த்ததைப் பற்றிப் பாசுவெல், "பூதத்தை அதன் குகையிலே பார்த்தேன்!" (I found the giant in his den) என்று இவருக்கு முன்னரே மறைத்திரு பிளேயர் கூறிய அதே சொற்களைக் கூறினார்! அதே போன்று தான் நானும் கூறுகிறேன்.

அவரைப் பார்த்தேன்! அடுத்து அவருடைய மிசைப் பலகையைப் பார்த்தேன்! மருந்து-மாத்திரைகள்; வெண்சுருட்டுகள்; மூக்குக் கண்ணாடி; தூவல்; பொடிப்பேழை மற்றும் பல. பாவேந்தரே உரையாடலைத் தொடங்குகிறார்:

"தம்பி? நீ எங்கிருந்து வருகிறாய்?..."

"நான் தருமபுரி மாவட்டத்திலிருந்து"

"தருமபுரியா? நான் வந்திருக்கிறேன்... உட்கார்". நான் தயங்கிக் கொண்டே அமர்கிறேன்.

"பொன்னடி சொன்னான், உன் பெயர் மணிவேலன் என்று! நீ எழுதிய 'தென்னைப்பெண்ணே' என்ற பாடலைப் படித்தேன். அப்படித்தான் எழுத வேண்டும். இப்பொழுது நிறையபேர் கவிதை எழுதுகிறார்கள். முன்பெல்லாம் எல்லோரும் கடவுளைப் பற்றியே

எழுதினார்கள்; இப்பொழுது எல்லோரும் காதலைப் பற்றியே எழுதுகிறார்கள். நீ தான் இயற்கையைச் சுவைத்து எழுதியிருக்கிறாய். கழுதையைப் பற்றி எழுதினாலும் காப்பியச் சுவையோடு இருக்க வேண்டும்" நான் தலையை மட்டும் ஆட்டினேன்.

"நூல்கள் ஏதாவது, எழுதியிருக்கிறாயா?"

ஆகா! இந்தக் கேள்வியைக் கேட்டதும் பாலில் பழம் நழுவிய கதையாக இருந்தது எனக்கு. ஏனெனில் 'மழலை இன்பம்' என்ற கையெழுத்துப் படியைச் சிறப்புரை பெறவே எடுத்துச் சென்றேன்.

கையிலிருந்த-இல்லை, பையில் மறைத்து வைத்திருந்த ஏட்டை நீட்டினேன். மூக்குக் கண்ணாடி ஏறியது; அதில் என் பிழை 'உருப் பெருக்காடியில் தெரிவதுபோல் தெரியப் போகிறது! நண்பர்கள் சொன்னபடி நமக்கு மரியாதை நடக்கப்போகிறது' என்று அவர் முகத்தையே படித்துக் கொண்டிருந்தேன்.

"நன்றாக எழுதுகிறாயே!... ஆனால் இதோ... இங்கேபார்.. குற்றியலுகரத்தைப் பிரித்துப் போட்டிருக்கிறாய். புணர்ச்சியில் ஓராசை குறைகிறது. இது தவறு. இப்படி வரும்போது ஏகாரத்தைச் சேர்த்து விடு!"

தலையை மட்டும் சாமி மாட்டைப் போல் ஆட்டினேன்.

"வல்லெழுத்துக்கள் மிகும் இடங்கள் இன்னும் உனக்குச் சரியாகத் தெரியவில்லை: (சில நூற்பாக்களைக் கூறி) இவற்றைப் படி; பெயரெச்சத்தில் வல்லெழுத்து மிகாது; ஆனால் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தில் மிகும்..."

ஆகா! நான் பெற்ற பேறுதான் என்னே! எனக்கு ஆசிரியராய் இலக்கணம் கற்பிக்கிறார்! நான் கற்கிறேன்! இதை மறக்க முடியுமா?

"நீ கையெழுத்தேட்டைக் கொண்டு வந்ததுதான் சரி! அப்பொழுது தான் பிழைகளைத் திருத்தி உண்மையான சிறப்புரை வழங்க முடியும்... இதைப் பார்!... ஒரு நூலை எடுத்துக் கொடுக்கிறார்; நான் வாங்கிப் பார்க்கிறேன். ஒரு தமிழ்ப் பேராசிரியர் எழுதிய பாடல் தொகுப்பு. அச்சிடப்பட்டுள்ளது... (பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை.)

இவன் தமிழ்ப் பேராசிரியன்! எவ்வளவு பிழைகள்! அச்சிட்ட பின் எப்படித் திருத்துவது? சிறப்புரை கொடுக்கவில்லையானால் இவன் பெரிய பாவேந்தன்!... முரடன்!' என்பான்?"

என்னுடைய நூலைப் படித்துத் திருத்தி விட்டார்.

"தம்பி! குயிலில் சேர்ந்து பணி செய்கிறாயா?"

"எனக்குக் குடும்பம் இருக்கிறது."

"... மாலை (சிறிது மோனநிலை) முழுநேரத் தமிழ்த் தொண்டனாக நீ மாற வேண்டும்...

....சிறப்புரை எழுதி உனக்கு அனுப்பி விடுகிறேன்.. நீ போ... ஆனால்...."

நான் திகைத்தேன், என்ன நடக்கப் போகிறதோ என்று,

"நீ இனிமேல் யாரிடமும் முகவுரைக்காக அலையாதே...! முடவனுக்குத்தான் ஊன்றுகோல் தேவை!"

இதைச் சொன்னவுடன் நான் விடைபெற்றுக் கொண்டேன். உண்மையிலேயே தமிழக அரசு நடத்தும் பரிசுச் சீட்டில் ஓரிலக்கம் உருபா எனக்குக் கிடைத்திருந்தாலும் அவ்வளவு மகிழ்ச்சி ஏற்பட்டிருக்காது! அப்படித் திரும்பினேன்!

"நீ முழு நேரத் தமிழ்த் தொண்டனாக மாற வேண்டும்" - இது என் செவியில் இன்னும் எதிரொலிக்கிறது! நான் கண்டிப்பாக இன்னும் மாறவில்லை! காரணம் எனக்கு வயிறு என்று ஒன்று இருக்கிறது! அதுமட்டும் இருந்தால் கூடத் 'தாழ்வில்லை! என் மனைவி மக்களுக்கும் வயிறுண்டு!"

இழந்த செல்வம்

டாக்டர்
தி. முருகரத்தினம்

பரபரப்புக்கும் பாராட்டுக்கும் காரணமான பல அறிஞர்களையும், அரசியல்வாதிகளையும் உருவாக்கிய பச்சையப்பர் கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றவர் முருக ரத்தனம்.

இன்று தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும் தமிழ் தலைமை நடத்தும் அறிஞர் மு.வ.வின் மாணவர் படைவரிசையில் முன்னணி வீரர்.

கொங்கு நாட்டுச் சேர்வராயன் மலைச்சாரலில் பிறந்து மதுரைப் பசுமலையின் அடிவாரத்தில் காதலித்துக் குடியேறியவர்.

அறிஞர் அண்ணாவின் முயற்சியால் நிறுவப்பட்ட மதுரைப் பல்கலைக்கழகத் திருக்குறள் ஆய்வகத்தின் இந்நாள் இணைப் பேராசிரியர், நூலாசிரியர், மொழியாராய்ச்சி வல்லுநர்.

எனக்குப் பாவேந்தர் பாரதிதாசனார் நினைவு ஓர் இனிய கனவு. அவரோடு நான் கொண்ட உறவு பெருமைக்கு உரியது மட்டுமல்ல; எனக்குப் பெருமிதம் தருவதும் ஆகும். திருவள்ளுவர் தந்த முப்பாலை ஆராய்வதன் வழித் தமிழினத்தின் தலைமகனாம் அவரோடு என்னை உறவுபடுத்திக் கொள்வதில் எனக்கு எவ்வளவு பெருமையும் பெருமிதமும் ஏற்படுகின்றனவோ, அவ்வளவு பெருமையும் பெருமிதமும் பாவேந்தரோடு எனக்கேற்பட்ட உறவால் உண்டாகின்றன. அவர் இந்த நூற்றாண்டின் இணையற்ற பாவலர்; பாட்டிலக்கியத்தில் முடிசூடா மன்னர். யாருக்குத்தான் அவர் உறவு பெருமிதம் தராது?

பாவேந்தரோடு உறவு சிறியதுதான்; ஒரு சில சந்திப்புகள் கொண்டதே; நீண்டகால இடைவெளியும் கொண்டது; ஆனால் அரியது; நான் நினைவில் கொண்டு போற்றி வைத்தலுக்கு உரியது. வறியோன் வயிரமாலை ஒன்றை போற்றிப் பேணுவது போன்றது அது.

1950 முதல் 1956 வரையிலான காலம் அது; தமிழுணர்ச்சி வெள்ளம் போல் பாய்ந்து பரவிய காலம். தமிழ் தவிர வேறு ஒன்றும் அறியாத ஒருமை உள்ளம் அன்றைய என் உள்ளம். ஓரளவு தமிழ் வரலாறு தெரியும். ஒரு சிறிது தமிழ் இலக்கண இலக்கியம் தெரியும் தமிழுணர்ச்சியின் ஊற்றுக்களான மறைமலை, பெரியார், அண்ணா என் ஆசான்கள். அவ்வியக்கத்தின் போர்ப்பாவலர்-செயங்கொண்டார் பாரதிதாசன்; அவர் பாட்டும் உரையும் எனக்குப் பாடம். தமிழ் வாழ்வு பகுத்தறிவுக் கொள்கை. தமிழால் ஈர்க்கப்பட்டுத் தமிழ் பயில எண்ணம் கொண்டிருந்தேன். முனைவர் மு.வ. புகழ் தெரியும்; மு.வ. நூல்கள் அறிமுகம். பைந்தமிழைப் பற்றோடு கற்பிக்கும் பச்சையப்பன் கல்லூரியில் மு.வ. நிழலில் விரும்பிச் சென்று தங்கித் தமிழ் படித்தேன். 1953 முதல் 1956 வரை பி.ஏ. (ஆனர்சு)

கொள்கையாராட்சி கட்சிக்கூட்டங்கள்... காட்டாற்றுப் போக்கில்லை; சமவெளியாற்றுப் போக்கு.

இந்நிலையில் சென்னைக்கு வந்திருந்த பாரதிதாசனாரை என் இனிய நண்பர் ஒருவரோடு காணச் சென்றேன். பச்சையப்பன் கல்லூரியில் பேசுவதற்கு அழைத்தல் நோக்கம்.

கவிஞர் அமைதியாக வரவேற்றார்; தயங்காது ஒத்துக் கொண்டார். அது அவருக்குச் சாதாரண வாழ்க்கைப் போக்கு, ஆனால் எங்கள் கல்லூரிக்கு வருவதி ் அவருக்கு வருமானம் ஒன்றும் இல்லை. இளைஞருடன் கலந்துரையாடலில் அவருக்கு இன்பம். அவரைக் கண்டு பேசியதில் எனக்கும் பெருமகிழ்ச்சி; ஒரு பெருங்கவிஞரை எளிதிலே கண்டுவிட்ட பெருமிதம்.

கவிஞர், 'பச்சையப்பன் கல்லூரியில் யார் தமிழ்த்துறைத் தலைவர்' என்று வினவினார். 'டாக்டர் மு.வரதராசனார்' எனப் பெருமையோடு கூறிக் கொண்டேன். உடனே அவர் 'யார்? அந்தக் கரியனா' என்றார். எனக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. நான் மதித்துப் போற்றும் பேராசிரியரை ஆண்பால் ஒருமையால் கூறிப் பெயர் கூடச் சுட்டாது எளிய பட்டப் பெயர் வைத்துப் பாவேந்தர்

வழங்கிவிட்டாரே என்பது என் உள்ளத்தைத் தைத்தது. நிலவொளியினை மேகம் மறைப்பது போன்று தோன்றியது.

மு.வ.வுக்கும் பாவேந்தர்க்கும் நல்ல உறவு இருந்ததாகத் தெரியவில்லை? நட்பும் இருந்ததில்லை. சாதாரண அறிமுகம் மட்டுமே இருந்திருக்கிறது. இருவருக்கும் வேறுபாடு நிறைய உண்டு. பாரதிதாசனார் பகுத்தறிவுவாதி; தமிழியக்க முன்னோடி; பெரியார் பாசறைத் தலைவர். மு.வ. முன்னர் சைவசமயவாதி; பின்னர் சமரசவாதி; அரசியலில் காந்திய, தேசியவாதி. ஆகவே இருவர்க்கும் உறவு குறைவு. கவிஞர் கவியுலகக் குயில் பாட்டும் பண்பாடுமே வாழ்க்கையாகக் கொண்டவர்; மு.வ.வின் புதுத் தமிழியக்கம் கவிஞர்க்குப் புதிதே. கவிஞர் முதியர்; பெரியர்; அவர்க்கு எனத் தமிழ்ப் பேருலகில் பரந்த இடம் உண்டு. அவரைத் தமிழ் உலகம் புரட்சிப் பாவலர் எனப் போற்றியது. அத்தகையவர்க்கு மு.வ. எளியராகக் காட்சி தந்ததில் வியப்பில்லை. புரட்சிக் கவிஞர் யாரையும் எளிதாக நோக்கும் உயரிய தோற்றம் பெற்றவர். மு.வ. கரியமேனியராயினும் வெள்ளிய உள்ளமும் ஒள்ளிய அறிவும் கொண்டவர். நான் அமைதி கொள்வது கடினமாக இல்லை.

மற்ற தமிழாசிரியர்களைப் பற்றியும் கவிஞர் கேட்டார். அ.ச. ஞானசம்பந்தனாரைப் பற்றிக் கூறினேன். கவிஞர்க்குப் பழம் புராணங்கள் போற்றுவோரைப் பற்றி நல்லெண்ணம் இல்லை. பிறரைப் பற்றிக் கருத்துக் கூறுவதில் கவிஞர் சாதாரணமாகவே நடந்து கொண்டார்.

என் கல்லூரி நாட்களில் பாரதிதாசனாருடன் நெருங்கிப் பழகும் ஓர் அன்பரின் நண்பரும் என்னுடன் பயின்றார். அவர் லால்குடியைச் சேர்ந்தவர். பாரதிதாசனாருடைய பழக்க வழக்கங்களையும், வாழ்க்கை முறைகளையும் நான் அவர் வாயிலாகக் கேட்டதுண்டு. புதுவைப் பாரதிதாசனார்க்கு உள்ளூரில் மதிப்பில்லை என்று அவர் கூறுவார். தமிழகத்தின் பிற பகுதிகளில் மதித்துப்போற்றுவது போன்று அவருக்கு அவர் ஊரில் சிறப்பில்லையாம். அவர் வெளியில் சென்றுவிட்டு வரும்போது ரிக்ஷாக்காரரிடம் பூசலிடுவது சாதாரணமாம்! சென்னையில் கூட நான் அப்பண்பைக் கவிஞரிடம் கண்டேன்.

பின்னொருமுறை 1955இல் கவிஞரைக் கண்டேன். கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் அவர் பேசினார். திருக்குறளுக்குப் புத்துரை வகுத்துப் பேசினார் அவர். அவ்வுரை பற்றி அவரிடமே நேரில் கேட்டேன். 'திருக்குறள் உரையை ஏறத்தாழ எழுதி

முடித்துவிட்டேன்' என்றார் அவர். பின்னர் குயில் இதழில் 'வள்ளுவர் உள்ளம்' என்னும் பெயரில் அவ்வுரை விட்டுவிட்டு வந்து கொண்டிருந்தது. அவர் எல்லா குறட்பாக்களுக்கும் முழுவதும் உரை எழுதியிருந்தாரோ என்பது எனக்கு ஐயமாக இருந்தது. அவ்வுரை சில குறள்களுக்கு மட்டும் குயில் இதழில் வந்தது. பாரதிதாசனார் சில குறள் அதிகாரங்களுக்கு மட்டுமே முழுமையாகவும் முறையாகவும் உரை எழுதியுள்ளார் எனவும் பிற அதிகாரங்களுக்குத் திருக்குறள் நூலின் ஓரங்களில் எழுதப்பட்ட குறிப்புக்கள் மட்டுமே உள்ளன எனவும் அண்மையில் அறிந்தேன். இன்னும் அவ்வுரை வெளிவரக் காணேன். ஏமாற்றமே எனக்கு ஏற்பட்டது.

பாரதிதாசனார் திருக்குறளுக்கு எழுதிய புத்துரை பகுத்தறிவு நோக்கிலும் தனித் தமிழர் நோக்கிலும் எழுதப்பட்டது. திருவள்ளுவர் திருக்குறளைச் சாங்கிய நூல் அடிப்படையில் எழுதியுள்ளார் எனக் கவிஞர் அடிக்கடி கூறுவதுண்டு. பகுத்தறிவு வாழ்வு மேற்கொண்டு தமிழாசிரியராகத் தொழில் புரிய இருந்த எனக்குப் பாரதிதாசனார் புத்துரையைப் பரப்புவது பணியாக இருக்க வேண்டும் என்று அன்று எண்ணிக் கொண்டேன். ஆனால் அவ்வாய்ப்பு இன்னும் எனக்கு வாய்க்காதது. ஏமாற்றமாக உள்ளது.

என் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டுச் சேலம் கல்லூரியில் 1956இல் தமிழ் விரிவுரையாளன் ஆனேன். ஐந்தாண்டுகள் ஓடின. 1961இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் அறிஞர் மு.வ. மேற்பார்வையில் நான் ஆராய்ச்சி மாணவனாகச் சேர்ந்தேன். அவ்வாழ்க்கை மூன்றாண்டுகள். அப்போது பாரதிதாசனார் சென்னையில் நிலையாகத் தங்கித் தன் காவியமாகிய பாண்டியன் பரிசைப் பேசும் படமாக்கத் தொழிலகம் ஒன்றை அமைத்து முயற்சி மேற் கொண்டிருந்தார். என் அண்ணா முருகுசுந்தரத்துக்குப் பாரதிதாசனார் நன்கு அறிமுகம் ஆகியிருந்தார். அவர் வழியாக மருத்துவக்கல்லூரியில் பயின்று கொண்டிருந்த என் தம்பிக்கும் அவர் அறிமுகம் ஆனார். கவிஞரின் தித்திப்பு நீர் நோய்க்கு அவ்வப்போது என் தம்பியின் உதவி வேண்டியிருந்தது. இந்நிலையில் கவிஞருடன் மீண்டும் உறவு கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

1963இல் தியாகராய நகரில் கவிஞர் இல்லத்துக்குச் சென்றேன். அப்போது அவர் பங்களாவில் பின்கட்டில் குடியிருந்தார். பங்களா என்னும் வளமனையில் இருந்துவிட்டுக் கட்டுப்படியாகாத காரணத்தால் பின் கட்டுக்குக் கவிஞர் குடி வந்துவிட்டார் என்றறிந்தேன். மட்டமான குடியும் இல்லை. வளமான குடியும் இல்லை. பின் கட்டு வாழ்க்கை எனக்கு வருத்தம் தரவில்லை.

வளமனையில் இருந்து விட்டுக் கட்டாது பின் கட்டுக்கு வந்துவிட்டார் என்ற செய்திதான் என் நெஞ்சை உறுத்தியது. 'அவர் எண்ணி வந்தது கைகூடவில்லை; திட்டமிட்டது நடக்கவில்லை; ஆசை நிறைவேறவில்லை. ஏமாற்றம் அடைந்தார்; தவறு செய்துவிட்டார்; பட்டணம் வந்து கெட்டார்?' என்ற கருத்துக்கள் என் உள்ளத்தில் ஒன்று ஒன்றாக வந்தன. இவையே உள்ளத்தை வருத்தின. இவையெல்லாம் உண்மையே. பேசும் படத்துறையில் இவை வழக்கம். அங்கு ஆறிடுமேடு மடுவும் போலாம் செல்வம். கவலைப்படுவதற்கு ஒன்றும் இல்லை. ஆனால் கவிஞர் இதில் இறங்கியதே கவலை தந்தது. நெடுந்தேர், கடல் ஓடியது போன்றிருந்தது; நாவாய் நிலத்தோடியது போன்றிருந்தது. கவிஞர்க்குக் காவியம் உரியது. ஆனால் அதைப் படமாக்குதல் உரியதல்ல. கவிஞர் கலைஞர்; அரசியல்வாதி; வாழ்வின் இறுதிப்படியில் நின்று கொண்டிருப்பவர். 'இவருக்கு ஏன் இந்தப் படத் தொழில் பைத்தியம்? என்ற கேள்வியே என் உள்ளத்தில் எழுந்தது. அவர் முயற்சி தோல்வியில் முடிந்ததில் வியப்பில்லை!

கவிஞர் சிவாஜியையும் மற்றுஞ்சிலரையும் எதிர்பார்த்துச் சென்னை வந்திருந்தார். 'சிவாசி' புகழைக் குயில் கூவிக் கொண்டே இருந்தது. கத்தும் குயிலோசை காதில் பட்டால் மட்டும் போதுமா? கரையும் உள்ளம் வேண்டாமா?

கவிஞர் இல்லத்தில் தமிழ் இலக்கியச் சூழ்நிலையைக் கண்டேன். படத்தொழில் சூழ்நிலை ஒன்றையும் நான் காணவில்லை.

பாரதிதாசனார் தமிழகம் போற்றும் மாபெருங்கவிஞர். ஓர் அரசியல் தலைவர். தமிழ்த்தாயின் தவப்புதல்வர். ஆனால் அவர் இல்லத்தில் அவற்றுக்குரிய ஆரவாரத்தை நான் காணவில்லை. ஏமாற்றத்தின் இடையிலேயும் கவிஞருக்குக் கவலை உள்ளம் இருந்ததாக வெளித்தெரியவில்லை. ஒருகால் அது உள்ளூர இருந்திருக்கலாம்.

வேறொரு நண்பரும் அப்போது வெளியூரிலிருந்து வந்திருந்தார். கவிஞர் உணவருந்தும்படி வற்புறுத்தினார். வழக்கம்போல் அன்று மீன்குழம்பு. இல்லத்தரசியார் பழனியம்மாள் அப்போது அங்கிருந்தார்கள். இலக்கியப் பேச்சு நடைபெற்றுக் கொண்டிருந்தது. மனைவி நடமாடிக் கொண்டிருந்தார். அவரைச் சுட்டிக்காட்டிக் கவிஞர், 'இவளைப் பார்த்தால் எப்படிக் கவிதை வரும்?' என்று ஒரு போடு போட்டுவிட்டார்! கவிஞர் வேடிக்கையே பேசினார். நாங்களும் புன்னகை செய்து கொண்டோம். கவிஞர் இல்லறத்தைச் சுவை குன்றாமலே நடத்திக் கொண்டு வந்திருந்ததாக உணர்ந்தேன்.

1964ஆம் ஆண்டு தமிழர் திருநாளை ஒட்டிய ஒரு போது திருவல்லிக்கேணிக் கடற்கரையில் அமைந்திருந்த என் விடுதிக்கருகே கவிஞர் வந்திருந்தார். அவரை ஒருமுறை என் விடுதிக்கு அழைக்க எண்ணினேன். அவருக்குப் புலால் உணவு விருப்பமானது என்பதை நான் அறிந்திருந்தேன். உணவகத்துக்கு நானே பொறுப்பு. 1964 பிப்ரவரி மாத விருந்தில் வான்கோழிப்புலவு வைத்துக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது. கவிஞரிடம் எங்கள் விருந்துக்கு வருமாறு வேண்டிக் கொண்டேன். வருவதாக உடனே ஒத்துக் கொண்டார். என் அழைப்பைப் பற்றி மகிழ்ச்சியும் அடைந்தார்! 'என்ன சிறப்புணவு' என்று கேட்டார். 'வான்கோழிப்புலவு' என்றேன். அவருக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி.

விருந்து நடைபெற்ற அன்று கவிஞரை அழைக்கத் தியாகராயநகர் சென்றேன். அவர் காத்திருந்தார். வீட்டிலிருந்து குறுக்குத் தெருவைக் கடந்து பெருந்தெருவிற்கு நாங்கள் வந்தோம். தியாகராய நகரிலிருந்து மரீனாக் கடற்கரையில் உள்ள எங்கள் விடுதிக்கு வாடகை வண்டியில் (Taxi) கவிஞரை அழைத்து வரத் திட்டமிட்டிருந்தேன். இடையில் ரிக்ஷாக்காரன் ஒருவன் தலையிட்டான்; வற்புறுத்தினான். எனக்குச் சினம் ஏதுமில்லை. கவிஞருக்குச் சினம் பொங்கிவந்துவிட்டது. ரிக்ஷாக்காரனை அடிக்கக் கையை ஓங்கிக் கொண்டு சென்றுவிட்டார். எளிதிலே சிறுபொருளுக்கும் அவர் சீற்றம் கொண்டார் என்பது இதனால் தெரியவந்தது.

விடுதியில் கவிஞர் அருகே அமர்ந்து அவருக்கு வேண்டியதைப் பரிவுடன் வழங்கிக் கொண்டிருந்தேன். 'வான்கோழிப் புலவு நன்றாக இருந்தது என்று அவர் பாராட்டினார். ஆனால் குழந்தையைப் போல மிக மிகச் சிறிதே உண்டார். அது எனக்கு ஏமாற்றத்தையே அளித்தது. அந்த வயதில் சிறிதளவே உண்ணுதல் அவருக்கு வழக்கம் போலும்.

உணவை முடித்துவிட்டு மாடியில் உள்ள என் அறைக்குச் சென்றோம். தாழ்வான ஒரு சாய்வு நாற்காலியில் அவரை அமர வைத்தேன். அப்போது எம்.லிட்., ஆய்வினை முடித்துவிட்டு பிஎச்.டி. பட்டத்திற்கு ஆய்வு நடத்தி வந்தேன். என் ஆராய்ச்சியில் அவர் அவ்வளவு அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. பொதுவாகவே அக்காலத்தில் உயர்கல்விக் கழகங்களில் நடைபெற்று வந்த தமிழ் ஆராய்ச்சி பற்றி அவர்கள் அறியவும் இல்லை; அக்கறையும் காட்டவில்லை.

பாவேந்தரிடம் அவர் பாப்புனையும் ஆற்றல் பற்றிக் கேட்க வேண்டும் என்பது என் நெடுநாள் ஆவல். அவர், அண்மையில் குயில் இதழில் (30.12.58) எழுதிய ஒரு அழகுச்சிறுபாடல் பற்றிக் கேட்டேன். அந்தப் பாடல் இதுதான்:

படி

எடுப்பு

நூலைப்படி!-சங்கத்தமிழ்
நூலைப்படி-முறைப்படி

உடனெடுப்பு

காலையிற் படி கடும்பகல் படி
மாலை இரவு பொருள்படும் படி
நூலைப்படி

அடிகள்

கற்பவை கற்கும் படி
வள்ளுவர் சொன்ன படி
கற்கத்தான் வேண்டும் அப்படிக்
கல்லாதவர் வாழ்வதெப்படி
நூலைப்படி!

அறம்படி பொருளைப்படி
அப்படியே இன்பம் படி
சிறந்த தமிழ்நான் மறை
பிறந்த தென்று சொல்லும்படி
நூலைப்படி!

அகப்பொருள் படி அதன்படி
புறப்பொருள் படி நல்லபடி
புகப்புகப் படிப்படியாய்ப்
புலமை வரும் என் சொற்படி
நூலைப்படி!

சாதி என்னும் தாழ்ந்தபடி
நமக்கெல்லாம் தள்ளுபடி!
சேதி அப்படி! தெரிந்துபடி
தீமை வந்திடு மேமறுபடி
நூலைப்படி!

பொய்யிலே முக்காற் படி
புரட்டிலே காற்படி
வையகம் ஏமாறும்படி
வைத்துள்ள நூற்களை ஒப்புவதெப்படி?
நூலைப்படி!

தொடங்கையில் வருந்தும்படி
இருப்பினும் ஊன்றிப்படி
அடங்கா இன் பம்மறுபடி
ஆகும் என்ற ஆன்றோர் சொற்படி

நூலைப்படி!

'இந்த பாடலை எவ்வளவு நேரத்தில் பாடினீர்கள்?' என்று நான் தொகுத்து வைத்திருந்த குயில் தொகுதியை அவர் கையில் கொடுத்து விட்டுக் கவிஞரைக் கேட்டேன். பாடலை எழுதி அடித்துத் திருத்தி அமைத்திருப்பாரோ என எனக்கு அறிய ஆவல். கவிஞர் கைவிரல்களில் சடக்குப் போட்டுக் கொண்டு 'ஒரு நொடியில்' என்றார். இந்தப் பாடலைப் படிப்பதற்கு எவ்வளவு நேரமோ அவ்வளவு நேரம்தான் இயற்றுவதற்கும்' என்றார் கவிஞர். இவ்வாறு கூறிவிட்டுக் கவிஞர் அந்தப் பாடலை மெல்லிய குரலில் இசையோடு பாடிக்காட்டினார். யதுகுலகாம்மோதி இசையிலும் ஆதி தாளத்திலும் அமைக்கப்பட்ட இப்பாடலை 'எடுப்புடனும் உடனெடுப்புடனும்' அவர் பாடினார். கைவந்தக் கவிஞருக்குக் கவிதை பாடல் மிக எளிதே என நான் அன்று அறிந்து கொண்டேன்.

நான் தொகுத்து வைத்திருந்த குயில் தொகுதியைக் கையில் வாங்கியவுடன் 'திரு. முருகரத்தினம் வாழ்க' என்று எழுதிப் 'பாரதிதாசன்' என்று கையெழுத்திட்டு 23.2.64' என நாளும் இட்டார் கவிஞர். அவர் வெளியிட்டு நான் தொகுத்து வைத்த குயிலிலும் என்னை வாழ்த்தி வரைந்த வாழ்த்திலும் அவர் இன்றும் என்னோடு வாழ்கிறார். அவர் வாழ்த்து நான் பெற்ற பட்டங்களுள் ஒன்றே எனக் கருதுகிறேன்.

1964ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் பாவேந்தரிடமிருந்து அழைப்பு வந்தது. தியாகராய நகரிலுள்ள அவர் இல்லத்திற்கு நான் விரைந்து சென்றேன். பாவேந்தர் என்னிடம் இவ்வாறு கூறினார். "என்னுடைய பிறந்தநாளைக் கொண்டாட வேண்டும் என்று பல ஊர்களிலிருந்து பலரும் என்னைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். சென்னையில் கொண்டாட வேண்டும் என்று நாரணதுரைக் கண்ணன் வந்தார். எல்லாவற்றுக்கும் மேலாகச் சென்னையில் ஒரு நடு அமைப்பை ஏற்படுத்தித் தமிழ் நாடெங்கும் கொண்டாடுவதை ஒருங்கிணைக்கலாம். நீயே இங்கு அந்தப் பொறுப்பை எடுத்துக் கொண்டு நடத்து. மற்றவர்களுக்கு விழாக் கொண்டாடுவதற்கு அனுமதி கொடு. விழாச் செலவிற்கு எம்.ஆர். ராதாவைப் போய்ப்பார். அவர் கொடுப்பார். கொடுப்பதை வாங்கிக் கொள்."

ஒருபுறம் பாவேந்தரின் நிலைக்கு இரங்கினேன்: 'தமிழகத்தின்

மாபெருங் கவிஞர் தம் பிறந்தநாள் விழாவைக் கொண்டாடுவதற்குத் தமிழகம் அறியாத என் போன்ற இளைஞர்களையும் ஓய்ந்து ஒதுங்கியோரையும் நம்பும் நிலை ஆகிவிட்டதே என்பதே எனக்கு வருத்தம் தந்தது. தமிழகத்துத் தமிழ்த் தலைவர்கள் அனைவரும் இணைந்து கொண்டாட வேண்டிய விழா இது.

ஆனால் இவர் ஆதரவற்ற நிலையில் இருக்கிறார். இது அவர் தாமே தேடிக் கொண்டதுதான்! அவர் ஓர் இயக்கத்தைச் சார்ந்தவர்; இயக்கமோ சிதறுண்டு கிடக்கின்றது. உட்பூசலும் ஆளுக்கு ஒரு குழுவுமாக இயங்குகிறது அது. கவிஞரும் செல்லமாட்டார்; அணைத்தும் செல்லமாட்டார், இந்தக் குறைகள் எல்லாம் கவிஞரைத் தனிமைப்படுத்திவிட்டன.

தலைமைக் குழுவை எவ்வாறு அமைப்பது என்பது பற்றி பேச்சு வந்தது. நான் விளக்கங்கள் கேட்டேன். என் கருத்துக்களை வெளியிட்டேன். கருத்து வேறுபாடுகள் எழுந்தன. திராவிட இயக்கத்தின் பெருந்தலைவர்களை ஈடுபடுத்தி விழாவினைச் சிறப்புற நடத்த வேண்டும் என நான் எண்ணினேன். நாவலர் நெடுஞ்செழியன், சி.பி.சிற்றரசு, கி.வீரமணி முதலான சில பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களை விழாக்குழுவில் சேர்த்துக் கொள்ளலாமா என்று கவிஞரிடம் கேட்டேன். உண்மையில் அவர்களுக்கும் கவிஞருக்கும் இடையில் அமைந்திருந்த உறவு எனக்கு முழுமையாகத் தெரியாது. வெளித்தோற்றம் போன்று உள்ளுறவு இருக்கவில்லை. என் விருப்பம் இவர்களை ஒன்றாகக் காண்பதுதான். ஆனால் கவிஞர் இவர்களை எல்லாம் எதிர்த்தார். ஆனால் யாரை வைத்து விழாவை நடத்துவது? செயல் வீரர்கள் யார்? நம் உண்மை நண்பர்கள் யார்? கவிஞர் தந்த பட்டியல் எனக்கு ஏமாற்றம் தந்தது. என் ஊக்கத்தையும் குறைத்தது. அவர் நம்பியிருந்தோர் ஓய்ந்தோர், தொண்டரற்றோர். மாற்றணியினர்... எஸ்.இராமநாதன், மணவாளராமானுசம், வி.பி. ராமன், அகிலன், நாரண. துரைக்கண்ணார், ஈ.வி.கே. சம்பத்து இவர்களை எவ்வாறு அணுகுவது என்பதே என் மலைப்பு. கவிஞரிடம் என் ஏமாற்றத்தையோ மலைப்பையோ நான் காட்டிக் கொள்ளவில்லை. கவிஞர் குறிப்பிட்டவர்களுடன் இணைந்து பணியாற்ற உடன்பட்டேன்.

என் உள்ளத்தில் வேறொரு தயக்கமும் இருந்தது. 1964ஆம் ஆண்டாகிய அந்த ஆண்டில் ஏப்ரல் மாதத்தில் Diploma in Anthropology என்ற தேர்வும், ஜூன் மாதத்தில் Diploma in Linguistics என்ற தேர்வும் எழுதுவதற்கு என்னைத் தயார் செய்து கொண்டிருந்தேன்.

அத்தேர்வுகளைக் கைவிடுவதா? அல்லது தேர்வுகளை முடித்துவிட்டு வந்து விழாப் பணியைப் பார்ப்பதா என்பது என் உள்ளத்தில் ஏற்பட்ட ஊசலாட்டம். என் தேர்வுப் பணிகளை முடித்துவிட்டு விழாப்பணியில் முழுமூச்சாக ஈடுபடுகிறேன் என்று கவிஞரிடமும் கூறிக் கொண்டேன்; அவரும் அதற்கு உடன்பட்டார்.

நாரணதுரைக்கண்ணர் விழாவுக்கான சில முயற்சிகளை மேற்கொண்டிருந்திருக்கலாம். இந்நிலையில் திரு. ஈ.வி.கே. சம்பத்தவர்களிடம் "கவிஞருக்குப் பிறந்தநாள் விழாக் கொண்டாட எண்ணம் கொண்டு விழாவுக்கான முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது. தங்கள் ஒத்துழைப்பு வேண்டும்" என்று நண்பர் ஒருவர் வேண்டிக் கொண்டார் போலும். உடனே சம்பத்து 'கவிஞருக்கு விழா எடுக்க முன்னரும் சிலமுறைகள் முயற்சி மேற்கொண்டு நடைபெறாது தோல்வியில் முடிந்தது. இனிமேல் யாரும் உதவி செய்யமாட்டார்கள். அவர் சும்மா இருக்கட்டும்' என்று கூறிவிட்டார். இக்கூற்றைக் கேட்டுக் கொண்டிருந்த நண்பர் ஒருவர் கவிஞரிடம் சென்று அப்படியே கூறிவிட்டார். கவிஞருக்கு அதிர்ச்சியும், ஏமாற்றமும், வருத்தமும் ஏற்பட்டன போலும். சம்பத்தைக் கவிஞர் நல்லுள்ளத்தோடு நம்பிக் கொண்டிருந்தார். இவ்வாறு விழா முயற்சிக்கு முதலிலே ஓர் இடி ஏற்பட்டது. இந்த ஏமாற்றத்தையே என் அண்ணாவுக்கு மடல் வழி எழுதி என் மீது குறைபட்டுக் கொண்டார் கவிஞர். விழா மத்தியக் குழு அமைப்பது பற்றிக் கவிஞர் குறிப்பிட்டுவிட்டு[1] "இதை நும் தம்பி முருகரத்தினத்திடம் கூறினேன். எல்லாம் எனக்குத் தெரியும். நான் நாரண துரைக்கண்ணரிடம் கலந்து ஏற்பாடு செய்து கொள்கிறேன் என்றார். 'மறுநாள் வந்தார் அந்த மத்தியக் கமிட்டியில் நெடுஞ்செழியன், சிற்றரசு, முதலியவர்களைப் போடலாமல்லவா என்றார். கடுமையாக மறுத்தேன். பிறகு வீரமணியைப் போடலாமா என்றார். மறுத்தேன். எஸ்.ராமநாதன், முன்னாள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மணவாள ராமானுஜம், வி.பி. இராமன், அகிலன் முதலியவர்களைச் சொன்னேன். அவர் அவர்களை மறுத்தார். இன்று-அதாவது பதினைந்து நாட்களுக்குப் பின் ஆர்ட் டைரக்டர் அம்மையப்பன் வாயிலாகச் சேதி அனுப்பப்பட்டிருக்கிறது. வேறு யாரையாவது கொண்டு விழாவை நடத்திக்கொள்ளச் சொல்லுங்கள் என்று. நான் இவர்களைக் கேட்டதுண்டா விழா நடத்திச் சொல்லி?" என்று என் அண்ணாவுக்கு எழுதியிருந்தார்.

1) இக்கடிதம் 'பாவேந்தர் நினைவுகள்' என்னும் இந்நூலின் முதற்பகுதியில் ..... வெளியிடப்பட்டுள்ளது.

விழா முயற்சி ஆதரவிழந்ததை நான் அறியேன். நான் அதுவரை ஒரு முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. ஆனால் நான் ஈடுபட்ட முயற்சியே தோல்வி கண்டது எனக் கவிஞர் தவறாக எண்ணியிருக்க வேண்டும். உண்மையில் நாரணதுரைக்கண்ணரும் பிறரும் மேற்கொண்ட முயற்சியே தோல்வியில் முடிந்திருக்க வேண்டும். இது பற்றிக் கவிஞரைச் சந்தித்து விளக்கம் கேட்க வேண்டும் என்று எண்ணிய என் எண்ணம் கைகூடாதவாறு கவிஞர் விரைவில் இவ்வுலகையே நீத்துச் சென்றுவிட்டார்.

12.4.1964 அன்று பாவேந்தரை அவர் இல்லத்தில் கண்டு பேசினேன். பாவேந்தருக்கு உடல் நலமில்லாதது போக, சென்னை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார் என்ற செய்தியை 21.4.64 காலை கேள்விப்பட்டேன். உடனே மருத்துவமனைக்குச் சென்றேன். இரயிலில் மூன்றாம் வகுப்புப் பயணியைப் போலப் பொதுப்பிரிவில் (General ward) அவர் சேர்க்கப்பட்டு இருந்தார். உறக்கமோ மயக்கமோ தெரியவில்லை. அவர் உணர்வின்றிப் படுத்திருந்தார். அண்மையில் சிலர்-ஒருசிலரே-கவலையுடன் நின்று கொண்டிருந்தனர். அவர் நெருங்கிய உறவினர் போலும். பாமன்னரின் மகன் மன்னர் மன்னன் நின்று கொண்டிருந்தார். வேறு யாருமில்லை. மன்னர் மன்னன் எனக்கு அறிமுகம் இல்லை. சிறிது நேரம் பார்த்துவிட்டுத் திரும்பிவிட்டேன். விடுதிக்குத் திரும்பிவந்த சிறிது நேரத்தில், பாவேந்தர் பாவுலகையும் பாருலகையும் நீத்துச் சென்று விட்டார் என்ற செய்தி பரவியது. முற்பகல் அச்செய்தி என் காதில் விழுந்தவுடன் தியாகராய நகரில் அவர் இல்லத்துக்கு விரைந்தோடினேன். அவர் இல்லம் 'வெறிச்சோடி' இருந்தது. பாவேந்தர் மருத்துவ விடுதியிலிருந்து இல்லத்துக்குக் கொண்டுவரப் பட்டவுடன் புதுவைக்குக் கொண்டு போகப்பட்டார்; பிறந்த மண்ணிலேயே மறைந்து போகத் தன் இல்லத்திற்கே சென்றார். செந்தமிழுக்குப் பாப்புனைந்த நா செந்தழலுள் வெந்தது.

பாவேந்தரோடு கருத்திலும் எண்ணத்திலும் நான் உறவு கொண்டிருந்த அளவு பழக்கத்திற் கொண்டிருக்கவில்லை. அவர் பாக்கள் இனிமையானதுபோல் அவர் பழக்கமும் எனக்கு இனிமை தந்தது. கல்வியைப் பற்றி வற்புறுத்தி வற்புறுத்தி அவர் பாடினார். 'படித்த குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்' என்பது அவர் கருத்து. அப்போது எம்.ஏ., எம்.லிட்., எம்.பி.பி.எஸ்., ஆக விளங்கிய உடன் பிறந்த எம் மூவரையும் 'ரொம்ப படித்த குடும்பம்' என்று பாவேந்தர் புகழ்பாடிக் கொண்டிருந்தார். ஆங்கில உயர்கல்வி பெற்ற எங்கள் நிலை அவருக்குப் பெருமை தருவதாகத் தோன்றியது.

உரிமையோடும் பெருமையோடும் எங்களை அவர் தம் குடும்பத்தில் சேர்த்துக் கொண்டார். அவருக்குச் சாதி உணர்வு இருந்ததா என்பது நான் அறியமுடியவில்லை. அவரோடு பழக்கம் கொண்டதில் எனக்கும் பெருமையும் பெருமிதமும் ஏற்பட்டன.'

அவர் தலைமையில் நான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற திட்டம் அப்போதே என்னிடம் உருவாகியிருந்தது. ஆனால் அது நடைபெற முடியாதபடி சாக்காடு குறுக்கிட்டது.

கனகசுப்புரத்தினம் கவிஞர் ரத்தினம்; சுப்பிரமணிய பாரதியாரின் செழுஞ்சொற் பாப்புனை திறத்தால் இழுக்கப்பட்டுப் பாரதிதாசனார் ஆனார். வண்டமிழ்ப் பாவிற்கு வேந்தராக விளங் கினார். அறிவிலும் உணர்விலும் வாழ்விலும் முதிர்ச்சியடைந்தார்; பைந்தமிழ் உலகம் அவரைப் பாராட்டியது; கருத்து வேறு பட்டோரும் அவர் பாத்திரத்தைப் பாராட்டினர், தமிழகம் அவரை ஒரு குரலிலே ஏற்றிப் போற்றியது.

பாவேந்தருக்கு மனநிறைவில்லை. அவர் மனம் மேலும் புகழ் நாடியது; பொருள் நாடியது. தம் படைப்புக்கள் மீது நம்பிக்கை வைத்து அவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கச் செய்து உலகப் புகழ்பெற அவர் உள்ளம் விழைந்தது. நம் காவியங்களைப் படமாக்க வேண்டும் என்ற ஆசை கொண்டு முதிர்ந்த வயதில் பட்டணம் புறப்பட்டார். அவர் பண்டுதொட்டே அரசியல்வாதியுமாவார். ஆனால் தலைவராகவில்லை. முழுநேர அரசியற் பணியாளரே தலைவராவார். அரசியலோ கட்சியரசியலாகிக் கட்சிக்குள் குழு அரசியலுமாகிச் சீர்கெட்டது. பல்குழுப் பாழ் செய் உட்பகைக்குள் சிக்குண்டார் பாவேந்தர். இந்த அரசியல் பூசலுக்கு அவர் தகுதி பெற்றவர் இல்லை. அவர் தோல்வி கண்டார். அவர் அரசியலில் தூற்றுதலும் போற்றுதலும் மேற்கொண்டார். அவற்றுக்கு பெரும்பான்மையான காரணம் அவர் நலம் கருதியே போலும். அவர் 'குயில்' அண்ணாவையும், எம்.ஜி.யாரையும் தூற்றிப் பாடியது தம் பேசும் பட வாய்ப்புக்கள் அவர்களால் கெட்டுவிட்டன என்ற வருத்தம் அவருக்கிருந்தது. சிவாசியைப் போற்றித் துதிபாடியது குயில், பேசும்பட வாய்ப்பினை எதிர்பார்த்து, பெரியாரின் தி.மு.க. வெறுப்பரசியலில் புகுந்து 'கண்ணீர்த் துளிகளை'ச் சாடினார் கவிஞர்.

புகழையும் பொருளையும் நாடிய அவர் உள்ளம் ஏமாற்றம் உற்றது. நிறைவேறாத ஆசைகள், உள்ளார்ந்த வருத்தம், எதிர்பாராத ஏமாற்றம், நிறைந்த உலகில் தனிமை-இவையே இறுதியில் அவர்

வாழ்க்கை. இவற்றோடு உடன் பிறந்த நோய் நீரிழிவு. அவர் வாழ்க்கை பல ஆண்டுகள் முன் முடிந்ததில் வியப்பில்லை.

இயக்கம், கட்சி, குழு என்ற நிலைகளில் இயக்கத்தளவில் நின்றிருக்க வேண்டிய பாரதிதாசனார் குழு நிலைக்கு இறங்கினார். தமிழ்ப் பாவுலகம் அதனால் உற்ற இழப்பு ஈடுசெய்ய முடியாதது.

மூன்று

குயில் கூவிக் கொண்டிருக்கும்

உள்ளத்தில் எழுதிய ஓவியம்

ஓவியர்: வேணுகோபால சர்மா

இன்று எல்லா அரசியல் அலுவலகங்களிலும், பள்ளி கல்லூரிகளிலும், பொதுமன்றங்களிலும் பேருந்துகளிலும் கம்பீரமாகக் காட்சி தரும் திருவள்ளுவரின் திருவுருவப் படத்தை எழுதி, அதற்காக ஜனாதிபதி பரிசு பெற்ற புகழ் மிக்க ஓவியர் திருவாளர் வேணுகோபால சர்மா.

இளமைப் பருவத்தில் விகடகவியாகக் கருநாடகக் கத்வார் சமஸ்தானத்திலும், ஆந்திராவின் புங்கனூர் சமஸ்தானத்திலும் விளங்கியவர்; 'போலச்செய்யும் ஆற்றல்' (Mimicry) கைவரப் பெற்றவர்; இசைப்புலமை யும் நடிப்பாற்றலும் மிக்கவர்; பல்துறை அறிஞர்.

பாவேந்தரிடம் உள்ளங் கலந்து பழகிய உணர்ச்சி மிக்க நண்பர். பாவேந்தரைப் போலவே உறுமும் குரல் படைத்தவர். பாவேந்தரைப் பற்றிப் பேசும்போது இவர் பேச்சு, உணர்ச்சி, மெய்ப்பாடு யாவும் பாவேந்தரை நேரில் கொண்டு வந்து நிறுத்துகின்றன. பாவேந்தரைப் பற்றி வேறு யாரும் கூறாத மிக நுணுக்கமான செய்தி களை நினைவில் நிறையத் தேக்கி வைத்திருக்கிறார். அச்செய்திகளின் தொகுப்பே இக்கட்டுரை.

பாவேந்தர் பாரதிதாசன் ஒரு மகாகவி மட்டுமல்லர்; பெரிய மேதை; ஒப்பற்ற கலைஞர். என் வாழ்நாளில் நான் கண்டு பழகிய மேதைகளில் என்னை வியப்பில் ஆழ்த்தியவர். அவரோடு எனக்கு ஏற்பட்ட உறவை எனக்கு வாய்த்த பெரும் பேறாகக் கருதுகிறேன்.

எனக்கும் அவருக்கும் 1938-39ஆம் ஆண்டுகளில் பழக்கம் முதன் முதலாக ஏற்பட்டது. அப்போது கவி காளமேகம் படப்பிடிப்பு சென்னையில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. புகழ்பெற்ற தமிழறிஞரும் பொறிஞருமான திருவாளர் பா.வே. மாணிக்க நாயகரின் பங்களாவை வாடகைக்கு எடுத்து அதில் படக்கம்பனி வைத்திருந்தனர். பாவேந்தர் அங்குதான் தங்கியிருப்பது வழக்கம்.

கவிகாளமேகத்துக்குத் திரைக்கதை, வசனம், பாடல் யாவற்றையும் பாவேந்தரே எழுதினார். நாதசுவரச் சக்கரவர்த்தி திருவாடுதுறை ராஜரத்னம் காளமேகமாக நடித்தார். காளமேகத்துக்காகப் பாவேந்தரால் எழுதப்பட்ட பாடல்கள் அடையாறு பிராக் ஜோதி ஸ்டுடியோவில் முதன் முதலாக அரங்கேற்றம் செய்யப்பட்டன. அந்நிகழ்ச்சிக்கு நீதிக்கட்சியின் முன்னாள் அமைச்சர் திரு. எஸ். இராமநாதன் தலைமை வகித்தார். இசைமேதை ஜி.என். பாலசுப்பிரமணியம், திரு. தியாகராஜ பாகவதர், இசையரசி எம்.எஸ். சுப்புலட்சுமி ஆகியோர் பாடல் அரங்கேற்றத்தைக் காண வந்திருந்தனர். பாவேந்தர் 'லாங் கோட்' அணிந்து அவருக்கே உரித்தான கம்பீரத்தோடு காட்சியளித்தார். திருவாளர் இராஜரத்னம் பாடுவதற்காக எழுந்ததும் ஜி.என்.பி., பாகவதர், எம்.எஸ். ஆகிய மூவரும் எழுந்து நின்று கொண்டனர். இராஜரத்தினத்தின் இசைஞானத்துக்கு அப்படி ஒரு மரியாதை. அவர் பாட்டை விரும்பித் தொலைபேசியில் கேட்பவர் பலர்.

பாவேந்தரிடம் பேசிக் கொண்டிருப்பது சிறந்த பொழுதுபோக்கு; சிரிக்கச் சிரிக்கச் சுவைபடப் பேசுவார். இலக்கியத்தில் யார் எந்த ஐயம் கேட்டாலும் உடனுக்குடன் சொல்லுவார். இலக்கணக் கருத்துகள் எப்போதும் விரல் நுனியில் (Finger tips) காத்திருக்கும். இலக்கணத்தை விளக்கி அதற்குரிய சூத்திரத்தையும் உடனே சொல்லுவார். 'அறிதோறும் அறியாமை கண்டற்றால்' என்று வான்புகழ் வள்ளுவர் கூறிய கருத்து அவருக்கு மிகவும் பொருந்தும். அவர் அறியாத புதிய செய்தி ஒன்றையாவது கூறினால் 'அப்படியா!' என்று மூக்கின் மேல் விரல் வைத்து வியப்போடுக் கேட்பார்.

"கபிலர் எழுதிய 'எண்ணூலே' சாங்கியம். சாங்கியத்தின் அடிப்படையிலேயே திருவள்ளுவர் திருக்குறளை எழுதினார். திருக்குறளின் உண்மைப் பொருளைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் சாங்கியத்தின் அடிப்படையில் அதற்கு உரை காண வேண்டும்" என்று பாவேந்தர் அடிக்கடி கூறுவார். எனவே சாங்கிய நூலின் படி ஒன்று கிடைக்குமா என்று அவர் சென்ற இடங்களிலெல்லாம் தமிழறிஞர்களைக் கேட்பார். கடைசியில்

மதுரை புதுமண்டபத்தில் அந்நூல் கிடைத்தது. கிடைத்தற்கரிய ஒரு பெரிய புதையலைக் கண்டெடுத்ததுபோல் பாவேந்தர் மகிழ்ச்சியடைந்தார்.

சாங்கியத்தைப் படித்து முடித்ததும் அந்நூலின் அடிப்படையில் திருக்குறளுக்குத் தாமே புத்துரை காணவேண்டும் என்ற எண்ணம் அவருள்ளத்தில் ஏற்பட்டது. உடனே அம்முயற்சியில் இறங்கினார். கடலூர் பிருந்தாவனம் விடுதியில் ஓர் அறை எடுத்துத் திருக்குறளின் பாயிரத்துக்கு உரையெழுதத் தொடங்கினார். அப்போது திருக்குறள் முனிசாமி பாவேந்தரைப் பார்க்க வந்தார். 'அகர முதல எழுத்தெல்லாம்' என்று தொடங்கும் முதற் குறளுக்கு உரையெழுத மூன்று நாள் ஆராய்ச்சி நடந்தது.

'ஆதிபகவன் முதற்றே உலகு' - என்று வள்ளுவர் பாடியிருக்கிறாரே! நடுவில் வந்த பகவன் யார்?" என்று நான் ஐயத்தைக் கிளப்பினேன். 'ஊரெல்லாம் பட்டி தொட்டி, உண்பதோ கம்பஞ்சோறு, பேரெல்லாம் பொம்மன் திம்மன், என்ற தனிப்பாடல் வரிகளை எடுத்து வைத்துக் கொண்டு அதற்குச் சிலேடைப் பொருள்கூறித் திருக்குறள் முனிசாமி கலாட்டா செய்து கொண்டிருந்தார்.

ஒருநாள் காலை 7.30 மணியிருக்கும்; வெளியில் சென்று விட்டு பாவேந்தர் பிருந்தாவன் விடுதி அறைக்குத் திரும்பினார். வழக்கம்போல் அறை சிற்றாள் காஃபி கொண்டு வந்தான். காஃபி வேண்டாம் என்று சொல்லி மறுத்துவிட்டார். ஏதோ ஆழ்ந்த சிந்தனையில இருக்கிறார் என்பதை நான் புரிந்து கொண்டேன். நானும் அமைதியாக இருந்தேன்.

சிந்தனையிலிருந்து விடுபட்டு 'சர்மா' என்று கூப்பிட்டார். 'ஏன்?' என்றேன் நான்.

> "தெய்வந் தொழாஅள் கொழுநன்·தொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யும் மழை."

என்ற பாட்டுக்கு ஒரு புத்துரை கூறப்போகிறேன். இரவு நேரத்தில் கணவன் மனைவியிடையே சண்டை. கணவன் முரடன். மனைவியை நன்றாக உதைத்துவிட்டான். சண்டைக்குப் பிறகும் அவன் மனைவியை விடவில்லை. அவளிடத்தில் இன்பம் துய்த்தான். இருவரும் களைப்போடு உறங்கிவிடுகின்றனர். மனைவி அதிகாலையில் கண்விழித்து எழுந்தாள் கணவனின் அடிகளைத் தொட்டு வணங்கினாள். ஏன்?" என்று கேட்டார் பாவேந்தர். நான் விழித்தேன்.

"அடித்தாலும் உதைத்தாலும் இரவில் இவ்வளவு இன்பத்தை எவன் தருவான்?" என்று நினைத்தாள் அவள். கணவன்மீது அளவில்லாத அன்பு அவள் உள்ளத்தில் ஊற்றெடுத்தது. அவன் காலைத் தொழுதாள். இத்தகைய மனைவி கணவனுக்குப் பெய்யென்றவுடன் பெய்யும் மழைபோல பயன்மிக்கவள்" என்று கூறினார்.

இரண்டாம் உலகப்போர் நடந்துகொண்டிருந்த நேரம். சென்னை நகர மக்களெல்லாம் குடிபெயர்ந்து வேற்றூர்களுக்குச் சென்று கொண்டிருந்தனர். திருச்சி தேவர் ஹாலில் சுயமரியாதை மாநாடு ஒன்று நடைபெற்றது. திருவாளர்கள் சௌந்தர பாண்டியன், பெரியார் ஈ.வெ.ரா., பட்டுக்கோட்டை அழகிரிசாமி, ஈழத்தடிகள், அறிஞர் அண்ணா போன்ற பெரிய தலைவர்கள் அம்மாநாட்டில் கலந்து கொண்டனர். பாவேந்தரும் மேடையில் இருந்தார். மற்றொரு நாற்காலி கொண்டு வரச் சொல்லி என்னை அழைத்து அருகில் உட்கார வைத்துக் கொண்டார். நெற்றியில் குங்குமம் அணிந்து ஆத்திகக்கோலத்துடன் அமர்ந்திருந்த என்னை எல்லாரும் ஒரு மாதிரியாகப் பார்க்கத் தொடங்கினர். யாரோ ஒரு சு.ம.தோழர் பாவேந்தரின் அருகில் வந்து 'யாரிவர்?' என்று மெதுவாகக் கேட்டும் விட்டார்.

பாவேந்தர் அந்தத் தோழரைப் பார்த்து 'அவரா? அவர் ஓர் உலகம்! போ! போ' என்று கூறினார். எதிர்ப்புக்கு அஞ்சாத அவர் துணிச்சலை நான் வியந்தேன். அவர்மீது நான் கொண்டிருந்த மரியாதை பன்மடங்காக உயர்ந்தது. அப்போது பெரியார் ஈ.வெ.ரா. குடியரசில் இராமாயண ஆராய்ச்சி எழுதிக் கொண்டிருந்த நேரம். மாநாட்டு மேடையில் இராமாயணத்தைக் கடுமையாகத் தாக்கியதோடு கொளுத்தவும் செய்தார். இராமாயணத்தைப் போலவே குறளும் வைதீகத்தை ஆதரிப்பது என்று சொல்லி அதையும் கடுமையாக விமர்சனம் செய்தார். அதையும் கொளுத்த வேண்டும் என்று சொன்னார். ஆனால் பாவேந்தருக்கு அக்கருத்து உடன்பாடு இல்லை. திருக்குறளின் அடிப்படையில் கழகத்தை அமைக்க வேண்டும் என்பது அவர் கருத்து.

சென்னைக்கு அருகில் உள்ள பெரியபாளையம் அங்காளம்மன் கோயில் மிகவும் புகழ்பெற்ற அம்மன் தலம். ஆடிமாதம் வெள்ளிக்கிழமைகளில் அங்கு நடைபெறும் திருவிழாவுக்கு அளவுகடந்து மக்கள் கூடுவர். ஆடை எதுவுமின்றி இடுப்பில் வேப்பிலை மட்டும் சுற்றிக் கொண்டு பட்டிக்காட்டு ஆடவரும் பெண்டிரும் கோவிலைச் சுற்றி உருளுதண்டம் போடுவர். இந்த அநாகரிகத்தைக் கண்டு சகிக்காத பாவேந்தர் ஒருநாள் தம்

நண்பர்களோடு ஒரு பெரிய காரில் பெரியபாளையம் புறப்பட்டார். டாக்டர் மா. இராஜமாணிக்கனார், சமணர் ஸ்ரீபால் ஆகியோர் உடன் வந்தனர் நானும் சென்றேன். அடையாறு மாணவிகள் சிலரும் எங்களுடன் வந்திருந்தனர். அங்கு பலியிடப்படும் ஆடு கோழிகளின் குருதி வாய்க்காலாக ஓடும் உயிர்ப்பலியைத் தடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு சமணரான ஸ்ரீபால் எங்களுடன் கலந்து கொண்டார்.

நாங்கள் அம்மன் கோயிலுக்கு அருகில் கூட்டம் போட்டோம். ஸ்ரீபால் உயிர்ப்பலி கூடாது என்று கூறி அருளறத்தின் இன்றியமையாமையை எடுத்துரைத்தார். 'பக்தி என்றால் என்ன என்பதைப் பற்றியும், அம்மன் பற்றிய விளக்கத்தையும் 184 புராணங்களிலிருந்தும் மேற்கோள் காட்டி விளக்க முடியும். நிர்வாணமாகக் கோவிலை வலம் வர வேண்டும் என்று எந்தப் புராணமும் எடுத்துரைக்கவில்லை. ஆண்டவன் பேரால் உயிர்ப்பலி வேண்டாம்'' என்று பாவேந்தர் உருக்கமாகவும், உணர்ச்சி ததும்பவும் பேசினார். உடன் வந்த அடையாறு மாணவிகள், நிர்வாணமாக கோவிலைச் சுற்றிய பெண்களைப் பார்த்து, ஆடை அணிந்து கோவிலை வலம் வரும்படி வேண்டிக் கொண்டனர்.

கூட்டத்தில் இருந்த சிலர், "நிர்வாணமாகக் கோவிலைச் சுற்றுவது எங்கள் விருப்பம். நாங்கள் வேண்டுதலை நிறைவேற்றுவதற்காகச் செய்கிறோம். அதைக் கேட்க நீங்கள் யார்?" என்று கேட்டனர்.

"தமிழ் நாட்டின் மானம் காற்றைப் போலவும், தண்ணீர் போலவும் எல்லார்க்கும் பொதுவானது. அதைக் கெடுப்பதை எங்களால் பொறுத்துக் கொள்ள முடியாது'' என்று அஞ்சாமையோடு அவர்களைப் பார்த்து கூறினார். அத்தகைய துணிச்சல் பாவேந்தருக்கு மட்டுமே உரியது.

பாவேந்தர் நாத்திகர். நான் ஆத்திகன்; அம்பாளை வழிபடுபவன். ஆனால் இந்தக் கொள்கை வேறுபாடு எப்போதும் எங்கள் நட்புக்குக் குறுக்கே நின்றதில்லை. அவர் நாத்திகக் கருத்துக்களைக் காரசாரமாகப் பேசிக் கொண்டிருப்பார். நான் அமைதியாக அருகிலிருந்து கொண்டு என் வேலையைக் கவனிப்பேன். நான் நாள்தோறும் வணங்கும் அம்பாளைப் பற்றி ஒரு பாட்டு எழுதித்தரும்படி அவரை அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்தேன்; அவர் மறுத்துக் கொண்டிருந்தார். பிறகு என் நச்சரிப்புத் தாங்காமல் ஒரு நாள், "சரி, சொல்ற... எழுதிக்க!" என்று சொல்லிவிட்டுத் தலையணையில் முழங்கையை ஊன்றிப் படுத்துக் கொண்டே மளமளவென்று சொல்ல ஆரம்பித்தார். நானும் எழுதிக்

கொண்டேன். அப்பாடலை மிகவும் பத்திரமாக வைத்து நாள்தோறும் பாராயணம் செய்து வந்தேன். அப்பாடல் என்னிடம் வந்த பிறகு என் வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. பொருளாதார வசதியும், புகழும் என்னைத் தேடிவந்தன.

ஒருமுறை அண்ணாப்பிள்ளைத் தெருவில் உள்ள வசந்தவிகாரில் நாடக ஒத்திகை ஒன்று நடைபெற்றது. அங்கு அழகான சிறிய வெள்ளைப் பிள்ளையார் சிலை (Paper mould) ஒன்று இருந்தது. அதன் கலையழகு பாவேந்தரைப் பெரிதும் கவர்ந்தது. நீண்ட நேரம் அதையே ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு என்னை நோக்கி, "நீ பூசை செய்வதுண்டா என்று கேட்டார். நான் 'இல்லை' என்று சொன்னேன். அதற்கு அவர், "மனிதனுக்கு ஏதாவது ஒரு பிடிப்பு வேண்டும்" என்று சொன்னார்.

நான் ஒருமுறை பாவேந்தரோடு தங்கியிருந்தபோது முத்தமிழுக்கு என்ன சின்னம் (symbol) போடலாம் என்று பேச்சு எங்களிடையே எழுந்தது. இயற்றமிழுக்குக் கிளியும், இசைத் தமிழுக்கு குயிலும், நாடகத் தமிழுக்கு மயிலும் சின்னங்களாக இருக்கலாம் என்று முடிவு செய்தோம். பாவேந்தர் அம்முடிவை ஒரு வெண்பாவாக எழுதி முடித்தார். கீழ்க்கண்ட வெண்பா 1955ஆம் ஆண்டு எழுதப் பட்டது.

பெற்ற தமிழகம் பெற்றது கைவிலங்கோ!
அற்றதோ மேன்மை, அழகு தமிழ்?-சொற்கிளியும்
ஆடல் மயிலும் இசைக்குயிலும் ஆட்சியம்பால்
வாடல் தவிர்த்து வாழ்வோம்.

பெருங்கவிஞர்கள், கலைஞர்கள், சிந்தனையாளர்கள் ஆகியோரின் பேச்சும் போக்கும் சில சமயங்களில் விபரீதமாக இருக்கும். ஏன் இவ்வாறு நடந்து கொள்ளுகிறார்கள் என்று நாம் சிந்தித்துப் பார்த்தாலும் நமக்கு உண்மை விளங்காது. சிறுகுழந்தைகள் செய்யும் செயல்களை-அவை பொருளற்றவையாக இருப்பினும்-நாம் கண்டு மகிழ்ச்சி கொள்கிறோம் இல்லையா? அப்படி இவர்கள் செயலையும் நாம் கண்டு மகிழ வேண்டியது தான். பாவேந்தர் வாழ்க்கையில் இதுபோன்ற சுவையான செய்திகள் எத்தனையோ உண்டு.

கவிகாள மேகம் படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்த நேரம். பாவேந்தரும், அவர் பரிவாரமும் பா.வே. மாணிக்க நாயகர் பங்களாவில் முகாமிட்டிருந்தனர். ஒருநாள் பாவேந்தர் திடீரென்று எல்லாரையும் புறப்படுங்கள் என்று சொன்னார்; எல்லாரும் புறப்பட்டனர். பங்களா வாசலில் ஒரு டாக்சி வந்து நின்றது. எல்லாரையும் 'ஏறுங்கள்' என்று கட்டளையிட்டார். எல்லாரும்

ஏறிக்கொண்டோம். பாவேந்தர் முன் இருக்கையில் காரோட்டிக் கருகில் அமர்ந்துகொண்டு 'போ' என்றார். வண்டி புறப்பட்டது.

'எங்கே போகணும்?' - இது காரோட்டியின் கேள்வி.

'போ சொல்ற' - பாவேந்தர் பதில்.

வண்டி போய்க் கொண்டிருந்தது. 'மொகம்மது இப்ராகிம் கம்பனி' அருகில் வண்டி போய்க் கொண்டிருந்தது. காரோட்டி மீண்டும் கேட்டான் 'எங்கே போகிறோம்' என்று. பாவேந்தர் சிரித்தார்.

வண்டி 'எல்பின்ஸ்டன்' திரைப்படக் கொட்டகையை நெருங்கிக் கொண்டிருந்தது. மீண்டும் காரோட்டி 'எங்கே போகணும்?' என்று கேட்டான். உடனே பாவேந்தர் என்னைக் காண்பித்து 'இவரைக் கேளு' என்று கூறிவிட்டுச் சிரித்தார். வண்டி மூர் மார்க்கெட்டை அடைந்தது. 'எல்லாரும் கீழே இறங்குங்க' என்றார் பாவேந்தர். நாங்கள் எல்லாரும் இறங்கினோம். 'எல்லாரும் எவ்வளவு காசு வெச்சிருக்கீங்க?' என்று கேட்டார் பாவேந்தர். ஒருவரிடமும் காசில்லை. அருகில் 'நகரதூதன்' பத்திரிகை அலுவலகம் ஒருமாடியின் மேல் இருந்தது. அதன் ஆசிரியரான திருமலைசாமி பாவேந்தருக்கு வேண்டியவர். அருகில் நின்று கொண்டிருந்த நாவரசை அனுப்பித் திருமலை சாமியிடம் ரூ. 10 வாங்கி வரச் சொன்னார். திருமலைசாமி இல்லையென்று சொல்லி விட்டார். பாவேந்தருக்கு உடனே கோபம் வந்து விட்டது. பாதையில் இருந்தபடியே 'திருமலை சாமி என்றவனே!' என்று உரக்கக் கூப்பிட்டார். திருமலைசாமி மாடியிலிருந்து எட்டிப்பார்த்தார்.

"உன்னைப் போய் நான் பணம் கேட்ட பாரு! என் புத்தியை ஜோட்டால அடிக்கணும்!" என்று உறுமி விட்டு வண்டியில் ஏறினார். வண்டி மீண்டும் புறப்பட்ட இடமாகிய பா.வே. மாணிக்கநாயகர் பங்களாவை நோக்கிச் சென்றது. பெட்டியிலிருந்து பணத்தை எடுத்து 'மீட்டர் கட்டணம்' எவ்வளவு என்று பார்த்துப் பணத்தைக் கொடுத்தார் பாவேந்தர். பாவேந்தர் வாழ்க்கையில் இதுபோல் எத்தனையோ நிகழ்ச்சிகள்.

ஒருநாள் புதுச்சேரி பெருமாள் கோவில் தெருவில் உள்ள அவர் வீட்டுத் திண்ணையில் கால்மேல் கால் போட்டுக் கொண்டு பாவேந்தர் அமர்ந்திருந்தார். ஒருவன் கூடையில் முட்டை விற்றுக் கொண்டு வந்தான்.

'ஏய்.. முட்டை இங்க வா!' என்று கூப்பிட்டார் பாவேந்தர். முட்டைக்காரன் வந்தான்.

'கூடையில இருக்கற எல்லா முட்டையும் என்ன விலை? என்று கேட்டார். ஐந்து ரூபாய் என்று அவன் பதில் சொன்னான்.

"4 உருபா 15 அணா கொடுப்பியா?" என்றார் இவர். அவன் சரி என்றான். 'முட்டையெல்லாம் நடையிலே அடுக்கு! பழனியம்மா! முட்டைக்காரனுக்கு 4 உருபா 15 அணா கொடுத்துட்டு முட்டை யெல்லாம் எடுத்துவை!' என்று பாவேந்தர் கட்டளையிட்டார். இது அவர் சுபாவம். ஏன் என்று யாரும் கேட்கக் கூடாது; கேட்கவும் முடியாது.

ஒருவன் மூங்கில் கட்டு ஒன்றைப் பாதையில் தூக்கி விலை கூறி விற்றுக் கொண்டு வருகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். விலை கேட்பார் பாவேந்தர். அவன் 12 உருபா என்றால் இவர் 11½ உருபாவுக்கு கேட்பார். அவனும் கொடுத்துவிடுவான். அந்த மூங்கில் தற்போது வீட்டுக்குத் தேவையா? என்று நினைக்க மாட்டார். மனைவியைக் கூப்பிட்டுப் பணம் கொடுக்கச் சொல்லுவார். மனைவி பழனியம்மாள் 'இப்போது எதற்கு மூங்கில்?' என்று கேட்டால் 'ச்சீப்.. ச்சீப்...' என்பார். அதற்குமேல் அவரை எதிர்த்து ஒன்றும் பேசக்கூடாது.

பாவேந்தர், மிகச்சிறந்த நகைச்சுவை ரசிகர். யாராவது நகைச்சுவையாக எதையாவது சொல்லிவிட்டால் உடம்பு குலுங்க விழுந்து விழுந்து சிரிப்பார். அவருடைய எழுத்தில் வீரச்சுவையும், நகைச்சுவையுமே விஞ்சி நிற்கும். ஒருமுறை பாவேந்தரும் நானும் சார்லிசாப்ளின் நடித்த திரைப்படமொன்று பார்க்கச் சென்றோம். அது ஊமைப்படம்.

சார்லிசாப்ளின் சுவரில் ஆணி அடிப்பதுபோல் ஒரு காட்சி. அவர் மிகவும் குள்ளமாக இருந்ததால், அருகில் இருந்த நண்பர் "எதையாவது போட்டு அடி என்று கூறிவிட்டுப் போனார். (அதாவது எதையாவது உயரமாகப் போட்டு அதன்மேலே ஏறி நின்று அடி என்ற கருத்தில் அவர் சொன்னார்.) சாப்ளின் அருகில் இருந்த செய்தித்தாளைப் போட்டு அதன்மேல் ஏறி நின்று அடித்தார். இது வேடிக்கை தானே! எட்டாத காரணத்தால் அருகில் இருந்த நாற்காலியை இழுத்துப்போட்டு அதன்மேல் ஏறி நின்று அடித்தார்.

சுவரில் ஆணி லேசில் இறங்கவில்லை. அதற்குள் சாப்ளினுக்கு வேர்த்து விருவிருத்துப் போய்விட்டது. விரலெல்லாம் வியர்வையினால் நனைந்திருந்த காரணத்தால் ஆணியும் நனைந்திருந்தது. அந்த ஆணி ஈரம்பட்டு வழுக்கியது. எனவே கழுத்தில் அணிந்திருந்த 'டை'யில் அதைத் துடைத்தார். துடைத்தவர்

அந்த டையோடு சேர்ந்து ஆணியை அடித்துவிட்டார். ஆணியை அடித்து முடித்தவுடன் நாற்காலியில் இருந்து கீழே குதித்தார். டை ஆணியில் மாட்டிக் கொண்டிருந்த காரணத்தால் அவர் சுவரில் தொங்கினார். இந்தக் காட்சியைப் பார்த்த பாவேந்தர் சிரிப்பை அடக்க முடியாமல் துள்ளிக் குதித்தார். அவர் கையிலிருந்த சிகரெட் நெருப்பு அருகில் உட்கார்ந்திருந்தவரை சுட்டுவிட்டது.

அவர் கோபத்தோடு 'என்னையா இது? கண்ணு கிண்ணு இருக்கா? நெருப்பாலே சுடரியே?' என்று கேட்டார்.

அதற்கு பாவேந்தர் சிரித்துக் கொண்டே "முண்டம்! நெருப்பு சுட்ரது உனக்கு இப்ப தெரியுதா?" என்று கேட்டார்.

நகைச்சுவையை மெய்மறந்து எப்படி சுவைப்பார் பாவேந்தர் என்பதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டு.

பாவேந்தருக்கு ஓவியம் தீட்ட வராது. ஆனால் ஓவியக்கலையில் நல்ல ஈடுபாடு உண்டு. ஓவியத்தைப் பற்றி அவர் கூறும் அபிப்பிராயம் சிறப்பாக இருக்கும். ஜனாதிபதி பரிசு பெற்ற திருவள்ளுவர் திருவுருவத்தை எழுதும்படி என்னை அடிக்கடி தூண்டி ஊக்கமளித்தவர் பாவேந்தரே. நான் திருவள்ளுவர் படத்தை தீட்டியபோது பாவேந்தர் அருகில் இருந்து கூர்ந்து கவனித்துக் கொண்டிருப்பார். 'இப்படி இருந்தால் நன்றாக இருக்கும்' என்று தம் அபிப்பிராயத்தைச் சொல்லிக் கொண்டிருப்பார். படம் ஓரளவு முற்றுப்பெறும் நிலையில் இருந்தது. அப்படத்தைப் பலரும் நடமாடுமிடத்தில் வைக்குமாறு எனக்குக் கூறினார். படம் போவோர் வருவோர் பார்வையில்பட்டு அவர்கள் கவனத்தைக் கவர்ந்தது. அதைப்பார்த்த எல்லாரும், என்ன? திருவள்ளுவர் படம் போல் இருக்கிறதே? என்று கேட்டனர். பாவேந்தருக்குப் பரம திருப்தி. 'சர்மா? படத்தை முடித்துவிடு!' என்றார். நானும் முடித்தேன். அப்படம் அச்சேறுவதற்கும் பாவேந்தரே துணை நின்றார். அப்படம் தமிழகத்தில் பெருத்த விளம்பரம் பெற்றதோடு எனக்குப் புகழையும், ஜனாதிபதி பரிசையும், செல்வத்தையும் வாரி வழங்கியது, ஏன்? அப்படம்தான் இப்போது எனக்குச் சோறு போடுகிறது.

பாவேந்தருக்குப் புதுக்கவிதை (Modern poem) பற்றியோ, புதிய ஓவியக்கலை (Modern Art) பற்றியோ தெரியாது. என்றாலும் புதிய ஓவியக்கலை பற்றி அவரிடம் ஒருமுறை பேசிக் கொண்டிருந்த போது மிக அழகாக ஒரு கருத்தை வெளியிட்டார்.

"மரம் அழுகிறது; கல்லும் கண்ணீர் வடிக்கிறது! என்று கவிதை எழுதுகிறோம். இதை எண்பிப்பது எப்படி? இதற்கு எப்படிப் படம்

போடுவது?... இது பெரிய விஷயம். இதுபோன்ற கருத்துக்கு உருவம் கொடுக்கப் புதுக்கலை அவசியந்தான்" என்று கூறினார்.

பாவேந்தருக்குக் காஷ்மீர் சால்வை மீது அளவு கடந்த விருப்பம். யாராவது பாதையில் போர்த்துக் கொண்டு செல்வதைப் பார்த்தால் "தோ! அவர் போர்த்துக் கிட்டுப் போறாரே அந்தச் சால்வை நல்லாருக்கல்ல. என்ன விலை இருக்கும்?" என்று கேட்பார். அவருடைய விருப்பத்தை அறிந்த நான் திருவல்லிக்கேணி சௌக்லியில் தேடிப்பிடித்து ஒரு நல்ல சால்வையாக வாங்கி ஒரு விழாவின்போது அவருக்குப் போர்த்தினேன். அவருக்கு அளவுகடந்த மகிழ்ச்சி. எந்த விழாவுக்குப் போனாலும் அதை மூலைவாக்கில் மடித்துக் கழுத்தில் போட்டுக் கொண்டு செல்வார். அவர் சென்னையில் இருந்தபோது அச்சால்வையைக் கழுத்தில் போட்டபடி அவர் திருவுருவத்தை வண்ண ஓவியமாகத் தீட்டினேன். அந்த ஓவியம் சட்டமிடப்பட்டு இன்றும் அவர் வீட்டில் மாட்டப்பட்டுள்ளது. தமது வாழ்வின் இறுதிக் காலத்தில் அப்படத்தை ஆர்ட்தாளில் நிறைய அச்சிட்டு வைத்துக் கொண்டு தம்மைக் காண வருபவர்க்குக் கொடுப்பார்.

பாவேந்தர் கடைசி வரையிலும் என்னிடம் மிகவும் அன்பாகவும் மதிப்போடும் பழகினார். என்னைப் பார்க்க வரும்போது கட்டாயம் பழம் வாங்கி வருவார். என்னைக் கடிந்து கொண்டதில்லை. 'சர்மா! சர்மா!' என்று உயிரையே விடுவார். ஆனால் எல்லாரிடத்திலும் அவர் அவ்வாறு நடந்து கொண்டார் என்று சொல்ல முடியாது. கோபம் வந்து விட்டால் அவர் என்ன செய்வார் என்று சொல்ல முடியாது.

சுந்தரமூர்த்தி கிராமணி என்பவர் பாவேந்தரின் நண்பர். அவர் நாட்டியக் குழுவொன்று வைத்திருந்தார். நாட்டிய நிகழ்ச்சியொன்று புதுவையில் நடத்துவதற்காக அவர் வந்திருந்தார். புயலும் மழையும் சேர்ந்தடித்த காரணத்தால் திட்டமிட்டிருந்த அந்நாட்டிய நிகழ்ச்சி நடத்தமுடியாமல் போய்விட்டது. பாவேந்தர் குடியிருந்த வீட்டுக்கு எதிர்வீட்டில் நாட்டியக்குழு தங்கியிருந்தது. சமையலுக்கு வேண்டிய ஏற்பாட்டைப் பாவேந்தர் செய்து கொண்டிருந்தார். அப்போது அவர் வீட்டில் ஒரு கட்டைப் பிரம்மச்சாரி வேலைக் கிருந்தான். அவன் ஓர் அப்பாவி. எல்லாரும் அவனைக் 'கோட்டைக் கறையான்' என்று கூப்பிடுவார்கள். சமையலுக்காகக் கால் படி மிளகாய் வாங்கி வரும்படி பாவேந்தர் அவனை அனுப்பியிருந்தார். அவன் தவறுதலாக அரை படி மிளகாய் வாங்கி வந்துவிட்டான். பாவேந்தருக்கு அளவு கடந்த கோபம்.

"ஏண்டா இவ்வளவு மிளகா வாங்கி வந்தே?" என்று கேட்டார் பாவேந்தர். அவன் ஏதோ அரைகுறையாகப் பதில் சொல்லிவிட்டு நகர்ந்தான்.

"டேய் நில்லுடா! எருமை! நா கேக்கற. நீ பாட்டுக்குப் போய்க் கிட்டெ இருக்கறயே... கேலியா பண்றே..." என்று சொல்லிவிட்டு ஓங்கிக் கன்னத்தில் அறைந்தார். பல் ஒன்று அவன் வாயிலிருந்து தெறித்து விழுந்தது. ஏதோ கோபத்தில் அடித்துவிட்டாரே தவிர, பல்விழுந்ததைப் பார்த்ததும் அவருடைய கண்கள் கலங்கிவிட்டன.

பாவேந்தருடைய வாழ்க்கையில் நினைவு கூரத்தக்க நிகழ்ச்சிகள் எத்தனையோ உண்டு. அவரோடு பழகியவர்கள் அவருடைய உணவுப் பழக்கங்களைப் பற்றி அடிக்கடி கூறுவதுண்டு. அவர் புலால் உணவை விரும்பிச் சாப்பிடும் இயல்புடையவர். நான் மரக்கறி உணவு உண்பவன். என்றாலும் நாங்கள் சேர்ந்து உணவுண்ட சில நிகழ்ச்சிகள் என் உள்ளத்தை விட்டு நீங்காமல் இருக்கின்றன.

சென்னையில் இருக்கும்போது தம்புச் செட்டித் தெருவில் உள்ள ராமபவனில் இட்டிலியைக் கட்டி வாங்கிவந்து அறையில் உண்பது பாவேந்தர் வழக்கம். ஒருநாள் நானும் என் நண்பர் ஒருவரும் பாவேந்தரை அழைத்துக் கொண்டு ராமபவனுக்கு சென்று அங்கேயே சாப்பிட்டோம். அப்போது ராமபவனில் இட்டிலி காலணா. பாவேந்தர் சுவைத்துச் சாப்பிட்டார். சாப்பிடும்போது நடுவில் பேசுவது அவருக்குப் பிடிக்காது; பேசினால் சுவை தடைபடும் என்பார். 'சப்ளையரை' அடிக்கடி சட்டினி கேட்டுச் சலித்துப் போய் 'இந்தா அந்தச் சட்டினித் தோண்டியை இங்கேயே வச்சுட்டுப் போ!' என்று கூறினார். அன்று எங்களுக்குச் சிற்றுண்டிச் செலவு 2 உருபா 14 அணா ஆயிற்று. அன்று அந்த 'பில் தொகை' பெரியது. விழுப்புரம் சந்திப்புக்கு எப்போது பாவேந்தர் போனாலும், பிளாட்பாரத்தைச் சுற்றி நோட்டமிடுவது அவர் வழக்கம். அங்கே ஒருவன் கண்ணாடிப் பெட்டியில் இட்டிலியை வைத்துக் கொண்டு விற்பான். அந்த இட்டிலி கொஞ்சம் பழையதாகவும் புளிப்பாகவும் இருக்கும். மிகவும் காரமாக மிளகாய்ப் பொடியை எண்ணெய்யில் கலந்து வைத்திருப்பான். அந்த இட்டிலி பாவேந்தருக்கு மிகவும் பிடிக்கும். பெட்டியையே காலி செய்து விடுவார்.

பாவேந்தர் கோபக்காரராக இருந்தாலும் சுவையான நண்பர். அவரோடு இருக்கும்போது பொழுது போவதே தெரியாது. எழுதத் தொடங்கிவிட்டால் யாரிடமும் பேச மாட்டார்; எழுதிக் கொண்டே இருப்பார். கையில் 'சார்மினார்' எப்போதும் புகைந்து

கொண்டே இருக்கும். கையில் ஊசி ஏறியது கூடத் தெரியாமல் அவர் எழுதிக் கொண்டிருந்ததை நான் பார்த்திருக்கிறேன்.

பாவேந்தருக்கும் எனக்கு இடையிலே இருந்த நட்பு ஆத்மார்த்தமானது. அவர் நினைவுகள் எல்லாம் இன்றும் என் உள்ளத்தில் பசுமையாக இருக்கின்றன.

"பாவேந்தர் ஆத்திகராக இருந்து நாத்திகராக மாறியவர். என்றாலும் கலையழகோடு கூடிய பக்திப்பாடல்களை மெய்மறந்து சுவைக்கும் இயல்புடையவர், பாவேந்தர் நடத்திய இன்பஇரவு நாடகக் குழுவிலிருந்து விலகியதும் நானே சில நண்பர்களின் உதவியோடு 'வேலின் வெற்றி' என்ற திரைப்படத்தை எடுக்க முயற்சி செய்தேன். ஆனால் அப்படம் வெளிவரவில்லை.

அப்படத்தில் முக்கிய பாத்திரத்தில் நடிப்பதற்காக மதுரை மாரியப்பன் சுவாமிகள் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார். பக்திப் பாடல்களைக் கேட்பவர் உள்ளம் உருகும்படி பாடவல்லவர் அவர். அப்படத்துத் திரைக்கதை வசனம் பாடல்களைப் பாவேந்தர் எழுதினால் சிறப்பாக இருக்கும் என்று நான் கருதினேன். ஆனால் பக்திப்படத்துக்கு எழுத ஒத்துக்கொள்வாரா என்ற ஐயம் எனக்கு ஏற்பட்டது. ஒருநாள் அவர் சென்னை வந்திருந்தபோது ஆயிரம் ரூபாயை நோட்டாகவும், வெள்ளி நாணயங்களாகவும் மாற்றி ஒரு தட்டில் வைத்து அவர் தங்கியிருந்த விடுதி அறைக்குச் சென்று அவர் முன்னால் வைத்து வணங்கினேன்.

'என்ன சர்மா இது?' என்றார் பாவேந்தர். 'நான் முதன்முதலாக ஒரு திரைப்படம் எடுக்கும் பணியில் ஈடுபட்டிருக்கின்றேன். அது ஒரு புராணப் படம். நீங்கள் மறுக்காமல் அதற்குத் திரைக்கதை வசனம் பாடல்கள் எழுதித் தரவேண்டும். இது அதற்கு 'முன் பணம்' என்று பணிவோடு சொன்னேன். அவர் மறுப்பு ஏதும் சொல்லாமல் 'அப்படியா! ரொம்ப மகிழ்ச்சி! உனக்கு எழுதாம வேற யாருக்கு எழுதப்போறேன்!' என்று சொல்லி ஒப்புக் கொண்டார். அதன்படி பாடல்களும் எழுதிக் கொடுத்தார்.

அப்பாடல்களை 'ரெகார்டிங்' செய்வதற்காக நாங்கள் ஸ்டுடியோவில் கூடியிருந்தோம். அப்போது பாவேந்தரும் வந்திருந்தார். மதுரை மாரியப்பசுவாமிகள் அப்பாடல்களை உருக்கமாகப் பாடியதைக் கேட்டு உள்ளம் உருகிய பாவேந்தர் "அடேயப்பா! இவர் பாடும்போது அந்த முருகனே கையில் வேலோடு கண் எதிரில வந்து நிக்கற மாதிரியல்ல இருக்குது' என்று பாராட்டிக் கூறினார்."

கொள்கை மறவர்

இரா. இராசகோபாலன்

காவிரி பாயும் தஞ்சைத் தரணி கழகக் கருத்துக்கு வளவயல், அஞ்சாநெஞ்சன் அழகிரி போன்ற அரியேறுகளைப் பெற்றெடுத்த வீர விளை நிலம். திருவாளர் இராசகோபாலன் திராவிடர் கழகத் தோழர்களுள் குறிப்பிடத்தக்கவர். மாவட்டத் தலைவராகவும், தஞ்சை நகரத் திராவிடர் கழகத் தலைவராகவும் நீண்ட நாள் பணியாற்றியவர். இராணி உணவு விடுதியின் உரிமையாளர், பாவேந்தரிடம் பற்றோடு பழகியவர்.

நீதிக்கட்சி தமிழகத்தில் செல்வாக்கோடு இருந்த காலத்தில் நான் சிறுவன். இளமைக் காலத்தில் பட்டுக்கோட்டை அழகிரி, குப்தா, ஐயா (பெரியார்) ஆகியோர் பேச்சில் எனக்கு ஈடுபாடு அதிகம். 1937ஆம் ஆண்டு குப்தா தலைமையில் இந்தி எதிர்ப்புப் படையில் நான் சென்றேன்.

1946ஆம் ஆண்டு தஞ்சைக்கு அருகில் உள்ள மாரியம்மன் கோவில் கூட்டத்துக்கு ஐயாவையும், பாவேந்தரையும் அழைத்திருந்தேன். பாவேந்தரின் கம்பீரமான தோற்றமும், துணிச்சலான பேச்சும் இளைஞனாக இருந்த என்னைப் பெரிதும் கவர்ந்தன. ஐயாவைப் போலப் பாவேந்தரும் எம்மீது உள்ளம் படைத்தவர்; நினைத்ததை அஞ்சாமல் கூறுபவர். ஐயா கூடச் சில சமயங்களில் வளைந்து கொடுப்பார்; ஆனால் பாவேந்தர் கொஞ்சங்கூட வளைந்து கொடுக்காத கொள்கை மறவர். மாரியம்மன் கோவில் கூட்டத்தில் புராணங்களில் புதைந்து கிடக்கும் ஆபாசங்களையும் மூடை நாற்றம் வீசும் மூடத்தனங்களையும் சூறைக் காற்றைப் போல் சுழன்றடித்துத்

தாக்கினார். சிறுத்தொண்டர் புராணத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது, இதையெல்லாம் ஒரு கதைன்னு எழுதிட்டா.. நாமும வெட்கமில்லாம படிக்கறோம்... என்று ஏகவசனத்தில் விளாசினார்.

கூழுக்கொருவனுக்கு உப்பில்லை என்றால்
கோலை முறித்தீடுவோம்-

என்ற அவர் பாட்டு வரிகள் எனக்கு மிகவும் பிடித்தமான வரிகள். பேராவூருணித் தோழர் கருப்பையா பாவேந்தர் பாடல்களை மெய்சிலிர்க்கப் பாடுவார்.

மாரியம்மன் கோவிலில் கூட்டம் நடந்த அன்றே தஞ்சையில் ஒரு திருமணத்துக்குப் பாவேந்தர் தலைமை தாங்கினார். 'மணமகள் ஒரு கைம்பெண்; கைக்குழந்தை ஒன்றும் அவருக்கு இருந்தது. அச்சீர்திருத்தத் திருமணத்துக்குத் தலைமை தாங்கிச் சிறப்புற நடத்திக் கொடுத்தார் பாவேந்தர்.

சாதாரணக் கழகத் தோழனிடத்திலும் பாவேந்தர் தந்தை போலப் பழகினார். 'பாரதிதாசன் கவிதை'த் தொகுப்பு எனக்குப் புத்துணர்ச்சியூட்டும் அருமருந்து. எனக்குச் சோர்வு ஏற்படும் போதெல்லாம் அதை எடுத்துத் திருப்பித் திருப்பிப் படிப்பேன். புதுச்சேரிப்பக்கம் போனால் நான் அவரை வீடுதேடிச் சென்று பார்க்காமல் திரும்ப மாட்டேன். தஞ்சாவூர்ப்பக்கம் வந்தால் என்னைப் பார்க்காமல் அவரும் போக மாட்டார்.

புதுச்சேரியில் கடல்மீனே தின்று பழக்கப்பட்ட அவருக்குக் குளத்து மீன் (வரால்) என்றால் உயிர். தஞ்சை வந்தால் வரால்மீன் பொரியலும் குழம்பும் அவர் இருப்பிடத்திற்கு-பெரும்பாலும் திராவிடர் கழகக் கட்டிடம் அல்லது அரசர் சத்திரத்தில் தங்குவார்-நான் கொடுத்தனுப்புவது வழக்கம்.

மரக்கறி உணவுக்காரரைக் கண்டால் 'மூன்று மூட்டைப் பருப்புத் தின்றால் முக்கால் அணாத் தங்கச்சத்து' என்று கேலி செய்வார்.

கரந்தைத் தமிழ்ச்சங்கத்தில் ஒருமுறை பேசிய போது, 'தெய்வந் தொழஅள் கொழுநன் தொழு தெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை' என்ற பாட்டுக்கு அவர் கூறிய புதிய விளக்கத்தைக் கேட்டு நான் மெய்சிலிர்த்துப் போனேன்.

என் ஆசான் பாரதிதாசன்

புலவர் மு. மதிவாணன்

இக்கட்டுரையாசிரியர் புலவர் மு. மதிவாணன் மாயூரம் கூறை நாட்டைச் சேர்ந்தவர். பாவேந்தரின் மாணவர் பட்டாளத்தில் ஒருவர். இசையும் நாடகமும் கைவரப் பெற்றவர். பாவேந்தர் இசையமுதில் பல பாடல் களுக்குப் பண்ணமைத்தவர். 'பண்ணருவி' இவரெழுதி யுள்ள இசை நூல். 'மதிவாணன் நாடகத் தமிழ் இயக்கம்' என்ற அமைப்பை நிறுவி நாடகத் தொண்டாற்றி வருகிறார்.

எங்கள் குடும்பம் பாவேந்தருக்கு மிகவும் வேண்டிய குடும்பம். சிங்கப்பூரில் இருந்த என்னைத் தமிழ்நாட்டுக்கு வரவழைத்துத் தருமபுரம் ஆதினம் தமிழ்க் கல்லூரியில் சேர்த்தவர் பாவேந்தரே.

தமிழ்ப்புலவர் கல்வி பயின்றிருந்தாலும் எனக்கு ஆசிரியர் பணியில் ஈடுபாடு ஏற்படவில்லை. இசைத்துறையும் நாடகத்துறையும் என்னைப் பெரிதும் கவர்ந்த காரணத்தால், இசை நாடக அரங்குகளிலே என் பொழுதைக் கழித்தேன். பாவேந்தரைச் சந்திப்பதும், அவர் பாடல்களைப் பாடுவதும் என் இனிய பொழுது போக்கு. பாவேந்தரோடு கூட்டங்களுக்கும், மாநாடுகளுக்கும் சென்று அவர் பாடலைப் பாடி மகிழ்விப்பது என் வழக்கம்.

பாவேந்தருக்குப் புறாவின் இறைச்சி மிகவும் பிடிக்கும். இரவு நேரங்களில் மாயூரம்கோவில் கோபுரத்தின் மீது ஏறி அங்கு அடைந்திருக்கும் புறாக்களைப் பிடித்து ஒரு கூடையில் போட்டுத் திராவிடமணி என்ற தோழரிடம் கொடுத்துப் புதுவை அனுப்புவேன். ஒருமுறை நான் கொடுத்தனுப்பிய புறாக்கள் சற்று

முற்றலானவை. 'நீ அனுப்பிய புறாக்களைப் பெற்றேன்; அத்துணையும் கிழங்கள்' என்று அடுத்தநாள் பாவேந்தரிடமிருந்து கடிதம் வந்தது. உள்ளத்தில் உள்ளதை மறைக்காமல் வெளிப்படுத்தும் அவர் பண்பு என்னை மிகவும் கவர்ந்தது.

செம்பனார் கோயிலில் ஒரு சீர்திருத்தத் திருமணத்துக்குப் பாவேந்தர் தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருந்தார். மணமகனுடைய நண்பர் ஒருவர் தலைவராக இருந்த பாவேந்தரின் ஒப்புதலைப் பெறாமல் 'வாழ்த்துப்பா' ஒன்றைப் படிக்க வந்தார். 'என் இசைவு இல்லாமல் எள்ளும் அசையக்கூடாது. நல்லது கெட்டதுக்கு நான்தானே பொறுப்பு!' என்று சொல்லி வாழ்த்துப் பாவை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டார்.

இற்றைக்கு ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் யான் இசை மாணாக்கனாக இருந்த காலம் அது. ஒருநாள் பாவேந்தரிடமிருந்து ஓர் இனிய செய்தி வந்தது.

"கோவையில் நாளிது 1950 ஆம்யாண்டு 'மே'த் திங்கள் 27-28 ஆகிய நாட்களில் முத்தமிழ் வளர்ச்சி மாநாடு நிகழவிருப்பதால் நீவிர் இசையமுது பாடல்களைப் பாடுவதற்கு வந்து சேருக" என்று ஆணை பிறப்பித்திருந்தார்கள். காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த யான் பண்ணமைத்தது போக எஞ்சியிருந்த மற்ற பாடல்களுக்கும் இசை உரு போட்டுக் கொண்டு மாநாட்டிற்குச் சென்றிருந்தேன்.

முத்தமிழ் மாநாடு பாவேந்தர் அவர்களின் 'வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே' என்ற தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கப் பெற்றது. பாவேந்தர் அவர்களின் மாநாட்டுத் தலைமை உரையுடன் காலை நிகழ்ச்சி முடிவுற்றது. மாலையில் இசைத்தமிழ் நிகழ்ச்சி தொடங்கப்பட்டது.

பற்பல இசைஞர்கட்கு இடையிலே பாவேந்தருக்குப் பிடித்தமான பாடல்கள் பலவற்றை நான் பாடிக் கொண்டிருந்தேன். 'தலைவாரி பூச்சூடி' என்ற இசையமுதுப் பாடலைப் பாடத் தொடங்க இருந்த என்னை நோக்கி' "இதைத்தான் எல்லாரும் பாடுகின்றார்களே. நீ காலுக்குப் புன்னையிலை போலும்' என்ற பாடலைப் பாடேன்" என்று அரங்கினர் அறிய அறிவித்தார் பாவேந்தர்.

அதன்படி அப்பாடலைப் பாடி ஓய்ந்ததும் எனக்குப் பின் பாடவிருந்த பாடகர் கோவை திரு. அருச்சுனன் என்பவர். "இது என்ன இசை? யார் இதை இப்படி இசைப்படுத்தியது?" என்று ஓர் வினாவினை எழுப்பினார்.

நான் ஒலிபெருக்கி முன் நின்றவாறே 'இது பாகு ஆச்சு வரியை சார்ந்த இசை; பாவலர் பெருமானுக்கு மிகவும் பிடித்தமானது' என்று சுட்டினேன். கோவைப் பாடகர் அருச்சுனன் கேள்வி பாவேந்தர் அவர்கட்குப் பெரும் சீற்றத்தை உண்டு பண்ணியது என்று எண்ணுகிறேன். உடன் நிகழவிருந்த இசைத் தமிழ் மாநாட்டுத் தலைமையுரையாக இந்தப் 'பாகுஆசுவரி' இசையின் நுணுக் கத்தையே பேசத் தலைப்பட்டார்கள்.

இனிய என் மென்குரலால், பெண் இழைவது போன்று பாடிக் காட்டிய என்னையும் கடந்து, அரிமாக் குரலிலே அப்பண்ணைப் பாவேந்தர் பாடிக் காட்டினார். (ஆசுவரி-விரைந்து இசைக்கும் பாட்டு.)

"இந்தப் பாகு ஆசுவரிப் பண்ணை என் பாடகர் மதிவாணன் பெண் பாடுவது போன்று பாகாய் இழைத்துக் காட்டினார். சர்க்கரையைப் பாகாய்க் காய்ச்சும் போது அதன் கண் ஓர் இழை தோன்றுவதுபோன்று, இப்பண்ணை இழைக்கும்போது அதிலே தோன்றும் மெல்லிய எடுப்பின் ஓசை (இதை அம்மிங் என்பர்) எல்லாரையும் மயக்கிவிடுவதால்தான் இது 'பாகு ஆசுவரி' என்ற இனிய தமிழிசைக் கூறினைப் பெற்றிருக்கிறது - இந்த இசைதான் நம் பழந்தமிழ்ப் பாணர்களால் பெரிதும் விரும்பிப் பாடப்பெற்றதாக இசை கூறுநூல்கள் இயம்புகின்றன. இந்தப் பாகு ஆசுவரிதான் காலத்தால் கடைப்பிடிப்பாரற்றுச் சற்று இனிமை மீஇ. பெயர் மீஇ. 'பாகேசுவரி' என்று கர்நாடக இசையில் இடம் பெற்றுவிட்டது.

"இங்குள்ள தமிழ்ப் பண்களையெல்லாம் வடநாட்டார் தமதாக்கிக் கொண்டு உருமாற்றி, பொருள்மாற்றிக் கொண்டு வந்து கோயில்களில் அமர்த்தியுள்ள குட்டிக் கடவுள்களின் பெயரால் 'கர்நாடக சங்கீதராகம்' என்று விளம்பரப்படுத்துகின்றனர். அப்படி மாறி வழங்குவதுதான் 'பாகேசுவரி' என்ற கர்நாடக இசைப்பண். இங்குள்ள இசையாளர்கள் இதைப் புரிந்து கொள்வது சாலச்சிறந்த ஒன்றாகும்.

இப்படித்தான் தமிழில் உள்ள பல தூய சொற்றொடர்கள் பிற மொழியாளரால் கவர்ந்து செல்லப்பட்டு, உருமாறி வட சொல்லென்று நம்மிடையே திணிக்கப்படுவதும், அக்கூற்றினை ஏற்று இங்குள்ள முண்டங்கள், கூத்தாடுவதும் இன்று கொடுஞ் செயலாயிற்று. 'நிருத்தம்' என்ற சொல் ஆடலைக் குறிக்கும். ஆடும்போது வெளியிடும் முத்திரைகள் உள்ளத்தின் கூறுகளை வெளிக்கொணர்ந்து நிறுத்திக் காட்டுவதால் 'நிறுத்தம்' என்று குறிக்கப்பட்டுப் பின் நிருத்தம்' ஆயிற்று. ஆடல் புரியும் ஒருத்தி கை,

கண், வாய், மெய், முகம் ஆகியவற்றில் தன் அகக் குறிப்புகளைக் காட்டி நிறுத்துதல் இயல்புதானே. இத்தூய தமிழ்ச் சொல்லை 'நிர்த்தனம், நர்த்தனம்' என்று பாழ்படுத்தி வடசொல்லாக மாற்றிக் கொண்டு வந்து கூறுவார் கூற்றைக் கேட்டுத் திரியும் தமிழ்த் தறுதலைகளை உதைத்தாலென்ன!" என்று கூறி எதிரிலிருந்த ஒலிப் பெருக்கியை எட்டி உதைத்தார். அது இன்னும் என மனக்கண் முன்னே காட்சியளிக்கிறது.

இத்தகைய உணர்ச்சிப் பெருக்கான மாநாட்டில் கலந்து கொண்டு ஊருக்குத் திரும்பிய எனக்குப் புதியதோர் உணர்ச்சி பிறந்தது. தமிழில் பிறந்த, மறைந்த இசைப்பண்களையெல்லாம் ஆய்ந்தறிந்து தக்கதோர் இசை வளம் தமிழுக்குப் படைக்க வேண்டும் என்ற ஆர்வம் என்னை ஆட்கொண்டது. நாங்கள் ஏறி வந்த புகை வண்டி கரூரைத் தாண்டிக் கொண்டிருந்தது. உள்ளத்தில் ஏற்பட்ட என் புதிய ஆவலைப் பாவேந்தரிடம் புகலத் தலைப்பட்டேன்.

"நானும் தங்களைப்போல் இசைப்பாடல்கள் இயற்றி இசைக்க ஒரு வழியைக் காட்டுங்கள்" என்றேன்.

பாவேந்தருக்குச் சிரிப்பு வந்தது. "அடா! பாடகனெல்லாம் பாவலனாக மாறினால் இசையுலகத்தை யாரப்பா காப்பாற்றுவது? தமிழ்ப்பாட்டே தலையெடுக்காதிருக்கும் இந்தத் திரைப்பாட்டுக் காலத்தில், உன் வளரும் தமிழிசையை விடுத்துப் பாக்களத்தில் குதிக்கப் போகிறாயா? ஒரு துறையிலேனும் உருப்படியாகத் தேர்ச்சி கொள்; பிறகு பார்க்கலாம்" என்று கூறினார்.

ஊர் வந்ததும் என் அளவிட முடியாத உணர்ச்சி வெள்ளத்தில் எழுந்த ஒரு பாடலைப் பாவேந்தர்க்கு அனுப்பி வைத்தேன். அதிலிருந்து ஒரு சில சொற்களை அகற்றி அதனை அழகுபடுத்தி எழுதியனுப்பி இருந்தார்கள்.

ஒருமுறை இரண்டு வரி கொண்ட ஒரு பாடலை எழுதி அதை என் கடிதத்தாளில் (Letter Pad) அச்சிட்டு முதன் முறையாக அதில் பாவேந்தருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தேன். அதற்குப் பாவேந்தரிடமிருந்து மறுமொழி வந்தது. என்ன?

"உன் அஞ்சல் நன்று; உடன் அத்துணை அச்சுப்படிகளையும் எடுத்து வந்து சேருக" என்றிருந்தது.

எப்படி இருக்கும்! உடன் எல்லாக் கடிதத் தாளையும் கட்டிக் கொண்டு புதுவை போய்ச் சேர்ந்தேன். அப்போது அவர்கள் வீட்டில் இல்லை. பதிப்பகத்தில் இருப்பதாக அறிந்து அங்கு சென்றேன்.

ஒருவாறாக உள்ளத்தைத் தேற்றிக்கொண்டு எதிரில் போய் நின்றேன்.

"வாரும். எல்லாரும் நலந்தானே?" என்றார் பாவேந்தர்.

"ஆம் நலந்தான்!" என்று கூறிக்கொண்டே, கொண்டு போன கடிதத் தாள் கட்டுகளை அவர்முன் வைத்தேன். அவருடைய பார்வை என்னை ஏதோ ஏசுவதாகப்பட்டது. மூக்கின் வழியாக வந்த சுருட்டுப் புகைச்சலோடு, "அதோ அந்த மலையாளத்தான் கடைக்குப் போய் இரண்டு தேநீர் கொண்டுவரச் சொல்லிவாரும்" என்று கூறினார். அவ்வளவுதான். தேனீர்க் கடைக்குப் போய் வருவதற்குள் அவர் எதிரில் நான் வைத்திருந்த அத்துணைக் கடிதத் தாள்களையும் சுக்கு நூறாகக் கிழித்து முட்டாக வைத்திருந்தார்கள். அருகில் நான் வந்ததும் 'இந்தா' என்று தீப்பெட்டியை நீட்டினார்கள்.

'ஏன்?' என்றேன்.

'இவற்றைக் கொளுத்து' என்றார் பாவேந்தர்.

புரியாமல் திகைத்தேன்.

"என்ன புரியலையா? நீ பிழைபட எழுதிய பாட்டுக்குத்தான் இந்தத் தண்டனை. முதலில் இவற்றைக் கொளுத்திவிட்டு அதோ (மேசையைக் காட்டி) நீ எழுதிய அஞ்சல் தாளில் உள்ள அச்சுக் கவிதையைப் படி என்றார்கள்; படித்தேன்.

தாய்மொழி தமிழ்மொழி என்போம்–செப்பும்
தமிழை சிதையாது காப்போம்.

இதுதான் தாளில் உள்ள அச்சுக்கவிதை.

"பாட்டைப்பார்! சந்திப்பிழையோடு பாட்டெழுதித் தமிழைச் சிதைத்திருக்கிறாய்! 'செப்பும் தமிழை(ச்) சிதையாது காப்போம் என்றல்லவா எழுதவேண்டும்! ஐகாரத்துக்குப்பின் ஒற்று மிகுமே. ஒற்றுப்போடாமல் தமிழின் உயிரைக் கெடுத்திருப்பது மட்டுமல்லாமல் இதைப் பலரும் அறிய இவ்வளவு கடிதத் தாள்களிலும் ஏன் அச்சிட்டாய்? ஆகவேதான் கொளுத்தச் சொன்னேன்" என்று கூறி எழுந்து போய்விட்டார்.

நினைத்தாலே இனிக்கும் நாட்கள்

எஸ். முருகேசன்

இக்கட்டுரையாசிரியர் திரு. எஸ். முருகேசன் தருமபுரியைச் சேர்ந்தவர்; சட்டமன்றத் தலைவர் மாண்புமிகு க. இராசாராம் அவர்களின் நெருங்கிய உறவினர்; இசையறிவும் நடிப்பாற்றலும் மிக்கவர்; பாவேந்தர் எழுதிய கவிகாளமேகத்திலும் நடித்தவர். பாவேந்தரோடு பழகிய நாட்களில் இவர் கட்டிளங்காளை; கொள்கை வெறியோடு கூவித்திரிந்த இசைக்குயிலான பாவேந்தரைப் பற்றிய தம் இளைய நினைவுகளைச் சுவைப்பட இக்கட்டுரையில் கூறுகிறார்.

பாவேந்தருக்கும் எனக்கும் முதல் சந்திப்பு 1938ஆம் ஆண்டு ஏற்பட்டது. 'கவிகாளமேகம்' என்ற திரைப்படம் எடுப்பதற்குச் சேலம் மோகினி பிக்சர்ஸ் நிறுவனத்தார் முயற்சி செய்து கொண்டிருந்த நேரம். இளமையில் நான் இசையிலும், நாடகத்திலும் ஈடுபாடு மிக்கவனாக இருந்த காரணத்தாலும், படக் கம்பெனியின் பங்குதாரர்கள் என் குடும்பத்துக்கு மிகவும் வேண்டியவர்களாக இருந்த காரணத்தாலும், எனக்கிருந்த எடுப்பான தோற்றத்தாலும் அப்படத்தில் அரசனாக நடிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. கவிகாளமேகம் படப்பிடிப்பின்போது பாவேந்தரோடு ஏற்பட்ட நெருக்கமான பழக்கம் பின்னும் தொடர்ந்தது.

பாவேந்தரை நான் முதன் முதலில் சந்தித்தபோது 'மாந்தோப்பில் மணம்' என்ற பாடலை இசையோடு பாடிக் காட்டினேன்; அவர்

மிக்க மகிழ்ச்சியடைந்தார். அவர் எழுதிய வேறு பாடல்களையும் இசையமைத்துப் பாடிக் காட்டும்படி அடிக்கடி கேட்பார்; நானும் பாடுவேன்.

'வாழ்க வாழ்கவே!' என்று திராவிட நாட்டை வாழ்த்திப் பாவேந்தர் எழுதிய பாடல் இசைக்குயில் எம்.எல். வசந்தகுமாரியால் பாடப்பட்டுத் தமிழகத்தில் பெருத்த விளம்பரம் பெற்றதை யாவரும் அறிவர். இந்தப் பாடல் தோன்றுவதற்கு மூலகாரணம் நான்தான். நாடகத்தில் முதலில் 'கோரஸ்' பாடுவதற்கு நல்ல பாடலொன்று எழுதிக் கொடுக்க வேண்டுமென்று நானும் என் நாடக நண்பர்களும் கேட்டுக் கொண்டதற்கிணங்க இப்பாடலைப் பாவேந்தர் எழுதிக் கொடுத்தார்.

24.8.40இல் திருவாரூரில் நீதிக்கட்சி மாநில மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் முதன் முதலாக இப்பாடல் அரங்கேற்றப்பட்டது. மாநாடு முடிந்து சேலம் திரும்பிக் கொண்டிருந்தேன். அறிஞர் அண்ணாவும், இளந்தாடி நெடுஞ்செழியனும் நான் பயணம் செய்த அதே பெட்டியில் பயணம் செய்து கொண்டிருந்தனர். மீண்டும் மீண்டும் இப்பாடலைப் பாடும்படி இருவரும் என்னை விரும்பிக் கேட்டனர். சேலம் வருவதற்குள் குறைந்தது பத்து முறையாவது அவர்களுக்கு இப்பாடலைப் பாடிக் காட்டியிருப்பேன்.

பாவேந்தர் புலால் உணவை விரும்பிச் சாப்பிடும் இயல்புடையவர். எப்போதும் தனியாக அமர்ந்துண்ணும் பழக்கம் இவருக்குக் கிடையாது; நண்பர்கள் குழாத்தோடுதான் சாப்பிடுவார். எது சாப்பிட்டாலும் ஒன்றே! மீனென்றால் மீன்; கறியென்றால் கறி. எதையும் நிறையச் சாப்பிடுவார். 'என்னப்பா! அள்ளிக் கிட்டுவா! வாரிக்கிட்டு வா!' என்று தான் உண்ணும்போது இவர் கட்டளை யிடுவார். சேலத்தில் மாடர்ன் கேஃப் சிற்றுண்டியும், வில் வாத்திரிபவன் காஃபியும் இவருக்கு மிகவும் பிடிக்கும். இட்டிலி சாப்பிடும்போது எது இருந்தாலும் இல்லாவிட்டாலும் 'கரண்ட் சட்னி' (காரமான புளி மிளகாய்ச் சட்னிக்குப் பாவேந்தர் வைத்த பெயர்) கட்டாயம் இவருக்கு வேண்டும். மூர்மார்க்கெட் 'பானுரெஸ்டாரண்டில்' வான்கோழி பிரியாணி சாப்பிடுவார். ஆடு மனிதனுக்கு substitute என்பார். ஆட்டின் எந்த உறுப்பை மனிதன் சாப்பிடுகிறானோ, அந்த உறுப்பு மனிதனுக்கு வலிமை பெறும் என்று கூறுவார்.

பாவேந்தர் சிறந்த சுவைஞர். ஓவியர்கள் ஸ்டுடியோவில் படங்கள் எழுதுவதை எப்போதும் கண்கொட்டாமல் பார்த்தவண்ணம் உட்கார்ந்திருப்பார். முழங்கையைத் தலையணையில் ஊன்றிய வண்ணம் 'ஊம்.. எழுதிக்க என்பார்; நாங்கள் எழுதுவோம்.

பாவேந்தர் பெரிய பொதுவுடைமை வாதி. கையில் காசிருந்தால் கேட்பவர்க்கெல்லாம் கொடுத்து விடுவா. ஒருமுறை சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் உரிமையாளர் தமது படத்துக்குப் பாட்டெழுதியதற்காக ரூ. 4000/- பாவேந்தருக்குக் கொடுத்தார். அப்பணத்தில் நூறு ரூபாயைத் தமது பணியாளனிடம் கொடுத்து 'இந்தா! இதை இன்னைக்குச் செலவுக்கு வெச்சுக்க. மீதி கொண்டாராதே!' என்று கூறியதை நான் அருகில் இருந்து கேட்டேன். இதுபோல் எத்தனையோ நாட்கள்! ரிக்ஷாவில் ஏறி நாள் முழுதும் சுற்றிவிட்டு, ரிக்ஷா இழுப்பவனுக்குப் பத்தோ இருபதோ தாராளமாகக் கொடுப்பார்.

கவி காளமேகம் படப்பிடிப்பின்போது கையில் காசு தாராளமாக இருக்கும் நேரத்தில் எல்லாரையும் காரில் போட்டுக் கொண்டு எலியட் பீச்சுக்குப் போவார். கடற்கரையிலேயே விருந்துக்கு ஏற்பாடு செய்வார். காலியான மதுப்புட்டியில் கார்க்கை அடைத்துக் கடலுக்குள் வீசுவார். அலைமீது மிதக்கும் அப்புட்டியை நாங்கள் நீந்தி எடுத்துக் கொண்டு வரவேண்டும். பாவேந்தரோடு பழகிய நாட்கள் நினைத்தாலே இனிக்கும் நாட்கள்.

கவிகாளமேகத்தில் பாவேந்தர் எழுதிய சில திரைப்படப் பாடல்கள்:

1

வண்மை சேர்தமிழ் நாடெங்கள் நாடு
வாழ்த்துவோம் அன்போடு (வண்மை)

திண்மை யாகிய தோள்வீரர்
திங்கள் முகங்கொள் பெண்கள் வாழும்நாடு. (வண்மை)

பூரிக்கும் தமிழ்க் கவிதை
வாழ்வினுக் கதேஜீவன்
பாருக்கே இன்பம் பாவிக்கும் பழநாடு
வாழ்வின் பயன்சொன்ன நாடு.

சந்தனம் கமழ்பொதிகை
சந்தப் பறவையின் கீதம்
சிந்தையில் பொங்கும் ஆனந்தம்
செந்நெல் வயல் சிறக்கின்ற நாடு.

வண்ணம் பாடியே நடக்கும்
வைகை காவிரி பெண்ணை
தண்ணருந் தென்றல் பூஞ்சோலை
சாகாத இன்பம் தழைக்கின்ற நாடு. (வண்மை)

2

காதலென்றே முழங்கே-முரசே
காதலென்றே முழங்கே (கா)

மேவும் ஆண்பெண் காதலி னாலே
விளைந்திடும் ப்ராணன் இலையெனில் மேலே
வினைதான் ஏது விளைவுகள் ஏது
விற்பனா சக்தியும் காதலா லன்றோ
யாவுமே அதனால் ஆவி (கா)

வாழ்க்கை உடம்பினில் காதலே ஜீவன்
மலரினில் நறுந்தேன் வணையின் நாதம்
தேக்கிய அமுதில் சுவையின் சேர்க்கை
தென்றலின் குளிர்ச்சி காதலே யன்றோ
யாவுமே அதனால் ஆவி (கா)

3

பூலோக மெல்லாம் அவள்ரூபம்
புதிதாகிய சோபித தீபம் (பூ)

முகமா நிலவா காணேனே
முழங்காதோ மணி மொழிதானே மானே
நகைசிந்துகிறாய் எனை மாய்க்க
மதுரித வேலாம் மதனது கணைதான்
வதைபுரிந் திடுதே மனதுநைந் திடுதே (பூ)

தக தக தேஜோன் மயதேகன்
த்யாகன் கவிதா மோகன்
தீரன் தமிழ்யுகன்
தழுவிட அரிதாம்
அழகிய இருதோள்
மதிநிறைந் திடுதே மனதுநைந் திடுதே
சமயமும் வருமோ தழுவிக் கொளவே. (பூ)

4

மதமா காதலா
மதாபி மானமே பெரிதெனும்
விசாரம் மதிதனை மயக்குதே
காதலாம் அதிசய ஒளி
தேன் பாயும்நதி மேலானபதம்
யார்தான் தருவர் (மத)

எழில் மோகனா மேல் வைத்த
ஆசைதான் மேலானதோ
எல்லாம் தரும்பெரும்
வைணவ விலாசன் இணையடி பெரிதா
மோகனா எனதரும் பொருள்
ஸ்ரீகாந்தன் எனை ஆட்கொண்ட
பொருள்-யாதோ பெரிது (மத)

அவள் மேல் பழி

சேலம்
வேலுச்சாமி கவி

இக்கட்டுரையாசிரியர் திரு.வேலுச்சாமி கவி சேலத்தில் வாழும் பழம்புலவர். ஐம்பது ஆண்டுகள் திரைப்படத் துறையில் தொடர்பு உள்ளவர்; முதியவர். பாவேந்தர் சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் படங்களுக்கு எழுதிக் கொண்டிருந்தபோது அவரிடம் நெருங்கிப் பழகி அவர் அன்புக்குப் பாத்திரமானவர். பாவேந்தரோடு பழகிய நாட்களை நினைவுகூர்ந்து இலக்கியச் சுவை பட இக்கட்டுரையை எழுதியிருக்கிறார். பாவேந்தரின் சுவையான படத்துறை அனுபவங்களும், அவர் விருப்பு வெறுப்புக்களும் இதில் நிரல்படத் தொகுத்துத் தரப்பட்டிருக்கின்றன.

'அவள் மேல் பழி' என்ற பாடல் பாவேந்தர் எழுதியுள்ள 'காதல் நினைவுகள்' என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது. படித்தவுடன் உள்ளத்துக்கு உணர்ச்சியூட்டி நம்மைச் சுவை மயக்கத்தில் ஆழ்த்தும் கற்பனை வளம் பெற்ற பாடல் அது. எத்தனை முறை படித்தாலும் சலிப்புணர்ச்சி தோன்றாது. அப்பாடல் பாவேந்தருக்கும் எனக்கும் இடையே விளங்கிய நட்புக்கு ஒரு திருப்பு முனையாக அமைந்தது.

எனக்கும் பாவேந்தருக்கும் கி.பி. 1944ஆம் ஆண்டு வாக்கில் முதன் முதலாகத் தொடர்பு ஏற்பட்டது. எனக்குச் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த பிரபந்தக் கவிஞர்களிடமும், அவர்கள் படைப்புகளிடமும் பற்றும் ஈடுபாடும் அதிகம். உடுமலை முத்துசாமிக் கவிராயரின் பழக்கமும், அவர் எழுதியுள்ள இராமாயணக் கீர்த்தனைகளில் நல்ல

பயிற்சியும் எனக்குண்டு. யமகம், திரிபு, சிலேடை, சந்தம் ஆகிய சொல் விளையாட்டுக்களில் வியப்பும் விருப்பமும் எனக்குண்டு. இந்த நூற்றாண்டில் வாழ்ந்த பாரதி, பாரதிதாசன் பாடல்களை நான் அவ்வளவாக மதித்ததில்லை. புரியும்படி எளிய சொற்களால் எழுதப்பட்ட இவர்கள் பாடலை வெள்ளைப்பாடல்கள் என்று வெறுத்து ஒதுக்குவது என் வழக்கம். பாவேந்தரைச் சந்தித்தபோது எனக்கு முப்பது வயதிருக்கும்; சேலம் மாடர்ன் தியேட்டர்ஸில் கதை இலாகாவில் நல்ல சம்பளத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தேன்.

பாவேந்தரின் 'இன்ப இரவு' நாடகம் சேலம் சென்ட்ரல் டாக்கீசில் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரம். பாவேந்தர் ஒரு நாள் மாடர்ன் தியேட்டர்ஸ் ஸ்டுடியோவுக்கு வந்தார். 'என்னுடைய கவிதை நூல்களைப் படித்திருக்கிறாயா' என்று என்னைக் கேட்டார். நான் அவர் கவிதை நூல்களைக் கண்ணால் கூடப் பார்த்ததில்லை என்றாலும் சிலவற்றைப் படித்திருப்பதாகத் தலையசைத்தேன். மாடர்ன் தியேட்டர்ஸ் அலுவலகத்திலிருந்து அப்போது வெளியாகிக் கொண்டிருருந்த 'சண்டமாருதம்' என்ற சினிமாப் பத்திரிகை என் பொறுப்பில் இருந்தது. அப்பத்திரிகையில் வெளியிட ஒரு பாடல் தரும்படி அவரைக் கேட்டு வைத்தேன். அடுத்தநாளே 'அவள் மேல் பழி' என்ற பாடலை எழுதி என்னிடம் கொடுத்தார். அதைப் படித்ததும் பாவேந்தர் மீது அளவு கடந்த மதிப்பும், அவர் ஆற்றல் மீது அளவு கடந்த மரியாதையும், என் உள்ளத்தில் ஏற்பட்டன. அவர் பாடல்களை விரும்பி வாங்கிச் சண்டமாருதத்தில் தொடர்ந்து வெளியிட்டேன்.

1945ஆம் ஆண்டிலிருந்து சேலம் மாடர்ன் தியேட்டர்ஸுக்கும் பாவேந்தருக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அபூர்வசிந்தாமணி, சுபத்ரா, சுலோசனா, பொன்முடி, வளையாபதி ஆகிய படங்களுக்குக் கதை வசனம் பாடல் எழுதினார். அவருடைய காதல் காப்பியமான எதிர்பாராத முத்தம், பொன்முடி என்ற பெயரில் திரைப்படமாவதற்குத் துணையாக இருந்தவன் நான்.

'ஸ்ரீ ஆண்டாள்' என்ற திரைப்படத்தை நான் எடுத்தேன். அப்போது சுத்தானந்த பாரதியார் பத்திரிகைகள் மூலமாக மிக்க விளம்பரம் பெற்றிருந்த காரணத்தால், அவரை அப்படத்திற்குப் பாட்டு எழுதக் கேட்டுக் கொள்வதற்காக நான் புதுச்சேரி சென்றேன். சுத்தானந்த பாரதியார் அப்போது அரவிந்த ஆசிரமத்தில் தங்கியிருந்தார். அவருடைய கீர்த்தனைகள் சில அப்போது இசையுலகில் எல்லாராலும் பாடப்பட்டு மிக்க விளம்பரம் பெற்றிருந்தன. ஆண்டாள் படத்துக்குச் சில பாடல்கள் எழுதித் தரும்படி அவரை

நான் கேட்டேன். 150 பாடல்கள் அடங்கிய ஒரு காகிதக் கட்டை என் முன்னால் எடுத்துப் போட்டு 'இவற்றிலிருந்து தேவையான வற்றைப் பொறுக்கிக் கொண்டு போ' என்று சொன்னார். மூன்று பாட்டை எடுத்துக் கொண்டு அதற்குரிய தொகையை அவருக்குக் கொடுத்துவிட்டு வெளியில் வந்தேன்.

புதுச்சேரி வந்துவிட்டுப் பாவேந்தரைப் பார்க்காமல் செல்லக் கூடாது என்று எண்ணி அவர் வீட்டுக்குச் சென்றேன். என்னிடம் மிக்க அன்போடு பழகினார். இதற்கு முன் என்னை அவர் 'தம்பி' என்று அழைத்ததில்லை. ஆனால் இப்போது 'தம்பி! தம்பி!' என்று நொடிக்கொரு தரம் அவர் அன்பொழுக அழைத்தார். புதுவையில் இரண்டு நாள் தங்கிச் செல்லுமாறு வற்புறுத்தினார். இதில் ஏதோ விசயம் இருக்கிறது என்று புரிந்து கொண்டு நானும் இரண்டு நாள் தங்கினேன். அவருடைய காதற் காப்பியமான எதிர்பாராத முத்தத்தை எடுத்து என்னிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னார்; படித்துப் பார்த்தேன். 'திரைப்படத்துக்கு மிகவும் ஏற்ற கதை! டி.ஆர். சுந்தரத்தைக் கலந்து கொண்டு உங்களுக்குத் தெரிவிக்கிறேன்' என்றேன் நான்.

"என்ன நான்கு... ஐந்து ரூபாய் வாங்கித் தருவியா?" என்று கேட்டார்.

'முயற்சிக்கிறேன்' என்று சொல்லிவிட்டு எதிர்பாராத முத்தத்தோடு சேலம் திரும்பினேன். சேலம் வந்ததும் அன்றே டி.ஆர்.எஸ்.ஸைச் சந்தித்து எதிர்பாராத முத்தம் கதையை எடுத்துச் சொன்னேன். கதை அவருக்கு மிகவும் பிடித்துவிட்டது. ரூ.10,001 கொடுப்பதாகச் சொன்னார். அப்படத்துக்குப் பாவேந்தரே வந்து வசனம் எழுதினார். அப்படம் ஒரு திரைக்காவியம்! சிறந்த வெற்றிப்படங்களில் ஒன்று! அவர் எழுதிய 'சுபத்ரா' வின் திரைக்கதை வசனம் புத்தகமாக வெளிவந்து டிமாண்டாக விற்றது. அந்நூலை நான்தான் 'எடிட்' செய்தேன்.

பாவேந்தர் மாடர்ன் தியேட்டர்ஸில் சுலோசனாவுக்கு வசனம் எழுதியபோது சில சுவையான நிகழ்ச்சிகள் நடைபெற்றன. சுலோசனா இந்திரஜித்தின் மனைவி. அப்போது நடிகர் சின்னப்பா புகழேணியின் உச்சியில் இருந்த நேரம். அவர் நடித்த கண்ணகி, மனோன்மணி, ஜகதலப்ரதாபன் போன்ற வெற்றிப் படங்கள் தமிழகமெங்கும் சக்கைபோடு போட்டுக் கொண்டிருந்தன. இந்திரஜித் வேடத்தில் நடிக்கச் சின்னப்பாவும், சுலோசனா வேடத்தில் நடிக்க கே.எல்.வி. வசந்தாவும் 'புக்' செய்யப்பட்டிருந்தனர். சின்னப்பாவுக்குரிய தொகை ரூ. 5,0000 முன் பணமாக ரூ.10,001 அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தது.

சுலோசனா திரைப்படமாக எடுத்த நேரத்தில் திராவிட இயக்கம் வலுவாகத் தமிழ்மண்ணில் வேரூன்றிக் கொண்டிருந்தது. திராவிட இயக்கத்தின் வளர்ச்சியால் தமிழ் விரைந்து மறுமலர்ச்சியைப் பெற்றுக் கொண்டிருந்தது. இராவணன், இரணியன், இந்திரஜித் போன்ற இதிகாசப் பாத்திரங்கள் தமிழ் வீரர்களாக மக்கள் முன் நிறுத்தப்பட்டனர். மாடர்ன் தியேட்டர்ஸ் உரிமையாளர் டி.ஆர். சுந்தரம் இங்கிலாந்தில் படித்துப் பட்டம் பெற்றுத் திரும்பியவர்; ஆங்கில மாதைத் திருமணம் செய்துகொண்டு மேலை நாட்டுப் பாணியில் வாழ்ந்து கொண்டிருந்தவர். என்றாலும் அவருக்குத் தமிழ் இலக்கியங்களில் அலாதியான பற்றும் ஈடுபாடும் உண்டு. ஐம்பெருங்காப்பிய வரிசையைச் சேர்ந்த குண்டலகேசியையும், வளையாபதியையும் வெற்றித் திரைப்படங்களாக எடுத்து வெளியிட்ட பெருமை அவரையே சாரும். சுந்தரம் பிள்ளையின் மனோன்மணீய நாடகத்தையும் திரைப்படமாக்கினார். அன்று புரட்சிக்கரமாகவும், விறுவிறுப்போடும் எழுதிய கலைஞர் கருணாநிதியையும், கவிஞர் கண்ணதாசனையும் ஆதரித்து வளர்த்தவர் இவரே!

இந்திரஜித்தின் வீர வாழ்க்கையை நல்லதோர் திரைப்படமாக உருவாக்க வேண்டும் என்பதில் டி.ஆர்.எஸ். மிக்க ஆர்வம் காட்டினார். பாவேந்தரும் அப்படத்துக்கு உணர்ச்சி ததும்ப வசனம் எழுதியிருந்தார். வரலாற்றுக் கதாநாயகனாகவும், புராணக் கதாநாயகனாவும் பல படங்களில் நடித்துத் தம் திறமைக்கு முத்திரை குத்திக் கொண்டிருந்த சின்னப்பா இந்திரஜித்தாக நடித்தால் மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று டி.ஆர்.எஸ். கருதினார். ஆனால் அவர் நினைத்தது நடைபெறவில்லை.

சின்னப்பா மிகச்சிறந்த நடிகர், அவருக்கு 'ரிகர்ஸலே' தேவையில்லை. நடிக்க ஆரம்பித்தால் மளமளவென்று 'டேக்' எடுத்து விடலாம். நடிக்க வரும்போது இளம் போதையில்தான் வருவார். போதை சற்று அதிகமாக இருந்து அவர் நடிப்பில் யாராவது குறுக்கிட்டால் தகராறு தான். அவர் நடிக்கும்போது நான் எப்போதும் அருகில் இருக்க வேண்டும். அடிக்கடி பி.யூ.சி. (பி.யூ.சின்னப்பாவின் சுருக்கம்) பி.யூ.சி. என்று சொல்லித் தட்டிக் கொடுத்து வேலை வாங்கிவிடுவேன்.

சுலோசனா படத்துக்குப் பாடல் 'ரெகார்டிங்' ஆகிக்கொண்டிருந்தது. சர்வஜீவதயாபரனே' என்ற பிலகரி ராகப் பாடலைச் சின்னப்பா பாடிக் கொண்டிருந்தபோது தகராறு ஏற்பட்டது. டி.ஆர்.எஸ். கடுமையாகக் கண்டித்தார். கோபம் வந்துவிட்டால் பெரிய

நடிகர்களையும் 'அடே' என்று தான் திட்டுவார். சின்னப்பா கோபித்துக் கொண்டு போய்விட்டார். பிறகு அவர் மாடர்ன் தியேட்டர்ஸுக்குள் நுழையவில்லை.

சின்னப்பா வீரவசனம் பேசி நடிப்பதில் மிகவும் வல்லவர். அவரை உள்ளத்தில் நினைத்துக் கொண்டுதான் இந்திரஜித்துக்கு பாவேந்தர் வசனம் எழுதியிருந்தார். சின்னப்பா போனபிறகு அப்பாத்திரத்திற்கு யாரைப் போடுவது என்பது பெரும் பிரச்சனையாகிவிட்டது. கடைசியில் டி.ஆர்.எஸ். தாமே இந்திரஜித் பாத்திரத்தை ஏற்று நடிக்க முடிவு செய்தார். பாவேந்தருக்கு இந்த முடிவு பெருத்த ஏமாற்றமாகிவிட்டது. அவர் நேராக டி.ஆர்.எஸ். அலுவலகத்திற்குச் சென்று 'நீதான் ஹீரோ பண்ணப் போறயாமல்ல?" என்று கேட்டார். அவரும் 'ஆ... மா' என்றார். டி.ஆர்.எஸ்.ஸை 'நீ' என்று ஒருமையில் பேசும் தகுதி பாவேந்தர் ஒருவருக்குத்தான் இருந்தது. வேறு யாரும் அவரை 'நீ' என்று ஒருமையில் சொல்லி நான் கேட்டதில்லை.

டி.ஆர்.எஸ்.ஸை சந்தித்த பிறகு பாவேந்தர் வெளியில் வந்தார். நானும் அவரும் மெதுவாக ஸ்டுடியோ வாயிலை நோக்கிப் பேசிக் கொண்டே நடந்தோம். டி.ஆர்.எஸ். தமிழை ஆங்கில பாணியில் பேசிப் பழக்கப்பட்டவர். அவர் பாவேந்தரின் சந்தத் தமிழைப் பேசினால் எப்படியிருக்கும்?

பாவேந்தர் சொன்னார்;

"இந்திரஜித் மண்டோதரியின் வயிற்றிலிருந்து பிறந்து வெளியே வந்ததும் அழுதான். அவன் அழுத குரல் இடிஇடிப்பது போல இருந்தது. அக்குரலைக் கேட்டுத் தேவர்களெல்லாம் அஞ்சி நடுங்கி ஓடி ஒளிந்தனர். அவ்வளவு Harshtone! இவ (டி.ஆர்.எஸ்) எப்படி என் வசனத்தைப் பேசித் தொலைக்கப் போறானோ?" என்று கூறி வருத்தப்பட்டார். அவர் எதிர்பார்த்தபடி தான் நடந்தது. இந்திரஜித் இராவணனிடம் பேசும்போது வெள்ளைக்காரப் பாணியில் 'தா...ந்தையே!' என்று தான் திரைப்படத்தில் அழைத்தான். அப்படத்தில் தந்திரக் காட்சிகள் மிக அருமையாக எடுக்கப்பட்டிருந்தன, என்றாலும் படம் தோல்வியடைந்தது.

பாவேந்தர் மாடர்ன் தியேட்டர்ஸுக்குக் கடைசியாக எழுதிய படம் வளையாபதி. பாவேந்தரின் நீண்ட வசனங்களைக் கதாநாயகனாக நடித்த முத்துகிருஷ்ணனால் (பின்னர் வளையாபதி முத்துகிருஷ்ணன் என்று அழைக்கப்பட்டார்.) பேச முடியவில்லை. அப்படத்தின் இயக்குநரான ரகுநாத் அவ்வசனத்தைச் சில இடங்களில் இவரைக் கலக்காமலே வெட்டி (cut short) விட்டார். இச்செய்தி பாவேந்தர்

காதுக்கு எட்டியதும் அளவு கடந்த கோபம் கொண்டார். "என் வசனத்தை வெட்டணும்னா என் காண்ட்ராக்டையே கேன்சல் செய்யுங்க" என்று சத்தம் போட்டார். அதற்குப் பிறகு பாவேந்தருக்கும் டி.ஆர்.எஸ்.ஸுக்கும் ஒத்துவரவில்லை. தமது விருப்பத்துக்கு மாறாக யார் நடந்து கொண்டாலும் டி.ஆர்.எஸ். ஸ்டுடியோவுக்குள் வைத்துக் கொள்ளமாட்டார். தமது விருப்பத்துக்கு மாறாக எது நடந்தாலும் பாவேந்தர் அங்கு இருக்க மாட்டார். எனவே பாவேந்தர் பாண்டி திரும்பினார். அதன்பிறகு மாடர்ன் தியேட்டர்ஸுக்குள் அவர் காலடி எடுத்து வைக்கவில்லை.

ஏழெட்டு ஆண்டுகள் கழித்துத் சென்னையிலிருந்து எனக்குப் பாவேந்தர் ஒரு கடிதம் எழுதியிருந்தார். அவருடைய பாண்டியன் பரிசின் காப்பியத் தலைவனான வேலன் பாத்திரத்துக்கு நான் ஏற்கனவே 'ட்ரீட்மெண்ட்' எழுதியிருந்தேன். சேலத்தில் இருந்தபோதே அதை அவரிடம் காட்டினேன். "இதைப் படமாகச் சுந்தரம் எடுத்தால் எடுக்கட்டும்; இல்லாவிட்டால் கிடக்கட்டும். வை பார்க்கலாம்" என்று அப்போது கூறிவிட்டார்.

இப்போது அந்த 'ட்ரீட்மெண்டை' எடுத்துக் கொண்டு எழும்பூர் விக்டோரியா ஹோட்டலுக்கு உடனே வரும்படி கடிதம் எழுதியிருந்தார்; நானும் அவ்வாறே சென்றேன். என்னைச் சந்தித்ததும் படத்துக்கு யார் யாரைப் போடலாம் என்று கேட்டார். காப்பியத் தலைவன் வேலன் பாத்திரத்திற்கு சிவாஜியைப் போடலாம் என்றேன்; அவர் சற்றுத் தயங்கினார். படத்துக்கு 'ஸ்டார் வேல்யூ' தேவை என்று நான் வற்புறுத்தினேன். உடனே அப்போது முதலமைச்சராக இருந்த காமராசரைத் தொலைபேசியில் கூப்பிட்டுத் தம் படத்தில் நடிக்கும்படி சிவாஜிக்கு சொல்லும்படி கேட்டுக் கொண்டார். காமராசரும் உடனே சிவாஜிக்குத் தொலைபேசியில் அக்கருத்தைத் தெரிவித்தார். சிவாஜியும் ஒப்புக் கொண்டார்.

அடுத்தநாள் காலை பாவேந்தர், முருகதாசா, நான் ஆகிய மூவரும் சிவாஜியின் வீட்டுக்குப் போனோம்.

அங்கு எங்களுக்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. பாண்டியன் பரிசுக் கதையைப் பற்றிப் பாவேந்தர் சொன்னார். 'நான் பலமுறை படித்திருக்கிறேன்; நானே வேலன் பாத்திரத்தில் நடிக்கிறேன்" நாளைக்குப் பேசுவோம்" என்று கூறி சிவாஜி எழுந்தார். நாங்களும் விடுதி அறைக்குத் திரும்பினோம். 'சிவாஜி' நாளைக்குன்னு ஏன் சொன்னா...? என்று கேட்டார் பாவேந்தர். நாங்கள் 'தெரியவில்லை' என்றோம்.

அடுத்த நாள் பாவேந்தர் தனியாகவே சிவாஜியின் வீட்டுக்குச் சென்றார். சிவாஜி அவரைப் பார்த்து, "வசனம் பாட்டு எல்லாம் நீங்களே எழுதுங்கள். மற்றபடி டைரக்ஷன், இசையமைப்பு, ஒளிப்பதிவு ஆகியவற்றுக்கெல்லாம் நான் சொல்லுபவர்களைத்தான் போடவேண்டும்" என்று கூறினாராம். பாவேந்தர் 'ஏன்?' என்று கேட்டிருக்கிறார்.

'எல்லாருமே என்னிடத்தில் இருக்கிறார்கள். வேறு டைரக்டர் களைப் போட்டால் அவர்கள் என்ன நினைக்கிறார்களோ, அதன்படி என்னை நடிக்கச் சொல்லுவார்கள். ஆனால் நான் எப்படி நடிக்கிறேனோ அதை அப்படியே ஏற்றுக் கொள்ளும் டைரக்டர் தான் எனக்கு வேண்டும். ஆகையால் பீம்சிங்கைப் போடுங்கள்!" என்று சிவாஜி சொன்னா 'சரி பார்க்கலாம்!' என்று சொல்லி விட்டுப் பாவேந்தர் எழுந்து வந்து விட்டார்.

அன்றைக்கு அவர் திரும்பியபோது அவர் நல்ல மனநிலையில் இல்லை. வழக்கத்துக்குச் சற்று அதிகமாகவே மதுவருந்தினார். 'அவன் என்ன பெரிய நடிக...! அவன் நடிக்காட்டி என்ன?' என்று வருத்தத்தோடும் கோபத்தோடும் பேசினார். நானும் முருகதாசாவும் அவரைச் சமாதானப்படுத்தி பீம்சிங்கையே டைரக்டராகப் போடும்படி சொன்னோம். அவரும் ஒப்புக் கொண்டார்.

பீம்சிங் அப்போது சுறுசுறுப்பான டைரக்டர்களுள் ஒருவர். அப்போது 'விடிவெள்ளி' என்ற படத்தை இயக்கும் வேலையில் மும்முரமாக மூழ்கியிருந்தார். அப்போது அவரைத் தேடிப்பிடிப்பதே மிகவும் சிரமமாக இருந்தது. ஒருநாள் பாவேந்தர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பீம்சிங்கை வரும்படி சொன்னார்: அவரும் வந்தார். பாண்டியன் பரிசைக் கொடுத்து அதற்கு ட்ரீட்மெண்ட் எழுதிக் கொண்டுவரும்படி சொன்னார். பேச்சுவாக்கில் "ஆமா, நீ எத்தனாவது படிச்சிருக்கே?" என்று பீம்சிங்கைக் கேட்டார். 'நான் தமிழே படிக்கல. பூனாவிலே படிச்சேன்' என்று பீம்சிங் சொன்னார். கொஞ்ச நாளில் 'பாரதிதாசன் பிக்சர்ஸ்' என்ற பெயரில் முதலமைச்சர் காமராசர் பாவேந்தரின் படக்கம்பெனியைத் துவக்கி வைத்தார். பாண்டியன் பரிசுக்கும் எனக்கும் ஏற்பட்ட தொடர்பு இவ்வளவுதான். பிறகு சென்னை செல்லும்போது பாவேந்தரைச் சந்தித்து பேசிவிட்டு வருவது வழக்கம்.

பாவேந்தரோடு பழகியவர்களுக்கு அவருடைய உணவுப் பழக்கங் கள் நன்றாக நினைவிருக்கும். அவர் சேலத்தில் தங்கியிருந்தபோது அடிக்கடி மீன் கேட்பார். செவ்வாய்ப் பேட்டைச் சந்தையிலும்,

பனைமரத்துப் பட்டி ஏரியிலிருந்தும் வரால்மீன் வாங்கிவந்து கொடுப்பேன். வரால் என்றால் அவருக்கு உயிர்; அதன் சுவை பற்றி விரிவாகப் பேசுவார். மீன் குழம்பை மூன்றுநாள் சுண்டவைத்துச் சாப்பிடுவார். சேலம் நண்பர் ஒருவர் கரடி வற்றலும், புதுக்கோட்டை நண்பர் ஒருவர் புலி வற்றலும் கொண்டுவந்து கொடுப்பார்கள். அவற்றைச் சமையல்காரனிடம் எண்ணிக் கொடுத்து வறுக்கச் சொல்லுவார். கருவாடு அவருக்குப் பிடிக்கும். பரிமாறப்பட்ட வாழை இலையின் பக்கவாட்டில் அமர்ந்து கொண்டு எங்களிடம் பேசியவண்ணம் சாப்பிடுவார். .இப்படி சாப்பிட்டு வேறு யாரையும் நான் பார்த்ததில்லை.

சென்னை போக்ஸ் ரோட்டில் இருந்த டைரக்டர் கோட்னிஸ் வீட்டின் ஒரு பகுதியில் பாவேந்தரின் அலுவலகம் இருந்தது. ஒருநாள் பாவேந்தரும் நானும் இரண்டாவது படம் பார்க்கச் சென்றோம். முதல் ஆட்டம் இன்னும் அந்தக் கொட்டகையில் விடவில்லை. பாவேந்தர் வெளியில் ஒட்டியிருந்த சினிமா போஸ்டர்களையெல்லாம் மெதுவாகப் பார்த்துக்கொண்டு உள்ளே நுழைந்தார். அங்கே நின்று கொண்டிருந்த வாயில் காப்பாளன் 'யாரது?' வெளியே போய்யா!' என்று அவரை விரட்டினான். 'யாரைப் பார்த்து வெளியே போகச் சொல்ற' என்று சொல்லி அவனை அடித்து விட்டார். உடனே உள்ளே இருந்த கொட்டகை முதலாளி, மேனேஜர் எல்லாம் ஓடி வந்து இவரைச் சமாதானப்படுத்தி உள்ளே அழைத்துச் சென்றனர்.

ஒருநாள் ஒரு 35 வயதுப் பெண்ணொருத்தி இவர் அலுவலகத்துக்கு வந்தாள். அவள் ஆந்திரக்காரி. ஏதோ கோவில் கட்டுவதற்கு நன்கொடை கேட்டாள். 'இருக்கற கோயிலுக்குப் போறதுக்கே ஆளைக் காணம். நீ வேற கோயில் கட்டறயா? அது கிடக்கட்டும். உனக்குச் சமைக்கத் தெரியுமா?' என்று பாவேந்தர் கேட்டார்.

"தெரியும்" என்றாள் அவள்.

"சரி ஒருவேளை சமை பார்ப்போம்! ஆந்திரக்காரி... கொஞ்சம் காரம் அதிகமா இருக்கும் பரவாயில்லை!" என்று சொன்னார். பிறகு அவளைச் சமையல்காரி ஆக்கிவிட்டார்.

பாவேந்தர் முன்கோபக்காரர் என்பது நாடறிந்த செய்தி. என்றாலும் நண்பர்களிடம் பழகும்போது மிகவும் எளிமையானவர். அன்போடு உபசரிப்பார். சிரிக்கச் சிரிக்கப் பேசுவார். தமக்குத் தெரியாத செய்தியை வேறு யாராவது சொன்னால் வியப்போடு கேட்பார். அதை மற்றவர்களிடம் கூறிப் பாராட்டுவார். சில புலவர்களிடம்

காணும் குற்றங்களைச் சுட்டிக் காட்டினால் உடனே கோபப்படுவார்கள். அக்குற்றத்தை ஒத்துக் கொள்ள மாட்டார்கள். பாவேந்தர் அதற்கு நேர்மாறானவர்.

மாடர்ன் தியேட்டர்ஸ் செட்டில் உட்கார்ந்திருக்கும் போது அவருடைய திரைக்கதை வசனத்தைப் பற்றி அவரையும் வைத்துக் கொண்டு நாங்கள் விமர்சனம் செய்வதுண்டு. பொதுவாகப் பாராட்டித்தான் பேசுவோம். இரண்டோர் இடங்களில் குறையேதுமிருந்தால் அதையும் குறிப்பிடுவோம். சரி என்று பட்டால் உடனே அதைத் திருத்திக் கொள்வார்.

சுலோசனா படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தது. தேவேந்திரன், வாயு, வருணன் முதலிய தேவர்களையெல்லாம் இந்திரஜித் பிடித்து வந்து இலங்கையில் சிறை வைத்தான். பிரம்மதேவன் இலங்கை வந்து இராவணனை நோக்கி, 'இராவணேஸ்வரா! தோல்வி அடைந்தவரின் வாழ்வைக் குலைப்பது மேல்வலி படைத்த வீரர்க்கழகல்லவே! அடைக்கலம் புகுந்தோரை ஆதரிப்பதல்லவா அரச தர்மம்? தேவேந்திரன் இல்லாவிட்டால் தேவலோகமே அழிந்துவிடும். என் பொருட்டாவது அமரேசனை விடுவித்து அளகாபுரியை அழியாமல் காப்பாற்ற வேண்டும்! என்று கேட்டுக் கொண்டார். பிரம்மாவாக சேலம் தேவராஜநாயுடு என்பவர் நடித்துக் கொண்டிருந்தார். அவர் இலக்கியங்களில் ஓரளவு ஈடுபாடு கொண்டவர். தேவேந்திரன் தலைநகர் அமராபதி. குபேரன் தலைநகர் அளகாபுரி. இந்த வேறுபாட்டை அறிந்த அவர் 'அளகாபுரி' என்று இருப்பது தவறு என்று 'செட்டில்' கூறிக்கொண்டிருந்தார். சிறிய சலசலப்பு அங்கு எற்பட்டது.

"என்னய்யா அங்கே தகராறு?" என்று டி.ஆர்.எஸ். கோபத்தோடு வந்தார். பிரம்மாவை அடிக்கக் கையோங்கினார். அப்போது நாயுடு அவரைப் பார்த்து, "நான் நடிகனாயிருந்தால் படித்திருக்ககக் கூடாதா? நான் சொன்னதில் என்ன தவறு? வேண்டுமானால் பாவேந்தரையே கேளுங்கள்!" என்று கூறினார்.

அடுத்த கட்டிடத்தில் எழுதிக்கொண்டிருந்த பாவேந்தர் செட்டுக்கு அழைக்கப்பட்டார். நாயுடுவின் குற்றச்சாட்டைப் பற்றி அவரிடம் கூறியபோது அவர் சிறிதும் கோபப்படவில்லை. "ஆமய்யா! ஆமய்யா!" என்று அன்போடு கூறியதோடு நாயுடுவையும் பாராட்டினார். பிறகு அளகாபுரி அமராபதி என்று திருத்தப்பட்டது.

இதேபோலச் சுபத்ரா படப்பிடிப்பிலும் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. சுபத்ராவின் திருமணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் துவாரகையில்

நடைபெற்றுக் கொண்டிருந்தன. அவற்றை மேற்பார்வை செய்து கொண்டிருந்த பலராமன் அருகிலிருந்த அமைச்சரை நோக்கி "என்ன? திருமண ஏற்பாடுகள் யாவும் செம்மையாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றனவா?" என்று கேட்டார். அதற்கு அந்த அமைச்சன் "அரசே! பாட்டில் சிறந்த பாடகிகளையும், ஆட்டத்தில் சிறந்த அணங்குகளையும் மிக நீட்டாய் ஏற்பாடு செய்திருக்கிறேன். கேட்டால் கேளுங்கள், விட்டால் விடுங்கள்!' என்று பதில் சொன்னான். Neat என்பது ஆங்கிலச்சொல்.

பக்கத்தில் இருந்த நடிகர் ஒருவர் பாவேந்தரைப் பார்த்து, 'ஐயா! இராவணன் காலத்தில் 'நீட்' என்ற சொல் இருந்ததா?' என்று கேட்டார். அதைக்கேட்டுப் பாவேந்தர் கோபித்துக் கொள்ள வில்லை; சிரித்தார்.

நோபிள் பரிசு கிடைத்திருக்கும்

மதுரை தனுஷ்கோடி ராஜு

பாவேந்தர் படை வரிசையில் எத்தனையோ இளஞ் சிங்கங்களுள் தனுஷ்கோடி ராஜுவும் ஒருவர். இன்றைய பரபரப்பான அரசியல் சந்தடியில் இலக்கிய ஆரவாரத்தில் இவர் பெயர் தெரியாமல் இருக்கலாம். பாவேந்தரது புகழ் மாளிகையின் கடைக்கால் கற்களில் இவரும் ஒருவர்; சுறுசுறுப்பான இளமைப் பருவத்தின் சில ஆண்டுகளைப் பாவேந்தரின் திருத்தொண்டுக்கு முழுமையாக ஒப்படைத்தவர். இவர் மனைவி பூபதி மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் மேலாளர். பாவேந்தர் கனவில் வாழும் குடும்பம் இவர்கள் குடும்பம்!

நான் தேசியவாதி; இளமையிலிருந்தே எனக்கு முதலாளித்துவம் பிடிக்காது. கோவை பீளமேட்டில் மாணவனாக இருந்தபோது சமதருமவாதிகளான என்.ஜி.ராமசாமி, ரமணி ஆகியோரின் தொடர்பு ஏற்பட்டது. தேசிய வாலிபர் சங்கம் (National Youth League) என்பதைத் துவக்கி இளைஞர் அணியைத் திரட்டினேன். பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்திலும் பங்கு பெற்றுப் பணியாற்றினேன். பின்னர் இச்சங்கங்கள் திரு.வி.வி.கிரி தலைமையில் இயங்கி ஏ.ஐ.டி.யூ.சி.யோடு இணைந்தன.

1942-இல் நடைபெற்ற ஆகஸ்டுப் போராட்டத்தில் பங்கு கொண்டு அலிப்பூர் சிறையில் அடைக்கப்பட்டேன். 'பள்ளி கொண்டான், சாம்பசிவம் ஆசாரி, ஈரோடு கோவிந்தசாமி ஆகிய இருவரும் என்னோடு ஒன்றாகச் சிறையில் இருந்தவர்கள். ஈரோடு கோவிந்தசாமி பாவேந்தர் பாரதிதாசன் பாடல்களை இசையோடு

பாடுவார். சாம்பசிவம் அப்பாடலுக்கு விளக்கம் கூறுவார். இதனால் பாவேந்தர் பாடல்களில் எனக்கு ஈடுபாடு ஏற்பட்டது. சிறையிலிருந்து வெளிவந்ததும் முதல் வேலையாகப் 'பாரதிதாசன் கவிதைகள்' முதல் தொகுதியொன்றை வாங்கிக்கொண்டு நேராகப் புதுச்சேரி புறப்பட்டேன்.

புதுவையில் கால்வைத்ததும் 'புரட்சிக்கவிஞர் வீடு' எதுவென்று கேட்டேன். யாருக்கும் தெரியவில்லை. நீண்ட நேரம் சுற்றியலைந்த பிறகு எதிரில் வந்த ஒருவரை அணுகி விளக்கமாகக் கூறிக் கேட்டபோது, 'ஓ! வாத்தியார் வீடா?' என்று சொல்லிப் பெருமாள் கோவில் தெருவைக் காட்டினார். தாடி, மீசை, கதர்ச் சட்டை, கதர்ப்பை ஆகிய சிறைக்கோலத்தோடு பாவேந்தர் எதிரில் போய் நின்றேன். அப்போது ஏ.கே. செட்டியார், முல்லை முத்தையா ஆகியோர் பாவேந்தருடன் பேசிக் கொண்டிருந்தனர். நான் நின்று கொண்டிருந்தேன்.

தமது பேச்சைச் சாவகாசமாக முடித்துவிட்டு என் பக்கம் திரும்பி 'யார் நீ? என்ன வேணும்?' என்று கேட்டார். நான் நேராகச் சிறையிலிருந்து வருவதாகச் சொன்னதும் அவருக்கு மிக்க மகிழ்ச்சி. என்னைப் பற்றி எல்லாச் செய்திகளையும் பொறுமையாகக் கேட்டார். ஒரு வாரம் அவரோடு புதுச்சேரியிலேயே தங்கியிருந்தேன். இடையிடையே சுத்தானந்த பாரதியார், பொதுவுடைமைக் கட்சிப் பிரமுகர் சுப்பையா ஆகியோரையும் பார்த்துவிட்டு வருவேன். புதுவையிலிருந்து புறப்படும்போது பாவேந்தருக்கும் எனக்கும் நெருக்கமான பழக்கம் ஏற்பட்டிருந்தது.

அலிப்பூர் சிறையில் பொதுவுடைமைவாதிகளின் கூட்டமொன்று இருந்தது. பாண்டி சுப்பையா, நாகப்பட்டினம் முருகேசன், கோவை ரமணி, கேரளா இம்பிச்சி பாபா ஆகியோர் அக்கூட்டத்தில் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்கள் சிறைக்குள்ளேயே அரசியல் வகுப்புகள் நடத்துவது வழக்கம். நான் சிறைக்குள் இருக்கும்போதே அவர்களின் தொடர்பால் பொதுவுடைமைக் கட்சி உறுப்பினன் ஆனேன். அப்போது பொதுவுடைமைக் கட்சியும், சமதருமக் கட்சியும் காங்கிரசுக்குள்ளேயே அதன் அங்கங்களாக இயங்கிக் கொண்டிருந்தன.

நான் புதுவையிலிருந்து ராஜபாளையம் திரும்பினேன். ராஜ பாளையத்தில் காங்கிரஸ் கூட்டம் நடந்தால், என் நண்பர் வசந்தன் 'நீங்களே சொல்லுங்கள்' (சித்திரச் சோலைகளே என்று தொடங்கும் பாடல்) 'உலகப்பன் பாட்டு' ஆகிய பாவேந்தர் பாடல்கள் இரண்டையும் முதலில் பாடுவார். அதன் பிறகு கூட்டம் துவங்கும்.

பாவேந்தர் ஒரு முறை செட்டிநாடு வந்தபோது கானாடுகாத்தான் வை.சு. சண்முகம் செட்டியார் வீட்டிற்கு வரும்படி எனக்குக் கடிதம் எழுதியிருந்தார். வை.சு.சண்முகம் செட்டியார் கானோடு காத்தானின் குறிப்பிடத்தக்க பெருஞ் செல்வர்களில் ஒருவர். நான் அவர் வீட்டிற்குச் சென்று பாவேந்தரைப் பார்த்தேன். அதன்பிறகு பாவேந்தர் தெற்கு மாவட்டங்களுக்கு எப்போது வந்தாலும் எனக்குக் கடிதம் எழுதுவார். நான் சென்று அவரோடு இருப்பது வழக்கம். என்னைப் பார்க்காமல் செல்லமாட்டார். 'பாவேந்தர் பக்தி' என்னை ஆட்கொண்டது.

ராஜபாளையத்தில் பாவேந்தர் மீது பற்றுக் கொண்ட ஓர் இளைஞர்அணியைத் திரட்டினேன். பாவேந்தருக்கு ஒரு விழா எடுத்து அவருக்குப் பண முடிப்பு வழங்கும் முயற்சியில் ஈடுபட்டேன். விழாவுக்கு ஒரு நாள் குறிப்பிட்டு அறிஞர் அண்ணாவையும், எழுத்தாளர் வ.ரா.வையும் அழைக்க முடிவு செய்தேன். அண்ணாவைச் சந்திக்கச் சென்னை புறப்பட்டேன். முல்லை முத்தையா அண்ணாவுக்குக் கடிதம் கொடுத்தார். கடிதத்தை எடுத்துக் கொண்டு அண்ணாவைப் பண்ருட்டியில் சந்தித்தேன். அண்ணா ஒத்துக் கொண்டார். வ.ரா.வைப் சந்தித்துக் கேட்டதும் அவரும் ஒத்துக் கொண்டார்.

விழாவுக்கு வேண்டிய ஏற்பாடுகளில் தீவிரமாக இறங்கினேன். விழா இராஜபாளையம் வடிவேல் ரைஸ்மில்லில் நடைபெற்றது. விழாவில் அறிஞர் அண்ணா, கவிஞர் வாணிதாசன், முருகையன், பாவலர் பாலசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர். ஆஸ்துமாத் தொல்லையால் வ.ரா. வரவில்லை. பாவேந்தருக்குப் பொன்னாடை போர்த்தி ரூ. 2000/- பணமுடிப்பும் வழங்கப்பட்டது. விழா முடிவுற்றதும் நான் ராஜபாளையத்திலிருந்து மதுரைக்குக் குடிபெயர்ந்தேன்.

மதுரையிலும் பாவேந்தர் பணியைத் தொடர்ந்து செய்ய விரும்பிப் 'பாரதிதாசன் மன்றம்' என்ற பெயரில் ஓர் அமைப்பை உருவாக்கினேன். அம்மன்றத்தின் சார்பில் திருக்குறள் வகுப்பு தொடங்கப்பட்டது. திருக்குறள் வகுப்பு யூனியன் கிறிஸ்டியன் ஹைஸ்கூலில் நடைபெற்றது. திருக்குறள் வகுப்பு நடைபெறத் தமிழாசிரியர் இராமையாப்பிள்ளை துணைபுரிந்தார். திருக்குறள் வகுப்புக்கு ஒரு வாரம் நாவலர் சோமசுந்தர பாரதி தலைமை தாங்கினார். மூன்று நாள் பேராசிரியர் மீனாட்சி சுந்தரம் தலைமை தாங்கினார். பத்து நாள் பாவேந்தர் தொடர்ந்து பேசினார்.

பாவேந்தர் பேச்சைக்கேட்க மக்கள் திரண்டு வந்தனர்; பெருங்கூட்டம்.

பாவேந்தர் திருக்குறளுக்கு அப்போது புத்துரை எழுதிக் கொண்டிருந்த நேரம், தலைமை தாங்கிய நாவலர் சோமசுந்தர பாரதியாருக்கும், பாவேந்தருக்கும் 'தெய்வந் தொழாஅள்' என்ற திருக்குறள் உரையில் கருத்து வேறுபாடு தோன்றியது. இருவருமே விட்டுக் கொடுக்காத கொள்கைவாதிகள். நாவலர் அக்கருத்து வேறுபாட்டுக்குப் பிறகு திருக்குறள் வகுப்புக்கு வரவில்லை. தமிழக அளவில் பாவேந்தருடைய அன்பர்களைத் திரட்டி மதுரையில் அவருக்கு மணி விழா எடுக்கப் பாரதிதாசன் மன்றத்தில் முடிவு செய்தோம். 'டவுன் ஹாலில்' மணிவிழாவுக்கு அமைப்புக்குழு கூடியது. கீழ்க்கண்டவர்கள் மணிவிழாப் பொறுப்பாளர்களாக இருக்க அவ்வமைப்புக் குழு முடிவு செய்தது.

தலைவர்: நாவலர் சோமசுந்தர பாரதியார்
துணைத் தலைவர்கள்: ம.பொ.சி. ஜீவானந்தம், நாரண துரைக்கண்ணன், கல்கி.
பொதுச் செயலாளர்: தனுஷ்கோடி ராஜா
துணைச் செயலாளர்கள்: நாவலர் நெடுஞ்செழியன், பொன்னி ஆசிரியர் முருகுசுப்பிரமணியம்
பொருளாளர்: அறிஞர் அண்ணா

பிறகு திரைப்பட நடிகர் யதார்த்தம் பொன்னுசாமியின் தலையீட்டால் மணிவிழாக் குழு திருச்சிராப்பள்ளிக்கு மாற்றப்பட்டது. திருச்சிராப்பள்ளியில் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் தலைமையில் வேறொரு மணிவிழாக் குழு அமைக்கப்பட்டது. கவிஞர் திருலோக சீதாராம், அ.வெ.ர. கிருஷ்ணசாமி ரெட்டியார், ராமசுப்பையா, காதல் அரு.இராமநாதன் ஆகியோர் அக்குழுவில் இடம் பெற்றனர். நானும் திருச்சி சென்று மணிவிழாப் பணியில் ஈடுபட்டேன். தமிழ்நாடு காங்கிரசு தலைவர் கிருஷ்ணசாமி நாயுடுவின் மகன் ஸ்ரீராமுலுக்குப் பாவேந்தரிடத்தில் நல்ல ஈடுபாடு உண்டு. அவர் நன்கொடையாக ரூ.500/- முதலில் கொடுத்தார். மலேயாத் தமிழ் முரசு ஆசிரியர் சாரங்கபாணி ரூ. 200/- நன்கொடை வழங்கினார். ஆனால் அவ்விழா முயற்சி குழப்பத்தில் முடிந்து அரைகுறையாகத் திருவானைக்காவலில் ஒரு சத்திரத்தில் நடைபெற்றது.

திருவானைக் காவலில் மணிவிழா நடந்தபோது திரு. குமாரசாமி ராஜா தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தார். மணிவிழா அழைப்பு அவருக்கும் அனுப்பப்பட்டது. வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார். ஒருமுறை குமாரசாமி ராஜா அவர்களை நான்

சந்தித்தபோது, பாவேந்தரைப் பற்றிப் பேச்செழுந்தது. பாவேந்தரைப் பற்றி அவர் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்.

"நான் அவர் கவிதைகளைப் படித்திருக்கிறேன். குறிப்பாக அவர் எழுதியுள்ள 'அழகின் சிரிப்பு' என் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. அவருக்கு ஆங்கிலம் தெரியாத குறை; தெரிந்திருந்தால் நோபிள் பரிசு கிடைத்திருக்கும். பாரதி சிறந்த தேசிய கவி என்பதில் ஐயமில்லை. ஆனால் இளங்கோ கம்பருக்குப் பிறகு பாரதிதாசன்தான். சென்னை வந்தால் ஒருமுறை அழைத்துவா!' என்றார்.

திரு.குமாரசாமி ராஜா கூறியதை அடுத்தமுறை சந்தித்தபோது பாவேந்தரிடம் கூறினேன். சென்னையில் இருக்கும்போது பாவேந்தரும் நானும் குமாரசாமி ராஜாவை ஒருநாள் சென்று பார்த்தோம். அப்போது ஜெயின்கல்லூரி நிகழ்ச்சி ஒன்றுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். பாவேந்தரைக் கண்டதும் கட்டித் தழுவிக் கொண்டார். கல்லூரி நிகழ்ச்சியைக் சற்று நேரம் ஒத்தி வைக்கும்படி தொலைபேசியில் கூறிவிட்டுச் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தார்.

"உங்கள் கருத்துக்கள் சிலவற்றில் எனக்கு மாறுபாடு உண்டு. ஆனால் உங்கள் அழகின் சிரிப்பிலும், குடும்ப விளக்கிலும், பாண்டியன் பரிசிலும் என் உள்ளத்தைப் பறிகொடுத்தேன்" என்று குறிப்பிட்டார்.

நான் கொஞ்ச காலம் கல்கி, தினத்தந்தி பத்திரிகைகளின் விற்பனை ஏஜென்டாக இருந்தேன். எனவே கல்கி கிருஷ்ணமூர்த்தியிடம் எனக்கு நெருங்கிய தொடர்புண்டு. ஒரு நாள் கல்கி என்னிடம் பேசிக்கொண்டிருந்தபோது, "பாரதி படைப்புகளில் பாஞ்சாலி சபதந்தான் வேகம், பாரதிதாசன் பாட்டு வரிக்கு வரி வேகம். அவர் சார்ந்துள்ள இயக்கம் அவரைக் குடத்து விளக்காக ஆக்கியுள்ளது" என்று குறிப்பிட்டார்.

கடலூர் திருக்குறள் அச்சக (திருக்குறள் முனுசாமியுடையது) முகவரியிலிருந்து உடனே புறப்பட்டு வரும்படி பாவேந்தர் ஒருநாள் தந்தியடித்திருந்தார். ஏதோ முக்கியமான அலுவல் போலிருக்கிறது என்று எண்ணி நானும், என் மனைவி பூபதியும் புறப்பட்டோம். கையில் அப்போது போதிய பணமில்லாததால் கடன் வாங்கிக் கொண்டு மதுரையிலிருந்து புறப்பட்டோம். கடலூர் திருக்குறள் அச்சகத்துக்குப் போனபோது பாவேந்தர் முதல்நாளே புதுவை சென்றுவிட்டதாகச் சொன்னார்கள். உடனே புதுவைக்குப் போனோம். புதுவை வீட்டில் பாவேந்தரைச் சந்தித்ததும் 'ஒன்றும் அவசரமான வேலை எதுவுமில்லை. கொஞ்சம் worried ஆக

இருந்தேன்... அதுதா... சும்மா பேசிக்கிட்டிருக்கலாமுன்னு கூப்பிட்ட... அவ்வளவுதா...'' என்றார். நான் அப்போது பாவேந்தரைப் பார்க்கவில்லை. ஒரு குழந்தையைத் தான் பார்த்தேன்.

என் மனைவி பூபதி மீனைத் தொடாதவள். பாவேந்தருக்காகத் தொட்டுச் சமைத்துப் பழகினாள். சாப்பாடு பரிமாறும்போது என் மனைவியைப் பார்த்து, "மீனை நிறையவை. தொட்டுக்கக் கொஞ்சம் சாப்பாடு வை. நீயும் சாப்பிடு. உடம்புக்கு நல்லது" என்று கூறுவார்.

கவிதை அவர் சொல்ல நான் எழுதுவேன். பிறகு திருத்துவார். துண்டு துண்டாக வேடிக்கைக்குச் சில கவிதைகள் சொல்வார். நான் எழுதி முடித்ததும் படித்துப் பார்த்துவிட்டுக் கிழித்துப் போட்டு விடுவார். திருச்சி வானொலி நிகழ்ச்சிக்காகத் 'தொழில்' என்ற தலைப்பில் பாவேந்தர் கவிதை சொல்ல என் மனைவி எழுதினாள். அக்கவிதை பாரதிதாசன் கவிதைகள் - இரண்டாம் தொகுதியில் உள்ளது.

விருதுநகரில் திருக்குறள் மாநாடு. பெரியார் பேசும்போது, "மற்ற புராண இதிகாசங்களைப் போலத் திருக்குறளும் மோசந்தான். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் காட்டுமிராண்டிக் காலத்தில் எழுதப்பட்ட இந்நூல் இந்தக் காலத்துக்குப் பொருந்தாது. இதுவும் தமிழருக்கு ஒவ்வாத நூலே!" என்று கூறினார். பெரியாருக்குப்பின் பேச எழுந்த பாவேந்தர் பெரியார் பேச்சை மறுத்தார். லேசாகக் கூட்டத்தில் அதிருப்திக் குரலும், ஆரவாரமும் எழுந்தது. பாவேந்தர் பேச்சை முடித்துக் கொண்டார். பிற்பகல் நிகழ்ச்சிக்குப் போக வேண்டாம் என்று கூறி இவரைத் தடுத்து நிறுத்தி விட்டோம். விருதுநகரிலிருந்து திரும்பும்போது நாங்கள் ஏறி வந்த புகைவண்டி திருப்பரங்குன்றத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. இருப்புப்பாதை அருகில் தொழிலாளர் குடியிருப்புக் கட்டப்பட்டிருந்தது. பெட்டிபோல் இருந்த அந்தச் சிறிய வீடுகளைப் பார்த்த பாவேந்தர் நூறுபுறாக்கள் குடியிருக்கலாம் என்று குறிப்பிட்டார்.

மணிவிழாச் சமயத்தில் ஒருநாள் கவிஞர் திருலோக சீதாராம் பாவேந்தர் தங்கியிருந்த அசோகா லாட்ஜ் அறைக்கு வந்தார். "சுப்ரமணிய பாரதியாரின் மனைவி செல்லம்மாள் திருச்சியில்தான் இருக்கிறார். போய்ப் பார்த்துவிட்டு வரலாம்" என்று கூப்பிட்டார். 'ஐயரின் மனைவியா?' என்று கூறிவிட்டு அவசரமாக எழுந்தார். நானும் உடன் சென்றேன். செல்லம்மாளின் முன் விழுந்து வணங்கினார் பாவேந்தர். "யாரு சுப்புரத்தினமா? மொரட்டுப் பயலாச்சே! பிள்ளை குட்டி நாலைஞ்சு ஆயிடுச்சல்ல... இன்னம் மொரட்டுத்தனம் இருக்காதே!" என்றார் செல்லம்மாள். 'இல்லம்மா!' என்று பணிவாகச் சொன்னார் இந்த நல்ல பிள்ளை!

தேனருவி

கவியரசு கண்ணதாசன்

பாவேந்தர் என்னும் பாட்டுத் தேனருவி சேலம் சேர்வராயன் மலையடிவாரத்தில் நுங்கும் நுரையுமாகச் சுழித்து ஓடிக் கொண்டிருந்த நேரத்தில், அதன் சுழலில் சிக்காமல் கரையோரமாகக் குளித்துக் கொண்டு அதன் அழகில் உள்ளத்தைப் பறிகொடுத்த வண்ணம் நின்று கொண்டிருந்த துடிப்புள்ள இளைஞர் கவியரசு கண்ணதாசன். அவர் பேச்சு வாக்கில் பாவேந்தரைப் பற்றிச் சிதறிய சில முத்துக்கள் இங்கு சிறிய மாலையாகக் கட்டப்பட்டுள்ளன. இம்மாலையில் உள்ள முத்துக்கள் மூன்றுதான்; என்றாலும் அவை ஆணிமுத்துக்கள்.

பாவேந்தர் பாரதிதாசன் சேலம் மாடர்ன் தியேட்டர்ஸில் சில படங்களுக்குப் பாட்டும் வசனமும் எழுதிக் கொண்டிருந்த நேரம். அப்போது மாடர்ன் தியேட்டர்ஸ் அலுவலகத்திலிருந்து வெளியாகிக் கொண்டிருந்த 'சண்ட மாருதம்' என்ற பத்திரிகையில் மாதம் முப்பது ரூபாய்ச் சம்பளத்தில் நான் பணியாற்றிக் கொண்டிருந்தேன். எதிர்காலக் கனவுகள் ஏக்கங்களாக என் கண்களில் தேங்கியிருந்தன. பாவேந்தர் அப்போது புகழேணியின் உச்சியில் இருந்தார். அப்போது அவருடைய சிறிய அசைவுகளும் எனக்கு வரலாறாகப்பட்டன. நினைவில் நின்ற ஓரிரு நிகழ்ச்சிகளைக் கூறுகிறேன்.

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான வளையாபதியை மாடர்ன் தியேட்டர்ஸார் திரைப்படமாக உருவாக்கிக் கொண்டிருந்தனர். பாவேந்தர் அதற்குப் பாட்டும் வசனமும் எழுதிக் கொண்டிருந்தார். அவர் எழுதிய பாடல்களுக்கு தட்சணாமூர்த்தி இசையமைத்துக் கொண்டிருந்தார்.

கமழ்ந்திடும் பூவிலெல்லாம்
தேனருவி கண்டதனால்
வண்டு காதலினால்-நாதா
தாவிடுதே இன்பம் மேவிடுதே.

என்ற பாடலுக்கு 'ரெகார்டிங்' நடந்து கொண்டிருந்தது. 'கமழ்ந்திடும்' என்ற சொல் உச்சரிப்பு கடினமாக இருந்தது. இன்னும் எளிய சொல்லாக இருந்தால் ரெக்கார்டிங்கில் அது தெளிவாக இருக்கும் என்று இசையமைப்பாளர் கருதினார். உடனே அங்கிருந்த பாவேந்தரை அணுகிக் "கமழ்ந்திடும்" என்ற சொல் ரெகார்டிங்கில் தெளிவாக இல்லை. அதை மாற்றி இன்னும் எளிமையான சொல்லொன்றைப் போட்டுக் கொடுங்கள் என்று கேட்டார்கள். அதற்குப் பாவேந்தர் வாயிடுக்கில் சிகரெட்டை இடுக்கிய வண்ணம் அதெல்லாம் மாத்த முடியாது. ரெக்கார்டிங் தெளிவா இல்லைன்னா சுந்தரத்துக்கிட்ட சொல்லி ரெகார்டிங் மெஷினை மாத்தச் சொல்லு!" என்று கூறினார். பிறகு இசையமைப்பாளர் என்னிடம் வந்து அச்சொல்லை மாற்றிக் கொடுக்கும்படி கேட்டார். நான் 'குலுங்கிடும் பூக்களெல்லாம்' என்று மாற்றிக் கொடுத்தேன். இதைக் கேள்விப்பட்டதும் பாவேந்தருக்கு என் மேல் கோபம். இந்த நிகழ்ச்சியின் எதிரொலியாகச் சென்னை ஏ.வி.எம். ஸ்டுடியோவில் மற்றொரு நிகழ்ச்சி நடைபெற்றது.

சென்னை ஏ.வி.எம்.மில். 'பராசக்தி' படப்பிடிப்பு நடந்த கொண்டிருந்தது. பராசக்திக்குரிய பாடல்கள் 'ரெகார்டிங்' செய்து கொண்டிருந்தனர். பாவேந்தர் ரெகார்டிங் நடந்த இடத்தில் ஏதோ உரக்கப் பேசிக் கொண்டிருந்தார். அவரைப் பேசாமல் இருக்கும் படி கேட்டுக் கொண்டனர். அதற்குப் பாவேந்தர் ஏ.. என் பேச்சும் ரெகார்ட் ஆயிடும்னு பயப்படறியா. ரெக்கார்டிங் மெஷின் என்னோட பாட்டில 'கமழ்ந்திடும்' கற சொல்லை ரெகார்டு பண்ண முடியல... எம் பேச்சைத்தா ரெகார்டு பண்ணப் போவுதா.. போப்பா.." என்று சலிப்போடு சொன்னார்.

மாடர்ன் தியேட்டர்ஸில் 'கல்யாணி' என்ற படத்துக்கு Wire Recording நடந்து கொண்டிருந்தது. இசையமுதில் உள்ள பாவேந்தரின் 'அதோ பாரடி' என்று தொடங்கும் 'வண்டிக்காரன் பாட்டு' ரெகார்டிங் ஆகிக் கொண்டிருந்து. பதிவாகி முடிந்ததும் அப்பாட்டை 'ரெகார்டிங்' அறைக்குள் வைக்கச் சொல்லி வெளியில் இருந்து கேட்டார் பாவேந்தர். அதன் இசையமைப்பு அவருக்குத் திருப்தித் தரவில்லை. பாவேந்தர் அருகில் இருந்தவர்களைப் பார்த்து, 'ஏப்பா! சங்கீதம் போட்றவ வண்டியோட்டி இருக்கானா? தூரத்தில் இருந்து

வண்டிக்கார பாட்டைக் கேட்டிருக்கணும்... ஊம்" என்று சலித்துக் கொண்டார்.

'அபூர்வ சிந்தாமணி' என்ற படத்துக்குப் பாவேந்தர் வசனம் எழுதியிருந்தார். அப்படத்துக்கு வெளிப்புறக் காட்சிகளை எடுப்பதற்காக நடிகர்குழு ஏர்க்காடு மலையடிவாரத்துக்குச் சென்று கொண்டிருந்தது; பாவேந்தரும் உடன்வந்து கொண்டிருந்தார். அவர் ஏறிச் சென்ற காரின் குறுக்கே ஒரு வாத்துக் கூட்டம் சரேலென்று வந்தது. காரோட்டி எவ்வளவு முயன்றும் வண்டியை நிறுத்த முடியவில்லை. ஏழெட்டு வாத்துகள் வண்டியில் அடிபட்டு இறந்து விட்டன. உடனே பாவேந்தர் அங்கிருந்தவர்களிடம், 'செத்துப்போன வாத்துக்கெல்லாம் சுந்தரத்தைப் பணம் கொடுக்கச் சொல்லு' என்று சொல்லிவிட்டு அவ்வாத்துக்களைச் சேலத்தில் அப்போது குடியிருந்த நகைச்சுவை நடிகை பி.எஸ். ஞானத்தின் வீட்டுக்கு அனுப்பி சமைக்கச் சொன்னார்; இரண்டு நாள் சுவைத்துச் சாப்பிட்டார்.

கோவையில் தமிழ்த் தேசியக்கட்சி மாநாடு நடைபெற்றது. அதில் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதனும், பாவேந்தரும், நானும் கலந்து கொண்டோம். நடுப்பகல் உணவு கோவை அறிஞர் ஜி.டி. நாயுடு இல்லத்தில் ஏற்பாடாகி இருந்தது. இலையில் உணவு பரிமாறப்பட்டது. ஜி.டி. நாயுடு சைவ உணவுக்காரர் ஆயிற்றே. இலையில் உப்பு, பருப்பு, சோறு, நெய், புடலங்காய் பரிமாறப்பட்டிருந்தன. அந்த சாப்பாட்டைப் பார்த்தவுடனே பாவேந்தருக்கு ஓர் 'அலெர்ஜி'-ஜி.டி. நாயுடு அருகில் நின்று கொண்டிருந்தார். பாவேந்தர் அவரைக் கூப்பிட்டு, "ஏப்பா நாயுடு! இதைச் சாப்பிட்டுத்தா உயிரோட இருக்கறயா?" என்று கேட்டார். நாயுடு சிரித்தார். பிறகு அருகில் உட்கார்ந்திருந்த என்னைப் பார்த்து "கண்ணதாசா! எந்திரி! நமக்கு இதெல்லாம் ஒத்து வராது" என்று சொன்னார். நானும் பாவேந்தரும் பெங்களூர் பிரியாணி ஓட்டலுக்குச் சென்றோம்.

பாவேந்தர் மாரடைப்பால் தாக்கப்பட்டுச் சென்னை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பதாகச் செய்தி கிடைத்தது. சென்னை அரசாங்க மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். தமிழ்மலை கட்டிலில் சாய்ந்து கிடந்தது. மூக்கின் வாயிலாகப் பிராணவாயு செலுத்தப்பட்டிருந்தது. கொஞ்சம் நினைவு வந்ததும் எழுந்து உட்கார்ந்தார். மாரடைப்பால் தாக்கப்பட்டவர் படுக்கையில் கூட அசையாமல் கிடக்க வேண்டும். ஆனால் பாவேந்தர் எழுந்து உட்கார்ந்தார். பாத்ரூம் போகணும் என்றார்.

அருகில் அன்பர் ஒருவர் "எழுந்திருக்காதீர்கள்! இங்கேயே போகலாம்!" என்று கூறித் தடுத்தார். பாவேந்தருக்குச் சுள்ளென்று கோபம் வந்தது. "ஏ! நீ யார் என்னைத் தடுக்க! மரியாதையைக் கெடுத்துக்காதே!" என்று அந்த நிலையிலும் சத்தம் போட்டார். பாவேந்தர் பிறரை அதட்டியே பழக்கப்பட்டவர். அவரை யார் அதட்ட முடியும்? பிறகு அருகில் இருந்தவர்கள் அவரைப் பிடித்து மெதுவாகப் பாத்ரூமுக்கு அழைத்துச் சென்றனர். அன்றே அவர் ஆவி பிரிந்தது. புதுவைக் குயிலின் குரல் ஒடுங்கியது.

பாவேந்தர் மாடர்ன் தியேட்டர்ஸ் 'சுபத்ரா'வுக்கு வசனம் எழுதினார். போருக்குப் புறப்பட்ட காதலன் அருச்சுனனைச் சுபத்ரா வைத்த கண் வாங்காமல் பார்க்கிறாள். அருகில் இருந்த அவள் அரண்மனைத் தோழி, அதை ஓர்நாள் நினைவு கூர்ந்து 'சுபத்திரை! அன்று போருக்குச் சென்ற பார்த்தனை, நீ வைத்த கண் வாங்காமல் பார்த்தனை!' என்று குறிப்பிடுகிறாள். இந்த வரிகளைக் கேட்டு முப்பது ஆண்டுகள் ஆகின்றன. என்றாலும் இன்றும் அவ்வரிகள் என் காதில் மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

தமிழ்த் தலைமையன்

திருமதி மஞ்சுளாபாய்

திருமதி வை.சு. மஞ்சளா பாய் அம்மையார் மராட்டிய ராவ்ஜி குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் தந்தையார் தஞ்சை மராட்டிய மன்னர்அரண்மனையில் மெய்க் காப்பாளர் தலைவராகப் பணிபுரிந்தவர். அப்பதவிக்கு Dignity Inspector என்பது அன்றைய பெயர். ஏழுவயதில் திருமணமாகி இளமையிலேயே கணவனை இழந்த இவர், சுயமரியாதை இயக்கத்தோடுத் தம்மை இணைத்துக் கொண்டார். சுயமரியாதை இயக்கம் இவரையும் செட்டி நாட்டுச் செல்வர் வை. சு. சண்முகம் செட்டியாரையும் காதலால் இணைத்தது. கவிதை பாவேந்தரையும் இவரையும் சகோதர பாசத்தால் இணைத்தது. திருச்சிராப்பள்ளி பெரியார் பயிற்சிப் பள்ளி மாணவியர் விடுதிப் பொறுப்பாளராக இருக்கும் இவர் நாற்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட நிகழ்ச்சிகளை உணர்ச்சியோடு இக்கட்டுரையில் கூறியிருக்கிறார்.

1936ஆம் ஆண்டு, இளமையில் கணவனை இழந்து, சமுதாயக் கொடுமையென்னும் சூறாவளியில் சிக்கி, பாய்மரம் உடைந்த மரக்கலம் போல் வாழ்க்கை அலை மலையில் திக்குத் தெரியாமல் மிதந்து கொண்டிருந்த என்னைச் சுயமரியாதைத் தென்றல், ஈரோடு நாகம்மாள் காலனித் துறைமுகத்தில் கொண்டுவந்து சேர்த்தது. சமுதாயக் கொடுமைகளால் நைந்து போயிருந்த எனக்குச் சுயமரியாதை இயக்கம் ஏற்ற புகலிடமாய் அமைந்தது. ஒரு பெண் தன்மதிப்போடும் பாதுகாப்போடும் வாழ நாகம்மாள் காலனியை

விட ஏற்ற இடம் வேறு எதுவுமில்லை என்பதை உணர்ந்தேன். சுயமரியாதை இயக்கப் பணியில் என்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டேன். பெரியாரோடு நானும் கூட்டங்களுக்குப் போவேன். 'பாரதிதாசன் பாட்டைப் பாடு' என்று ஐயா கட்டளையிடுவார்கள். இனிய குரல் வளம் பெற்றிருந்த நான் பாவேந்தர் பாடல்களைக் கணீரென்று மேடையில் பாடுவேன். அப்போது நான் பாடிய பாடல்களுள் 'கண்கள் நமக்குண்டு'[1] என்று தொடங்கும் பாடல் எனக்கு மிகவும் விருப்பமான பாடல். ஒவ்வொரு மேடையிலும் நான் அதைத் தவறாமல் பாடுவேன்.

நீதிக்கட்சி தேர்தல் பிரசாரம் முடிந்து பெரியார் ஈ.வெ.ரா. கொடைக்கானலில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். நானும், பூவாளூர் பொன்னம்பலனாரும், வேறு சில இயக்கத் தொண்டர்களும் கானாடு காத்தான் வை.சு. சண்முகம் செட்டியார் இல்லத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தோம்.

அந்தக் காலத்தில் வை.சு. சண்முகம் செட்டியாரைச் செட்டி நாட்டில் ராஜா சர் அண்ணாமலை செட்டியாருக்கு அடுத்த செல்வராகச் சொல்லலாம். மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் அவருக்குப் பல கடைகள் இருந்தன. மலேயா வத்துப்பகாரில் 2000 ஏக்கர் பரப்புள்ள ரப்பர்த் தோட்டம் அவருக்குச் சொந்தமாக இருந்தது. கானாடுகாத்தானில் அவருக்குப் பெரிய வளமனை (Bangalow) இருந்தது. அதற்கு 'இன்பமாளிகை'[2] என்பது பெயர். அம்மாளிகையின் நடுவில் ஒரு பெரிய கூடம் உண்டு. அக்கூடத்தில் மிகப் பெரிய நிலைக்கண்ணாடி மாட்டப்பட்டிருக்கும். அக்கண்ணாடியின் எதிரில் ஓர் ஊஞ்சல் போடப்பட்டிருக்கும். அவ் ஊஞ்சலில் தேசிய கவி சுப்பிரமணிய பாரதியார் அமர்ந்து கொண்டு 'பாண்டியா! என்று வை.சு.ச. வைக் கூப்பிடுவாராம், பாரதியார் புதுவையிலிருந்து மீண்டுவந்து கடையத்தில் தங்கியிருந்த போது மிகவும் வறுமையால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். வை.சு.ச. அப்போது பாரதியாருக்குத் திங்கள்தோறும் ரூ.40/- தவறாமல் அனுப்பிக் கொண்டிருந்தாராம். வை.சு.ச. மீது பாரதியார் ஒரு பாடலும் எழுதியிருக்கிறார்.

வை.சு.ச. சுயமரியாதை இயக்கத்தின் பொருளாளர். சு.ம.

1. கைம்மைக் கொடுமை-என்பது பாடலின் தலைப்பு. பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதியில் உள்ளது.

2. திருமதி மஞ்சுளாபாயைச் சந்தித்துப் பாவேந்தர் பற்றிய குறிப்புகளைக் கேட்டுக் கொண்டு கானாடுகாத்தானை விட்டுப் புறப்படும் நேரத்தில் வரலாற்றுப் புகழ்பெற்ற அந்த இன்பமாளிகை இருந்த இடத்தைக் காணச் சென்றேன். அங்கு ஒரு மண்மேடு மட்டும் இருந்தது. அக்காட்சி என் இதயத்தைச் சுட்டது-முருகு சுந்தரம்.

தொண்டர்கள் தெற்கு மாநிலங்களுக்குப் பிரசாரத்துக்குப்போனால் கானாடு காத்தான இன்பமாளிகையில் தான் பொதுவாகத் தங்குவது வழக்கம். அது தான் அப்போது எங்கள் தெற்குக் கேந்திரம். வை.சு.ச. இளமையில் தேசியவாதி, காந்தியார் தென்னாடு வந்தபோது இன்ப மாளிகையில் இரண்டுமுறை தங்கியிருக்கிறார். காந்தியார் ஒருமுறை கூட்டத்தில் ஏலம் விட்ட ஒரு கெஜம் கதர்த்துணியை ரூ.10,000 கொடுத்து வாங்கினார். இன்ப மாளிகையில் இரண்டு கார்கள் எப்போதும் நின்று கொண்டிருக்கும். ஒருகாரை (Study Baker) பெரியாருக்கு அன்பளிப்பாக வழங்கிவிட்டார். இந்தி எதிர்ப்பின் போது அரசாங்கம் பெரியாரிடமிருந்து பறிமுதல் செய்த கார் அதுதான்.

நானும் இயக்கத்தோழர்களும் இன்பமாளிகையில் தங்கியிருந்த போது வை.சு.ச. ஒரு வழக்கின் பொருட்டு மலேயா சென்றிருந்தார். வை.சு.ச. வின் துணைவியார் பார்வதி அம்மாள் அப்போது நோய்வாய்ப்படடுப் படுத்த படுக்கையாக இருந்தார். அந்த அம்மையாரைக் கண்காணிக்கும் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டிருந்தேன், நோயினால் வருந்திக் கொண்டிருந்த அம்மையார் திடீரென்று ஒருநாள் உயிர் விட்டார். வை.சு.ச.விற்கு உடனே செய்தி அறிவிக்கப்பட்டது. ஆனால் அவர் கானாடு காத்தான் வந்து சேரப் பத்து நாள் ஆகிவிட்டது. செட்டிநாட்டு முறைப்படி சமபந்தி விருந்து மிகவும் ஆர்ப்பாட்டமாகப் பெரிய அளவில் நடத்தப்பட்டது. பெரியார் விருந்துக்கு நேரில் வரவில்லை; கடிதம் மட்டும் எழுதியிருந்தார்.

வை.சு.ச. வந்த பிறகு அவருக்குத் துணையாக நானும் சில நண்பர்களும் கொஞ்ச நாட்கள் கானாடு காத்தானில் தங்கியிருந்து ஆறுதல் கூறினோம். மனைவியை இழந்த நிலையில், குழந்தைகளோடு தனியாக இருந்த அவருக்கு ஒரு பெண்துணை தேவைப்பட்டது. கொள்கையால் ஒன்றுபட்டிருந்த நாங்கள் இருவரும் நீண்ட நேரம் நன்கு சிந்தித்து வாழ்க்கையிலும் ஒன்றுபடுவது என்று முடிவு செய்தோம். நீதிக்கட்சிப் பிரமுகர் திருவாளர் சௌந்திர பாண்டியன் முன்னிலையில் மதுரையில் எங்களுக்குப் பதிவுத் திருமணம் நடைபெற்றது.

பாவேந்தர் பாடல்களில் எனக்கு இளமையிலிருந்தே ஈடுபாடு அதிகம். என் கணவர் ஏற்கனவே பாரதியாரோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர்; இலக்கியப் பற்று மிக்கவர். எனவே சுயமரியாதை இயக்கத்தின் இதயக் குரலாக, சங்நாதமாக விளங்கிய பாவேந்தர் தொடர்பு எங்கள் குடும்பத்துக்கு இன்றியமையாததாகி

விட்டது. தென்தமிழ் நாட்டுக்கு வந்தால் இன்பநிலையமே அந்தப் புதுவைச் சிறுத்தையின் பாசறையாக விளங்கும். ஆசான் பாரதி அமர்ந்திருந்த எங்கள் கூடத்து ஊஞ்சல் அவர் மாணவரையும் தாலாட்டியது. எப்போது வந்தாலும் சில நாட்கள் இன்பநிலையத்தில் தங்கியிருந்து ஓய்வு பெற்றுச் செல்வார். செட்டிநாட்டு இளைஞர் பட்டாளம் தேனீக்களாக அப்புதுவைத் தேனடையைச் சூழ்ந்து கொள்ளும். மாடியிலிருக்கும் அவருக்கு ஓடி ஓடிப் பணிவிடை செய்வேன். என்னை அவருடைய உடன் பிறவாத் தங்கையாகப் போற்றி மதித்தார். 'அம்மாடி!... கண்ணு!" என்று தான் அன்பொழுக அழைப்பார்.

"ஆகா என்ன தங்கை மேலே உருக்கம்!" என்று என் கணவர் கேலி செய்வார்.

"பின்ன என்ன? என்னால என் தங்கைக்கு எவ்வளவு தொல்லை! சிட்டு மாதிரி மாடிக்கும் கீழ்க்கட்டுக்கும் பறந்திக்கிட்டிருக்காளே!" என்று கூறி வருந்துவார்.

ஒருநாள் இன்ப நிலையத்தில் தங்கியிருந்த அவரைக் கோனாப்பட்டிலிருந்து பேசுவதற்காக அழைக்க வந்தனர். கோனாப்பட்டு முத்தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்த இளைஞர்கள் என்று எண்ணுகிறேன். கோனாப்பட்டில் 'சிறுத்தொண்ட நாயனார்' என்ற தலைப்பில் பாவேந்தர் பேசினார். கூட்டத்தில் இருந்தவர்களைப் பார்த்து "குழந்தை அதுவும் ஒரே குழந்தை. தாய் மடியில் கிடத்தித் தந்தையே அக்குழந்தையின் கழுத்தை அறுத்தா இந்த நாளிலே சும்மா இருப்பீர்களா?" என்று உருக்கமாகக் கேட்டார். அக்கூட்டத்தில் இருந்த துடிப்பான திருப்பத்தூர் மாணவர் இருவர் (பெயர்கள்: சு.மகாலிங்கம், நூர்முகம்மது) 'கொல்லுவோம்! கொல்லுவோம்! என்று கூச்சலிட்டனர். கொஞ்சநாள் கோனாப்பட்டுக் குழந்தைகள் எல்லாம் கோயில் பக்கமே போகவில்லை. பகுத்தறிவுச் சிந்தனைக்குப் பக்குவப்படாத மக்களிடையில் பாவேந்தர் அன்று பேசிய துணிச்சலான பேச்சு மிகப்பெரிய புரட்சியாகும். இந்தக் கோனாப்பட்டுப் பேச்சு துடிப்பான செயல் திறமைமிக்க இளைஞர் சிலரை இவர் எதிரில் கொண்டுவந்து நிறுத்தியது. அவர்களுள் பள்ளி ஆசிரியராகக் கோனாப்பட்டில் இருந்த கா.அப்பாத்துரையும், முருகு சுப்பிரமணியமும் குறிப்பிடத்தக்கவர்கள். இந்த இருவரும் பன் மொழிப் புலவராகவும், பொன்னி ஆசிரியராகவும் எதிர்காலத்தில் வளர்ச்சியுற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. எங்கள் இன்ப நிலையத்தில்தான் இச்செட்டிநாட்டு இளைஞர்கள் துணையோடு 'முத்தமிழ் நிலையம்' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.

பாவேந்தருடைய முத்தமிழையும் 'இன்ப இரவு' என்ற பெயரில் அது நாடகமாக அரங்கேற்றம் செய்தது.

1944ஆம் ஆண்டு பாவேந்தரின் மூத்தமகள் சரசுவதியின் திருமண முயற்சிகள் நடைபெற்றன. இம்முயற்சியில் எனக்கும் கணிசமான பங்கு உண்டு. மணமகன் கண்ணப்பர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் புலவர் தேர்வுக்குப் படித்துக் கொண்டிருந்தார்; சுயமரியாதை இயக்கத்திலும் ஈடுபாடு மிக்கவர். இவரைப் பற்றிக் கேள்விப்பட்ட நான் நேராகப் புதுவை சென்று பாவேந்தரைப் கலந்து கொண்டு சிதம்பரம் சென்றேன். அன்பழகன் அப்போது மாணவர் என்று எண்ணுகிறேன். அன்பழகன் வீட்டுக்குக் கண்ணப்பரை வரச்சொல்லி நேரில் பார்த்தேன்; அழகும் அடக்கமும் மிக்க இளைஞராக அவர் விளங்கினார். பார்த்தவுடன் அவரை எனக்குப் பிடித்து விட்டது. அவருடைய இசைவைக் கேட்டுக் கொண்டு பெண் பார்க்கும் அடுத்த கட்டத்துக்கு ஏற்பாடு செய்தேன்.

புதுவையில் பெண் பார்க்க நாளும் குறிக்கப்பட்டது. என் சுமையைச் (நகைகள்) சரசுவதியின் உடம்பில் ஏற்றி அவளை அலங்கரித்தேன். கண்ணப்பர் வந்தார்; பெண்ணுக்கும் பிடித்தது. பெண்ணும் கண்ணப்பர் கண்ணுக்குப் பிடித்தது. திருமணம் உறுதி செய்யப் பட்டது.

மாப்பிள்ளை கண்ணப்பர் கரூருக்குப் பக்கத்தில் உள்ள கட்டிப் பாளையத்தைச் சேர்ந்தவர். நிலபுலன்களோடு கூடிய வசதியான குடும்பத்தைச் சேர்ந்த ஒரே பிள்ளை. அவர்களுடைய பதிவுத் திருமணம் திருச்சியிலும், பாராட்டுக்கூட்டம் கட்டிப்பாளையத் திலும் நடைபெற்றது. பாராட்டுக் கூட்டத்துக்குச் சேலம் நகராட்சிக் கல்லூரி முதல்வர் இராமசாமிக் கவுண்டர் தலைமை தாங்கினார். பெரியாரும், அறிஞர் அண்ணாவும் வேறு பல இயக்கத் தலைவர்களும் வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்தனர்.

இத்திருமணத்தில் நடைபெற்ற வரலாற்றுப் புகழ்பெற்ற ஒரு நிகழ்ச்சியைத் தமிழ்நாட்டுப் பெண்ணுலகுக்கு நான் கட்டாயம் குறிப்பிட்டாக வேண்டும். பாவேந்தர் மூத்த மகள் சரசு தந்தையிடம் அதிக ஈடுபாடு கொண்டு அவருக்குப் பணிவிடைகள் புரிந்தவள். ஒரு வீட்டில் ஆண்கள் எவ்வளவு சீர்திருத்தக்காரர்களாக இருந்தாலும் பெண்கள் கட்டுப்பெட்டிகளாகவே இருப்பர். 'அவர்களுக்கு அடுப்பே திருப்பதி; ஆம்படையானே குல தெய்வம்" வேறு சமுதாயச் சிந்தனைகள் அவர்களை அவ்வளவாகப் பாதிப்ப தில்லை. அவ்வாறு பாதிக்கப்பட்டுச் சீர்திருத்தச் சிந்தனையில்

ஈடுபட்ட தமிழ்நாட்டுப் பெண்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். அப்பெண்களில் சரசும் ஒருத்தி.

திருமணத்துக்கு முன்பு தாலி செய்வதைப் பற்றிப் பேச்சு எழுந்தது. உடனே சரசு என்னைப் பார்த்து, "ஏன் அத்தை![1] நான் என்ன மாடா? முனிசிபாலிடியில் கட்டுவதுபோல் எனக்கும் லைசென்ஸா கட்டப் போறாங்க?" என்று கேட்டாள். நான் வியப்பினால் விக்கித்துப் போனேன். தமிழ்நாட்டின் புரட்சிக்கவிஞனுக்கு ஏற்ற புரட்சிப் பெண்தான் இவள் என்று நான் மிக்க மகிழ்ச்சியடைந்தேன். உடனே நாங்களே அதற்கு ஒரு முடிவு கண்டோம். தமிழரின் சின்னமான புலிவில்கயல் பொறித்த பதக்கமொன்று தாலிக்குப் பதிலாகத் திருமணத்தின்போது அணிவிக்கப்பட்டது. அவர்கள் குடும்பத்தில் எல்லாத் திருமணத்திலும் அப்பழக்கம் இன்றும் தொடர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. திருமணம் முடிந்த பிறகு மணமக்கள் இருவரும் கானாடு காத்தான் வந்து சில நாட்கள் தங்கியிருந்துவிட்டு மகிழ்ச்சியோடு திரும்பினர்.

சரசுவதியின் திருமணத்துக்குப் பிறகு ஓரிரு ஆண்டுகளில் எங்கள் குடும்பத்தில் சில குழப்பங்கள் நிகழ்ந்தன. மலேயாவில் நடந்து கொண்டிருந்த எங்கள் வாணிபம் சீர்குலைந்தது. அங்கிருந்த சொத்துகள் சம்பந்தமான வழக்குகளில் வை.சு.ச. ஓயாமல் ஈடுபட்டிருந்தார். 10 லட்சம் ரூபாய் அளவுக்கு வரவேண்டிய செல்வம் வழக்கின் காரணமாகத் தடைபட்டுக் கிடந்தது. வை.சு.ச. அமைதியிழந்தார். அடிக்கடி சீற்றத்துக்கு ஆளானார். அவர் கடைப்பிடித்து வந்த சீர்திருத்தக் கருத்துகளும் ஆட்டம் கண்டன. பகுத்தறிவுவாதிகள் தங்கியிருந்த இன்ப நிலையம் சாமியார்களுக்கு இடம் கொடுத்தது. சாமியார்களுக்கு ஏற்பச் சமைக்கும்படி என்னை என் கணவர் வற்புறுத்தியதால் நான் அவர்பால் கருத்து வேறுபாடு கொண்டு புதுவைக்குச் சென்றேன். பாவேந்தர் அப்போது சென்னைக்குக் கதையெழுதப் போயிருந்தார். என் கணவர் புதுவைக்குக் கடிதம் மேல் கடிதம் எழுதிக் கொண்டிருந்தார். குழந்தைகளுக்கு அம்மை கண்டிருக்கிறது என்று அவரிடமிருந்து கடிதம் வந்ததும் நான் கானாடு காத்தான் திரும்பி விட்டேன்.

பிறகு எங்கள் குடும்பம் கானாடு காத்தானிலிருந்து குடிபெயர்ந்து திருவானைக்காவலில் கொஞ்ச நாள் தங்கியது. அப்போது பாவேந்தர் குடும்பத்தோடு வந்திருந்து எங்களுடன் தங்கியிருந்தார். கண்ணப்பரும் சரசுவதியும் வந்திருந்தனர். அந்தச் சமயத்தில்தான் பாவேந்தருக்குத் திருச்சியில் மணிவிழா எடுக்கும் முயற்சி

1) மஞ்சுளாபாயைப் பாவேந்தர் மக்கள் எல்லாரும் அத்தை என்றே அழைப்பர்.

நடைபெற்றது. ஆனால் நடுவில் சில குழப்பங்கள் ஏற்பட்டுச் சிறிய அளவில் திருவானைக்காவல் சத்திரம் ஒன்றில் 30.4.1951இல் அவ்விழா எடுக்கப்பட்டது.

திருவானைக்காவலிலிருந்து எங்கள் குடும்பம் மீண்டும கானாடு காத்தானுக்குத் திரும்பியது. எங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட நொடிப்புகள், துன்பங்கள் எங்களை இன்ப நிலையத்திலிருந்து வெளியேற்றின. எனது பொது வாழ்க்கை ஈடுபாடு குறைந்தது. பாவேந்தருடைய தொடர்பும் குறைந்தது. அன்புக்குரிய என் கணவரையும், தகுதிமிக்க தமிழ்த் தமையனையும் பிரிந்து தனித்திருக்கும் இவ்வேளையில், அவர்களுடைய பழைமை நினைவுகள் என் கண்களை அடிக்கடி பனிக்கும்படி செய்கின்றன. என் வாழ்க்கையில் நான் சந்தித்த இரண்டு பெரிய மேதைகளுள் ஒருவர் பெரியார்; மற்றொருவர் பாவேந்தர்.

என் அறிவுத் தந்தை

பாரதி சுவாமிநாதன்

பாவேந்தர் கவிதைக்குத் தமிழகமெங்கும் சுவைஞர் களும் சுற்றத்தார்களும் உண்டு; அச்சுற்றத்தாரில் சிலர் பாவேந்தரைத் தந்தையாக மதித்து நடந்து கொண் டனர். சிலர் உடன்பிறந்த தமையனாக மதித்து நடந்து கொண்டனர். இப்பட்டியல் தமிழகமெங்கும் உண்டு.

மதுரைப் புத்தகக்கடை உரிமையாளர் பாரதி சுவாமி நாதன் பாவேந்தரின் இலக்கியக் குடும்பப்பிள்ளை. தந்தைக்குரிய பாசத்தோடும் உரிமையோடும் பாவேந்தர் இவரிடம் பழகி வந்திருக்கிறார். பாவேந்தரின் இதய வீணையின் ஏற்ற இறக்கத்திற்கேற்ற நரம்பின் வித்தியாசமான அதிர்வுகளையும் குறிப்பிடத்தக்க குடும்ப நினைவுகளையும் சுவைபடச் சுட்டிக் காட்டுகிறார் சுவாமிநாதன் இக்கட்டுரையில்.

1949ஆம் ஆண்டு பாவேந்தர் மதுரை வந்தார். பாரதிதாசன் மன்றம் நடத்திய திருக்குறள் வகுப்பில் சொற்பொழிவாற்றுவதற்காக வந்தார். அம்மன்றத்தில் நான் ஓர் உறுப்பினன். அப்போது ஏற்பட்ட தொடர்பு அவர் இறக்கும் வரையில் நீடித்தது. மதுரை வந்தால் வழக்கமாக சங்கர்&கோ மருந்துக் கடை மாடியில் தங்குவார். என் பேரில் அவருக்கு ஓர் ஈடுபாடு. மதுரையில் தங்கும்போது என்னை வந்து பார்ப்பார்; அடிக்கடி வெளியே கூட்டிக் கொண்டு போவார். மதுரையிலும் திருச்சிராப்பள்ளியிலும் மேற்கொண்ட மணிவிழா முயற்சிகளில் எனக்கும் பங்குண்டு.

1953 ஆண்டு ஏப்ரல் திங்கள் 5ஆம் நாள் எனக்குத் திருமணம். காதல் மணம்; கலப்பு மணம். டாக்டர் மு. வரதராசனார் தலைமையில் திருமணத்தை நடத்த விரும்பினேன். அப்போது மு.வ. வயிற்று வலியால் அவதிப்பட்டுக் கொண்டிருந்த காரணத்தால் அ.கி.

பரந்தாமனார் தலைமையில் நடத்திக் கொள்ளும்படி கூறிவிட்டார். ஆனால் மதுரை முத்துவும், தங்கப்பழமும், பாரதிதாசன் தலைமைக்கு ஏற்பாடு செய்வதாகக் கூறினர். பாவேந்தரும் தலைமை தாங்க ஒத்துக் கொண்டார். திருமணம் இனிது நடைபெற்றது. திருமணம் முடிந்த அடுத்த நாள் மணமக்களாகிய எங்களை மதுரை முத்து தமது இல்லத்துக்கு அழைத்துச் சென்றார். 1957ஆம் ஆண்டு 'பாரதி புத்தக நிலையம்' என்ற பெயரில் புத்தகக் கடை ஒன்று துவக்கினேன். அத்திறப்பு விழாவுக்குத் தலைவர் பாவேந்தர். திறப்பாளர் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம். திருச்சி மணிவிழாவின் போது பாவேந்தருக்கும், கி.ஆ.பெ. அவர்களுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டிருந்து, அக்கருத்து வேறுபாட்டால் பிரிந்திருந்த அவர்கள் என் கடை திறப்பு விழாவில் மீண்டும் கூடினர். திறப்பு விழா முடிந்ததும் ரீகல் டாக்கீசில் இரண்டு பேரும் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினர். 'அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க' -என்பது முத்தமிழ்க் காவலர் தலைப்பு; "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" -என்பது பாவேந்தர் தலைப்பு. நான் வரவேற்புரை நிகழ்த்தினேன்.

முத்தமிழ்க் காவலர் முதலில் பேசினார்: பேசி முடிந்ததும் 'நான் சைவன்! எனக்கு முதலில் சோறுபோடு' என்று சொல்லிவிட்டுச் சாப்பிடப் போய்விட்டார். அவர் புறப்பட்டுப் போனதும், "கி.ஆ.பெ. விசுவநாதம் அணாபைசா கணக்குப் பார்க்கக் கூடியவர். நான் என்ன பேசி விடுவேனோ என்ற பயம். அதனால் தான் முன்னாலேயே புறப்பட்டு விட்டார்" என்று கூறினார் பாவேந்தர்.

மதுரை வந்தால் தொடர்ந்து 15 அல்லது 20 நாள் என் வீட்டில் தங்கியிருப்பார். என்னை அவருடைய மகனாகப் பாவிப்பார். வீட்டிற்குள் நுழைந்ததும் என் மனைவியைப் பார்த்து 'தம்பி வந்துட்டானா? என்று பரிவோடு கேட்பார். என்னைக் கண்டதும் 'அய்யா! வாய்யா!' என்று அன்பொழுகக் கூப்பிடுவார். பாவேந்தர் மதுரையில் இருக்கிறார் என்ற செய்தி தெரிந்தால் எப்போதும் என் வீட்டில் பத்து இருபது பேர் கூடிவிடுவர். எல்லாருக்கும் விருந்து நடக்கும்.

மீன், கறி, புறா சூப் விரும்பி அவர் உண்ணும் உணவுகள். ரசத்திலே மோர்விட்டுக் குடிப்பார்; முட்டை நிறையச் சாப்பிடுவார். இரவில் கடுக்காக மிளகு ரசம் கேட்பார். இடியாப்பம் அவருக்கு நிறையப் பிடிக்கும். இந்தோ-சிலோன் ஓட்டலுக்கு அடிக்கடி போவோம். அங்கு கைம்மா விரும்பிச் சாப்பிடுவார்.

என் மனைவி டோக் பெருமாட்டி கல்லூரியில் தமிழ் இலக்கியப்

பட்ட படிப்புப் படித்துக் கொண்டிருந்தாள். பாவேந்தரைக் கல்லூரிக்கு அழைத்துச் சென்று பேச வைக்க வேண்டும் என்பது அவள் விருப்பம். கல்லூரியிலிருந்து அழைக்க வந்தனர். பிற்பகல் 4.30 மணி வரை மறுப்பு. அதற்கு மேல் ஒப்புக்கொண்டு பேசப் புறப்பட்டார்.

மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் பாரதி விழா. பாவேந்தர் என் வீட்டில் இருக்கிறார் என்பதை அறிந்து அவரையும் விழாவில் கலந்துகொள்ள அழைப்பு விடுத்தனர். அப்பள்ளி ஆசிரியர் வி.ஜி. சீனிவாசன் பாவேந்தரை அழைக்க வந்திருந்தார். அவர் பாரதி மீது அளவு கடந்த பற்றுக் கொண்டவர். பாவேந்தரைச் சுற்றியிருந்த தி.க. நண்பர்கள் 'சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் ஒரே பார்ப்பனக் கூட்டம். அங்கே போகாதீர்கள்' என்று கூறிவிட்டனர். அவரும் மறுத்து விட்டார். சீனிவாசன் என்னிடம் வந்தார். 'என்ன?சேதுபதி உயர்நிலைப் பள்ளிக்குச் செல்ல மறுத்துவிட்டீர்களா? பாரதி பணிசெய்த இடமாயிற்றே!' என்று பாவேந்தரிடம் கேட்டேன்.

"நான் மறுப்புச் சொல்லலையே! அவ்வளவு தூரம்... கூடப் பேசிக்கிட்டுப் போக ஆளில்லை. சரி வா!" என்று சொல்லிப் புறப்பட்டார். கூட்டத்திற்குப் பேராசிரியர்கள் ரா.ஸ்ரீ. தேசிகன், ரம்போலா மஸ்கரனேஸ் ஆகியோர் வந்திருந்தனர். பாவேந்தர் உள்ளே நுழைந்ததும் ஒரே கரவொலி. மற்றவர்கள் பேச்சை நிறுத்திவிட்டனர். 'நான் கண்டபாரதி, என்பது இவர் பேசிய தலைப்பு. பேச்சு மிகவும் உருக்கமாக இருந்தது. பாரதியை நேரில் கொண்டுவந்து தம் பேச்சில் நிறுத்தினார்.

மதுரை வந்தால் கார்மேகக் கோனாரைப் பார்க்கப் போவார். அவர் மேல் இவருக்குப் பற்று அதிகம், கோனாரும் இவரைப் பார்க்க வருவார். கோனாரைப் பார்க்கப் போகும் போது பழம், மாலை சகிதமாகத்தான் போவார். மாலையைப் போட்டுவிட்டுக் கோனாரின் கையைப் பிடித்துக் கண்களில் ஒற்றிக் கொள்வார்.

ஒருமுறை மதுரையில் இருந்து வெளியான தமிழ்நாடு நாளிதழின் சார்பாக மலர் ஒன்று வெளியிட்டனர். அதற்குக் கவிதையொன்று வேண்டுமென்று பத்திரிகை சார்பில் கேட்பதற்கு டி.ஏ.வி. நாதன் வந்திருந்தார். தமிழ்நாடு பத்திரிகைக்குப் புதுவை ஏஜெண்ட் பாவேந்தரின் மகன் மன்னர் மன்னன். பத்திரிகைக்குச் சேரவேண்டிய தொகையை அனுப்பக் காலதாமதம் ஏற்பட்டதால் தமிழ்நாடு அலுவலகத்திலிருந்து ஒரு முறை வக்கீல் நோட்டீசு அனுப்பப் பட்டது. உடனே அத்தொகைக்கு 'செக்'போட்டு அனுப்பும்படி மன்னர் மன்னனிடம் கூறினார் பாவேந்தர். அந்நிகழ்ச்சி அவர்

உள்ளத்தை உறுத்திக் கொண்டிருந்தது. எனவே மாணிக்கவாசகம் பார்க்க வந்தபோது அவரிடம் பேசவில்லை பாவேந்தர். டி.ஏ.வி. நாதன் இரண்டு மூன்று தடவை நடந்து மலருக்குக் கவிதை வாங்கிச் சென்றார். இரவு கவிதை எழுதிப் போட்டு விட்டுப் பாவேந்தர் தூங்கிவிட்டார். என் மனைவி ரகுபதி அதைப் பெயர்த்து எழுதி வைத்தாள்.

ஒருமுறை சைக்கிள் ரிக்ஷாவில் வீட்டுக்கு வந்தார் பாவேந்தர். நியாயமாக அவனுக்கு எட்டணா கொடுத்தால் போதும்: ரூ.2½ கொடுக்கச் சொன்னார். எதற்கு அவ்வளவு தொகை என்று கேட்டேன். எவ்வளவு தூரம் தெரியுமா? மேலமாசி வீதியெல்லாம் சுத்திக்கிட்டு வந்தா...ம்... கொடுப்பா' என்றார். பேசாமல் கொடுத்தேன். மறுபடி ஒருமுறை அதே இடத்திலிருந்து வரும்போது ரிக்ஷாக்காரனுக்கு 6 அணா தான் கொடுத்தோம். பாவேந்தர் உலகியலைப் பொறுத்தவரையில் குழந்தை.

ஒருமுறை முருகுசெழியன் என்ற நண்பர் பாவேந்தரை விருந்துக்கு அழைத்திருந்தார். போகும்போது நானும் அவரும் பேசிக் கொண்டே நடந்து போனோம். வரும்போது பாதிவழியிலேயே நின்று விட்டார். "இனி வண்டி நகராது, வண்டி கூப்பிடு!" என்றார். கூப்பிட்டேன். மதுரை வந்தால் திரைப்படம் பார்க்க அழைத்துச் செல்வேன். பாதியிலேயே எழுந்து வந்துவிடுவார்.

பாவேந்தரின் மகன் கோபதி (மன்னர் மன்னன்)யின் திருமணம். நான் குடும்பத்தோடு திருமணத்துக்குப் புதுவை சென்றேன். எனக்கு வேட்டி சட்டையும், என் மனைவிக்கு வெல்வெட் பையும் கொடுத்தார். நான் திருமணத்துக்குப் பட்டிவீரன்பட்டி மலைப்பழம் வாங்கிச் சென்றேன். சேலம் நண்பர் ஒருவர் குண்டுமாம்பழம் வாங்கி வந்தார். பண்ருட்டி நண்பர் ஒருவர் பலாப்பழம் வாங்கி வந்தார். காலையில் சுவையான சர்க்கரைப் பொங்கலும் பழமும் சிற்றுண்டியோடு வழங்கப்பட்டது. காலை 10 மணிக்குப் பந்தலில் அமர்ந்திருந்த நண்பர்களுக்குப் பாதாம்கீர் வழங்கப்பட்டது. பாவேந்தர் சமையற்காரனைக் கூப்பிட்டு 'எல்லோருக்கும் முட்டை ஆம்லெட் போட்டுக் கொடு... இல்லை அவிச்சுக்கொடு' என்று கட்டளையிட்டார். திருமண வீட்டில் முட்டை ஆம்லெட்டா' சமையல்காரன் திருதிருவென்று விழித்தான். செய்தி பெண்கள் கூட்டத்துக்கு எட்டியது. மூத்த மகன் சரசுவதி ஓடி வந்தாள். 'என்னப்பா திருமண வீட்ல இப்ப யாராவது முட்டை சாப்பிடு வாங்களா?' என்று கேட்டாள். 'ஏ.. சாப்பிட்டா என்ன? எனக்கு வேணும்! சாஸ்திரமா பேசற சாஸ்திரம்..' என்று சத்தமிட்டார்.

அவருக்கு மட்டும் முட்டை அவித்துத் தட்டில் வைத்துக் கொடுக்கப்பட்டது; அறைக்குள் சென்று சாப்பிட்டார்.

திருமணத்துக்கு மறுநாள் அவரைப் புதுவை சட்டமன்றத் தேர்தலுக்கு மக்கள் முன்னணியின் சார்பில் நிற்கும்படி வற்புறுத்தினர். இந்தத் தொகுதியில் பாவேந்தர் நிற்பதுதான் சரி என்று புதுவை சுப்பையாவும் சொல்லி அனுப்பினார். தேர்தலுக்கு நிற்கலாமா? வேண்டாமா? என்று பாவேந்தர் உள்ளம் ஊசலாடியது. என்னை அபிப்பிராயம் கேட்டார். 'தேர்தலில் வெற்றி பெறுவது உறுதி என்றால் கையெழுத்து போடுங்கள்' என்றேன். போட்டார்; வெற்றியும் பெற்றார்.

இராமநாதபுரம் புலவர் குழுவுக்குப் போய்விட்டுப் பாவேந்தர் வயிற்றோட்டத்தோடு மதுரை வந்தார். டாக்டர் மா. இராசமாணிக்கனார் அழைத்து வந்து வீட்டில் விட்டுவிட்டுச் சென்றார். மருத்துவரிடம் அழைத்துச் சென்று ஊசி போட்டோம். வயிற்றோட்டம் குறைந்தது; நிற்கவில்லை. டாக்டர் காமேஸ்வரனிடம் சீட்டு வாங்கிக் கொஞ்சம் 'பிராந்தி' வாங்கிக் கொடுக்கச் சொன்னார். 'எனக்கு ஊசி வேண்டாம். கொஞ்சம் குடிச்சாச் சரியாப் போயிடும்' என்று பல தடவை குழந்தை போலக் கேட்டார்.

"மதுவா! அது மட்டும் உங்களுக்கு நான் வாங்கிக் கொடுக்க மாட்டேன். என் அப்பா குடியாலேயே என் குடும்பத்தைக் கெடுத்தார்" என்று சொல்லிக் கட்டாயமாக மறுத்துவிட்டேன்.

"சரி சரி! டிக்கெட் வாங்கிக்குடு. நான் ஊருக்குப் போறே" என்று கோபமாகக் கேட்டார். வாங்கிக் கொடுத்தேன். ஊருக்குப் புறப்பட்டு விட்டார்.

பாவேந்தர் கடைசியாக மதுரை வந்தபோது மனைவியோடு வந்தார். பழனியம்மாள் மீனாட்சியம்மன் கோவிலைப் பார்க்க வேண்டும் என்று கேட்டார். பாவேந்தர் என்ன சொல்லுவாரோ? என்ற அச்சம் எனக்கு. அப்பா[1] அனுமதிக் கொடுத்தால்தான் அழைத்துப் போவேன்' என்று சொல்லிவிட்டுப் பாவேந்தர் முகத்தைப் பார்த்தேன்.

"அழைச்சுப் போ! என்னை ஏன் பாக்கற. இவ ஒரு சாமியைவிட மாட்டா. எத்தனை தூணுன்னு எல்லாத் தூணையும் எண்ணிட்டு வந்திடுவா. எல்லாத் தூணையும் காட்டு" என்று சிரித்துக் கொண்டே சொன்னார். அதன்பிறகு நான் அழைத்துச் சென்றேன்.

1. சுவாமிநாதன் பாவேந்தரை 'அப்பா' என்று தான் அழைப்பது வழக்கம்.

பாண்டியன் பரிசு படப்பிடிப்பிற்காகப் பாவேந்தர் சென்னை தியாகராய நகர் இராமன் தெருவில் தங்கியிருந்தார். நானும் என் மனைவியும் அவரைப் பார்க்கச் சென்றோம். மகிழ்ச்சியோடு வரவேற்றார். பிறகு என் மனைவியின் கையைப் பிடித்து 'இந்தக் கையில் சுவையாகச் சாப்பிட்டு நீண்டநாள் ஆயிற்று' என்று சொன்னார். பாவேந்தரை அழைத்துப் போய் எழுத்தாளர் அகிலன் வீட்டில் இரண்டு நாள் சைவ உணவும், ஓவியர் மணியம் வீட்டில் இரண்டு நாள் புலால் உணவும் என் மனைவியைச் சமைத்துப் போடச் சொன்னேன். விருப்புடன் உண்டார்.

ஆனந்த விகடன் இதழிலிருந்து ஒருமுறை மலருக்குப் பாடல் வேண்டுமென்று எழுதிக் கேட்டிருந்தனர். "பார்ப்பான் பத்திரிகைக்கா! மாட்டேன்' என்றார். 'கவிதை எழுதி அனுப்புங்க. பத்திரிகை பார்ப்பான் பத்திரிகைதா! படிக்கறவ எல்லாம் தமிழந்தானே? என்று நான் சொன்னேன். 'அப்படியா! சரி' என்று சொல்லிக் கவிதை எழுதிக் கொடுத்தார். ரூ.501/-க்கு செக் எழுதிக் கொடுத்துவிட்டுப் பாவேந்தரிடம் கவிதை வாங்கிக் கொண்டு போனார்கள்.

'எண்ணூல் தமிழனது நூல்' அது இலங்கை போய் சாங்கியம் என்ற பெயரோடு திரும்பி வந்தது. தமிழன் கொடுத்ததைச் சாங்கியக்காரர் திருப்பிச் சொல்கிறார்' என்று பாவேந்தர் ஒருமுறை கூறினார்.

குதிரை வண்டியில் செல்லும்போது காலைக் கீழே தொங்கப் போட்டுக் கம்பியைப் பிடித்துக் கொண்டு வருவார். இது அவரிடத்தில் உள்ள ஒரு குழந்தைத்தனம்.

ஆஸ்தி நாஸ்தி

அணுகுண்டு எஸ்.வி. பொன்னையா

திருவாளர் அணுகுண்டு எஸ்.வி. பொன்னையா ஆத்தூர்க்காரர்; தீவிர தி.க.; கருஞ்சட்டைக்காரர்; தாடியோடு திரியும் ஆத்தூர்ச் சாக்ரட்டீஸ். இவர் சாக்ரட்டீஸ் போல எதிர்ப்படும் எல்லாரையும் கேள்விகள் கேட்கிறார்; மனிதனைச் சிந்திக்க வைக்கும் கேள்விகளாகத் தொகுத்து ஒரு பிரசுரமே வெளியிட்டிருக்கிறார். ஆத்தூர்க்கடைத் தெருவில் இருக்கும் இவருடைய சைக்கிள் கடை ஒரு சிந்தனைப் பட்டறை. நீங்கள் போனாலும் உங்களைக் கட்டாயம் கேள்விகள் கேட்காமல் விடமாட்டார்; வேண்டுமானால் போய்ப் பாருங்கள். 1953-இல் பாவேந்தரை ஆத்தூரில் சந்தித்து உரையாடியதை நினைவு கூர்ந்து இக்கட்டுரையில் சொல்கிறார் பொன்னையா.

1953-ஆம் ஆண்டு, ஆத்தூரில் சேர்மன் ஆறுமுகனார் மன்றத் திறப்பு விழாவின்போது பாவேந்தர் வந்திருந்தார். அவருக்கு வேண்டிய நண்பர் வெங்கடாசலம் வீட்டில் தங்கியிருந்தார். விழாவில் பேசினார். நானும் என் நண்பர் குலாமும் அவரைச் சந்தித்து உரையாடினோம்.

இசுலாமிய நண்பர் குலாமை நாங்கள் அறிஞர் குலாம் என்று அன்புடன் அழைப்போம். அவர் ஆத்தூர் ஹாஜி அச்சகத்தின் உரிமையாளர்; பெரியாரிடத்தில் நீண்ட நாள் தொடர்புடையவர். சீர்திருத்தவாதி; சுயமரியாதை இயக்கத் தொண்டர். அவர்

பாவேந்தரைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார். "இந்து மதத்தைப் போலத்தான் இசுலாம் மதத்தையும் கருதுகிறீரா? சுயமரியாதை இயக்கம் வற்புறுத்தும் சீர்திருத்தக் கருத்துக்களைக் குரானும் சொல்லுகிறது. குரான் கருத்துக்களை ஏற்று நடைமுறைப் படுத்தியவர் முகம்மது நபி. ஏசு, முகம்மது, சிவன் எல்லாம் உங்களுக்கு ஒன்றுதானா?" என்று கேட்டார் அவர்.

"ஆமாம்!" என்றார் பாவேந்தர்.

"அது எப்படி? உங்கள் கருத்துத் தவறு!" என்றார் குலாம். பாவேந்தருக்குச் சுள்ளென்று கோபம் வந்துவிட்டது.

"என்னைப் பொறுத்தவரையில் மதம் என்பது கழுதை லத்திக்குச் சமானம். கழுதை போட்ட முதல் லத்திக்கு ஒரு மரியாதையும், இரண்டாவது லத்திக்கு மற்றொரு மரியாதையும் என்னிடத்தில் கிடையாது" என்று வெடுக்கென்று சொன்னார் பாவேந்தர்.

அடுத்தநாள் திருவண்ணாமலையில் ப.உ. சண்முகம் தலைமையில் பாரதி விழா. பாவேந்தர் பேசினார். "பாரதி பற்றிப் பேச எனக்குத் தான் தெரியும். அவரைப் பற்றிப் பேச என்னைவிடத் தகுதி இந்த நாட்டில் எவனுக்கும் இல்லை!"

"எட்டையபுரத்தில் பாரதிக்கு மணிமண்டபம் திறக்கப்பட்டது. ஜெமினிகணேசன் என்ற நடிகர் முன்னாலிருந்து அவ்விழாவை நடத்தினாராம். இந்த நாட்டில் நான்தான் பாரதியின் இலக்கிய வாரிசு. எனக்கும் அழைப்பில்லை; பாரதியின் மகளுக்கும் அழைப்பில்லை. பாரதியின் தங்கை, மகள், மனைவி-இவர்களுக்குக் கூட விழாப்பந்தலுக்குள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டது. மிகவும் முயன்று தான் அவர்கள் உள்ளே சென்றிருக்கிறார்கள்" என்று காட்டமாகப் பேசினார்.

மறுநாள் நாராயண குப்பத்தில் தி.க. தோழர் கெங்கப்பன் மகளுக்கு இவர் தலைமையில் திருமணம் நடைபெற்றது. மணமக்களுக்கு அறிவுரை வழங்கியதோடு கடவுளைப் பற்றியும் ஒன்றரை மணி நேரம் பேசினார். அப்போது ஆஸ்திகம்-நாஸ்திகம் பற்றி அவர் சொன்ன விளக்கம் நினைவுக்கு வருகிறது.

"ஆஸ்தி என்றால் செல்வம்; நாஸ்தி என்றால் அழிவு. பொருளை வீணடிக்காமல் காப்பவன் ஆஸ்திகன். ஆண்டவன் பேரால் பால், தயிர், நெய், தானியம் ஆகியவற்றை அவிர்ப்பாகம் என்று தீயில் கொட்டி நாசம் செய்பவன் நாஸ்திகன். காலப்போக்கில் இக்கருத்து எதிரெதிராகத் திருத்தப்பட்டுவிட்டது. உந்து வண்டி நிலையத்தில்

மூட்டை சுமப்பவன் பேருந்திலிருந்து இறங்கும் மக்களைப் பார்த்துக் 'கூலி கூலி' என்று கத்துகிறான். வெளிநாட்டுக்காரன் இதை எதிரிலிருந்து பார்த்தால் என்ன நினைப்பான்? வண்டியிலிருந்து இறங்குபவர்களைத் தான் 'கூலி' என்று பெயரிட்டுக் கூப்பிடுவதாக நினைப்பான். ஆஸ்திகம் நாஸ்திகமானது இதைப்போலத்தான். நூற்றுக்கணக்கான டின் எண்ணெயும் நெய்யையும் ஊற்றி நாஸ்தி செய்து கார்த்திகைத் தீபம் கொளுத்துபவன் தான் நாஸ்திகன்" என்றார் அவர்.

அத்திருமணத்தில் குடும்பக்கட்டுப்பாட்டை வற்புறுத்திப் பேசும் போது, "நான் திருச்சிராப்பள்ளியில் ஒரு தமிழறிஞர் வீட்டுக்குச் சென்றிருந்தேன்; குடிப்பதற்குத் தண்ணீர் கேட்டேன். வீட்டுக் குள்ளிருந்து அவருடைய பையன் தண்ணீர் கொண்டு வந்தான். 'குழந்தை எத்தனை?' என்று நான் அவரைக் கேட்டேன். 'வீட்டில் கேட்டுச் சொல்கிறேன்' என்றார். கேட்டதில் பத்துக்குமேல் இருக்கும் என்று தெரியவந்தது. மணமக்களுக்குச் சொல்கிறேன். இப்படிப் பிள்ளை பெறக்கூடாது. பெரியார் 'கர்ப்ப ஆட்சி' என்ற பெயரில் குடும்பக்கட்டுப்பாட்டைப் பற்றி நூல் எழுதியிருக்கிறார். மணமக்கள் இதைக் கடடாயம் படிக்க வேண்டும்!" என்றார். பின்னர் தமது 'தவிப்பதற்கோ பிள்ளை' என்ற பாட்டை நகைச்சுவையோடு விளக்கினார்.

"திருக்குறள்தான் தமிழர் பண்பாட்டு நூல். திருக்குறளின் அடிப்படையில் தமிழர் வாழ்க்கை நெறியையும் பண்பாட்டையும் வகுத்து அமைக்க வேண்டும். திராவிடர்க் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் சேர்ந்து முடிவு செய்தால் அதற்கேற்ப நான் குறளுக்குப் புதிய உரை எழுதுகிறேன்" என்று கூறி முடித்தார்.

இரு துருவங்கள்

ஔவை சு.துரைசாமிப் பிள்ளை

உரைவேந்தர் ஔவை சு. துரைசாமி பிள்ளை பழுத்த சைவர்; ஆத்திகர். பாவேந்தர் பாரதிதாசன் பழுத்த சீர்திருத்தவாதி; நாத்திகர். என்றாலும் தமிழ் இந்த இருதுவங்களையும் இணைக்கும் பாலமாக இருந்து, இவர்கள் நட்பை வளர்த்து. கொள்கை வேறுபாடு எப்போதும் இவர்கள் குறுக்கே நின்றதில்லை. இத்திரு நீற்றுச் செல்வர் தம் உள்ளத்தில் பாவேந்தருக்காக ஒதுக்கியிருந்த இடத்தை நம் பார்வையில் படும்படி இக்கட்டுரையில் திறந்து காட்டுகிறார்.

என் சொந்தவூர் வடவார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ஔவையார் குப்பம். நான் செய்யாற்றில் ஆசிரியராகப் பணிபுரிந்த நேரத்தில் பாவேந்தர் புதுவையில் ஆசிரியராகப் பணிபுரிந்து கொண்டிருந்தார். மயிலம் முருகன் பேரில் எனக்கும் ஈடுபாடு; அவருக்கும் ஈடுபாடு. அவர் மயிலம் முருகன் மீது 'சுப்பிரமணியர் துதியமுது' பாடினார். நானும் முருகனைப் பற்றிப் பாடல் எழுதும் பண்புடையேன். மயிலம் கோவிலில் அவரும் நானும் சந்தித்து அளவளாவுவோம்.

நான் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தில் நூலகராக இருந்து கொண்டு கரந்தைக் கவியரசு வெங்கடாசலம் பிள்ளையிடம் தமிழ் பயின் றேன். அப்போது பாரதிதாசனார் தஞ்சாவூர் வரும்போதெல்லாம் தமிழ்ச் சங்கத்துக்கு வருவார். எங்கள் நட்பு வளர்ந்தது.

சுயமரியாதைக் கூட்டங்களுக்கும் மாநாடுகளுக்கும் நான் செல்வதுண்டு; ஆனால் தீவிரமாகப் பங்கேற்பதில்லை. திருவாரூர்ச்

சுயமரியாதை மாநாட்டில் சந்தித்தோம்; ஒன்றாகத் தங்கியிருந்தோம். நான உரை எழுதிய ஐங்குறுநூறு-மருதத்திணை வெளிவந்தபோது பாரதிதாசனாரின் பாடல் முதல் தொகுதி வெளியாயிற்று.

ஞானியார் சுவாமிகள் தலைமையில் சைவ சமாஜக் கூட்டம் புதுவையில் நடைபெற்றது. நானும் மணி, கோடீசுவரனும்[1] கூட்டத்துக்குச் சென்றிருந்தபோது பாரதிதாசனார் வீட்டில் தங்கியிருந்தோம். தமிழைப் பற்றியும் சைவத்தைப் பற்றியும் ஆர்வத்தோடு பேசுவார்.

நான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்த போது, அடிக்கடி மனைவியோடு எங்கள் வீட்டுக்கு வருவார். அவர் மனைவிக்கும் என் மனைவிக்கும் நெருங்கிய நட்பு. தங்கள் சுக துக்கங்களை நீண்ட நேரம் பரிமாறிக் கொள்வர். சில சமயங்களில் மனைவியை எங்கள் வீட்டில் விட்டுவிட்டு இரண்டொரு நாள் வெளியூர் சென்று விட்டு மீண்டும் வந்து அழைத்துப் போவார்.

தஞ்சை, நாகர்கோவில், திருநெல்வேலி ஆகிய இடங்களில் நடைபெற்ற புலவர் குழுவில் நாங்கள் ஒன்றாகக் கூடியிருக்கும் வாய்ப்புக் கிடைத்தது. நாகர்கோவில் புலவர் குழுவுக்குச் சென்றிருந்த போது என் மாணவன் நாஞ்சில் ஆரிது வீட்டில் தங்கியிருந்தோம். காலையில் கன்னியாகுமரி சென்று எழுகதிரின் அழகைக் கண்டுகளித்துத் திரும்பினோம்.

நாங்கள் தனியாக இருக்கும்போது 'நான் பாடும் பாட்டிலுள்ள குறை பற்றிச் சொல்லு பார்ப்போம். நீர் சொன்னால் சரியாக இருக்கும்' என்று கேட்பார்.

'நான் குறை சொல்லமாட்டேன்; குறையும் இல்லை' என்று நான் சொல்லுவேன்.

'புதுவையிலே ஆட்சிக்குவரும் தலைவர்களெல்லாம் நீங்கள் திட்டினால் பொறுத்துக் கொள்கிறார்களே! ஏன்?' என்று நான் கேட்பேன்.

'எல்லாத் தலைவனும் 1932லிருந்தே எனக்குப் பழக்கம்' என்று அவர் சொல்லுவார்.

நாங்கள் அரசியல்வாதிகளாயிருந்தால் அடிக்கடி சந்திக்கும் வாய்ப்புண்டு; நாங்கள் இலக்கியவாதிகள். எப்போதாவது

1) பச்சையப்பர் கல்லூரிப் பேராசிரியரும் மறைமலையாரின் மாணவருமான மணி. திருநாவுக்கரசின் தம்பி மணி. கோடீசுவரன் வேலூர் மகந்தை உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்: ஆங்கிலத்தில் சிறந்த பேச்சாளர்.

இலக்கியக் கூட்டங்களில் சந்திப்போம். சந்திக்கும்போது ஒருவரையொருவர் கேலி செய்து சிரித்துப்பேசி மகிழ்வது எங்கள் வாடிக்கை. நாங்கள் கூடியிருப்பதையும் பேசி மகிழ்வதையும் எல்லாரும் வியப்போடுப் பார்ப்பார்கள்.

மறத் தமிழன்

தருமபுரி செல்லையா

தருமபுரியில் நாட்டுவைத்தியராக விளங்கும் திரு. செல்லையாவை எல்லாரும் அறிவர். வயது முதிர்ந்த கட்டைப் பிரம்மச்சாரி. தமிழ், தமிழர், சீர்திருத்தம். இவர் உயிர் மூச்சு. யாழ்ப்பாணத்துத் தமிழரான இவர் பாவேந்தரோடு பழகிய நாட்களை நினைவுபடுத்தி இக்கட்டுரையில் கூறுகிறார்.

நான் பிறந்தது கி.பி. 1892 யாழ்ப்பாணத்துச் சைவவேளாளர் குடும்பத்தைச் சேர்ந்தவன் நான். என் தாயார் சீனியர் கேம்பிரிட்ஜும், புலவர் தேர்வும் படித்தவர். என் உரிமையுணர்ச்சிக்கு என் தாய் தான் காரணம். இளமையிலிருந்தே எளிதில் உணர்ச்சி வசப்படும் நான், யாழ்ப்பாணத்தில் ஜூனியர் கேம்பிரிட்ஜ் படித்துக் கொண்டிருந்தபோது, புத்தகத்தைக் கல்லூரி முதல்வர் முகத்தில் விட்டெறிந்துவிட்டுக் கல்வியை முடித்துக் கொண்டவன்.

கண்டியில் மாரியம்மன் கோவில் ஒன்று உள்ளது. அது சிங்களவருக்குப் பத்தினிக் கோட்டம். அதற்குப் பக்கத்தில் ஒரு மசூதி உள்ளது. கோயிலும் மசூதியும் அருகருகே இருந்த காரணத்தால் இந்து-முஸ்லீம் சச்சரவு அடிக்கடி எழுவது வழக்கம். ஒருமுறை அது பெரிய கலவரமாக மூண்டு விட்டது. அதில் எனக்கும் முக்கியப் பங்குண்டு. அந்தக் கலவரத்தில் 200 இசுலாமியர்கள் கொல்லப்பட்டனர்; சில இந்துக்களும் சிங்களவர்களும் உயிரிழந்தனர். திரு. இராமநாதன் இலண்டன் சென்று வாதாடி எங்களுக்கு விடுதலை வாங்கிக் கொடுத்தார். என்றாலும் நான் நாடு கடத்தப்பட்டேன்.

நாடு கடத்தப்பட்டதும் நான் நேராகத் தமிழகம் வந்து நாகப்பட்டினத்தில் தங்கினேன். ஆறு மாதங்கள் கழித்து ஒருமுறை

கள்ளத் தோணியில் இலங்கை சென்று திரும்பி வந்தேன். என் மாமா அப்போது ரூ. 8000/- கொடுத்து, "இதை வைத்துக் கொண்டு தமிழ்நாட்டிலேயே ஏதாவது தொழில் செய்து பிழைத்துக்கொள்" என்று அறிவுரை கூறினார். அப்பணத்தை எடுத்துக்கொண்டு இந்திய நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்தேன்.

1942ஆம் ஆண்டு சேலத்தில் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில் நான் பாவேந்தரை முதன் முதலில் சந்தித்தேன். பெரியாரின் சுயமரியாதைச் சிந்தனைகளைக் கேட்டு அவ்வியக்கத்தின்பால் அதிக ஈடுபாடு கொண்டிருந்தேன். பாவேந்தரின் புரட்சிக் கவிதைகளைப் படித்துப் பாராயணம் செய்தவன் நான். பாவேந்தரின் எடுப்பான தோற்றமும், சிங்க முகமும், துணிச்சலான பேச்சும் என்னைப் பெரிதும் கவர்ந்தன. என்னையறியாமல் அவர் பால் நான் ஈர்க்கப்பட்டேன். பாவேந்தர் சேலம்-தருமபுரிப் பக்கம் எப்போது வந்தாலும் நான் உடனிருப்பேன். எப்போது வந்தாலும் 'எங்கே செல்லையா?' என்றுதான் முதலில் தேடுவார்.

திருச்சி தி.க. மாநாட்டுக்கு நான் சென்றிருந்தபோது அவரும் வந்திருந்தார். ஏதோ ஒரு விடுதியில் தங்கியிருந்தார். என்னை நாள்தோறும் காலையில் வந்து சந்திக்கச் சொல்லுவார். இருவரும் ஆற்றுக்குக் குளிக்கச் செல்லுவோம். சிந்தாமணியில் ஒரு குடிசையில் ஓர் அம்மாள் பிட்டு, ஆப்பம், இடியாப்பம் மூன்றும் சுடுவாள். நேராக அங்கு சென்று சாப்பிடுவோம். பாவேந்தருக்கு ஆப்பமும், இடியாப்பமும் மிகவும் பிடிக்கும். வழக்கமாகக் காலையில் ஆறு பிட்டு, நான்கு இடியாப்பம், இரண்டு ஆப்பம் சாப்பிடுவார். இடியாப்பத்துக்குப் பழைய பாகற்காய்ப் புளிக் குழம்புதான் அவளிடம் இருக்கும். 'செல்லையா பழைய குழம்பு இடியாப்பத்துக்கு மிகப் பொருத்தம்!' என்று கூறிச் சுவைத்துச் சாப்பிடுவார். இடைவேளையில் வேறு யாருடனாவது பிரியாணி சாப்பிடப் போய்விடுவார். நான் சைவ சாப்பாட்டுக்குப் போய் விடுவேன். சாப்பாடு அப்போது 6 அணா. இலையை அப்போது நாமே எடுத்துப்போட வேண்டும். இரவுச் சாப்பாட்டுக்குப் பாவேந்தரை மணியம்மையிடம் அழைத்துப் போவேன். மீன் குழம்பும், கறி வறுவலும் மணியம்மை உணவோடு பரிமாறுவார். பாவேந்தர் எப்போதும் நிதானமாகச் சாப்பிடுவார். அவர் சாப்பிடும் வரையிலும் நான் அருகில் அமர்ந்திருக்க வேண்டும்.

சொந்தச் சிந்தனையாளர்

பென்னாகரம் நஞ்சையா

திருவாளர் பென்னாகரம் நஞ்சையாவைத் திராவிட இயக்கத் தோழர்கள் நன்கறிவர். இவர் தருமபுரி மாவட்டப் பெரு நிலக்கிழார். நீதிக்கட்சிக் காலந் தொட்டுப் பெரியாருக்குத் தொண்டர்; துணிச்சல்காரர். 1938ஆம் ஆண்டிலிருந்து பாவேந்தரிடத்தில் தொடர்பு கொண்டவர். கவிகாளமேகம் திரைப்படத்தை எடுத்த 'மோகினி பிக்சர்ஸ்' உரிமையாளர்களுள் ஒருவர். சேலம் மாவட்டக் கழகத் துணைத் தலைவராகத் (Vice President Salem District Board) தேர்ந்தெடுக்கப்பட்டுப் பல ஆண்டுகள் பணி புரிந்தவர்.

எனக்கும் பாவேந்தருக்கும் முதல் தொடர்பு 1938

எனக்கும் பாவேந்தருக்கும் முதல் தொடர்பு 1938ஆம் ஆண்டில் ஏற்பட்டது. சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த என் நண்பர்களெல்லாம் கூடி 'மோகினி பிக்சர்ஸ்' என்ற பெயரில் ஒரு திரைப்படக் கம்பெனியைத் துவக்கிக் 'கவிகாளமேகம்' என்ற படத்தை எடுத்தோம். அக்கம்பெனியில் கீழ்க்கண்டவர்கள் பங்குதாரர்கள்.

1) திருவாளர் டி. கிருஷ்ணமூர்த்தி (நீதிக்கட்சிப் பிரமுகர், சேலம் மாவட்டக் கழகத் தலைவர்)

2. திருவாளர் கனகசபாபதி உடையார்

3. திருவாளர் கி.ஆ.பெ.விசுவநாதம்

4. திருவாளர் டி.என். ராமன்

5. நான்

நடிகர்கள்:

1. திரு. என்.எஸ்.கிருஷ்ணன்

2. திரு. திருவாவடுதுறை ராஜரத்னம் (குழலிசை வேந்தர்)

3. திரு. காளி என். ரத்தனம்

4. திரு.சி.வி.வி. பந்துலு

5. திருமதி டி.ஏ. மதுரம்

6. திருமதி எஸ்.பி.எல்.தனலட்சுமி

7. திருமதி பி.எஸ். ஞானம்

8. திருமதி பி.ஆர். மங்களம்

கதை வசனம் பாட்டு பாவேந்தர் பாரதிதாசன். அவருக்குத் துணையாகச் 'சினிமா உலகம்' பத்திரிகை ஆசிரியர் பி.எஸ். செட்டியாரும், ஜலகண்டாபுரம் ப. கண்ணனும் இருந்தனர். எல்லிஸ் ஆர். டங்கன், மொய்லன் ஆகிய இருவரும் படத்தின் இயக்குநர்கள். திருவாரூர் இசைக் கல்லூரியில் பணியாற்றிய டி.வி. நமசிவாயம் (டி.என். ராமனின் தங்கை மகன்) இசையமைப்பாளர்.

மோகினி பிக்சர்ஸ் அலுவலகம் முதலில் சேலம் சந்திப்பில (சூரமங்கலம்) இருந்தது; பின்னர் சென்னைக்கு மாறியது. சென்னையில் பொறிஞர் பா.வே. மாணிக்க நாயக்கர் பங்களாவில் படக்கம்பெனியின் அலுவலகம் இருந்தது.

கவிகாளமேகம் படப்பிடிப்பு கோடம்பாக்கம் பிராக்ஜோதி ஸ்டுடியோவில் நடைபெற்றது. நடுவில் பணத்தட்டுப்பாடு ஏற்பட்ட காரணத்தால் மதுரை தண்டபாணி பிலிம்ஸோடு கூட்டுச் சேர்ந்து படத்தை முடிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இரண்டு முதலாளிகள்! இரண்டு டைரக்டர்கள்! ஏகப்பட்ட செலவு! படம் வெளிவந்ததும் சுமாராக ஓடியது. இழப்பு எதுவுமில்லை! குறைந்த லாபமே கிடைத்தது.

இப்படத்திற்குப் பாவேந்தர் பாரதிதாசன் திரைக்கதை, வசனம், பாடல் எழுத வேண்டும் என்று நாங்கள் விரும்பினோம். அவரை நேரில் கண்டு பேசி இதைப்பற்றி முடிவு செய்ய புதுச்சேரி புறப்பட்டோம். புராணப்படம் என்றவுடன் பாவேந்தர் முதலில் மறுத்தார். 'சினிமாத்துறைக்குப் போய் புராணப்படம் எழுதித்தான் சம்பாதிக்க வேண்டுமா?' என்று கேட்டார். 'உங்கள் திறமை வெளிப்பட வேண்டும்' என்று வற்புறுத்திக் கூட்டி வந்தோம்.

பாவேந்தருக்கு ரூ. 3000/- கொடுக்கப்பட்டது. திரைப்பட எழுத்தாளருக்கு அந்தக் காலத்தில அது பெரிய தொகை. சேலத்தில் படக்கம்பெனி இருக்கும்வரையில் பெரியார் வந்தாலும், பாவேந்தர் வந்தாலும் கம்பெனிக் கட்டிடத்திலேயே தங்குவர். படக்கம்பெனி சென்னைக்கு மாற்றப்பட்ட பிறகு கம்பெனிக்கு எதிரிலேயே ஒரு வீடெடுத்து அதில் குடும்பத்தோடு பாவேந்தர் குடியிருந்தார். வீட்டில் புலால் உணவு செய்தால் என்னை விருந்துக்கு அழைப்பார். சமையல்காரன் சேலத்தைச் சேர்ந்தவன்; நன்றாகச் சமைப்பவன்.

படப்பிடிப்பின்போது டி.என்.ராஜரத்னம் குடித்துவிட்டு வருவார். ஒருநாள் அதிக போதையோடு வந்து படுத்துவிட்டார். அவரை எழுப்ப முடியவில்லை. படப்பிடிப்புத் தடைபட்டது. 'பத்துக்குடம் தண்ணீரைத் தலையில் ஊற்றுங்கள்' என்றார் பாவேந்தர். அப்படியே செய்து துவட்டிப் போதையைத் தெளிய வைத்தோம்.

பாவேந்தர் இரவில்தான் நீண்ட நேரம் எழுதுவார். அப்போது பிராந்தியைக் கொஞ்சங் கொஞ்சமாக ஊற்றிச் சோடாவில் கலந்து குடிப்பார். துணைக்குக் கறி வேண்டும். 'இரவுதான் எழுதுவதற்கு அமைதியான நேரம்' என்று கூறுவார். விடிந்த பிறகு குளித்துச் சிற்றுண்டி அருந்திவிட்டுத் தூங்குவார்.

கவி காளமேகம் படப்பிடிப்பின்போது அவருக்கும் எனக்கும் ஏற்பட்ட நட்பு அவர் இறக்கும் வரையில் தொடர்ந்தது. தருமபுரிப் பக்கம் வந்தால் என் வீட்டில் வந்து ஓரிருநாள் தங்காமல் போக மாட்டார். பென்னாகரத்தில் நடைபெற்ற அரசியல் கூட்டங்களிலும் அடிக்கடி வந்து பேசியிருக்கிறார்.

பாவேந்தர் எப்போதும் ஆரவாரமாகப் பேசமாட்டார்; நிதானமாகப் பேசி சுருக்கென்று குத்துவார். இவர் பாணியே தனி. பெரியாரைப் போல அஞ்சாமை மிக்கவர்; சொந்தச் சிந்தனைக்காரர் (Original Thinker). பென்னாகரம் தமிழ்ச் சங்கத்தில் பேசியபோது, "தமிழரசர்களால் தான் வைதீகம் வளர்ந்தது; நாடு கெட்டது. ஓரி, காரி, பேகன் எல்லாருமே மடையர்கள். பத்து சதுர மைலை ஆண்டுகொண்டு பத்துக் கூத்தியா வைத்திருந்தார்கள்" என்று புலவர்கள் நடுவிலே துணிச்சலோடு பேசினார்.

சில செய்திகளை ஒளிவு மறைவு இல்லாமல், உள்ளத்தில் பட்டதைப் பிறர் என்ன நினைப்பார்கள் என்பதைப் பற்றிக் கவலைப்படாமல்-பச்சையாகப் பேசக்கூடியவர்கள் எனக்குத் தெரிந்தவரை இரண்டுபேர்தான். ஒருவர் பெரியார்; மற்றொருவர் பாரதிதாசன்.

ஒருமுறை உடலுறவைப் பற்றிப் பேச்சு வந்தது. 'என்ன இதைப் பற்றிப் பெரிசா அலட்டிக்கறீங்க... மலஜலங் கழிக்கற மாதிரி இது உணர்ச்சிக்கு ஒரு கழிவாய்!" என்று ஒரு போடு போட்டார். இந்த நாட்டில் அகமும் புறமும் படித்த எந்தத் தமிழாசிரியனும் துணிந்து இதைச் சொல்லப் பயப்படுவான்.

இவரிடத்தில் உள்ள ஓர் அபூர்வ குணத்தைக் கவனித்திருக்கிறேன். பெரியார் ஒருவருக்குத்தான் இவர் கையெடுப்பார்; பெரியார் வந்தால் ஓடி வரவேற்பார். மற்றவர் கையெடுத்தால்தான் இவர் எடுப்பார். இதைப் பலமுறை கவனித்த நான், ஒரு நாள் 'ஏன்' என்று கேட்டேன். 'எனக்குத் தலைவர் பெரியார்தான்' என்று சொன்னார். அறிஞர் அண்ணாவையே பாவேந்தர் மிகவும் சாதாரணமாகவே மதித்தார்.

"பெரியாரும் அண்ணாவும் இரண்டு பெரும் தமிழர்கள்" என்பார். "பெரியார் எதைச் சேர்த்தாலும் தமிழனுக்குத்தான் கொடுப்பார். இந்த யானைக்கு (பெரியாருக்கு) ஈடு யார்?" என்பார்.

"பார்ப்பனீயம் இந்த நாட்டின் நச்சுப்பாம்பு" என்று பெரியார் அடிக்கடி சொல்லுகிறார். நீங்கள் பாரதியைப் போற்றும் காரணம் என்ன?" என்று ஒரு நாள் கேட்டேன்.

"பாரதியிடத்தில் பார்ப்பனத்தன்மை எள்ளளவும் கிடையாது. 'பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே!' என்று பெரியாருக்கு முன் முரசு கொட்டிச் சொன்னவன் பாரதி. நான் புரட்சிக் கவிதைகள் எழுதக் கற்றுக் கொண்டதே அவரிடம்தான். என்னை முதன் முதலில் மனமுவந்து பாராட்டியவரும் அவரே; விளம்பரப்படுத்தியவரும் அவரே. என் கவிதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து இந்து நாளேட்டில் வெளிவர ஏற்பாடு செய்தார். இந்தக் காலத்தில் எந்தப் பார்ப்பான் நமக்கு இப்படி உதவி செய்வான்? அதனால்தான் நான் பாரதியாரைப் போற்றுகிறேன்; பாரதிதாசன் என்று புனைப்பெயரும் வைத்துக் கொண்டேன்" என்று உணர்ச்சிவசப்பட்டுப் பேசினார்.

ஒருமுறை சேலம் கோயம்புத்தூர் லாட்ஜில் பாவேந்தர் தங்கியிருக்கிறார் என்று கேள்விப்பட்டு அவரைப் பார்க்கச் சென்றேன். நாங்கள் அறையில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தபோது கோவைப் பட அதிபர் ஜூபிடர் சோமு திடீரென்று உள்ளே வந்தார். தாம் எடுக்கும் திரைப்படத்துக்கு உடனே பாடல் ஒன்று வேண்டுமென்றும் இப்போதே எழுதித்தர முடியுமா என்று கேட்டார்.

"ஏ எழுதாம...? Sequence சொல்லு!" என்றார் பாவேந்தர். பாடல் இடம்பெறும் சந்தர்ப்பத்தைச் சோமு சொன்னதும் சரியாகப் பத்து நிமிஷத்தில் பாட்டை எழுதிக் கையில் கொடுத்துவிட்டார். உடனே ரூ.1000/-க்குச் செக் ஒன்று கொடுத்துவிட்டுப் பாடலை வாங்கிச் சென்றார் ஜூபிடர் சோமு. நான் மலைத்துப் போனேன்.

ஒருமுறை பொங்கல் சமயத்தில் தருமபுரிச் சுற்றுப்பயணம் வந்திருந்தார் பாவேந்தர். பொங்கல் நாளன்று பென்னாகரம் வரும்படி அழைத்தேன். அவரும் அழைப்பை ஏற்று வந்தார். அவர் விரும்பும் உணவு வகைகளைச் சமைத்து விருந்து வைத்தேன். அவரும் மகிழ்ச்சியோடு உண்டார். பிறகு என்னைப் பாராட்டி 'அஞ்சாத நஞ்சையா' என்று கவிதை எழுதினார். ஊருக்குத் திரும்பும்போது கடத்தை மானின் உப்புக் கண்டம் நான்கைந்து படி ஒரு பையில் போட்டுக் கொடுத்தேன்; அதை எடுத்துச் சென்றார்.

பாரதிதாசன் இந்த நூற்றாண்டில் பெரிய மேதைகளில் குறிப்பிடத் தக்கவர். அவருடைய நட்பு என் வாழ்வில் கிடைத்த அரும்பேறு.

நான்கு

புதுவைக் கல்லறையில்
புதிய மலர்கள்

பாவேந்தர் நினைவு போற்றுவோம்

பேராசிரியர் க. அன்பழகன்

இவர்-பேரறிஞர் அண்ணாவைப் போல அழுக்குப் படாத அரசியல்வாதி. நண்பர்களுக்கு இவர் 'ஷவர் பாத்'. பக்குவம் தெரியாதவர்களுக்குச் சுடு பாத்திரம்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்டு மந்தையில் முதன் முதலாக வெளிப்பட்ட இந்தச் சிறுத்தைப் புலி தன் புள்ளிகளை எப்போதும் மாற்றிக் கொண்டதில்லை.

"பலர் பிறந்து பேசக் கற்றுக் கொள்கிறார்கள்; அன்பழகன் பேசிக் கொண்டே பிறந்து விட்டான்" இது பாவேந்தரின் பாராட்டு. 'இளைய ஞானசம்பந்தன்' என்பது பாவேந்தர் இவருக்குச் சூட்டிய செல்லப் பெயர்.

பேராசிரியர் அன்பழகனார் பாவேந்தர் பற்றிய தமது வாலிப நினைவுகளை இக்கட்டுரையில் வடித்திருக்கிறார்.

தமிழ் மொழி மறுமலர்ச்சி-கவிதை எழுச்சி ஆகியவற்றை உருவாக்கியவர் என்ற தகுதியால் தமிழ்நாட்டின் வரலாற்றில் தமக்கென ஓர் அழியாத இடத்தை, நீங்காத புகழ் ஒளியைப் பெற்ற பெருமைக்குரியவர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள்.

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் அன்னை பெற்றெடுத்த இணையற்ற கவிஞராக மட்டுமன்றி, ஈடற்ற புரட்சிப் பாவலராக, அஞ்சா நெஞ்சு படைத்த பகுத்தறிவுச் சிந்தனையாளராக விளங்கிய பாவேந்தரின் நினைவு நாள் (ஏப்ரல் 29 இல்) சித்திரைத் திங்களில் வருகிறது. அவரதுபொன்னுடல் மறைந்த நாள் 21.4.64 ஆகும். அவரது

உணர்விலே அரும்பி, சொற்களிலே மலர்ந்து, கருத்துக்களிலே மணங்கமழ்ந்த அப்படிப்பட்ட கவிதைகளைப் புதிதாகப் பெறும் வாய்ப்பு முடிவுற்ற நாள் அந்நாள். தமிழ் மொழியின் மீட்சிக்கும், மறுமலர்ச்சிக்கும், உரிமைக்கும் ஏற்றத்துக்கும், ஆட்சிக்கும், மாட்சிக்கும் எழுச்சிப் பண்பாடி, உணர்ச்சிக் கனல் எழுப்பி, இளைஞர்களின் குருதியிலே சூடேற்றி, இன உணர்வோடு மொழிகாக்கும் போரிலே குதித்திடச் செய்த அந்தக் கவிஞரின் குரல் ஓய்ந்தது.

கண் மூடிகளாக-கருத்துக் குருடர்களாக, தம்மையே இழிபிறவிகளாக எண்ணிக்கிடந்த ஏமாளிகளான தமிழ் மக்களை அறிவுக்கண் திறந்து காணச் செய்த கவிஞரின் உணர்வுகள், முழக்கங்கள், பாட்டு வரிகள், பகுத்தறிவு விளக்கங்கள், சாதிசமய மூட நம்பிக்கைகளைச் சாடிய கேள்விக் கணைகள்-யாவும் இன்றும் நமது உள்ளங்களில் ஒலித்துக் கொண்டுள்ளன. தமிழன் என்று ஒருவன் வாழ்ந்திடும் காலம் வரை-அவை ஒலித்துக் கொண்டிருக்கும் தகுதியுடையன.

புரட்சிக் கவிஞரின் கவிதை, தமிழ் உள்ளளவும் வாழும். அவர் உருவாக்கிய கவிதை மரபும் வாழும்! அவர் தம் வழி வழி வளரும் கவிஞர் தலைமுறையும் வளரும்.

ஆயினும்-

புரட்சிக்கவிஞர் ஊட்டிய உணர்வுகளை
வளர்த்த சிந்தனைகளை
வாழ்வித்த இனப்பற்றை
மலர்வித்த மொழி ஆர்வத்தை
வடித்த கற்பனையை
தொடுத்த உவமைகளை
தீட்டிய இயற்கையை
வழங்கிய செஞ்சொற்களை
முழங்கிய பாநடையை

அவரது கவிதையைச் சுவைப்பதாலன்றி வேறு வகையால் பெறுதல் இல்லை. அப்பாவேந்தரின் நிலைபெற்ற தோற்றமே, அழியாத வடிவமே, அவருடைய உயிர் புகுந்த ஓவியமே அந்தக் கவிதைகள் தாம்! அவை நம்மோடு வாழ்பவையே! நமக்காகப் பிறந்தவையே! அவையெல்லாம் நம்மினத்தின் வாழ்விற்காகத்தான்! நம்மை வாழ வைப்பதற்காகத்தான்! எனவே, பாவேந்தர் இன்றும் வலம் வருகிறார். அவரது கவிதை வடிவில்! நம்மோடு உரையாடுகிறார் பாட்டு நடையில்! நமக்கு உணர்வு ஊட்டுகிறார். அவற்றைப் படிக்கும் நிலையில்! ஆம். அந்தக் கவிஞரின் கவிதைகளைப்

போற்றிடும் கடமையைச் செய்வதிலேதான் - தமிழ் இனக் காப்புக்கு ஏற்ற அரண் கண்டவர்களாவோம் என்பதை நாம் மறத்தலாகாது.

அவரது நினைவு போற்றுங் கடமை தமிழர்க்கு எந்நாளும் உரியது. கவிஞரிடையே 'அரிமா' எனவும், புலவர்களிடையே தமிழ்க்களிறு எனவும், பகுத்தறிவாளர்களிடையே 'ஏறு' எனவும் வலம் வந்த பாவேந்தரிடம் நான் பழகும் வாய்ப்புப் பெற்ற நாட்கள் நினைவிற்கு வருகின்றன.

1940ஆம் ஆண்டு நான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்று கொண்டிருந்தேன். சிதம்பரத்தில் என் தந்தையார்-ஒரு தொழில் நடத்திக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒருநாள் புவனகிரி செல்லும் வழியில்-புரட்சிக் கவிஞர் எங்கள் இல்லம் வந்தார். அவரது புவனகிரி (பெருமாத்தூர்) நண்பர்கள் பலர்-என் தந்தையாரிடம் மதிப்புடன் பழகி வந்தனர். அவர்கள் என் தந்தையாரைப் பற்றிக் கூறியிருந்ததினால் கவிஞர் வந்தார். என் தந்தையார் அவர் தோற்றத்தைப் பார்த்தவுடனேயே - அவர் யார் என்பதைப் புரிந்து கொண்டு 'வாங்க, வாங்க கவிஞரே!' என்று ஆர்வத்துடன் வரவேற்றார். பின்னர் இருவரும்-தன்மான இயக்கம், இந்தி எதிர்ப்பு-முதலானவை பற்றி உரையாடிக் கொண்டிருந்தனர். பின்னர் உணவருந்தினர். எங்கள் இல்லம் என்பதால், சைவ உணவையும் (வேறு வழியில்லை என்று) மகிழ்ச்சியாகவே ஏற்றுக் கொண்டார். அப்போதுதான் அவரை நெருங்கிக் கண்டேன். உணவு முடிந்ததும் 'சிகரெட் வாங்கிவரச் சொன்னார்; வாங்கி வந்து கொடுத்தேன். 'நீ என்ன படிக்கிறே?' என்றார்.

முதல் தொடர்பு

பல்கலைக்கழகத்தில் 'இண்டர்மீடியெட்' என்றேன். உடனே மகிழ்ச்சியோடு-'பலே-பலே-அப்படித்தான்-படி. அந்தப் பயல்களுக்கெல்லாம் நமது திறமையைக் காட்டணும். நல்லாப்படி' என்று அன்போடு கூறினார். அதுவே அவரிடம் எனக்கு ஏற்பட்ட முதல் தொடர்பு.

அடுத்த ஆண்டு திராவிட இயக்கச் சார்புடைய ஒரு வணிகர் மறைந்ததையொட்டி நடத்தப்பட்ட நீத்தார் நினைவுநாள் நிகழ்ச்சியில் அவர் தலைமையேற்றிட இசைந்து சிதம்பரம் வந்தார். அந்த நிகழ்ச்சியில் பேசிய பலருள் நானும் ஒருவன். நான் ஓர் இளம் மாணவனாக இருந்து தடையின்றித் தொடர்ந்து பேசியது அவருக்கு ஒரு வகையில் வியப்பினை ஏற்படுத்தி இருந்தது.

பின்னர் பாவேந்தர் பேசுகையில் 'ஏதோ மாணவன் அன்பழகன் பேசப்போகிறான் என்று சொன்னேன். இது, பேச்சா? இது பேச்சு. இப்படியா? மூச்சு விடக்கூட நேரம் வேண்டாமா?' என்று சொல்லிவிட்டு, 'மற்றவர்களெல்லாம் பிறந்து வளர்ந்த பின்னர்தான் பேசுவார்கள். இவன் என்னடான்னா-பேசிக்கொண்டேதான் பிறந்திருப்பான் போலிருக்கு. என் நண்பர் கலியாணசுந்தரம் (மணவழகனார்) தந்த கொள்கைப் பயிற்சி. இப்படித்தான் பிள்ளைகளை வளர்க்கவேண்டும். ஆமாம்-அப்படித்தான்' என்றார்.

தொடர்ந்து கவிஞர் "ஏதோ சீர்காழியிலே ஞான சம்பந்தன் பாடினாருன்னா-நல்லாத்தான் பாடினாரு-தாளம் தவறாம-அது கடவுள் அருள் என்கிறார்கள். இப்பொழுது-மாணவன் அன்பழகன் பேசியது கேட்டோமே இது என்னவாம் என்று அவங்களை நீங்க கேளுங்கோ" என்று குறிப்பிட்டுப் பேசினார்.

அன்று கவிஞர் தங்கியிருந்த இடத்தில் அவருடன் இருந்து உரையாடி மகிழ்ந்தேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் பலரைக் குறித்தும் தன்மானக் கொள்ளைக்குள்ள ஆதரவு நிலை குறித்தும் ஆர்வத்தோடு கேட்டார். நான் அறிந்தவற்றைக் கூறினேன்.

அந்த ஆண்டில்-புதுச்சேரியில் சிறப்புடன் நடைபெற்று வந்த ஒரு தமிழ்ச்சங்கத்தில்-கல்லூரி மாணவர்கட்கு எனக் கட்டுரைப் போட்டியும், பேச்சுப்போட்டியும் நடைபெற்றது. அதில் நானும்-அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர் சிலரும் கலந்து கொண்டோம். பேச்சுப் போட்டியில் கலந்துகொள்ள நான் சென்றபோது-புதுவை இயக்கத் தோழர் புவனகிரி இராமலிங்கம் அவர்களுடன் கவிஞர் இல்லம் சென்றேன். அன்பாக வரவேற்று என்னுடைய ஆர்வத்தை வாழ்த்தினார். அந்தப் போட்டிகளில்-பேச்சு-கட்டுரை இரண்டிலும் எனக்கு முதற்பரிசுகள் அறிவிக்கப்பட்டன. அதைக் கேட்டு கவிஞருக்குப் பெருமகிழ்ச்சி. நண்பர்களிடம் எல்லாம் அதையே சொல்லித் 'தன்மான இயக்கத்தவர் தரம் எப்படி?' என்று கேட்டார்.

அடுத்த நாள் மாலை அங்கிருந்த பிரஞ்சு ஆட்சியின் ஆளுநர் பரிசுகள் வழங்க இசைந்திருந்தார். மாலை ஆறு மணிக்கு நிகழ்ச்சி. மாலை ஐந்து மணிக்குக் கவிஞருக்கு ஒரு திடீர் எண்ணம் ஏற்பட்டு-நான் பூட்ஸ் (காலணி) போடாமல் கவர்னரிடம் சென்று பரிசு பெறுவது நன்றாக இராது-எனவே உடனே சென்று 'கட்பூட்ஸ்' வாங்கி வரவேண்டும் என்றார். நான் தயங்கினேன். அவரே என்னையும் அழைத்துக் கொண்டு கடைத்தெருவுக்குச் சென்றார். கடைகளில் ஏறி இறங்கி, அளவு சரிபார்த்து வாங்கிக் கொண்டு திரும்புவதில்

எப்படியோ காலம் தாழ்ந்து ஆறரை மணி அளவில்தான் பரிசளிப்பு நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்கு நான் போய்ச் சேர்ந்தேன்.

ஆளுநர் சிறிதுநேரம் காத்திருந்துவிட்டு முதல் பரிசுகள் இரண்டும் பெறுகிற மாணவனே வந்து சேரவில்லையே-என்று கேட்டு விட்டுப் போய்விட்டார். எனக்கு ஏமாற்றம் ஏற்பட்டது என்றாலும்-அதை விட அந்தச் சங்கத்தாருக்கு-நான் ஏமாற்றம் ஏற்படக் காரணமாகி விட்டேன் என்பதை எண்ணி வருந்தினேன். பின்னர் கவிஞரைக் காணச்சென்றேன். அவரும் அதைக்கேட்டு வருந்தினார். ஆனால் உடனே ஆறுதல் கூறி ஊருக்கு அனுப்பி வைத்தார். புதுவைச் சங்கத்தாரும் பரிசுகளைத் தந்து வாழ்த்தி அனுப்பினர். இருபது ஆண்டுகளுக்குப் பின் -அப்பொழுது நான் எழுதிப்பரிசு பெற்ற கட்டுரையைக் கூட எனக்கு அனுப்பி வைத்தனர் என்பதும் குறிப்பிட வேண்டியதாகும்.

ஆசிரியர் வேலை

அடுத்து 1944 இல் அண்ணாமலையில் பட்டம் பெற்று சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் ஆசிரியராகப் பணியும் பெற்றேன். அந்த ஆண்டுகளில் ஒன்றிரண்டு தமிழ்ச்சங்க விழாக்களில்-புரட்சிக் கவிஞருடன் நானும் பேசினேன். அடுத்த ஆண்டு நிகழ்ந்த என்னுடைய திருமணத்திற்குத் தந்தை பெரியார் தலைமை ஏற்க-புரட்சிக் கவிஞரும்-அறிஞர் அண்ணாவும் மற்றவர்களும் வாழ்த்துரை வழங்குவர் என்று அழைப்பிதழ் வெளியிட்டிருந்தேன். புரட்சிக் கவிஞர்-வர இயலாத நிலையில் ஓர் அருமையான வாழ்த்துரை அனுப்பியிருந்தார். புரட்சிக் கவிஞர் என்னிடத்தில் வைத்திருந்த பேரன்பும்-பெரும் நம்பிக்கையும், அந்தக் கவிதை வரிகளில் நடனமிட்ட மொழிப்பற்றும்-இனப்பற்றும்-இயக்க ஆர்வமும், தொண்டுணர்வும், எப்படியெல்லாம் கவிஞரால் மதிக்கப் பட்டன என்பதற்கு அந்தக் கவிதை வரிகளே சான்று. அடுத்து அவர் சென்னை வரும் வாய்ப்புள்ளபோது என்னையும் சந்திக்க விழைவார்.

ஓரிரு முறை நண்பர் செல்லப்பா அவர்களின் பாரி நிலையத்திலும்-திருவல்லிக்கேணியில் திருவாரூர் சுயமரியாதை வீரர் டி.என். இராமன் அவர்கள் தங்குமிடத்திலும் கவிஞர் தங்குவார். ஓரிரு முறை அந்நாட்களில் கலை உலகில் செல்வாக்குப் பெற்றிருந்த கவிஞர் கம்பதாசன் அவர்களோடும் எனது இல்லத்திற்கு வருவார். சிறிது நேரம் உரையாடி விடைபெறுவார்கள்.

ஒருமுறை கம்பதாசன் அவர்கள், பாவேந்தரிடம் கொண்டிருந்த பேரன்பு (பக்தி என்று கூடக் கூறலாம்.) காரணமாக ஒரு பெரிய

உணவு விடுதிக்குக் கவிஞரை அழைத்துச் சென்று உயர்ந்த மது வகைகளை எல்லாம் அவரைப் பருகுமாறு செய்தார்.

கவிஞருடன் நானும்-மற்றொரு தேசிய வார ஏட்டின் ஆசிரியரும் உடன் சென்றிருந்தோம். கம்பதாசன், கவிஞர் போதும் என்றாலும் விடாது வற்புறுத்தி நிரம்பப் பருகுமாறு செய்துவிட்டார். அப்போது கம்பதாசன் நூறுரூபாய் நோட்டுகளாகச் செலவிடும் வாய்ப்புப் பெற்றிருந்த காலம். 'என் வருமானமெல்லாம் கவிஞருக்கே! என் குருநாதருக்கே!' என்று அவ்வப்போது முழங்கியபடி-ஆர்வத்தோடு செலவிட்டார். விடுதியிலிருந்து ஒரு பெரிய காரில் வீடு வந்தோம்! வரும் வழியிலேயே..... கவிஞருக்கு குமட்டல் ஏற்பட்டு வாந்தி எடுத்தார். அப்பொழுது அவர் என்னை நோக்கிக் கூறினார்-"தம்பி கம்பதாசன் என்னிடத்தில் அன்புள்ளவன்-எனக்கும் இது பழக்கந்தான். ஆனால் அவன் உன்னை அழைத்தால் நீ அவனுடன் போகவேண்டாம். இது (குடி) எல்லாம் உனக்கு ஒத்துக்கொள்ளாது-என்ன நான் சொல்றதை மறந்து விடாதே-நான் வருகிறேன்" என்று புறப்பட்டுச் சென்றார் அவர். தமக்கு மது, பழக்கமான ஒன்று என்றாலும்-என்னிடத்தில் வைத்திருந்த அன்பினால் கூறிய அறிவுரை என்பதை நான் மறுக்கவியலாது. இந்நிகழ்ச்சி 1947 இல் நிகழ்ந்தது.

அதற்கு முதல் ஆண்டுதான் புரட்சிக்கவிஞரின் சீரிய தமிழ்த் தொண்டினைப் போற்றி-நிதியளிப்பு விழா ஒன்று அறிஞர் அண்ணாவின் பெரும் முயற்சியாலும், நாமக்கல் செல்லப்பர்-திருவாரூர் டி.என்.இராமன் முதலானோர் உழைப்பாலும் நிகழ்ந்தது. அதுகாறும் தமிழகத்தில்-அப்படிப்பட்டதொரு விழாவோ-நிதியளிப்போ எந்தக் கவிஞர்க்கும் நடைபெற்றதில்லை.

அண்ணாவால் சிறப்புற்றது

அந்தப் பணியில் நானும் பங்குபெற்றிருந்தேன். கவிஞரின் பெருமை சுடர் விட்டுப் புகழ்ஒளி பரப்பிய காலம் எனினும், அறிஞர் அண்ணாவின் ஆர்வத்தாலும், ஆதரவினாலும் அந்த விழா பெருஞ்சிறப்புற்றது. ஆயினும் கவிஞர் அவர்கள் எதையும் பொறுமையாக எண்ணிப்பார்த்திடும் இயல்பினரன்மையினால் அந்த விழா நடத்தியவர்களைக் குறித்தே குறைகாண முற்பட்டார். அதனை ஓரிரு சமயங்களில் என்னிடத்தும் உரைக்கலானார். அதையுங்கூடப் பக்குவமாகக் கூறாது கடுமையான சொற்களையும் பயன்படுத்தி கூறிவிடுவார். அவரது இயல்பை அறிந்திருந்த நான் அதற்காக அவரைக் கண்டித்து ஏதும் பேசவில்லை. எனினும்-தங்களைப் பாராட்டிப் போற்றி நிதியளித்து வாழ்த்தியவர்களைக்

குறித்துத் தாங்களே இப்படிப் பேசுவது சரியல்ல; தேவையுமல்ல என்று விளக்கிக் கூறினேன். அதனை, ஏனோ அவர் ஏற்கவில்லை. ஆனாலும் என்னை அறிந்திருந்த அவர், கோபித்துக் கொள்ளவில்லை என்று தான், நான் ஆறுதல் பெற்றேன்.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றும் கட்டம் உருவாகியது. அந்நிலையில் புரட்சிக்கவிஞர் அவர்களும், குத்தூசி குருசாமியார் அவர்களும் தந்தை பெரியார் அவர்களிடம் மாறுபட்ட நிலையில்-அவரிடம் உரிமைக்குப் போராடவேண்டும் என்று வலியுறுத்தினர். அதனை அண்ணா அவர்களும் என் போன்ற தோழர்களும் ஏற்கவில்லை.

புரட்சிக் கவிஞரின் இயல்பு, ஒன்றைப் போற்றினும் எல்லையில்லாத அளவு போற்றிப் புகழுவார். ஒன்றில் மாறுபடினும் தூற்றுதலின் எல்லைக்கே செல்வார். இரண்டிலும் அண்ணா அவர்கள் அளவறிந்தே ஈடுபடுவார். எனவே கவிஞர் உள்ளத்தில், அண்ணா விடமும், எங்களிடமும் மாறுபாடு ஏற்பட்டது. 'பெரியாரின் போக்குத் தவறு என்ற பின்னர், எதிர்த்துப் போராடத் துணிவில்லாத இவர்கள் கோழைகள்' என்றார் கவிஞர்.

ஆனால் அதற்காக, அண்ணா அவர்கள் தமது முடிவை மாற்றிக் கொள்ளவில்லை. அண்ணா அவர்கள் கவிஞரைப் பற்றிக் கூறியது, "அவர் தலைசிறந்த கவிஞர். ஆனால் ஓர் அரசியல் கட்சியை எப்படி நடத்திச் செல்ல வேண்டும் என்பது அவருக்குப் பழக்கமில்லாதது. மேலும் புதுச்சேரி அரசியல் போலவே எங்கும் நடத்தலாம் என்று அவர் கருதுகிறார். நாம் என்ன செய்ய முடியும்?" என்பதுதான்.

அதன் பின்னர்-புரட்சிக் கவிஞர் நேரடியாக எந்தக் கட்சியிலும் தொடர்பு கொள்ளவில்லை என்றே கருதுகிறேன். ஆயினும் எல்லாக் கட்சிகளைப் பற்றியும்-தலைவர்களைப் பற்றியும் அவ்வப்போது அவருக்குத் தோன்றும் உள்ளக் குமுறலை-தமது கவிதைகளில் இடம் பெறச் செய்து வந்தார். அதனால் அவரிடம் நான் கொண்டிருந்த தொடர்பும், நாளடைவில் குறையும் சூழ்நிலை ஏற்பட்டது எனலாம். என்றாலும் அவரிடத்தில் கொண்டிருந்த மதிப்பும்-அவர் தம் கவிதையில் கொண்டிருந்த பற்றும் மாறவில்லை; மாறியும் விடாது.

கவிதையுலகில் அவர் ஒரு முடிசூடா மன்னர். புரட்சி உணர்வில் அவர் தமிழ்நாட்டு ஷெல்லி; இயற்கையைப் பாடுவதில் அவர் வால்ட்விட்மன்; வரலாற்றைக் காவியமாக்குவதில் அவர் இளங்கோ; வருணனையில் சொல்வளத்தில் அவர் கம்பர்; காலத்தின் தேவையில் அவர் பாரதி; நம்முடைய உள்ளத்தில் அவர் என்றும்

பாவேந்தர்-புரட்சிக் கவிஞர்-இனமுரசு-தன்மானவீரர்-பகுத்தறிவுச் சுடர். ஆனாலும்-அவரது வாழ்க்கையில்-உலகியலில் அவரும் ஒரு மனிதரே! எனவே அவரால் தமிழுலகு பெற்ற பயனை எண்ணுவோர்-அவரைப் போற்றாமலிரார்! போற்றத் தவறார்.

தமிழகத்தில் இசையரங்குகளில் எல்லாம் மக்களுக்கு விளங்காத தெலுங்குக் கீர்த்தனங்களே, பக்கவாத்தியங்களோடு முழங்கப்பட்டு வந்த காலம். செட்டி நாட்டரசர் அண்ணாமலையார் அது கண்டு வேதனையுற்று தமிழிசை இயக்கம் தோற்றுவித்தார். அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தில் ஆண்டு தோறும் தமிழிசை விழா கொண்டாடப்பட்டது. அவ்விழா நாட்களில் இசையரசு-தண்டபாணி தேசிகர், ஏழிசைமன்னர் தியாகராஜபாகவதர், நாதசுர சக்கரவர்த்தி இராசரத்தினம் முதலான பலர் பங்கு பெறுவர். அந்த விழாக்களில் ஓரிருமுறை பாவேந்தர் அவர்களும் வந்து கலந்து கொள்வார்.

தமிழிசை நாடெங்கும் பரவவேண்டும். வேற்று மொழிப் பாட்டு 'சங்கீதமாவதை' மாற்ற வேண்டும் என்னும் தணியாத வேட்கை அவருக்கிருந்தது. எனினும் நமது இசைவாணர்கள் பாடும் தமிழ்ப் பாட்டுகள் பெரிதும் புராணம் பரப்பும் பக்திப் பாடல்களாகவே அமைந்து, வைதிகம் வளர்க்கப்படுவதை அவர் விரும்பவில்லை.

ஒரு இசை விழாவில் தேசிகர் இசையரங்கு நிகழ்த்தினார். பல தமிழ்ப் பாடல்கள் பாடினாலும் இடையில் இரண்டு தெலுங்குக் கீர்த்தனங்கள் பாடினார்.

பாவேந்தர் தங்கி இருந்த இடத்தில் அவரைக் காண வந்த என் கல்லூரித் தோழர்கள், அந்தப் பாட்டரங்கு பற்றி அவரிடம் விவரித்தனர். தெலுங்குப் பாட்டு பாடினார் என்று கேட்டதும், ஒரு எள்ளல் நகை பிறந்தது அவரிடம், "நம்மவரின் பஞ்சப் புத்தி போகாது" என்று வெகுண்டார். ஏன்? என்றேன் நான். எவ்வளவு பெரிய இசைவாணர் ஆனாலும்-தெலுங்குக்கீர்த்தனம் பாடா விட்டால் தம்மை ஒரு சங்கீத வித்துவான் என்று மதித்து ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்று பயப்படுகின்றனர்!

தமிழ்ப்பாட்டுகளுக்கு என்ன பஞ்சமா? ஒரு முழுப்பாட்டரங்கும் தமிழ்ப் பாட்டுகளே பாடினால் என்ன குடி முழுகிப் போய்விடுமா? அக்ரகாரமும்-பத்திரிகைகளும் பாராட்டாவிட்டால்-பாட்டுத் திறமை போய் விடுமா? நம்மவர்கள் 'மான உணர்வு' கொள்ள வேண்டாமா? தமிழால் சிறந்த இசையரங்கு நிகழ்த்த முடியாது என்கின்றனர்-நம் எதிரிகள். அந்தப் பழிச்சொல் உண்மையாவதற்கு

அன்றோ, இவர்கள் இடந்தருகின்றனர்!" என்று கூறித் தமது வெகுளியை வெளிப்படுத்தினார்.

மேலும் தமிழிசை பற்றி அவர் தெரிவிக்கையில்,

"எப்போ வருவாரோ!" என்று கடவுளைக் கூப்பிடறான். எவ்வளவு நாளா கூப்பிடறான். தெய்வங்களைப் பற்றிய கதைகளையே பொருளாகக் கொண்டு பாடிக் கொண்டிருப்பதால் என்ன பலன்? மக்களின் வாழ்க்கைப் பிரச்சனையை, உழைப்பை, தொழிலை, குடும்ப வாழ்க்கையை, காதலைப் பாடும் பாடல்களைப் பாடினாலன்றோ மக்களுக்குப் பயன்கிட்டும் உணர்ந்து, சுவைத்து, களித்து ஏற்றுக்கொள்வர்" என்றார் பாவேந்தர்.

அதன் தொடர் சிந்தனையில் விளைந்த தமிழ் அமுதமே, அவர் இயற்றிய இசையமுது' எனலாம்.

ஒரு நாள் தேசிகர் பாடிய பாட்டொன்றைத் தோழர் ஒருவர் பாவேந்தரிடம் கூறினார். அப்பாட்டு, கடவுள் உண்மையை வலியுறுத்தும் வகையில்,

"இல்லை என்பான் யாரடா?
தில்லை வந்து பாரடா?"

என்று தொடங்குவது. அது குறித்து ஒரு தமிழ் மன்றத்தில் பேசுகையில், பாவேந்தர், "அப்படிப் பாடினாராம் தேசிகர், இப்படிப் பாடுகிறேன் நான்" என்று கூறி,

"இல்லை என்பேன் நானடா"
"தில்லை கண்டு தானடா"

என்று மொழிந்தார். நான் தில்லை வந்துவந்து போவது தேசிகருக்குத் தெரியாது-'சிதம்பர ரகசியமே திரையை நீக்கிக் காட்டப்படும் ஒன்று மற்ற பெரு வெளியே' என்பதும் தெரியாமல்-தில்லைவந்து பார்க்கச் சொல்கிறார் என்றார் பாவேந்தர்.

பாவேந்தர் மற்றவர் கருத்து-அவர் தம் நம்பிக்கை என்பதற்காக எதையும் பொறுத்தல் அரிதாகும். எதைக் குறித்தாயினும் தாம் தவறு என்று கண்டவற்றை உடனே கடுஞ்சினத்துடன் கண்டனம் செய்வார். அவரது ஆழ்ந்த புலமையும், தமிழ் மாட்சியை நாட்டும் பற்றும், குறிக்கோள் (கொள்கை) ஆர்வமும், ஒருவகைக் கவிச் செருக்கும் அதற்கு ஏதுவாகும்.

உள்ளத்திற் பட்டதை உணர்ச்சி கொண்ட வடிவம் கொள்ளச்

செய்வதே கவிதைத் தொழிலாதலின், பாவேந்தரின் உணர்ச்சி வாய்ப்பு நேரிட்ட போதேல்லாம் பொங்கிப பீறிட்டது போலும்!

மும்மொழி வல்லுநரும்-தனித்தமிழ் இயக்கத் தந்தையுமான மறை மலை அடிகளார் அவர்களை ஒரு முறை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் உரை நிகழ்த்த அழைத்திருந்தோம்.

மறைமலை அடிகளாரை வரவேற்றுச் சிதம்பரம் தொடர் வண்டி நிலையத்தில் கூடியிருந்த மாணவர்கள் தமிழ் வாழ்க! அடிகள் வாழ்க! இந்தி ஒழிக! தமிழ் வெல்க! என்று முழக்கம் எழுப்பியது கேட்டு அடிகள் மகிழ்ந்தார். பின்னர் 'இராமாயணம் ஒழிக' என்பதைக் கேட்டும் தலையசைத்தார். அடுத்து 'புராணங்கள் ஒழிக' பெரிய புராணம் ஒழிக' என்றும் முழக்கம் தொடர்ந்த போது அடிகளாருக்கு அது பிடிக்கவில்லை. அடிகளார் அதை நிறுத்தச் சொன்னார். என்றாலும் அவ்வப்போது சிலர் அந்த முழக்கத்தையும் எழுப்பி வந்தனர்.

அடிகளார் தங்குமிடம் சேர்ந்தார். அங்கு என் தந்தையாரை (மறைந்த மு. கலியாண சுந்தரனார்)யும் என்னையும் அழைத்து "மற்றவை எல்லாம் நியாயம்! ஆனால் பெரிய புராணம் ஒழிக, என்பது நியாயமல்ல; அது புராணம் அல்ல; திருத்தொண்டர் வரலாறு; அது வடநாட்டினின்றும் வந்தல்ல-தென்னாட்டவருடையது! சிவனைப் போற்றும் சமயம் தென்னாட்டவருடையது! அது ஒழிக என்பது முறையல்ல" என்று விளக்கினார். அப்பொழுது என் தந்தையார்-பெரிய புராணத்தில் உள்ள அறிவுக்குப் பொருந்தாத கூற்றுக் களையும், தமிழரின் மான வாழ்வுக்கு மாறுபட்டதாக அமையும் ஒழுகலாற்றையும் கூறி, இதனை எப்படி நமது மரபாக ஏற்பது? என்று கேட்டார். 'அப்படி ஐயம் எழுவது, முழுமுதற் கடவுள் சிவ பெருமானிடம் பற்றின்மையினாலேயே' என்றார் அடிகள். 'அப்படியானால் சிவப்பற்றுக் கொண்டால் அறிவுக்கு இடமில்லையா?' என்றார் என் தந்தை. 'எல்லாம் அவன் செயல் என்று சிவத்தை ஏற்றவர்க்குப் பெரிய புராணத்தில் எதுவும் குற்றமாகத் தெரியாது' என்று அடிகள் விடையளித்தார். அவரிடம் கொண்டிருந்த மதிப்பால் மேலும் அதுபற்றி அவரிடம் வாதாடவிலலை. அடிகளாரோ,

சிவம்-செம்பொருள் எனவும்,
சிவமதமே-தமிழர் சமயம் எனவும்
அம்மத அடியார் தம் பெருமையைப்
பேசுவதே பெரிய புராணம் எனவும்
அதை 'ஒழிக' என்று கூறுவதைத்
தாம் ஒப்பவியலாது எனவும்-விளக்கியுரைத்தார்.

தந்தை பெரியார் அவர்களின் புராண-இதிகாச எதிர்ப்புக் கொள்கைகளில் பற்றுக் கொண்டிருந்த என் தோழர்களால் அதனை ஏற்க முடியவில்லை. அடுத்த சில நாட்களில் அங்கு வருகை தந்த பாவேந்தர் அவர்களிடம் நானும் சில தோழர்களுமாக இந்த நிகழ்ச்சியை எடுத்துச் சொன்னோம்.

முதல் கட்டத்தில்-'பலே, பலே' என்றார். 'அப்படித்தான்', 'சரி சரி' என்றெல்லாம் கூறிவந்தார். 'நம்ம பிள்ளைகள் நல்லாத்தான் முழங்கி இருக்கிறார்கள்' என்றார். அதன்பின் இவ்வாறு கூறினார்: "அடிகள் பெரிய அறிஞர், ஏராளமாகப் படித்தவர். ஆராய்ச்சியாளர், என்றாலும் அவர் சைவர். அவருடைய சமயத்தைக் குறை சொன்னால், அவரால் பொறுக்க முடியவில்லை. என்றாலும் சைவத்தின் தொன்மையைக் கொண்டு அது தென்னாட்டவர் (தமிழர்) சமயம் என்று நம்புகிறார். தமிழர்களிடம் தோன்றித் தனித்து நின்ற சமயம்?ஆரியத்தால் வந்ததன்று என்பதற்காக-என்பதால் நாமும் மதிக்கலாம். ஆனால் ஏற்க முடியாது. எவ்வளவு பெரிய அறிஞர் ஆயினும்-மத நம்பிக்கை ஏற்பட்டு விட்டால் பின்னர் தெளிவு ஏற்படாது.

"என்றாலும்-அவரை மதித்து- பெரிய புராணம் ஒழிக' என்பதை அன்று நிறுத்திவிட்டீர்களா? அதுவும் சரியே! அவர் நம்மவர் நம்மவர்க்காக-தமிழர்கட்காக வாதாடுபவர்-அதற்காக அவருக்கு மரியாதை கொடுக்கலாம்! அவரது தமிழ்த் தொண்டு பெரிது!

> நுண்ணிய நூல் பல கற்பினும் மற்றுந்தன்
> உண்மை அறிவே மிகும்.

என்னும் குறள் விளக்கும் அறிவே-மறைமலை அடிகளாரின் பற்று போலுற நிலையைத்தான்" என்றார் பாவேந்தர்.

வழக்கமாகக் கிளர்ச்சியை விரும்பும் பாவேந்தர் அன்று வழக்கத் திற்கு மாறாக, அடிகளாரிடம் அவர் கொண்டிருந்த மதிப்பால்-கடுமை காட்டாது பொறுமை காட்டினார் எனல் வேண்டும்.

ஒருமுறை அவர் சிதம்பரம் வந்தபோது, பல்கலைக்கழகப் புலவர் வகுப்பு மாணவர்களான, புலவர் நா.மு. மாணிக்கம், புலவர் அரங்கசாமி, தம்பி புலவர் திருமாறன்-முதலானோருடன் அவரைக் கண்டு உரையாடினோம்.

தமிழ்மொழிக்கு அமைந்த இலக்கணங்கள் பற்றியும், தொல் காப்பியத்திற்கும் நன்னூலுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் குறித்தும் விளக்கம் பெற்றோம். தற்காலத்தில் இலக்கணப்படி எழுதாமல்-இலக்கணத்திற்கு மாறாக எழுதுவது வழக்கமாகி

வருகின்றதே என்று என் தோழர்கள் வினவினர். "நன்னூல் தீட்டிய பவணந்திக்குப்பின், இத்தனை நூற்றாண்டுகள் கடந்தும்' காலத்தின் தேவையை நிறைவு செய்யும் வகையில் ஒரு புதிய இலக்கணம் இயற்றப்படாமல் இருப்பதுதான் குறை. மொழி உயிருடையது; வளரும். சில மாறுதல்களும் விளையும். அதற்கேற்ப அவற்றின் இயல்பைக் கண்டு ஓர் இலக்கணம் வகுத்திருக்க வேண்டும்" என்றும் "அதனால் இலக்கணப் பிழை எல்லாம்-தமிழின் வளர்ச்சி என்று கருதலாகாது. மொழி வளர்சசி ஒரு முறையாக நிகழ்வது. அதுவும் ஓர் இலக்கணத்தின் அடிப்படையில் காணப்பட வேண்டும்" என்றும் விளக்கம் அளித்தார்.

தனித்தமிழ் ஆர்வம் கொண்ட என் நண்பர்கள், "தாங்கள் இயற்றும் கவிதைகளில் 'தமிழ் உணர்வு' பொங்குகிறது. ஆனால் அதில் சில சொற்கள் தமிழாக இல்லாமல்-பிற மொழிச் சொற்களாக உள்ளனவே. தாங்கள் தனித்தமிழிலேயே கவிதைகள் இயற்றலாகாதா?" என்று கேட்டனர். உடனே கவிஞர், "தனித் தமிழ் நல்லதுதான். கூடாது என்பதல்ல. ஆனால் ஒரு கவிஞனின் உள்ளத்து உணர்வைக் கவிதையாக வடிக்கும் நிலையில் இயல்பாக வரும் சொல்லை விட்டுவிட்டு, தனித்தமிழ்ச் சொல்லாகத் தேடிப் பயன்படுத்துவது என்பது கவிதையின் உணர்ச்சி வேகத்தைத் தடைப்படுத்தி அதன் அழகைக் குறைத்துவிடும். 'கவிதை' செய்யப்படுவதல்ல-அது உள்ளத்தின் வெள்ளப் பெருக்கு. அது எப்படிவருகிறதோ-அப்படியே அமைவதுதான் அதற்குச் சிறப்பு. தனித்தமிழ், உரைநடைக்கு. பேச்சுக்கு வேண்டியதே. ஆனால் கவிதைக்கு ஒத்துவராது" என்றார் கவிஞர். கவிதை மன்னரிடம் மறுப்புக் கூற எங்களில் யாருக்கும் துணிவில்லை.

சிறிது நேரம் வேறு ஏதோ பேசிய பின்னர், "தாங்கள், தனித்தமிழ் நடை கவிதைக்குக் கூடாது என்கிறீர்களா? இயலாது என்கிறீர்களா?" என்று நான் ஒரு ஐயம் எழுப்பினேன். 'கூடாது என்பது அல்ல. அப்படிக் கூற முடியாது. இயலாது என்றுதான் சொல்லலாம். கவிஞர்கள் உளப்பாங்கும் வேறுபடும். உணர்ச்சிப் பிழம்பாகக் கவிஞன் ஒன்றை உள்ளத்தில் கருக்கொண்டு உயிர்க்கும்போது, எந்த நடையில் அந்தக் கருத்து ஏறி வருகிறதோ, அதுவே பொருத்தம் உடையது. அதை மாற்றுவது ரிப்பெயர் (Repair) செய்வது போலாகிவிடும்" என்றார் கவிஞர்.

"அது உண்மை. ஆனால் உணர்ச்சி ஊட்டும் வண்ணச் சொற்கள். தமிழில் இல்லை என்று கருதலாமா?" என்று கேட்டேன். "அப்படிச் சொல்லவில்லை. அந்தச் சொல் எதுவானாலும் பாட்டோசையோடு

பொருந்தி நிற்பதாக வேண்டும் அல்லவா? உரைநடைபோல் கவிதையை நடைமாற்றம் செய்ய முடியாது" என்றார். "உரை நடையோ, கவிதையோ இரண்டும் எண்ணத்திற்குத் தரும் வடிவம் தானே?" என்றேன். "பளிச்சென்று மின்னல்போல் தோன்றும் கவிதை, வெளியே புறப்பட உடை தேட முடியுமா?" என்றார்.

"ஆனால்.. சில சொற்கள் பளிச்சென்று வேற்றுமொழியாக இருக்கின் றனவே-தகுத்தகாயம், சபாஷ், நிஜம், பிரசங்கம், உத்ஸாகம், க்ஷேமம், நிரபராதி, போசனம் போன்ற சொற்கள் தவிர்க்க முடியாதனவா?" என்றேன். பாவேந்தர் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். "ஏன் முடியாது? முடியும்! அந்த நோக்கத்துடன் கவிதை இயற்றினால்" என்றார். அவரவர் பழக்கத்தில்-அவரவர்க்கு அச்சொல் பொருள் வேகம் தருவது இயல்பு. எனினும்-தவிர்க்கக்கூடிய சொற்களைத் தவிர்க்கலாம் என்றே எண்ணுகிறேன்" என்றார் கவிஞர்.

இந்த உரையாடல் நிகழ்ந்தது 1943ஆம் ஆண்டில், ஒருவகையில் பாவேந்தரின் பெருந்தன்மையான உள்ளம், தமிழ்ப்பற்றில் தவழ்ந்த அறிவு, இளைஞர்களாகிய எம்மிடம் உரையாடியதையே ஒரு மையக் கருத்தாகக் கொண்டு, தனித்தமிழ் குறித்துப் பிறகு ஆழ்ந்து எண்ணத் தலைப்பட்டது. அதன் பயன்-தமிழர்களின் பெரும்பேறு எனத் தகுமாறு-'தமிழியக்கம்' என்னும், தமிழை மாய்த்திடும் அறியாமையை எதிர்த்து உணர்வேற்றும் ஏடு-தனித்தமிழ் காத்திடும் கொள்கை பரப்பும் கவிதை நூல் பிறந்தது.

ஆம்! 'அரசியல் சீர் வாய்ந்தார்" என்னும் தலைப்பில் முழங்குவது இது.

தெனுங்கு தமிழ் நாட்டினிலேன்?
செத்தவட மொழிக்கிங்கே
என்ன ஆக்கம்?

.....

நலங்கண்டீர் தமிழ் மொழியால்
நற்றமிழை ஈடழித்தல்
நன்றோ?

.....

அரசியலார் அறிக்கையிலும்
சுவடியிலும் தமிழ்ப்பெருமை
அழித்திடக்கை
வரிசையெலாம் காட்டுவதோ?
வடமொழியும் பிழைத்தமிழும்
பெருகிவிட்டால்

வருநாளில் தமிழழியும்
வடமொழிமே லோங்குமெனும்
கருத்தோ நாட்டில்

திருடர்களை வளரவிடும்
ஏற்பாடோ? செல்லுபடி
ஆகா தீங்கே!

திருடர்கள் ஜாக்கிரதை
திருடருண்டு விழிப்போடி
ருங்கள் என்றால்
வருந்தீமை என்னை? நியா
யஸ்தலத்தை அறமன்றம்
எனில் வாய்க் காதோ?
அருவருக்கும் நெஞ்சுடையார்
அருவருக்கும் செயலுடையார்
அன்றோ இந்தக்
கருவறுக்கும் வினைசெய்வார்
கலப்பாலில் துளி நஞ்சும்
கலத்தல் வேண்டாம்!

பாவேந்தரின் உள்ளத்தில், "பிறமொழிக் கலப்பினால் தமிழுக்குக் கேடு ஏற்படும்; எனவே தமிழ்ப் பயிரிடை வடமொழிக் களை வளர இடந்தரலாகாது என்னும் எண்ணம் உரம் பெற்றதன் விளைவே, மேலே காணும் கவிதையும் அவை ஒத்த பலவும். தமிழில் வடசொல் கலத்தல் வேண்டாம் என்றார். கலப்பாலில் துளிநஞ்சும் கலத்தல் வேண்டாம்" என்றார்.

'கணக்காயர்' என்னும் தலைப்பில்

"தமிழ்மொழியை வடசொல்லுக்கு
மிகத்தாழ்ந்த தென்கின்றான்!
வடசொற்கு மகிழ்கின்றான்!

.....
வடசொல்இது தமிழ்ச்சொல் இது
எனப்பிரித்துக் காட்டிடவும்
மாட்டான்!

என்று உரைத்ததனாலும் பாவேந்தர் உள்ளம் விளங்கும்.

'கூத்தர்' என்னும் தலைப்பில்
தாய்ப்பாலில் நஞ்செனவே,
தமிழில் வடமொழி சேர்த்தார்!
தவிர்தல் வேண்டும்.

தமிழ்ப்புலவர் தனித்தமிழில்
நாடகங்கள் படக்கதைகள்
எழுத வேண்டும்!

பாவேந்தர் பாட்டெல்லாம் இன்று தனித்தமிழ் காக்கும் படையாக விளங்குதலைப் பல்லாற்றானும் காணும்போது-பாவேந்தர் தமக்காக அன்றித் தமிழுக்காகவே வாழ்ந்தவர் என்னும் உண்மையை உணர்ந்து உவகை பெறுகிறோம் நாம்!

"தமிழுக்கு அமுதென்று பேர்-அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

என்னும் உணர்வைத் தந்த பாவேந்தர் மறைந்தாரில்லை; அந்தத் தமிழ் உணர்வாகவே நம்முடன் வாழ்கின்றார்!

வாழ்க பாவேந்தர் உணர்வு!
வெல்க தனித்தமிழ் இயக்கம்!!

செட்டி நாட்டிலிருந்து சென்னை வரை....

பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார்

ஆயிரம் நூல்களை எழுதியவர் பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த அலக்சாண்டர் டூமாஸ். அப்பாதுரையார்-அந்த வரிசையில் அடுத்த எழுத்தாளர். சுருங்கச் சொன்னால் இவர் ஓர் எழுத்துப் பட்டறை!

இவர்-சைவச் சுயமரியாதைக்காரர்; சுயமரியாதைச் சைவர்! அரசாங்கச் சலுகைகள் அறிவிக்கப்படாத காலத்திலேயே ஆர்வத்தால் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்.

எளிதில் யாரையும் மதிக்காத பாவேந்தரின் இதய மேடையில் இடம் பெற்ற அறிஞர்.

அன்பு வேளையில் அணுக்கத் தொண்டராகவும், ஆய்வு வேளையில் ஆலோசகராகவும் இருந்தவர்.

நெருங்கிய நீண்டநாள் நண்பர்! அன்பர்!

பாவேந்தரின் முப்பரிமாணமும் அறிந்த மூதறிஞர்!

இவர் எழுதியுள்ள இந்நுண்ணோக்காடிக் கட்டுரை பாவேந்தரை நமக்குப் பல கோணங்களில் படம் பிடித்துக் காட்டுகிறது.

செட்டி நாடு வருகை

1943ஆம் ஆண்டில் நான் செட்டிநாடு கோனாப்பட்டில் ஆசிரியராகப் பணி செய்து கொண்டிருந்தேன். அவ்வூர் இளைஞரிடையே

தமிழ்ப்பற்றையும், தன்மான இயக்கப் பற்றையும் ஊட்டுவதை எனது கடமையாகக் கொண்டிருந்தேன். திருவாளர்கள் முருகு சுப்பிர மணியம், பெரியண்ணன் ஆகியோரும் வேறு சில இளைஞர்களும், என்னிடத்திலும், எனது கொள்கையிடத்தும் ஈடுபாடும் ஆர்வமும் காட்டி எனக்கு மிகவும் ஆதரவாக விளங்கினர். கோனாப்பட்டில் பார்ப்பனர் அல்லாதார் இயக்கம் தொடங்கி வைக்கப்பட்டது.

இயக்கத்தின் சார்பாகப் பேசுவதற்கு அறிஞர் அண்ணாவை அழைப்பதென்று முடிவு செய்யப்பட்டது. அண்ணாவுக்கு முட்டங்கல் விடுத்தோம்; பணமும் அனுப்பினோம். அவரிடமிருந்து மறுமடல் ஏதுமில்லை. நானே நேரில் சென்று அண்ணாவை அழைத்துவர முடிவு செய்து சென்னை சென்றேன். அண்ணா சென்னையில் இல்லை. நேரே காஞ்சி சென்றேன். அண்ணா காஞ்சியில் நாடகம் நடத்திக் கொண்டிருந்தார்.

நாடக மேடைக்கே நான் சென்றேன். அண்ணா இராவணன் வேடத்தில் இருந்தார். மீண்டும் ஒருமுறை அழைப்பு விடுத்து, வழிச் செலவுக்குப் பணமும் கொடுத்து விட்டுக் கோனாப்பட்டு திரும்பினேன். அண்ணா இம்முறையும் வரவில்லை. மறுமுறை நான் சென்னையில் அண்ணாவைச் சந்தித்தபோது, கூட்டத்துக்கு வர முடியாத சூழ்நிலை ஏற்பட்டதை எடுத்துச் சொல்லி மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

இதற்குள் செட்டிநாட்டு இளைஞர் சிலர் பாரதிதாசனைக் கூட்டத்துக்கு அழைத்திருந்தனர். அவர் கோனாப்பட்டில் பெரியண்ணன் வீட்டில் தங்கியிருந்தார். நான் நேரில் சென்று கூட்டத்துக்கு அழைத்ததும் ஒத்துக் கொண்டார்.

பாரதிதாசன் கோனாப்பட்டு வருவதற்குச் சில நாட்களுக்கு முன், திருவாளர் சோமசுந்தரம் செட்டியார் என்பவர் அங்கு இலக்கியச் சொற்பொழிவாற்றினார். அவர் பழுத்த சைவர். பெரிய புராணத் திலும், திருநாவுக்கரசர் தேவாரத்திலும் அதிக ஈடுபாடுடையவர். இவரைப்பற்றிப் பாரதிதாசனிடத்தில் கூறினோம். பாரதிதாசன் கோனாப்பட்டுக் கூட்டத்தில் பேசும்போது சைவத்தைக் கடுமையாகக் கிண்டல் செய்தார். சிறுத்தொண்டர் வரலாற்றையும், இயற்பகை நாயனார் வரலாற்றையும் கடுமையாகச் சாடினார். "தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!" என்ற தொடரை எடுத்துச் சொல்லி நகையாடினார். எந்நாட்டவர்க்கும் உரிய சிவன் பெரிய சிவன்! தென்னாட்டுச் சிவன் குள்ளச் சிவனோ?" என்று கேலி செய்தார்.

திருவாளர் சோமசுந்தரம் செட்டியார், இரசிகமணி டி.கே. சிதம்பர நாதமுதலியார் குழுவைச் சேர்ந்தவர். பாரதிதாசன் கோனாப்பட்டுக் கூட்டத்தில் சைவத்தைக் கேலி செய்து பேசியதைக் கேள்விப்பட்டுப் கொதிப்படைந்தார். அடுத்தக் கூட்டத்தில் 'எங்க சிவனைக் குள்ளச் சிவன்! என்று ஒருவன் இழித்துப் பேசினானாமே!' என்று பாரதிதாசனைச் சாடினார். பாவேந்தர் அப்போது செட்டி நாட்டில் தான் இருந்தார். கானாடுகாத்தானில் திருவாளர் வை.சு. சண்முகஞ் செட்டியார் இல்லத்தில் தங்கியிருந்தார். திரு.வை.சு.ச. அவர்களும், அவர் துணைவியார் மஞ்சுளாபாயும் பாரதிதாசனிடத்தில் அளவு கடந்த பற்றும், மதிப்பும் கொண்டவர்கள்.

பாரதிதாசன் செட்டி நாட்டில் தங்கியிருந்தபோது அவர் விரும்பிய போதெல்லாம், திடீரென்று எங்கள் இல்லத்துக்கு வருவார். தன்மான இயக்கத்தைச் சேர்ந்த ஓர் இளைஞர் பட்டாளம் எப்போதும் அவரைச் சூழ்ந்திருக்கும். என் மனைவி அலமேலு எல்லாருக்கும் விரைவில் விருந்து சமைத்துப் பரிமாறுவாள்.

பாரதிதாசன் கோனாப்பட்டில் தங்கியிருந்தபோது, 'வீரசுதந்தரம் வேண்டி நின்றார்' என்ற பாரதியின் பாடலை, பாரதி எந்த ராகத்தில் எப்படிப் பாடினாரோ அதே ராகத்தில் உணர்ச்சி பொங்கப் பாடிக் காட்டினார். இப்போது பாடும் ராகம் தவறு என்று குறிப்பிட்டார்.

பாரதியைப் பற்றி மேலும் குறிப்பிடும்போது, "பாரதி பெரிய புரட்சிக்காரர். சீர்திருத்தச் செம்மல், பாரதியைப் பற்றி வைதீகச் சார்பான சில செய்திகளைப் பலர் கூறுவார்கள். அந்தக் காலத்தில் பாரதிக்குமேல் சீர்திருத்தவாதியாக வேறு யாரும் இருந்திருக்க முடியாது. அந்தக் காலத்துச் சமுதாயச் சூழ்நிலை அதற்கு மேல் இடங்கொடுக்கவில்லை. நானும் அப்போது அப்படித்தான் இருந்தேன். பாரதியைப்போல் நானும் அன்று பேராயக் கட்சிக் (Congress) காரன்; கதரைத் தோளில் சுமந்து விற்றவன். நானும் ஆத்திகன்; சுப்பிரமணியர் துதியமுது பாடியவன். அப்போது அவரிடத்திலும் தனித்தமிழ் இல்லை; என்னிடத்திலும் தனித்தமிழ் இல்லை. பாரதி படிப்படியாகச் சீர்திருத்தவாதியாகி மாறிவந்ததை நான் என் கண்ணாரக் கண்டேன். பாரதி உயிரோடிருந்திருந்தால் 'சுய மரியாதைக்காரராக' மாறியிருப்பார். என்னைப் போல் தான் பாடியிருப்பார்" என்று கூறினார் பாரதிதாசன்.

தொடர்ந்து பாரதியைப் பற்றிக் கூறும்போது, "பாரதிக்கு அழுத்தமான சீர்திருத்த உணர்வுண்டு, சில நேரங்களில் பார்ப்பனீயத்தை வெளிப்படையாகவே எதிர்த்துக் கருத்துக்களைத் தெரிவிக்கத் தயங்க மாட்டார். பாரதியார் பாண்டிச்சேரியில் இருந்த

போது நீதிக் கட்சி (Justice Party) செய்தித்தாள்கள் அங்கும் வரும். பாரதி அத்தாள்களை விரும்பிப் படிப்பார். ஒருநாள் பாரதியும் வ.வெ.சு. அய்யரும், நானும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தோம். ஒரு நண்பர் நீதிக்கட்சித்தாள் ஒன்றை அங்கு கொண்டு வந்தார். வ.வெ.சு. அய்யரைப் பார்த்ததும், அதை மூடி மறைத்தார். அதைக் கண்ட வ.வெ.சு. அய்யர் 'என்ன ஓய்! ஜஸ்டிஸ் கட்சி பத்திரிகை கொண்டு வந்திருக்கிறீராக்கும்! அதையேன் மறைக்கிறீர்? நீங்களெல்லாம் எங்களை எதிர்த்து, இப்ப பிராமணரா வளர்றீங்களாக்கும்! நீங்களெல்லாம் பிராமணனா வளர்ந்துட்டா பிராமணன் அப்படியே இருப்பான்னு உங்க நினைப்போ? ஏய்யா! புல் பனையானா பனை மலையாகாதா?' என்று கூறிச் சிரித்தார். அதற்குப் பாரதியார், 'ஓய் அய்யரே! அறிவுத் துறையில் வேண்டுமானால் நீங்கள் அவர்களை வெல்லலாம். வீரத்துறையில் நீர் அவர்களை என்ன செய்துவிட முடியும்? பிராமணரல்லதார் உதைக்க ஆரம்பித்தால் நீங்கள் எங்கே ஓடி ஒளிவீர்?' என்று கேட்டார். அய்யர் பேசாமல் இருந்து விட்டார். பார்ப்பனரை எதிர்க்கும் உணர்வு அந்த நாளில் பாரதியாருக்கு உண்டு. பிராமணர்களை 'உண்மையான பிராமணர்; போலிப் பிராமணர்' என்று பிரித்துப் பேசுவார். உண்மையான வைதீகமும், உண்மையான சீர்திருத்தமும் ஒன்று என்பது அவர் கொள்கை. 'காந்தியின் கொள்கையும் அதுதான்' என்று பாரதி கூறுவார். பாரதியைப் பற்றிப் பாரதிதாசன் கூறிய கருத்துக்கள் இவை.

பாரதிதாசன் கோனாப்பட்டில் தங்கியிருந்தபோது அடிக்கடி கூட்டங்களுக்குச் செல்வார். நானும் உடன் செல்வதுண்டு. ஒரு முறை புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள சிற்றன்னவாசலுக்குப் பாரதிதாசனும், நானும், சில நண்பர்களும் சென்றோம். அங்கே சிவனடியார் சங்கக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. நான் அதில் கலந்து கொண்டேன். எனக்குச் சைவத்திலும் ஈடுபாடு உண்டு. 'என்னய்யா! நீர் சுயமரியாதைச் சங்கத்திலும் உறுப்பினர். நல்ல வேடிக்கை!' என்று கூறிச் சிரித்தார் பாரதிதாசன். சிற்றன்னவாசலில் உள்ள பல்லவர் கால ஓவியங்களைப் பார்த்து மகிழ்ந்து விட்டு அங்கிருந்த கோவிலுக்குள் நுழைந்தோம். அங்கு ஒரு வேர்ப்பலாமரம் இருந்தது. அதை எங்களுக்குக் காட்டி, "வேர்ப்பலா என்பது மரத்துள் தனி இனம். இதோ பாருங்கள் இதன் வேரிலேயே பழங்கள் இருக்கின்றன" என்று சொல்லி ஆளுக்கொரு பழத்தைப் பறித்துத் தந்தார். வேர்ப் பலாப்பழம் வேப்பம் பழத்தை விட சற்றுப் பெரிதாக இருந்தது. மிகவும் இனிப்பாக இருந்தது.

"கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே-இங்கு வேரில் பழுத்த பலா! என்ற எனது பாட்டு வரிகளைக கேலி செய்து மேடையில் என்னை எதிர்த்துக் கேள்விகள் கேட்டனர். வேர்ப்பலா என்று ஒரு மரம் இல்லையென்று வாதிட்டனர்" என்று கூறினார் பாரதிதாசன்.

முத்தமிழ் நிலையம்

பாரதிதாசன் கானாடு காத்தான் வை.சு.சண்முகம் செட்டியார் இல்லத்தில் தங்கியிருந்தபோது, அவருடைய நூல்களை வெளியிடவும், அவர் நாடகங்களை நடத்தவும் 'முத்தமிழ் நிலையம் என்ற பெயரால் ஓர் அமைப்பை ஏற்படுத்துவதென்று முடிவு செய்யப்பட்டது. அந்த அமைப்பில் முக்கியப் பங்கு வகித்தவர்கள் செட்டி நாட்டு இளைஞர்களான முருகுசுப்பிரமணியமும், பெரியண்ணனும் ஆவர். முதலில் பாரதிதாசனின் இயல், இசை, நாடகப் படைப்புக்களை 'இன்ப இரவு' என்ற பெயரில் அரங்கேற்றம் செய்ய முடிவு செய்யப்பட்டது. சென்னையில் முத்தமிழ் நிலையத்தின் தலைமையகத்தை நிறுவ எல்லாரும் முடிவு செய்தனர். முத்தமிழ் நிலையப் பணிகளை முன்னின்று நடத்துவதற்கும் அதை மேற்பார்ப்பதற்கும், என்னை வரும்படி பாரதிதாசன் அழைத்தார். நானும் சென்னை செல்ல வேண்டும் என்ற விருப்பத்தில் இருந்ததால், அவர்அழைப்பை ஏற்றுக் கொண்டேன். சென்னை செல்வதற்கு என்னைத் தூண்டிய அடிப்படைக் காரணங்கள் பல உண்டு.

நாற்பது ஐம்பது ஆண்டுகளுக்கு முன் 'சுயமரியாதைக்காரனாக' இருப்பது எவ்வளவு தொல்லையானது என்பதைப் பட்டு அறிந்தவர்களே உணர்வர். அவன் கடவுளுக்கும், சமயத்துக்கும் எதிரியாகக் கருதப்பட்டான். நான் கோனாப்பட்டில் வாழ்ந்தபோது பார்ப்பனருக்கு மட்டுமல்லாமல், செட்டிமார்களுக்கும் நான் எதிரியாகக் கருதப்பட்டேன். தன்மான உணர்வும், தமிழ் உணர்வும் கொண்ட செட்டி நாட்டிளைஞர்கள் என் பக்கம் இருந்ததால், என்னை யாரும் ஒன்றும் செய்யமுடியவில்லை.

நான் சைவப்பிள்ளைமார் குலத்தில் பிறந்தவன். என் மனைவி அலமேலு வல்லம்பர் (வல்லத்து வேளாளர் என்றும் கூறுவர்.) வகுப்பைச் சேர்ந்தவள். கலப்பு மணம் செய்து கொண்ட காரணத்தால், சாதி எதிர்ப்பும் எனக்கிருந்தது.

1943ஆம் ஆண்டில்-பாரதிதாசனின் செட்டிநாட்டு வருகைக்கு முன் கோனாப்பட்டில் 10 நாட்கள் தமிழ்விழா ஒன்று நடத்தினோம். அந்த விழாவிற்குத் தலைமை தாங்கவோ, சொற்பொழிவாற்றவோ யாரும் முன்வரவில்லை. முதல் மூன்று நாட்களும் நானே தலைவன்; நானே

பேச்சாளன், கூட்டமும் குறைவாகத்தான் இருந்தது. தமிழ்ச் சுவையுணர்ந்த செட்டி மக்கள் நான்காவது நாள் திரளாக மண்டபத்தில் கூடினர். நானே உள்ளே நுழைய முடியாதவாறு கூட்டம்! அதன்பிறகு இராஜா. சர் முத்தையா செட்டியாரையும், நீதிக்கட்சித் தொடர்பும் தமிழ்ப்பற்றும் உடைய புதுக்கோட்டை முஸ்லீம் அமைச்சர் ஒருவரையும் விழாவிற்கு அழைத்து வந்தோம். விழா எதிர்பார்த்ததற்கு மேல் சிறப்பாக முடிவுற்றது.

தமிழ்நாட்டில் தெற்கில் ஒரு சிற்றூரில் வாழ்வதைவிடச் சென்னை போன்ற பெரிய நகரத்தில் இருந்தால் இலக்கியப் பணிகளை விரிவாகச் செய்ய இயலும் என்ற எண்ணம் அடிக்கடி என் உள்ளத்தில் தோன்றுவதுண்டு. என் விருப்பத்தைச் சென்னைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக உரிமையாளருக்குத் தெரிவித்தேன். அவருக்கு என்னைப் பிடித்திருந்தாலும் என் கலகீப்பு மணத்தைப் பிடிக்கவில்லை. சாதியில்லாத உம் மனைவியை நீக்கிவிட்டு வந்தால், உங்களுக்கு வேலை தருவதோடு சென்னையில் தங்க எல்லா வசதிகளும் செய்து தருகிறோம்" என்று கடிதம் எழுதியிருந்தார்.

மேலே குறிப்பிட்ட எல்லாச் செய்திகளையும் பாரதிதாசனிடம் எடுத்துச் சொன்னேன். சென்னை சென்றால் இலக்கியத்துறையில் நான் வளர்வதற்கு அதிக வாய்ப்புகள் இருப்பதை உணர்ந்த பாரதிதாசன் என்னை எப்படியும் சென்னை கொண்டு செல்ல முடிவு செய்தார். சென்னை சென்றதும் பாரதிதாசன் முத்தமிழ் நிலையத்தைத் துவக்கினார். நிலையத்துக்கென்று தனி வீடும் வாடகைக்கு எடுக்கப்பட்டது. முத்தமிழ் நிலையம் துவக்கப்பட்ட ஆறாம் நாள் சென்னை புறப்பட்டு வரும்படி பாரதிதாசனிடமிருந்து கடிதம் வந்தது. கடிதம் வந்ததும் நான் சென்னை புறப்பட்டேன். அன்று புகைவண்டியில் எனக்கு இடம் கிடைக்கவில்லை. அதே நாளில் சென்னையின் மீது ஜப்பானியரின் குண்டுவீச்சு நடைபெற்றது. இரண்டாம் உலகப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரம்அது. அடுத்த நாள் சென்னை புறப்பட்டேன். முத்தமிழ் நிலையக் கட்டிடத்தில் தங்குவதற்கு எனக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நான் சென்னை சென்றிருந்த நேரத்தில் திராவிடர்க்கழகத்துக்கு ஒரு பொதுச் செயலாளரை நியமனம் செய்யும் முயற்சியில் பெரியார் ஈடுபட்டிருந்தார். அண்ணாவைப் பொதுச்செயலாளராக நியமனம் செய்ய பெரியாருக்கு விருப்பமில்லை. எனவே திங்களுக்கு ரூ.600/- சம்பளத்தில் என்னைப் பொதுச் செயலாளராக நியமனம் செய்தார். என்னைப் பொதுச் செயலாளராகப் போட்டதற்குக் கட்சியில் எதிர்ப்புக் கிளம்பியது. எனவே நான் அப்பதவியிலிருந்து ஒதுங்கிக்

கொண்டேன். அதன்பிறகு நாவலர் நெடுஞ்செழியன் பொதுச் செயலாளராக அமர்த்தப்பட்டார். நெடுஞசெழியனுக்கும் கேட்ட சம்பளம் வராத காரணத்தால், அவரும் அப்பதவியிலிருந்து விலகிவிட்டார். அதன் பிறகு அண்ணா சம்பளமில்லாமல் பொதுச் செயலாளர் பதவியை ஏற்றார். டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி நடத்திக் கொண்டிருந்த 'லிபரேட்டர்' ஏட்டில் எனக்குத் துணையாசிரியர் வேலை கிடைத்தது.

முத்தமிழ் நிலையத்தில் 'இன்ப இரவு' நாடக ஒத்திகை நாள்தோறும் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. சென்னையில் குடியிருக்க ஒரு வீடு பார்த்துக் கொண்டு, அலமேலுவை அழைத்து வரக் கோனாப்பட்டு சென்றேன்.

சென்னை வாழ்க்கை

சென்னை அருணாசல ஆசாரித் தெருவில் 12ஆம் எண் வீட்டில் நான் குடியேறினேன். பாரதிதாசனும் தொடர்ந்து பத்துத் திங்கள் எங்கள் வீட்டிலேயே இருந்தார். அப்போது பெரியாரைத் தவிர, இயக்கத்தைச் சேர்ந்த எல்லாத் தலைவர்களும், தொண்டர்களும் பாரதிதாசனைக் காண என் இல்லம் வருவர். திருவாளர் ம.பொ.சி. போன்ற மாற்றுக் கட்சித் தலைவர்களும், எழுத்தாளர்களும், பாவலர்களும் பாரதிதாசனைக் காண வருவதுண்டு. பாரதிதாசன் எங்கள் இல்லத்தில் தங்கியிருந்தபோது தான், அவருக்குப் பொற்கிழி வழங்கும் விழா நடைபெற்றது. ரொக்கமாக ரூ.25,000/- அவருக்கு வழங்கப்பட்டது. தமிழகத்தின் தலைசிறந்த தமிழ் அறிஞர்களும், அரசியல் தலைவர்களும், கலைஞர்களும் அவ்விழாவில் பங்கு கொண்டனர். தமிழகத்தில் வேறு எந்தக் கவிஞருக்கும் இவ்வளவு சிறப்பாக நிதியளிப்பு விழா நடைபெற்றதில்லை.

நிதியளிப்பு விழாவில் பெற்ற தொகையைப் பாரதிதாசன், என் மனைவி அலமேலுவிடம் தான் கொடுத்து வைத்திருந்தார். ரூ.25,000/- என்பது அக்காலத்தில் மிகப்பெரிய தொகை. பாவேந்தருக்கு நிதி கிடைத்ததும், அவருடைய துணைவியார் திருமதி பழனியம்மாளும், பெண்களும் என் இல்லம் வந்தனர். பெண்களுக்குக் கொஞ்சம் நகைகளும், நல்ல புடவைகளும் எடுக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தனர். சீர்திருத்தக்காரரான பாவேந்தர், பெண்கள் நகையணிவதையும், ஆடம்பரமாக உடையுடுத்துவதையும் வெறுப்பவர். என்றாலும், அவரிடத்தில் பக்குவமாக எடுத்துச் சொல்லி ரூ. 7000/-க்கு நகைகளும் புடவைகளும் வாங்க இசைவு பெற்றோம். நானும் அலமேலுவும்

உடன் சென்று பாவேந்தரின் துணைவியாருக்கும், மக்களுக்கும் தேவையான நகைகளும் புடவைகளும் எடுத்துத் தந்தோம். என்னையும், அலமேலுவையும் தவிர வேறு யார் இதில் தலையிட்டிருந்தாலும் பாவேந்தர் அனுமதித்திருக்க மாட்டார். இதைப் பற்றி நான் அண்ணாவிடம் சொன்னபோது, "நல்ல வேளை செய்தீர்கள்! பாரதிதாசனுக்கு எல்லா அறிவும் உண்டு; பிழைக்கும் அறிவு மட்டும் கிடையாது. நிச்சயமாக அந்த ஏழாயிரமும் மிஞ்சும்" என்றார்.

'இன்ப இரவு' நாடக அரங்கேற்றம் தொடர்பாகப் பாரதிதாசன் சேலத்துக்கும் வேறு சில ஊர்களுக்கும் சென்றார். நாங்கள் குடியிருந்த வீட்டின் தொடர்பாக வழக்கு நடந்து கொண்டிருந்த தாலும், வேறு பல சிக்கல்களாலும் அவ்வீட்டை மாற்ற வேண்டிய கட்டாயம் எங்களுக்கு ஏற்பட்டது. திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை மூன்றாம் சந்தின் கோடி வீட்டில் குடியேறினோம். அது இசுலாமியர் வாழும் பகுதி. அந்த வீடு பெரியது; வளமனை(Bungalow). அதன் உரிமையாளர் ஒரு முஸ்லீம். அவருக்கு இசுலாமிய மனைவியர் சிலரும், இரண்டு இந்து மனைவியரும் இருந்தனர். அவருடைய இந்து மனைவியருக்குப் பாதுகாப்பாகவும், துணையாகவும் நாங்கள் இருப்போம் என்ற கருத்தில் வாடகையில்லாமலே குடியிருக்க எங்களை அனுமதித்தார். ஆனால் வாடகையில்லாமலே குடியிருக்க நாங்கள் மறுத்துவிட்டோம். பாரதிதாசன் திங்கள் தோறும் வாடகை ரூ. 40/- கொடுக்கத் தாமே முன் வந்தார். அவரும் எங்களுடன் அதே வீட்டில் தங்கினார்.

சென்னையில் மாசிலாமணி முதலியார் என்ற சிறந்த சித்த மருத்துவர் ஒருவர் வாழ்ந்தார்; அவர் பாரதிதாசனுக்கு மிகவும் வேண்டியவர் அவர் வீட்டிற்குப் பின்புறம் இருந்த ஒரு சிறிய அறையில் ஒரு திங்கள் தங்கியிருந்தோம். அப்போது சென்னையில் நடிகவேள் இராதா நாடகம் நடத்திக் கொண்டிருந்தார். அப்போது தான் பாரதி தாசனுக்கும் எங்களுக்கும் மனவேறுபாடு ஏற்பட்டுப் பிரிய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

சென்னைத் திருவல்லிக்கேணி வீட்டில் இருந்தபோது 'வருங்காலத் தமிழகம்' என்ற தலைப்பில் ஒரு நூல் எழுதித் தரும்படி திருவாளர் சம்பந்தம் என்ற இயக்கத் தோழர் என்னிடம் கேட்டார். நானும் எழுதி முடித்திருந்தேன். அந்த நூலின் கையெழுத்துப் படியைப் பெறுவதற்காகத் திரு. சம்பந்தம் என் வீட்டுக் கதவைத் தட்டித் திறந்து கொண்டு உள்ளே வந்தார். நான் அப்போது வீட்டில் இல்லை. உள்ளே நுழைந்த சம்பந்தத்தைக் கண்ட பாரதிதாசன் "உள்ளே

வராதே!" என்று சொல்லி விரட்டி விட்டார். அடுத்தநாள் சம்பந்தம் என்னைத் தனியாகச் சந்தித்து, நடந்தவற்றைக் கூறி வருந்தினார்.

நான் வீட்டில் இல்லாத நேரங்களில் பாரதிதாசன் தம் நண்பர்களுடன் கூடிக் குடித்து விட்டுக் கும்மாளமிடுவதை என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை. கொஞ்சங் கொஞ்சமாகப் பாவேந்தருக்கும் எங்களுக்கும் இருந்த குடும்ப நட்புத் தேய்புரிப் பழங் கயிறாகி இறுதியில் இற்று விழுந்தது. அவரோடு ஒன்றாகத் தங்கும் நிலை மாறியது.

நான் பாரதிதாசனைப் பார்த்து சொன்னேன்:

"நீங்கள் பெருங்கவிஞர். உங்களுடன் நெருங்கிப் பழகி உங்கள் சிறப்பையெல்லாம் நான் அறிந்து கொண்டேன். நம் பிரிவு துன்பமானதுதான். என்றாலும், நாம் இனி எங்கு வேண்டுமானாலும் வெளியில் சந்தித்துக் கொள்ளலாம்; வீட்டில் வேண்டாம்" என்றேன். அதன் பிறகு பாரதிதாசன் என் இல்லத்துக்கு வருவதில்லை. புலவர் குழுவிலும், வேறு சில கூட்டங்களிலும் இருவரும் சந்திப்பதுண்டு. எங்கள் நட்பைப் பிரிப்பதற்காக எதிரிகள் வேலை செய்வதாகப் பாரதிதாசன் அப்போது அடிக்கடி என்னிடம் சொல்லுவார்; வருந்துவார். எங்கள் வெளிநட்புத் தொடர்ந்தது; ஆனால் வீட்டு நட்பு அறுந்தது.

உணவுக் கொள்கை:

புலால் உணவுதான் பழந்தமிழர் உணவு என்ற கொள்கையில் பாரதிதாசன் உறுதியானவர்; புலால் உணவு உண்டால் தான் வீர உணர்வு மேலோங்கி நிற்கும் என்பதிலும் அளவு கடந்த நம்பிக்கையுடையவர். ஆனால் சைவ உணவு தான் தமிழர் உணவு என்பதில் நான் அதிக நம்பிக்கையுள்ளவன். இந்தக் கொள்கை வேறுபாடு எங்களை எந்தவிதத்திலும் பாதித்ததில்லை.

நாங்கள் இருவரும் எப்போதும் அருகருகே அமர்ந்து உண்ணும் வழக்கமுடையவர்கள். அவருடைய இலையில் எல்லாவிதமான புலவும் மீனும் வகைவகையாகப் பரிமாறப்படும். எளிய மரக்கறி உணவு என் இலையில் பரிமாறப்படும். அவரவர் அவரவருடைய உணவை விரும்பிச் சுவைத்துச் சாப்பிடுவோம். நான் மரக்கறி உணவு சாப்பிடுவதை அவர் கேலி செய்ததுமில்லை; கண்டித்ததுமில்லை.

பாரதிதாசனுக்கு மிகவும் நெருக்கமான இசுலாமிய நண்பர் ஒருவர் அடிக்கடி அவரைத் தேடி வருவார். அவர் ஒரு நாள் பாவேந்தரைப்

பார்த்து, "நீர் புலால் உணவுதான் தமிழர் உணவு என்ற கொள்கை யுடையவர். உமது நண்பர் அப்பாதுரை அக்கொள்கைக்கு எதிரான வர். தமிழர் உணவான புலாலை ஏற்றுக் கொள்ளாத காரணத்தால், கொள்கையளவில் அவர் ஆரியர் தானே?" என்று கேட்டார்.

"அதெப்படி? அவர் கொள்கைப்படி அவர் நடக்கிறார். நம்முடைய கொள்கைப்படி நாம் நடக்கிறோம். கொள்கை ஒன்றும் நடப்பு வேறாகவும் இருப்பதுதான் தவறு" என்று விடையிறுத்தார் பாரதிதாசன்.

தமிழியக்கம்

மறைமலையடிகளிடம் ஒருமுறை நான் பேசிக் கொண்டிருந்த போது 'பாரதியும் கவிஞனில்லை; பாரதிதாசனும் கவிஞனில்லை. இருவருமே வடசொற்களைக் கலந்து பாட்டெழுதுகிறார்கள்" என்று ஒரு கருத்தை வெளியிட்டார்.

"வட சொற்களை மிகுதியாகக் கலந்து பாட்டெழுதுவதை நான் வரவேற்கவில்லை. என்றாலும் மிக அரிதாக ஏற்ற இடங்களில் ஓரிரு வடசொற்களைக் கலக்கும்போது கவிதையழகு மிகுதியாகிறது. வள்ளுவர், கம்பர் போன்ற பெருங்கவிஞர்களும் இதற்கு விலக்கானவர் அல்லர். அவ்வாறு பயன்படுத்தும் அவ்வரிய சொற்களைத் தமிழாகவே எடுத்துக் கொள்ளலாம் என்பது என் கருத்து," என்று நான் மறைமலையடிகளிடம் சொன்னேன்.

"வடசொற்களை நேரடியாகத் தமிழ்க்கவிதையில் பயன்படுத்த வேண்டியதில்லை. அவற்றுக்கு ஒப்பான தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தலாம்; அல்லது புதிதாகப் படைத்துக் கொள்ளலாம்" என்று மறைமலையடிகள் மீண்டும் சொன்னார்.

"சமஸ்கிருதம் நமக்கு எதிரான மொழியன்று. நீங்களே காளிதாசனின் கவிதையழகில் நெஞ்சைப் பறி கொடுத்துச் சாகுந்தலத்தைத் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறீர்கள். சாதி வருணவேறுபாடு உடையவர்கள் அதைப் பயன்படுத்துவதாலேயே நாம் அதை ஆரியம் என்று எதிர்க்கிறோம். இலக்கிய வளமும், கருத்துச் செறிவும் உள்ள சமஸ்கிருதச் சொற்களை மிக இன்றியமையாத இடங்களில், இலக்கண வரம்புக்கு உட்படுத்திப் பயன்படுத்துவதில் கவிதையழகு மிகுதியாகிறது" என்பதை நான் மீண்டும் சொன்னேன். அக்கருத்தை ஓரளவு சரியென்று மறைமலையடிகள் ஏற்றுக்கொண்டார்.

மறைமலையடிகளைச் சந்தித்தது பற்றியும், அவரிடம் மொழித் தூய்மை பற்றி உரையாடியது பற்றியும், அடுத்த முறை பாரதி

தாசனைச் சந்தித்தபோது கூறினேன். அதைப் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்த பாரதிதாசன் "அது சரி! கம்பனுக்கும் எனக்கும் என்ன முடிச்சு?" என்று கேட்டார்.

"கம்பன் வடசொல்லைத் தம் பாடல்களில் அளவோடும் அழகோடும் கலந்து பாடியிருக்கிறான்; நீங்களும் அவ்வாறு பாடியிருக்கிறீர். மற்ற கவிஞர்கள் சொல்லழகு தனித்தனிச் சொல்லில் இருக்கும்படி பாடுவது வழக்கம். ஆனால் கம்பன் சந்தத்தையும் சொல்லையும் இணைத்து எத்தனை எத்தனை தந்திரம் காட்ட முடியுமோ அத்தனையும் தன் பாடல்களில் காட்டியிருக்கிறான். தெரிந்தோ தெரியாமலோ கம்பனின் இந்த உத்தியை உங்கள் பாடல்களில் கையாண்டிருக்கிறீர்கள்" என்று நான் சொன்னேன்.

'எப்படி?' என்றார் பாரதிதாசன்.

அவருடைய 'காதல் நினைவுகள்' என்ற கவிதைத் தொகுப்பில் உள்ள 'ஒரே குறை' என்று பாடலை எடுத்துச் சொன்னேன். 'அன்பிருக்கும்' என்று தொடங்கும் பாடல் அது. 'இருக்கும்! இருக்கும்! என்று முடியும் அந்தச் சந்த உத்தி கம்பன் பாட்டிலும் காணப்படுகிறது என்பதைக் கூறி, அக்கம்பராமாயணப் பாடலையும் சொன்னேன். பாரதிதாசன் ஒத்துக் கொண்டார். இனி எழுதவிருக்கும் நூல்களைத் தனித் தமிழிலேயே எழுதப் போவதாகவும் கூறினார்.

சென்னையில் எங்கள் வீட்டில் தங்கியிருந்தபோது, நான் எழுதிய 'தமிழ் வாழ்க! என்ற நூலைக் கையில் வைத்துப் புரட்டிக் கொண்டிருந்தார் பாரதிதாசன். பிறகு அதைக் காட்டி நீங்கள் பேசியதா?' என்று கேட்டார்.

"நீங்கள் செட்டிநாடு வருவதற்குக் கொஞ்ச நாட்களுக்கு முன் கோனாப்பட்டில் பத்து நாட்கள் தமிழ் விழா நடத்தினேன். அந்த விழாவில் நான் பேசியவற்றையும், பேச நினைத்தவற்றையும் தொகுத்துத் 'தமிழ் வாழ்க' என்ற பெயரில் இந்நூலை எழுதினேன். 'தமிழ் வாழ்க!' என்பது ஒரு மந்திரம். தமிழ் இயல் வாழ்க; தமிழ் இசை வாழ்க; தமிழ் நாடகம் வாழ்க; தமிழ் மருத்துவம் வாழ்க; தமிழ் வாணிகவியல் வாழ்க-என்று ஒவ்வொரு துறையிலும் தமிழ் மொழி மற்ற மொழிகளைவிட எவ்வாறு மேம்பட்டு விளங்குகின்றது என்பதை மையமாக வைத்து ஆய்வு செய்து இந்நூலை எழுதியுள்ளேன். இந்நூல் வெளிவந்ததும் திருவாளர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் ஐம்பது படிகள் வாங்கிப் பெரியார், அண்ணா முதல் தமிழ் நாட்டில் உள்ள இயக்கத் தலைவர்களுக்கும், அறிஞர்களுக்கும் அனுப்பி வைத்தார்' என்று நான் சொன்னேன்.

"மிகச் சிறந்த நூல்; தமிழ் மக்களுக்கு மிகவும் பயனுள்ள நூல்!" என்று பாராட்டினார் பாரதிதாசன். இந்த நூல் கருத்தை மையமாக வைத்துத்தான் தமது தமிழியக்கத்தைப் பாட்டு வடிவில் பாரதிதாசன் எழுதினார். நான் எவ்வெத்துறைகளில் தமிழ் செழிக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தேனோ, அவற்றோடு திரைப்படம் போன்ற வேறு துறைகளையும் அவர் சேர்த்துக் கொண்டார்.

'வருங்காலத் தமிழகம்' என்ற எனது வேறொரு நூலுக்குப் பாரதிதாசன் முன்னுரை எழுதியுள்ளார். அம்முன்னுரையில், 'திரு.க. அப்பாத்துரை 'தமிழ் வாழ்க' என்று உரை நடையில் எழுதியதை நான் தமிழியக்கமாகப் பாட்டில் எழுதியிருக்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார். 'வருங்காலத் தமிழகம்' என்ற நூலைப் பற்றிக் குறிப்பிடும்போது, அந்நூல் தொடர்பான வேறு சில செய்திகளையும் நான் கூறியாக வேண்டும். இந்த நூலையும், மு. வரதராசனார் எழுதிய கி.பி. இரண்டாயிரத்தையும் நூலாக வெளியிட்டவர் இயக்கத் தோழர் திருவாளர் சம்பந்தம் என்பவர். அவரைப் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். 'வருங்காலத் தமிழகம்' நன்கு விற்பனையாயிற்று. ஆனால் இன்று வரை எனக்குப் பணம் வரவில்லை.

இந்நூலை புரூஃப் பார்த்துத் திருத்தியவர் பாரதிதாசன். சந்திப் பிழைகளே இருக்கக்கூடாது என்பதில் பாரதிதாசன் மிகவும் கண்டிப்பானவர். சில செய்யுள் வரிகளில் முற்றுப்புள்ளிகள் வரும் இடத்தில் கூடச் சந்தி போட்டுத்தான் முற்றுப்புள்ளி வைப்பார். இலக்கணத்தைத் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும் என்பதில் அவர் காட்டிய அக்கறை விளங்கும்.

பாரதிதாசனின் தமிழியக்கமும் வேறு சில காப்பியங்களும் வெளியான பிறகு, மறைமலையடிகளைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. 'பாரதிதாசனின் தமிழச்சியின் கத்தி என்ற காப்பியத்தைப் படித்தேன். அழகிய தனித்தமிழ்க் காப்பியம்' என்று பாராட்டினார். பாரதிதாசனின் பிற்காலப் படைப்புகள் யாவும் தனித்தமிழில் எழுதப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. மேலே குறிப்பிட்ட நிகழ்ச்சிகளே பாரதிதாசனின் தனித்தமிழ் மலர்ச்சிக்குத் திருப்புமுனைகளாக அமைந்தவை.

குயிலும் திருக்குறள் புத்துரையும்

1947-ஆம் ஆண்டில் பாரதிதாசனைச் சென்னையில் ஒருமுறை சந்தித்தபோது 'குயில்' என்ற பெயரில் 'பாட்டிதழ்' ஒன்று தொடங்க இருப்பதாகவும், அதில் செய்திகளும், விளம்பரங்களும் கூடப்

பாட்டிலேயே வெளியாகும் என்றும் என்னிடம் குறிப்பிட்டார். முதல் இதழும் அனுப்பி வைத்தார். அவ்வேட்டில் திருக்குறளுக்குப் புத்துரை எழுதும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார். அம்முயற்சியில் தமக்குத் துணை புரிய வேண்டும் என்று சொல்லி ஒரு நண்பரை என்னிடம் தூதாக அனுப்பி வைத்தார். நானும் இசைந்தேன்.

மீண்டும் ஒருமுறை புலவர் குழுவில் நானும் அவரும் சந்தித்தபோது திருக்குறளுக்குப் புத்துரை எழுதுவது பற்றி நீண்ட நேரம் உரையாடினோம்.

பெரியார் ஒருமுறை என்னிடம் திருக்குறளுக்குப் புத்துரை எழுதும்படி தூண்டினார். அப்போது 'கடவுள் வாழ்த்து என்பதை மாற்றி மனித இனத்தின் குறிக்கோள் என்று அதற்குத் தலைப்புத் தரவேண்டும்' என்றும் கூறினார்.

"நான் திருவள்ளுவரையும் உயர்வாக மதிக்கிறேன்; உங்களையும் உயர்வாக மதிக்கிறேன். உங்களுக்காகத் திருவள்ளுவருடைய கொள்கையைப் பொய்ப்பிக்க நான் விரும்பவில்லை. அதேபோல் திருவள்ளுவருக்காக உங்களுடைய கொள்கையைப் பொய்ப்பிக்கவும் நான் விரும்பவில்லை. உங்கள் இருவருடைய கொள்கையும் ஒன்று என்று நான் எப்போது நினைக்கிறேனோ அப்போது எழுதுகிறேன்" என்று பெரியாரிடம் சொன்னேன்.

இதை நான் பாரதிதாசனிடம் கூறியபோது, "பெரியார் சொன்னது கிட்டத்தட்ட சரிதான்; முழுக்கவும் சரியில்லை. ஆனால் பெரியார் சொன்ன குறிக்கோளின் அடிப்படையிலேயே தொடக்க காலச் சைவசித்தாந்தமே அடங்கியிருக்கிறது. நடுவில் ஆரியம் கலந்ததால் அதன் தோற்றங்களெல்லாம் மாறியிருக்கின்றன. சைவ சித்தாந்தத்தைப் பகுத்தறிவுக் கண்ணோட்டத்தோடு படித்தால், திருவள்ளுவருடைய கருத்துக்குப் போகலாம்" என்று அவர் குறிப்பிட்டார். பாரதிதாசன் கூறிய இந்த விளக்கம் எனக்குப் பிற்காலத்தில் பெரிதும் கைகொடுத்து உதவியது. இந்த அடிப்படையில்தான் நான் திருக்குறளுக்கு உரை எழுதத் தொடங்கினேன். பாரதிதாசன் இப்போது உயிரோடிருந்தால், அந்த உரையை விரும்பி வரவேற்றிருப்பார். காந்தியடிகள் ஒருமுறை இலண்டன் ஒலிபரப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றியபோது[1] நல்ல குறிக்கோளை நாடிச் செல்லும் உள்ளப் பண்புதான், நாகரிகத்தின் வளர்ச்சியாக அமைந்தது என்று குறிப்பிட்டார். கடவுளுக்கு அவர் கொடுத்த இலக்கண விளக்கமும்,

1) A tendency towards good end is the evolution of civilization-Mahatma Gandhi.

திருக்குறளின் கடவுள் வாழ்த்துக் கொள்கையும் ஒன்றுதான் என்பது என் கருத்து.

கோவை முத்தமிழ் மாநாடு

1950ஆம் ஆண்டு மேத் திங்கள் 27,28 ஆகிய நாட்களில் முத்தமிழ் மாநாடு ஒன்று கோவையில் நடைபெற்றது. தாய்க்கழகத்திலிருந்து பிரிந்து தி.மு.க. தனிக்கட்சியாக இயங்கத் தொடங்கிய நேரம். தி.மு.க. தன் சொந்த வளர்ச்சிக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் தீவிரமான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தது. நாவலர் ச. சோமசுந்தரபாரதியார் மாநாட்டுத் தலைமை ஏற்றியிருந்தார். இம்மாநாட்டில் என் பங்கு அதிகம்.

இம்மாநாட்டில் 'திராவிடம்' என்ற சொல் கடும் சொற்போருக்குக் காரணமாகியது. நாவலர் பாரதியார் 'திராவிடம்' என்ற சொல்லைக் கடுமையாகச் சாடினார். 'திராவிடர்' என்ற சொல்லுக்கு 'ஓடிவந்தவர்' என்று பொருள். அமிழ்தமனைய 'தமிழ்' என்னும் சொல்லிருக்கத் திராவிடம் என்ற சொல்லை ஏன் கையாள வேண்டும் என்பது அவர் வாதம். 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்பது 'தமிழர் முன்னேற்றக் கழகம்' என்றிருந்தால் சிறப்பு என்று அவர் வற்புறுத்தினார். பாரதிதாசனும் நாவலர் கொள்கையை ஆதரித்துப் பேசினார்.

அதற்கு அண்ணா, "நான் தமிழ் உணர்வு அற்றவன் அல்லேன். என் வீட்டில உள்ள பெரியார் படத்தின் கீழ் 'தமிழர் தலைவர் பெரியார்' என்று தான் எழுதிவைத்துள்ளேன். திராவிட முன்னேற்றக் கழகம் என்று நான் கட்சிக்கு பெயர் வைத்துள்ளது. கொள்கையின் அடிப் படையில்!" என்று பேசினார். நான் அண்ணாவை ஆதரித்துப் பேசினேன்.

அப்போது மாற்றுக் கட்சிக்காரர் சிலர் பெரியாரைத் தமிழர் அல்லர் என்று கூறிக் கண்டனம் செய்தனர். திராவிட மொழிகள் பேசப்பட்ட நிலப்பரப்புகள் எல்லாம் அப்போது பிரிக்கப்படாமல் ஒரே மாநிலமாக அமைந்திருந்தன. இந்தக் காரணங்களை உள்ளத்தில் கொண்டு, கொள்கை அடிப்படையில் அண்ணா திராவிடத்தை ஏற்றார்.

முத்தமிழ் மாநாட்டில் தமிழ் வளர்ச்சிக்கென்று தனியாக ஒரு குழுமம் (Board) அமைக்க வேண்டும் என்று பாரதிதாசன் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். அண்ணாவுக்கு அது விருப்பமில்லை. என்றாலும் அதை அவர் எதிர்க்கவில்லை. தமிழ் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர்களாக நானும், நாவலர் நெடுஞ்செழியனும்

தேர்ந்தெடுக்கப்பட்டோம். ஆனால் அக்குழுமம் பின்னர் இயங்கவில்லை.

அண்ணாவுக்கும் பாரதிதாசனுக்கும் கருத்து வேறுபாடுகள் முன்பும் இருந்தன; அப்போதும் இருந்தன. தி.மு.கழகத்திற்குள் தமிழ் வளர்ச்சிக்கென்று தனிக்குழுமம் அமைப்பது, கட்சிக்குள் கட்சியாகி விடுமோ என்று அண்ணா கருதியிருக்கலாம். அண்ணா நுண்ணிய அரசியல் அறிஞர். அரசியல் நோக்கில் அண்ணாவின் கருத்துச் சரியே. தமிழ் வளர்ச்சியைத் தி.மு.க. தனது உயிர்த் துடிப்பாகக் கொண்டிருக்கும்போது, தமிழ் வளர்ச்சிக்கென்று தனி அமைப்புத் தேவையில்லை என்பது அண்ணாவின் கருத்து.

தமிழ் வளர்ச்சிக் குழுமத்தை இயக்குவதற்கும், அதற்குச் சட்ட திட்டங்களை வகுக்கவும் விரும்பிய பாரதிதாசன் அண்ணாவின் கருத்தையறிந்துவர என்னை அனுப்பினார். நான் அண்ணாவை அணுகிப் பாரதிதாசன் கருத்தைச் சொன்னேன். தமிழ் வளர்ச்சிக் குழுமக் கூட்டத்துக்கு அண்ணா வரமறுத்துவிட்டார். நாவலர் நெடுஞ்செழியனையும் போக வேண்டாம் என்று கூறித் தடுத்து விட்டார்.

அண்ணாவின் விருப்பமின்மையை நான் பாரதிதாசனிடம் வந்து சொன்னேன். "நமக்குத் தி.க.வும் வேண்டாம். தி.மு.க.வும் வேண்டாம். தமிழர்க்கென்று தனிக்கழகம் ஒன்று அமைப்போம்; நீ வந்து விடு" என்று சொன்னார்.

"நீங்கள் அமைக்க விரும்பும் தனித்தமிழ்க் கழகத்துக்கு என் ஒத்துழைப்பு (Moral support) என்றும் உண்டு; ஆனால் நான் அதில் அங்கம் வகிக்கமாட்டேன். தமிழ், தமிழ்ப் பண்பாடு ஆகிய உயரிய கொள்கைகளைப் பரப்புவோம்; ஆனால் தி.க.வையோ, தி.மு.க.வையோ திட்டக்கூடாது" என்று நான் சொன்னேன். தமிழ்த் தேசிய கட்சியைச் சம்பத் துவக்கியபோதும் நான் இக்கருத்தைத் தான் வற்புறுத்தினேன். அவர்கள் அதன்படி நடக்கத் தவறியதும் நான் அதிலிருந்து வெளியேறிவிட்டேன்.

பாரதிதாசன் என் கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. தி.மு.க.வின் 'மேல் இருந்த வெறுப்பின் காரணமாக அவர் பேராயக் கட்சிக்குக் (Congress) கூடச் சென்றுவிட்டதாகக் கேள்விப்பட்டேன். பேராயக் கட்சிக்காரராகத் தேர்தல் மேடைகளில் பேசிப் பேராயக் கட்சிக்காரராகவே இறந்தார் என்றும் கேள்விப்பட்டேன். அவர் இறந்த போது, கதர்க்கொடியால் மூடித்தான் அவர் பிணத்தை எடுத்ததாகக் கூறினார்கள். எந்த அளவு உண்மை அது என்று எனக்குத் தெரியாது.

புலவர் குழு:

முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களால் முன்னின்று நடத்தப்பட்ட புலவர் குழுவில், முற்போக்குப் புலவர்களும், பிற்போக்குப் புலவர்களும் சரிசமமாக இருந்தார்கள். இரண்டு குழுவினர்க்கும் சில சமயங்களில் பலமான சொற்போர்களும், மோதல்களும் ஏற்பட்டதுண்டு. சென்னையில் நடைபெற்ற புலவர் கூட்டத்தில் இரண்டு குழுவும் அடிதடியில் இறங்கும் அளவுக்குப் பாவேந்தர் சினம் பொங்கப் பேசினார். நிகழ்ச்சி எனக்குத் தெளிவில்லை. புலவர் குழுவிலிருந்து இருதரப்புத் தீவிரவாதிகளும் வெளியேறினர். இறுதியில் நானும் இலக்குவனாருந்தான் மிஞ்சினோம்.

புலவர் குழுவில் எதிர்ப்புணர்ச்சியோடு இரண்டு கட்சிகள் இருந்ததற்கு அரசியல் வேறுபாடு ஒரு காரணம்; கொள்கை வேறுபாடு மற்றொரு காரணம். 'தெ.பொ.மீ. கிரேக்க மொழியிலிருந்து தமிழ் வந்ததாகச் சொல்கிறார்' என்று பாவாணர் குற்றம் சாட்டுவார்.

பாவாணரின் ஆய்வுகள் தவறானவை; முறையற்றவை என்று தெ.பொ.மீ. கூறுவார். இரண்டு கட்சிக்காரர்களுக்கும் நான் மிகவும் நெருக்கமானவன். என்னுடைய கூட்டத்தில் தெ.பொ.மீயோ, துரை. அரங்கனாரோ அல்லது அவர்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர்களோ தமிழை எதிர்த்துப் பேசியதில்லை. என்னைத்தவிர வேறு யாராலும் பாவேந்தர் கோபத்தைச் சமாளித்திருக்க முடியாது.

தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பாவேந்தரின் பங்கு

பாரதிதாசனின் இலக்கியப் பண்புகளை ஆய்வு செய்வதற்கு முன் பாரதியின் இலக்கியப் பண்புகளை ஆராய வேண்டும். கம்பர் காலத்திலிருந்து பாரதி காலம் வரை கவிதை ஒரு குறிப்பிட்ட மரச்சட்டத்துக்குள் சிக்கிக் கிடந்தது. கவிதையின் வெளித்தோற்றம் மட்டும் இருந்ததே தவிர, உள் உயிர் படிப்படியாகக் குறைந்து கொண்டு வந்தது. இடைக்காலத்தில் சிறந்த கவிஞர்கள் சிலர் இருந்தாலும்; அவர்கள் அந்த மரச்சட்டத்துக்குள்ளேயே சுற்றிச் சுற்றி வந்தனர். பாரதி அந்தச் சட்டத்தை உடைத்து, யாப்பிலும் கருத்திலும் புதுமை செய்தார். பாரதியின் கவிதைப் பண்பை முழுக்க முழுக்கப் புதிது என்று பலர் நம்பினர். உண்மையில் அது புதிதன்று; மிகவும் தொன்மையானது.

தொல்காப்பியர் காலத்துக்குமுன் முத்தமிழ் இருந்தது. தொல்காப்பியர் காலத்தில் கூட இயற்றமிழ் தான் பெரிதும் வளர்ச்சியுற்றது. இசைத்தமிழும் நாடகத் தமிழும் நாளாக நாளாகத் தேய்ந்து அழிந்தன. இருந்த ஒருசில நூல்களும் நம்மை எட்டவில்லை. முத்தமிழ்ப் பண்பு மக்களிடையில் இருந்தது. புலவர்கள் மதியாத காரணத்தால் தேய்ந்தது. சங்ககாலத்தில் படைக்கப்பட்ட முத்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரத்தைச் சங்கப் புலவர்கள் காப்பியமாக ஏற்றுக் கொள்ளவில்லை. தங்கள் செயற்கையான கட்டுப்பாட்டுக்குள் அடங்காமல், சிலப்பதிகாரம் வெளியில் நின்ற காரணத்தால், சங்கப் புலவர்கள் அதை ஏற்கவில்லை. முத்தமிழ் விரவிய இலக்கியம் மக்கள் இலக்கியமாகக் கருதப்பட்டது; புலவர் இலக்கியமாக மதிக்கப்படவில்லை.

பாரதி, இயல் அறிந்த பெருங்கவிஞர்; இசை அவருக்குத் தெரியும்; நாட்டியமும் கட்டாயம் அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும். அவர் நாட்டியச் சூழ்நிலையில் வளர்ந்தவர். முத்தமிழ் அறிந்த பள்ளு, குறவஞ்சிக் கவிஞர்கள் சிலர் பாரதிக்கு முன் இருந்தாலும், அவர்களால் பழைய சட்டத்தை உடைத்து வெளியில் வரமுடியவில்லை. சட்டத்தை உடைக்கும் பணியைத் துணிந்து செய்தவர் பாரதியே!

சொல்ல விரும்புவதை இயலாக வாயுரைக்கச் சொல்லி, அதையே ராகத்தோடு இசையாகப் பாடி, அதையே செயல் முறையாக நாடகமாக்கியவர் பாரதி. பாரதியின் கண்ணம்மா தெளிந்த இயல்; தித்திக்கும் இசை; திகைக்க வைக்கும் உணர்ச்சி நாடகம். இந்த முத்தமிழும் பிணைந்த பண்பு துவக்க காலத்தில் பாரதிதாசனிடம் இருந்தது. முதல் தொகுதியில் உள்ள 'புரட்சிக் கவியில்' பாரதியின் பாரதிதாசனைக் காணலாம்.

பாரதிதாசன் வளர வளர, அவர் இயற்பண்பை வளர்த்த அளவு கவிதையில் இசைப் பண்பையும் நாடகப்பண்பையும் வளர்க்க வில்லை. இயலையும், இசையையும் தனித்தனியே பிரித்து அவற்றுக்குத் தனித்தனி இலக்கியங்கள் படைக்கத் தொடங்கி விட்டார். இசையமுதும், இரணியனும் அவற்றுக்குச் சான்றுகள்.

'தமிழில் காப்பியங்கள் அதிகமில்லை' என்று நான் ஒருமுறை பாரதிதாசனிடம் சொன்னேன். 'நான் நிறையக் காப்பியம் எழுதப் போகிறேன்' என்று அவர் சொன்னார். அவர் சொன்னபடியே

காப்பியங்கள் நிறைய எழுதினார். ஆனால் பாரதியின் முத்தமிழ்ப் பண்பைக் கைவிட்டு விட்டார்.

விருத்தம் பாடத் தகுந்தது என்பது பாரதிதாசன் கொள்கை. விருத்தம் நாடகத் தமிழைச் சேர்ந்தது என்பது என் கொள்கை. பாரதிதாசன் அதை ஒத்துக் கொண்டார்.

'ஏன்' அகவலும் பாடத் தகுந்தது என்று தானே முன்னோர் நினைத்தனர். ஆனால் அகவலை இன்ன ராகம் என்றில்லாமல்' எல்லா ராகத்திலும் ராகமாலிகையாகப் பாடினர். விருத்திற்கென்று தனி ராகம் இருந்தது' என்று கூறினார் பாரதிதாசன். அக்கூற்று உண்மை.

"கலிப்பா நாடகத்தமிழ் முறையைச் சேர்ந்தது. கிரேக்க மொழியில் உள்ள Odeம் கலிப்பாவும் ஒன்று" என்பது என் கருத்து.

காப்பியப் பண்பைப் பற்றி ஓர் இலத்தீன் தொடர்.... அதன் பொருள் என்னவென்றால் 'Begin with the end' என்பதுதான். இலியாதிலும் (Iliad) சுவர்க்க இழப்பிலும் (Paradise Lost) காப்பியம் முடியும் இடத்தில் தொடங்குகிறது. மேலும் படிப்பவன் கீழே வைக்க முடியாதபடி புதினத்தின் சுவையோடு (Novel Interest) காப்பியம் தொடர்ந்து செல்ல வேண்டும். இப்பண்புகள் யாவும் சிலப்பதிகாரத்தில் தான் முழுக்க முழுக்க அமைந்திருக்கின்றன. வேறு தமிழ்க்காப்பியங்களில் இல்லை. இதை நான் பாரதிதாசனிடம் கூறினேன்; அவரும் ஒத்துக் கொண்டார்.

பாவேந்தரின் காப்பியங்கள் Episode போல அளவில் சிறியவனாக இருந்தாலும் அளவிறந்த, நுண்ணிய காப்பியப் பண்புகள் மிகுந்தவை; நிலை பேறுபெற்றவை.

கவிஞர் பாரதிதாசன்

பாரதிக்கு இரண்டுவிதமான பாதிப்புகள் உண்டு. வடமொழி இதிகாச-இலக்கியப் பாதிப்பு ஒன்று; மேலை நாட்டுக் கவிஞர்களான ஷெல்லி, கீட்ஸ் ஆகியோரின் பாதிப்பு மற்றொன்று. பாரதிக்குச் சங்க இலக்கியப் பாதிப்பு கிடையாது.

பாரதிதாசனுக்குத் துவக்க காலத்தில் பாரதியின் பாதிப்பும் பிற்காலத்தில் சங்க இலக்கியப் பாதிப்பும் இருந்தன. என்றாலும் அவர் படைப்புகளில் பெரும் பகுதி அவருக்கே உரித்தான தனித்தன்மை மிக்கவை.

பாரதிக்கு வடமொழி, இந்தி, ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய பிறமொழிகளில் தேர்ச்சி உண்டு. பாரதிதாசன் தனித்தமிழ்க் கவிஞர். பிரெஞ்சு ஆட்சியில் இருந்த புதுச்சேரியில் பிறந்து வாழ்ந்தாலும் அவருக்குப் பிரெஞ்சு இலக்கியப் பாதிப்பு கிடையாது.

தான் சரியென்று நினைத்ததை எவருக்கும் அஞ்சாமல் பின் விளைவுகளுக்குச் சிறிதும் கவலைப்படாமல் எவன் எழுதுகிறானோ அவன் தான் உண்மைக் கவிஞன். பாரதிதாசனிடம் இப்பண்பு முனைப்பாகவே இருந்தது. வரலாறு சில கவிஞர்களைப் படைத்ததுண்டு; இவர் வரலாற்றைப் படைத்த கவிஞர்.

ஆங்கில இலக்கிய உலகில் தமக்கென்று ஒரு கால கட்டத்தை (Age) உருவாக்கியவர் ஷேக்ஸ்பியர். தமிழில் தமக்கென்று தனிக் காலகட்டத்தை உருவாக்கிய பெருமை பாரதிதாசனுக்கு உண்டு. இவருக்கென்று தனிப்பட்ட இலக்கிய வரலாறு, தமிழ் உள்ளளவும் இருக்கும்.

பாரதியை உலகமெங்கும் விளம்பரப்படுத்தவும், அவர் இலக்கியங்களைப் பரப்பவும் ஆற்றல் வாய்ந்த ஒரு பின்னணி இருக்கிறது. பாவேந்தருக்கு அது இல்லை. அப்படி இருந்திருந்தால், இவர் வாழ்ந்த காலத்திலேயே நோபில் பரிசு பெற்றிருப்பார்.

பாலும் தெளிதேனும்

திருக்குறளார் வீ. முனுசாமி

தமிழ்நாட்டுப் பேச்சாளர்கள் சில சமயங்களில் மட்டும் பொறி பறக்கும் 'சிகரெட் லைட்டரைப்' போன்றவர்கள்.

திருக்குறளார்-கொளுத்தியதிலிருந்து அணையும் வரை நகைச்சுவைப் பொறி பறக்கும் விழுப்புரம் மத்தாப்பு! இவர் அவசரமாக வீசி எறிந்த மத்தாப்பைச் சில பேச்சாளர்கள் தங்கள் கையில் எடுத்து வைத்துக் கொள்வதுண்டு.

இவர் நகைச்சுவை கடன் வாங்காத சொந்தச் சரக்கு.

திருக்குறளார் தமிழ்நாட்டு மார்க் ட்வைன்; சே! சே! அப்படிச் சொல்லக் கூடாது. மார்க் ட்வைன் அமெரிக்கத் திருக்குறளார்.

ஒரே பெரியார்! ஒரே அண்ணா! ஒரே திருக்குறளார்! திருக்குறளார்-தமக்கே உரிய நகைச்சுவையோடு இக்கட்டுரையில் பாவேந்தரைப் பற்றிப் பேசுகிறார்.

பாவேந்தர் பாரதிதாசன் கடலூர் வந்தால், என் அச்சகத்திற்கும் வருவார். இலக்கியம் அரசியல் எல்லாம் பேசுவோம்.

பாவேந்தர் ஓர் இலக்கியப் 'பயில்வான்'. அவர் தோற்றம், பார்வை, பேச்சு யாவும் முரட்டுத்தனமாக இருக்கும். யாரையும், எதையும் வைத்துப் பார்க்கமாட்டார். எதைப்பற்றி உள்ளத்தில்... எப்போது என்ன நினைக்கிறாரோ அதை அப்படியே பலர் முன்னிலையில் கொஞ்சம் கூட அஞ்சாமல், கூச்சப்படாமல் போட்டு உடைத்து விடுவார். அது அவருடைய பண்பு. பின் விளைவுகளைப் பற்றியும் கவலைப்படமாட்டார்.

சிதம்பரத்துக்கு அருகில் காட்டு மன்னார்க்குடியில் திருவாளர்

சத்தியதாஸ் என்பவர் மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராகப் பணிபுரிந்து வந்தார். அவருக்குத் தமிழிலும், பாவேந்தர் பாட்டிலும் அதிக ஈடுபாடு உண்டு. அவர் பாவேந்தரை அழைத்துத் தம் பள்ளி மாணவர் இலக்கிய மன்ற ஆண்டுவிழாவில் பேச வைக்க விரும்பினார். அவ்விருப்பத்தை என்னிடம் தெரிவித்தார். நான் பாவேந்தரைக் கண்டுபேசி ஒப்புதல் வாங்கிக் கொடுத்தேன்.

பள்ளியில் இலக்கிய மன்ற விழாவுக்கு நாள் குறிப்பிட்டு, அன்று விழாவுக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் விமரிசையாகத் தலைமையாசிரியர் செய்திருந்தார்; அழைப்பிதழ் அச்சிட்டு ஊர்ப் பிரமுகர்களுக்கு அனுப்பியிருந்தார். பெருங்கவிஞர் பேச வருகிறார் என்று ஊர் மக்கள் பள்ளிக்குத் திரளாக வந்திருந்தனர். அவ்விழாவுக்கு வந்திருந்த ஊர்ப் பிரமுகர்கள் எல்லாரும் பேராயக் கட்சி (Congress)யைச் சார்ந்தவர்கள்; தீவிர வைணவர்கள்.

கவிஞர் என்றவுடன் நீளக் கோட்டும், தலையில் உருமாலும், காதில் கடுக்கனும், கைத்தடியுமாகப் பழங்கால முறைப்படி தோன்றுவார் என்று எல்லாரும் எதிர்பார்த்துக் காத்திருந்தனர். ஆனால் பாவேந்தர் நவீன உடையோடும், அச்சுறுத்தும் மீசையோடும், கையில் சிகரெட்டின் (Tin) நெருப்புப் பெட்டி சமேதராக மிடுக்கோடு பள்ளியில் நுழைந்தார். இவர் தோற்றத்தைப் பார்த்ததும் ஊர்ப்பிரமுகர்கள் முகம் சுளித்தனர்; அவர்கள் நெற்றியில் நிரம்பியிருந்த நாமத்தைப் பார்த்து இவர் முகஞ்சுளித்தார்.

கூட்டம் தொடங்கியது. பாவேந்தர் வாயிலிருந்து 'சுயமரியாதைக் கருத்துகள்' அருவியைப் போல் குதித்துப் புரண்டுவந்தன. அவர் சொற்களின் வீச்சு சம்மட்டி அடியாக விழுந்தது. மாணவர்களுக்குப் பள்ளியில் சொல்லிக் கொடுக்கப்படும் பாடல்களின் மேல் அவர் கவனம் திரும்பியது. பிள்ளையார் வாழ்த்தாக ஔவையார் பாடிய பாடல் ஒன்று அவரிடம் மாட்டிக் கொண்டது. அப்பாடல்:

> **பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை**
> **நாலும் கலந்துனக்கு நான்தருவேன்-கோலம்செய்**
> **துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்**
> **சங்கத் தமிழ்மூன்றும் தா.**

"என்ன ஏமாற்று இது. அவனவன் பத்து வருஷம் பெரும் புலவர் கிட்ட பாடங் கேட்டாலும் இயற்றமிழைக் கரைகாண முடியல. ஓர் அணாவுக்கு பாலும் தேனும் கொழுக்கட்டையும் வாங்கிப் பிள்ளையாருக்குப் படைச்சிட்டா முத்தமிழும் வந்திடுமா? முத்தமிழ் என்ன அவ்வளவு 'சீப்பாப்' போச்சா? இதை ஒரு பாட்டுன்னு இவ

பாடிட்டா... முண்டம்! இதை மாணவருக்குப் பாடமா வேற வெச்சிட்டானுக.. இந்த நாடு உருப்படுமா?" என்று விளாசித் தள்ளி விட்டார். அங்கு அமர்ந்திருந்த பக்தர் கூட்டத்தில் சலசலப்பு. பாவேந்தர் அதைப் பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. கூட்டம் முடிந்தது. தலைமையாசிரியர் முகத்தில் ஈயாடவில்லை.

ஒரு வாரத்தில் தலைமையாசிரியர் சத்தியதாஸ் காட்டு மன்னார் குடியிலிருந்து திருக்கோவிலூர் மாற்றப்பட்டார். இச்செய்தியை அறிந்து நான் மிக வருந்தினேன். அடுத்தமுறை நான் பாவேந்தரைச் சந்தித்தபோது, "என்ன... இப்படிப் பண்ணீட்டீங்க... உங்க பேச்சோட எதிரொலி... பாவம்... சத்தியதாஸ்.. புள்ளை குட்டிக்கார... அவனைத் திருக்கோவிலூர் மாத்திட்டாங்க!" என்று வருத்தத்தோடு சொன்னேன்.

அதற்குப் பாவேந்தர் சிரித்துக் கொண்டே "இப்ப என்ன அதுக்கு? சத்தியதாஸைத் திருக்கோவிலூர் பள்ளியிலேயே ஒரு கூட்டத்துக்கு ஏற்பாடு பண்ணச் சொல்லுங்க... நான் அங்கே போய்ப் பேசற... தானா திருக்கோவிலூரிலிருந்து காட்டுமன்னார்குடி மாத்திட்டுப் போறா..." என்றார் அவர். எப்படி பதில்? அவர்தான் பாவேந்தர்.

பாவேந்தருடன்

திரு.எஸ்.ஆர். சுப்பிரமணியம்

பூதானத் தொண்டர்களுக்கு எஸ்.ஆர்.எஸ். என்பது 'ஓர் உற்சாகச் சொல்'

'எஸ்.ஆர்.எஸ்' என்ற மூன்றெழுத்துக்குத் தன்னலமற்ற உழைப்பு, தொண்டு, துணிச்சல் என்று பல பொருள்கள் உண்டு.

இலக்கியமும் சமூகத் தொண்டும் இவருடைய இரண்டு கண்கள்! சர்வோதயம் இவருடைய உடம்பு.

அறிஞர் அண்ணாத்துரை இளைய தலைமுறைக்கு 'அண்ணா'. எஸ்.ஆர்.எஸ். இளைய தலைமுறைக்கு 'அண்ணாச்சி'.

பாரதிதாசன் போன்ற கவிஞர்கள் தொடர்பும், அரவிந்தர் போன்ற ஆன்மீகவாதிகள் தொடர்பும் ப. ஜீவானந்தம் பி. ராமமூர்த்தி, ஈ.எம். எஸ். நம்பூத்ரிபாத், எம்.ஆர். வெங்கட்ராமன் போன்ற அரசியல்வாதிகளின் தொடர்பும் இளமையிலிருந்தே இவருக்கு இருந்தன.

தமிழ்நாடு என்றவுடன் ஜெயப்பிரகாஷ் நாராயணன் நினைவில் தட்டுப்பட்டது திரு.எஸ்.ஆர்.எஸ். அவர்களின் உருவம்தான்.

பன்னிரண்டாம் வயதில் பாரதியார் சங்கமும், பத்தொன்பதாம் வயதில் பாரதி கவிதா மண்டலமும் நடத்திய செயல் வீரர்.

பாரதிதாசன்-வாத்தியார் சுப்புரத்தினமாகத் கதர்ச் சட்டை அணிந்து தேசியப் பாடல்கள் பாடிக் கொண் டிருந்த நாளிலிருந்து, அவர் பாவேந்தராக மடிந்தவரை அன்பராகவும், அணுக்கத் தோழராகவும் விளங்கியவர்.

இக்கட்டுரையின் மூலம் நம்மையெல்லாம் பாரதிதாசனுக்கு மிக அருகில் அழைத்துச் செல்கிறார் எஸ்.ஆர்.எஸ்.

பாவேந்தர் இயல்பாகவே ஒரு போராட்டக்காரர். புதுச்சேரியில் அவர் வாழ்ந்த வாழ்க்கை ஒரு போராட்ட வாழ்க்கை. ஏறக்குறைய 1925ஆம் ஆண்டிலிருந்து அவர் எதிர்க்கட்சியாகவே இருந்தார். அவர் ஒரு கட்சியில் உறுப்பினராக இருந்தார் என்று சொல்லுவதை விட அவரே ஒரு கட்சியாக-பாரதிதாசன் என்ற தனி மனிதனே ஒரு ஸ்தாபனமாக விளங்கினார்.

'பர்த்திலெமி' என்ற பிரெஞ்சுக்காரர் ஒருவர் புதுச்சேரியிலிருந்து பிரெஞ்சுப் பாராளுமன்றத்துக்கு நின்றார். அவருக்காகப் பாரதிதாசன் தேர்தல் பணியாற்றினார். தேர்தலில் ஓட்டு எண்ணுவதில் வீண் கலகங்கள் நடத்தி ஓட்டை எதிர்க்கட்சிக்காரர்கள் ஏமாற்றிவிடும் பழக்கம் உண்டு. கூனிச்சம்பட்டு என்ற ஊர் புதுச்சேரியில் இருந்து பத்து மைல் தொலைவில் உள்ளது. பாரதிதாசன் அங்கு பள்ளி ஆசிரியராய்ப் பணிபுரிந்தார். பர்த்திலெமி தேர்தலின் போது, கூனிச்சம்பட்டு ஓட்டுச் சாவடியில் பாவேந்தர் பணிபுரிந்தார்.

தேர்தல் அன்று மாலை ஓட்டுப்பதிவு முடிந்தவுடன் சீல் வைத்த ஓட்டுப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு புதுச்சேரி வந்தடைந்தார். புதுச்சேரி மாநிலத் தேர்தல் அதிகாரியிடம் ஓட்டுப் பெட்டிகளை நேரில் ஒப்படைத்தார். ஓட்டுச் சாவடியிலிருந்து ஓட்டுப் பெட்டியை எடுத்து வந்த குற்றத்திற்காக கைது செய்யப்பட்டார். தண்டனையும் அடைந்தார். அதே நேரத்தில் வேறு குற்றங்களைச் சாட்டி 'ஆத்மசக்தி' பத்திரிகை ஆசிரியர் திரு. சாரங்கபாணிச் செட்டியார், 'தேச சேவகன்' ஆசிரியர் சைகோன் சின்னையா முதலியார் ஆகியோரும் கைது செய்யப்பட்டனர். எல்லாரும் சில மாதங்கள் சிறையில் இருந்து விடுதலை பெற்றனர்.

புதுச்சேரித் தேர்தல் காலங்களில் பாரதிதாசன் ஒரு சிங்கம். அவருடைய பேனாவின் கர்ஜனையைக் கேட்டவுடன் அரசியல் நரிகள் ஊளையிட்டு ஓட்டமெடுக்கும். தேர்தல் முடிந்தவுடன் மக்கள் பல நாட்களுக்குக் கவிஞரின் தேர்தல் இலக்கியத்தைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பார்கள்.

மாசி மாதத்தில் வரும் மகவிழா புதுச்சேரியில் மிக உற்சாகமாகக் கொண்டாடப்படும். வெளியூர்களில் இருந்து சுமார் நூறு சாமிகள் கடலில் மக முழுக்காடுவதற்குப் புதுவைக் கடற்கரைக்கு வரும்.

அவற்றுள் புதுச்சேரிக்கு 20 மைல் தூரத்திலிருந்து வரும் மயிலம் முருகப் பெருமானும், 40 மைல்களுக்கு அப்பாலிருந்து வரும் செஞ்சி அரங்கநாத சாமியும் விழாவுக்கு அணி செய்யும் கடவுள்கள், ஒரு முறை 'மயிலம் சுப்பிரமணியர் துதி அமுது' என்ற அற்புதமான பக்தி இலக்கியத்தைப் படைத்து மகவிழாவில் பாரதிதாசன் வெளியிட்டார். அதில் வரும் திருப்புகழை அருணகிரியார் திருப்புகழ்ப்பாக்களுடன் இடையில் செருகிவிட்டால் இடைச்செருகல் என்று கண்டுபிடிக்க முடியாது.

ஒருமுறை தேர்தல் நெருங்கும் நேரம். மகவிழா நடந்தது. மயிலம் முருகர் வீதி உலாவுக்குத் தெருவெங்கும் பந்தல் போட்டு அலங்கரிக்கப்படுவது வழக்கம். அவ்வாண்டு அலங்காரம் பாரதிதாசன் தமிழ்வாளின் வீர வீச்சுக்கள்தாம். 'அநியாய ஆட்சியை அழிக்க வா முருகா!' என்று தொடங்கிய அவர் பாடல்கள் எதிர்க்கட்சியின் ஆதரவை மக்கள் மனத்திலிருந்து அழித்த தோடல்லாமல் எதிர்க்கவும் வலிமை தந்தன. அந்தத் தேர்தலில் 20 ஆண்டுகள் ஆட்சியிலிருந்த கட்சி படுதோல்வியடைந்து ஆட்சி பீடத்திலிருந்து இறக்கப்பட்டது.

இன்று உள்ள வ.உ.சி. உயர்நிலைப் பள்ளிக்கு அப்போது மிசியோன் பள்ளி என்று பெயர். அந்த நாளில் புதுவை அரசியல் அமைப்பில் முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு என்று இரண்டு வகை வாக்குச் சீட்டுகள் உண்டு. பிரெஞ்சுக்காரர்களும், தங்களைப் பிரெஞ்சுக்காரர்கள் என்று பதிவு செய்து கொண்ட இந்தியர்களும் முதல் வகுப்பு வாக்காளர்கள். பிரெஞ்சு ஆட்சியின் கீழிருந்த இந்தியப் பகுதியில் பிறந்து 21 வயதுக்கு மேற்பட்ட இந்தியர்கள் இரண்டாம் வகுப்பு வாக்காளர்கள். வாக்காளர் பட்டியலில் இரண்டுவகை இருந்த அநீதியை எதிர்த்துப் பாவேந்தர் குரல் கொடுத்தார்.

பாவேந்தர் சார்ந்திருந்த கட்சி செவ்வண்ண நாயக்கர் கட்சி. அப்போதெல்லாம் தனியார் பெயரில்தான் புதுவையில் கட்சிகள் இருப்பது வழக்கம். பிரெஞ்சு ஆட்சியில் அப்போது புதுவையில் இருந்த வாக்காளர் வேறுபாட்டை ஒழிக்கப் பாடுபட்ட அரசியல் தலைவர் திரு. செல்லான் நாயக்கர் ஆவார். அவர் மக்கள் செல்வாக்குப் பெற்ற வழக்கறிஞர். வாக்காளர் பட்டியலில் இருந்த இந்த அநீதிக்கு எதிர்ப்புக் குரல் கொடுத்து எழுத்துப்போர் புரிந்தவர் பாவேந்தர். பாவேந்தரின் இம்முயற்சி வெற்றிபெற்ற நேரம். அவர் பணிசெய்த பள்ளியில் ஆண்டுவிழா எடுக்கப்பட்டது. அவ்விழாவில் மாணவர்கள் ஒரு நாடகம் ஏற்பாடு செய்திருந்தனர். கதை, வசனம்,

பாட்டு எல்லாமே பாவேந்தர்தாம். வெள்ளையருக்கும் இந்தியருக்கும் வெவ்வேறு வாக்காளர் பட்டியல் இருந்ததை எதிர்த்துக் கிடைத்த வெற்றியைத் தம் நாடகப் பாட்டில் புகுத்தினார்.

பல்லவி

கூவாயோ கருங்குயிலே
யாரும் ஒன்றென்று (கூவாயோ)

அநுபல்லவி

ஏவலர் இந்தியர்
இரண்டாம் தொகுதியென்றார்
அக்குறை நீங்கிற்றென்றே
இனிதாய் நன்றே (கூவாயோ)

தொகையறா

ஒரு குடைக் கீழ் நின்ற
வருள் சிலருக்கு வெயில்...
சிலருக்கு வெயிலோ?
குவிந்த பொருளோ
விடியுமோ சமமாக...
அடையாத தெவ் வகையிலோ? (கூவாயோ)

பாட்டு இன்னும் நீளும்...

இந்நாடகத்திற்கு அழைக்கப்பட்டிருந்த கவர்னர், கல்வி இலாகா அதிகாரி, மற்ற பிரெஞ்சுக்காரர் ஆகியோருக்கு இப்பாட்டு மொழி பெயர்த்துச் சொல்லப்பட்டது. இந்த நாடகத்தில் கல்வியின் சிறப்புப் பற்றி அருமையான பாடல் ஒன்றும் எழுதியிருந்தார்.

உலகமே உயர்வடைவாய்
உள்ளவர்க் கெல்லாம் நீயே தாய்!
நலந்தரும் சமத்துவம்
நாடுதல் மகத்துவம்
நண்ணுவாய் சுதந்திரத்வம் -(உலகமே)

கலகமேன்? சண்டைகளேன்
கருத்தெல்லாம் பேதம் கொள்வதேன்?
கலன் செல்லும் பாதையில்
காரிருள் வெளிக்கு
கல்வியே சுடர் விளக்கு (உலகமே)

இந்த இரண்டு பாடல்களிலும் வெளிப்படுத்திய சிறந்த கருத்துக் களுக்காகப் பிரெஞ்சு அறிஞர்களால் பாவேந்தர் பெரிதும் பாராட்டப்பட்டார். குடியரசுத் கொள்கைகளை விளக்கும் பாடல்களை எழுதி மாணவர்களுக்குப் பள்ளிகளில் தெளிவுண

டாக்க வேண்டும் என்று அவர்கள் பாவேந்தரைக் கேட்டுக் கொண்டனர்.

1928 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். புதுச்சேரியில் நடிகர் எம்.ஆர்.ராதா நாடகக் குழுவினர் இரண்டு மாதங்கள் தங்கித் தொடர்ந்து நாடகங்கள் நடத்திக் கொண்டிருந்தனர், அப்போது பாரதியாரின் நினைவு நாள் வந்தது. செப்டம்பர் 11 ஆம் நாள் மாலை ஆனந்தரங்கம் பிள்ளை இல்லத்தில் பாரதி விழா நடை பெற்றது. பாரதிதாசன் தலைமை தாங்கினார். நாடகக் கலைஞர்களும் பாரதி விழாவிலே கலந்து கொண்டு பக்க வாத்தியத்துடன் பாரதி பாடல்களைப் பாடினர். பாரதிதாசனுக்கு அளவு கடந்த மகிழ்ச்சி. ஆனால் பாரதி பாடல்களை அவர்கள் பாடிய முறை இவருக்குப் பிடிக்கவில்லை.

'பாரதியார் எப்படிப் பாடுவார் தெரியுமா?' என்று கேட்டு விட்டு அவரே பாட ஆரம்பித்தார். 'பக்தியினாலே தெய்வப் பக்தியினாலே' என்ற பாட்டு! சபை ஆழ்ந்த அமைதிக்குச் சென்றது; சிறிது நேரத்தில் உணர்ச்சி மயமாகியது பாவேந்தரின் குரல் கணீரென்றிருக்கும். பக்தியினாலே என்று பிலகரி ராகத்தில் மேல் நிலையில் சிறிது நேரம் நிறுத்துவார். அப்போது குரலில் ஒரு ரவை பறக்கும். அந்த நாத ஒலியில் ஒரு மத்தாப்பு வெடிக்கும். அதற்குப் பின்பு இரண்டொரு முறை அவர் பாடக் கேட்கும் வாய்ப்பு எனக்கிருந்ததுண்டு. ஆனால் என் நினைவில் பசுமையாக இருப்பது, 1928 செப்டம்பர் 11 இல் ஆனந்தரங்கம் பிள்ளை இல்லத்தில் அவர் பாடக் கேட்டதுதான். அது போல் மற்றைய நாள் பாடல்களைச் சொல்ல முடியாது.

1930-31இல் பாவேந்தருக்குச் சம்பளம் சுமார் அறுபது ரூபாய்தான். கடன் மற்றுமுள்ள பிடித்தங்கள் போக ஒருமுறை ரூ. 34/- தான். கைக்கு வந்தது. அவருக்குச் சம்பளம் வரும்நாள் என்று சிலருக்கு வாசனை அடிக்கும். கலகலப்பாக அவர் முன்வந்து நிற்பார்கள். திருவாளர்கள் பச்சையப்ப உடையார், கந்தசாமி ஆச்சாரி, எம்.என்.சாமி முதலியோர் பெரும்பாலும் வாடிக்கைக்காரர்கள் போல. இவருக்குக் கிடைக்கிறதோ ரூ.34/= இதில் வாடிக்கையாக உதவிகள் செய்வது அவர் இயல்பு.

பச்சையப்ப உடையார் என்பவர், தாளத்தில் வல்லவர். 108 தாளங்களிலும் தமக்குப் பயிற்சி உண்டு என்று சொல்லுவார். பாவேந்தரும் அவரது தாளஞானத்தில் அதிக மதிப்பு வைத்திருந்தார்.

எம்.என்.சாமி என்பவர் சிறந்த நடிகர்; நடிப்புக்கலை அவரிடம் கைகட்டி நிற்கும். பத்துப் பதினைந்து பேரே கூடியுள்ள சபையில்

கவிஞர் அவரை நடிக்கச் சொல்லுவார். அவர் சோகமாக நடித்தால் எல்லாரும் கண்ணீர் விடுவர். சிருங்காரமாக நடித்தால் கலகல வென்று நகைப்பர்.

கந்தசாமி ஆச்சாரி பாவேந்தருடன் சிலம்பு விளையாடுபவர்; சங்கரன் குளம் கொட்டடி என்ற சிலம்புப் பயிற்சிக் கூடத்தின் முக்கியஸ்தர்; வயது தளர்ந்த காலத்திலும், உடல் கட்டுடன் விளங்கினார். வைத்தியம் கூடக் கொஞ்சம் தெரியும். இவர்களைப் போன்றவர் இன்னும் பலபேர். மாதா மாதம் உதவிகள் மௌனமாகவே நடக்கும்.

1935-ஆம் ஆண்டு பாவேந்தர் அப்போது அதிகமாகச் சுருட்டுப் பிடித்துக் கொண்டிருந்தார். இவ்வளவு அதிகமாகச் சுருட்டைப் புகைத்தால் உடல் நலம் அதிகம் பாதிக்குமே அவரிடம் சொல்லக் கூடாதா? என்று குயில் சிவா அவர்களைக் கேட்டேன்.

'நீதான் சொல்லேன்' என்றார் சிவா.

'இப்படிச் சுருட்டுப் பிடிக்கின்றீர்கள்; உடலுக்கும் கெடுதல் பார்ப்பதற்கும் நன்றாயில்லை' என்றேன் பாவேந்தரைப் பார்த்து. 'என்ன செய்யச் சொல்றே?' என்று கேட்டார் பாவேந்தர்.

'எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்ளுங்கள்' என்று சொல்ல வேண்டும் என்று நினைத்த நான் 'எப்படியோ விட்டுவிட வேண்டும்!' என்றேன். 'சரி' என்று பாதி சுருட்டைக் கீழே எறிந்து விட்டார் . எனக்கு அதிர்ச்சியாகி விட்டது. சிவா அவர்களும் எதிர் பார்க்கவில்லை. நான்கு நாட்கள் சென்றன. வழக்கம் போல எல்லா வேலைகளையும் செய்தார்.

'சுப்பிரமணியா! சுருட்டு வேண்டாமின்னியே, இப்ப என்ன செய்யறது?' என்றார். எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. ஊமையாய் விழித்தேன். பக்கத்திலிருந்த சிவா 'பீடி பிடிக்கிறது' என்று அவருக்கே உரிய முறையில் சிரித்தார், 'சொல்றியே கொண்டாயேன்' என்றார் பாவேந்தர். நான் ஓடிப்போய் பீடிக்கட்டு ஒன்று வாங்கி வந்தேன். அதனைப் பற்ற வைத்தார். சில நாட்களில் பீடி எண்ணிக்கை பெருகிவிட்டது. 'இந்தப் பீடி இவ்வளவு பிடித்தால்' என்று நான் தொடங்கினேன்.

'என்னதாம் செய்யறது?'-பாவேந்தர் கேட்டார் 'பீடி வேண்டாம்! என்றேன்.

உடனே வாயிலிருந்த பீடியைக் கீழே போட்டார். மூன்று நாட்கள் சென்றன. அன்பர்கள் பலர் வந்திருந்தனர். அவர்களிடம் 'சுருட்டுப் பிடித்தேன்; வேண்டாம் என்றான். விட்டு விட்டேன். பீடி

பிடித்தேன். அதையும் வேண்டாம் என்றான். அதையும் விட்டு விட்டேன். இப்ப என்னப்பா பண்றது?" என்றார் பாவேந்தர். அவர்கள் முன்னும் பின்னும் தெரியாமல் விழித்தனர். சிவா நாயக்கர் உடனே பொடி போடேன், என்று கூறி அவருக்கே உரிய சிரிப்பை ஒலித்தார். என்னைப் பார்த்து 'ஏம்பா அவர் தான் சொல்லிட்டாரே! அப்ரம் என்னா?" என்றார்.

உடனே நான் பொடி வாங்கி வந்தேன். சில தினங்களில் பொடி மேல்சட்டை மேல் விளையாடத் தொடங்கியது. 'இது மிக மிக மோசம். பொடி சட்டையெல்லாம் ஆகிவிடுகிறது, என்றேன். உடனே பொடி மட்டையைத் தூக்கி எறிந்தார். நான் ஓடி ஒரு காப்பி கொண்டு வந்தேன். பேசாமல் குடித்தார். யாருமே பேசவில்லை. என் மனதில் ஒரு திகில்.

அடுத்த சில தினங்கள் சென்றன. 'சுப்ரமண்யா! சுருட்டுப் பிடித்தால் வேண்டாம்; பீடி பிடித்தால் வேண்டாம்; பொடி போட்டால் வேண்டாம். இப்போ என்னப்பா பண்றது?' என்றார் பாவேந்தர். உடனே சிவா அவர்கள் 'சிகரெட்' என்று சொல்லிச் சிரித்தார்.

'இதாப்பா அவர் தான் சொல்லிட்டாரே!' என்று குலுங்கக் குலுங்கச் சிரித்தார். நான் ஓடிப்போய் சிகரெட் வாங்கி வந்தேன். 'கொஞ்சமாசத்தான் பிடிப்பேன்' என்று சிவா நாயக்கரைப் பார்த்துக் கண் சிமிட்டினார் பாவேந்தர்.

சுருட்டு வேண்டாம் என்று சொன்னதும் விட்டது-பீடி, பொடியை விட்டது-என்னால் மறக்கவே முடியவில்லை. இந்தப் பழக்கங்களை நினைத்தவுடனே நிறுத்துவது யாருக்கும் எளிதான காரியம் அல்ல. பாவேந்தரின் மனத்திட்பமே நினைத்ததும் பழக்கத்தை விடமுடிகிறது. 1936-ஆம் ஆண்டு கவிதா மண்டலக் காரியாலயத்தில் ஒரு நாள் பச்சையப்ப உடையார், குயில் சிவா நாயக்கர் தம்புசாமி முதலியார், பேராசிரியர் பஞ்சாபகேசய்யர் முதலியோர் அமர்ந்திருந்தனர். பஞ்சாபகேசய்யர் 'தெலுங்கு சமஸ்கிருதம் போன்று தமிழில் கீர்த்தனைகள் பாடமுடியாது. அப்படி ஏதோ பாடினாலும் அவை தாளத்திற்கும் சங்கதி போட்டுப் பாடுவதற்கும் ஒத்து வராது' என்றார்.

'அத என்னாப்பா அப்படிச் சொல்றான். தமிழில் ஏன் முடியாது? எவ்வளவு கடினமான தாளத்திலும் தமிழில் பாடமுடியும். லாவணியைச் சவுக்கதாளத்தில் பாடுவது கடினம்; பாட்டிலிருக்கிறது. இதோபார்' என்று 'ஸ்ரீ மதி இவளார்' என்ற அவரது லாவணியைப் பாடிக் காட்டினார். 'உடையாரே தாளம் போடு' என்றார். அப்போது அவர் பாடியது தாளத்தில் எத்தகைய அபாரஞானம் அவருக்கு இருந்தது என்பது வெளியாயிற்று.

தியாகராசர் கீர்த்தனைபோல் தமிழில் பாடமுடியாது என்று மறுபடியும் வற்புறுத்தினார் பேராசிரியர். பேச்சு ஒருவாறு முடிந்து 12-மணிக்கு எல்லோரும் எழுந்தனர். கவிஞர் மட்டும் உட்கார்ந்திருந்தார். திடீரென்று 'சுப்ரமண்யா அவன் என்ன சொன்னான்? தியாகராசர் கீர்த்தனை போல் தமிழில் பாடமுடியாது. அது என்ன தியாகராசர் கீர்த்தனை? இங்கு ஏதாவது இருக்கா?" என்று கேட்டார்.

'இருக்கிறது' என்று சுதேசமித்திரன் வாரப் பத்திரிகையில் 'மொழி பெயர்ப்பும் இசையமைப்பும்' என்ற தலைப்பில் வெளியாகியிருந்த பத்துத் தியாகய்யரின் கீர்த்தனைகளைக் கொடுத்தேன்.

சாப்பிட்டுவிட்டு வந்தவுடன் கவிஞர் எழுதினார். 'நிஜ மர்ம முலயனு' என்ற தியாகய்யர் கீர்த்தனையின் மொழிபெயர்ப்பு தியாகராச ருடைய முத்திரையுடன் எழுதினார். 'உடையாரே பாடு!' என்றார்; அவருடன் சேர்ந்தும் பாடினார்.

அவன் என்னமோ சொன்னானே 'சங்கதி, அதெல்லாம் போட்டுப் பாடு என்றார். அவரும் பாடி விட்டு' 'இந்தப் பாட்டு அற்புதம், என்றார். பத்துக் கீர்த்தனைகளை மொழிபெயர்த்துக் கவிதாமண்டலத்தில் வெளியிட்டோம்.

பாரதியைப் பற்றிப் பாவேந்தர் பேசத் தொடங்கினால், உண்மை இதயத்தின் ஆழத்திலிருந்து பீறிட்டுக் கொண்டுவரும். மேடையேறிப் பேசும்போது யாருக்கும், எதற்கும் அஞ்சாமல் உண்மையை அப்படியே பேசவேண்டும் என்பது அவர் கொள்கை. அக்கொள்கையை அவர் அப்படியே கடைப்பிடித்ததோடு, எனக்கும் அதே கொள்கையை ஆலோசனையாகவும், எச்சரிக்கையாகவும் வழங்கினார்.

1937-ஆம் ஆண்டு புதுச்சேரி தொழிலாளர் இயக்கத்தின் வேகமான நாட்கள், அப்போது என் பேச்சில் சூடு அதிகம் என்பார்கள். தூவ்போ வீதியும், மகாத்மா காந்தி வீதியும் சந்திக்கும் முனையில் அந்த நாளில் ஒரு வெற்றிலை-பாக்குக்கடை இருந்தது. அதன் சொந்தக்காரர் சந்திரன் என்பவர். அந்தப் பெட்டிக்கடைதான் பாவேந்தரும் அவர் நண்பர்களும் சந்திக்கும் அரசியல் தலைமையகம்.

வாத்தியார் வந்துவிட்டால் எத்தனை மணி நேரமானாலும் சந்திரன் இருக்கையில் அமரமாட்டார். பாவேந்தர் மேல் அவருக்கு அப்படி ஒரு பக்தி. பாவேந்தர் பள்ளிப் பணியை முடித்துக்கொண்டு நேரே வீட்டுக்குப் போகமாட்டார். அந்த வெற்றிலை-பாக்குக்கடையில்

வந்து உட்கார்ந்து, நடப்பு அரசியலைப் பற்றிய விவகாரங்களை அலசி ஆராய்ந்து கொண்டிருப்பார். அவருடைய அரசியல் நண்பர்கள் செய்திகளைத் தாங்கிவரும் புறாக்களைப் போல் தொப்புத் தொப்பென்று அவ்விடத்தில் தோன்றுவார்கள். அவர்கள் கொண்டு வந்திருக்கும் செய்திக்குத் தக்கவாறு சிலிர்த்துக் கொள்வார்கள்.

பாவேந்தர் அத்தகையவர்களைப் பார்த்து, 'என்னா ஆசாரி சிலுத்துக்குது! என்ன விஷயம்?' என்பார்.

'அவன் என்னா நினைச்சுக்கினு இருக்கான் தெரியிலெ' என்பார் ஆசாரி.

'அவன்! இன்றைய யார் அவன்?

என்று தமக்கே உரிய பாணியில் கேட்பார் பாவேந்தர்.

'நல்ல காலம். கையிலே அப்போ பரங்கு[1], இல்ல. இருந்தா தம்பி இந்நேரம் பெள்ளவாரிக்குப் போயிருப்பார்'-இது ஆசாரியின் பதில்.

பாவேந்தர் 'அட! என்னாப்பா இவன் யாருன்னு சொல்ல மாட்டேன்கிறான்!' என்று மடக்கி எதிரி முகாமின் உள்நடப்புச் செய்திகள் பலவற்றை அவர்கள் வாயிலாகத் தெரிந்து தொள்வார்.

அந்தக் கடையில் அவர் ஒருநாள் அரசியல் விசாரணையில் ஈடுபட்டிருந்தபோது நான் ஒரு பொதுக்கூட்டத்திற்குப் போவதற்காக அவ்வழியே நடந்து சென்றேன். என்னுடன் ஒரு சிறு கும்பல் வந்து கொண்டிருந்தது; கவிஞரைக் கண்டதும் கூட்டத்தை ஒதுக்கி விட்டு நான் அருகில் சென்று எனது வணக்கத்தைச் சொன்னேன். 'கூட்டத்திற்குப் போகிறேன்' என்றேன்.

'ஊம் போ போ! நல்லாப் பேசறீன்னு சொன்னாங்க. நல்லாப் பேசுப்பா! நீ சொல்றதைத்தா ஜனங்க கேட்பாங்க, அந்த வெண்டைக்கா முதலி எல்லாம் இலக்கணத்தோட வெகு நல்லாத்தான் பேசுவாங்க. ஆனால், ஜனங்க கேட்க மாட்டாங்க.

ஏன் தெரியுமா? நீ உண்மையைப் பேசற. ஒன்னு சொல்றேன் உனக்கு! மேடையில் ஏறினா உண்மையே பேசு. ஏன் தெரியுமா? உன்னிடம் படிப்பில்லை-பணமுமில்லை. அவனெல்லாம் படிப்பால தப்பிச்சுக்குவான். மற்றவன் பணத்தால் தப்பிச்சுக்குவான். நீ உண்மையாலதான் நிலைக்கணும்' என்றார் பாவேந்தர்.

---

1) பரங்கு-குத்துவாள். 2) பெள்ளவாரி-புதுச்சேரி சுடுகாடு

இன்னும் அந்தச் சொற்கள் என் காதில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன. இது நட்ட நடுத்தெருவில், ஒரு கும்பலை வைத்துக் கொண்டு அவர் எனக்கு இட்ட கட்டளை என்றே சொல்லுவேன் அவரது கொள்கை மேடையேறிப் பேசும் போது உள்ளத்தை அப்படியே கொட்டுவது.

*

1940-ஆம் ஆண்டு. 18 மாதங்கள் சிறையில் கழித்துவிட்டு, நான் விடுதலைபெற்று வெளியேறிய நேரம். விடுதலை பெற்று வெளியில் வந்ததும், அன்று மாலை பாவேந்தரைப் பார்ப்பதற்காகச் சென்றேன். மிஷன் வீதியில் மயிலம் மடத்துக்கு எதிரில் முனைப் பங்களா வீட்டில் பாவேந்தர் குடியிருந்தார்; என்னைக் கண்டதும் துள்ளி வந்து கைகளைப் பிடித்து வரவேற்றார்.

'சிறையில் உனக்கு அதிகத் தொந்தரவு கொடுத்தார்களாமே!' என்றெல்லாம் விசாரித்துத் தனது உள்ளக் குழைவினை உணர வைத்தார். சிறையில் இருக்கும் போது, வெளியிலிருந்து வரும் செய்திகள் பலவாறாகக் கூட்டியும் குறைத்தும், வேறு வடிவம் பெற்றும் வரும். அவ்வாறு வந்த செய்திகளில் ஒன்று, திருவாளர் செல்லன் நாயக்கர் அவர்கள் எங்கள் இயக்கத்துக்கு விரோதமாகப் பல காரியங்களைச் செய்தார் என்பது. நான் பொதுக்கூட்டங்களில் வழக்கறிஞர்களைத் தாக்கிப் பேசிய காரணத்தால் என் மீது சுமத்தப்பட்ட எந்த வழக்குக்கும், எந்த வழக்கறிஞரும் ஆஜர் ஆகக்கூடாது என்று வழக்கறிஞர்கள் மன்றத்தில் ஸ்ரீமான் நாயக்கர் கூறினார் என்பதே அச்செய்தி, அதைப் பற்றியும் அம்மன்றத்தின் முடிவினை மீறி, ஸ்ரீமான் சவரிநாதன் என்ற வழக்கறிஞர் எனக்காகப் பேச முன் வந்தது பற்றியும் இன்னும் வேறுபல செய்திகள் பற்றியும் நானும் பாவேந்தரும் நெடுநேரம் வரையில் பேசிக் கொண் டிருந்தோம்.

"நீங்கள் கூடச் செல்லன் நாய்க்கரை ஆதரித்ததாகச் சிறைக்குள் செய்தி அடிபட்டது" என்று நான் பாவேந்தரைப் பார்த்துக் கூறினேன். அவர் மீது இப்படி யாராவது சொன்னால், அதை எப்போதும் பெரிதாக எடுத்துக் கொள்ளமாட்டார். அத்தகைய கட்டுக் கதைகளின் கர்த்தா யாரென்று யூகித்துக் கொண்டு 'இது அவன் வேலை' என்று மட்டும் சொல்வார். இது என்னைப் பற்றிய விவகாரமாதலால் வழக்கத்துக்கு மாறாகப் பதட்டம் கொண்டார்.

"எவன் சொன்னான்? செருப்பால் அடி! ஏம்பா! இதோ ஒன்றரை வருடம் சிறையில் கழித்து வந்து நிக்கற உனக்குப் பாதகமாய்

பேசறவனோட நான் ஒத்து இருப்பேனா? அந்தச் செல்லான் நாயக்கர் ஒணணும் பூதமல்ல, ஒரு வேளை அவர் ஆட்சிக்கே வந்துட்டா, அந்த ஆட்சியை 24 மணி நேரத்தில் கீழே இறக்கிவிட எங்கிட்ட சரக்கிருக்குது" என்று ஆவேசப்பட்டுப் பேசினார் பாவேந்தர்.

பிறகு சில தினங்கள் கழித்துக் கூப்பிட்டனுப்பினார். சினிமாவுக்குப் பாட்டெழுத ஒரு வாய்ப்பு வந்திருக்கிறது. டி.கே. சண்முகம் கம்பெனியார் படம் எடுக்கிறார்கள். "நீ வர்ரியா? வாயேன். இவ்வளவு நாள் சிறையில் கிடந்தையே! வா போயிட்டு வருவோம்" என்றார்; சரி என்றேன். அடுத்த இரண்டு தினத்தில் புறப்பட்டோம்.

ஈரோட்டில் படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தது. பாட்டெழுத வேண்டிய படம் 'பாலாமணி அல்லது பக்காத் திருடன்! பெரியாருடைய வீட்டில் பத்துப் பதினைந்து நாட்கள் தங்கியிருந்தோம்.

பல தினங்கள் காலை எழுந்தவுடன் பெரியாரைப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அவர் ஊரில் இல்லாத நாட்களில்தான் பார்க்க முடியாது. பெரிய வாசலில் ஓர் ஓரத்தில் உட்கார்ந்து, அவரது பற்களைக் கழற்றிச் சுத்தம் செய்து கொண்டிருப்பார்; மிகவும் சுறுசுறுப்பாக இருப்பார்.

"வாங்க வாங்க! வாங்க ஐயா! நல்லா தூக்கம் வந்துதா? ஒன்னும் அசௌகரியமில்லையே! படம் புடிக்கறாங்களா?" என்று பரிவோடு பாவேந்தரை விசாரிப்பார் பெரியார். பிறகு, தமது தங்கையை அழைத்து, 'ஐயா பாரதிதாசன் வந்திருக்காங்க என்பார், பாவேந்தரும் யாரிடத்திலும் காட்டாத அடக்கத்தோடும், மரியாதையோடும் நடந்து கொள்வார். மற்றவர் யாரானாலும் பாவேந்தர் தான் முன்னே பேசுவார். பெரியார் ஒருவரிடம் மட்டுந்தான்-அவர்பேசட்டும் என்று பௌவியத்தோடு காத்திருப்பார். பெரிய குடும்பத்தில் தந்தையாரிடம் சிறு பிள்ளைகள் பேசும்போது, அன்பும் பாசமும் பக்தியும் கொந்தளிக்குமே அதுமாதிரி இருக்கும்.

இலை போடுவார்கள். பெரியார் 'உட்காருங்கோ!' என்பார். ஒன்றும் பேசாமல் சாப்பிடுவோம். காலை ஆறு மணிக்கே எங்கள் காலைச் சிற்றுண்டி ஏற்பாடு செய்யப்படும். பாவேந்தர் இரவில் எவ்வளவு நேரம் விழித்திருந்தாலும், எழுவது மட்டும் அதிகாலையில் எழுந்து விடுவார். காலையில்தான் மிகத் தெளிவாக இருப்பார். எதையும் மகிழ்ச்சியோடு பார்த்துக் கொண்டே சில சமயங்களில் படுக்கையிலே உட்கார்ந்து கொண்டு தலையணை ஒன்றை முன்பக்கம் வைத்துக் கொள்வார். எதையோ நோக்கிக் கொண்டிருப்பார். பேசுவதில் கூடத் தனி மகிழ்ச்சி தென்படும். பாட்டெழுதுவதும்

கூடக் காலையில்தான். இவ்விடத்தில் பாவேந்தரைப் பற்றி ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

புதுச்சேரி அரசியலில் அவரது திறமையான எதிர்ப்பைச் சமாளிக்க முடியாத பொறாமைக்காரர்களும், அவரது தமிழ்வாள் வீச்சின் முன் நிற்க முடியாதவர்களும் அவரைக் கொள்கை ரீதியில் எதிர்க்க முடியாமல் அவர் குடிக்கின்றார் என்ற குற்றச்சாட்டைத் தொடங்குவார்கள். அவ்வாறு பாவேந்தரைக் குறை கூறுபவர்களுள் பலர் பீப்பாய்க் குடியர்கள். அவர் காலத்துப் புதுச்சேரி அரசியல் தலைவர்கள் எல்லாரும் குடிப்பவர்கள் தாம். புதுச்சேரி மண்ணில் குடியின் வேர் ஆழமாக ஊன்றிக் கிடக்கின்றது. மன்றோரம் சொன்னார் மனையில் வேதாளம் சேரும்; வெள்ளெருக்குப் பூக்கும் என்பார்கள். குடிவோர் விட்ட வீடும் குட்டிச்சுவராகிக் கிடக்கும் என்பதற்குப் பல சான்றுகள் புதுச்சேரி நகரத்தைச் சுற்றிக் கிடக்கும்.

பாவேந்தரின் அரசியல் பகைவர்கள் 'அவர் குடியில் இருக்கிறார்; குடித்தால் தான் பாட்டெழுதுவார்; அவர் குடிப்பதற்கு அளவேயில்லை!' என்றேல்லாம் பேசுவது வழக்கம். நான் பாவேந்தரை அருகிருந்து நீண்ட நாள் பார்த்தவன். அவர் சில சமயங்களில் குடிப்பதுண்டு. தினமும் குடித்தாக வேண்டும் என்ற நிலை அவருக்குக் கிடையாது.

குடித்து விட்டுப் பாட்டெழுதும் பழக்கம் அவரிடத்தில் இல்லை. 'சீச்சி! குடித்துவிட்டுப் பாட்டெழுதுவதா?' என்று ஒரு முறையன்று, பலமுறை பாவேந்தர் கூறியிருக்கிறார்.

கண்ணதாசன், கம்பதாசன் போன்ற கவிஞர்கள் Mood உண்டாகக் குடிப்பதாகச் சொல்லிருக்கிறார்கள். பாவேந்தருக்குப் பாட்டெழுத அவ்வித Mood ஒன்றும் வேண்டுவதில்லை.

எழுதத் தொடங்கினால் கையில் உள்ள சிகரெட் வாய்க்குப் போகாது. கொளுத்திய சிகரெட் ஒரு தடவை ஊதியது. மறுதடவை ஊதாமல் அப்படியே கையிலேயே சாம்பலானதைப் பலமுறை பார்த்திருக்கிறேன். அவர் எழுந்து தெளிவான உணர்விலிருந்து வருவது. நமக்கு நடக்கப் போகும் நிகழ்ச்சி அவருக்கு எப்போதோ உணர்வில் தோன்றிவிடுகிறது.

'வார்த்தைகள் அவரிடம் கைகட்டி நிற்கும்' என்று வ.ரா.சொல்லுவார்; உணர்வும் அப்படித்தான்.

சில கவிஞர்களுக்கு உணர்ச்சி தள்ளுவண்டி போன்றது. பீடி, சிகரெட், சாராயம், கஞ்சா ஆகியவற்றைப் போட்டால் தான் அவர்கள் கவிதை வண்டி நகரும்.

சிலர் சூழ்நிலையைத் தயாரித்து எப்போதும் தங்களை அதில் வைத்துக் கொண்டிருந்தனர். தாகூரும், மேலை நாட்டுக் கவிஞர் சிலரும் அப்படித்தான். ஆனால் பாரதிதாசன் முற்றிலும் மாறுபட்டவர். அவர் எப்போதும் தெளிந்த உணர்வு நிலையிலேயே இருப்பார். இன்னும் அவருடைய சொற்களால் சொன்னால் 'நடைப்பிணங்கள் மத்தியிலே, வறுமையென்னும் தொல்லையிலே' அவர் தமது உணர்வை மங்கவிட்டதில்லை; கற்பனையைத் தேடி அலைந்ததில்லை.

*

காலைப் பத்திரிகை வந்தது. 'குவட்டாவில் பூகம்பம்' என்ற முழுத்தலைப்பு முன்பக்கத்தை ஆக்ரமித்துக் கொண்டிருந்தது, சென்னை ஆரிய சமாஜத் தலைவர் பண்டிட் ஞானி என்பவர் பூகம்பத்தால் இறந்து போனார் என்ற செய்தியும் வெளியாகியிருந்தது. 'இந்த ஞானி இருக்கானே ரொம்ப நல்லவன்; எனக்கு ரொம்ப வேண்டியவன்' என்றார் பாவேந்தர்.

'இந்த மாதம் கவிதா மண்டலத்துக்குக் குவட்டா பூகம்பமே தலையங்கமாக இருக்கலாம்' என்று கூறினேன் நான்.

காலை ஏழு மணிக்குப் பத்திரிகை அலுவலகத்திலேயே உட்கார்ந்து எழுதினார். அவர் எழுதத் தொடங்கினால் அடித்தல் திருத்தல் ஒன்றும் இருக்காது. முடிந்த கவிதையை 'இந்தா' என்று மெதுவாகத் தூக்கி எறிவார்; பிறகு அதைப் பார்க்க மாட்டார்.

அந்தக் குவட்டா கவிதையில் ஓர் உவமை-'பானை வெடிக்கையிலே பருக்கை தப்புவதுண்டோ?' உலகக் கவிஞர்களுள் எவரும் கையாளாத உவமை இது. அவருக்கே சொந்தமான, இரவல் வாங்காத தழுவல் இல்லாத கற்பனை!

பாவேந்தரின் கற்பனைகளும், உவமைகளும் மிக அற்புதமானவை. அவற்றைச் சுவைத்து மகிழ்வதை விட்டு விட்டு, அவருடைய சொந்தப் பலஹீனங்களை வெளிச்சம் போட்டுக் காட்டுபவர்கள் அறிவில்லாதவர்கள். ஒரு கவிஞனின் தனிப்பட்ட வாழ்க்கையையும் அவன் படைப்பையும் ஒப்பிட்டுப் பேசுவது பொருத்தமற்றது. குயிலின் தோற்றத்துக்கும் அதன் குரலுக்கும் என்ன சம்பந்தம்? கவிஞனைக் காணத் தெரியாத கபோதிகள், தங்களுடைய கையாலாகாத் தனத்தை, அவர் மீது புழுதிவாரி இறைத்து மெய்ப்பித்துக் கொள்கிறார்கள்.

இனி ஈரோட்டில் திரு.டி.கே.சண்முகத்தின் ஒத்திகைச் சாலைக்குச்

செல்வோம். கதையில் எந்தெந்த இடங்களில் பாட்டு வேண்டும் என்று ஷண்முகம் சொல்வார்; மெட்டையும் பாடிக் காட்டுவார்.

ஐந்தே நிமிடங்களில் பாட்டு தயாராகிவிடும். டி.கே.எஸ் மகிழ்ச்சியில் திகைத்து நிற்பார். ஒத்திகையின் போது பாட்டின் அழகுதான் எல்லாருடைய வாயிலும் அடிபடும்.

பாரதிதாசன் சினிமாவுக்குப் பாட்டெழுதுவது அதுதான் முதல் தடவை. ஒரு நாள் படம் எடுக்கும் காட்சியைப் பார்க்க என்னை அழைத்துப் போனார். அடிபட்ட ஒருவர் ஆற்றில் உருண்டுவரும் காட்சியைப் படமாக்கிக் கொண்டிருந்தனர். அக்காட்சியில் நடித்தவர் திரு. சகஸ்ரநாமம். அவருக்கும் அதுதான் முதற்படம். அவரது நடிப்பைப் பாவேந்தர் மிகவும் பாராட்டினார்.

அந்தப் படத்தின் இயக்குநர் திரு.ராவ் என்பவர்; நல்ல திறமை வாய்ந்தவர். ஒத்திகையின் போது அவர் நடித்துக் காட்டியதைக் கவிஞர் பெரிதும் பாராட்டி மகிழ்ந்தார். திரு. ராவ் ஒரு நல்ல குடியர். ஒத்திகையில் ஐந்து நிமிடத்துக்கு ஒருமுறை உள்ளே போய் ஒரு கோப்பை குடித்துவிட்டு வருவார். பாரதிதாசனுக்கு அதைப் பொறுக்க முடியவில்லை. 'என்னப்பா இவன் இப்படிக் குடிக்கிறான்?' என்று அவர் எதிரிலேயே கூறினார்.

ஏதோ ஓர் இரண்டாந்தர நடிகை தனக்குப் படத்தில் பாட்டுவேண்டும் என்று பிடிவாதம் செய்தாள். பாவேந்தர் 'இந்தப் பெண்ணுக்குப் பாட்டு நன்றாயிருக்காது' என்றார்.

உண்மைதான்! என்ன செய்வது? இந்த டைரக்டரின் பரிவு அவளுக்கு அதிகம்; அதனால் பிடிவாதம் செய்கிறாள். 'நீங்கள் பாட்டை எழுதிக் கொடுத்து விடுங்கள்' என்றார். டி.கே.சண்முகம்.

'அப்போ, படம் கண்றாவியா இருக்கும்' என்றார் பாவேந்தர்.

"அந்தப் பாட்டைப் பின்னால் வெட்டி விட்டால் போகிறது. அவசியமானால் அவள் சம்பந்தப்பட்ட காட்சி முழுவதையுமே வெட்டிவிட வேண்டியது தான்" என்றார் சண்முகம்.

அதைக் கேட்டதும் மனத்தில் சிறிது வேதனை அடைந்தார் பாவேந்தர். "பார்த்தியா சினிமா உலகம் எப்படியிருக்கிறது? எவ்வளவு செலவழித்துப் படம் எடுக்கிறான்! பின்னர் முழுவதையும் வெட்டி விடலாம் என்கிறானே! எத்தனை ஊதாரித்தனம்" என்று கூறி வருந்தினார்.

ஒரு நாள் பாரதிதாசன் அவர்களிடம் ஐம்பது ரூபாய் கொண்டுவந்து கொடுத்தார்கள். அதைப் பெற்றுக் கொண்டு நானும் அவரும் தனியே

உலாவப் போனோம். 'பார்த்தியாப்பா! தமிழுக்கு எவ்வளவு நல்ல காலம்! ஐம்பதுரூபாய் கொடுக்கிறானே!' என்றார்.

"நன்றாய்ச் சொன்னீர்கள். அவர்கள் ரூபாய் 500/- கொடுத்திருப்பார்கள். உங்கள் கைக்கு வரும்போது அது ஐம்பதாகிவிட்டது. அதற்கே நீங்கள் இவ்வளவு சந்தோஷப்படுகிறீர்கள்" என்று நான் சொன்னேன்.

"சே!சே! அப்படியெல்லாம் இருக்காது-பாவேந்தருக்கும் படக்கம்பெனிக்கும் தொடர்பு ஏற்படுத்திய நபரின் பெயரைச் சொல்லி-அவன் அப்படியெல்லாம் செய்யமாட்டான்" என்றார்.

சில மாதங்கள் கழித்து ஒருநாள் "சுப்ரமணியம்! நீ சொன்னது சரி, அந்தப் படக்கம்பெனியிலிருந்து பாட்டுக்காக அவன் ரூ.500/- தான் வாங்கியிருக்கான். நம்ம கிட்ட ஐம்பதுதான் கொடுத்தான்" என்றார் பாவேந்தர்.

*

1935-ஆம் ஆண்டில் ஒருநாள் திடீரென்று எழுத வேண்டும் என்றார் பாவேந்தர். காகிதம் எழுதுகோல் கொண்டுபோய் வைத்தேன். எழுதிக்கொண்டே இருந்தார்; மதியம் உணவுக்குக்கூட எழுந்திருக்கவில்லை. சுமார் மூன்று மணிக்கு முடித்தார். ஓர் அழகான சிறுகதை உருவாகியிருந்தது.

"இதை ஆனந்த விகடனுக்கு அனுப்பு" என்றார்; அனுப்பி வைத்தேன்.

"அவன் அதை ஏதாவது போட்டானா?" என்று வாரா வாரம் விசாரிப்பார். இரண்டுவாரங்கள் கழிந்தன. "அவன் அதைப் போடவில்லையென்றால் திருப்பி அனுப்பி விடச்சொல்லி எழுது" என்றார்; அப்படியே எழுதினேன். மீண்டும் ஒரு நினைவூட்டுக் கடிதமும் எழுதினேன். ஆனந்தவிகடனிடமிருந்து பதில் ஏதுமில்லை. அக்கதையை வெளியிடவுமில்லை. நினைக்கும் போதெல்லாம் பாவேந்தருக்குக் கோபம் வரும். ஏன் இப்படிச் செய்யறானுங்க! பாரதியார் எழுத்தை இப்படித்தான் பாழடித்தானுங்க!" என்பார் அவர்.

ஒரு வருடத்துக்குப் பின்னால் ஒரு நாள் காரசாரமாக ஆனந்த விகடனுக்கு ஒரு கடிதம் எழுதி, அவரே கைப்பட முகவரியும் எழுதி என்னிடம் கொடுத்து 'இதை அனுப்பு' என்றார்; அனுப்பி வைத்தேன்.

ஒன்றிற்கும் பதில் இல்லை. பல வருடங்களுக்குப் பின்னால் கூட அதே நினைவுதான். அது அழகுணர்ச்சியோடு எழுதப்பட்ட காதல்

கதை; ரோமியோ ஜூலியட் கதை போன்றது. காதலி புதைக்கப்பட்டதறகுப் பின்னால் காதலன் சமாதிக்கு வந்து கதறுவதும், தோண்டிப் பார்ப்பதும் அதன் பின் அந்த அழுகல் சதைக்கா, சீழுக்கா ஆசை வைத்திருந்தேன் என்று விரக்தியடைவதும் போன்ற கருத்துக்கொண்ட கதை. அற்புதமான வசனங்கள். ஆனந்த விகடனும் வெளியிடாமல் மற்றவர்க்கும் பயன்படாமல் போயிற்று ஓர் அழகுக் கதை.

*

புதுச்சேரியில் எழுபது ஆண்டுகளுக்கு முன்னால் திருப்புளிசாமி ஐயா என்பவர் பெரிய தமிழ்ப் புலவர். பாவேந்தர் அவரிடம் தமிழ் பயின்றார். திருப்புளிசாமி ஐயாவின் மகன் கிருஷ்ணமூர்த்தி என் வகுப்புத் தோழன். பள்ளியை விட்டவுடன் அவன் சென்னைச் சித்திரச்சாலையில் சேர்ந்து நல்ல தேர்ச்சி பெற்றான்; சிலை வடிக்கும் கலையில் தனித்திறமை பெற்றான்.

"தலைப்பாகை இல்லாமல் பாரதியார் எப்படியிருப்பார்?" என்று நான் கேட்ட போது, "தலை வழுக்கையுடன், முண்டாசு இல்லாத பாரதி மிகவும் அழகாயிருப்பார். பாரதி முண்டாசு அணிந்ததே தலை வழுக்கையை மறைக்கத்தான்" என்றார் பாவேந்தர். அத்தகைய தோற்றத்தில் பாரதியின் உருவச்சிலை ஒன்றை அமைத்து விடவேண்டும் என்று எங்களுக்கு ஓர் ஆசை பிறந்தது.

ரூ.500/- திரட்டிக் கிருஷ்ணமூர்த்திக்கு முன் பணம் கொடுத்தோம். சிலை வடிக்கும் பணி துவங்கியது. பாவேந்தர் காலையும் மாலையும் கிருஷ்ணமூர்த்தி வீட்டுக்குப் போவார். சிலையின் முன்னேற்றத்தை மிகவும் அக்கறையோடு கவனிப்பார்; ஏதாவது மாறுதல் வேண்டுமென்றால் கூறுவார்.

பாரதியின் வழுக்கைத் தலைக்கு ஒரு 'மாதிரி' (Model) தேவைப்பட்டது. பாவேந்தரின் நண்பர் குயில் சிவாவின் அண்ணன் திரு.சிவக்கொழுந்து நாயக்கரின் தலை ஏறக்குறைய பாரதியார் தலை மாதிரிதான் இருக்கும் என்று கூறினார் கவிஞர். 'வா. அவரிடம் போவோம்' என்றார் கிருஷ்ணமூர்த்தி. கிருஷ்ணமூர்த்தி, பாவேந்தர், நான் ஆகிய மூவரும் சிவக்கொழுந்து நாயக்கர் வீட்டுக்குப் போனோம். வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருந்த சிவக்கொழுந்து நாயக்கர் பாவேந்தரை வரவேற்றார். மூவரும் எதிர்த் திண்ணையில் அமர்ந்தோம்.

பாவேந்தர், "அண்ணே! இந்தத் தம்பி (கிருஷ்ணமூர்த்தியைக் காட்டி) திருப்புளிசாமி வாத்தியார் இருந்தாரே அவர் மகன்; சிலை செய்வதில்

மிகக்கெட்டிக்காரன்; பாரதியார் சிலையைச் செய்துகிட்டிருக்கான். செத்த கொஞ்ச திரும்பேன்; தலையை மட்டும் காட்டேன்; வேறெதையும் காட்டாதே! (நகைத்தல்) உன் தலை பாரதியார் தலையாட்டம் இருக்குதாம்." என்றார். நாயக்கர் சிரித்துக் கொண்டே திரும்பி உட்கார்ந்தார். கிருஷ்ணமூர்த்தி சில நிமிடங்களில் அவரது தலையின் வழுக்கைப் பகுதியை மிக அழகாகப் படம் பிடித்தது போல் எழுதிவிட்டான்.

சுமார் இரண்டு மாதங்கள் தினமும் காலையில் பள்ளிக்கூடம் போகும் போதும் 11-30க்குப் பள்ளிவிட்டுத் திரும்பி வரும் போதும் சிலையைப் பார்ப்பார். அந்தச் சிலையை உருவாக்குவதில், கவிதை எழுதும்போது சிகரெட் கூட ஊதாமல் எப்படி உணர்ச்சியின் உருவாய் இருப்பாரோ, அவ்வித உணர்வோடு இருப்பார். வேறு எதிலும் அவ்வித அக்கறை காட்டியதை நான் கண்டதில்லை.

சிலைப்பணி நடந்து கொண்டிருந்த போது எனக்கு மூன்றாண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. 18 மாதங்கள் சிறையில் கழித்து விட்டு நான் வெளியே வந்தபோது. அந்தச் சிலையைச் சக்தி கோவிந்தன் அவர்களுக்கு விற்று விட்டதாகக் கூறினார்கள். நான் வேதனைக் கடலில் ஆழ்ந்தேன். பாவேந்தரும் இவ்வளவு சிரமப்பட்டு உருவாக்கியது போய்விட்டதே என்று அங்கலாய்த்தார்.

அண்மையில் விசாரித்ததில் சிலை சக்தி கோவிந்தன் அவர்கள் வீட்டில் இல்லை என்று தெரிந்தது. காரைக்குடியில் யார் வீட்டிலோ பாரதியார் என்று தெரியாமல் ஓர் அலங்காரப் பொருளாக அது இருக்கும் என்று நினைக்கிறேன்.

புதுச்சேரித் தொழிலாளர் இயக்கத்தைத் தொடக்கத்திலிருந்து பாரதிதாசன் ஆதரித்து வந்தார். ஆலைத்தொழிலாளர்கள் பலர் திராவிடர்க் கழகத்தைச் சேர்ந்தவர்கள். கைத்தறி நெசவாளர்கள் பலர் திராவிடர்க் கழகத்தைச் சேர்ந்தவர்கள். ரோடியர் மில் தொழிலாளர்களின் தலைவர் திரு.சுந்தரராசு உறுதி மிக்க திராவிடர்க் கழகத்தவர். அரங்கேசன் என்பவரும் அப்படித்தான். திரு.அரங்கேசன் அடிக்கடி பாவேந்தரைச் சந்தித்து இயக்க நிலைமையை எடுத்துக்கூறுவார். தொழிலாளர் இயக்கத்தை எதிர்த்து வந்தவர்களைப் பாவேந்தர் பல வருடங்களாக எதிர்த்து வந்திருக்கிறார். நாங்கள் இளைஞர்கள்; அனுபவமில்லாதவர்கள் நாங்கள் எங்கு ஏமாந்து விடுவோமோ என்ற கவலை அவருக்குண்டு.

அந்நாளையத் தொழிலாளர் இயக்கத்தின் குறிக்கோள்

தொழிற்சங்கம் அமைத்துக் கொள்ள உரிமைகோருவது தான். தொழிற்சங்கம் அமைக்க முன் வருபவர்களுக்கு இரண்டு ஆண்டுகள் தண்டனை கிடைக்கும் வகையான சட்ட அமைப்பு அன்றையப் புதுவை அரசியலில் இருந்தது. அந்தச் சட்டத்தை எதிர்த்து, மீறித் தொழிலாளர் ஒன்றுபட்டு அப்போது போராட்டம் நடத்தினர். 1936-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30 ஆம் தேதி உள்ளிருப்பு வேலை நிறுத்தம் நடத்திக் கொண்டிருந்த தொழிலாளர் மீது, வெளியிலிருந்த போலீசார் யந்திரத் துப்பாக்கியால் சுட்டனர். அத்துப்பாக்கிச் சூட்டில் 15 பேர்கள் உயிரிழந்தனர். ஆலையும் தீப்பற்றி எரிந்தது. மக்களும் தொழிலாளர்களும் கொதிப்பான மனநிலையில் இருந்தனர். டிசம்பர் மாதத்தில் தாவீது என்பவர் சுடப்பட்டார். அரசியல் கண்ணோட்டத்தில் அந்நிலையில் தோழர் வ.சுப்பையாவும், வழக்கறிஞர் சவரிநாதனும் தொழிலாளர் சார்பில் பாரிஸ் சென்று பிரான்ஸ் நாட்டு அமைச்சரவையை அணுகினர்.

இவர்கள் பாரிஸ் சென்று திரும்பியதன் பயனாகப் புதுவைக்குத் தொழிற்சங்க உரிமைகள் கிடைத்தன. பிரான்ஸ் நாட்டு முன்னேற்றமான தொழிற்சட்டங்களும் இங்கு அமுல்படுத்தப்பட்டன. மேற்படி சட்டங்களின் நகல் ஒன்றைத் திரு. சுப்பையா பாரிஸிலிருந்து அனுப்பி வைத்தார். பிரெஞ்சு மொழியில் இருந்த அதனைப் புதுவைத் தொழிலாளர்கள் புரிந்து கொள்ள ஆவல் கொண்டனர். அப்போது இரவு பகலாகக் கண்விழித்துப் பாவேந்தர் அதனைத் தமிழாக்கிக் கொடுத்தார். இப்பணியில் திருவாளர் ராமானுஜம், வாத்தியார் கண்ணுசாமி ஆகியோர் உடனிருந்து உதவி புரிந்தனர். சட்டத்தைத் தமிழில் செய்தால் அது வறட்டுப் பாறையாக இருக்கும். ஆனால் பாரதிதாசன் தமிழாக்கம் செய்ததால் அது தனிச்சுவையோடு இருந்தது என்பேன். அரும்பாடுபட்டுக் கிடைத்த அந்த உரிமையை மக்களுக்கு வழங்குவதில் அவருக்கு அளவிலாத மகிழ்ச்சி.

பாரீஸ் பயணம் முடித்து திரு. சுப்பையா ஜூலை மாதத்தில் புதுவை திரும்பினார். அப்போது ஓர் அற்புதமான வரவேற்புக் கவிதை எழுதித் தந்தார் பாவேந்தர். "அழிவார்கள் என்றிருந்த அந்த நிலைமாற்றித் தொழிலாளர் என்ற நிலைக்குக் கொண்டு வந்தாய்" என்பது அப்பாட்டில் ஒரு வரி. அவரது உள்ளப் பூரிப்பை அந்த வரவேற்பில் காண முடிந்தது.

சக்தி வாய்ந்த போராட்டமும், அதனை அடக்க அரசு எடுத்த கடுமையான அடக்குமுறையும், துப்பாக்கிச் சூடும், மக்களின் மகத்தான தியாகமும் சிறிய புதுச்சேரியில் புதிய புரட்சிச்

சூழ்நிலையை உருவாக்கின. ஆளுங்கட்சியினர் இராஜிநாமா செய்யவேண்டும் என்று புதுவை மக்கள் கோரிக்கை விட்டனர். ஆயிரம் சைக்கிள்களில் இளைஞர்கள் ஒவ்வொரு சட்டசபை உறுப்பினர் வீட்டுக்கும் போய் இராஜிநாமா கேட்டனர். என்ன நடக்குமோ? துப்பாக்கிச் சூடு நடக்குமோ? என்று மக்கள் அச்சமும் பீதியும் கொண்டவர்களாய் இருந்தாலும், அதே நேரத்தில் இராஜிநாமாவைப் பெற்றாக வேண்டும் என்ற உறுதியும் கொண்டிருந்தனர்.

ஊர்வலம் நடந்த மறுதினம் மகாஜனக் கட்சியின் நிர்வாகக்குழு திவான் கந்தப்ப முதலியார் வீதியில் உள்ள நாட்டுக் கோட்டை நகரத்தார் சத்திரத்தில் கூடியது. முப்பது சட்டசபை உறுப்பினர்களின் இராஜிநாமாக் கடிதம் தோழர் சுப்பையா கைக்கு வந்தது. பாவேந்தரின் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. கூட்டத்தில் அவரால் உட்கார முடியவில்லை.

எழுந்து நின்றார். "எத்தனை வருஷமா? எத்தனை வருஷமா? என்னென்ன பாடுபட்டிருப்போம். அதில் எல்லாம் ஒன்றும் வரவில்லை. இதோ பாத்தியா!" என்று தோழர் சுப்பையாவின் கையில் இருந்த இராஜிநாமாக் கடிதங்களை வாங்கிக் கூட்டத்துக்குக் காட்டினார். மகிழ்ச்சியால் கூட்டத்தைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டே பேசினார். அதுபோல் அவர் தம்மை மறந்து மகிழ்ச்சியில் கூத்தாடியதை வேறு எங்கும் யாரும் பார்த்திருக்க முடியாது. அதைத் தமது சொந்த அரசியல் வெற்றியாகவே பாவித்து மகிழ்ந்தார் பாவேந்தர்.

1958-என்று நினைக்கிறேன். பூமிதான யாத்திரை செய்து கொண்டிருந்தேன். எங்கள் யாத்திரை சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் ஸ்டுடியோ வழியாகச் சென்றது. பாரதிதாசன் உள்ளே இருக்கிறார் என்று யாரோ வந்து கூறினார்கள். மற்றவர்களை அனுப்பிவிட்டு நான் உள்ளே போனேன். ஒரு பெரிய கூடம்-அதில் உயர்ந்த ரகக் கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. நான்கு அல்லது ஐந்து பேருடன் பாவேந்தர் உரையாடிக் கொண்டிருந்தார். எதிரே வெள்ளி நாணயங்களும் நோட்டுகளுமாக ஒரு சிறு குவியல் கிடந்தது. வழக்கம் போல் விரல்களை மடக்கியபடி சிகரெட்டை ஊதிக் கொண்டிருந்தார். நான் எதிரேபோய் 'வணக்கம்' என்றேன். ஏற இறங்க என்னைப் பார்த்தார்.

'வாப்பா! உட்கார்! எப்போ வந்தே? என்ன துணியெல்லாம் இப்படி?' (அப்போது காலை முதல் நடந்ததால் துணியெல்லாம் செம்மண்

படிந்திருந்தது.) என்று கேட்டார். நான் களைப்பாகவும் இருந்தேன் குளிர்நதபானம் கொண்டு வரச் சொல்லி கனிவோடு 'குடி குடி' என்றார். 'என்னா இப்படியெல்லாம் அலையறே!' என்று என் அருகில் குனிந்து 'என்ன பணம் கிணம் இல்லையா? வெட்கப்படாதே! இதோ!' என்று எதிரே கிடந்த குவியலைக் காட்டி 'உனக்கு வேண்டியதை எவ்வளவேனும் எடுத்துக்கப்பா!' என்றார்.

நான் பரவசமானேன். என் கையைப் பிடித்துப் பணத்தின் பக்கம் நகர்த்தினார். மறுபடியும், 'உனக்கு வேண்டியதை எடுத்துக்கப்பா' என்றார். அவரின் மனம் நான் நன்றாய் அறிந்தது-வார்த்தைகள் வெறும் உபசாரமல்ல-உண்மையிலேயே நான் ஏதாவது எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அவர் ஆசைப்பட்டார்.

எனது களைப்பான முகமும் எனது இயற்கைக்கு மாறான தூசி படிந்த ஆடைகளுமே அவரின் மனதை வேதனை அடைய வைத்தன போலும். பக்கத்தில் இருந்தவர்கள் எல்லாரும் எழுந்து கொண்டார்கள். பாவேந்தரின் மனதிற்கு, நான் இவ்வளவு உகந்தவன் என்று அவர்கள் கண்டதுதான் அவர்களை எழுந்து நிற்கச் செய்தது. எனக்கு அப்போது பணம் ஒன்றும் தேவையில்லை என்று அவரிடம் சொல்லி விடை பெற்றுக் கொண்டேன்.

பாருப்பா இந்தப் பிள்ளை, என்று அங்கிருந்தவர்களிடம் சொல்கிறார். நான் அந்த இடத்தை விட்டு அகன்றேன்.

1961-ஆம் ஆண்டு சென்னை ஆண்டர்சன் ஹாலில் தமிழ்ப் பயிற்சி மொழி மாநாடு நடந்தது. திருவாளர் சக்தி சீனிவாசன் (இப்போது A.I.R.இல் இருக்கிறார்) தான் ஏற்பாடுகள் யாவும் செய்தார்.

டாக்டர். மு. வரதராசனாரும் பாவேந்தரும் பேச வேண்டியவர்கள். ஏராளமான கல்லூரி மாணவர்கள் பேச முன் வந்தனர். இந்த இரு பெரும் அறிஞர்கள் பேசும்போது நான் தலைமை வகிப்பது எனக்கு வெட்கமாயிருந்தது. என் மனநிலையை உணர்ந்து கொண்ட பாரதிதாசன் என் பக்கத்தில் அமர்ந்தார்.

'பரவாயில்லை, பரவாயில்லை. நான் இருந்தால் என்ன? நீ பாட்டுக்குப் பேசு' என்றார். டாக்டர் மு.வ. பேசி முடித்தார். அடுத்துத் தாம் பேசிவிட்டுப் போய்விட வேண்டும் என்றார் பாவேந்தர். மாணவர் பலர் பேச வேண்டும் என்று உற்சாகமாயிருந்தனர். இவர் பேசி முடித்தால் கூட்டம் கலைந்துவிடும். 'நீங்கள் கடைசியாகப் பேச வேண்டும்' என்று சொல்ல எனக்குத் துணிவில்லை. பாவேந்தரின் மகன் மன்னர் மன்னன் பக்கத்தில் இருந்தார். 'அப்பா பேசிவிட்டால் கூட்டம் கலைந்துவிடும்;

அவரிடம் சொல்ல வேண்டும்' என்றேன். சொன்னதும் 'சரி, சரி' என்று அமர்ந்துவிட்டார்.

அன்று 'தாய் மொழியில் கல்வி' என்ற தலைப்பில் அற்புதமான பேச்சு. மு.வ.வின் தமிழ்ப்பணியைப் பாராட்டி விட்டு 'எல்லா நல்லா தாம் பண்றே. பின்ன ஏன் பயம்? எல்லாவிடங்களிலும் தமிழ் தான் வேண்டும்-என்று சொல்றது தானே? ஏன் தயக்கம்?' என்று மு.வ.விடம் கூறினார். நெஞ்சிலுற்றதை நேரில் கூறும் அவரது இயல்பினை மு.வ. மிக மிகப் பாராட்டினார்.

பாவேந்தர்-
ஒரு நினைவுச் சரம்

கவிஞர் சிற்பி

மைக்கேல் ஏஞ்சலோவும் லியனார்டோ டாவின்சியும் கவிதை பாடத் தெரிந்த சிற்பிகள். பாலசுப்பிரமணியம் பாட்டையே சிற்பமாய்ப் படைக்கும் கவிஞர்.

இவர் தோட்டத்தில் நிலவுப் பூக்களும் உண்டு; நெருப்பு மலர்களும் உண்டு.

ஒளிப் பறவையாய்ச் சிறகை விரிக்கும் உயர்ந்த கற்பனைகளுக்குச் சொந்தக்காரரான சிற்பி பாவேந்தரின் கடைசி கால நிகழ்ச்சிகளை நினைவு கூர்கிறார்.

1954-ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெள்ளி விழாக் கொண்டாடியது. அப்போது நான் தமிழ்ச் சிறப்பு வகுப்பு மாணவன்.

வணக்கத்துக்குரிய என் ஆசிரியரும், பாவேந்தரின் அன்பிற்குரிய மாணாக்கருமான கவிஞர் மு. அண்ணாமலை வாயிலாகப் புரட்சிக் கவிஞரைப் பற்றி (அப்போதெல்லாம் பாவேந்தரை அப்படித்தான் அழைப்பது வழக்கம்.) நிறைய நிறையக் கேட்டு மகிழ்ந்த நான் அவரைக் கண்ணாரக் காணக் கொதித்துக் கொண்டிருந்தேன். ஆனால் வெள்ளிவிழாவையொட்டிப் பாவேந்தரின் கவிதையை மட்டுமே படித்து நிறைவு கொள்ள வேண்டியதாயிற்று.

ஓரிரு மாதங்களில் ஒரு சிறப்பு நிகழ்ச்சிக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்ய நேர்ந்தது. வெள்ளி விழாவில் பல்கலைக்கழகத்தோடு தொடர்புடைய பலருக்குச் சிறப்பு டாக்டர்

பட்டம் வழங்கப்பட்டது. அவர்களில் ஒருவர் நாவலர் சோமசுந்தர பாரதியார். அவர் பட்டம் பெற்றபோது பட்டமளிப்பு விழா மன்றத்தில் எழுந்த கரவொலியும் மகிழ்ச்சி ஆரவாரமும் அடங்க நெடு நேரமாயிற்று. இந்நிகழ்ச்சி, அந்நாள் தமிழக ஆளுநராக இருந்த ஸ்ரீ பிரகாசாவுக்குப் பெரும் வியப்பை உண்டு பண்ணியது. இதனால் நாவலர் பாரதியாரைக் கௌரவிக்க இரண்டொரு மாதம் கழித்து மற்றொரு விழாவைப் பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்திருந்தது. அவ்விழாவுக்கு நாவலர் பாரதியாருடன் ரா.பி. சேதுப்பிள்ளை, தெ.பொ.மீ. ஆகியோரும் பாவேந்தர் பாரதிதாசனும் அழைக்கப் பட்டிருந்தனர்.

பல்கலைக்கழக விருந்தினர் விடுதியில் பாவேந்தர் தங்கியிருந்தார். மாணவர் கூட்டம் அவரை மொய்த்துக் கொண்டது. அப்போது நான் ஆசிரியராகவும், ச. மெய்யப்பன் துணை ஆசிரியராகவும் இருந்து நடத்தி வந்த முத்தமிழ் மலர் கையெழுத்து ஏட்டினை அவர் பார்வைக்குப் பணிவுடன் கொடுத்தேன். மாணவர்களின் ஓவிய வண்ணமும், காவிய நேர்த்தியும் பார்த்து மகிழ்ந்து 'நறு மலர் இஃதே' என்று எழுதிக் கையொப்பமிட்டுத் தந்தார். மற்றொரு மாணவர் தயாரித்த மலரை அவர் பார்த்துக் கொண்டிருந்தபோது அதன் ஆசிரியரான மாணவர், ஒரு பாராட்டுக் கவிதை எழுதித்தர வேண்டினார். பாவேந்தர் ஒன்றும் பேசவில்லை. மீண்டும் மீண்டும் அம்மாணவர் வற்புறுத்திக் கேட்டதும் இரண்டு வரிகள் எழுதினார். பிறகு அந்த மாணவரை ஏறிட்டுப் பார்த்து 'இதற்குப் பொருள் சொல்' என்று கர்ஜித்தார். பயந்து நடுங்கிப் போன பையன் ஏதோ சொன்னான்.

'மூணாவது சீரிலே மோனை சும்மாவா போட்டிருக்கேன்' என்று முழங்கியதும் அந்த அறை நிசப்தமாகி விட்டது. நல்ல வேளையாக அதற்குள் மற்ற அறிஞர்களோடு புகைப்படம் எடுத்துக் கொள்ள யாரோ கவிஞரை அழைத்தார்கள். அவர் வரமுடியாது என்று மறுத்தார். இதைக் கேள்விப்பட்டு உடனே அந்த அறைக்கு தெ.பொ. மீ.யே நேரில் வந்து 'கவிஞர் இல்லாமல் புகைப்படமா?' என்று கூறி அவரை அழைத்துச் சென்றார். அக்காட்சி உணர்ச்சிவயமாக இருந்தது.

பாராட்டு விழாவில் பாவேந்தர் ஒரு நெருப்புச் சூறாவளியாகப் பேசினார் என்று மட்டுமே இப்போது நினைவில் நிற்கிறது.

*

அடுத்த முறை நான் பாவேந்தரைக் கண்டது ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு சென்னையில் தியாகராய நகரில் அவர்

தங்கியிருந்த நாட்களில், 1963 மே மாதத்தில் ஒரு நாள் நானும், என் நண்பர் மணிவாசகர் நூலகம் மெய்யப்பனும், இலக்கியப் பதிப்பகம் சோமையாவும் பாவேந்தருக்கு அணுக்கத் தொண்டராக விளங்கிய கவிஞர் பொன்னடியானுடன் பாவேந்தரைக் காணச் சென்றோம்.

என் முதல் கவிதைத் தொகுப்பான 'நிலவுப்பூ அச்சாகிக் கொண்டிருந்தது. அத்தொகுப்புக்குப் பாவேந்தரின் அணிந்துரைக் கவிதை பெற்றே தீரவேண்டுமென்ற கட்டாயம் எனக்கு. அதற்காகத்தான் பாவேந்தர் இல்லத்துக்குப் போனோம்.

நாங்கள் காத்திருக்க, கவிஞர் பொன்னடியான் பெரிய ஹாலில் தட்டி வைத்து மறைக்கப்பட்ட பகுதியிலிருந்த பாவேந்தரிடம் அனுமதி பெறச் சென்றார். நாங்கள் அழைக்கப்படுமுன் அறையில் மாட்டப்பட்டிருந்த புகைப்படங்களைப் பார்வையிட்டேன். பெரும்பாலான படங்களில் பாண்டியன் பரிசு படத் தொடக்க விழாவில் பாவேந்தரும், சிவாஜி கணேசனும் காட்சி தந்தனர். பாவேந்தரின் ஆசைக் கனவான பாண்டியன் பரிசு படம் வெளிவராத கதை பலருக்கும் தெரியுமே!

விரைவில் நாங்கள் பாவேந்தர் முன்னால் அழைக்கப்பட்டோம். பத்தாண்டுகளுக்கு முன் கம்பீரமான தோற்றத்தோடு திகழ்ந்த கவிஞர் ஓரளவு சோர்வோடு காட்சியளித்தார். கட்டிலில் எழுதுகிற அட்டையோடு அமர்ந்திருந்தார். அவருடைய மாணவர் மு. அண்ணாமலையின் மாணவன் நான் என்றதும் "அப்ப.. நீ என் பேரன்.." என்று சொல்லிக் கொண்டே என்னை அணைத்து நெற்றியில் முத்தமிட்டார். என் மேனி சிலிர்த்துப் பரவசமுற்றது.

கவிழ்ந்து சாய்ந்து எழுதிக் கொண்டிருப்பது தம் வழக்கம் என்று சொல்லிப் புறங்கைளைத் தூக்கிக் காட்டினார். கருமையாக இரண்டு புறங்கைகளும் தழும்பு பாய்ந்திருந்தன. தமிழ்க் கவிதை முற்றத்தில் காலத்தால் அழிக்க முடியாத சுவடுகளைப் பதித்த பாவேந்தரின் கரங்களில் இருந்த தழும்புகள் யுத்தக்களம் சென்று வந்த போர் மறவனின் வீரத் தழும்புகளை எனக்கு நினைவூட்டின.

பின்னர் அச்சாகியிருந்த கவிதைப் பகுதிகளை அவர்பால் தந்து அணிந்துரை வேண்டினோம். இரண்டு நாள் கழித்து வந்தால் படித்து விட்டு அணிந்துரை தருவதாகத் தெரிவித்தார். அந்தக் கவிதைத் சந்நிதானத்திலிருந்து வணங்கி விடைபெற்றோம்.

இரண்டு நாள் கழித்து-காலைப் பொழுதில் நானும் சோமையாவும் பலவகைக் கனிகளையும் ஒரு தட்டில் வைத்து எடுத்துக்கொண்டு போனோம். இதெல்லாம் எதுக்கு... என்று சொல்லிய பாவேந்தர்

'பழனியம்மா' என்று மனைவியாரை அழைத்து அவற்றை எடுத்துக் கொண்டு போகச் சொன்னார். விரைவில் அம்மையார் பழச் சுளைகளையும் கீற்றுகளையும் தட்டுக்களில் கொண்டு வந்து வைத்தார்.

'நம்ம சாயல்... கவியிலே இருக்கு... இன்னும் நீட்டா (நீளமாக) எழுதணும்' என்றார் பாவேந்தர். பிறகு ஒரு தாளை எடுத்து, 'என் கையெழுத்து சரியா இருக்காது... இதை நீயே பிரதி செய்..' என்று அணிந்துரைக் கவிதையைக் கொடுத்தார். கவிதையை நான் பிரதியெடுத்தேன். கவிதை இது:

அண்ணா மலைப்பல் கலைக்கழகப் பேராசான்
அண்ணா மலையென் அரியதமிழ் மாணவனின்
கண்ணான மாணவன்நான் என்று கழறித்தம்
கையெழுத் துப்படியைக் கண்ணுக் கெதிர்வைத்தே
அண்டியசீர்ப் பொள்ளாச்சிக் கல்லூரி ஆசான்நான்
அரிய நிலவுப்பூக் கவிதைநூல் நான்செய்தேன்
கண்செலுத்த வேண்டுமென்றார்; மாட்டேனென்றா சொல்வேன்
கவிதை ஒவ்வொன்றும் அமிழ்தாக நான் கண்டேன்

பாட்டுத் திறம்கண்டேன் பாலசுப் பிரமணியம்
பாவாணர் செய்தஅப் பச்சைத் தமிழ்நூலில்
நாட்டுத் திறம்என்னே நாற்கவியும் முத்தமிழும்
நல்கும் பயன்என்னே நாவூறிப் போனேன்நான்
வீட்டிற் குறட்டைவிட்ட செந்தமிழர் கண்விழிக்க
வெற்றி இலக்கியத்தை அன்றளித்த பாரதிபோல்
பாட்டை திறக்கவந்த பாலசுப் பிரமணியம்
பைந்தமிழ்ப் பாவாணர் புகழ்பெற்று வாழியவே!

இந்தக் கவிதை என்னைப் பூரிப்பிலே ஆழ்த்தியது. பிரதியெடுத்துக் கையொப்பமிடப் பாவேந்தரிடம் கொடுத்ததும், 'நான் என்ன எழுதியிருக்கிறேன்; நீ எப்படி எழுதியிருக்கிறாய்?' என்று கேட்டார் கடைசி வரியில் நான் 'பாட்டைத் திறக்க' என்று ஒற்றுப் போட்டு எழுதியிருந்தேன். ஒற்றை அடித்துத் திருத்தி, 'பாதை திறக்க என்ற பொருளில் தான் பாட்டை திறக்கண்ணு போட்டிருக்கேன்' என்று சொல்லிக் கையொப்பமிட்டார். பாவேந்தர் இப்படிப் பாராட்டியதை வாழ்நாள் முழுதும் மறக்க முடியாது. பணிந்து வணங்கி விடைபெற்றோம். அப்போது பாவேந்தர், 'இப்ப நான் மத்திய அரசு எடுக்கும் பாரதி வரலாற்றுப் படத்துக்கு உரையாடல் எழுதிக் கொண்டிருக்கிறேன்' என்று தெரிவித்தார். அது ஏன் பயன்படுத்தப்படாமல் போயிற்று எனத் தெரியவில்லை.

அதே சமயம் நிலவுப்பூ அச்சுப்பகுதிகளையும், ஓவியங்களையும்

பாராட்டிவிட்டு 'நம்ம மணிமேகலை வெண்பா, கண்ணகி புரட்சிக் காப்பியம் புத்தகத் தயாரிப்பு அவ்வளவு நல்லா வரலே...' என்று வருத்தப்பட்டுக் கொண்டதும் எனக்கு நன்கு நினைவில் நிற்கின்றது

*

1963 செப்டம்பர் 22ஆம் நாள் பொள்ளாச்சி நகரில் கவிஞர் கே.சி.எஸ். அருணாசலமும் நானும் மற்றும் பல பாரதி அன்பர்களும் ஒன்றாக இணைந்து மிகப் பிரம்மாண்டமான பாரதி விழா நிகழ்ச்சி ஒன்றுக்குத் திட்டமிட்டோம். ஒருநாள் முழுவதுமாகக் காலை முதல் இரவு வரை நிகழ்ச்சிகள் அமைக்கப்பட்டன.

எஸ். இராமகிருஷ்ணன், சிலம்பொலி செல்லப்பன், ரஷ்ய நாட்டுத் தமிழ் மாணவி இசபெல்லா முதலிய பற்பல அறிஞர்களும், கவிஞர்களும் கலந்து கொண்ட பெருவிழாவுக்குப் பாவேந்தரையும் அன்புடன் அழைத்திருந்தோம்.

விழா நாளன்று பயணியர் விடுதியில் காலை ஏழரை மணிக்கே பாவேந்தர் வந்து சேர்ந்து விட்டார். எங்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி உண்டாகும்படி பாவேந்தரின் துணைவியார் பழனியம்மாளும் உடன் வந்திருந்தார். வந்த உடனேயே முகச்சவரம் செய்ய ஆள்வேண்டுமென்று கேட்டார். பக்கத்திலிருந்த முடி வெட்டும் நிலையத்துக்குப்போகலாம் என்று யோசனை தெரிவிக்கப்பட்டது. 'அதெல்லாம் ஒத்து வராது... இங்கேயே ஒருத்தரைக் கூட்டிவா" என்று கர்ஜித்தார். அவ்வாறே உடன் கட்டளையை நிறை வேற்றினோம்.

மயிலஞ்சந்தை என்ற இடத்தில் பெரிய பந்தல் அமைக்கப் பட்டிருந்தது. காலையில் என் தலைமையில் கவியரங்கம், பாவேந்தர் முன்னிலையில் நிகழ்ந்தது. அந்நிகழ்ச்சியில்

'அலையாடும் தென்புதுவை
அழகாடும் பட்டினத்தின்
கலைபாடும் குயிலான
கவியரசர் பாவேந்தர்
சிலைபோல வீற்றிருக்கச்
சிறியேன் அவர்திருமுன்
குலம்பாடி நலம்பாடக்
குறுக்கிட்டேன் மன்னிப்பீர்'

என்று மன்னிப்பு கேட்டுக் கொண்டு நான் கவிதை பொழிந்தேன். இளங்கவிஞரின் கவிதைகளைத் தலையசைத்துச் சுவைத்து மகிழ்ந்தார் பாவேந்தர்.

தொடர்ந்து கருத்தரங்கம் நிகழ்ந்தது. பிற்பகல் இசை நிகழ்ச்சி, சிறப்புச் சொற்பொழிவுகள், ரஷ்யப் பெண்மணி இசபெலலாவின் உரை. பாவேந்தர் தம் உரை நிகழ்த்தக் காத்திருந்ததில் ஓரளவு பொறுமை இழந்து போயிருந்தார். இதனிடையே அவருக்கு முன்பே அறிமுகமாயிருந்த சிலர், ஆளியாறு அணைக் கட்டுக்குப் போய் வந்துவிடலாம் என்று அவரை விழாவைவிட்டு அழைத்துப் போய்விடத் திட்டமிட்டனர்.

விழாப் பொறுப்பாளர்களான எங்களுக்குக் கிடைத்தற்கரிய நிதி கை நழுவிப் போய்விடக் கூடாதே என்ற அச்சம் வந்து விடடது. அதனால் மற்ற பேச்சாளர்களை விரைவுபடுத்தினோம். எனினும் இரவாகி விட்டது. பாவேந்தர் பேசத் தொட்ங்கும்போது, பல்லாயிரக்கணக்கான மக்கள் ஆவலோடு காத்திருந்தனர். அப்படியொரு கூட்டத்தை, ஓர் இலக்கியவிழாவுக்கு அதுவரை பொள்ளாச்சி நகரம் சந்தித்ததில்லை. பாவேந்தர் தம் பேருரையில் பாரதியோடு தமக்கேற்பட்ட உறவையும், அன்பையும் உணர்ச்சியோடு எடுத்தியம்பினார். பாரதி பாடல்கள் பலவற்றை எப்படிப் பாட வேண்டும் என்று பாடிக் காட்டினார். சில பாடல்கள் பிழையாகப் பதிக்கப்பெற்றிருப்பதாகவும் மொழிந்தார்.

உரையாடல் போலவும், இசை நிகழ்ச்சி போலவும்-ஒரு சொற்பொழிவு போலல்லாமல்-ஒரு கலைநிகழ்ச்சி போலவும் பாவேந்தர் உரை அமைந்தது. 'கோல்கைக் கொண்டு வாழ்' என்ற பாரதி வரியைத் தவறாகப் புரிந்து கொண்ட சுதேசமித்திரன் பத்திரிகையைக் கேலி செய்தார். கதா காலட்சேபங்கள் 'கீர்த்தனாரம்பத்திலே' என்று தொடங்குவதை எடுத்துக்காட்டி 'ஒரு புதுரம்பம் கண்டுபிடிச்சிருக்கான்-கீர்த்தனாரம்பம்' என்று கிண்டல் பண்ணினார். பாவேந்தரை மேடையில் பேச வைக்க முடிந்ததே என்ற பெரிய நிம்மதி ஏற்பட்டது.

*

அன்றிரவு பாவேந்தரும் பழனியம்மாளும் பயணியர் விடுதியில் தங்கினர். அதிகாலையிலேயே நண்பர் பழனியப்பன் இல்லத்திலிருந்து சூடான இட்லியும், காரமான குழம்பும் கொண்டு வரப்பட்டது. பாவேந்தர் இச்சிற்றுண்டியை வெகுரசனையோடு உண்டார்.

மதிய உணவுக்குப் பாவேந்தரின் பழைய நண்பர் குமாரசாமி பிள்ளை வீட்டுக்குப் போகும்வரை பல செய்திகளைக் குறித்து உரையாடிக் கொண்டிருந்தார். கூட்டத்தின் நிதிக் குறைபாடடைப்

பற்றிப் பேசிக் கொண்டிருந்த போது பாவேந்தர் 'துண்டை விரிச்சு கூட்டத்தில் தண்டனும்' என்றார். 'தண்டல்' என்ற சொல் எனக்கு அப்போது புதுமையாக ஒலித்தது; அதனால் சிரித்தேன். கவிஞர் கே.சி.எஸ். என்னைக் கடிந்து அப்படிச் சொல்வது; தென் ஆர்க்காட்டில் வழக்கு என்று தெரிவித்தார்.

பின்னர் பாவேந்தர் மறைந்த ஜீவா அவர்களின் சிறப்புக்களைச் சொல்லிக் கொண்டிருந்தார். ஜனசக்தி ஜீவா மலருக்குத் தாம் கவிதை கொடுத்திருந்தும் மலர் தமக்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்று குறைபட்டுக் கொண்டார்.

அப்போது எங்களுக்கிருந்த வசதிக்குறைவில் கவிஞர் பெருமானைப் புகைப்படம் எடுக்கக்கூட முடியவில்லை. ஆனால் அவரை அழைத்துச் சென்ற குமாரசாமிபிள்ளை கவிஞரையும் திருமதி பழனியம்மாளையும் அமர வைத்து ஒரு புகைப்படம் எடுத்துள்ளார்.

நண்பர் குமாரசாமிபிள்ளை பாவேந்தரைத் தம்முடன் அழைத்துச் சென்றபோது நாங்கள் விடைபெற்றுக் கொண்டோம். பிறகு அவர் கவிஞரைக் கரூருக்கு அனுப்பி வைத்ததாக எங்களிடம் தெரிவித்தார்.

பாவேந்தர் மறைவுக்கு முன் கலந்து கொண்ட கடைசி நிகழ்ச்சிகளில் ஒன்று பொள்ளாச்சி நிகழ்ச்சி என்று கருதுகிறேன். வெகு விரைவிலேயே சென்னையில் உடல் நலிவுற்று அரசாங்க மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட செய்தி தாங்கமுடியாத அதிர்ச்சியாக வந்தது.

இன்று எங்கள் ஊரில் பாவேந்தர் தங்கியிருந்த பயணியர் விடுதி இடிக்கப்பட்டு இல்லாமல் போய் விட்டது. ஆயினும் பாவேந்தர் அங்கு தங்கியிருந்த நினைவு அழியா ஓவியமாய் நின்று நிலைக்கிறது.

கவி அரச அரிமா

டாக்டர் நா. ஆறுமுகம்

அறிஞர்களையும் அரசியல் மேதைகளையும் அதிக அளவில் நாட்டுக்குக் கொடுத்த பெருமை பச்சையப்பன் கல்லூரிக்கு உண்டு.

பச்சையப்பன் பள்ளியில் பயின்று பச்சையப்பன் கல்லூரியில் பட்டம் பெற்று பச்சையப்பன் கல்லூரியிலேயே ஆசிரியர் பணியும் புரிந்தவர் நா. ஆறுமுகம்.

விதைப் பண்ணையிலேயே நாற்றாகிக் கதிர் குலுங்கியவர் பச்சையப்பன் கல்லூரியின் செழித்த வரலாற்றுக்குச் சொந்தக்காரர்களான டாக்டர் மு.வ., அறிஞர் அ.ச.ஞா., பேராசிரியர் அன்பழகன் ஆகிய தமிழேறுகளின் மாணவர். திருமணத்துக்குப் பின் கலித் தொகையை ஆய்ந்து 'முனைவர்' ஆனவர். வீட்டிலேயே குறிஞ்சியை வளர்ப்பவர். இன்று-புதுவைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியர்.

பல்லவன் காஞ்சிக்குப் பாவேந்தரை அழைத்து வந்து பல எதிர்ப்புகளின் நடுவே பாட்டரங்கம் நடத்திய சிறப்பை இக்கட்டுரையில் கூறுகிறார் இவர்.

1964-ஆம் ஆண்டில் சனவரித் திங்கள் பாவேந்தர் பாரதிதாசனைக் கொண்டு தமிழ் மன்றத்தின் சார்பில் கவியரங்கம் நடத்துவது என்று முடிவு செய்தோம்.

இரண்டு முறை நாள் குறிக்கப் பெற்று விழா நடைபெறவில்லை; மூன்றாவது முறையாக விழா முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அன்று காலையிலேயே பாவேந்தரை அழைத்து வருவதற்காக ஆசிரியர் என்ற முறையில் காஞ்சியிலிருந்து சென்னை

புறப்பட்டேன். பகலுணவுக்கு முன் பாவேந்தர் அவர்களைச் சென்னை இல்லத்தில் சந்தித்துப் புறப்படும் நேரங்குறித்துப் பேசினேன். பகல் 1 மணியளவில் புறப்படலாம் என்றார். நான் சென்று மகிழ்வுந்து (வாடகைக்கார்) அமர்த்தி வந்தேன். மகிழ்வுந்தினைப் பார்த்ததும் 'வாடகை வண்டியா?' என்று வினவி, 'அச்சாரம் தந்துவிட்டாயா?' என்று என்னைக் கேட்டார். 'ஆம்' என்று நான் சொன்னதும் 'நமக்குப் பழக்கமான வேறு வண்டியுள்ளது. அதற்காகக் கேட்டேன்' என்றார். நான் 'அதிலேயே செல்லலாம்' என்று கூறியபோது, 'அச்சாரம் தந்து விட்ட பின் மாற்றுவது கூடாது' என்று மறுத்துவிட்டார்.

பாவேந்தர் அவர்களுடன் அவருக்குப் பக்கத்தில் அமர்ந்து சென்ற அந்த நாளை என் வாழ்வின் பொன்னாளாக நினைத்து மகிழ்கிறேன். சென்னையிலிருந்து வாலாசாபாத் வழியாகக் காஞ்சி பச்சையப்பன் கல்லூரிக்குச் சென்று கொண்டிருந்தோம். நான் சிறிது குரல் 'கம்மலாகப்' பேசுவதைக் கண்ட பாவேந்தர், என் தந்தைக்கும் இந்தக் குறையிருக்கிறதா என்று கேட்டு அது தீர மருந்து கூறினார். 'அரிசியுடன் சில மிளகுகளைச் சேர்த்து வாயில் அடக்கிக் கொண்டு சில நாட்கள் பேசிப் பழகுங்கள்; இந்தக் குரல் அடைப்பு நீங்கும்' என்றார்.

வாலாசாபாத் அருகில் மகிழ்வுந்து சென்று கொண்டிருக்கும்போது பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் சிலர் சைக்கிளில் வருவதைக் கண்டதும் எனக்குச் சிறிது அதிர்ச்சி ஏற்பட்டது. அன்று காலையிலிருந்தே வானம் 'மப்பும் மந்தாரமுமாக' இருந்தது. சிறு சிறு தூறல்களும் இருந்தன. அவ்வப்போது இலேசான மழையும் இருந்தது. அதனால் கல்லூரிக்கு விடுமுறை விடப்பட்டு விட்டதோ என்று நான் அஞ்சினேன். இதற்கிடையில் மகிழ்வுந்து இராஜாம் பேட்டை என்னும் கிராமத்தின் வழியாகச் சென்று கொண்டிருந்தது. அங்கு மாணவர்கள் பலரைக் கண்டதும் மகிழ்வுந்தை நிறுத்திச் சொன்னேன். என்னைப் பார்த்ததும் ஓடிவந்த மாணவர்களை விசாரித்தேன். நான் எதிர்பார்த்தது நடந்து விட்டிருந்தது.

மழையின் காரணமாகக் கல்லூரிக்கு மதியம் விடுமுறை என்றும் கவியரங்கம் தள்ளிவைக்கப்பட்டுள்ளது என்றும் முதல்வர் அறிவிப்புச் சுற்றறிக்கையாக வந்தது என்று மாணவர்கள் கூறினர். பாவேந்தரை மகிழ்வுந்தில் பார்த்ததும் அந்த மாணவர்களும் என்னைப் போலவே உணர்ச்சிவசப்பட்டு 'இப்போது என்ன செய்வது' என்று விழியால் கேட்டனர். மிகவும் பரபரப்பு அடைந்திருந்த எனக்கு ஒன்றும் புரியவில்லை. 'இந்த நாளை

விட்டால் இனி பாவேந்தரைக் கொண்டு விழா நடத்த இயலாது' என்று என் மனம் அறிவுறுத்தியது. மிகவும் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் அங்கிருந்த மாணவர்களிடம், 'இன்றைக்கு விழா நடைபெறும்; பாவேந்தர் பேசுவார்; நீங்கள் எல்லோரும் திரும்பிக் கல்லூரிக்கு வாருங்கள்; வழியில் காணும் மாணவர்களையெல்லாம் அழைத்து வாருங்கள்' என்று கூறிவிட்டு மகிழ்வுந்தில் புறப் பட்டோம்.

பாவேந்தர் நிலைமையைக் கேட்டார்; 'வேறொரு நாளில் விழாவை வைத்துக் கொள்ளலாமே' என்றார்.

'கல்லூரிக்கு மதியம் விடுமுறை விட்டிருந்தாலும் மாணவர்களை யெல்லாம் திரும்ப வரச் சொல்லியிருக்கிறேன்; வழியில் வந்த மாணவர்களை அழைத்துக் கொண்டு அவர்கள் வந்துவிடுவர்; நாம் விழாவை நடத்தலாம்' என்றேன் நான்.

'அது இயலுமா? என்றார் பாவேந்தர். 'உங்கள் மீது மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அவ்வளவு பற்று உள்ளது. அதனால் விழா கட்டாயம் சிறப்பாக நடக்கும்-நடத்த இயலும் என்று கருதுகிறேன்' என்றேன் நான். புன்னகை பூத்த பாவேந்தர் 'எனக் கொன்றும் இல்லை; உன் ஆர்வத்தைப் பார்த்து மகிழ்கிறேன்; வாழ்த்துகிறேன்; அதனால் நான் வருகிறேன்' என்றார்.

மகிழ்வுந்து எகனாம்பேட்டை என்னும் சிற்றூரைத் தாண்டி அய்யன் பேட்டை வழியாகச் சென்று கொண்டிருந்தது. அய்யன் பேட்டை நான் பிறந்த சிற்றூர். கல்லூரியில் இருந்து ஒரு கல் தொலைவில் உள்ளது. என் தமிழ் உணர்வுக்கும் பற்றுக்கும் 'தீனி' போட்டு என்னை வளர்த்த மண் அது. அங்குள்ள மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் 'பாவேந்தர் கல்லூரிக்குச் செல்கின்றார்' என்னும் செய்தி காட்டுத் தீ போல் பரவியது. அவர்கள் கல்லூரி நோக்கி நடந்து வரத் தொடங்கினர்.

இந்தச் சூழ்நிலையில் மகிழ்வுந்து மாலை 4 மணியளவில் கல்லூரியை அடைந்தது. பாவேந்தர் அவர்களை அழைத்து வந்துவிட்டேன் என்று தமிழ்த் துறைத்தலைவர் பேராசிரியர் கோ. இராமச்சந்திரன் அவர்களிடத்தில் மகிழ்ச்சியுடன் கூறினேன். கல்லூரியில் விழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்த பேராசிரியர் கவிஞர் மு.பி. பாலசுப்பிரமணியன் அவர்களை உள்ளிட்ட தமிழ்த் துறை ஆசிரியர்களுக்கும், தமிழ்ப் பற்றுள்ள பிற துறை ஆசிரியர்களுக்கும் மகிழ்ச்சியைக் காட்டிலும் ஏமாற்றமே முகத்தில் நிழலாடியது. 'கல்லூரிக்கு விடுமுறை விடப்பட்டு எல்லோரும்

சென்று விட்டார்களே, விழா எவ்வாறு நடக்கும்?' என்று கேட்டார்கள். 'முதல்வர் அனுமதி வேண்டுமே' என்று தயங்கினார்கள். உணர்ச்சி வயப்பட்ட நான், 'விழா நடந்தே தீரவேண்டும்; முதல்வரிடம் அனுமதி பெற்று விடுவது என் பொறுப்பு; காஞ்சிபுரம் நகர எல்லையில் உள்ள மாணவர் விடுதிக்குச் சென்று செய்தியைக் கூறி மாணவர்களை அழைத்து வாருங்கள்' என்று நண்பர் பேராசிரியர் மு.பி.பா. அவர்களிடம் கூறிவிட்டு, முதல்வர் அறைக்குச் சென்றேன்.

முதல்வர் பேராசிரியர் எஸ்.சிவசுப்பிரமணியன் அவர்கள் என் மீது அன்பு கொண்டவர்; என் வளர்ச்சியில் அக்கறை கொண்டவர். எந்தக் கருத்தாக இருந்தாலும் வாதாடி நம்மைச் சம்மதிக்கச் செய்யும் ஆற்றல் பெற்றவர்.

முதல்வர் அவர்களுடன் பேராசிரியர் மா.கி. தசரதன் அவர்களும் இருந்தார்கள். விழாவைத் தள்ளி வைப்பதற்கான காரணங்களைக் குறித்து என்னிடம் விரிவாக எடுத்துக் கூறினார்கள். முதல்வர் அவர்களுடன் பேராசிரியர் தசரதன் அவர்களும் சேர்ந்து கொண்டு பேசுவது எனக்கு ஆத்திரத்தை மூட்டியது. பரபரப்புடன் காணப்பட்ட நான் ஒரு நிலையில் உணர்ச்சிவசப் பட்டு, பேராசிரியர் தசரதன் அவர்களைப் பார்த்து 'சார்; உங்களுடன் நான் பேச விரும்பவில்லை' என்று கூறிவிட்டு, முதல்வரிடம் 'சார்!. நீங்கள் என்ன சொன்னாலும் என் காதில் விழாது; விழா நடக்க வேண்டும். அனுமதி தாருங்கள்' என்று வலியுறுத்தினேன்; வேண்டினேன்.

'கூட்டம் இல்லாமல் விழா சிறக்காது' என்றார் முதல்வர். 'கூட்டம் வந்துவிடும்; வந்துவிட்டது, ஏனெனில் நான் வரும் வழியிலேயே மாணவர்களிடம் 'விழா நடக்கும். வாருங்கள்' என்று கூறி வந்துள்ளேன்' என்றேன் நான்.

பிறகு முதல்வர் 'சரி, ஆறுமுகம் ரொம்பவும் உணர்ச்சி வசப்பட்டு விட்டாற்போல் தோன்றுகிறது. எனக்கொன்றும் தடையில்லை; விழாவை நடத்துங்கள்' என்று அனுமதி கொடுத்துவிட்டார்.

விழா அரங்கம், மாணவர் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. மாலை 5 மணியளவில் விழா தொடங்கியது. தலைமையுரையில் பாவேந்தர் தமிழகத்தின் இரு பெரும் பல்கலைக்கழகங்களில் இரு பெருங் கங்காணிகள்; இவர்கள் இருக்கும்வரை தமிழ் வளராது-வாழாது' என்று அரிமா போல் நின்று, வீர முழக்கமிட்டார். தமிழ்ப் பற்றுடன் வாழ வேண்டிய இன்றியமையாமை குறித்தும், தமிழ் வளர்ச்சிக்கான

வழிவகைகள் குறித்தும் நெஞ்சமெல்லாம் இனிக்கும் வகையில் பேசி முடித்தார்.

தலைநிமிர்ந்து செம்மாந்து நாங்கள் உட்கார்ந்திருந்தோம். விழா முடிந்த பிறகு முதல்வர் அறைக்கு அழைத்துச் சென்றேன். தொடக்கத்தில் அறைக்கு வெளியே வந்து பாவேந்தர் அவர்களை முதல்வர் வரவேற்காதது ஒரு குறையாக எங்களுக்கு இருந்தது. முதல்வர் அறையினுள் சென்ற பாவேந்தர் நேராக முதல்வர் இருக்கையைச் சற்று முன்னால் இழுத்துப் போட்டு அதில் அமர்ந்து கொண்டார்.

'என்ன செய்வது! எப்படிச் சொல்வது!' என்று புரியாத நிலையில் நாங்கள் அஞ்சிக் கொண்டிருந்தோம். சிறிது நேரம் நின்று கொண்டிருந்த முதல்வரும் ஏதோ வேறு வேலை நிமித்தமாக வெளியே செல்வது போல் சென்று விட்டார். பாவேந்தர் இதைப் பொருட்படுத்தியதாகவே தெரியவில்லை' 'கவி அரச அரிமா' (கவிராஜ சிங்கம்) என்னும் தமிழ்த் தொடரின் பொருளை அன்று உணர்ந்தேன். முரசுக் கட்டிலில் ஏறி உறங்கிய சங்கத் தமிழ்ப் புலவர் மோசிகீரனார் என் நினைவில் நிழலாடினார்.

முதல்வரின் அறையில், முதல்வர் அமரும் இருக்கையில் பாவேந்தர் அமர்ந்திருப்பதைக் கண்ட ஆசிரியர்கள் மூக்கின் மேல் விரலை வைத்து வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தனர். இப்போது பாவேந்தர் ஒரு சிறிய 'ஸ்டூலை' இழுத்து முன்னால் போட்டு, அதன் மீது கால்களைத் தூக்கி வைத்துக் கொண்டு பேசத் தொடங்கினார். பாவேந்தர் செயலை இன்றும் ஆராய்ந்து பார்க்கின்றேன். அந்தப் புரட்சிக் கவிஞரின் உள்ளத்தைப் புரிந்து கொள்ள என்னால் இயலவில்லை! ஆகவே வாழ்த்தி வணங்குகிறேன். வீறுபெற்றுச் சிறக்கும் வல்லமை பெறுகின்றேன்.

வாழ்க பாவேந்தர் புகழ்!
வளர்க அவர் புரட்சியுள்ளம்!

பாட்டுக் குழந்தை பாரதிதாசன்

மா. அண்ணாதுரை
எம்.ஏ., பி.லிப்.எசி., பி.எட்

அறிஞரின் பெயரைத் தாங்கியிருக்கும் இந்த இளைஞர் பாவேந்தரின் மாப்பிள்ளையாகிய திருவாளர் தண்டபாணியின் இளவல்.

'அறிஞர் தம் இதய ஓடையை' அணை கட்டிக் காக்கும் ஈரோடு கலைக்கல்லூரி நூலகர்.

இவரும்-இவரது துணைவியும தமிழ்க் காதலர்கள்.

முனைவர் பட்டத்துக்குப் 'பாவேந்தரின் இதழ்ப் பணியை' ஆய்வு செய்யும் இவர், தளர் நடைப் பருவத்தில் தமிழ்ப் பாவேந்தர் இல்லத்தில் வளர்ந்தவர்.

புதுவைக் கடற்கரையில் புரட்சிக் கவிஞர், இவருடன் குழந்தையோடு குழந்தையாக ஓடி விளையாடிய பிஞ்சு நினைவுகளைச் செஞ்சொல்லில் வடித்திருக்கிறார்.

பாவேந்தர் உள்ளக் குளத்தில் குளிர்ந்த தாமரை மலர்கள் பல, பூத்துக் குலுங்கித் தமிழ்ச் சோலையில் நறுமணம் பரப்பிக் கொண் டிருக்கின்றன. அம்மலர்களின் அழகையும் மணத்தையும் முழுமையாக உணரவேண்டுமானால் நாமும் அக்குளத்தில் படிதல் வேண்டும்.

பாவேந்தர் பாரதிதாசன் ஓர் உலகக் கவி. அவர் ஓர் ஊருக்கும், ஒரு நாட்டுக்கும் மட்டும் உரிமையுடையவரல்லர்.

எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்
தனையீன்ற தமிழ்நாடு தனக்கும்என்னால்
தினையளவு நலமேனும் கிடைக்குமென்றால்
செத்தொழியும் நாளெனக்குத் திருநாள் ஆகும்

என்று பெருமிதத்தோடு தமிழினத்துக்காகப் பாடிய அதே கவிஞர்,

தூயஉள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்
தொல்லுல கமக்களெல்லாம் 'ஒன்றே' என்னும்
தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்! ஆங்கே
சண்டையில்லை தன்னலந்தான் தீர்ந்த தாலே.

என்று உலக மக்களுக்காகவும் பாடுகிறார். அவர் உள்ளம் வியப்பானது. அவர் உள்ளத்தின் இரகசியங்களை நாம் ஆய்ந்து உணர வேண்டும். அம்முயற்சியின் விளைவே இக்கட்டுரை. அவர் வாழ்க்கைக் கடலின் ஓரத்தில் விளையாடித் திரிந்த நான் அக்கடலிலும் மூழ்கிச் சில முத்துக்களை எடுத்து வழங்கியுள்ளேன்.

மனித நாகரிகம் ஆற்றோரங்களில் ஆரம்பமானது என்று ஆய்வாளர்கள் கூறுவர். காவிரி, தென்பெண்ணை ஆறுகள் தமிழ் மன்னர்களின் பெருமையையும் பண்பாட்டையும் உந்திச்சுழித்து ஓடுபவை. எனவே ஆற்றங்கரையில் அமைந்த சிற்றூர்களில் தம் மூன்று பெண்களுக்கும் திருமணத்தை நடத்தி வைத்தார் பாவேந்தர்.

திருச்சி மாவட்டத்தில் காவிரிக் கரையிலே அமைந்த சிற்றூர் 'கட்டிப் பாளையம்'. அந்த ஊரைச் சேர்ந்த புலவர் கண்ணப்பருக்குத் தம் மூத்தமகள் சரசுவதியைத் திருமணம் செய்து கொடுத்தார். இரண்டாவது மகள் வசந்தாவை தென்பண்ணையாற்றங் கரையில் உள்ள 'மேல்பட்டாம் பாக்கத்தில்' என் அண்ணன் தண்டபாணி அவர்கட்குத் திருமணம் செய்து கொடுத்தார்.

மூன்றாம் மகள் இரமணியை, சேலம் மாவட்டத்துக் காவிரிக் கரையூராகிய 'மணப்பள்ளியில்' சிவசுப்பிரமணியம் அவர்கட்குத் திருமணம் செய்து கொடுத்தார்.

பாவேந்தர் விரும்பியிருந்தால் தம் பெண்களுக்குப் புதுவையிலே மாப்பிள்ளை தேடியிருக்கலாம். அவ்வாறு செய்யாமல் வேறுபட்ட கலை, பழக்க வழக்கங்கள் உள்ள தொலைவூர்களில் பெண் கொடுத்ததும், கருநாடக மாநிலத்தில் தம் ஒரே மகன் கோபதிக்குப் பெண்ணெடுத்ததும் அவர் புதிய உறவுகளை விரும்பி வரவேற்றவர் என்பது புலனாகும். பெண் எடுப்பதும், கொடுப்பதும் அருகில் இருக்கக் கூடாது என்பது அவர் கொள்கை. தம் பெண்களின் திரு மணத்தைப் பற்றிய பேச்சு எழும்போதெல்லாம் இக்கொள்கையைப் பெருமிதத்தோடு பிரகடனப்படுத்துவார் பாவேந்தர்.

பாவேந்தரின் வாழ்க்கை தோண்டத் தோண்டக் குறையாத புதையலைப் போன்றது; இறைக்க இறைக்க ஊறும் ஊருணி போன்றது. அவரோடு பழகிய நாட்களில் என் நினைவில் நிலைத்த நிகழ்ச்சிகளை இங்கு விவரிக்க விரும்புகிறேன்.

*

எங்கள் குடும்பம் அப்போது ஓரளவு செல்வச் சூழ்நிலையில் இருந்தது. இருந்தாலும் என் தந்தையாரின் உடன் பிறந்தாருக்குள் இருந்த சில கருத்து வேற்றுமைகளால் குழப்பமான சூழ்நிலையிலும் இருந்தது. நான்கு பக்கமும் கூடம் அமைந்தது எங்கள் வீடு. பாவேந்தர் ஏறுபோல் வீறுடன் நடந்து வந்து கூடத்தின் நடுவில் இருந்த நாற்காலியில் அமர்ந்தார். எங்கள் குடும்பச் சூழ்நிலையை அவர் பொருட்படுத்தவில்லை. எங்கள் பொருளாதார வசதி, சொத்துவிபரம் ஆகியவை பற்றியும் கேட்கவில்லை. எங்கள் தந்தையின் பெருமிதமான தோற்றமும், என் அண்ணாரின் தோற்றப்பொலிவும் அவருக்கு மிகவும் பிடித்துவிட்டன. எங்கள் குடும்பம் பண்பட்ட குடும்பமா, இல்லையா என்பதில் மட்டுமே அவர் கருத்தைச் செலுத்தினார். 'மாப்பிள்ளையை எனக்குப் பிடித்திருக்கிறது' என்று அவர் வெளிப்படையாகப் பேசிய பாங்கு எங்கள் குடும்பத்தாரைப் பெரிதும் கவர்ந்தது.

நான் சிறுவனாக இருந்தாலும் மேல்பட்டாம் பாக்கத்தில், பெருமாள் கோவில் தெரு 177-ஆம் எண்ணுள்ள எங்கள் இல்லத்தில் நடைபெற்ற என் அண்ணாரின் திருமணம் என் உள்ளத்தில் பசுமையாகக் காட்சியளிக்கிறது. பூவாளூர் அறிஞர் அ.பொன்னம்பலனார் தலைமையில் திருமணம் நடந்தது. வீதியை அடைத்துப் போடப்பட்டிருந்த பச்சைப் பந்தலில் நாதஸ்வர இசை ஒலிபெருக்கியில் முழுங்கத் திருமணம் தொடங்கியது. பல தமிழறிஞர்களும், சீர்திருத்தவாதிகளும் சொற்பொழிவாற்றினர்.

அந்தக் காலத்தில் சடங்குகள் இல்லாமல் செய்யப்படும் சீர்திருத்தத் திருமணத்துக்கு ஊர்மக்கள் நடுவிலும், உறவினர் நடுவிலும் பெரிய எதிர்ப்பு இருப்பது வழக்கம். இந்தத் திருமணத்திலும் அத்தகைய எதிர்ப்புகள் இல்லாமல் இல்லை. பாவேந்தர் பாரதிதாசன் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர் என்பது நாடறிந்த செய்தி. எங்கள் குடும்ப நண்பராகிய திருக்கண்டேசுவரம் ரெட்டியார் 'ஊர் மக்களைப் பகைத்துக் கொள்ளலாமா? போயும் போயும் கழுநீர்ப் பானையில் வீழ்ந்து விட்டீர்களே!' என்று என் பெரியப்பாவைக் கடிந்து கொண்டார்.

"இந்தத் திருமணத்தின் சிறப்பு இப்போது உங்களுக்குத் தெரியாது; பிற்காலத்தில் தான் தெரியும்" என்று எங்கள பெரியப்பா ரெட்டி யாருக்குப் பதில் கூறினார். அறிஞர் அண்ணா முதலமைச்சரானதும் முதல் வேலையாகச் சீர்திருத்தத் திருமணச் சட்டத்தை தமிழகச் சட்டமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றினார். இன்று சீர்திருத்தத் திருமணம் எல்லோராலும் விரும்பி ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

எங்களுடைய தூரத்து உறவினராகிய நல்லாற்றூர்க் குமாரசாமி முதலியாரின் மனைவி 'விளக்கு இல்லாத திருமணம் திருமணமா?' என்று கூறி என் அண்ணியாரை அடிக்க வந்தார். அங்கு இருந்தவர்கள் அவரைத் தடுத்து அப்போது அமைதியை நிலை நாட்டினார்கள்.

திருமணத்தில் மாலை மட்டும் மாற்றிக் கொள்ளப்பட்டது. எங்கள் அண்ணி வீட்டிற்கு வந்த பிறகு 'தமிழ் வாழ்க' என்று பொறிக்கப்பட்ட பதக்கத்தோடு கூடிய தங்கச்சங்கிலியை அவருக்கு அணிவித்தோம்.

*

என் இளமைக் காலம் பெரும்பாலும் புதுவையில் கவிஞர் இல்லத்திலேயே கழிந்தது எனலாம். அந்நாளில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை நான் இப்போதும் எண்ணிப் பார்த்து மகிழ்வதுண்டு.

வறுமையும் செழிப்பும் கவிஞர் குடும்பத்துக்குச் சகடக்கால் போல் சுழன்று வந்து கொண்டிருக்கும். ஆனால் கவிஞருக்கு வறுமையும் தெரியாது. செல்வ நிலையும் தெரியாது. வந்தவர்களை விருந்தோம்ப வேண்டும். அதில் அவர் ஊக்கமாக இருப்பார். இந்தப் பண்புதான் அவர் எழுதியுள்ள குடும்ப விளக்கில் விளக்கம் பெறுகிறது. தம் வீட்டின் வறுமையைப் பற்றிக் கவலைப்படாமல், பிறர் வறுமைக்கு வடிகாலாக இருக்க வேண்டும் என்று நினைப்பவர் கவிஞர்.

கவிஞன் எந்தப் பொருளைப் பார்க்கிறானோ, அந்தப் பொருளாகவே தானும் மாறி விடுகிறான். என்னையும் என் அண்ணன் குழந்தைகளாகிய தமிழ்ச் செல்வம், பாண்டியன் ஆகிய இருவரையும் அடிக்கடி கவிஞர் வெளியில் அழைத்துச் செல்வார். நாங்கள் கடற்கரைச் சோலைக்கு (Botanical Garden)ச் செல்லுவோம். கப்பல்களின் வருகைக்கு 'சிக்னல்' வழங்கும் இடத்துக்குக் கீழே அமர்வோம். நாங்கள் மணலில் அமர்ந்து விளையாடிக் கொண்டிருப்போம். கவிஞர் சிந்தனையில் ஆழ்ந்திருப்பார்; கவிஞர்களுக்கே உரித்தான கற்பனை உலகில் நீந்திக் கொண்டிருப் பார். நாங்கள் பலமுறை தட்டி எழுப்பினாலும் சட்டை செய்யாமல் அமர்ந்திருப்பார். சில நேரங்களில் இதற்கு நேர்மாறாக எங்களுடன்

சேர்ந்து கடற்கரை மணலில் விளையாடுவார். நண்டுகளை எங்களுக்குப் பிடித்துக் காட்டுவார்; கிளிஞ்சல்களைப் பொறுக்கித் தருவார். உணர்ச்சியால் உந்தப்பட்ட சில வேளைகளில் 'பேப்பர் கொடு' என்று எங்களைக் கேட்பார். அவ்வேளையில் பேப்பர் கிடைக்காமல், அங்குக் கிடைக்கும் சிறுதுண்டுக் காகிதங்களை எடுத்துக் கொடுப்போம். அதில் கிளி, பருந்து, வண்டு ஆகியவற்றின் சிறு ஓவியங்களை வரைந்து காண்பிப்பார். அவைகளைப் பற்றிப் பாடல் புனைந்து எங்களுக்குப் பாடிக் காட்டுவார். பாவேந்தர் வயதில் முதிர்ந்தவர்; உலகம் வியக்கும் பெருங்கவிஞர். ஆனால் குழந்தைகளுடன் உறவாடும்போது தாமும் குழந்தையாகவே மாறிவிடும் இயல்பினை உடையவர்.

ஒருசமயம் நாங்கள் கடற்கரையில் விளையாடிக் கொண்டிருந்த போது, ஒருவன் சுண்டல் விற்றுக் கொண்டு வந்தான். அப்போது நாங்கள் சுண்டலைப் பற்றிப் பாடவேண்டும் என்று விளையாட்டாகக் கேட்டோம். உடனே கவிஞர் மகிழ்ச்சி நிறைந்த முகத்தோடு காகிதத்தை எடுத்தார். 'சுண்டல் என்று ஏன் பெயர் வந்தது தெரியுமா?' என்று ஒரு வினாவை எழுப்பி விட்டுக் கவிதை புனையத் தொடங்கிவிட்டார்.

இதோ அக் கவிதை:

கூட்ட டுப்பில் ஒருபா னைக்குள்
வார்த்த நீரில் ஒருபடி கடலை
போட்டெரித்துப் பொங்கிய நீரும்
சுண்ட இறக்கித் தாளித் தீடுவதால்
சுண்டல் என்பார் அதன் பெயர்
உண்டால் உண்ண உணத் தெவிட்டாதே.

இக்கவிதையை அவரே நிறுத்தி நிறுத்தி எங்களுக்குப் படித்துக் காட்டினார்; எங்களையும் படிக்கச் சொன்னார். குழந்தைகளாகிய எங்கள் உள்ளத்தைக் கவிதையால் நிறைவு செய்த நிறைகவி பாவேந்தர் பாரதிதாசன்.

*

'பாரதிதாசன் பிக்சர்ஸில்' பங்குதாரராக இருந்த ஆசிரியர் பாலு இவர்மீது ஒரு வழக்குத் தொடர்ந்திருந்தார். வழக்கு புதுவை நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்து. ஒரு நாள் அவசரமாக நீதிமன்றத்துக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். குழந்தைகளாகிய நாங்களும் அவருடன் காரில் வர அனுமதி கேட்டோம். 'சரி! காரில் ஏறிக் கொள்ளுங்கள்;' என்றார். நாங்களும் ஏறிக் கொண்டோம்.

என்னுடைய கைவிரல் கார்க் கதவின் இடையில் இருப்பதைக் கவனிக்காமல், கவிஞர் கதவைச் சாத்திட்டார். என் கைவிரல் கதவிடுக்கில் சிக்கிக் கொண்டது. விரல் நசுங்கி இரத்தம் கொட்டத் தொடங்கியது. அதைக் கண்டதும் கவிஞரின் உள்ளம் பதறியது. 'பையனை நாங்கள் மருத்துவமனைக்குக் கூட்டிப் போகிறோம். நீங்கள் நீதிமன்றம் சென்று விட்டுக் குயில் அலுவலகம் செல்லுங்கள்' என்று உடன் இருந்தவர்கள் கூறினார்கள். கவிஞர், அவர்கள் கூறியதை ஏற்றுக் கொள்ளவில்லை. தாமே என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். காயத்துக்குத் தையல் போட்டு மருந்திட்டுக் கட்டி என்னை வீட்டில் கொண்டுவந்து விட்டபிறகே அவர் நீதிமன்றம் சென்றார். காயம் ஆறி நீண்ட நாள் ஆனபிறகும் கூட என்னை எப்போது பார்த்தாலும் அடிப்பட்ட கை விரலைக்காட்டச் சொல்லிப் பார்ப்பார். அவர் பரிவும், அன்பும் என்னை மெய்சிலிர்க்கச் செய்யும்.

எங்கள் தந்தையார் இறந்தபோது, கவிஞர் புதுச்சேரியில் இல்லை. திரைப்படத்துக்குப் பாடல் எழுதுவதற்காகச் சென்னை சென்றிருந் தார். எங்கள் தந்தையின் இறப்புச் செய்தியைப் பாரிநிலையம் உரிமையாளரான திருவாளர் செல்லப்பன் அவர்களுக்குத் தந்தி மூலம் தெரியப்படுத்தினோம். அவர் கண்ணதாசனுக்குத் தெரிவித்தார். கவிஞர் கண்ணதாசன், எங்கோ ஒரு ஸ்டுடியோவில் இருந்த பாவேந் தரைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு சம்பந்தியின் இறப்பைத் தெரிவித்தார். உடனே கண்ணதாசனின் காரை எடுத்துக் கொண்டு கவிஞர் சென்னையிலிருந்து புறப்பட்டு விட்டார்.

நாங்கள் கொடுத்த கம்பிச் செய்தி பாவேந்தருக்குச் சென்னையில் கிடைத்திருக்காது என்று நாங்கள் நினைத்தோம். எனவே எங்கள் தந்தையாரின் சடலத்துக்கு எரியூட்டுவதற்காகச் சுடுகாட்டுக்குப் புறப்பட்டோம். சடலத்தைத் சிதையில் வைத்து எங்களுடைய மூத்த அண்ணார் தீ வைக்கத் தொடங்கும்போது யாரும் எதிர்பாராத வண்ணம் பாவேந்தர் அங்குக் காரில் வந்து இறங்கினார்.

மேலே அடுக்கப்பட்டிருந்த எரு முட்டைகளை நீக்கச் சொல்லிச் சம்பந்தியாரின் முகத்தைக் கடைசி முறையாகப் பார்த்தார். அவர் கண்களில் நீரூற்றுப் பெருகி ஓடியது. என்றும் நிலை குலையாத பாவேந்தர் அன்று நிலை குலைந்து குழந்தை போல் அழுததைக் கண்டு எல்லோரும் வியந்தோம். தந்தையைப் பிரிந்து சொல்லொணாத் துயரத்தில் மூழ்கியிருந்த எங்களுக்கு ஆறுதல் கூறினார் பாவேந்தர். வீட்டிற்குத் திரும்பியதும் என் அண்ணார் தண்டபாணியை அழைத்து 'நான் வரும்வரையில் சடலத்தை வீட்டில் வைக்கவில்லையே!' என்று கூறி வருத்தப்பட்டார்.

*

1958-ஆம் ஆண்டு புரட்சிக் கவிஞரும் அவரைச் சார்ந்த சிலரும் புதுவையில் பாரதியாருக்கு விழா எடுக்க விரும்பினர். மாணவர்களுக்காக இசைப்போட்டி, பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி என்று பாரதியைப் பற்றிப் பல போட்டிகள் நடத்த முடிவு செய்தனர். இளஞ் சிறுவர்களுக்குப் பாவேந்தரே நேரடியாகப் பயிற்சி கொடுத்தார்.

தொண்டு செய்யும் அடிமை--உனக்குச்
சுதந்திர நினைவோடா?

என்ற பாரதியின் பாடலை நந்தனார் சரித்திரக் கீர்த்தனையில் உள்ள

'மாடுதின்னும் புலையா--உனக்கு
மார்கழித் திருநாளா?

என்ற வர்ண மெட்டில் அவரே பாடிக் காட்டினார்.

பாருக்குள்ளே நல்ல நாடு... எங்கள்
பாரத நாடு

என்ற பாரதியின் பாடலை உணர்ச்சி பொங்கப்பாடி எங்களுக்குப் பயிற்சி அளித்தது இன்றும் எனக்கு நன்கு நினைவிருக்கிறது.

அவ்விழாவிற்குச் சென்னையிலிருந்து பாரதியாரின் புதல்வியர் களையும், பாரதியாரின் நண்பரான சங்கு சுப்ரமணியத்தையும் சிறப்பு விருந்தினராகப் பாவேந்தர் அழைத்து இருந்தார். விழா பாவேந்தர் தலைமையில் நடைபெற்றது. விழாவில் பாரதியாரைப் பற்றிப் பலரும் பேசினர். திருவாளர் சங்கு சுப்ரமணியம் பேசும்போது, 'பாரதி சாதியை எதிர்க்கவில்லை; அவ்வாறு எழுதவும் இல்லை' என்று பேசினார். கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது.

பாவேந்தர் எழுந்து பொதுமக்களை அமைதியாக இருக்கும்படி கேட்டுக் கொண்டு, சங்கு சுப்ரமணியத்தின் கருத்துக்களை ஆதாரத்துடன் மறுத்துப் பேசினார். அது மட்டுமன்றிப் பொதுமக்களின் கோபத்துக்கு ஆளான சங்கு சுப்ரமணியத்தைத் தம்முடன் அழைத்துச் சென்று அரவிந்தர் ஆசிரமத்தில் தங்க வைத்து இரவோடிரவாக மிகப் பாதுகாப்புடன் கடலூர் வழியாகக் காரில் சென்னைக்கு அனுப்பி வைத்தார்.

திருவாளர் சங்குசுப்ரமணியம் பார்ப்பனராக இருந்தாலும், பார்ப்பனீயத்தை எதிர்க்கும் பாரதிதாசன் அவருக்குப் பாதுகாப்புக் கொடுத்துப் பத்திரமாக ஊருக்கு அனுப்பி வைத்தது எல்லாரையும் வியப்பில் ஆழ்த்தியது.

குற்றம் குறைகளைக் கண்ட இடத்திலேயே கண்டிக்கும்

இயல்புடையவர் பாரதிதாசன். எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும், யார் தலைவராக இருந்தாலும் அஞ்சும் வழக்கம் அவருக்குக் கிடையாது. எந்தச் சூழ்நிலையிலும், எந்த இடத்திலும் தம் உள்ளத்தில் தோன்றும் கருத்துக்களை அச்சமின்றி வெளியிடும் ஆற்றல் மிக்கவர் அவர்.

1959-ஆம் ஆண்டு புதுவையில் திரு.முருகையன் அவர்களின் திருமணத்தைப் புரட்சிக் கவிஞர் தலைமை ஏற்று நடத்தினார். அத்திருமண விழாவில் பழைய கொள்கைகளுக்கு வக்காலத்து வாங்கிப் பேசிய தமிழ்ப்புலவர் ஒருவரை உட்காரச் செய்ததுடன், அவருடைய மூடக் கொள்கைகளைக் கடிந்து பேசினார்; புலவருக்கும் அறிவுரை வழங்கினார்; மணமக்களுக்குத் தேவையான கருத்துக்களையே மணவிழாவில் கூறவேண்டும் என்றும் வற்புறுத்தினார்.

காலத்துக்கேற்ற புதுமையான கருத்துக்களை மணமக்கள் ஏற்றுக் கொண்டு வாழ்க்கையிலும் கடைப்பிடித்து ஒழுக வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.


'காதலர் இருவர் கருத்தொருமித்து, ஆதரவு பட்டதே இன்பம் என்று' விளக்கினார். காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்தக் கதவொன்று கண்டு' குடும்பத்துக்கும் சமுதாயத்துக்கும் நன்மை சேர்ப்பது மணமக்கள் கடமை என்பதைக் குறிப்பிட்டுக் கூறினார். முடைநாற்றம் வீசும் மூடக் கருத்துக்களை வன்மையாகக் சாடினார்.

பாவேந்தர் பிறந்த நாளைப் பற்றிப் பல கருத்துக்கள் நிலவுகின்றன. அவர் வாழ்ந்த காலத்தில் வெளியான அவருடைய நூல்களிலும், ஏடுகளிலும் அவர் பிறந்த நாள் 27.4.1891 என்றும், 18.4.1891 என்றும் 9.4.1892 என்றும் பலவாறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தம் பிறந்த நாளினை 17.4.1891 என்று தம்மிடம், பாவேந்தர் கூறியதாகப் 'பாவேந்தர் நினைவுகள்' என்ற நூலில் கவிஞர் முருகு சுந்தரம் குறிப்பிட்டுள்ளார்.

கவிஞர் முருகு சுந்தரம் ஒருமுறை என்னை நேரில் சந்தித்தபோது 'நமக்கு ஏன் வீண் குழப்பம்! புதுவை நகர் மன்றத்தில் அவர் பிறப்புப் பதிவாகியிருக்குமே! புதுவை போனால் நகர் மன்றம் சென்று அவர் பிறப்புத் தொடர்பான ஆவணங்களைப் படி எடுத்துக் கொண்டு வாருங்கள்!' என்று என்னிடம் கேட்டுக் கொண்டார்.


நான் அடுத்த முறை புதுவை சென்றபோது புதுவை மேரி (நகர மன்றம்)யின் மேலாண்மையிடம் தொடர்பு கொண்டு பாவேந்தர் பிறந்த நாள் பதிவேட்டின் நகல் ஒன்றுபெற்றேன். அதிலுள்ள செய்தி வருமாறு:



"சு.கனகசபை (தந்தை சுப்புராயன்) புதுச்சேரி, செங்குந்தர் வீதி வயது 41. செங்குந்தர் ஜாதி-இலட்சுமி அம்மாள் (தந்தை பரதேசி முதலியார்) சுப்புரத்தினம்-பிறந்தநாள் 1891 ஏப்ரல் 29ஆம் நாள் புதன்கிழமை-இரவு 10 மணி 15 நிமிடங்கள் - ஆண் குழந்தை".

இச்செய்திக்குச் சாட்சிகளாகத் திரு. மூ. பாவாடைப்பிள்ளை, திரு. அ. கந்தசாமி நாயக்கர் ஆகிய இருவரும் கையொப்பம் செய்துள்ளனர். பிரெஞ்சு அரசின் சட்டப்படி பிரெஞ்சிந்தியப் பகுதியில் குழந்தை பிறந்தவுடன் சாட்சியங்களுடன் மேரியில் பதிவு செய்ய வேண்டும்.

பாவேந்தரின் பிறந்தநாள் பற்றிய ஆதாரங்களை நான் திரட்டிக் கொண்டிருந்தபோது என் அண்ணியார் வசந்தா தண்டபாணி அவர்கள் தஞ்சைப்புலவர் மருதவாணனுக்குப் பாவேந்தர் தமது கைப்பட எழுதியிருந்த கடிதமொன்றைத் தந்தார்கள். 1958-ஆம் ஆண்டு புலவர் மருதவாணன் பாவேந்தருக்குப் பிறந்தநாள் வாழ்த்து அனுப்பியிருந்தார். அவ்வாழ்த்துக் கடிதத்துக்குத் தாம் எழுதிய மறுமடலில், பாவேந்தர் தமது பிறந்தநாள் 29.4.1891 என்பதை அவரே உறுதிப்படுத்துகிறார். அக்கடிதம் நமக்குக் கிடைத்த மற்றொரு சான்றாகும்.



தம் பிறந்த நாளை எல்லாரும் சரியாக அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக இக்கடிதத்தைக் குயில் ஏட்டில் வெளியிடுமாறு பொறுப்பாசிரியரான திரு. தண்டபாணிக்கு அறிவித்தார்.

பாவேந்தருடன் பல்லாண்டுகள் ஒன்றாகப் பணிபுரிந்த வித்துவான் புதுவை மு.மாணிக்கம் அவர்கள் 1946-ஆம் ஆண்டு பாவேந்தருக்குப் பொற்கிழி அளித்த விழாவின்போது பாவேந்தரின் வாழ்க்கை வரலாற்று நூலினை வெளியிட்டார். அந்நூலில் பாவேந்தரின் பிறந்த நாளைக் குறிப்பிடும் கீழ்க்கண்ட வெண்பா உள்ளது.

'ஆயிரத் தெண்ணூற்றுத் தொண்ணூற்றோ ராமாண்டில் ஏயவரும் ஏப்ரலிரு பத்தொன்பான்-தூயநாள் சுப்புரத்தினச் செம்மல் தோன்றினார் என்றறைவா இப்புவியில் வாழ்பெரியா ரே'.

எனவே மேலே குறிப்பிட்டுள்ள மூன்று சான்றுகளும் பாவேந்தர் பாரதிதாசனின் பிறந்தநாள் 29.4.1891 என்பதை உறுதிப் படுத்துகின்றன.

பாவேந்தரின் பிறந்தநாள் பற்றி இருந்த குழப்பத்தைப் போன்றே, அவருடைய அன்னையார் பெயரைக் குறிப்பதிலும் குழப்பம் இருந்தது. அன்னையாரின் பெயர் இலட்சுமியா? மகாலட்சுமியா? என்பதே அக்குழப்பம்.

அக்குழப்பத்தின் காரணமாகத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தார் பள்ளி மாணவர்க்காகத தாம் வெளியிட்ட பாவேந்தர் வரலாற்றில் அவருடைய அன்னையார் பெயரையே விட்டு விட்டனர். புதுவை நகர் மன்ற ஆவணத்தில் கண்டபடி பாவேந்தரின் அன்னையார் பெயர் 'இலட்சுமி' என்பது தெளிவாகிறது.

விருந்து

பாவலர் மணி சித்தன்

இவருக்குப் பெற்றோர் வைத்த பெயர் இராதா கிருட்டிணன். 'குயில்' ஏட்டில் மருத்துவம் பற்றி இவர் பாடல்கள் எழுதியபோது, பாவேந்தர் இவருக்குச் சூட்டிய பெயர் 'சித்தன்'. திருவாவடுதுறைப் பதினெண் சித்தர் சங்கம் இவருக்கு வழங்கிய பெயர் 'பாவலர் மணி'.

கீட்ஸ் போல மருத்துவப் பட்டம் பெற்ற இவர். புதுவை அரசின் பொது மருத்துவமனையில் பல் மருத்துவராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

அரும்புப் பருவத்தில் இவருக்குத் தொடக்கப்பள்ளி ஆசிரியராக இருந்த பாவேந்தர், அரும்பு மீசைப் பருவத்தில் யாப்பிலக்கண ஆசிரியராகவும் இருந் திருக்கிறார். இவர் பாரதியின் பைந்தமிழையும், பால் ஸாக்கின் பிரெஞ்சு மொழியையும் நன்கு கற்றுத் தேர்ந்தவர். புதுவையில் உள்ள பல மன்றங்களுக்கு இவர் தலைவர்; செயலர்; தொண்டர்.

'இந்தியாவார் விக்' காமராசர் முன்னால், இவர் 'குறிஞ்சி' என்னும் தலைப்பில் பாடியபோது, பாட்டரங்கத் தலைவர் பாவேந்தர் இவருக்கு வழங்கிய வாழ்த்துப்பா:

வித்துவான் புதுவைச் சித்தர்
இராதா இந்நேர மிங்கே
நத்துவார்க் கெலாம் இனிக்க
நறுங்குறிஞ்சித்தேன் பெய்தார்.

அத்தவக் கவிஞர் நன்னூல்
ஆய்ந்தவர்; தமிழ்க் காப்பாளர்;

முத்தமிழ்ச் செல்வர் வாழி!
மொழிகின்றோம் அவருக்கு நன்றி!

சித்தனார் வழங்கும்
'விருந்து'க் கட்டுரை
நம் சிந்தனைக்குச் சுவையான விருந்து.

புரட்சிக்கவி எனும் தேனினுமினிய செந்தமிழ்க் கவிதை நூலைத் தமிழுலகுக்கு வழங்கிப் 'புரட்சிப் பாவேந்தர்' என்னும் சிறப்புப் பெயர் பெற்றவர் நம் பாவேந்தர் பாரதிதாசனார் அவர்கள்.

அவர் பாடல்கள் அனைத்தும் புரட்சி மணம் வீசுவன. எனினும் அவர் பேச்சும் புதுமைப் புரட்சியை ஊட்டும் தன்மையதாகவே விளங்கிற்று.

ஒரு திருமணவிழா பாவேந்தர் தலைமையில் நடைபெற்றது. அத்திருமண விழாவிற்குப் பாவேந்தருடன் யானும் சென்றிருந்தேன். மணமகன் பட்டதாரி இளைஞன். மணமகள் ஓரளவே படித்தவள். விழாவில் பாவலர் பெருமான் அறிவுரை வழங்குகிறார் அது புதுமையும் புரட்சியும் கலந்த அறிவுரையாக மிளிர்ந்தது.

'மணப்பெண்ணுக்குச் சில அறிவுரைகள்' என்று தொடங்கினார். பெண்ணுரிமை பற்றிப் பாரதியாருக்குப் பிறகு பாவேந்தர் தாம் மிகுதியாகப் பாடியவர் என்பதை நாம் அறிவோம். இனி அவரின் அறிவுரையைக் காண்போம்.

"தமிழ் நாட்டினர் விருந்தோம்பலில் சிறந்தவர்கள்; வந்த விருந்தைப் பேணி அனுப்பி விட்டு, வரும் விருந்தை எதிர்நோக்கி நிற்பார்கள்.

விருந்தில்லாத உணவு மருந்துக்கு ஒப்பாகும் என்பது தமிழ்ப் பழமொழி.

விருந்தில்லாத வீடும், குழந்தையில்லாத வீடும் ஒன்றென்று பாடியிருக்கிறார்கள்.

திருவள்ளுவரும் விருந்தோம்பலைப் பற்றி ஓர் அதிகாரமே பாடி வைத்துள்ளார். இப்படியெல்லாம் நம் நூல்கள் பேசும்.

மணமகளே! திருமணத்திற்குப் பின் நீங்கள் தனிக் குடித்தனம் செய்கிறீர்கள். நீ, உன் கணவன், ஒரு குழந்தை - இது உன் குடும்பம்.

நீ உங்கள் இருவருக்கும் அளவாகப் பகல் உணவு சமைத்திருக்கிறாய். கணவன் தன் அலுவலகத்திலிருந்து பகல் 1 மணியளவில் வீட்டிற்கு வருகிறான். வரும்போது உடன் ஒரு தீ வட்டியை அழைத்துக் கொண்டு வருகிறான்.

'கண்ணகி! இவன் என் பள்ளித் தோழன். இந்த ஊரில்தான் தொழில் செய்கிறான். இவனை வழியில் பார்த்தேன்; அழைத்து வந்து விட்டேன் இலைபோடு' - என்று கூறுகிறான்.

கணவன் ஆணை; புது விருந்து கண்ணகி என்ன செய்வாள்! உடனே இரண்டு இலைகள் போடுகிறாள். இருவருக்கும் உணவு பரிமாறுகிறாள். இருவரும் உணவு உண்கின்றனர்.

'கண்ணகி! இன்று கூட்டு குழம்பு எல்லாம் நன்றாயிருக்கின்றன. இவனுக்கு இன்னும் சோறு வை! கூட்டு போடு!' கணவன் கட்டளை இடுகிறான்.

விருந்துண்ண வந்தவர் 'வேண்டாம்; போதும்' என்கிறார்.

'இவன் அப்படித்தான் சொல்லுவான், நீ போடு' என்கிறான் கணவன். நீ சோறும், குழம்பும், கூட்டும் சற்றுக் கூடுதலாகவே விருந்தினர் இலையில் படைக்கிறாய்.

'வாழைப்பழம் இருந்ததே! கொண்டுவா!' கணவரின் அடுத்த கட்டளை. இருவரும் உணவு உண்டு எழுந்தனர்.

பிற்பகல் இரண்டு மணிக்கு உன் கணவர் அலுவலகம் கிளம்பி விட்டார். விருந்தாக வந்த ஆளும் நன்றி சொல்லிவிட்டு அவருடனே நடந்தான்.

இனி நீ உணவு உண்ண வேண்டும்!

அடுக்களையுள் சென்று, சோற்றுப்பானையைப் பார்க்கிறாய். அதில் பருக்கையும் இல்லை; குழம்பும் இல்லை; கறியும் இல்லை. அந்த வாழைப்பழத்தைத்தான் விட்டு வைத்தார்களா? அதையும் தின்று தொலைத்தார்கள்.

மீண்டும் உணவு தயார் செய்தாக வேண்டும். உனக்கோ காலையிலிருந்து வேலை செய்த அலுப்பு. சரி. இரவு பார்த்துக் கொள்வோம். இனியொரு முறை எப்படிச் சமைப்பது? என்று ஒரு குவளை தண்ணீரைக் குடித்துவிட்டுச் சுருண்டு கொள்கிறாய்.

மாலை அலுவலகத்திலிருந்து உன் கணவன் வீடு திரும்புகிறான்; 'கண்ணகி! கடற்கரைக்குப் போகலாம்-கிளம்பு' என்கிறான், குழந்தையைச் சுமந்து கொண்டு நீ பின்னே நடக்க அவன் முன்னே நடக்கிறான்.

கடற்கரைப் பூங்காவை நீங்கள் அடைகிறீர்கள். அங்கே வெள்ளைக்காரர்களின் குழந்தைகளைக் கைவண்டிகளில் வைத்துத் தள்ளிக் கொண்டே சில பணிப்பெண்கள் உலவுகிறார்கள்.

அக்குழந்தைகளைக் கண்டவுடன் உன் கண்கள் மகிழ்ச்சியால் மலர்கின்றன. ஏதோ ஒரு புதுமையான படைப்பைக் கண்டவள் போலத் திகைத்து நிற்கிறாய்.

என்ன! அதுவும் குழந்தைதான்; உன் கையில் இருப்பதும் குழந்தை தான். பின் ஏனிந்தத் திகைப்பு?

வெள்ளைக்காரக் குழந்தைகள் கொழுகொழுவென்று மூக்கும் விழியுமாய்ப் பார்ப்போர் விழிகளைக் கவரும் வண்ணம் உள்ளன. உன் குழந்தை நாக்குப் பூச்சியைப் போல் இருக்கிறது.

ஏன் அந்தக் குழந்தைகள் அப்படி? உன் குழந்தை இப்படி? இது உன் உள்ளத்தில் எழுந்துள்ள வினா.

வெள்ளைக்காரி மணிக்கணக்கோடு சாப்பிடுவாள். காலை 8 மணி; பகல் 12 மணி; இரவு 8 மணி. அவள் எப்போதும் பகல் பட்டினி கிடப்பதில்லை.

அவள் கணவன், பகல் சாப்பாட்டிற்கு வரும்போது ஒரு விருந்தினனை அழைத்து வரமாட்டான். அப்படியே அவன் ஒருவனை விருந்துண்ண அழைக்க விரும்பினால் அதற்கொரு நாளைக் குறிப்பிட்டு, மணியையும் சொல்லி அன்றைக்கு வரச்சொல்வான். அன்று அவனுடன் அனைவருக்கும் உணவு சிறந்த முறையில் தயார் செய்திருப்பார்கள். எல்லாரும் மகிழ்ச்சியுடன் விருந்துண்பர்.

'நம் மனைவி இருவர்க்குத்தான் உணவு தயார் செய்திருப்பாள். நாம் மூன்றாமவனை அழைத்துப் போகிறோமே' என்று நமது கணவர்கள் சிந்திப்பதில்லை.

நம் நாட்டுப் பெண்களுக்கு இப்படிப்பட்ட இக்கட்டுகளோடு, வாரத்தில் இரண்டு மூன்று விரதநாட்கள் வரும். இப்படிப் பட்டினி கிடந்து உடல் வலிமை இழந்த பெண்கள், பிள்ளைகள் பெற்றால் அவை நாக்குப்பூச்சிகளைப் போல் இல்லாமல் வேறு எப்படி இருக்கும்?

கணவன் செய்த தவறினால் இந்நாடு வலிமை வாய்ந்த பிள்ளைகளைப் பெறமுடியாத நிலை ஏற்படுகிறது. அறிவாற்றல் அற்றுச் சும்பல் தோளும், ஒளியிழந்த கண்ணும் உள்ள பிள்ளைகள் தம் மொழியையும் நாட்டையும் காப்பாற்றுதல் கூடுமோ? மீளாத அடிமை நிலைதானே இங்கு மிஞ்சும்?

'நடுப்பகல் ஒரு மணிக்கு, ஒரு வீட்டிற்கு முன்னறிவிப்பின்றி உணவுக்குச் செல்கிறோமே! அச்செய்கை அந்த வீட்டில்

உள்ளவர்களைப் பாதிக்குமே!' என்ற அறிவு இல்லாது, சோறு அகப்பட்டால் போதும் என்று எண்ணுகின்றவன் சிந்தனை இல்லாத செக்குமாடு. இவனுக்குப் புத்தி புகட்ட வேண்டியது பெண்கள் கடமை.

உன் கணவன் அறியாமையாலோ அன்பாலோ ஒருவனை அழைத்து வந்து உணவிடச் சொன்னால் நீ துணிவோடு 'என்னாங்க, மணி ஒன்றாகிறது; இதுவரை அவர் சாப்பிடாமலா இருப்பார்?' என்று ஒரு போடு போடு.

வந்தவன் 'வேண்டாம்; நான் சாப்பிட்டு விட்டேன்' என்று சொல்லிக் கம்பி நீட்டுவான். தொலையட்டும் என்று விடு! அப்போது தான் உன் கணவனுக்கும் அது உறைக்கும்!

ஒரு வீட்டுக்குச் சாப்பிடச் செல்பவர் குறைந்தது இரண்டு மணி நேரத்திற்கு முன்பாவது அறிவிப்புச் செய்து விட்டுச் செல்ல வேண்டும்! இந்தப்பழக்கம் மேலை நாடுகளில் உள்ளது; நமக்கும் வரவேண்டும்.

வந்த விருந்தை வரவேற்பது-வரும் விருந்தை எதிர்பார்த்திருப்பது-இன்றைக்கு இயலாத செயல்கள்! இன்றைய நாட்டு நிலையே வேறு."

இது பாவேந்தர் மணமகனுக்கு மட்டும் வழங்கிய அறிவுரையன்று; எல்லாரும் கேட்டுணர வேண்டிய அறிவுரை. இது புதுமைக் கருத்து மட்டுமன்று! புரட்சிக் கருத்தும் அல்லவா?

என் தந்தையின் நண்பர் செந்தமிழ்த் தொண்டர்

சிவ. கண்ணப்பா

பண்டிதமணி கதிரேசன் செட்டியார் புதுவைக் கூட்டத் தில் பாவேந்தரை 'அட்டைக் கிளாஸ் வாத்தியார்- (துவக்கப்பள்ளி ஆசிரியர்) என்று கூறி அவமதித்ததற்காகக் கூட்டத்தில் இருந்தவர்கள் கிளர்ந்தெழுந்தனர். பண்டிதர் பாடு திண்டாட்டமாகி விட்டது.

பாவேந்தரோடு பணிபுரிந்த மற்றொரு அட்டைக் கிளாஸ் வாத்தியார் திருவாளர் சிவகுருநாதன். அவருடைய மகன் சிவ. கண்ணப்பா இக்கட்டுரை ஆசிரியர்.

பாவேந்தரின் கம்பீரமான தோற்றத்தில் படிந்து மகிழும் பழக்கமுடைய இவர், பாவேந்தரின் பாட்டையும் பாடி மகிழ்ந்தவர். பாவேந்தரைப் பக்கமிருந்து பார்த்த இவர் அவருடைய பண்பு நலன்களை இக்கட்டுரையில் பாராட்டி மகிழ்கிறார்.

எனக்கு வயது பத்து இருக்கும். என் தந்தையார் 'சுயர் கூப்' பள்ளிக்கூடத்தில் ஆசிரியர். அவர் பெயர் சிவகுருநாதன். ஆனால் மக்கள் அழைப்பது அட்டைக் கிளாஸ் வாத்தியார்.

மிசியோன் பள்ளிக்கூடத்தில் - அதாவது இன்றைய வ.உ.சி. உயர்நிலைப்பள்ளியில் வரலாற்றுச் சிறப்புடைய விழா. மதச்சார்புடைய கல்வியை மதச்சார்பற்ற கல்வி என்று மாற்றியதைச் சிறப்பிக்கும் வகையில் விழா. மதச்சார்பற்ற கல்வியாக மாற்றிய பிரஞ்சுப் பெருமகனார் லுய்ல் ஃபெர்ரி (Jules Ferry) என்ற நல்லவர்.

அவர் படம் அன்று திறக்கப்பட்டது. அன்று திறந்த அதேபடம் இன்றும் வ.உ.சி. உயர்நிலைப்பள்ளியில் உள்ளது.

அந்த விழாவுக்காகத்தான் சுயர்கூப் பள்ளிக்கூட மாணவர்கள் அன்று நடித்தனர்; கதை வசனம் எழுதியவர்கள் என் தந்தையார்; பாடல்கள் எழுதியவர் பாவேந்தர் பாரதிதாசனார். நாடக ஒத்திகை எங்கள் வீட்டில் நடக்கும். பாரதிதாசனார் என் தந்தையாரின் நண்பர்; ஒருசாலை மாணாக்கரும்கூட. இருவரும் பேராசிரியர் பங்காரு பக்தரிடம் பயின்றவர்கள். அதனால் ஒத்திகை பார்க்கப் பாரதிதாசனார் எங்கள் வீட்டுக்கு வருவார்.

காலில் பாந்தூப்ள் (Pantoufle)[1], ஆடை கதர், அமெரிக்கன் கிராப், சுறுக்கான அரை மீசை, உதட்டில் ஓர் இளநகை. கனிந்த பார்வை, அந்த இளநகையை இன்றுவரை எந்த ஆடவரிடமும் கண்டதில்லை. 'சிவகுரு' என்ற இனிய குரலை எழுப்பிக்கொண்டே உள்ளே வருவார்.

எங்கள் வீடு குசக்கடை வீதியில்-அதாவது இன்றைய அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதியில் ஒருசிறு வீடு ஒரே ஓர் அறைதான் உண்டு. அந்த அறையில் ஒரு கைப்பிடி நாற்காலியில்-ஒருகால் நாற்காலி மேலும் ஒருகால் கீழுமாக-கம்பீரமாகச் சாய்ந்து உட்காருவார். அவர் ராஜமீடுக்கோடு உட்கார்ந்திருப்பதை-பின்னால் தீட்டப்போகும் அந்த அழகோவியத்தை-என் இடுப்பில் இரு கைகளையும் வைத்துக் கொண்டு தலைசாய்ந்து ரசிப்பேன்.

'டேய் நீ பாடுவியா?' என்று கேட்டார். 'பாடுவேன்' என்று நான் தலையசைத்தேன்; பாடச் சொன்னார். எஸ்.ஜி. கிட்டப்பா அவர்கள் பாடியிருந்த 'எவரனி' என்ற தெலுங்குப் பாட்டைப் பாடினேன். அவருடைய உதட்டில் ஓர் புதிய நகை அரும்பியது; என்னைக் கூர்ந்து பார்த்தார். 'நான் ஒரு பாட்டு சொல்லித் தரேன்; பாடுறயா?' என்றார். 'உம்' என்றேன்.

உடனே தாள் எடுத்தார் எழுதினார். முதல் வரியைப் பாடிக் காட்டினார். நானும் பாடினேன், அந்த முதல் வரி என்ன?

'கூவாயோ கருங்குயிலே' இந்தப் பாடல் தான் பின்னர் நாடக விழாவில் பாடப்பட்டது. பிரெஞ்சுக்காரர்கள் பாவேந்தரை மதிப்பதற்குத் காரணமாக இருந்த பாடல் இது தான். நாவலர் நெடுஞ்செழியன் இந்தப் பாடலை ஓசை நயம் குன்றாமல் எடுத்துரைக்கும் போதெல்லாம் பாரதிதாசனாரின் இள நகையோடு கூடிய முகம் தான் என் கண் முன் நிற்கும்.

1) Pantoufle-Slipper பிரெஞ்சுச் சொல்.

*

துரைசாமி முதலியார் அந்நாளில் புதுவைப் போரறிஞர். இவருக்கும் பாரதிதாசனார்க்கும் வித்வக் காய்ச்சல். இருவரும் சுவைமிக்க துண்டுப் பிரசுரங்களைப் பரிமாறிக் கொள்வர். துண்டுப் பிரசுரத்தோடு துரைசாமி முதலியார் எங்கள் வீட்டுக்கு வருவார். 'சிவகுரு! பார்த்தியா அவன் வேலையை?' என்று என் தந்தையாரிடம் துண்டுப் பிரசுரத்தைக் காட்டுவார்.

என் தந்தையார் துண்டுப் பிரசுரத்தைப் படித்து விட்டுக் 'கொஞ்சம் வேகமாத்தான் இருக்கு, போனாப் போகுது. இப்படியே விட்டுடுங்க என்று சமாதானப் படுத்துவார்.

'நீ எப்போதும் இப்படித்தான்பா' என்று சொல்லிவிட்டுப் போய் விடுவார் துரைசாமி முதலியார்.

என் தந்தையார் பாவேந்தரைச் சந்தித்தால் 'போனால் போகுது. இதைப் பெரிசு படுத்தாதே' என்று சொல்வார். உடனே பாவேந்தர் 'நீ இப்படித்தான் சிவகுரு, இவன்களை எல்லாம் உடனுக்குடனே சூடு கொடுக்காட்டா நம்ம மேலே ஏறி உட்கார்ந்துக்குவானுங்க' என்று சொல்லுவார்.

துரைசாமி முதலியார் மேல் இவ்வளவு பகைமை பாராட்டிய பாவேந்தர் ஒரு நாள் எங்கள் இல்லத்துக்கு வந்தார், அப்போது எங்கள் வீடு வேளாளர் வீதியில் இருந்தது. திண்ணையில் கம்பீரமாக உட்கார்ந்தார். என் தந்தையார் வெளி வந்ததும், 'சிவகுரு! நம்ம பண்டிதர் மறைஞ்சுட்டாரே. அவருக்கு ஓர் இரங்கல் கூட்டம் போட வேண்டாமா?' என்றார். அப்படியே எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. துரைசாமிப் பண்டிதர் மறைந்ததும் பாவேந்தரிடம் இருந்த வித்வக் காய்ச்சலும் மறைந்துவிட்டது. திண்ணையில் உட்கார்ந்த வண்ணமே இருவரும் 'இரங்கற் கூட்ட நிகழ்ச்சி நிரல்' தயாரித்து விட்டனர்.

ஈசுவரன் கோவிலுக்கெதிரில் பிரம்மராயர் சுப்ரமணிய ஐயர் வாழ்ந்து வந்தார். இவர் பிரஞ்சுக் கல்லூரியில் பேராசிரியர். ஒரு நாள் பேராசிரியர் எங்கள் வீட்டுக்கு வந்தார். அவர் கையில் கவிதை நூல் ஒன்றிருந்தது. என் தந்தையாரிடம் வாசித்துக் காட்டினார். அத்தனையும் சீர்திருத்தப் பாடல்கள். அந்தப் பாடல்கள் வாசிக்கும் போது என் தந்தையார் ஆச்சரியத்தோடு கேட்டுக் கொண்டிருந்தார். உடனே சுப்பிரமணிய ஐயர் 'சிவகுரு! நான் என்ன இப்படிப் பாடி இருக்கறன்னு நினைக்கிறியா? பாரதிதாசன் பாட்டுக்கிட்ட இதுகள் நிக்காது. அந்த மாதிரி இனி எவனும் பாட முடியாது. ஐயர் நானா

பாடிட்டா நாளைக்குப் பாரதிதாசனை யாரும் திட்டமாட்டாங் கல்லே!' என்ற சொன்னார். புதுச்சேரியில் இருந்த படித்த பிராம்மணர்கள் பாரதிதாசனாரை எவ்வளவு மதித்தார்கள் என்பதன் ரகசியத்தை அன்று புரிந்து கொண்டேன்.

ஒருநாள் பாவேந்தர் தம் வீட்டுத் திண்ணையில் படுத்திருந்தார். அவர் வீட்டுக்குப் பக்கத்து வீட்டிலிருந்த லெமேர் ராமசாமி ஐயரின் மகனைச் சந்திப்பதற்கு நான் சென்றிருந்தேன். பாவேந்தர் படுத்திருந்ததை நான் கவனிக்கவில்லை. ஐயர் வீட்டிலிருந்து நான் வெளியே வந்ததும், 'டேய்' என்ற குரல் கேட்டது; திரும்பினேன். ஊர்ந்து வரும் குழந்தைபோல் கவிஞர் படுத்திருப்பதைப் பார்த்தேன். நான் பத்து வயதில் புன்சிரிப்போடு பார்த்த அதே முகம்.

'நான் கவனிக்கலே-மன்னிச்சுக்குங்க' என்றேன்.

'அப்பா சௌக்கியமா இருக்காராடா. நான் விசாரித்தேன்னு சொல்லு' என்று சொன்னார்.

'சொல்றேங்க' என்று கூறி வணங்கி விடைபெற்றேன். அடுத்து என் தந்தையாரின் நண்பரைச் சந்தித்தது பிணக் கோலத்தில்தான்.

தமிழ் தந்த செல்வம்

திருமதி. தமிழ்ச்செல்வம் முத்தையா

வாத்தியார்-கனக சுப்புரத்தினம் நாட்டுக்குப் பெரிய பாவேந்தராக இருக்கலாம். ஆனால்-வீட்டுக்குத் தாத்தா என்பதில் ஐயமில்லை. பாட்டுத் தாத்தாவின் உறவு பேரன் பேத்தியிடம் எவ்வாறு இருந்தது என்பதை, இக்கட்டுரை படம்பிடித்துக் காட்டுகிறது.

காங்கிரசும் கோழிக்கறியும் காமராசருக்கு மிகவும் பிடித்தமான விஷயங்கள் என்பது நாடறிந்த செய்தி. அவருக்குப் பாவேந்தரை மிகவும் பிடித்திருந்தது என்ற செய்தி பலருக்குத் தெரியாது.

பாவேந்தரின் விருந்தாளியாகக் காமராசர் புதுவை வந்திருந்த போது தமது பிஞ்சு நெஞ்சில் பதிவான காட்சிகளைக் கொஞ்சு தமிழில் கூறுகிறார். பாவேந்தரின் மகள் வழிப் பேத்தி தமிழ்ச் செல்வம் முத்தையா.

'அடடே தின்னும்மா!' என்று ஆப்பிள் பழத்தை அன்போடு தந்த தாத்தாவுடன் அன்று புதைக்கப்பட்ட தமது ஆசைகளைக் கண்ணீர்க் கதையாக்கிக் காட்டுகிறார் பேத்தி.

1952-ஆம் ஆண்டு
அக்டோபர் இரண்டு
ஆம். அதுதான் என் பிறந்தநாள்.

நிறைமதி நாளன்று நான் பிறந்தபோது எதிர்வீட்டு அம்மாள் பார்க்க வந்தார்களாம். "அக்டோபர் 2-ஆம் தேதி பிறந்திருக்கிறாள். இன்று காந்தியின் பிறந்த நாள். காந்திமதி என்று பெயர் வையுங்கள்" என்று சொல்லிச் சென்றார்களாம்.

எங்கள் மாமா மன்னர் மன்னன் கூடத்தில் இருந்த தாத்தாவைப் பார்த்து, 'பெயர் ஏதாவது சொன்னால் மேரியில் பதிந்துவிடலாம்' என்று கூறியபோது தாத்தா உலாவத் தொடங்கினாராம்; அதாவது சிந்திக்கத் தொடங்கிவிட்டார் என்பது பொருள்.

கொஞ்ச நேரம் கழித்து அங்கிருந்த என் பெரியம்மா சரசுவதி. "ஏம்பா, கண்ணகி என்று வைத்தால் என்ன?" என்று கேட்டபோது, "சரியில்லை அம்மா! கண்ணகி மிக உயர்ந்த குடும்பத்துப் பெண். அவள் படிப்பறிவுள்ளவளாக இருந்தும், வாழ்க்கை தொடங்கிய காலத்தில் இல்லையெனினும், தான் தொல்லைப் படப்பட, தன் அறிவைப் பயன்படுத்தித் தன் கணவனை எதிர்த்துப் போராடியிருக்கலாம். மாறாக கணவனை இழந்த பிறகே போராடுகிறாள். எனவே, அவளும் அழிந்தாள்; கணவனும் அழிந்தான்; நாடே அழிந்தது. அவளுடைய வாழ்க்கை என் பேத்திக்கு வேண்டாம். என் பேத்தி தமிழுக்குச் செல்வம்; தமிழ் தந்த செல்வம். எனவே 'தமிழ்ச் செல்வம்' என்று தான் அவளை அழைக்க வேண்டும்; 'தமிழ்ச்செல்வி' எனச் சொல்லக்கூடாது என்று கூறினாராம். தாத்தாவின் விருப்பப்படி 'தமிழ்ச் செல்வம்' என்று எனக்குப் பெயர் சூட்டப்பட்டது.

*

அறிவுரைகள் அடங்கிய சிறு சிறு கதைகள் எங்கட்குச் சொல்லி, எனக்கும் தம்பி பாண்டியனுக்கும் சிரிப்புக் காட்டித் தாமும் சிரிப்பார் எங்கள் தாத்தா. அதில் ஓர் ஊமையின் கதை. ஊமை ஒருவன் தோப்புக்கு மலங்கழிக்கச் சென்றான். அப்போது அவ்வூர்ப் பணக்காரன் ஒருவனும் சென்றான். பணக்காரனுக்குப் பின்னால் மலத்தில் ஒரு நாவற்பழம் விழுந்தது. ஊமையைக் கவனிக்காத பணக்காரன் நாவற்பழத்தை எடுத்து வேட்டியால் துடைத்து விட்டு வாயில் போட்டுக் கொண்டான். அந்நொடியில் ஊமை கைதட்டிச் சிரித்தபடி எதிரில் நின்றான். பணக்காரன் அதிர்ந்து போனான். 'பின்னர் ஊமை தானே' -என்று நினைத்து அவ்விடத்தை விட்டு நகர முயன்றபோது, ஊமை ஏளனச்சிரிப்புடன் சாடைக்காட்டி 'ஊராரிடம் சொல்லப் போகிறேன்' என்றானாம். பணக்காரன் மிகவும் அஞ்சி ஊமையின் கைகளைப் பிடித்து கெஞ்சி, 'எவரிடத்திலும் சொல்ல வேண்டாம்; உனக்கு எது வேண்டுமானாலும் செய்கிறேன்' என்று உறுதி கூறினான். ஊமை சிரித்துக் கொண்டே சென்று விட்டான்.

அன்று மதியம் மேற்படி பணக்காரனின் மிகப் பெரிய அரிசி மண்டிக்குச் சென்றான் ஊமை. அங்கே கடையினுள் அரிசியில்

கல்லைச் சில ஆட்கள் கலந்து கொண்டிருந்தனர். அவர்கள் ஊமையைப் பார்த்துவிட்டு கடையின் வாசலில் வந்திறங்கிய பணக்காரனுக்குச் சாடை காட்டினார்கள். பணக்காரன் ஊமையை மிரட்ட எண்ணியபோது காலையில் நடந்தது நினைவுக்கு வந்தது. ஊமையை அருகில் அழைத்து 'கல் கலந்த அரிசியை என் வீட்டிற்குப் பயன்படுத்தி கொள்கிறேன். இனிமேல் அரிசியில் கல் கலக்க மாட்டேன்' என்று கூறினான். ஊமை சுட்டு விரலைக் காட்டி அசைத்து விட்டுச் சென்றான். அவமானத்துக்கு அஞ்சிய பணக்காரனைக் கொண்டு அந்த ஊமை ஊரார்க்குப் பல நன்மைகள் செய்து விடுகிறான். இந்தக் கதையைத் தாத்தா ஒரு நாள் சொல்லவில்லை; பல நாளில் பல்வேறு நிகழ்ச்சிகளாகச் சொல்லியிருக்கிறார். எனக்கு நினைவு தெரிந்தபிறகு 'அமைதி' கதைத் தலைவன் 'மண்ணாங்கட்டி'யையும் இந்த ஊமையனையும் நினைவுபடுத்திக் கொள்வேன்.

*

இளைஞர் இலக்கியப் பாடல்கள் முதலில் எங்களுக்காக எழுதப்பட்டன. தாத்தா இனிமையாகப் பாடல்களைப் பாடுவதுண்டு. ஆனால் எங்கள் அம்மாயிதான் 'என்னாவென்று எடுத்துரைப்பேன்; இந்தக் கடைதனில் இருக்கும் பொருள் வரிசையை' என்று தாத்தாவின் இனிய பொருள் வரிசைப்' பாடலை அடிகடி பாடிக் காட்டுவார்கள். பின்னர் தம்பி பாண்டியனின் குறும்புச் செயலைக் கண்டித்து அடிக்க மனம் வராத காரணத்தால் தான், இளைஞர் இலக்கியப் பாடல்கள் எழுந்தன.

புதிதாக வண்ணம் பூசப்பட்ட கதவிலும் அவன் பயங்கரமான 'ந'னா காக்கையைப் படமாக வரைந்தான். அதைப் பார்த்து விட்ட தாத்தா கடுஞ்சினத்துடன், அவனை அடிக்கக் கையை ஓங்கிய போது, தம்பி மழலை மொழியால் 'நான் தான் தாத்தா காக்கா படம் போட்டேன், நல்லா இருக்கா?' என்றான்.

குழந்தையை அடித்துத் திருத்த முடியாது என்றுணர்ந்த தாத்தா,

சுண்ணாம்புக் கட்டியை நறுக்காதே!-நல்ல
சுவரிலும் கதவிலும் கிறுக்காதே!

என்பன போன்ற பாடல்களை 'நேர்பட ஒழுகு' என்ற தலைப்பில் அமைத்துப் பாடினார். அத்தொகுதியில் இடம் பெற்றுள்ள பாடல்களில்

இன்னந் தூக்கமா-தம்பீ
இன்னந் தூக்கமா

என்ற பாடல் தாத்தாவால் அன்றாடம் துயிலெழுப்பப் பாடப் பட்டது. எட்டு மணிக்குப் பள்ளியில் இருக்க வேண்டியவர்கள் ஏழு மணிவரை படுக்கையில் இருந்தால் என்னவாகும்?

எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து தாத்தா வீட்டுக்கு வரும் விருந்தினர்களை வரவேற்பது, அம்மா, அம்மாயி முதலானோர் விருந்தினர்க்கு உணவு படைக்கும்போது தடுக்கிட்டு இலைகளைக் கழுவி எடுத்துவருவது, தண்ணீர் வைப்பது போன்ற வேலைகளை நானே விரும்பி ஏற்பேன். தம்பி தானும் செய்வதாகத் தகராறு செய்வான். எனவே நாங்கள் இருவரும் விருந்தினர்க்கு வேண்டிய உதவிகளைச் செய்வோம். அவ்வகையில் விருந்தினர் யாரோ வந்தபோது நானும் தம்பியும் செய்த சிறு தொண்டினை நினைத்துப் போற்றி 'துணைவர் இலக்கணம்' என்ற தலைப்பில் வந்த கதை போன்ற கவிதையில் குறிப்பிட்டுள்ளார்.

'உங்கள் சிரிக்கும் சிறுவர் எங்கென்று கேட்க
வீட்டுக்கார ராகிய எங்கள் தாயும் தந்தையும்
வீட்டுப் பாடம் விரும்பி அங்கொருவீட்டுக் கேகினர்
என்றது கேட்டுக் கையலம்பத் திரும்பினர், கண்டனர்
இருகையில் தண்ணீர் ஏந்தி நிற்கும்
தமிழ்ச்செல்வத்தைப் பாண்டியப் பையனை"

என்று எங்களைக் கவிதையில் பாராட்டியுள்ளார் என்னருமைப் பாட்டனார்.

அடுத்து என்னுடைய பிறந்தநாள் ஒன்றிற்காக 'பிறந்தநாள் இந்நாள்' என்ற தலைப்பில், கீழ் வரும்பாடலை எழுதினார்.

பிறந்தநாள் இந்நாள்-பேரெல்லாம்
பெற்றுநீ வாழ்க பன்னாள்
இனியெல்லாம் நீ (பிறந்தநாள்....)
சிறந்தநாட்கள் ஆயின சென்றநாளெல்லாம்
செந்தமிழ்த் தொண்டுநாள் ஆகட்டும்

(பிறந்தநாள்....)

பட்டிலோர் பாவாடை
கட்டிக்கொண்டாயா?-நன்று
பால்நுரை போற்சட்டை
இட்டுக் கொண்டாயா?நன்று
ஓட்டுமாம் பழமிதோ ஆப்பிள் ஆரஞ்சி
பிட்டுமாப் பண்ணியம் உண்ணுவாய்
செஞ்சு-நீ (பிறந்தநாள்....)

அனைவரும் இங்கே உனைஒன்றே ஒன்று
பாடென்றார் இலையோ? ஆமாம்

கனிஒன்று தோலுரித்துச் சுளையோடு
கன்னல் கலந்ததாய்ப் பாடம்மாபாடுநீ

(பிறந்தநாள்....)

பெரிய பெண்ணானால் ஆடவாசொல்வார் உஃஉஃ
அரியதமிழ்பாடி ஆடவேண்டாமா: ஆமாம்
திருவோங்கு செந்தமிழ்ப் பாண்டியன் பாட்டுச்
செப்பிய வண்ணமே ஆடிக்காட்டு நீ.

(பிறந்தநாள்....)

பிறிதொரு முறை நான் படித்துக் கொண்டிருந்தபோது என்னுடைய குரலை இனிமையான நம் தமிழோடு ஒப்பிட்டு 15.4.62இல் குயில் ஏட்டில் ஒரு பாடல் எழுதி வெளியிட்டார்.

அண்டை வீட்டின் அறையிலிருந்து
பழுத்துக் காய்ந்த பனைஓலைமேல்
கூடல்வாய்த் தண்ணீர் கொட்டும் ஓசை
வந்தது. சென்று பார்த்தேன்
இந்திப் பாடம் நடத்தினார் ஈச்வரே.
அறைக்குள் யாழிசை ஏதென்று சென்றே
எட்டிப் பார்த்தேன். பேத்தி
நெட்டுரப் பண்ணினாள் நீதி நூல் தீரட்டையே.

*

என் சின்னத் தம்பி சேரன் பிறந்த பிறகு முத்தியால் பேட்டையில் இருக்கும் என் தாத்தாவின் மற்றொரு வீட்டில் நாங்கள் குடியமர்த்தப் பட்டோம். தாத்தாவும் அம்மாயியும் சேர்ந்து செய்த ஏற்பாடு இது. அங்கு கொஞ்சநாள் வரை மின்சார வசதியில்லாமல் இருந்தது. அதனால்-தாத்தா மிகவும் பாதிக்கப்பட்டார். எப்போதும் அவருக்கு மின்விசிறி ஓடிக் கொண்டிருக்க வேண்டும். சென்னையிலிருந்து அவர் வரும்போதெல்லாம் எங்களிருவரையும் பனை மட்டை விசிறியால் விசிறச் சொல்வார். என்னை அன்பாக 'சின்னக்குட்டி' என்றே அழைப்பார். தம்பியை 'மொட்டைப் பையா' என்று அழைப்பார்.

விசிறியை எடுத்து 10 போடு என்பார். 10 போடு என்றால் 10 தடவை விசிறு என்று அர்த்தம், நாங்கள் 1,2,3,4,5 என்று விசிறும் போது எண்ணிக்கையை மறந்துவிட்டு 10 தடவைக்குமேல் 100 தடவை விசிறி விட்டுப் போதுமா தாத்தா?' என்று கேட்போம்; தாத்தாவும் மனமிரங்கி 'போதும்மா' என்று கூறி அவிழ்த்து விட்டு விடுவார். இப்பணியில் தம்பி ஒத்துழைக்கமாட்டான். 'போ தாத்தா? எப்பப் பார்த்தாலும் விசிறு விசிறு என்று சொல்லிக்கிட்டு' என்பான். நான் மட்டும் பொறுமையுடன் செய்து முடிப்பேன்.

*

இவ்வாறு சிறுவர்களுக்காகவும், தமிழுக்காகவும், பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்புவதற்காகவும், தமிழ் மண்ணில் தோன்றித் தமிழால் உயர்ந்து, தமிழை உயர்த்திய பாவேந்தர் அவர்களின் பேத்தியாகத் தோன்றி, அவரின் தலையாய கொள்கைகளை முழு உணர்வோடு பின்பற்றி வாழ்ந்து கொண்டிருப்பதில் உவகை அடைகிறேன்.

சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு நாள் இரவு எட்டுமணி. சமையல் கூடத்திலிருந்து விதவிதமான வாசனைகள் வந்து கொண்டிருக்கின்றன. வீட்டின் கூடம் நாற்காலிகளாலும் மேசை களாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளது. மேசைகள் மீது இலைகள் போடப்பட்டு முக்கிய விருந்தினர்க்குப் பிடித்தமான வான்கோழி பிரியாணி, கோழிக்கறி இவைகளெல்லாம் பரிமாறப்பட்டுள்ளன. பலா, வாழை போன்ற கனிகளும் இலையில் இடம் பெற் றிருக்கின்றன.

வந்திருந்த முக்கிய விருந்தினர் மற்றவர்கள் உட்பட எல்லாரும் சாப்பிட உட்காருகின்றனர். முக்கிய விருந்தினர் நடுவில் அமர்ந்திருக்க என் தாத்தா ஒருபக்கமும் நான் ஒருபக்கமும் அமர்ந்திருக்கின்றோம்.

'என்னுடைய பேத்தி' - முக்கிய விருந்தினர்க்கு என்னை அறிமுகப்படுத்துகிறார் என் தாத்தா.

'உங்களுடைய மகனோட மகளா?'

'இல்ல. என்னுடைய பொண்ணு வசந்தாவோட மக.' நான் வியப்போடு இதனைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். என் பக்கத்தில் என்னுடைய பெரிய தம்பி அமர்ந்து கொண்டிருக்கிறான்.

'உங்க பாட்டு ஏதாவது பாடுமா?' முக்கிய விருந்தினர் கேள்வி. இது 'நல்லாப் பாடும். பாடு'--என தாத்தாவின் குரல்.

உரத்த குரலில் பாடி முடிக்கிறேன் நான்; எல்லாரும் சிரித்துக் கொண்டே கைதட்டுகின்றனர். விருந்தின்போது நான் பாடியதைக் கேட்டு, எல்லாரையும் வியக்க வைத்த அந்தப் பாடல்:

பலவித வாழைப் பழமொடு கொய்யா
பலா விளா பேரிச்சை மாம்பழம்
சில வகைக் கீச்சிலி, பொம்பிலி மாசுடன்
சீத்தா பழமும், ஆத்தா பழமும்
குலை குலையாகக் கொடிமுந்திரியும்

இன்னும் பலவித கனிகளுடனே
என்ன வென்றே எடுத்துரைப்பேன்
நான் இந்தக் கடைதனிலே
இருக்கும் பொருள் வரிசை
என்னவென்றே எடுத்துரைப்பேன்.

முக்கிய விருந்தினர் பெருந்தலைவர் காமராஜ் சிரித்துவிட்டு என்னைத் தட்டிக் கொடுக்கிறார். ஆம். அன்றைய முக்கிய விருந்தினராகக் கலந்து கொண்டவர் காமராஜர் தான். அவரோடு பக்கத்தில் அமர்ந்து உண்ணும்பேறு என் தாத்தாவால் எனக்குக் கிடைத்தது.

*

மற்றொருமுறை... கவர்னர் மாளிகை... விருந்து...

ஆம், எங்கே விருந்தென்றாலும் என்னையும் அழைத்துச் செல்லத் தவற மாட்டார் என் தாத்தா. பலவிதமான உணவு வகைகள் தட்டில் பரிமாறப்பட்டுள்ளன; பழங்கள் வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொருவரும் அவரவர்க்குத் தேவையானவற்றை எடுத்துக் கொள்கிறோம். என்னிடம் ஓர் ஆப்பிளை எடுத்துத் தருகிறார் தாத்தா. நான் அதைப் பத்திரமாகக் கையில் வைத்துக் கொண்டிருக்கிறேன். அதை மறுபடியும் போகும்போது அங்கேயே வைத்துவிட்டுச் செல்ல வேண்டும் என்று எண்ணிக் கொண்டு பயத்தோடு தின்னாமல் வைத்துக் கொண்டிருக்கிறேன்.

'தின்னு'-தாத்தாவின் குரல்.

'திரும்பவைத்து விட்டுத்தானே போகணும்? நான் தின்னலாமா?" என்று சந்தேகத்துடன் கேட்கிறேன்.

'அடே. தின்னுமா'-சிரிக்கின்றார் தாத்தா.

இன்னும் எனக்குப் பயம் நீங்கவில்லை... பயத்தோடு பாதியைத் தின்றுவிட்டு, மீதியைத் தம்பிக்குப் பத்திரப்படுத்திக் கொள்கிறேன்.

கவர்னரிடம் அன்று எனக்கு அறிமுகம்.

*

1964-ஏப்ரல் 21....

ராஜா உயர்நிலைப்பள்ளி...

தேர்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன...

நானும், என்னுடைய தம்பியும் எழுதிக் கொண்டிருக்கின்றோம். தலைமையாசிரியர் எங்களை நோக்கி வருகிறார்.

'தமிழ்ச் செல்வம்... தாத்தாவுக்கு உடம்பு சரியில்லையாமே!... பேப்பர்ல வந்திருக்கு... நீ தம்பியைக் கூட்டிக்கிட்டு வீட்டுக்குப் போ....'

தேர்வைத் தொடர்ந்து எழுத முடியாத ஏமாற்றம். தாத்தாவின் உடல்நிலை குறித்துத் திகைப்பு. வீட்டிற்குத் திரும்புகிறோம்.

தாத்தா இறந்த செய்தி காதில் நெருப்புத் துண்டமாய் விழுகிறது. மாலையில் தாத்தாவின் உடல் 'வேனில்' வருகிறது:

கலைஞர், கண்ணதாசன், டி.கே. சண்முகம் போன்றோர்கள் மலர் வளையம் வைக்கின்றார்கள்.

பிறகு யார் யாரோ வருகிறார்கள். போகிறார்கள்! உடல் முழுக்க மாலையால் மூடப்பட்டுள்ளது.

நான் அழுது கொண்டே இருக்கிறேன். பலர் என்னைச் சூழ்ந்து கொண்டு-

'யார் இனி உனக்கு வேண்டியதை வாங்கித் தருவார்?' என்று கூறி அழுகின்றனர். பின்னர் என்னுடைய தாத்தாவின் உடல் இடுகாட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டுப் புதைக்கப்படுகிறது.

ஆம்... என்னுடைய ஆசைகளும் தான்.

பாவேந்தர்-
நான் கண்டதும் கேட்டதும்

திரு. வசந்தகுமார்

மத்தளப் பலாப் பழாங்கள்
கிளையில் தூங்கும்
பண்ருட்டியில் பிறந்த.
இவர் இயற் பெயர் பக்கிரிசாமி;
இயலிசை நாடகப் பெயர் வசந்த குமார்.

சுய மரியாதைக் கொள்கையில்
ஊறிவளர்ந்தவர்;
பாவேந்தரிடம்-
செல்லக் குழந்தையாகப்
பழகி வளர்ந்தவர்
நாடக, திரைப்பட நடிகர்.

பாவேந்தரின்-
களைத்துப் போன
கடைசி சென்னை வாழ்க்கையில்
கலகலப் பூட்டிய
இளைய நண்பர்களுள் ஒருவர்.

இன்று-
தந்தையாய்,
தாத்தாவாய்,
அஞ்சல்துறை அதிகாரியாய்
வாழ்ந்து கொண்டிருப்பவர்.
இனிய நண்பர்.
இவருடைய கட்டுரை-
பாவேந்தர் வரலாற்று மாளிகையில்
சுவையான பலகணிகளைத்
திறந்து காட்டுகிறது.

தனித்தமிழ் ஆர்வமும் தன்மான இயக்கப் பற்றும் பள்ளிப் பருவத்திலேயே என்னிடம் படிந்த பண்புகள். என் கெழுதகை நண்பர் முகுந்த ராமானுசம் பண்ருட்டியில் தி.க. வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டவர். அவருடைய தந்தை திருவாளர் கேசவநாயுடு பெரிய வைணவ பக்தர் என்றாலும் திராவிட இயக்கத் தலைவர்களும், பாவேந்தர் பாரதிதாசனும் பண்ருட்டி வந்தால் அவர் வீட்டில் தான் தங்குவர். நண்பர் முகுந்தன் என் போன்ற இளைஞர்களுக்கு வழிகாட்டி; பாவேந்தருக்குச் செல்லப்பிள்ளை. நண்பர் முகுந்தனுக்கு வரும் திராவிட நாடு, குயில் ஆகிய இயக்க ஏடுகளைப் படித்து இயக்கப்பற்றையும், பாவேந்தர் பற்றையும் வளர்த்துக் கொண்டேன்.

பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் வெற்றி பெற்ற எனக்கு மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் எழுத்தர் வேலை கிடைத்தது. எழுத்தராகப் பணியேற்றதும், கொஞ்ச நாட்களில் இரயில்வே அஞ்சல் துறையில் அஞ்சல் பிரிப்பவராக (Sorter)த் தேர்ந்தெடுக்கப் பட்டேன். உடனே எழுத்தர் வேலையை விட்டுவிட்டு அஞ்சல் துறைக்கு மாறினேன். முதன் முதலாகத் திருச்சிராப்பள்ளி தென்னூரில் பணி ஏற்றேன்.

1950-ஆம் ஆண்டில் நண்பர் முகுந்தனோடு பாவேந்தரைக் காணப் புதுச்சேரி சென்றிருந்தேன். என்னிடம் நலம் விசாரித்தார் பாவேந்தர். என் குடும்பச் சூழ்நிலை, என்தொழில், கவிதை ஆர்வம் ஆகியவை பற்றி அவரிடம் எடுத்துச் சொன்னேன். இளமையும், அழகும், திரைப்படத்துக்கேற்ற முகவெட்டும் பெற்றிருந்த என்னைக் கூர்ந்து கவனித்தார் பாவேந்தர்.

'உங்களோடு தங்கிக் கவிதை எழுதக் கற்றுக் கொள்ள விரும்புகிறேன்' என்று என் விருப்பத்தைத் தெரிவித்தேன்.

'கவிதை எழுத எப்போது வேண்டுமானாலும் கற்றுக்கொள்ளலாம்; முதலில் நான் சொல்வதைச் செய்; புலவர் ஏ.கே. வேலனுக்குக் கடிதம் கொடுக்கிறேன். சென்று பார்! உனக்கு நல்ல முகவெட்டும் குரல் வளமும் இருக்கின்றன. வாய்ப்புக் கிடைத்தால் எதிர்காலத்தில் நீ பெரிய நடிகன் ஆகலாம்' என்று சொன்னார்; புலவர் ஏ.கே. வேலனுக்குப் பரிந்துரைக் கடிதம் ஒன்றும் தந்தார். 'இக்கடிதம் கொண்டு வருபவர் நல்ல பிள்ளை. அழகும் ஆற்றலும் மிக்கவர். முன்னுக்குக் கொண்டுவர வேண்டியது உன் பொறுப்பு' என்று கடிதத்தில் எழுதியிருந்தார்.

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்ற வெற்றிப்படத்தை எடுத்து, மிக

வசதியாக, ஏ.கே. வேலன் இருந்த நேரம், சென்னை இல்லத்தில் நான் அவரைப் பார்க்கச் சென்றபோது, தொலைபேசி மணி ஓயாமல் அடித்துக் கொண்டிருந்தது. ஆடு நாற்காலியில் (Rocking Chair) அமர்ந்த வண்ணம் அவர் பேசிக் கொண்டிருந்தார். ஆடம்பரமான 'சினிமாத்தனம்' அவரைச் சூழ்ந்திருந்தது.

பாவேந்தர் கடிதத்தை அவரிடம் பணிவாக நான் கொடுத்தேன், அதைப் பிரித்துப் பார்த்துவிட்டு, 'நடிப்பில் முன் அனுபவம் உனக்குண்டா?' என்று என்னிடம் கேட்டார்.

நான் 'இல்லை' என்றேன். அப்படியென்றால் ஏதாவது ஒரு நாடகக் குழுவில் சேர்ந்து நடி. எவனாவது பார்ப்பா; கூப்பிடுவான். சிவாஜி, எஸ்.எஸ்.ஆர். எல்லாம் அப்படிதான் வளர்ந்தாங்க. போ!' என்று முகத்தில் அடித்தாற்போல் பேசினார். என்னை அவர் ஒருமையில் அழைத்த முறையும் பதில் சொன்ன முறையும், என்னையோ அல்லது பாவேந்தரையோ அவர் மதித்துப் பேசியதாகத் தெரியவில்லை. நான் ஏமாற்றத்தோடு ஊர் திரும்பினேன். பாவேந்தரை மறுமுறை சந்தித்தபோது கூட, திரு.ஏ.கே. வேலன் என்ன சொன்னார் என்பதை அவரிடம் சொல்லவில்லை. வீணாக அதைச் சொல்லிப் பாவேந்தர் உள்ளத்தைப் புண்படுத்த நான் விரும்பவில்லை.

*

பிறகு எதிர்பாராமல் புதுவையில் ஒரு முறையும், தியாகராய நகர் உயர்நிலைப்பள்ளி இலக்கிய விழாவில் ஒரு முறையும் பாவேந்தரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அப்போதெல்லாம் என் நலத்தை அக்கறையோடு விசாரிப்பார்; தம்மை இல்லத்தில் வந்து பார்க்கும்படி கூறுவார். நான் அப்போது சென்னை-ஈரோடு ரயில் அஞ்சல் பிரிப்பாளராக இருந்தேன். வாரத்தில் மூன்று நாள் பகலில் ஓய்வு. பாவேந்தர் அப்போது போயஸ் ரோடு கமலா கோட்னிஸ் வீட்டில் குடும்பத்தோடு குடியிருந்தார். நான் அடிக்கடி வீட்டுக்குச் சென்று பாவேந்தரைப் பார்த்து பேசிவிட்டுத் திரும்புவேன்.

பாண்டியன் பரிசைத் திரைப்படம் ஆக்கும் முயற்சியில் தீவிரமாக இறங்கிய பிறகு, தி.நகர் இராமன் தெருவில் ஒரு பங்களாவை வாடகைக்கு எடுத்து அதில் குடிபுகுந்தார் பாவேந்தர். 'பாரதிதாசன் பிக்சர்ஸ்' என்ற விளம்பரப் பலகை பங்களா முகப்பை அணி செய்தது. காரும், சோபாவும், எடுபிடி ஆட்களும், விருந்தும் வேடிக்கையுமாக இராமன் தெரு வாழ்க்கை அப்போது அவருக்கு அமைந்திருந்தது. கவியரசருக்கு ஏற்ற கம்பீர வாழ்க்கை அது.

பாவேந்தர் இராமன் தெருவில் குடியிருந்த போது எனக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. பிரெஞ்சு ராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற 'ஒபான் ரங்கசாமி'யின் இல்லத்தில் பெண்ணெடுக்க நாங்கள் முடிவு செய்திருந்தோம். திருமணத்துக்கு நாளும் குறிக்கப்பட்டது. திருமணம் பண்ருட்டியில் நடைபெற இருந்தது.

நான் பாவேந்தர் தலைமையில் திருமணம் செய்து கொள்ள விரும்பினேன். என் கருத்தை உணர்ந்த பாவேந்தர், "என் பிள்ளைக்கு நான் தான் திருமணம் செய்வேன். நான் கட்டாயம் திருமணத்துக்கு வந்து நடத்திக் கொடுப்பேன். கவலைப்படாமல் போ!' என்று கூறி என்னை அனுப்பி வைத்தார் பாவேந்தர்.

திருச்சி கபேவில் அவர் தங்குவதற்கு முதல் நாளே ஓர் அறை ஏற்பாடு செய்யப்பட்டது. முதல் நாள் இரவே பாவேந்தர் பண்ருட்டி வந்து விட்டார்.

என் பெற்றோர் தமது கையால் வாழ்த்தி எடுத்துத் தந்த மங்கல நாணை மணப்பெண்ணின் கழுத்தில் சூட்டினேன். உடனே அங்கிருந்த பெரியோர்கள் பாவேந்தர் காலில் விழுந்து வணங்கும்படி எங்களைப் பணித்தார்கள். பாவேந்தர் உடனே எழுந்து, "முதலில் உன்னுடைய பெற்றோரை வணங்கு. அதன்பிறகு யார் காலில் வேண்டுமானாலும் விழு" என்று என்னைப் பார்த்துச் சொன்னார். சென்னையில் நானும் என் மனைவியும் தனிக்குடித்தனம் நடத்திய பொழுது பாவேந்தர் இரண்டு மூன்று முறை என் இல்லத்துக்கு வருகை தந்தார். அவருக்கு நாங்கள் விருந்து படைத்தபோது சில உணவு முறைப் பக்குவங்களை என் மனைவிக்கு எடுத்துச் சொல்லுவார். வடுமாங்காய் ஊறுகாய் எப்படிப் போடுவது என்று சொல்லுவார். பண்ருட்டி நிலக்கடலைப் பருப்பு பவளம் போல இருக்கிறது என்று பாராட்டுவார்.

ஒருமுறை கோவையில் புலவர் குழுவின் கூட்டம் நடைபெற்றபோது பாவேந்தர் என்னையும் உடன் அழைத்துச் சென்றார். புகழ் பெற்ற புலவர்கள் தங்குவதற்கு வெளியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பாவேந்தருக்கும், டாக்டர் மு.வ. அவர்களுக்கும் கோவைப் பேரறிஞர் ஜி.டி. நாயுடுவின் இல்லத்தில் தங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நானும் பாவேந்தரோடு தங்கியிருந்தேன். திருவாளர் நாயுடுவும் எங்களோடு சாப்பிட்டார்.

சாப்பிட்டு முடிந்ததும் முக்கோண வடிவில் வெட்டப்பட்ட பப்பாளிப் பழத் துண்டில் ஒரு சிறு கரண்டியைச் செருகித் தந்தார்கள். ஐஸ்கிரீம் சாப்பிடுவது போல் பழத்தின் ஊனை நாங்கள்

கரண்டியால் சுரண்டி எடுத்துச் சுவைத்தோம். 'இதில் இரும்புச் சத்து உள்ளது; உடலுக்கு மிகவும் நல்லது' என்று நாயுடு கூறினார். மூன்று நாள் பாவேந்தரோடு கோவையில் தங்கியிருந்தேன். இது எனக்கு கிடைத்த அரிய வாய்ப்பு என்று எண்ணி நான் இன்றும் மகிழ்வதுண்டு.

கோவையில் தங்கியிருந்தபோது ஒரு மகளிர் பள்ளியில் சொற்பொழிவாற்றப் பாவேந்தர் அழைக்கப்பட்டார். பாவேந்தர் தமது பேச்சைத் துவக்கும்போது 'புதிய வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும் மலர்த் தோட்டத்துக்குள் நுழைந்தது போன்ற உணர்வு எனக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது' என்று குறிப்பிட்டார்கள்.

பாவேந்தர் இல்லத்துக்கு அவரைப் பார்க்க பலரும் வருவர். கலைஞர்கள், கவிஞர்கள், அரசியல்வாதிகள், எழுத்தாளர்கள் எனப் பலர். ஒருநாள் தஞ்சைராமையாதாஸ் (திரைப்படக் கவிஞர்) பாவேந்தரைத் தேடி வந்தார். நான் கூடத்தில் அமர்ந்திருந்தேன். 'ஐயா இருக்காரா?' என்று கேட்டார். அப்போது பாவேந்தர் உள்ளே வந்தார். நின்று கொண்டிருந்த இராமையாதாஸைப் பார்த்து 'உட்கார்! எப்படி இருக்கே?' என்றார் பாவேந்தர்.

'நீங்க போட்ட பிச்சை! ஏதோ நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்' என்று பதிலிறுத்தார் இராமையாதாஸ். தாம் கொண்டு வந்திருந்த 'திருக்குறள் இசைப்பாடல்' என்ற நூலைப் பாவேந்தர் கையில் கொடுத்தார்.

'என்ன, போட்ட நூல் வித்துடிச்சா?' என்று கேட்டார் பாவேந்தர். 'இல்லைங்க. தரமான நூலை யார் வாங்கறா? உங்க நூல்கள் எல்லாம் நல்லா விற்பனையாகுதுங்களா?' என்று கேட்டார் தாஸ்.

'ஏதோ ஓடுது' என்று கூறினார் பாவேந்தர். பின்னர் பழைய திரைப்பட வாழ்க்கை பற்றியும் நண்பர்களைப் பற்றியும் உளம் திறந்து சிரித்துச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

*

ஒருநாள் பாவேந்தர் வீட்டுப் போர்டிகோவில் ஒருவர் சுருண்டு படுத்திருப்பதைப் பார்த்தேன். மெலிந்த உடல், சவரம் செய்யாத முகம்; அழுக்கடைந்த ஆடை! நான் உள்ளே சென்று 'போர்டிகோவில் படுத்திருப்பவர் யார்?' என்று பாவேந்தரின் துணைவியாரைக் கேட்டேன்.

"அவந்தா கம்பதாசன். மெரிலாண்டு ஸ்டுடியோ முதலாளி சுப்ரமணியம், பாட்டெழுதினதுக்கு இன்றைக்கு ஐநூறு ரூபா

கொடுத்தார். எங்கிட்ட நானூறு ரூபாயைக் கொடுத்துட்டு நூறு ரூபாயை வாங்கிக் கிட்டுப் போனவ, நல்லா குடிச்சிட்டு வந்து படுத்திருக்கறா. குடிச்சிட்டு வெளியில திரிஞ்சா போலீஸ்கார புடுச்சிக்குட்டுப் போயிடுவான்ல... குடிச்சிட்டா நேரா இங்க வந்துதா படுத்துக்குவா, ஏன்னா.... இங்க போலீஸ்கார, வரமாட்டான்.. பாதுகாப்பான இடம்" என்று அம்மையார் குறிப்பிட்டார்கள். திரையுலகக் கவியரசனாகக் கொடிகட்டிப் பறந்த கம்பதாசனின் நிலையை எண்ணி நான் மிகவும் வருந்தினேன். பாவேந்தரின் இல்லத்தில் பிறகு இரண்டோர் முறை கவிஞர் கம்பதாசனைப் பார்த்திருக்கிறேன். திடீரென்று வருவார்; உட்கார்ந்து வெற்றிலை பாக்குப் போடுவார். பின்னர் மீனவர் சேரி அயோத்தியாகுப்பம் என்று சுற்றப் போய் விடுவார்.

ஒருநாள் தமிழ்ச்செல்வி என்ற நாட்டியக்காரச் சிறுமி பாவேந்தரைக் காண வந்தாள். இரண்டொரு நாளில் அவளுடைய நாட்டிய அரங்கேற்றம் நிகழவிருந்தது. பாவேந்தரை வணங்கி அவருடைய வாழ்த்தினைப் பெறுவதோடு அவருடன் புகைப்படம் எடுத்துக் கொள்ளவும் விரும்பி வந்திருந்தாள். அப்போது பாவேந்தரின் நண்பர்கள் சிலர் அங்கிருந்தனர். தமிழ்ச்செல்வியின் பெற்றோரும் உடன் வந்திருந்தனர். பாவேந்தர் கொஞ்ச நேரம் வைத்த கண் வாங்காமல் அந்தப் பெண்ணையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். பாவேந்தர் ஏன் இந்தப் பெண்ணை இப்படிப் பார்க்கிறார்!...

பாவேந்தரின் செயல் எங்களுக்கு என்னவோ போல் இருந்தது. அந்தப் பெண்ணும் நாணி நின்றாள்.

அப்போது பாவேந்தர் திரைப்படம் எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த நேரம். பாவேந்தர் அந்தப் பெண்ணைப் பார்த்து, "உனக்கு மடிசார் கட்டத் தெரியுமா?" என்று கேட்டார். 'தெரியாது' என்று பதிலிறுத்தாள் அந்தப்பெண்.

'மேக்கப்மேன்! இந்தப் பெண்ணை உள்ளே அழைச்சிக்கிட்டுப் போய் அம்மாகிட்டே சுங்குடிப் புடவை இருக்கும். வாங்கி மடிசார் கட்டிக்கிட்டுவா' என்று பக்கத்தில் நின்று கொண்டிருந்தவரிடம் சொன்னார். சிறிது நேரத்தில் மடிசார் கோலத்தில் அந்தப் பெண் பாவேந்தர் எதிரில் வந்து நின்றாள். மீண்டும் பாவேந்தர் அந்தப் பெண்ணையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண் டிருந்தார்.

'என்ன ஐயா! நீண்ட நேரம் இப்படியே இந்தப் பெண்ணைப்

பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் படத்தில் இந்தப் பெண்ணுக்கு வாய்ப்புக் கொடுக்கப் போகிறீர்களா?' என்று நான் மெதுவாகக் கேட்டேன்.

ஏதோ கனவிலிருந்து விடுபட்டவர் போல எங்களைப் பார்த்து விட்டு. 'பாரதியார் மனைவி செல்லம்மாள், வயசில் இந்தப் பெண் மாதிரி தான் இருப்பாங்க' என்று சொன்னார் பாவேந்தர். உடனே அங்கிருந்த அத்தனை கண்களும் ஆர்வத்தோடு அந்தப் பெண்ணையே உற்றுப் பார்க்கத் தொடங்கின. அந்தப்பெண் மேலும் நாணினாள்.

*

பாவேந்தர் பிற்பகல் மூன்று மணிக்கு மேல் தேநீர் அருந்திவிட்டு மான்தோல் விரித்த சோஃபாவில் வந்து அமர்வது வழக்கம். மாலையில் இலக்கிய அன்பர்கள் சிலர் அவரைத் தேடி வருவார்கள். அரசியல்,இலக்கியம்-இரண்டும் அவர் பேச்சில் மிகுதியாக அடிபடும். தமிழ் இலக்கியத்தில் அவரே சில ஐயங்களைக் கிளப்பி விளக்கமும் சொல்வார்; மற்றவர் எழுப்பும் ஐயங்களுக்கும் விளக்கம் தருவார். ஒரு நாள்...

மாங்காய்ப் பாலுண்டு மலைமேல் இருப்பார்க்குத்
தேங்காய்ப்பால் ஏதுக்கடி?-

என்ற சித்தர் பாட்டு வரிகளை எடுத்து வைத்துக் கொண்டு விளக்கம் சொன்னார். "மாங்காய்ப்பால் சாப்பிட்டு விட்டு நீண்ட நாள் உயிரோடு இருக்க முடியுமா? இதில் ஒரு தத்துவம் இருக்கிறது. ஞானி உட்கார்ந்தால் பல மாதம் சாப்பிட மாட்டான். எப்படி? அவன் உடலிலிருந்தே அவனுக்கு உணவு கிடைக்கிறது. மூளையிலிருந்தே சுரக்கும் ஒருவகை நீர் அவனை வாழவைக்கிறது' என்றார் பாவேந்தர்.

*

ஒருநாள் பாவேந்தருக்குக் கடன் கொடுத்திருந்த ஒருவர் அவரை வந்து பார்த்துப் பேசிவிட்டுச் சென்றார். பாவேந்தர் தலையணையில் சாய்ந்த வண்ணம் சிந்தனையோடு படுத்திருந்தார். நான் மெதுவாக அவர் அறைக்குள் சென்று எதிரில் இருந்த நாற்காலியில் அமர்ந்தேன். பாவேந்தர் என்னைப் பார்த்து "வாழ்க்கைன்னு இருந்தா கொடுத்து வாங்கல் இருக்கணும். இல்லைன்னா வாழ்க்கை சப்புன்னு இருக்கும். வள்ளுவர் கூட 'இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண் மா ஞாலம் மரப்பாவை சென்றுவந்தற்று'ன்னு சொல்றார்" என்று சொல்லிவிட்டு அவரே சிரித்துக்கொண்டார். அவர் உள்ளத்தின் ஓட்டத்தை

என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. என்றாலும் நானும் சிரிப்பது போல் பாசாங்கு செய்தேன்.

ஒருநாள் அவரைத் தேடி வந்த நண்பர் ஒருவர், 'இன்பத்துள் சிறந்த இன்பம் எது?' என்று பாவேந்தரைக் கேட்டார்.

'தான் விரும்பும் பெண், வலியவந்து அணைக்கும் சுகம்' என்றார் பாவேந்தர். அப்போது பாவேந்தருக்கு வயது எழுபத்தொன்று.

சுதும்பு மீன்

திரு. ஆ. சுந்தரேசன்

அச்சுக் கோப்பவராக வாழ்க்கையைத் தொடங்கி அரசியல் தலைவராக உயர்ந்தவர் சிலம்புச் செல்வர் ம.பொ.சி.

அச்சுக்கோத்துக் கொண்டே அரிய எண்ணங்களைக் கோத்துச் சிறந்த எழுத்தாளராக மலர்ந்தவர் விந்தன்.

தம்முடைய அச்சகத்தில் அச்சுக் கோப்பவராக இருந்த இளைய சுந்தரேசனை இனிய கவிஞராக மாற்றியவர் பாவேந்தர் பாரதிதாசன்.

பழனியம்மா அச்சகத்தில் பணிபுரிந்த காலத்தில் தம் உள்ளத்தில் கோத்த நினைவுகளை இக்கட்டுரையில் நிரல்படுத்திக் காட்டியிருக்கிறார் திருவாளர் ஆ.சுந்தரேசன்.

பாவேந்தர் பாரதிதாசன் பற்றிய எண்ண அலைகள் எத்தனையோ என் உள்ளத்தில் மோதிக் கொண்டிருந்தாலும், அவற்றுள் ஒரு சிலவற்றை இங்கு குறிப்பிட்டிருக்கிறேன்.

பாவேந்தர் புதுவையில் 'பழநியம்மா அச்சகம்' என்ற பெயரில் ஓர் அச்சகத்தை நிறுவி நடத்தி வந்தார். அந்த அச்சகத்தில் யான் ஐந்தாறு ஆண்டுகள் அச்சுக்கோப்பவராகப் பணிபுரிந்து வந்தேன். கவிஞர் அப்போது 'குயில்' என்னும் பாட்டிதழ் ஒன்றைப் புதுவையிலிருந்து வெளியிட்டு வந்தார். அவ்விதழில் உள்ளூர் வெளியூர்க் கவிஞர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் சிறப்பிடம் தந்து கவிதைகள் வெளியிட்டார். அச்சுக் கோப்பவராக இருந்த எனக்கும், நாள்தோறும் கவிதைகளை அச்சுக் கோத்த காரணத்தால், கவிதையுணர்வு பற்றிக் கொண்டது. கவிதை எழுத வேண்டும் என்ற ஆவல் என்னை நாள்தோறும் உந்தித் தள்ளிக் கொண்டிருந்தது.

ஒருநாள் 'கூடினார் பிரிவரோ இனி!' என்று தொடங்கும் காதற் கவிதை ஒன்றை எழுதிப் பாவேந்தர் பார்வைக்குப் பணிவுடன் வைத்தேன். 'நன்றாக இருக்கிறதே! மேலும் மேலும் தொடர்ந்து எழுது! விட்டு விடாதே' என்று ஊக்கம் கொடுத்துப் பாராட்டினார். குயில் ஏட்டில் வெளியிடுவதற்கு அப்பாடல் தகுதியானது என்பதைக் குறிக்கப் 'பா' என்று எழுதி ஒப்புதல் அளித்து மாப்பிள்ளை தண்டபாணியிடம் கொடுத்தார். என் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளியது. 'யானும் ஒரு கவிஞன்!' என்ற உணர்வு பெற்றேன். அவர் ஊட்டிய இலக்கியப் பற்றும், கவிதை ஆர்வமும் இன்றும் என் உள்ளத்தில் பசுமையாக உள்ளன.

*

பாவேந்தர் நாள்தோறும் அதிகாலையில் எழுந்திருக்கும் பழக்கம் உடையவர். அதிகாலை வேளையில் மிகுந்த சுறுசுறுப்போடும் தூய்மையோடும் காட்சியளிப்பார். காலையில் எழுந்ததும் வீட்டின் முன்பக்கம் உள்ள பலகையில் வந்து அமர்ந்திருப்பார். ஒருநாள் காலைச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு பலகையில் அமர்ந்திருந்த போது, அவ்வழியாகப் போய்க் கொண்டிருந்த ஒருவரை நோக்கி, ஏம்பா மார்க்கெட்டுக்கா போற?' என்று கேட்டார்.

அவரும் 'ஆமாங்க ஐயா' என்று பதிலிறுத்தார்.

'மீன் கடையிலே இந்தச் சுதும்பு மீன் விக்குதான்னு பாத்து வா' என்றார்.

'சரிங்க ஐயா' என்று கூறிச் சென்றார் வந்தவர்.

நீண்ட நேரம் கழித்து அவர் திரும்பிவந்து, 'சுதும்பு மீன் இல்லைங்க ஐயா, வேறு மீன் விக்குதுங்க' என்றார்அவர்.

'ஓகோ... சரி. நீ போ' என்று சலிப்புடன் கூறினார் பாவேந்தர். பாவேந்தர் எதை விரும்புகிறாரோ அஃது உடனே நிறைவேற வேண்டும். இல்லாவிட்டால் மிகுந்த சலிப்படைவார். அந்தச் சலிப்பு 'ஓகோ... சரி. நீ போ' என்ற அவர் சொற்களில் நிரம்பி வழிந்தது.

கவிஞர் அவர்கள் அடிக்கடி கூட்டங்களுக்காக வெளியூர் செல்வது வழக்கம். அவ்வாறு செல்லும்போது யாரேனும் ஒருவரை உடன் அழைத்துச் செல்லுவார். உடன் வருபவர்களிடம் தமக்குத் தேவையானவற்றை வாங்கி வரும்படி பணிப்பார். தம்முடன் வருபவரின் கல்வித்தகுதி, செல்வ நிலை ஆகியவற்றைப் பற்றிக் கவனிக்கமாட்டார். செல்லும் இடத்தில் தமக்குக் கிடைக்கும்

மரியாதை தம்முடன் வந்தவருக்கும் கிடைக்க வேண்டும் என்பதில் அவர் கண்ணுங்கருத்துமாக இருப்பார்.

அவரோடு ஒருமுறை ஒரு திருமணத்துக்குச் சென்றிருந்தேன். திருமண வீட்டில் உள்ளவர்களிடம் என்னைப் பற்றிப் பெருமையாகக் கூறி அறிமுகப்படுத்தினார். இதோ... இவரு என்னோட வந்தவரு... படிச்சவரு... பெரிய இடத்துப் பிள்ளை... எல்லாம் அவருதான்' என்று திருமண வீட்டாரிடம் கூறியது என் உள்ளத்தை உருகச் செய்தது. கவிஞருக்குக் கிடைத்த 'ராஜமரியாதை' எனக்கும் கிடைத்தது. கவிஞரின் பரந்த உள்ளத்தை எண்ணி எண்ணி நான் பெருமிதமடைந்தேன்.

புதுவையில் ஒரு பெரிய கோவில் உள்ளது. அந்தக் கோவிலின் முன் மண்டபத்தில் திருக்குறள் மெல்லிசை நிகழ்ச்சியொன்றை ஓர் அடிகளார் ஒருநாள் நடத்தினார். பாவேந்தர் அந்நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கியிருந்தார். ஓரிரண்டு திருக்குறள் பாக்களை அப்போது வெளிவந்திருந்த புதிய திரைப்பட மெட்டில் பாடிக் காண்பித்தார் அடிகளார். இசைக்கும் மெட்டுக்கும் முதலிடம் தந்து பாடியதால் குறட்பாக்களின் கருத்துத் தெளிவு சிதைவுற்றது. தலைமை தாங்கியிருந்த கவிஞருக்குச் சினம் பொங்கியது.

"இந்தப்பா! நிறுத்து! நீ என்ன நினைச்சுக்கிட்டு இருக்கற... உட்கார்!" என்று கோபத்துடன் சொல்லிவிட்டு தாம் எழுந்து பேசத் தொடங்கினார்.

"எந்த ஒரு பாட்டையும் பொருள் விளங்கப் பாட வேண்டும்; புரியும்படி பாட வேண்டும். அதேபோலப் பாட்டுக்களும் பொருளோடும், சிறந்த கருத்துக்களோடும் அமைந்திருக்க வேண்டும். திரைப்படத்தில் இப்போது வருபவை பாட்டுக்களா? லொள், லொள், லொள்.. இப்படியொரு பாட்டு; என்ன என்ன என்ன... இப்படியொரு பாட்டு; இதனால் தமிழ் எப்படி வளரும்? வாழும்? மக்களுக்குத் தமிழ் அறிவு எப்படிப் பெருகும்? சிந்திக்க வேண்டாமா?" என்று ஒரு போடு போட்டார். அடிகளார் உடனே புறப்பட்டுவிட்டார்.

பிற்சேர்க்கை

நான் சந்தித்த பாவேந்தரின்
நண்பர்கள் எல்லாருமே
ஒரு கட்டுரையாகத் தொகுக்கும்
அளவுக்குச் செய்திகளைக்
கூறுவதில்லை. சிலர் ஓரிரு
செய்திகளை மட்டுமே
நினைவு கூர்வர். அச்சிறுசிறு
செய்திகளை அரும்பு மாலையாகத் தொடுத்திருக்கிறேன்.

1. பெண்மயில் கொத்தும்

1963-ஆம்ஆண்டு, சென்னை செயிண்ட் மோரீஸ் ஹாலில் இலக்கிய விழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஓர் அவசர அலுவல் காரணமாகச் சென்னை சென்றிருந்த நான், விளம்பரத் தட்டியை வெளியில் பார்த்தவுடன் உள்ளே நுழைந்து விட்டேன். பாவேந்தர் மேடையில் அமர்ந்திருந்தார். கவிஞர் சௌந்தரம் கைலாசம் பேசிக் கொண்டிருந்தார்.

பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதியில் 'மயில்' என்னும் தலைப்பில் உள்ள பாடல் குறிப்பிடத்தக்கது. அஃதோர் அங்கதப் பாடல் (Satire). எப்போதுமே பெண்கள் அண்டை அயலார் விவகாரங்களை அறிந்து கொள்வதிலும், அவற்றைப் பலர் கூடி விமர்சிப்பதிலும் ஆர்வமுடையவர்கள். இக்குறையைப் பாவேந்தர் இப்பாடலில் மிகவும் நயம்படக் கேலி செய்திருக்கிறார். 'இயற்கை அன்னை கலாப மயிலுக்கு நீண்ட கழுத்தையும், பெண்களுக்குக் குட்டைக் கழுத்தையும் கொடுத்திருக்கிறாள். ஏன்?" என்று ஒரு வினாவை எழுப்பி அவரே அதற்கு விடையும் கூறுகிறார்.

அயலான் வீட்டில் அறையில் நடப்பதை
எட்டிப் பார்க்கா திருப்பதற்கே
இயற்கை அன்னை. இப்பெண்கட் கெல்லாம்
குட்டைக் கழுத்தைக்கொடுத்தாள்! உனக்கோ

கறையொன்றில்லாக் கலாப மயிலே
நிமிர்ந்து நிற்க நீள் கழுத்தளித்தாள்!

திருமதி சௌந்தரம் கைலாசம் இப்பாடலை நயமாகப் பாடி விளக்கி விட்டுக் "கவிஞர் இப்பாடலைத் துணிந்து பாடியிருந்தாலும், இக்குற்றச்சாட்டைப் பெண்கள் கேட்டால் எங்கு கோபித்துக் கொள்வார்களோ?" என்ற அச்சமும் அவருக்கு இல்லாமல் இல்லை. அதனால் தான் மயிலை மெதுவாக அருகில் அழைத்து

இங்குவா உன்னிடம் இன்னதைச் சொன்னேன்
மனதிற் போட்டுவை; மகளிர் கூட்டம்
என்னை ஏசும் என்பதற்காக

என்று கூறுகிறார். இந்த வரிகளில் உள்ள ஓர் இனிய நயத்தை நீங்கள் உணர வேண்டும். கவிஞர் இந்தக் கருத்தைக் கூறியது யாரிடம்? பெண்மயிலிடமா? இல்லை. கலாப மயிலிடம். பெண் மயிலிடம் இக்கருத்தைச் சொல்லி இருந்தால் நிச்சயம் அது கோபங்கொண்டு 'எங்கள் இனத்தையா குறை கூறுகிறீர்? என்று கூறிக் கவிஞரைக் கொத்தியிருக்கும்" என்று கூறினார். கைதட்டலினால் செயிண்ட் மேரீஸ் ஹாலே அதிர்ந்தது. பாவேந்தர் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார்.

பாவேந்தர் பிறகு பேசும்போது, 'இவ்வளவு நயம் இந்தப் பாடலில் இருக்கிறதென்று நான் இப்போது தான் அறிந்து கொண்டேன்' என்று உள்ளம் மகிழ்ந்து திருமதி சௌந்தரம் கைலாசத்தையும் பாராட்டினார். பின் தமது பேச்சில் தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள், அறிஞர் அண்ணாவைப் பற்றிப் பாடிய பாடல் ஒன்றைக் குறிப்பிட்டுச் சில கருத்துக்களை வெளியிட்டார்.

அடுத்த நாள் காலை நான் தி.நகர் இராமன் தெருவில் இருந்த பாவேந்தர் இல்லத்துக்குச் சென்றேன். முதல் நாள் இலக்கிய விழாவில் அவர் வெளியிட்ட சில கருத்துக்களைப் பற்றி அவரிடம் உரையாடினேன். திரு.வி.க.வின் கவிதையாற்றல் பற்றிப் பேச்சு எழுந்தது. அப்போது அவர் கீழ்க்கண்ட கருத்துக்களை வெளியிட்டார்.

திரு.வி.க. சிறந்த தமிழறிஞர். அவர் உரைநடையில் சாதித்ததை இன்னும் எந்தத் தமிழனும் சாதிக்கவில்லை என்றாலும், அவர் கவிதையின் பக்கம் சென்றிருக்கக் கூடாது.

அண்ணாவைப் பற்றி அவர் பாடிய பாடல் கவிதைத் துறையில் அவர் அடைந்த தோல்விக்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

அண்ணாத் துரையென்னும் அண்ணல் தமிழ்நாட்டின்
வண்ணான் அழுக்கெடுப்பில் வாய்மொழியில் பண்ணாவான்
சிற்பன் எழுத்தோவியத்தில் செவ்வரசு நாவாயின்
அற்புதஞ்சூழ் மாலுமியென் றாடு.

இந்த வெண்பா அண்ணாவைப் பாராட்டித் திரு.வி.க. எழுதியது. 'வண்ணான்' என்ற உவமை இடத்திற்கும், தகுதிக்கும் ஏற்பப் போடப்பட்ட நாகரிகமான உவமையன்று. இந்த உவமையால் அண்ணாவுக்கும் பெருமையில்லை; வண்ணானுக்கும் பெருமை யில்லை. எதுகை சரியாக விழவேண்டும் என்பதற்காக அவசரப்பட்டு எந்தச் சொல்லை வேண்டுமானாலும் போடக்கூடாது. பொறுமையாகச் சிந்தித்து நல்ல உவமையாகப்போட வேண்டும். திரு.வி.க. கவிஞராக இருந்திருந்தால் இப்பாட்டின் அடிகளை அவர் இப்படி அமைத்துப் பாடியிருப்பார்" என்று சொல்லி அவரே ஒரு வெண்பாவை உடனே சொன்னார். அவர் சொல்லச் சொல்ல எழுதி, அவரிடமே காட்டித் திருத்திக் கொண்ட பாடல் பின்வருமாறு:

எண்ணாத் துறைநாடி ஏந்துபுகழ் நட்ட
அண்ணாத் துரையண்ணல் ஆய்ந்து தமிழ் செழிக்கப்
பண்ணாத் துறையுண்டோ? பைந்தமிழர் ஏனிவனைக்
கண்ணாகக் கொள்ளார் கனிந்து

மேலும் அவர் தொடர்ந்து வகையுளியை[1] எவன் சரிவர உணர்ந்து யாப்பில் கையாளுகின்றானோ, அவனே கவிதையில் வெற்றி பெறுவான். ஒவ்வொரு சீரும் சொற்கள் உடைபடாமல் கருத்து முற்றி நிற்கும்படி வண்ணம் அறுக்க வேண்டும். அத்தகைய கவிதை தான் படிப்பவர் நெஞ்சில் நிற்கும். இராமலிங்க அடிகள் இதில் வல்லவர்.

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்
வகைகிடைத்த குளிர்தருவே!
களிப்பருளுங் களிப்பே!
நலங் கொடுக்கும் நலமே!

பாட்டு என்றால் இப்படி இருக்க வேண்டும்" என்று சொன்னார். பிறகு கொஞ்ச நேரம் ஏதோ சிந்தித்துவிட்டு, "நீ ஒட்டக்கூத்தன் பாட்டு படிச்சிருக்கறயா?" என்று கேட்டார்.

"தனிப்பாடல் திரட்டில் சில பாடல்கள் படித்திருக்கிறேன்" என்று நான் சொன்னேன்.

---

1) வகையுளி.. முன்னும் பின்னும் அசை முதலாகிய உறுப்புகள் நிற்புழியறிந்து குற்றப்படாமல் வண்ணம் அறுத்தல்.

-யாப்பருங்கலக்காரிகை

"நான் சுப்பிரமணியர் துதியமுது எழுதிய காலத்திலே ஒட்டக் கூத்தன் பாட்டைச் சந்தத்துக்காக விரும்பிப் படிப்பதுண்டு. இதைக்கேளு" என்று சொல்லிக் கீழ்க்கண்ட பாட்டைப் பாடினார்.

ஒட்டெழுத் தைக்கருத்தீற்குறித்
திட்டுநீத் தம்பரவும்
சிட்டர்கட்குத்தீருப் பொற்பதத்
தைச்சிறக் கத்தருமவ்
வட்டநெட் டைப்பணி மெத்தையத்
தற்கிடம் வாரிசப்பொ
குட்டினத் துக்குலந் தத்திமூத்
தீனுங் குறுங்குடியே

இதை எவ படிப்பான்? இல்ல... மனசுலதா நிக்குமா?" என்று கூறி முடித்தார் பாவேந்தர்.

2. நம்ம வீட்டுத் திருமணம்

சேலம் ஸ்வர்ணாம்பிகா பஸ் உரிமையாளரான ராவ்சாகிப் ரத்தன சாமிபிள்ளை நீதிக்கட்சியில் குறிப்பிடத்தக்கவர். பெரியாரின் நண்பர். சேலம் மாவட்ட அரசியலில் முக்கியப்பங்கு வகித்தவர். மாவட்டக்கழக உறுப்பினராகவும், சென்னைச் சட்டமன்ற உறுப்பினராகவும் பணிபுரிந்தவர். சேலம் நகராட்சிக் கழகத் தலைவராக இருந்து சேலத்தின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டவர். இவர் காலத்தில் சேலம் நகராட்சிக் கல்லூரி சிறந்த முன்னேற்றம் பெற்றது. இவர் நகரவைத் தலைவராக இருந்த காலத்தில் கல்லூரி முதல்வராகத் திருவாளர் இராமசாமிக் கவுண்டரும், பேராசிரியர்களாகத் தேவநேயப்பாவணர், தி.வை. சொக்கப்பர் ஆகியோர்களும் பணி புரிந்தனர். இவர்கள் தமிழ்ப் புலமையும், தன்மான இயக்க உணர்வும் கொண்டவர்கள்.

'பி.ஆர்.பி. என்று சேலம் மக்களால் மதிப்போடு அழைக்கப்பட்டு வந்த திரு.பி. இரத்தன சாமிபிள்ளை 5½ அடி உயரமும், அதற்கேற்ற கம்பீரமான தோற்றமும் கொண்டவர்; மிகவும் செல்வாக்கோடு வாழ்ந்தவர். அவருக்கு உரிமையான பெரிய தோட்டமும், அதன் நடுவில் ரத்னா படப்பிடிப்பு நிலையமும் (Rathna Studio) சேலத்துக்கு மேற்கே மூன்றுகல் தொலைவில் 'மாமாங்கம்' என்ற இடத்தில் உள்ளன. மிகவும் இயற்கையழகு மிக்க சூழலில் அவர் வளமனை அமைந்திருந்தது. சுயமரியாதைக் கட்சித் தலைவர்களும், தமிழறிஞர்களும் அவரைப் பார்க்க அவ்விடத்துக்கு அடிக்கடி வருவதுண்டு. பட்டுக்கோட்டை அழகிரிசாமி, பாவேந்தர், கி.ஆ.பெ. விசுவநாதம் ஆகியோர் அவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள். பட்டுக்கோட்டை அழகிரிசாமி பி.ஆர்.பி.க்கு மிகவும்

வேண்டியவர். சேலம் வரும்போதெல்லாம் அழகிரிசாமிக்கு இவர் தாராளமாகப் பொருளுதவி செய்து வந்தார்.

நான் ஒருமுறை பி.ஆர்.பி.யை, என் தம்பி முருகரத்தனத்தின் அலுவல் தொடர்பாகக் காண்பதற்கு மாமாங்கம் சென்றிருந்தேன். அப்போது பாவேந்தரைப் பற்றிப் பேச்சு வந்தது. அப்போது அவர் சொன்னார்:

"பாரதிதாசன் சேலம் வந்தா வீட்டுக்கு வருவார். பயில்வான் மாதிரி இருப்பார். ஏதாவது கேட்டா ஆ...ங்.. என்று குரல் கொடுத்துவிட்டு நம்மைப் பார்ப்பார். அவர்கிட்டப் பேச நானே பயப்படுவ. என் மகளுக்குத் திருமணம், பெரியார் முதல் பல அரசியல் தலைவர்களும் வந்திருந்தாங்க. பாவேந்தரும் வந்து வாழ்த்துரை வழங்கினார். திருமணம் முடிஞ்சு ஊருக்கு அவர் புறப்பட்டப்ப ஒரு நூறு ரூபா நோட்டைக் கவர்லே போட்டுக் கொடுத்தேன். 'என்ன ரத்தனசாமி! நான் உங்க குடும்பத்தில் ஒருவன் இல்லையா? நம்ம வீட்டுத் திருமணம்! என்று சொல்லி வாங்க மறுத்துவிட்டார்" என்று குறிப்பிட்டார்.

3. தலையைக் குனியாதே

பெரியார் மாவட்டம் கோபிசெட்டிப்பாளையத்தில் என் நண்பர் வெங்கிடு ஆண்டுதோறும் செப்டம்பர் திங்களில் அண்ணா பிறந்த நாள் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவார். இரண்டு நாட்கள் கவியரங்கம், கருத்தரங்கம், பட்டிமண்டபம் என்று கோபியே அமர்க்களப்படும். அப்போது வழக்கமாகக் கூடும் நண்பர்களுள் இப்போது அரசவைக் கவிஞராக இருக்கும் புலமைப்பித்தன், புலவர் பொன்னி வளவன், கவிஞர் குடியரசு, ஈரோடு நகைச்சுவை அரசு ஆறுமுகனார், புலவர் எழில்வேலன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர் கள். புலவர் புலமைப்பித்தனுக்குக் கோபி மாமியார் வீடு. எங்கள் தேவைகளை அவர்தாம் கவனித்துக் கொள்வார். விளையாட்டுப் பேச்சும், வேடிக்கையுமாக இரண்டு நாட்களும் போவது தெரியாது.

வழக்கமாகக் கோபி விழாவின்போது அங்கிருக்கும் பொதுப்பணித்துறைப் பயணியர் விடுதி நாங்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும். அப்போது பெரியவர் கோபி ராஜு அங்கு நாள்தோறும் குதிரை வண்டியில் வருவார். பொதுப்பணித்துறை விடுதியில் தங்கி நாள்தோறும் தம்மைத் தேடிவரும் கட்சிக்காரர்களுடன் உரையாடிக் கொண்டிருப்பார். அப்போது அவர் தி.மு.க. மேல்சபை உறுப்பினர் (எம்.எல்.சி.).

கோபி ராஜுக்கு அப்போது வயது எழுபதுக்குப் பக்கமாக இருக்கும். கருத்த தோற்றம். தடித்த உருவம். கண்பார்வை சற்று மங்கலாக இருக்கும். பட்டுக்கோட்டை அழகிரிசாமி, பூவாளூர் பொன்னம்பலனார் போன்ற பழைய சுயமரியாதை இயக்கத்

தலைவர்களின் வரிசையைச் சேர்ந்தவர். அந்த வயதிலும் மேடையேறினால் அஞ்சாமையோடு மேடையே அதிரும்படி பேசுவார். கல்லெறிக்கு அஞ்சாமல், குத்துவாளை எடுத்து மேடை மீது போட்டுவிட்டுச் சுயமரியாதைக் கூட்டங்களில் பேசிப் பழக்கப்பட்டவர். சுயமரியாதை இயக்கத்தோடு ஒன்றி வளர்ந்தவர். விடுதிக்கு வரும்போதெல்லாம் சுயமரியாதை இயக்கத்தின் பழைய செய்திகளை எங்களுக்கு எடுத்துரைப்பார். நாங்கள் ஆர்வத்தோடு கேட்போம்.

ஒருநாள் 'பாவேந்தரோடு நீங்கள் பழகி இருக்கிறீர்களா?' என்று நான் அவரைக் கேட்டேன்.

"நன்றாகப் பழகியிருக்கிறேன். இந்தப் பக்கம் கூட்டங்களுக்கு வரும்போது நான் அவரைச் சந்தித்துப் பேசியதுண்டு. புதுச்சேரிப் பக்கம் கூட்டத்துக்குச் சென்றால் நானும் அவரை வீட்டில் சென்று பார்ப்பதுண்டு. பாரதிதாசனிடத்தில் உள்ள முக்கிய குணம் அஞ்சாமைதான். அவர் நின்று கொண்டிருந்தாலும் உட்கார்ந்து கொண்டிருந்தாலும் நிமிர்ந்த நிலையில்தான் காட்சியளிப்பார்.

ஒருமுறை நான் புதுச்சேரியில் அவர் வீட்டில் சாப்பிட்டுவிட்டு அவரோடு கூடத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தேன். அப்போது அவர் மகன் கோபதி கல்லூரிக்குப் புறப்பட்டுப் போய்க் கொண்டிருந்தான். நாங்கள் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்ததால் கையில் புத்தகக் கட்டோடு, அடக்கமாகக் குனிந்த தலையோடு அவன் சென்று கொண்டிருந்தான். பாரதிதாசன் 'டேய்! கோபதி! இங்க வா!' என்று அவனைக் கூப்பிட்டார். அவனும் வந்தான். 'தலையக்குனியாதே! நிமிர்ந்து நட!' என்று கட்டளையிட்டார். அப்போது நிமிர்ந்த கோபதியின் தலை மறுபடி குனிந்ததில்லை!' என்று சொன்னார் கோபிராஜு.

4. எப்படிப்பட்ட கலைஞன் அவன்

திருச்செங்கோடு மாவட்டக்கழக உயர்நிலைப்பள்ளியில் 1944-45இல் நான் மாணவன். திருவாளர் சேஷசகிரிராவ் பி.ஏ. எல்.டி. பள்ளித் தலைமையாசிரியர். திராவிடர் கழகம் அப்போது வளர்ந்து கொண்டிருந்த நேரம். திராவிட நாட்டையும், குடியரசு வார இதழையும் டெஸ்க்குக்குள் மறைத்துப் படித்துக் கொண்டிருப் போம். அப்போது நானும் என் நண்பர்கள் சிலரும் துணிந்து கருப்புச் சட்டை போட்டுக் கொண்டு போவோம். அவர்களுள் நெய்க்காரப்பட்டி நடேசனும், சண்முகசுந்தரமும் (திருவள்ளுவர் டெக்ஸ்டைல்ஸ், ஈரோடு) குறிப்பிடத்தக்கவர்கள்.

ஓய்வு நேரத்தில் எங்களுக்குப் பாசறையாக விளங்கியது திருவாளர்

N.K.P. வேலு அவர்களின் வீடு. அவர்[1] சாயமருந்துக் கடை வைத்திருந்தார். அண்ணா முதல் தி.க. தலைவர்கள் எல்லாரும் அங்குதான் வந்து தங்குவார்கள். திரு. வேலு இறுதிக்காலத்தில் மிகவும் நொடித்துப் போய் வறுமை வாய்ப்பட்டு இறந்தார். பாரதிதாசன் திருச்செங்கோடு வந்தபோது வேலுவின் வீட்டில் தான் தங்கியிருந்தார். அப்போது பாவேந்தரைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

ஒருமுறை பாரதிதாசனைப் பற்றி நான் வேலுவைக் கேட்டபோது அவர் கூறிய செய்திகள்:

"பாவேந்தர் பாரதிதாசனைப் பலமுறை சந்தித்துப் பேசும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. அவரிடம் அரசியல், இலக்கியம் பற்றி உரையாடியிருக்கிறேன். திராவிடர்கழக ஆண்டு விழாவுக்குப் பாவேந்தர் அழைக்கப்பட்டிருந்தார். அப்போது இரண்டு மூன்று நாட்கள் என் வீட்டில் தங்கினார். அந்த ஆண்டு விழாவுக்கு நோட்டீசு அவரால் தான் எழுதப்பட்டது. அந்த ஆண்டு விழா திருச்செங்கோடு சூரசம்ஹாரமடத்தில் நடைபெற்றது. பாரதிதாசன் எழுதித் திருமதி குஞ்சிதம் குருசாமியால் பதிப்பிக்கப் பெற்ற 'பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி' அந்த ஆண்டு விழாவில் வெளியிடப்பட்டது.

பாரதிதாசனுக்குத் திருச்செங்கோடு வட்டத்தில் நிதி திரட்டும் பொறுப்பு என்னிடம்தான் ஒப்படைக்கப்பட்டது. கரூர்க் கட்டி பாளையத்தில் நடைபெற்ற அவருடைய மூத்தமகள் திருமணத்துக்குச் சென்றிருந்தேன். அவர் சேலத்தில் 'இன்ப இரவு' நாடகம் நடத்தியதும், பெரியார் திருமணத்தின்போது அவர் அறிக்கை விட்டதும் எனக்கு நன்கு நினைவிருக்கின்றன. அவரோடு பழகிய நாட்களில் என் உள்ளத்தில் பசுமையாக நிற்கும்படி ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. அதை என்னால் என்றும் மறக்க முடியாது.

ஒருமுறை ஈரோடு ரயில் நிலையத்தில் நானும், பாவேந்தரும் நாமக்கல் செல்லப்ப ரெட்டியாரும் நின்று கொண்டிருந்தோம். பாவேந்தருடைய சட்டைப்பையில் இருந்த ரூ. 150/-ஐ எவனோ பிக்பாக்கெட் அடித்துவிட்டான். பாவேந்தர் அப்படியே ஸ்தம்பித்துப் போய் நின்று கொண்டிருந்தார். கூப்பிட்டால் பேசவில்லை. பிறகு உணர்வு திரும்பிய அவர், எங்களைப் பார்த்து, "நான் மிகவும் எச்சரிக்கையோடும் சுய உணர்வோடும்தான் இருந்தேன். எப்படி என்னிடம் அவன் களவு செய்தானென்று புரியவில்லை. எப்படிப்பட்ட கலைஞன் அவன்" என்று வியப்போடு கூறினார். நான் அப்போது பாரதிதாசன் என்ற மனிதனைக்

1) செல்வம் டர்க்கிரெட் ஆயில் கம்பெனி: 'செல்வம்' பழைய ஜஸ்டிஸ் கட்சி வீரர் பன்னீர்ச் செல்வத்தைக் குறிப்பிடும்.

காணவில்லை; ஒரு கவிஞனைக் கண்டேன். செல்லப்ப ரெட்டியார் எங்கள் மூவருக்கும் டிக்கட் எடுத்தார்".

5. பழம்பால் சாப்பிடுவார்

ஒருமுறை பெரம்பலூரில் கவியரங்கம் ஒன்றிற்குத் தலைமை தாங்கிவிட்டுப் பேருந்தில் சேலம் திரும்பிக் கொண்டிருந்தேன். இளங்காலைப்பொழுது என் அருகில் ஒரு பெரியவர் அமர்ந்திருந்தார். பேச்சுவாக்கில் அவர் ஒரு தமிழ்ப் புலவர் என்று அறிந்து கொண்டேன். பின்னர் அவரோடு பேச்சுக் கொடுத்ததில், மயிலம் தமிழ்க் கல்லூரி முதல்வர் புலவர் துரைசாமி ஐயா அவர் என்பதை அறிந்து கொண்டேன். எங்கள் இருவரின் பேச்சு பாரதிதாசன் பக்கம் திரும்பியது. அவர் பாவேந்தர் பற்றிய பின் கண்ட செய்திகளைக் கூறினார்.

"பாரதிதாசனை எனக்கு இளமையிலிருந்தே தெரியும். இளமையில் அவர் சிறந்த முருகபக்தர். மயிலம் முருகன் கோவிலுக்கு வருவார். மயிலம்கோவில் முருகன் ஆண்டுதோறும் மாசி மகவிழாவின்போது புதுவைக்கு எழுந்தருளுவது வழக்கம். வழியில் வானூர்க் கோவிலில் முருகன் தங்கிச் செல்வது வழக்கம். நானும் உடன் சென்றிருந்தேன். வானூர்க் கோவிலுக்கு வெளியில் பாரதிதாசன் நின்று கொண்டிருந்தார். நான் அழைத்ததும் உள்ளே வந்தார். அக்கோவில் ஐயர் பூசையை முடித்துத் தீபாராதனை செய்யும்போது வெளியிலே சென்று விட்டார். நான் 'ஏன்?' என்று அவரைக் கேட்டேன்.

"கோவில் உமது தானே? நீரே பூசை செய்தால் என்ன? (அங்கு பூசை செய்த ஐயரைக் காண்பித்து) அவன் கையில் திருநீறு வாங்க என் மனம் ஒப்பவில்லை" என்று பதிலிறுத்தார் பாரதிதாசன். ஒருமுறை பெங்களூரில் திருக்குறள் மாநாடு நடைபெற்றது.

டாக்டர் இலக்குவனார், புலவர் குழந்தை, டாக்டர் இராச மாணிக்கனார், பாரதிதாசன் ஆகியோர் கலந்து கொண்டனர். பரிமேலழகர் உரையில் உள்ள குறைகள் பற்றி நான் பேசினேன். பரிமேலழகர் உரையை முதலில் மறுத்தவர் சிவப்பிரகாசர் தாம் என்பதை நான் என் பேச்சில் எடுத்து விளக்கினேன். இலக்குவனாரும், இராசமாணிக்கனாரும் என்னுடைய கருத்தைத் தமது உரையில் பாராட்டிப் பேசினர். பாரதிதாசன் தமது பேச்சில் சைவ மடங்களைச் சாடினார். இலக்குவனாரும் இராசமாணிக்கனாரும் அதைக் கேட்டு வருந்தியதோடு, பாவேந்தரிடம் மடங்களைத் தாக்கிப் பேசவேண்டாமென்று கேட்டுக் கொண்டனர்.

பாரதிதாசன் பழகுவதற்கு ஏற்ற நல்ல நண்பர். நானும் அவரும் சந்திக்கும்போது நகைச்சுவையோடு பேசி மகிழ்வோம். ஒரு முறை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் புலவர்கள் எல்லாம்

கூடியிருந்தோம். பாவேந்தர் புலால் உணவை விரும்பிச் சாப்பிடுவார். நான் இரவில் பாலும் பழமும் மட்டும் சாப்பிடும் பழக்கம் உடையவன். கூட்டத்தில் எல்லாருக்கும் விருந்து பரிமாறப் பட்டிருந்தது. என்னை ஒருவர் வந்து சாப்பிட அழைத்தார். அருகில் இருந்த பாரதிதாசன் 'இரவில் இவர் பழம்பால்தான் சாப்பிடுவார்; எங்காவது கிடைத்தால் பாருங்கள்' என்று சிலேடை நயம் பொருந்தக் கூறினார். புலவர் கூட்டம் கொல்லென்று சிரித்தது".

6. எனக்கெதற்குக் குதிரை

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸில் பாவேந்தர் திரைப்படங்களுக்கு எழுதிக் கொண்டிருந்த காலத்தில் அவரோடு பழகிய நண்பர்கள் பலதரப்பட்டவர்கள். அரசியல்வாதிகள், புலவர்கள், வணிகர்கள், முதியவர்கள், இளைஞர்கள் என்று பட்டியல் நீளும். சேலம் அரிசிப் பாளையத்தில் வாழ்ந்த ராஜகோபால் என்ற இளைஞர் பாவேந்தரிடம் அளவு கடந்த அன்பும் ஈடுபாடும் கொண்டிருந்தார். நான் அந்த இளைஞரை 1965ஆம் ஆண்டு வாக்கில் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.

கவிஞர்கள் எப்போதும் உணர்ச்சிவயப்படுபவர்கள். அந்தந்த நேரங்களில் தங்களுக்கு ஏற்படும் உணர்ச்சிகளுக்கு ஏற்ப அவர்கள் பேச்சும் செயலும் அமைந்திருக்கும்; பின் விளைவுகளைப் பற்றியும் சிந்திக்க மாட்டார்கள். உணர்ச்சி வயப்பட்ட அவர்கள் நடவடிக்கையால் அவரோடு தொடர்பு கொண்டவர்களும் பல சங்கடங்களுக்கு ஆட்பட நேரிடும். தம் வாழ்வில் ஏற்பட்ட இத்தகைய சங்கடம் ஒன்றை, அந்த இளைஞர் குறிப்பிட்டார்.

"பாவேந்தர் சேலத்தில் இருந்தபோது அவரை அடிக்கடி நான் காணச் செல்வதுண்டு. செர்ரி ரோட்டிலுள்ள 'மாடர்ன் கேஃபில்' அறையெடுத்துத் தங்கியிருப்பார். சில சமயங்களில் சீரங்க பாளையத்தில் உள்ள மாடர்ன் தியேட்டர்ஸ் ரிஹர்சல் ஹால் கட்டிடத்தில் தங்கியிருப்பார். அவர்மீது எனக்கு அளவு கடந்த பற்று உண்டு.

அவரைப் போய்ப் பார்ப்பதும், பேசுவதும் எனக்கு இனிய பொழுது போக்காக இருந்தது.

அப்போது என் சொந்த உபயோகத்துக்கு ஓர் அழகான குதிரை வண்டி வைத்திருந்தேன். குதிரையும் நல்ல ஜாதிக்குதிரை. அந்த நாளில் குதிரைவண்டி வைத்திருப்பது ஒருவகை நாகரிகம். பாவேந்தர் நான் செல்லும் போதெல்லாம் குதிரையை மிகவும் விருப்பத்தோடு பார்ப்பார்; அன்போடு தடவிக் கொடுப்பார்.

ஒருநாள் அவர் என்னைப் பார்த்து 'ராஜகோபால் இந்தக் குதிரை

எனக்கு வேண்டும். வண்டியை விற்றுவிடு. குதிரையின் விலையைக் கொடுத்துவிட்டு நான் வாங்கிக் கொள்கிறேன்' என்று சொன்னார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. 'குதிரையை மட்டும் வாங்கி இவர் என்ன செய்வார்? நான் பலமுறை சிந்தித்தேன். சரி பாவேந்தர் கேட்கிறார். நாம் எப்படி மறுத்துரைப்பது?' என்று நினைத்தேன். அவர் சொன்னபடி முதலில் வண்டியை விற்றுவிட்டேன். குதிரையை மட்டும் வீட்டில் கட்டித்தீனி போட்டுக் கொண்டிருந்தேன். குதிரையை உங்களுக்குக் கொண்டு வரட்டுமா? என்று கேட்டேன்.

'குதிரைய்யா? எனக்கெதற்குக் குதிரை? என்று கூறிவிட்டார்.

7. மீசை

"பாவேந்தருக்கு வாழ்க்கையில் இரண்டே விருப்பம் தான் உண்டு. ஒன்று கவிதை; மற்றொன்று மீசை" என்று ஒருமுறை குமரிமலர் ஆசிரியர் ஏ.கே.கே. செட்டியார் குறிப்பிட்டார்.

8. காடைக் கனவு

வாணியம்பாடியில் திருக்குறள் மாநாடு நடைபெற்றது. இராவண காவிய ஆசிரியர் புலவர் குழந்தையும் கலந்து கொண்டார். பாவேந்தர் முதல்நாளே வந்துவிட்டார். பாவேந்தர் புலால் விருப்பம் உடையவர் என்பதை அறிந்து விழாக் குழுவினர் 'ஐயா இப்பக்கம் காடை அதிகமாகக் கிடைக்கும். நாளை உங்களுக்குக் காடைக் கறி சமைத்துப் போடுகிறோம் என்று கூறினர். அடுத்த நாள் மதியம் உணவு பரிமாறப்பட்டிருந்தது. இலை முன் அமர்ந்த பாவேந்தர் இதில் எது காடைக்கறி? என்று கேட்டார்.

'ஐயா! இன்று காடை கிடைக்கவில்லை. அதனால்...! என்று பயத்தோடு கூறினர் விழாக்குழுவினர்.

பாவேந்தர் கோபத்தோடு இலையைத் தூர இழுத்துவிட்டார்; மீசை துடித்தது. இன்று கட்டாயம் கிடைக்கிறதா இல்லையா என்பதைச் சரியாகத் தெரிந்து கொள்ளாமல் என்னிடம் ஏன் சொன்னாய்! நான் அதையே நினைத்துக் கொண்டிருந்தேன்!" என்று சீறினார். அவரைச் சமாதானம் செய்து சாப்பிட வைப்பது பெரும்பாடாகிவிட்டது.

9. கண்ணால் பருகினார்

1956-ஆம் ஆண்டு குழித்தலையில் 'தமிழ் ஆட்சி மொழி மாநாடு' நடைபெற்றது. இளமுருகு-பொற்செல்வி இம்மாநாட்டை முன்னின்று நடத்தினர். குன்றக்குடி அடிகளார், பாவாணர், ஜீவானந்தம், இராசமாணிக்கனார், ப.நடராசன் ஆகியோர் கலந்து கொண்டனர். பாவேந்தர் மாநாட்டுத் தலைவர். முதலமைச்சர்

காமராசர் தமிழை ஆட்சி மொழியாக்கச் சட்டசபையில் தீர்மானம் செய்தது இம்மாநாட்டின் எதிரொலி; பாவேந்தர் தலைமையின் வெற்றி!

மாநாடு முடிந்து இளமுருகு பொற்செல்வியின் வீட்டுக்கு உணவருந்தச் சென்றார் பாவேந்தர். உடல் நிலை பாதிக்கப் பட்டிருந்ததால் மது அருந்தக் கூடாது என்று மருத்துவர்கள் பாவேந்தருக்குக் கட்டளையிட்டிருந்தனர். 'குடித்தால் விரைவில் இறந்து விடுவீர்!' என்று எச்சரிக்கையும் கொடுத்திருந்தனர். என்றாலும் அனுபவித்த சுகம் அவ்வளவு எளிதில் மறக்கக் கூடியதா? 'கொண்டா பிராந்தி பாட்டிலை' என்றார் பாவேந்தர். தயக்கத்தோடு அவர் இலை முன்னால் மதுப்புட்டி வைக்கப்பட்டது. எதிரில் இருந்த மதுப்புட்டியைக் கண்ணால் பார்த்துக் கொண்டே சாப்பிட்டார்.

10. எங்கள் ரெட்டியார்!

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் ரிஹர்சல் ஹாலில் பாவேந்தருக்குத் தனி அறை வழங்கப்பட்டிருந்தது. அவருடைய ஏவல் கேட்க ஒரு பணியாளும் அமர்த்தியிருந்தார் டி.ஆர்.எஸ். ஒரு நாள் காலை செல்லப்ப ரெட்டியார் அவரைப் பார்க்க வந்தார். பாவேந்தர் தம் வாழ்க்கையில் அதிகம் மதித்த நண்பர்களுள் அவரும் ஒருவர். பாவேந்தர் அப்போது தான் முகம் மழித்துக் கொண்டு எழுந்தார். ரெட்டியாருக்கும் முகம் மழிக்கச் சொல்லி நாவிதனுக்குக் கட்டளையிட்டு விட்டுக் கழிப்பறைக்குச் சென்றார். கழிப்பறையிலிருந்து அவர் திரும்பி வந்தபோது ரெட்டியாரை நாற்காலியில் உட்கார வைக்காமல் கீழே உட்கார வைத்து மழித்துக் கொண்டிருந்தான் நாவிதன். அக்காட்சியைப் பார்த்ததும் பாவேந்தருக்கு அளவு கடந்த கோபம் வந்து விட்டது.

'ராஸ்கல்! நீ எப்படி ரெட்டியாரைக் கீழே உட்கார வைத்து மழிக்கலாம்? என்று சொல்லி அடிக்கப் போய்விட்டார். ரெட்டியார் தலையீட்டால் அன்று நாவிதன் பிழைத்தான். உள்ளே இருந்த நாற்காலியை எடுத்து வரச் சொல்லி அதிலே ரெட்டியாரை உட்கார வைத்து முகம் மழிக்கச் சொன்னார் பாவேந்தர்.

11. வசதிப்படாது

சேலத்தில் 'இன்பஇரவு' நாடகம் நடந்து கொண்டிருந்த நேரம். பாவேந்தர் அரிசிப்பாளையத்தில் ஒரு வீட்டில் தங்கியிருந்தார். பெருஞ்செல்வரும், சேலத்தில் சிறந்த திரைப்படக் கொட்டகை ஒன்றின் முதலாளியுமாக இருந்த ஒருவர் பாவேந்தரைப் பார்க்க விரும்பினார். அவர் தம் பணியாள் ஒருவனைப் பாவேந்தரிடம் அனுப்பி, "எங்கள் முதலாளி உங்களை இப்போது பார்க்க

விரும்புகிறார். வரலாமா? இப்போது வசதிப்படுமா? என்று கேட்டுவரச் சொன்னார்" என்றான்.

உடனே பாவேந்தர் 'வசதிப்படாது' என்றார். அப்பணியாள் சென்று விட்டான். அவன் சென்ற பிறகு பாவேந்தர் சிரிசிரியென்று சிரித்தார். 'நாமென்ன திரைபோட்டுக் கொண்டு ஒவ்வொருவராகவா பார்க்க உள்ளே விடுகிறோம்? பார்க்க வருபவன் வருவது தானே? இவன் முதலாளி என்பது நமக்குத் தெரிய வேண்டுமாம்? என்று அருகிலிருந்த நண்பரிடம் கூறிச் சிரித்தார்.

அடிக்குறிப்புகள்

1. பாரதிதாசன் மீசை

(23ஆம் பக்க அடிக்குறிப்பிற்குரியது)

களிற்றுநிரை பலவற்றை வெற்றி கண்டு
காடதிர வேமுழாங்கி இறுமாப் போடு
மலைக்குகையில் வீற்றிருக்கும் அரிமாப் போல
மாக்கவிஞன் வீற்றிருந்தான்; வாயில் இட்டுக்
குழைக்கின்ற புகையிலையைச் சுருட்டாய்ச் சுற்றிக்
குண்டலமாய்ப் புகைவிட்டான்; அவன் தமிழ்வாய்
விளைக்கின்ற கரியபுகை தமிழ் மணந்து
வீசியது நாற்புறமும் வியப்பில் ஆழ்ந்தேன்.

"பெண்ணின்பம் தனைவடித்துப் பண்ணைக் கூட்டிப்
பேரின்பப் பாடல்களாய் ஆக்கித் தந்த
வெண்ணெய்ச்சொல் பாரதிக்குத் தாச! உம்மை
வேடிக்கை யாய்ஒன்று கேட்க ஆசை!
எண்ணிச்சொல்! பாரதியின் முறுக்கு மீசை
இமயத்தைப் போல்நிமிர்ந்து விண்ணைக் குத்தக்
கன்னத்தில் மோதுகின்ற உமது மீசை
கவிழ்ந்துநிலம் நோக்குவதேன்?" என்று கேட்டேன்

இன்றமிழில் தேன்பிலிற்றி வண்ணாங் கூட்டி
இசைப்பாடல் பாடுகின்ற கவிதை வேந்தன்
கன்னத்தில் மின்னல்விழச் சிரித்தான்; நெஞ்சக்
கற்பனையைத் தட்டிவிட்டான்; என்னை நோக்கி
"எண்ணத்தில் உயர்ந்திருக்கும் சிறந்த ஆசான்
எதிர்நிற்கும் மாணவர்கள் கவிழ்ந்திருந்து
மண்ணைத்தான் பார்ப்பார்கள்" என்று சொல்லி
மறத்தமிழன் மெதுவாகப் புன்ன கைத்தான்.

"தித்திக்கும் முக்கனியைச் செழித்த கொய்யாத்
தீங்கனியை வெறுத்தவௌவால் உமது வாயில்

பாவேந்தர் மீசை பற்றி தொடக்கநிலையில் ஆசிரியர் பாடிய பத்து எண்சீர் விருத்தங்களில் சில இங்கே தரப்பட்டுள்ளன.

தித்திக்கும் கவிதையென்னும் கனியை யுண்ணச்
சிறகைவிரித் தமர்ந்ததுவோ? சோலை தன்னில்
தித்திக்கும் மலைத்தேனைத் தெவிட்டி வந்து
தீங்குரலின் கருவண்டுக் கூட்டம் ஒன்று
தித்திக்கும் இலக்கியத்தேன் பருகு தற்கும்
திருவாயில் படிந்ததுவோ?" என்று கேட்டேன்.

அழகேறி ஆட்சிசெய்த மீசை தன்னை
அன்போடு மெதுவாகத் தடவி விட்டுப்
"பழகுதமிழ்ப் பெரும்புரட்சிப் பார தீக்குப்
பற்பலரால் இடையூறு நேர்ந்த போது
கிளர்ந்தெழுந்த மீசையிது! தமிழ்ப்ப கைச்சொல்
கேட்டவுடன் துடிப்பதிது!" என்று சொல்லி
மழைத்தமிழன் எழுந்துசென்றான்; முழங்கு கின்ற
மதயானை அவன் நடைக்குத் தோற்ற தங்கே.

கொடிகட்டி உலகாண்ட ஆங்கி லேயர்
குலத்துதித்த மறப்புலவன் ஷாவைத், தேனை
வடிகட்டிக் கவிதையென ஆக்கித் தந்த
வங்கத்துத் தாகூரைப் பணத்தி மிர்க்கு
வெடிவைத்த தால்ஸ்தாயை எண்ணும் போது
வெண்தாடி நம்கண்ணில் அசைந்து தோன்றும்,
படிமெச்சும் பாரதிக்குத் தாசன் தன்னைப்
பைந்தமிழர எண்ணுங்கால் மீசை தோன்றும்.

2. டாக்டர் காமில் ஸ்வலபில் கடிதம்

(49ஆம் பக்க அடிக்குறிப்பிற்குரியது)

Thiru Bharthi Dasan Avargal'
95, Rue de Perumal Kovil,
Puduchcheri-Pondichery.

Dear Mahakavi,

I send enclosed herewith an issue of our Novy 'New Orient Monthly / wherein you will find a few of my CZECH translations of your splendid poems together with a short note on your life and work.

May I ask you to kindly arrange for the despatch of your collected work to me? For me and my students of Tamil it is a "must" - your work is undoubtedly the peak of Tamil lyrical poetry in the first half of our century.

Yours very sincerely,

Dr. Kamil Zvejebil,
தமிழ் ஊழியன்

CESKOSLOVENSKA AKDEMIE, VED
ORIENTALNI USTAV
LAZENSKA 4, PRAHAI-MALA STRANA
C tel. 663 - 9, 663 - 96.

3. நிதியளிப்பு விழா அழைப்பிதழ்

(54ஆம் பக்க அடிக்குறிப்பிற்குரியது)

காரியாலயம்;
"சட்ராஸ் அவுஸ்"
581, பைகிராப்ட்ஸ் ரோடு
திருவல்லிக்கேணி, சென்னை-5.
22-7-1946

பேரன்புடையீர்,

வணக்கம், தமிழ்நாட்டுப் புரட்சிக் கவிஞர் திரு. பாரதிதாசன் (புதுவை கனக. சுப்புரத்தினம்) அவர்களுக்கு நிதி அளிப்பு விழா உயர்திரு. நாவலர் எஸ். சோமசுந்தர பாரதியார். எம்.ஏ., பி.எல். அவர்கள் தலைமையில் நடைபெறும். தாங்கள் அனைவரும் வந்திருந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்.

இடம்: சென்னை, சைனா பஜார், பச்சைப்பன் மைதானம்

தேதி : 28-7-46 ஞாயிறு மாலை 4 மணி

தங்கள் அன்புள்ள

என். கிருஷ்ணராஜு
நிதிக் கமிட்டித் தலைவர்
சி.என்.அண்ணாதுரை
பொருளாளர்
டி.என்.ராமன்
ப.கண்ணன்
காரியதரிசிகள்

4. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நிதி அளிப்பு விழா அழைப்பிதழ்

(60ஆம் பக்க அடிக்குறிப்பு)

28-7-46 ஞாயிறு மாலை 4 மணிக்குச் சென்னை சைனாபஜார் பச்சையப்பன் மைதானப் பந்தலில் நடைபெறும்.

நிகழ்ச்சி

28.7.1946 ஞாயிறு மாலை

4.00 மணி: நாதஸ்வரம்
வித்துவான் கே.எஸ். பிச்சையப்பா: குளிக்கரை

5.00 மணி: இசை
இசையரசு எம்.எம். தண்டபாணி தேசிகர்

6.00 மணி: தலைவர் முன்னுரை

6.45 மணி: வரவேற்புரை
(பல கழகங்கள் சார்பில்)

7.30 மணி: நிதி அளிப்பு
பொன்னாடை அளித்தல் காஞ்சி ஏ.கே. தங்கவேலர்

8.00 மணி: பாராட்டுரை வழங்குதல்:
(சொற்பொழிவாளர்கள்)

திரு. திவான் பகதூர் N.சிவராஜ் (மேயர்)
திரு. M.ராதாகிருஷ்ண பிள்ளை, B.A., B.L.
திரு. T. செங்கல்வராயன், B.A., B.L.
திருமதி குஞ்சிதம் குருசாமி, B.A., L.T.
திரு. டாக்டர் A. கிருஷ்ணசாமி, M.A. Ph.D. Bar-at-Law
திரு R.P. சேதுப்பிள்ளை M.A., B.L.
திரு. ராவ்பதூர் P. சம்பந்த முதலியார் B.A., B.L.
திரு. வ.ரா.
திரு. K.A.P. விசுவநாதம்
திரு. ராவ் சாயிப் P. ரத்னசாமி
திரு. வித்துவான் மு. வரதராசனார் B.O.L., M.O.L.
திரு. C.D. நடராஜன் M.A., B.L.
திரு. ப. ஜீவானந்தம்
திரு. நடிகமணி K.R. இராமசாமி
திரு. ம.பொ. சிவஞான கிராமணியார்
திரு. திருலோக சீதாராமன்
திரு.இரா. நெடுஞ்செழியன் M.A.
நன்றி கூறல்: சி.என். அண்ணாதுரை M.A.

LIBERTY

(95ஆம் பக்க அடிக்குறிப்பு)

Dainty fruits, delicious nuts,
They give to you
'Oh! my darling! precious diamond!
They fondle you.

But poor parrot! look there!
your sweet loving sister,
Flies through the streets of air
And swing high on the
Golden fronds of the coconut tree;

Roves in the garden;
Moves in the street;
And has the world
And the sky for her own.

Is it - the cage
The abode of you for ever?
You call her often
Sister! Oh my sister!'

Is it ginger or pepper
To Give? but liberty!

5. திரைப்படத்தில் மகாகவி பாரதி

(93ஆம் பக்க அடிக்குறிப்பிற்குரியது)

தமிழ்ச் சான்றோர்களே,

உலகு தொடங்கிய நாள் முதல் மேம்பட்டு வந்த நம் தமிழ் மொழி-புலவர்களாலும், புரவலர்களாலும் வளர்ந்து வந்த நம் தமிழ்மொழி, பத்தொன்பதாம் நூற்றாண்டை அடைந்தபோது அந்தத் தண்டமிழ் உண்டா இல்லையா என்ற நிலையை அடைந்திருந்தது.

அந்நிலையில்,

யாம் அறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம் என்று எழுந்த மகாகவி பாரதி-அவர் சொன்னதுபோல இனிக்க எழுதிப் பாடிக் குவித்துத் தமிழுக்கோர் ஒளியை, தமிழுக்கோர் எழுச்சியை உண்டு பண்ணினார். தம் வறுமையிலும் இவ்வரிய தொண்டு பண்ணினார்.

இந்நாள் அவர் இளைஞர், முதியர், கல்விச் செல்வர், பொருட்

செல்வர் அனைவர் உள்ளத்துள்ளும் வாழ்கின்றார் எனின் அது வியப்பன்று.

மகாகவி பாரதி வாழ்க்கை வரலாற்றை-பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்த திறத்தை,

திரைப்படம் ஆக்க விழைந்தேன்.

இதில்

எழுதும் திறமும் கலைத் திறமும் கொண்ட தமிழ்ச் சான்றோர் பலர் எனக்குக் கருத்து உதவுவோராக இருக்க முன்வந்தருளினார்கள்.


என் விண்ணப்பம் இதுதான்.

'எதுவும் நல்கியிங் கெவ்வகை யானும்
இப்பெருந் தொழில் நாட்டுவம் வாரீர்!'
(பாரதி)

இங்ஙனம் தங்கள்
பாரதிதாசன்

திருவாளர் எஸ். இராமநாதன் - முன்னாள் அமைச்சர்
திருவாளர் மணவாள இராமானுசம்-முன்னாள் 'துணைவேந்தர்' அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
திருவாளர் வி.பி. இராமன்-சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்
திருவாளர் அருண் - எழுத்தாளர், நூலாசிரியர்
திருவாளர் அகிலன்-எழுத்தாளர், நூலாசிரியர்
திருவாளர் பத்மநாபன்-துணையாசிரியர், சுதேசமித்திரன்
திருவாளர் முருகதாசா-திரைப்பட இயக்குநர்
திருவாளர் கிருஷ்ணசாமி-திரைப்பட இயக்குநர்
திருவாளர் நாரண துரைக்கண்ணன்-நூலாசிரியர், பத்திரிகாசிரியர்
திருவாளர் இராதாமணாளன்-துணையாசிரியர், நவ இந்தியா
திருவாளர் அம்மையப்பன்-கலை இயக்குனர்
திருமதி தங்கம்மா பாரதி-பாரதி மகள்
திருமதி சகுந்தலா பாரதி - பாரதி மகள்

பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி



சேலத்துக் கவிஞர் முருகு சுந்தரம்
பாலத்துச் சோதிடம் பார்க்க மறுப்பவர்
ஈரோட்டை முதலிலும் காஞ்சியைப் பிறகும்
தேரோட்டத் தோடு திருவிழா நடத்தும்
திருவா ரூரையும் திரும்பிப் பார்ப்பவர்
பாவேந்தர் பாடலை நெஞ்சில் பதிப்பவர்
இருப்பு தூங்கும் சேலத்தில் பிறந்தும்
கரும்பு தூங்கும் கவிதைகள் வடிப்பவர்.

– உவமைக் கவிஞர் சுரதா